475

முன்றுறையரையனார்

பழமொழி நானூறு

மூலமும் உரையும்

உரையாசிரியர்:

புலவர், ம. இராசமாணிக்கம் பிள்ளை.

475

கழக வெளியீடு : ௪௭௫

பதினெண்கீழ்க்கணக்கு

முன்றுறையரையனார்

பழமொழி நானூறு

மூலமும் உரையும்

உரையாசிரியர் :

புலவர், ம. இராசமாணிக்கம் பிள்ளை

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்தநூற் பதிப்புக் கழகம், லிமிடெட்,

திருநெல்வேலி-6. 1963 சென்னை - 1.

© The South India Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Ltd.,

1 Ed Nov 1948.
Reprints: April 1954; July 1958; Sep 1963

O31, 1C 63
K3

PAZHAMOZHI NAANURU

Paari Achakkam, 127, Broadway, Madras-1.

முன்னுரை

பழமொழி நானூறு என்பது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. ஒரு நாட்டின் பண்பாட்டை உணர்தற்கு அந் நாட்டுமொழியுள் வழங்கும் பழமொழிகள் பெரிதும் பயன்படுகின்றன. பழமொழிகளே அந்நாட்டு மக்களால் அடிப்பட்டுவரும் மன இயல்புகளை எடுத்துக் காட்டுகின்றனவல்லவோ? உலகவழக்காகிய இப்பழமொழிகளின் மேன்மையைக் கருதி இப் பழமொழிகளைக் கையாண்டு பொருள்சிறக்கச் செய்தல் நாவன்மையுடைய கற்றோர்க்கும் மற்றோர்க்கும் இயல்பாகிறது. பழமொழிகளைச் சிறந்த உரைநடையாசிரியர் எவரும் கையாளுவர். பழமொழிகள் பயின்றுவரச் செய்யுள்நூல் இயற்றும் தன்மை பேரறிஞர் நூல்களில் காணப்படும். இங்ஙனம் பழமொழியின் பொருட்சிறப்பை யுணர்ந்து அறிஞர் அவற்றைப் போற்றிக் கையாண்டாலும், தமிழ்நாட்டில் வழங்கிய சிறந்த பழமொழிகளைத் திரட்டி, ஒவ்வொரு பழமொழியைக்கொண்டும் தாங் கருதிய சிறந்த பொருள்களை விளக்கமுறுத்தக் கருதிய சமணசமயப் பெரும் புலவோரான முன்றுறையரையனாரின் செய்கை தனிப் பெருந் தகுதிவாய்ந்ததாய்த் திகழ்கின்றது.

இவர் இயற்றிய இப் பழமொழி நானூற்றில் கடவுள் வாழ்த்து முதலான நானூறு வெண்பாக்களும் நானூறு பழமொழிகளைக் கொண்டு திகழ்கின்றன. பழமொழிகளை மனத்துக்கொண்டு, அவ்வப் பழமொழிகளால் விளக்கற் கேற்ற சிறந்த கருத்துக்களை எடுத்துக் கூறி, அப்பழமொழிகளை இயைபுபடுத்துகின்ற தன்மையால் நூல இயன்றதனாலேயே, நூற்செய்யுள்களெல்லாம் பால் இயல் பாகுபாட்டுட்படாமல்,ஒவ்வொரு வெண்பாவும் ஒவ்வொரு சிறந்த கருத்தை யுணர்த்தித் தனித்தனியே நின்றன. பயில்வார்க்கு எண்மையாயிருக்குமாறு, இப் பழமொழி நானூற்றுச் செய்யுள்களில் ஒருபொருண் மேலனவற்றைத்

தொகுத்துச் சேர்த்துப், பால் இயல் பாகுபாட்டுள் தமக்குத் தோன்றிய முறையில ஒருவாறு அடக்கினார் திருமணம் செல்வக்கேசவராய முதலியாரவர்கள். அம் முறைப் பாகுபாட்டுடனேயே பழமொழிநானூறு தற்காலத்து வழங்கிவருகிறது. இப்பழமொழி நானூற்று உரை நூலும் அப் பாகுபாட்டுடனேயே வெளிவருகின்றது.

பழமொழி நானூறு என்னும் தனிப்பெருஞ் சிறப்புடைய இவ்வுயர்நூல இரண்டு வகையில் பயிலவார்க்கு இன்பந் தந்து நிற்கின்றது. முதலாவது, நூலகத்தே பயின்றுவரும் பழமொழிகளின் பொருட்சிறப்பும், நாட்டில் வழங்கிவரும் அப் பழமொழிகளால் உணரலான தமிழ் மக்களியலபும் பிறவும் அறிதல்; இரண்டாவது, அப் பழமொழிகளைக் கொண்டு விளக்கப்பெறும் அரிய நூற் கருத்து. பழமொழியின் சிறப்பையும் அவற்றால் விளக்கப்பெறும் நூற்கருத்தின் மாட்சியையும் பின்வரும் எடுத்துக் காட்டுக்களில் காண்க;

"இடைநாயிற் கென்பிடுமாறு" என்பது பழமொழி; ஆடு திருடச்செல்லுங் கள்வர், கிடைக்காவலாக இருக்கும் நாய்க்கு எலும்புத்துண்டத்தை இட்டுவிட்டுத் தாங்கருதிய படி ஆட்டை எவ்வகை இடையூறுமில்லாமல் திருடிச்செல் லும் இயல்பை இப் பழமொழி உணர்த்தி நிற்கிறது. இங்ஙனமே தம் பகைவரை வெல்லக்கருதினார் ஒருவர், அப் பகைவரோடுடனுறையும் நண்பர்களைத் தம் பக்கமாக ஆக்கிக்கொண்டு, அப் பகைவர்களை எளிதில் வெல்ல வேண்டும் என்று கூறுகிறார் ஆசிரியர்.

"அம்பலம் தாழ்க்கூட்டுவார்" என்பது பழமொழி. ஊர்ப்பொதுவிடமான அம்பலத்தின் வாயிற்கதவுக்குத் தாழிடுவார் என்பது இதன் பொருள். அம்பலத்தில் எக்காலும் பலரும் வரைவின்றி உள்நுழைந்தும் வெளிச் சென்றும் போக்குவரவு செய்தலால், அதன் வாயிற் கதவைத் தாழ்இடல் இயலாதென்பதாம். அக்காலத்து ஊர் அம்பலங்கள் இருந்தமையை இப்பழமொழி உணர்த்து கின்றது. இப் பழமொழியால விளக்கப்படும் பொருள்;

தம்மை நோக்கிக் குறைகூறும் மூடர் வாயை அடக்கப் புகுதல அறிவிலார் செயலாம் என்பது.

"செய்கென்றான் உண்கென்னுமாறு" என்பது பழமொழி. ஒரு செயலைச் செய்யென்று சொன்னவன் உணவை உண் என்று சொன்னவனாவான் என்பது இதன் பொருள். ஒருவன் ஏவிய செயலைச் செய்தால், அதன் பயன் பின்னே தவறாமல் கிடைக்கும் என்பதாம். அரசன் ஏவிய செயல்களைக் கைம்மேல என்ன பெற்றோம் என்று கருதாமல் செய்க என்னும் சிறந்த கருத்துக்கு அரணாக இப் பழமொழி வந்தது.

இனி, இந்நூலில் வந்துள்ள பழமொழிகளெல்லாம் உலக வழக்கில் வழங்கினவாறே எடுத்தாளப்படாமல் செய்யுள்நடைக் கேற்பப் பலவாறு உருமாற்றியே வழங்கப் பட்டிருக்கின்றன என்பது மேற்காட்டிய பழமொழிகளா லும் இனிது விளங்கும்.

இனித் தற்காலத்து நாட்டில் வழங்குகின்ற பழமொழி கள் இந் நூலுள் வந்தனவற்றுள் சில கீழே காண்க.

ஆயிரங்காக்கைக்கு ஓர்கல் (249)
இருதலைகொள்ளி எறும்பு (141)
இறைத்தோறும் ஊறும் கிணறு (378)
உமிகுற்றிக் கைவருந்துவார் (348)
ஓடுக ஊரோடு மாறு (195)
குன்றின்மேல் இட்ட விளக்கு (80)
தனிமரம் காடாதல் இல் (286)
திங்களை நாய் குரைத்தற்று (107)
தொளை எண்ணா அப்பம் தின்பார் (165)
நாய்காணின் கற்காணுவாறு (361)
நாய் வால் திருந்துதல் இல் (316)
நிறைகுடம் நீர் தளும்பல் இல் (9)
நுணலும் தன் வாயாற் கெடும் (114)
பசிபெரி தாயினும் புல்மேயா தாகும் புலி (70)
பாம்பறியும் பாம்பின கால் (7)
பூவோடு நார் இயைக்குமாறு (88)

இனிப், பண்டைக்காலப் பழமொழிகள், இக்காலத்து வழங்காதன; சிறந்த பொருட்சிறப்புடன் இருப்பன சில காண்க.

அயிரை இட்டு வரால் வாங்குபவர் (372)
ஏற்றுக்கன்று ஏறாய் விடும் (81)
ஓர்த்தது இசைக்கும் பறை (37)
கானகத் துக்க நிலா (139)
சான்றோர் அவைப்படின் சாவாது பாம்பு (86)
சுரை ஆழ அம்மி மிதப்ப (122)
தமக்கு மருத்துவர் தாம் (149)
தம்மை யுடைமை தலை (387)
தீநாள் திருவுடையார்க்கில் (235)
நனிவெந்நீர் இல்லம் சுடுகலா வாறு (51)
நாய்மேல் தவிசிடு மாறு (105)
நோற்றார்க்குச் சோற்றுள்ளும் வீழும் கறி (236)
பயின்றது வானக மாகிவிடும் (398)
பாய்பவோ வெந்நீரும் ஆடாதார் தீ (159)
புலித்தலையை நாய் மோத்தல் இல் (204)
யானைபோய் வால் போகா ஆறு (395)

இனித், தற்காலத்து வழங்கும் பழமொழிகளன்றி அவற்றோடொத்த சில பழமொழிகளும் இந் நூலுட் காணப்படுகின்றன.

தற்காலத்து வழங்கும் பழமொழிகள்:—

இடம் கொடுத்தால் மடம் பிடுங்குவான்
அடி உதவுவதுபோல் அண்ணன் தம்பி உதவான்
இரும்பு பிடித்தவன் கையும் துரும்பு பிடித்தவன் கையும் சும்மா யிரா
காசுகொடுத்துத் தேள் கொட்டிக்கொள்வது போல
ஏறவிட்டு ஏணியை வாங்குதல்
[1]மயில் போலும் கள்ளி (கரவுடையவள்)
நாளைக்கு வரும் பலாப்பழத்தைவிட இன்றைக் கிருக்கும் களாப்பழமே மேல்

---

1. மயில் பாம்பை உண்டு அடக்கமுடையதாக இருக்கும் என்க

சாண் ஏறினால் முழம் சறுக்குகிறது
குட்டிச்சுவரிலே தேள்கொட்ட, நெடுஞ்சுவரிலே நெறிகட்டினது போல
தாம் சாவ மருந்துண்பவர் இல்லை
பதறாத காரியம் சிதறாது
கொக்கின் தலைமேல் வெண்ணெய் வைத்துப் பிடித்தல்

அவற்றோடொத்த இந்நூல் பழமொழிகள்:

இருப்புழிப் பெற்றால் இடப்புழியும் பெற்றுவிடும் (190)
நல்லறம செய்வது செய்யாது கேள் (367)
பூண்ட பறையறையா ராயினார் இல் (84)
பொருள் கொடுத்துக் கொளளார் இருள் (3)
மசேற்றி ஏணி களைவு (136)
மயில் போலும் கள்வர் உடைத்து (194)
முயல் விட்டுக் காக்கை தினல் (370)
முழங்குறைப்பச சாண் நீளுமாறு (100)
முழந்தாள் கிழிந்தான் மூகருப் பொதிவு (19)
யாருளரோ தங்கன்று சாக்கறப்பார் (131)
விரையிற் கருமம் சிதையும் (164)
வெண்ணெய் மேல்வைத்து மயில்கொள்ளுமாறு (210)

இனி, இந்நூலின் சிறந்த கருததுக்கள் பல மற்றைய நீதிநூல்களிலும் தனிப்பெருஞ் சிறப்புடன், உலகியலைப் பெரிதும் ஒட்டிச்செல்வது பெரிதும் உணர்ந்துகொள்ளத் தக்கது. உடன்பிறந்தாராயினும் இருவர் நெடுநாள் உடனுறைந்திருத்தல் இன்னாமையே பயக்கும் எனக் கூறுகிறது ஒரு வெண்பா. இஃது உலகியலை ஒட்டிய சிறந்ததொரு கருத்தன்றோ? அவ் வெண்பாவைக் கீழே காண்க.

கருவினுட் கொண்டு கலந்தாரும் தம்முள்
ஒருவழி நீடும் உறைதலோ துன்பம்
பொருகடல் தண்சேர்ப்ப! பூந்தா மரைமேல்
திருவொடும் இன்னாது துசசு.

"திருவொடும் இன்னாது துச்சு" என்பது ஈண்டு வந்துள்ள பழமொழி. திருமகளேயாயினும் நெடுநாள்

உடனுறைதல் இன்னுமைக்கே காரணமாகும் என்பது பொருளாம். ஆதலால், எவ்வகை மேம்பட்டோராயினும் உடனுறைதலால் கைப்பும் நீங்கிவாழ்தலால் இன்பமும் தோன்றல் உலகியற்கையாம் என்பதை உணர்த்துகின்றது. பழமொழியும் வெண்பாக் கருத்தும் ஒற்றுமையுற்று நிற்றல் காண்க.

இனி, நண்பராய் ஒழுகுவோர்மாட்டுக் கட்டாயம் இருக்கவேண்டிய சிறந்த ஒரு குணத்தை, ஒரு வெண்பா சிறக்க எடுத்துக் காட்டுகின்றது.

> தந்தீமை இல்லாதார் நட்டவர் தீமையையும்
> எந்தீமை என்றே உணாபதாம்—அந்தண்
> பொருதிரை வந்துலாம் பொங்குநீர்ச சேர்ப்ப!
> ஒருவர் பொறைஇருவர் நட்பு.

"ஒருவர் பொறை இருவர் நட்பு" என்பது ஈண்டு வந்துள்ள பழமொழி. நண்பராய் ஒழுகுவோர் இருவருள் ஒருவர்மாட்டாயினும் பிழைபொறுக்கும் குணம் இருந்தாலன்றி அவர் நட்பு நெடிது நில்லாது என்பது இதன் பொருள். சிறந்த உலகியல அறிவாம் இத் தன்மையை உலகில் காண்கிறோமன்றே? தனக்கு உரிய நண்பினன செய்த பிழையாதலின், அப்பிழையைத் தன் பிழையாகவே கருதி அமைக எனக் கூறிய திறத்தைக் காண்க.

இனி, ஒருவர் ஒவ்வோர்கால் பொருள்முட்டுப்பாட்டால் இடர் உறுவராயினும், அக் குறையைப் புறத்தார்க்குக் காட்டாமல், பிறர் மதிக்குமாறு தம் புறத்தோற்றத்தைப் பொலியக் காட்டி ஒழுகுக என அறிவுறுக்கின்றது ஒரு வெண்பா:

> அகத்தால் அழிவு பெரிதாயக் கண்ணும்
> புறததால் பொலிவுறல் வேண்டும் எனைத்தும்
> படுக்கை இலராயக் கண்ணும் உடுத்தாரை
> உண்டி வினவுவார் இல்.

"உடுத்தாரை உண்டி வினவுவார் இல்" என்பது பழமொழி. சிறக்க உடுத்துப் பொலிவாரைக் காண்போர்

அவர்பாட்டுப் பெருமதிப்புக் கொள்வரே யன்றி, அவரைப் பசியும் வறுமையும் உடையராகக் கருதி உணவிட நினைக்க மாட்டார்கள். இஃது உலக இயல்பாம்: இப்பழமொழிக்கு ஒத்த பொருளையே இதன் முதல் இரண்டடிகளிலும் வைத்தார். இவ்வெண்பாக்களால் ஆசிரியர் பழமொழி களையே முதலில மனத்துக்கொண்டு, அவற்றோடியையத் தக்க சிறந்த கருத்துக்களையே வெண்பாக்களில் வைத்து நூலியற்றிய திறம் தெரிகிறதன்றே!

இனிப் பண்டை வரலாற்று நிகழ்ச்சிகள் பல இந் நூலகத்தே சிற்சில இடங்களில் குறிக்கப்படுகின்றன. தூங்கெயில் எறிந்த தொடிததோட் செம்பியன், மனுநீதி கண்ட சோழன், பொற்கைப் பாண்டியன், பாரி, பேகன், பாரிமகள், கரிகால்சோழன், சேரன் செங்குட்டுவன் என்போரைப்பற்றிய செய்திகள் சில குறிக்கப்படுகின்றன.

தூங்கும் எயிலும் தொலைத்தலால் (155)
கறவைக்கன்(று)ஊர்ந்தானைத் தந்தையும் ஊர்ந்தான் (242)
தவற்றை நினைத்துத்தன் கைகுறைததான்
தென்னவனும் (76)
முல்லைக்குத தேரும் மயிலுக்குப் போர்வையும் (74)
பாரி மடமகள் பாண்மகற்கு...நல்கினாள் (381)
நரை முடித்துச சொல்லால் முறைசெய்தான் சோழன் (6)
சுடப்பட்(டு) உயிர்உய்ந்த சோழன் மகனும் (239)
அடுத்தர என்றாற்கு வாழியரோ என்றான் (380)

என வருமிடங்களில் காண்க. மேலும் இராமாயண பாரதக் கதைக் குறிப்புக்களும் சில செய்யுட்களில குறிக்கப்படுகின்றன.

பொலந்தார் இராமன் துணையாகத் தான்போந்து (257)
அரக்கில்லுள் பொய்யற்ற ஐவரும் போயினார் (234)
பாரதத் துள்ளும் பணையம் தம் தாயமா (356)

என வருமிடங்களில் காண்க. மாவலி (183) வாமனன் (177) மதுகைடவர் (301) என்போரைப்பற்றிய புராணக் குறிப்புக்களும் இந்நூலகத்தே குறிக்கப்படுகின்றன.

இனி, அக்காலச் சமண் சமயத்தவர்கள், பழமொழிகளைப் பெரிதும் போற்றிக் கையாண்டார்கள் எனக் கருதற்குச் சில செய்திகள் இடந்தருவனவாகக் காணப்படுகின்றன. இப்பழமொழி நானூறு சமண்சமயப் பெரும் புலவோரான முன்றுறையரையனரால் இயற்றப்பட்டதென்பது வெளிப்படை. நீதிநூல்களுள் திருக்குறளுக்கு அடுத்தபடியாக எண்ணப்படும் நாலடிநானூறு பல சமண் சமயப் பெரும்புலவோரால் இயற்றப்பட்டதென்பதே பல்லோரின் துணிபாயிருக்கின்றது. மற்றை நூல்களைவிட அந் நாலடி நானூறு, பழமொழிகளைப் போற்றிக் கையாண்டிருக்கும் தன்மை ஈண்டு நினைத்தற்குரியதாகின்றது. நாலடி நானூற்றில,

ஒருவர் பொறை இருவா நட்பு,
கைக்குமாம் தேவரே தின்னினும் வேம்பு,
தட்டாமற் செல்லா(து) உளி,
கருநரைமேற் சூடேபோற் றோன்றும்

என இங்ஙனம் பல பழமொழிகள் வந்துள்ளன. இவை இந் நூலுள்ளும் காணப்படுவனவே.

இனிச், சமண்சமயத்தைச் சார்ந்து மீண்ட நாவுக்கரசர் திருவாரூர்ப் பதிகம் ஒன்றுள், ஒவ்வொரு செய்யுளின் ஈற்றிலும ஒவ்வொரு பழமொழி அமையப் பாடியிருப்பதை நோக்கவும் சமண்சமயத்தவர் பழமொழிகளைப் போற்றிக் கையாளு மியற்கையையே நினைக்கச் செய்கிறது.

கனிஇருக்கக் காய் கவர்ந்த கள்வனேனே,
முயல்விட்டுக் காக்கைப்பின் போன ஆறே,
அறம்இருக்க மறம்விலைக்குக் கொண்ட ஆறே

என இங்ஙனம் வருகின்றன பத்துப் பழமொழிகளும்.

பழமொழிகளை எடுத்தாளுதல் யாவர்க்கும் இயல்பாயினும், நாலடிநானூற்றோடு மற்ற நூல்களை வைத்து ஒப்பு நோக்க நாலடி நானூற்றில் பழமொழிகள் சிறப்பாக

எடுத்து ஆளப்பட்டிருப்பதும், இப்பழமொழி நானூற்றுப் பழமொழிகளோடு அவை தொடர்புற்று நிற்பதும் தெளிய உணரப்படும். இவ்விரு நூலும் ஏறக்குறைய ஒருகாலத் தனவே எனத் துணியவும் இடம் ஏற்படுகிறது.

இத்தகைய சிறந்த பழமொழி நானூறு என்னும் நூலுக்குப் பழைய பொழிப்புரை ஒன்று உண்டு. அட்டாவதானம் சுப்பராயச் செட்டியார் சில பாட்டுகட்குமட்டும் உரை எழுதி மூலத்தோடு அச்சிட்டு வெளிப்படுத்திய பதிப்பும், மதுரைத் தமிழ்ச் சங்கத்தினர் முதல் இருநூறு பாட்டுகட்குமட்டும் உரை எழுதி இரண்டு பகுதிகளாக அச்சிட்ட பதிப்பும் உண்டு. செல்வக்கேசவராய முதலியார் பதிப்பு, பால் இயல் பாகுபாட்டுடன் பதவுரையும் பிறவும் சேர்த்து வெளியிடப்பட்டதாகும். யாம் வெளியிடும் இவ்வுரை நூல் சிறந்த பதவுரையுடனும், விளக்கவுரையுடனும், பழமொழிகளை எடுத்துக்காட்டி விளக்க முறுத்திக்கொண்டு செலலலின், இவ்வகை உரை நூல இச் சிறந்த பழமொழி நானூற்றுககு வேண்டப்படுவதாயிற்று. இவ்வுரையினை இயற்றியவர் புலவர் திரு. ம. இராசமாணிக்கம் பிள்ளை அவர்களாவர். இததுணைச சிறந்த பழமொழி நானூற்றை இவ்விளக்கவுரையுடன் தமிழ்நாடு ஏற்றுப் பெரும்பயன் அடையுமென்று நம்புகிறோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

பொருளடக்கம்

			பக்கம்
	பழமொழி அகரவரிசை	...	15
	கடவுள் வணககம்	...	2
1.	கல்வி	...	3
2.	கல்லாதார்	...	9
3.	அவையறிதல்	...	13
4.	அறிவுடைமை	...	19
5.	ஒழுக்கம்	...	24
6.	இன்னா செய்யாமை	...	31
7.	வெகுளாமை	...	36
8.	பெரியாரைப் பிழையாமை	...	42
9.	புகழ்தலின் கூறுபாடு	...	45
10.	சான்றோ ரியல்பு	...	47
11.	சான்றோர் செய்கை	...	55
12.	கீழ்மக்கள் இயல்பு	...	61
13	கீழமக்கள் செய்கை	...	72
14.	நட்பின் இயல்பு	...	82
15.	நட்பில் விலக்கு	...	90
16.	பிறரியல்பைக குறிப்பாலறிதல்	...	96
17.	முயற்சி	...	100
18.	கருமம் முடித்தல்	...	109
19.	மறை பிறர் அறியாமை	...	119
20.	தெரிந்து செய்தல்	...	123
21.	பொருள்	...	133
22.	பொருளைப் போற்றுதல்	...	138
23.	நன்றியில் செல்வம்	...	144
24.	ஊழ்	...	156
25.	அரசியல்பு	...	168
26	அமைசசர்	...	182
27.	மன்னரைச சேர்ந்தொழுகல்	...	188
28.	பகைத்திறம்	...	202
29.	படைவீரர்	...	219
30.	இல்வாழ்க்கை	...	230
31.	உறவினர்	...	245
32.	அறஞ்செய்தல்	...	251
33.	ஈகை	...	261
34.	வீட்டுநெறி	...	271
	செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை	...	281

பழமொழி அகரவரிசை

[எண், பாட்டைக் குறிக்கும்]

அகலுள் நீராலே துடும்பல் எறிந்துவிடல்	98
அக்காரம் பால்செருக்கும் ஆறு	362
அங்காடி மேயும் பழங்கன்று எறுதலும் உண்டு	202
அஞ்சாதே தின்பது அழுவதன்கண்	97
அஞ்சும் பிணிமூப் பருங்கூற் றுடனியைந்து துஞ்சவருமே துயக்கு	365
அஞ்சுவார்க் கில்லை யரண்	285
அடுப்பின் கடைமுடங்கும் நாயைப் புலியாமெனல்	67
அணங்காகும் தான்செய்த பாவை தனக்கு	331
அணியாரே தம்மைத் தமவேனும் கொள்ளாக் கலம்	66
அணியெல்லாம் ஆடையின் பின்	26
அம்பலம் தாழ்க் கூட்டுவார்	55
அம்புவிட்டு ஆக்கறக்குமாறு	166
அயலறியா அட்டூணோ இல்	148
அயிரை யிட்டு வரால் வாங்குபவர்	372
அயிலாலே போழ்ப அயில்	8
அரங்கினுள் வட்டுக்கரை யிருந்தார்க்கு எளிய போர்	176
அரிந்தரிகால் நீர்ப்படுக்குமாறு	299
அரிவாரைக் காட்டார் நரி	30
அழகொடு கண்ணின் இழவு	217
அளறாடிக்கண்ணும் மணி மணியாகிவிடும்	72
அள்ளில்லத்து உண்ட தனிசு	297
அறஞ்செய்ய அல்லவை நீங்கிவிடும்	364
அறிதுயில் யார்க்கும் எழுப்பலரிது	333
அறிமடமும் சான்றோர்க் கணி	74
அறியும் பெரிதாள்பவனே பெரிது	31
அறிவசசம் ஆற்றப் பெரிது	323
அறிவினை ஊழே அடும்	228
அறுமோ குளநெடிது கொண்டது நீர்	374
அறுமோ நரி நக்கிற்றென்று கடல்	203
ஆகாதார்க்கு ஆகுவ தில்	237
ஆகாதே உண்டது நீலம் பிறிது	94
ஆகுமோ நந்துழுதவெல்லாம் கணக்கு	92
ஆடு பனைப் பொய்க்காலே போன்று	284
ஆயிரம் காக்கைக்கோர் கல்	249
ஆராயானாகித் தெளிந்தான் விளிந்துவிடும்	182
ஆலென்னிற பூலென்னு மாறு	268
ஆற்றக் கரும்பனை யன்ன துடைத்து	220
ஆற்றாதவரழுத கண்ணீரவை அவர்க்குக் கூற்றமாய் வீழ்ந்துவிடும்	47

ஆற்றுணா வேண்டுவ தில்	4
ஆற்றுவான் நூற்றுவரைக் கொன்றுவிடும்	307
இடைதவிர்ந்து வீழ்தலின் நட்டருளாதலே நன்று	366
இடை நாயிற கென்பிடுமாறு	305
இடையன் எறிந்த மரம்	223
இரந்தூட்குப் பன்மையோ தீது	384
இருதலையும் காக்கழித்தார்	390
இருதலைக் கொள்ளி யென்பார்	141
இருளி னிருந்தும் வெளி	320
இல்லுள் வில்லேற்றி இடைக்கலத் தெய்துவிடல்	24
இல்லை உயிருடையார எய்தா வினை	239
இல்லையே அட்டாரை ஒட்டாக் கலம்	173
இல்லையே உய்வதற்கு உய்யாவிடம்	234
இல்லையே ஒன்றுககுதவாத வொன்று	341
இல்லையே தாம்தர வாராஅநோய்	183
இல்லையே யானைதொடு வுண்ணின் மூடுங் கலம்	247
இழவன்று எருது உண்ட உப்பு	172
இழுககத்தின் மிக்க இழிவு இல்லை	15
இழுகினா னாகாப்பதில்லையே முன்னம் எழுதின ஓலை பழுது	160
இளைதென்று பாம்பிகழவா ரில்	277
இருப்புழிப் பெற்றால் கிடப்புழியும் பெற்றுவிடும்	190
இளையனே ஆயினும் மூத்தானே யாடுமகன்	154
இறக்கு மையாட்டை உடம்படுத்து வெளவுண்டாரில்	170
இறந்தது பேர்த்தறிவா ரில்	206
இறைதோறும் ஊறும் கிணறு	377
இனங் கழுவேறறினா ரில்	198
இன்சொல் இடர்ப்படுப்ப தில்	191
இன்னாது இருவர் உடனாடல் நாய்	18
இன்னும்தீ பேஎயோடானும் பிரிவு	126
ஈடில்லதற் கில்லை பாடு	71
ஈனுமோ வாழை இருகால் குலை	63
உடுத்தாரை உண்டி வினவுவா ரில்	329
உடைஇல் தீயிடு மாறு	317
உண்ணா இரண்டேறு ஒரு துறையுள் நீர்	312
உண்ணாந் துணைக் காக்கும் கூற்று	135
உண்ணோட் டகலுடைப் பார்	163
உமிக்குறறுக் கைவருந்து மாறு	348
உமையாள் ஒரு பாலாக் கட்டங்கம் வெல்கொடி கொண்டானும் கொண்டான்	124
உயக்கொண்டு புல்வாய் வழிப்படுவா ரில்	179
உயவு நெய்யுட் குளிக்கும் ஆறு	385
உருவு திருவூட்டு மாறு	301

உரைத்தால் உரைபெறுதல் உண்டு 75
உரையார் இழித்தக்க காணிற் கனா 130
உலகினுள் இல்லதற் கில்லை பெயர் 161
உலக்கைமேல் காக்கை என்பார் 157
உவர் நிலம் உட்கொதிக்கு மாறு 289
உவவாதார்க்கு ஈத்ததை யெல்லாம் இழவு 226
உள்ளம் படர்ந்ததே கூறும் முகம் 144
உள்ளிருந்து அச்சாணி தாங்கழிக்கு மாறு 112
உறற்பால தீண்டாவிடுதல் அரிது 230
உறற்பால யார்க்கும் உறும் 229
ஊரறியா மூரியோ இல் 102
ஊர்ந்துருளின் குன்று வழிஅடுப்ப தில் 369
ஊர மேறறதாம் அமணர்க்கு ஓடு 314
ஊழம்பு வீழா நிலத்து 240
எய்ப்பினில் வைப் பென்பது 358
எருக்கு மறைந்தி யானை பாய்ச்சிவிடல் 62
எருத்திடை வைககோல் தினல் 278
எருமை எறிந்தொருவர் காயக்கு மேலாபிக்கும் ஆறு 338
எலலாம் பொய் அட்டூணே வாய் 349
எழுப்புபவோ துஞ்சு புலியைத துயில் 281
எளியாரை எள்ளாதா ரில் 248
என்றும் மனநலமாகாவாம கீழ் 90
ஏப் பிழைத்துக் காக்கொள்ளு மாறு 309
ஏமாரார் கோங் கேறினர் 282
ஏவலாள் ஊருஞ் சுடும் 238
எற்றுக்கன் றேறுய்விடும் 81
ஓககலை வேணடி அழல் 290
ஒடியெறியத் தீரா பகை 310
ஒருபககம நீரொழுகிப் பாலொழுகு மாறு 213
ஒருவா பொறை இருவர் நட்பு 321
ஒழுககத்தின மிக்க உயர்வு இல்லை 15
ஒளியக காட்டு ஆளாக் கரிது 264
ஒறுக்கல்லா மென்கண்ணன் ஆளான் அரசு 241
ஒன்றுரு முன்றிலோ இல் 381
ஒன்றேற்றி வெண்படைககோ ளொன்று 125
ஓம்புவார் இல்லெனின் சென்றுபடுமாம் உயிர் 262
ஓங்க ஊரோடு மாறு 195
ஓரறையுள் பாம்போ டுடன்உறையும் ஆறு 253
ஓதத திசைக்கும் பறை 37
கடமபெற்றான் பெற்றான் குடம் 211
கடலுளால் மாவடித்தற்று 25

கடலுள்ளும் காண்பவே நன்கு	197
கடலோடு காட்டொட்ட வில்	78
கடல் நீந்திக் கற்றடியு ளாழ்ந்துவிடல்	342
கடல்படா வெல்லாம் படும்	269
கடனன்றோ ஊரறிய நட்டார்க்கு உணா	85
கடிஞையில் கல்லிடுவா ரில்	375
கடித்தோடும் பாம்பின் பல் கொள்வாரோ இல்	287
கடிய கனைத்து விடல்	276
கடையடைத்து வைத்துப் புடைத்தக்கால் நாயும் உடையானைக் கவ்விவிடும்	45
கண்ணிலும் கூரியவாம் கண்	143
கண்செரீஇ இட்டிகை தீற்றுபவர்	108
கண்டது காரணமா மாறு	142
கண்ணிற் கண்டதூஉம் எண்ணிச் சொலல்	185
கயவர்க் குரையார் மறை	180
கருக்கினுள் கூறை கொள்வார்	321
கல்தேயும் சொல் தேயாது	39
கல்லொடு கை யெறியுமாறு	317
கவுட்கொண்ட நீர்	252
கள்ளினைக் காணக் களிக்கும் களி	99
கள்ளைக் குடித்துக் குழைவாரோ இல்	266
கழிவிழாத் தோளேற்றுவார்	137
கற்கிள்ளிக் கையுய்ந்தா ரில்	48
கற்றலிற் கேட்டலே நன்று	5
கற்றறிவு போகா கடை	28
கற்றொறுந் தான் கல்லாதவாறு	2
கணை முந்துறுத வினையில்லை	12
காக்கையைக் காப்பிட்ட சோறு	208
காணார் எனச் செய்யார் மாண வினை	76
காதலோ டாடார் கவறு	356
காப்பாரிற் பார்ப்பார் மிகும்	368
கானகத் தூக்க நிலா	139
குடர் ஒழிய மீவேலி போக்குபவர்	219
குடிகெட வந்தால் அடிகெட மன்றிவிடல்	288
குரங்கின்கைக் கொள்ளி கொடுத்துவிடல்	255
குரங்கினுள் நன்முகத்த வில்	104
குருட்டுக்கண் துஞ்சிலென் துஞ்சாக்கா லென்	218
குருவி குறங்கருப்பச் சோருங் குடர்	337
குலவிச்சை கல்லாமற் பாகம்படும்	6
குவளையைத் தன்றாரால் யாத்துவிடல்	279
குழிப்பூழி ஆற்றா குழிக்கு	396

குழுவத்தார் மேயிருந்த என்றாட றுப்பினு மன்று 60
குளந்தொட்டுத் தேரைவழிச் சென்றா ரில் 198
குறுநரிக்கு நல்ல நாராயங் கொளல் 51
குறுமக்கள் காவு நடல் 120
குறும்பியங்கும் கோப்புச்குழிச் செய்வ தில் 227
குறும்பூழ்க்குச் செய்யுளா தாகு மனம் 96
குறைபயர் தம்மேலே வீழப் பனை 280
குன்றின்மேல் இட்ட விளக்கு 80
கூதறைகள் ஆகார் குடி 106
கூரம்பு அடியிழுப்பின இல்லை அரண் 155
கூரிதெருத்து வலியதள கொம்பு 271
கூலிக்குச் செய்துண்ணு மாறு 383
கூறாந குதித்துய்ந் தறிவாரோ இல் 391
கூற்றம் புறங்கொம்மை கொட்டினா ரில் 291
கூன்மேல் எழுந்த குரு 283
கெடுமே கொடும்பாடுடையான் குடி 64
கெட்டார்க்கு நட்டாரோ இல் 134
கைக்குமே தேவரே தின்னினும் வேம்பு 95
கொடுத்தேழையாயினா ரில 377
கொடுப்பவர் தாமறிவார் தஞ்சீ ரளவு 380
கொண்டார் வெகுடல் நகைமேலும் கைப்பாய்விடும் 312
கொல்லிமேல் கொட்டு வைத்தார் 388
கொல்லையுள் கூழ மாமே போன்று 256
கொற்சேரி துன்னூசி விற்பவரில் 73
சால்பினை சால்பறுக்கு மாறு 334
சாவாதான் முன்கைவளையுந் தொடும் 293
சான்றவா கையுண்டும் கூறுவா மெய 83
சான்றோர் அவைப்படின் சாவாது பாம்பு 86
சான்றோர் கடங்கொண்டும் செய்வார் கடன் 82
சிறுகுரங்கின் கையாற் றுழா 306
சீர்ந்தது செய்யாதா ரில் 177
சுமையொடு மேல்வைப்பாமாறு 357
சுரத்திடைப் பெய்த பெயல் 373
சுரம்போக்கி உல்குகொண்டா ரில் 1
சுரை யாழ அம்மி மிதப்பு 122
சுரையாழ் நரம்பறுத்தற்று 260
சூட்டறுத்து வாயிலிடல் 246
செய்கென்றான உணகென்னு மாறு 207
செய்தானை ஒவ்வாத பாவையோ இல் 259
செய்யாத எய்தா வெனின் 56
செய்வதென் வல்லை அரசாட்கொளின் 254

செருப்பிடைப் பட்ட பரல் 120
செல்வம் தொகற்பால போழ்தே தொகும் 233
செனைக்கி நந்து நீர் கொண்டதே போன்று 205
சொல்லாக்கால் சொல்லு வதில் 13
சோரம் பொதியாதவாறு 315
தஞ்சாகாடேனும் உயவாமல் சேறலோ வில் 168
தஞ்சாதி மிக்குவிடும் 142
தட்டாமல் செல்லாது உளி 169
தண்கோ லெடுகருமா மெய் 250
தர்நீர ராதல் தலை 192
தமக்கு மருத்துவர் தாம் 149
தமரை இல்லார்க்கு நகரமும் காடுபோன்றாங்கு 14
தம்மைத் தாம் ஆர்க்கும் கயிறு 371
தம்மை யுடைமை தலை 387
தயிர் சிதைத்து மற்றொன் றடல் 343
தலையுள் குறுநகண்ணி யாகிவிடும் 186
தனக்கின்றா இன்றா பிறர்க்கு 44
தனிமரம் காடாத லில் 286
தன்னை அம்பாயுள் புக்குவிடும் 392
தாதோன்றிட வரும் சால்பு 59
தாமிருந்த கோடு குறைத்துவிடல் 346
தாயர் அலைத்துப் பால் பெய்துவிடல் 363
தாயர்க்கு மக்களுள் பக்கமோ வேறு 332
தாய் மிதித்த ஆகா முடம் 353
தால வடைக்கலமே போன்று 87
தாறுப்படினும் தலைமகன் தன்னொளி நூறுயிரவர்க்கு நேர் 69
திங்களை நாய் குரைத்தற்று 107
திருவினும் திட்பம் பெறும் 33
திருவுடையார் பண்டம் இருவர் கொளல் 199
திருவோடும் இன்னாது துசசு 355
திரையவித் தாடார் கடல் 381
தினலாமோ அக்காரம் சேர்ந்த மணல் 19
தீங்குரைக்கு நாவிற்கு நல்குர வில் 42
தீநாய் எழுப்புமாமென்கு 292
தீநாள் திருவுடையார்க் கில் 235
தீயன ஆவதே போன்று கெடும் 213
தீ யில்லை யூட்டும் திறம் 58
தீற்றுதோ நாய்கட்டால் நல்ல முயல் 128
துளியீண்டில் வெள்ளந் தரும் 201
துறவர உடம்பினான் என்ன பயன் 389
துன்னினு ரல்லார் பிறர் 352

துன்னூசி போம்வழி போகு மிழை 354
தெளியாரைத் தேற லரிது 52
தேனார் பலர்க்குறைத்துக காஞ்சிரை நட்டுவிடல் 104
தொட்டாரை ஒட்டாப் பொருள இல்லை 173
தொலை யெண்ணார் அப்பந் தின்பார் 165
தோற்பன கொண்டு புகார் அவை 17
நகையாகும் யானைப்பல் காண்பான் புகல் 22
நசை கொன்றான் செல் உலக மில் 225
நரகர்கட் கில்லையோ நஞ்சு 120
நரிக்கூஉக் கடற் கெய்தாவாறு 316
நரியிற்கூண் நல்யாண்டும் தீயாண்டு மில் 101
நல்ல விறகின் அடுனும் நனிவெந்நீர் இல்லம் சுடுகலாவாறு 51
நல்லறம் செய்வது செய்யாது கேள் 367
நற்காப்பின் தீச்சிறையே நன்று 207
நன்றா வந்ததொன் றன்று 294
நாய் கானின் கற்காணு வாறு 361
நாய்கொண்டால் பார்ப்பாரும் தின்பர் உடும்பு 35
நாய் கௌவின் பேர்த்து நாய் கௌவினு றில 49
நாய் பெற்ற தெங்கம்பழம் 216
நாய்மேல் தவிசிடு மாறு 105
நாய்வால் திருந்துதல் என்றுமோ இல் 33
நாளும் கடவுள் துலாம்பண்ணினா 330
நாவற்கீழ்ப் பெற்ற கனி 11
நாவிதன் வாள் சேப்பிலைக்குக் கூர்தவிடல் 319
நிறைபுள்ளோ இன்று வரைவு 68
நிறைகுடம்நீர் தளும்ப லில் 9
நின்றது சென்றது பேராதவர் 152
நின்நடை நின்னின் றறிகிற்பா ரில் 36
நீத்தம் மலைப்பெயல் காட்டுந் துணை 258
நீர நீர்சாவு அறும் 307
நீர்போயும் ஒன்றிரண்டாம் வாணிகம் இல் 344
நீர் மிகின் இல்லை சிறை 305
நீர் வழை வாம் நீர்மலர் 379
நீள்கயத்துள் யாமை நனைந்துவா என்று விடல் 175
நுகத்துப் பகலாணி போன்று 339
நுணலுந்தன் வாயால் கெடும் 114
நெடுமாகத் தற்செய்யத தானே கெடும் 53
நெடுவேல் கெடுத்தான் குடத்துளும் நாடிவிடும் 198
நெய்தலைப் பால் உக்கு விடல் 34
நெய்பெய்த கலனே நெய் பெய்துவிடும் 272
நோவச்செய் நோயின்மை யில் 43

நோற்றார்க்குச் சோற்றுள்ளும் வீழும் கறி 236
பசிபெரி தாயினும் புன்மேயா தாகும் புலி 70
பசுக் குத்தின் குத்துவா ரில் 57
படையின் படைத்தகைமை நன்று 325
பயின்றது வானக மாகிவிடும் 398
பரிசழிந்தாரோடு தேவரு மாற்ற லிலர் 20
பலிப்புறத் துண்பார் உறை 295
பல்கட்டப் பெண்டீர் மகார் 394
பழஞ்செய் போர் பின்றுவிடல் 221
பள்ளியுள் ஐயம் புகல் 224
பழம் பகை நட்பாத லில் 296
பறைக்கண் கடிப்பிடு மாறு 178
பனியால் குளநிறைத லில் 127
பனைப் பதித் துண்ணா பழம் 187
பனைமுதிரின் தாய்தாள்மேல் வீழ்ந்துவிடும் 270
பனையின்மேல் பஞ்சினைத் தெஃகிவிட்டற்று 181
பன்மையின் பாடுடைய தில் 303
பாணசேரிப் பற்கிளக்கு மாறு 21
பாம்பறியும் பாம்பின கால் 7
பாய்பவோ வெந்நீரும் ஆடாதார் தீ 159
பால்தலைப் பாலூற லில் 245
பிணியீ டழித்துவிடும் 40
பிரம்பூரி என்றும் பதக்கே வரும் 399
பிறரைக் கள்ளராச் செய்குறுவார் 117
பின்னின்னா பேதையார் நட்பு 138
புதற்குப் புலியும் வலியே புலிக்குப் புதலும் வலியாய்விடும் 200
புலத்தகத்துப் புள ளரைக்கால் விற்பே மெனல் 65
புலப்புல வண்ணத்த புள் 146
புலித்தலையை நாய் மோத்த லில் 204
புலிமுகத் துண்ணி பறித்துவிடல் 109
புலிமுன்னாப் புல்வாய்க்குப் போக்கில் 265
புலைப்பொருள் தங்கா வெளி 340
புல்லத்தைப் புல்லம் புறம்புல்லு மாறு 261
புழுப்பெய்து புண் பொதியு மாறு 113
புறத்தமைச்சின் நன்றகத்துக் கூன் 275
பூசை எலி யில்வழிப் பெறு பால் 324
பூசையைக் காப்பிடுதல் புன்மீன்றலை 170
பூண்ட பறை யறையார்போயினா ரில் 84
பூவோடு நாரியைக்கு மாறு 88
பெண் பெற்றான் அஞ்சான் இழவு 382
பெய்யுமாம் பெய்யாதெனினும் மழை 351

பெரிதகழின் பாம்புகாண்பாரும் உடைத்து 328
பெரிது உக்கு ஓடிக காட்டிவிடும் 158
பெரியதன் ஆவி பெரிது (க. வா.)
பெரியவான் ஆற்றவும் முன்கை நெடியார்க்குத் தோள் 156
பெரிய வரைச சார்ந்து செய்றீஇயிலா ரில் 257
பெரும பழியும் பேணுதாக் கில் 41
பேதைச் குறைத்தாலு ந் தோன்றா துணர்வு 93
பைங்கரும்பு மென்றிருந்து பாகுசெயல் 359
பொருட்தா மண் ஆகா சுவர் 110
பொருள் கொடுத்துக கொள்ளார் இருள் 3
பொறியும் தொடாப்பாலாற் கண்ணே தொடும் 231
போகாமத தாய பின் சதாகத தகா 304
போகாமோ நீர் குறிதாகப் புகல் 189
போமாறறியா புலன்மயங்கி ஊராபுக்குச சாமா
சனைகாணுதவாறு 61
மகனறிவு தந்தை யறிவு 145
மகன் மறையாத தாய் வாழுமாறு 322
மசசேறறி எணி களைவு 136
மதிப்புறத்துப் பட்ட மறு 10
மதியமபோல் பன்மீனும காய்கலா வாகு நிலா 27
மயில்போலுங் கள்வருடைத்து 194
மரங்குறைப்ப மண்ணை மயிர் 215
மரத்தின்கீழ் ஆகா மரம் 251
மரம போக்கிக கூலிகொண்டார் இல்லை 1
மறையார் மருந்துவாககு நோய் 133
மற்றதன்பாற் றேம்பல் நன்று 171
மன்றஞ்சுவார்ககுப் பரிகாரம் யாதொன்று மில் 118
மன்றது மையல் சேர்ந்தற்று 119
மனை மரமாய மருந்து 350
மாக்காய்த்துத் தன்மேல் குணில் கொள்ளுமாறு 214
மாயா நரையான் புறத்திட்ட சூடு 79
மிக்கவை மேவிற பரிகார மில 387
மிளகுளு வுண்பான் புகல் 23
முடவன் பிடிப்பூணி யானையோடாடல் உறவு 16
முதலிலார்க்கு ஊதிய மில் 232
முயல் விட்டுக காககை தினல் 370
முலையிருப்பத் தாயணல் தான்சுவைத் தற்று 274
முழங்குறைப்பச சாணீளுமாறு 100
முழநட்பிற் சாணுட்கு நன்று 129
முழந்தாள் கிழிந்தானை மூககுப் பொதிவு 19
முள்ளித்தேன் உண்ணுமவர் 393
முள்ளினால் முட்களையு மாறு 308

முறைமைக்கு மூப்பிளமை யில் 242
முனிவில்லார் முன்னியது எய்தாமை யில் 153
முன்பகல் கண்டான் பிறன்கேடு தன்கேடு
பின்பகல் கண்டுவிடும் 46
முன்னின்னா மூத்தார் வாய்ச் சொல் 268
மூககற்றதற் கில் பழி 115
மூரி உழுது விடல் 162
மூரியைத் தீற்றிய பல் 209
மைம்மைப்பின் நன்று குருடு 298
மோரின் முதுநெய் தீதாகலோ வில் 89
யாதானும் ஒன்றுகொண்டு யாதானும் செய்தக்கால்
யாதானும் ஆகிவிடும் 154
யாப்பினுள் அட்டிய நீர் 311
யாரானும் சொற் சோரா தாரோ இலர் 184
யாரே நமநெய்யை நக்குபவர் 345
யாருளரோ தங்கன்று சாக்கறப்பார் 131
யானைபோய் வால் போகா வாறு 395
யானையால் யானை யாத்தற்று 29
வண்டுதா துண்டுவிடல் 244
வருந்தாதார் வாழ்க்கை திருந்துத லின்று 151
வலியலாந் தாககு வலிது 302
வளிதோட் கிடுவாரோ இல் 116
வாங்கும் எருதாங் கெழாஅமைச சாக்காடெழில் 313
வாடியக்கணணும் பெருங்குதிரை யாப்புள வேறாகிவிடும் 376
வாயுறைப் புற கழுததில் யாத்துவிடல் 222
வாழைக்காய உப்புறைதத லில் 326
விண்டற்கு விண்டல் மருந்து 140
விண்ணியங்கும் ஞாயிறைக் கைம்மறைப்பா ரில் 32
வித்தின்றிச சம்பிரத மில 322
விரையிற் கருமம் சிதையும் 164
வில்லொடு காக்கையே போன்று 77
விளக நெலி கொண்டு தனக்கு நோய் செய்துவிடல் 14
வினை முந்துறாத உரை யில்லை 12
வெண்ணெய மேல்வைத்து மயில் கொள்ளுமாறு 210
வெண்பாட்டம் வெள்ளந் தரும் 300
வெண்மாத் தலைகீழாக காதிவிடல் 111
வெந்நீரில் தண்ணீர் தெளித்தது 162
வெள்ளாடு தன்வளி தீராது அயல்வளி தீர்த்துவிடல் 38
வேண்டாமை வேண்டிய தெல்லாந் தரும் 273
வேள்வாய் கவட்டை நெறி 360
வேற்குத்தின் காணியின் குத்தே வலிது 196

உ

பழமொழி நானூறு

— ❋ —

தற்சிறப்புப்பாயிரம்

பிண்டியின் நீழல் பெருமான் அடிவணங்கிப்
பண்டைப் பழமொழி நானூறும்—கொண்டினிதா
முன்றுறை மன்னவன் நான்கடியும் செய்தமைத்தான்
இன்றுறை வெண்பா இவை.

(சொற்பொருள்.) பிண்டியின் நீழல் பெருமான் அடி வணங்கி - அசோக மரத்து நீழலில் எழுந்தருளியிருககும் அருகக கடவுளின் திருவடிகளைத் தொழுது, பண்டைப் பழமொழி நானூறும் கொண்டு - பழைய பழமொழிகள் நானூறுந் தழுவி, முன்றுறை மன்னன் - முன்றுறையரசர், இன்துறை வெண்பா இவை - இனிய பொருட்டுறைகள் அமைந்த வெண்பாக்களாகிய இந்நூற் பாட்டுக்களின், நான்கடியும் இனிதா(க)-நான்கு அடிகளையும் சுவைதோன்ற, செய்தமைத்தான் - யாத்தமைததார.

(கருத்து.) இறைவனை வணஙகி, இப் பழமொழி நானூறும் பாடப் பெற்றன.

(விளக்கம்.) பிண்டியின் நீழற் பெருமானை வழுத்துவதால் ஆசிரியர் சைன சமயத்தினா எனபது தெளிவு. பண்டைப் பழமொழிகொண்டு என்றது, முன்பு உலக வழக்கில் வழங்கி வந்த பழமொழிகளின் கருத்துக்களைத் தழுவி என்பதற்கு. 'இவை நான்கடியும் செய்தமைத்தான்' என்று கூட்டிக்கொள்க; இனிய பொருட்டுறைகளாவன: அறம், பொருள், இன்பம், வீடு என்றவற்றின் கூறுபாடுகள். இந்நூலாசிரியரான முன்றுறையரையனாரே இப்பாயிரமும் இயற்றினாரென்பாருமுளர்.

கடவுள் வணக்கம்

அரிதவித்(து) ஆசின்(று) உணர்ந்தவன் பாதம்
விரிகடல் சூழ்ந்த வியன்கண்மா ஞாலத்(து)
உரியதனிற் கண்டுணர்ந்தார் ஒக்கமே போலப்
பெரியதன் ஆவி பெரிது.

(சொ - ள்.) *அரிது அவித்து* - முக்குற்றங்களையும் அருமையாகக் கெடுத்தலான், *ஆசு இன்று* - குற்றமின்றி, *உணர்ந்தவன் பாதம்* - முற்ற அறிந்த கடவுளின் திருவடிகளையே, *விரிகடல் சூழ்ந்த வியன்கண்மா ஞாலத்து* - அகன்ற கடலால் சுற்றப்பட்ட அகன்ற இடத்தினையுடைய பெரிய இவ்வுலகில், *உரியதனிற் கண்டு* - உரிமைப் பொருளைப்போலக் கருதி, *உணர்ந்தார் ஒக்கமே* - அறிந்தவர்களது உயர்வே, *பெரியதன் ஆவிபோல பெரிது* - பேருடம்பினையுடைய ஆவியைப் போன்று பெரியது.

(க - ரு.) கடவுளின் திருவடிகளை உரிமையாக வணங்கினோர்களது உயர்வே மிகச் சிறந்தது.

(வி - ம்.) முக்குற்றங்கள்:—காமம், வெகுளி, மயக்கம். கெடுத்தல் அருமைதோன்ற அரிதவித்து என்றார். குற்றமற உணர்தலாவது - ஐயந்திரிபின்றி அறிதல். பெரிது: குறிப்பு வினைமுற்று. முக்குற்றங்களையும கெடுத்தாலன்றிக் குற்றமற உணரலாகாமையின் அவிதது என்பது ஏதுப் பொருட்கண் வந்த வினையெச்சம். பெரிய உடம்பின்கண் உள்ள ஆவி பெரியதாய்ப் பரவியிருக்கும். கண்டுணர்ந்தார் ஒககமே போலப் பெரியதன் ஆவி என்றாரேனும், பெரியதன் ஆவிபோல ஒக்கமே பெரிது என்பது கருத்தாகக் கொள்க. பின் வருவனவற்றிற்கும் இஃதொக்கும். ‘பெரியதன் ஆவி பெரிது’ என்பது இச் செய்யுளில் வந்த பழமொழி.

நூல்

1. கல்வி

1. ஆற்றும் இளமைக்கண் கற்கலான் மூப்பின்கண்
போற்றும் எனவும் புணருமோ—ஆற்றச்
சுரம்போக்கி உல்குகொண்டார் இல்லையே இல்லை
மரம்போக்கிக் கூலிகொண் டார்.

(சொ-ள்.) *ஆறறச சுரமபோககி-மிகவும் வழியைக்கடகக விட்டு, உல்குகொண்டார் இல்லை - தீர்வைப் பொருள் அடைபவர்கள் இல்லை, மரம்போக்கிக் கூலிகொண்டார் இல்லை-ஓடத்தைச செலுத்தி நிறுத்தியபின் கூலியைப் பெறுபவாகள் இல்லை, (அவைபோல), ஆற்றும் இளமைக்கண் - கல்வியைக் கற்றற்குரிய இளமையில், கற்கலான் - கல்லாதவன், மூப்பின்கண் போறறும்-முதுமையின்கண் கற்று வல்லவனாவான், எனவும் புணருமோ-என்று சொல்லுதலும் கூடுமோ? இல்லை.*

(க - து.) *கற்றற்குரிய இளமைப்பருவங் கழிவதற்கு முன்னே கல்வி கற்கவேண்டும்.*

(வி - ம்.) *மரம், தன்னாற் சமைந்த ஓடத்தின்மேல் நிற்றலால் ஆகுபெயர். ஆற்றுதல் - செயதல் கற்றலும் ஒரு செயலாதலால் "ஆற்றும்" எனவும், அதற்குரிய காலம் இளமையே என "ஆற்றும் இளமைக்கண்" எனவும் கூறப்பட்டது. கற்கலான்: எதிர்மறை வினைப்பெயர்.*

(1) *"சுரம்போக்கி உல்குகொண்டார் இல்லை." (2) "மரம்போககிக் கூலிகொண்டார் இல்லை"—இவை இப் பாட்டில் வந்த பழமொழிகள். "தும்பைவிட்டு வாலைப பிடியாதே" என்பது இவற்றையொத்த பழமொழியாய் இக்காலதது வழங்கி வருகின்றது.* (க)

2. சொற்றோறும் சோர்வு படுதலால் சோர்வின்றிக்
கற்றோறும் கல்லாதேன் என்று வழியிரங்கி
உற்றோன்று சிந்தித்து உழன்றுஒன்(று) அறியுமேல்
கற்றோறுந்தான் கல்லாத வாறு.

(சொ - ள்.) *சொல்தொறும் சோாவுபடுதலால் - (கற்றா முன்பு) ஒன்றைச் சொல்லுந்தோறும குற்றம் உண்டாதலால,*

சோர்வின்றி - மனத்தளர்வின்றி, கல்தொறும் கல்லாதேன் என்று - கறகுந்தோறும் நான் கல்லாதவன் என்று கருதி, வழி யிரங்கி - கல்லா தொழிந்த நாட்களுக்கு வருந்தி, உற்று ஒன்று சிந்தித்து - மனம் பொருந்தி ஒருமைப்பட மீண்டும் மீண்டும் நினைத்து, உழன்று ஒன்று அறியுமேல் - வருந்தி அறிந்திராத ஒரு பொருளை அறிவானாயின், கல்தொறும் - பின்னும் நூல்களைக கறகுந்தோறும், தான் கல்லாதவாறு - தான் கல்லாதவனாகவே நினைததுக கற்கக கடவன்.

(க - து.) படிக்குந்தோறும் அறியாதவனாக நினைத்து ஒவ்வொருவனும படிக்கவேண்டும்.

(வி - ம்.) வழியிரங்குதல் - ஓர் இன்பத்தை அடையும் பொழுது அங்ஙனம் அடையாது நின்ற நாளுக்கு வருந்துதல் சோம்பலின்றி அறியாதவனாக மதித்து ஆராயவே இந்த அறிவு ந்தோன்றும். அது தோன்றுமாதலால் மேலும் மேலும் கற்ற லான ஊக்கம் பிறக்கும். அதனால் மிகுந்த இன்பம் பெறலாம. சிறந்த பொருள்களை அறியும் அருமை நோககியே ஆசிரியர் "உற்று ஒன்று சிந்திதது உழன்று ஒன்று அறியுமேல்" என அறியும் அருமைப்பாடு விளக்கினார். (உ)

3. விளக்கு விலைகொடுத்துக் கோடல் விளக்குத்
துளக்கம்இன்(று) என்றனைத்தும் தூக்கி விளக்கு
மருள்படுவ தாயின் மலைநாட என்னை
பொருள்கொடுத்துக் கொள்ளார் இருள்.

(சொ-ள்.) மலைநாட - மலைநாட்டையுடையவனே, விளககு - விளககிற்கு வேண்டிய நெய் முதலியவற்றை, விலைகொடுத்துக் கோடல் - விலைப்பணம கொடுத்துக் கொளவது, விளககு துளக்கம் இன்று என்று அனைததும் தூககி - விளக்கினால பொருள் வேறுபாடு இலலை என்று விளக்கின் தன்மை முழுமையும் ஆராய்ந்தேயாகும், விளககு மருள்படுவதாயின் - விளக்கு தெளிவாகக காட்டாது தானே மழுங்குதலைச செய்யின், என்னை - பொருள்கொடுத்துப் பெற்ற அதனால அவர்க்கு வரும் பயன் யாது (ஆதலால்), பொருள்கொடுததுக் கொள்ளார இருள் - பொருளைககொடுத்து இருளைக கொளளார்.

(க - து.) ஞான நூல்களைக் கற்றல் வேண்டும்.

(வி - ம்.) விளக்கு - உண்மை நிலையை விளக்கிக் காட்டு தலின் இப்பெயர் பெற்றது. துளக்கம் - அசைவு; அஃதாவது பொருள் நிலை வேறுபாடு.

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே"

என்ற புறநானூற் றடிகளும் 'ஆசிரியனை வழிபட்டுப் பொருள் கொடுத்துக் கற்றல் நன்று' என்பதை வலியுறுத்துகின்றன. குறித்தபொருள் மறைந்து நிற்க வேறுபொருள் கூறப்பட்டமையின் இச் செய்யுள் ஒட்டு அணியைச் சேர்ந்ததாகும். விளக்கு என்றமையால் பிறப்பின் தன்மையை விளக்கக் கூடிய ஞான நூல் குறித்த பொருளாகக் கொள்ளப்பட்டது. "பொருளைக் கொடுத்து இருளைக் கொள்ளார்" என்பது இச் செய்யுளில் வந்த பழமொழி. (௩)

4. ஆற்றவும் கற்றார் அறிவுடையார் அஃதுடையார்
நாற்றிசையும் செல்லாத நாடில்லை—அந்நாடு
வேற்றுநா டாகா தமவேயாம் ஆயினால்
ஆற்றுணா வேண்டுவ தில்.

(சொ - ள்.) ஆற்றவும் கற்றார் அறிவுடையார்-மிகுதியும் கற்கவேண்டிய நூல்களை அறிந்தவர்களே அறிவுடையார் எனப் படுவார், அஃதுடையார் நாற்றிசையும் செல்லாத நாடில்லை - அவ் வறிவு படைத்தவர்களது (புகழ்) நான்கு திசையின் கண்ணும் பரவாத நாடுகளில்லை, அந்நாடு வேற்று நாடாகா - அந்த நாடுகள் அயல் நாடுகளாகா, தமவேயாம் - அவ்வறிவுடையோர் நாடுகளே யாம், ஆயினால்-அங்ஙனமானால், ஆற்று உணா வேண்டுவது இல் - வழியில் உண்பதற்கு உணவு (கட்டமுது) கொண்டு செல்ல வேண்டியதில்லை.

(க - து.) கற்றாருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு

(வி - ம்.) "அறிவுடை யொருவனை அரசனும் விரும்பும்" ஆதலான் செல்லுகின்ற இடந்தோறும் ஆங் குள்ளோர்களால் வரவேற்கப்பட்டு வேண்டிய நலனை வேண்டியாங்கு எய்துவாரா தலின், வழியிடையமுது வேண்டுவதில்லை யென்றார். கற்கலான நூல்களை மிகுதியாகக் கற்றவர்களையே அறிவுடையா ரென்றார்.

5. உணற்(கு)இனிய இன்னீர் பிறி(து)உழிஇல் என்னும்
கிணற்(று) அகத்துத் தேரைபோல் ஆகார்—கணக்கினை
முற்றப் பகலும் முனியா(து) இனிதோதிக்
கற்றலிற் கேட்டலே நன்று.

(சொ - ள்.) உணற்கு இனிய இன்னீர்—குடித்தற்கு இனிய உவர்ப்பில்லாத நன்னீர், பிறிது உழி இல் என்னும் - வேறு இடங்களில் இல்லையென்று நினைக்கும், கிணற்று அகத்துத் தேரை போல் - கிணற்றினுள்ளே வாழும் தவளையைப்போல், ஆகார் — தாமுங் கருதாமல், கணக்கினை - நூல்களை, முற்றப் பகலும் முனியாது இனிது ஓதிக் கற்றலின் - நாள் முழுமையும் வெறுப்பின்றி இனிதாகப் படித்து அறிதலைக் காட்டினும், கேட்டலே நன்று - (அறிஞர்களிடம்) விரும்பிக் கேட்டலே நன்று. (கற்றலிற கேட்டலே இனிது)

(வி—ம்.) தேரைபோ லாதலாவது தாம் விரும்பிச செய்யும் கற்றதனலன்றிக் கேட்டறிதலினுற் பயனில்லை என்று கருதுதல். தாம் பல நாளுங் கற்றறிந்ததில் தளர்வு வந்துழி, அறிஞர்வாய்க் கேட்ட கேள்வி ஊன்றுகோல் போல உதவுமாதலின், கேட்டலே நன்று என்ருர். வருந்திக் கற்றலினும் கேட்டல் மிக இனிது என்பாரா, "முற்றப் பகலும் முனியாது இனிதோதிக் கற்றலின்" என்று கற்றலின் அருமையை விளக்கினுர். கணக்கு—வரையறை. மக்கள் நடததவேண்டிய வாழ்க்கையை வரையறை செய்தலின் நூல்கள் கணககு என்ற பெயரைப் பெற்றன. கணக்கினை அறிந்தோர் கணககாயர் எனப்படுவார். (ரு)

6. உரைமுடிவு காணுன் இளமையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப—நரைமுடித்துச்
சொல்லால் முறைசெய்தான் சோழன் குலவிச்சை
கல்லாமல் பாகம் படும்.

(சொ - ள்.) உரைமுடிவு காணுன் – வழக்கினது முடிவான உண்மையை ஆராயும் அறிவு நிரமபப் பெறுதவன், இளமையோன் - சிறுவயதினன், என்ற-என்றிகழ்ந்த, நரை முதுமக்கள உவப்ப — நரைமயிருள்ள முதியோர் இருவரும் மகிழும்படி, நரை முடித்து - நரைமயிரை முடியின்கண் முடித்து வந்து,சொல்லால் முறைசெய்தான் சோழன் - (அவர்கள் கூறிய) சொற்களைக் கொண்டே நீதி கூறினுன் கரிகாற் பெருவளத்தான் என்னும் சோழன் குலவிசசை கல்லாமல் பாகம் படும் - தத்தம் குலத்திற்குரிய அறிவு அந்நூல்களைக் கல்லாமலே இனிது அமையும்.

(க - து.) குலவித்தை கல்லாமலே அமையும்.

(வி - ம்.) உரை - சொல். இருதிறத்தாரும் உரைத்தலின் உரை, வழக்கு எனப்பட்டது. குற்றமுடையாராய்த் தண்டிக்கப் பட்டோரும், அரசன் வழக்கினை ஆராய்ந்து நீதி கூறி அறிவு

கொளுத்தும் முறையைக் கண்டு, மனச் செம்மை யுடையராய் மகிழ்வெய்துவார்கள் என்பார், "நரைமுது மக்கள் (இருவரும்) உவப்ப முறைசெய்தான்" என்றார். சாட்சிகள் முதலிய பிற காரணங்கள் கொண்டு ஒரு வழக்கினை முடிவு செய்தலினும் வழக்குடையோர் சொற்களைக் கொண்டே தீர்ப்புக் கூறுதல் மிகவும் நுண்ணுணர்விற்று. முறைசெய்தல் - ஒருபாற் கோடாது கோல் ஓச்சுதல். (1) உரைமுடிவுகாணான். (2) இளமையோன் என்ற இரண்டு குறைகளையும், (1) சொல்லாலும், (2) நரை முடித்தலாலும் நிறைவு செய்தான். "குலவித்தை கல்லாமலே உளவாம்" என்பது இச் செய்யுளிற் கண்ட பழமொழி. (சு)

7. புலமிக் கவரைப் புலமை தெரிதல்
புலமிக் கவர்க்கே புலனும்—நலமிக்க
பூம்புனல் ஊர பொதுமக்கட்(கு) ஆகாதே
பாம்பறியும் பாம்பின கால்.

(சொ - ள.) நலமிகக பூ புனல் ஊர - நன்மை மிகுந்த அழகிய நீர்வளம் நிரம்பிய ஊரனே! பாம்பினகால் பாம்பறியும் - பாம்பினுடைய கால்களைத் தமக்கு இனமாகிய பாம்புகளே அறியுந் தன்மையுடையன. அதுபோல், புலமிக்கவரைப் புலமை தெரிதல் - அறிவிற் சிறந்தவர்களை அறிவினால் தெரிந்துகொள்ளும் திறம், புலம் மிக்கவர்க்கே புலனும் - (அவர்கள் போன்ற) அறிவிற் சிறந்தவர்களுககே விளங்கும், பொதுமக்கட்கு ஆகாது - கல்வியறிவில்லாதவர்களுககு விளஙகாது.

(க - து.) கற்றோர் பெருமையைக் கற்றோர் அறிவார்.

(வி - ம்.) பொது, சிறப்பின்மைக் கருத்தில் வந்தது. பாம்பின: அகரம் ஆறாவதன் பன்மை. "பாமபின் கால்களைப் பாம்புகளே அறியும்.-" இது இசசெய்யுளில் வந்த பழமொழி. (எ)

8. நல்லார் நலத்தை உணரின் அவரினும்
நல்லார் உணர்ப பிறருணரார்--நல்ல
மயிலாடு மாமலை வெற்பமற்(று) என்றும்
அயிலாலே போழ்ப அயில்.

(சொ - ள்.) நல்ல மயில் ஆடும் மாமலை வெற்ப-கண்களுக்கு இனிய மயில்கள் (தோகையை விரித்து ஓகையொடு) நடமாடும் சிறந்த மலைநாட்டை யுடையவனே!, என்றும் - எக்காலத்தும், அயில் அயிலாலே போழ்ப - இரும்பைக் கூரிய இரும்பினாலேயே

பிளப்பர். (அதுபோல), நல்லார் நலத்தை உணரின்-கற்றவா றமைந்த நற்குண முடையோர்களது அறிவின் நன்மையை அறிவதாயின், அவரினும் நல்லார் உணர்ப - அவர்களைவிடக் கல்வி ஒழுக்கங்களில் மிக்க அறிஞர்களே அதனை அறிவார்கள், பிறருணரார் - கல்வி ஒன்றே உடைய ஒத்தாரும் அவையின்றி இழிந்தாரும் அறியமாட்டார்கள்.

(க - து.) நல்லார் அறிவினை அவரினும் நல்லாரே அறிவர்.

(வி - ம்.) இரும்பினை அதையொத்த கூர்மையற்ற வேறோர் இரும்பு கொண்டு பிளத்த லியலாதாகலின் நல்லார் நலத்தையும் அவரை ஒத்தோரால் அறிந்துகொள்ளக்கூடாது. ஆகவே பிறர் என்பது கல்வி ஒழுக்கம் என்ற இரண்டிலும் ஒன்றே உடையாரும் இரண்டு மின்றி இழிந்தாரு மாவர். நல்லார் நலத்தை அவரினும் நல்லார் அறிவர்.

"இரும்பை இரும்புகொண்டு துணித்தல் வேண்டும்."— இஃது இச செய்யுளில் வந்த பழமொழி. (அ)

9. கற்(று)அறிந்தார் கண்ட அடக்கம் அறியாதார்
பொச்சாந்து தம்மைப் புகழ்ந்துரைப்பார்—தெற்ற
அறைகல் அருவி அணிமலை நாட !
நிறைகுடம் நீர்தளும்பல் இல்.

(சொ - ள்.) அறைகல் அருவி அணிமலை நாட—பாறைக் கற்களினின்றும் இழிகின்ற அருவிகளை (மாலையாக) அணிந்த மலைநாட்டை யுடையவனே', நிறைகுடம் நீர்தளும்பல் இல் - நீர் நிறைந்த குடம் ஆரவாரித் தலைதல் இல்லை, (அதுபோல) கற்று அறிந்தார் கண்ட அடக்கம் - நூல்களைக் கற்று அவைகளின் உண்மைகளை அறிந்தவர்கள் தமது வாழ்வில் அமைத்துக் கண் டனவே அடக்கத்திற்குரிய செயல்களாம். அறியாதார்-கற்றறிந்தோ டமைந்து நூல் உண்மையையும் அநுபூவ உண்மையையும் அறியா தார், பொசசாந்து தம்மைத் தெற்றப் புகழ்ந்து உரைப்பர் - மறந்து தங்களைத் தெளிவாக வாயாரப் புகழ்ந்து பேசுவா.

(க - து.) கற்றறிந்தவர்கள் தங்களைப் புகழ்ந்து பேசமாட் டார்கள்.

(வி - ம்.) "அறியாதார்" என்றதனும் உண்மையை ஓராதவர்க்குள்ள மறதி வயப்பட்டு "பொச்சாந்து புகழ்ந்துரைப் பர்" என்றதனும் நூல்களை மட்டும் கற்றுக் குறை குடத்தை ஒத்தனர் என்பது பெறப்பட்டது. முன்னும் ஒருகால் தன்னைப்

புகழ்ந்து கூறி மறதி வயப்பட்டு மீண்டும் மீண்டும் புகழ்ந்து உரைப்பர் என்று உரை கூறினும் ஆம். "நிறை குடம் நீர்தளும்பல் இல்லை"—இது செய்யுளிற் கண்ட பழமொழி. (௯)

10. விதிப்பட்ட நூலுணர்ந்து வேற்றுமை யில்லார்
கதிப்பவா நூலினைக் கையிகந்தா ராகிப்
பதிப்பட வாழ்வார் பழியாய செய்தல்
மதிப்புறத்துப் பட்ட மறு.

(சொ – ள்.) விதிப்பட்ட நூலுணர்ந்து - நல்ல நெறிகள் அமைந்த நூல்களை அறிந்து, வேற்றுமையில்லார் - நூல்களின் விதிகளுக்கும் தமது வாழவிற்கும் வேறுபாடு இல்லாதவர்கள், கதிப்பவர் நூலினைக கையிகந்தாராகி - மாறுபட்டு எழுந்தோர்களுடைய நூலின் கொள்கைகளைத் தம் வன்மையால் வென்று, பதிப்பட வாழ்வார் – தலைமைப் பேறுற வாழ்கின்ற அறிஞர்கள், பழியாய செயதல் - இகழுதற்குரிய செயல்களைச செய்தல், மதிப்புறததுப் பட்ட மறு - திங்களின்கண் இலங்கும் களங்கம் போல் விளங்கித் தோன்றும்.

(க – து.) அறிவுடையோர் மாசுற்ற செயல்களைச செய்வாராயின் அது தேசுற்றுத் தோன்றும்.

(வி – ம்.) மதிப்புறம், புறம்: ஏழனுருபு. மதியின் புறத்தில் ஊர்கோளென வளைநது விளஙகித் தோன்றும் களஙகம் போல அறிவுடையோர் செய்த பழியாயின அவரைச சூழ்ந்து நின்று விளஙகும் என்று பொருள கொள்ளினும் பொருந்தும். இதற்கு மதிப்புறம், மதியின் ஓரம் என்று பொருள் கொள்க. "மதிப்புறத்துப் பட்ட மறு"—இது இச செய்யுளின்கண் எடுத்தாண்ட பழமொழி. (௧௦)

2. கல்லாதார்

11. கற்றுனும் கற்றூர்வாய்க் கேட்டானும் இல்லாதார்
தெற்ற உணரார் பொருள்களை—எற்றேல்
அறிவில்லான் மெய்தலைப் பாடு பிறிதில்லை
நாவல்கீழ்ப் பெற்ற கனி.

(சொ - ள்.) கற்றூனும் கற்றூர் வாய்க் கேட்டானும்-நூல்களைத் தாமே கற்றுயினும கற்றவர்களிடம் கேட்டாயினும், இல்லாதார் - கல்வி கேள்வி இல்லாதவர்கள், தெற்ற உணரார்

பொருள்களை – பொருள்களின் உண்மையைத் தெளிவாக அறியார்கள், அறிவில்லான் மெய்த்தலைப் பாடு - கல்வி கேள்விகளின் அறிவு இல்லாதான் உண்மைப் பொருள்களை ஒருகால் அறிதல், எற்றேல்-எத்தன்மைத் தெனில், நாவல்கீழ் பெற்ற கனி – நாவல் மரத்தின் அடியில் தானே விழுந்த கனியைப் போல்வதன்றி, பிறிதில்லை-கல்வி கேள்விகளுள் எதுவும் காரணமாக இல்லை.

(க - து.) கல்வி கேள்வி இல்லாதவர்கள் உண்மைப் பொருள்களை அறியமாட்டார்கள்.

(வி - ம்.) "கற்றானும், கேட்டானும்" என்ற இடங்களில் ஆயினும் என்பது ஆனும் எனக் குறைந்து நின்றது. கல்வி கேள்விகளில்லாதவன் உண்மைப் பொருள்களை அறிதல் அருமை என்பதற்கு, "நாவல்கீழ்ப் பெற்ற கனி" என்பது உவமையாகக் கூறப்பட்டது. திருவள்ளுவனாரும் "தெருளாதான் மெய்ப் பொருள் கண்டற்றால்" என்று அறிதல் அருமையை விளக்கினார் "நாவல்கீழ்ப் பெற்ற கனி" என்பது இச் செய்யுளில் வந்த பழமொழி. (க)

12. கல்லாதான் கண்ட கழிநுட்பம் கற்றார்முன்
சொல்லுங்கால் சோர்வு படுதலால்—நல்லாய்
வினைமுந் துறுத உரையில்லை இல்லை
கனைமுந் துறுத வினை.

(சொ - ள்.) நல்லாய் - நற்குணம் உடைய பெண்ணே!, கல்லாதான் கண்ட கழிநுட்பம்-நூல்களைக் கல்லாதவன் அறிந்த மிக்க நுண்பொருள், கற்றார் முன் சொல்லுங்கால் சோர்வு படுத லால் - நூல்களைக் கற்றார் முன்பு சொல்லும்பொழுது அப் பொருள் வலியிழத்தலால், வினை முந்துறுத உரையில்லை-வினை யானது முற்பட்டுத் தோன்றாத விடையில்லை; கனை முந்துறுத வினை இல்லை-கனைவானது முற்பட்டு நடவாத செயலும் இல்லை. (கல்வியின்றி விளங்கும் நுண்பொருளும் இல்லை.)

(க - து.) கல்லாதான் கண்ட நுண்பொருள் விளங்குதல் இல்லை.

(வி - ம்.) நூலறிவு இன்மையின் ஆராய்ந்தறிந்த பொருள் இல்லையென்பார், "கண்ட கழிநுட்பம்" என்றார். கழி நுட்பம் என்பதற்குக் கல்லாதான் மிகுந்த நுண்பொருளாகத் தான் நினைந்திருக்கின்ற கழிநுட்பம் என்று உரைகூறினும் அமையும். குறித்த பொருளை மறைத்து வேறு பொருள்களைக் கிளத்தலின்

இறுதி இரண்டடிகளும் ஒட்டு அணியின்பாற் பட்டதாகும். "வினை முந்துறாத விடையில்லை," "கனை முந்துறாத வினையில்லை"—இவ விரண்டும் இச் செய்யுளிற் கண்ட பழமொழிகள். (உ)

13. கல்லாதான் கண்ட கழிநுட்பம் காட்டரிதால்
நல்லேம்யாம் என்றொருவன் நன்கு மதித்தலென்
சொல்லால் வணக்கி வெகுண்(டு)அடு கிற்பார்க்கும்
சொல்லாக்கல் சொல்லுவது இல்.

(சொ - ள்.) *கல்லாதான் கண்ட கழிநுட்பம்* – நூல்களைக் கல்லாதவன் தான் நுண்மையுற அறிந்ததாக நினைக்கும் மிக்க நுண்பொருளை, *காட்டரிதால்*—பிறருக்கு விளங்கும்படி எடுத்துக் காட்டுதல் இயலாது. (ஆனபின்), *ஒருவன்* - கல்வியும் சொல் வன்மையும் இல்லாத ஒருவன், *நல்லேம் யாம் என்று நன்கு மதித்தல் என்* – நல்ல பொருள் விளக்கம் உடையேம என்று தன்னைத் தானே மிகப் பாராட்டுதல் எக்காரணம் பற்றி?, *சொல்லால் வணக்கி வெகுண்டு அடுகிற்பார்க்கும்* – தமது சொற்களால் தவத்திற்குப் பகையாயினாரைப் பணியசசெய்து, பணியா ராயின் சினந்து கொல்லுகின்ற முனிவர்களுக்கும், *சொல்லாக்கால்* - தாங் கருதியதை எடுத்துசசொல்ல முடியாத விடத்து, *சொல்லுவது இல்* - தவத்திற்குச சொல்லபபட்ட ஆற்றல்கள இலவாம்.

(க - து.) கற்றார்க்குச சொல்வன்மை இன்றியமையாது வேண்டப்படும் பொருள்.

(வி - ம்.) 'ஒன்னார்த் தெறலும்' என்றபடி தீயோரை வணக்குதல், வெகுண்டு அடுதல் முதலியன தவஞ் செய்வார் தம் சொல்லாற்றலால் நிகழ்த்துவன. சொல்வனமை யில்லாராயின், தவத்தினது ஆற்றலாகிய சாபஅருள் அவருக்கு இல்லை யென்ப தாம். "முற்றததுறந்த முனிவர்கட்கும் சொற்றிறம் வேண்டும்"- இஃது இசசெயயுளில் வந்த பழமொழி. (௩)

14. கல்வியான் ஆய கழிநுட்பம் கல்லார்முன்
சொல்லிய நல்லவுந் தீயவாம்—எல்லாம்
இவர்வரை நாட! தமரையில் லார்க்கு
நகரமும் காடுபோன் றுங்கு.

(சொ - ள்.) *எல்லாம் இவர் வரை நாட*—எல்லாப் பொருள் களாலும் விரும்பப்படும் மலைநாட்டை உடையவனே!, தமரை

இல்லார்க்கு – (முன்னர் பெற்றிருந்து பின்னர்) உறவினரை இல்லார்க்கு, நகரமும் காடு போன்றாங்கு – நகரமும் காட்டை ஒத்துத் துன்பம் பயத்தல்போல, கல்வியான் ஆய கழி நுட்பம் – நூல்களைக் கற்றதனாலாய மிக்க நுண்பொருள்களுள், கல்லார் முன் சொல்லிய நல்லவும் தீயவாம் – நூல்களைக் கல்லார் முன்பு கூறிய நல்லனவும் பொருளற்றனவாகத் தீயவாய் முடியும்.

(க - து.) கற்றார், கல்லார் அவையின்கண் சிறந்த பொருள்களைக் கூறாதிருக்கக் கடவர்.

(வி - ம்.) தீயவாய் முடிதலாவது நுண்பொருள்கள் உள்ளன, அவையிலவாய் முடிதல். ஆசிரியர் வள்ளுவனாரும்,

"அங்கணத்துள் உக்க அமிழ்தற்றால் தங்கணத்தர்
அல்லார்முன் கோட்டி கொளல்"

என்று பயனற்றொழியு மென்பதையே குறித்தார் "தமரையில்லார்க்கு நகரமும் காடு போன்றாங்கு" என்பது இச்செய்யுளிற் கண்ட பழமொழி. (ச)

15. கல்லா தவரிடைக் கட்டுரையின் மிக்கதோர்
பொல்லாத(து) இல்லை ஒருவற்கு—நல்லாய்!
இழுக்கத்தின் மிக்க இழிவில்லை இல்லை
ஒழுக்கத்தின் மிக்க உயர்வு.

(சொ - ள்.) நல்லாய்-நற்குணமுடைய பெண்ணே!, இழுக்கத்தின் மிக்க இழிவு இல்லை - தத்தம நிலைக்கு ஓதப்பட்ட ஒழுக்கத்தினின்றும் வழுவுதலின் மிக்க தாழ்வு ஒருவற்கு இல்லை, ஒழுக்கத்தின் மிக்க உயர்வு இல்லை - தத்தம் நிலைக்கு ஓதப்பட்ட ஒழுக்கத்தினை உடையராதலின் மிக்க உயர்வு ஒருவற்கு இல்லை. (ஆகையால்), ஒருவற்கு - கல்வியறிவு உடைய ஒருவனுக்கு, கல்லாதவரிடை – நூல்களைக் கல்லாதவரிடத்து விரித்துக்கூறும்; கட்டுரையின் மிக்கதோர் பொல்லாதது இல்லை - கட்டுரையைப் பார்க்கிலும் தீமைதருஞ் செயல் பிறிதொன்றில்லை.

(க - து.) கற்றார் கட்டுரை, கல்லாதாரிடைப் பொல்லாதாகவே முடியும்

(வி - ம்.) தீமையைத் தருதலாவது நல்லார் கூறும் சிறந்த அறிவுரைகள் யாவற்றையும் தீயோர் தீய செயல்களுக்குப் பயன்படுத்திக் கொள்வது.

"ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி"

என்றலின், ஒழுக்கத்தினும் இழுக்கத்தினும் உயர்வு இழிவு இல்லை என்றார் (1). "இழுக்கத்தின் மிக்க இழிவில்லை" (2). "ஒழுக்கத்தின் மிக்க உயர்வு இல்லை"—இவை இச செய்யுளிற் கண்ட பழமொழிகள். (ரு)

16. கற்(று)ஆற்று வாரைக் கறுப்பித்துக் கல்லாதார்
சொல்தாற்றுக் கொண்டு சுனைத்து எழுதல்-எற்றெனின்
தானும் நடவான் முடவன் பிடிப்(பு)ஊணி
யானையோடு ஆடல் உறவு.

(சொ - ள.) கல்லாதார் - அறியாதவர்கள், கற்று ஆற்று வாரைக் கறுப்பித்து - நூல்களைக் கற்று (அவைகளிற் கூறியபடி) செயலிற் செய்வாரைக் கோபமூட்டி, சொல்தாற்றுக் கொண்டு சுனைத்து எழுதல் - சொற்களைக் கொழித்துக்கொண்டு (மன எழுச்சியால் அவரோடு மாறுகொண்டு) மிக்கு எழுதல், எற்று எனின் - எத்தன்மைத்தெனின், தானும் நடவான் முடவன் - தானும் நடக்கமுடியாதவனாகிய கால்கூழையன், பிடிப்பு ஊணி - ஊன்றுகோலை ஊன்றி, யானையோடு ஆடல் உறவு - யானையோடு விளையாடல் உறுதலோடு ஒக்கும்.

(க - து.) கல்லார் கற்றாரோடு வாதஞ் செய்யின் அவமானம் அடைவர்

(வி - ம்.) முடவன் உயிர் இழப்பான், கல்லார் அவமானம் அடைவர். தாற்றுதல் - கொழித்தல். 'தாற்றுதல்' என்பது தாத்தல் என வழக்கில் வழங்கிவருகிறது. பிடிப்பு ஊணி - பற்றுக்கோடாக ஊன்றப்படுவது. (ஊன்றுகோல்) ஊன்றப்படுவது-ஊணி. இது வழக்கில் ஊணுதல் என்று வழங்கப்படுகிறது.

"முடவன் பிடிப்பு ஊணி யானையோடாடல் உறவு—" இஃது இச செய்யுளிற் கண்ட பழமொழி. (சு)

3. அவையறிதல்

17. கேட்பாரை நாடிக் கிளக்கப் படும்பொருட்கண்
வேட்கை அறிந்துரைப்பார் வித்தகர்—வேட்கையால்
வண்டு வழிபடரும் வாட்கண்ணாய்! தோற்பன
கொண்டு புகாஅர் அவை.

(சொ - ள்.) வேட்கையால் வண்டு வழிபடரும் வாள் கண்ணாய் - (காம) விருப்பினால் (கண்களைப் பெடை வண்டுகள்

எனக் கருதி) ஆண் வண்டுகள் பின் செல்லாநின்ற வாள்போலுங் கண்களையுடைய பெண்ணே!, வித்தகர் – அறிஞர், கேட்பாரை நாடி – தாம் கூறும் பொருள்களைக் கேட்கத்தக்காரைத் தேடி, கிளக்கப்படும் பொருட்கண் வேட்கை உரைப்பர் - தம்மால் கூறப்படும் பொருளிடத்து அவர்களுக்கு விருப்பம் இருப்பதை அறிந்து சொல்லுவார்கள், அவை தோற்பன கொண்டு புகார் – அவையின்கண் தோல்வியடைதற்குரியனவற்றைக் கொண்டு போகார்.

(க - து) கற்றார் அவையறிந்து ஆராய்ந்து சொல்லுவர்.

(வி – ம்.) ''நாடி'' என்றதனால் அறிவாரைத் தேடி உரைத்தல் வித்தகர்க்கு இயல்பு என்பது பெறப்பட்டது. கேட்பாரையும் கிளககப்படும் பொருட்கண் வேட்கையையும் அறிந்து கூறுதலின் வித்தகர் என்றார். தோற்பன–அவையிலுள்ளார் விரும்பாத பொருள்கள். தாம் விரும்பியவாறு, அப்பொருள்களை அவையிலுள்ளார் விரும்பாமையின் தோற்பதற்குரிய ஆயின. (௧)

18. ஒருவர் உரைப்ப உரைத்தால் அதுகொண்டு
இருவரா வாரும் எதிர்மொழியல் பாலா
பெருவரை நாட ! சிறிதேனும் இன்னு(து)
இருவர் உடன்ஆடல் நாய்.

(சொ - ள்.) பெருவரை நாட – பெரிய மலைநாட்டை உடையவனே !, இருவர் நாய் உடன்ஆடல் - (ஒரே காலத்தில்) இருவரும் ஒரு நாயைக்கொண்டு வேட்டை ஆடுதல், சிறிதேனும் – சிறிது காலமாயினும், இன்னது - இனியது ஆகாது. (அது போல), ஒருவர் உரைப்ப – (மாறுபடுவோர் இருவருள்) ஒருவர் இப்பொருள் இத் தன்மைத்தென்று கூற, உரைத்தால்-மற்றொருவரும் இத் தன்மைத்தென்று கூறினால், அதுகொண்டு - அப்பொருளைக்கொண்டு, இருவர் ஆவாரும எதிர் மொழியல் - மாறுபடுவோர் இருவரும் (ஒரே காலத்தில்) வாதஞ்செய்தால், பாலா – தகுதியுடையதாகுமா? ஆகாது.

(க - து.) வாதம் செய்வோர் ஒருவர்பின் ஒருவராகப் பேசுதல் வேண்டும்.

(வி - ம்) வேட்டம் விரும்பிப் புகுந்த இருவர் இரண்டு நாயைக்கொண்டு வேட்டம் புரிந்தாலன்றித் தாம் நினைத்த வேட்டம் முடிவு பெறாது. வேட்டம் முடிவு பெறாமையின் அஃது இன்னாதது ஆயிற்று. வாதஞ் செய்வோர் இருவரும் தங்கருத்தை

ஒருவர்பின் ஒருவராகக் கூறினாலன்றி அவர்கள் கொண்ட கருத்தை நிலைபெறச்செய்ய முடியாது.

"சிறிதேனும் இன்னாது இருவர் உடன் ஆடல் நாய்"—இஃது இச் செய்யுளில் வந்த பழமொழி. (உ)

19. துன்னி இருவர் தொடங்கிய மாற்றத்தில்
பின்னை உரைக்கப் படற்பாலான்—முன்னி
மொழிந்தால் மொழியறியான் கூறல் முழந்தாள்
கிழிந்தானை மூக்குப் பொதிவு.

(சொ - ள்.) இருவர் துன்னி தொடங்கிய மாற்றத்தில் - வினவுவானும் விடை கொடுப்பானுமாகிய இருவரும் கூடிச் சொல்லத் தொடங்கிய வார்த்தையின்கண், பின்னை உரைக்கப் படற்பாலான்-பின்னாக விடைகூறத் தக்கவன், முன்னி மொழிந்தால் - வினாவறியாது முற்பட்டு ஒன்றனைக் கூறினால், மொழியறியான் - விடை கூறுதலறியாதவனாய் முடியும், கூறல் - வினாவிற்கு முன்னர் விடைகூறுதல், முழந்தாள் கிழிந்தானை மூக்குப் பொதிவு - முழந்தாள் கிழிந்து புண்பட்டவனை அஃது அறியாது மூக்கை இழைகொண்டு கட்டுவதோடு ஒக்கும்.

(க - து. வினாவறிந்து விடை கூறுதல் வேண்டும்.

(வி - ம்) முழந்தாள் கிழிந்தமை அறியாது மூக்கை இழை கொண்டு மூடியதுபோன்று வினாவின் தன்மையறியாது விடை கூறுதல் ஆகும். "முழந்தாள் கிழிந்தானை மூக்குப் பொதிவு"— இஃது இச் செய்யுளிற் கண்ட பழமொழி. (௯)

20. கல்லாதும் கேளாதும் கற்றார் அவைநடுவண்
சொல்ஆடு வாரையும் அஞ்சற்பாற்று—எல்அருவி
பாய்வரை நாட! பரிசுஅழிந் தாரோடு
தேவரும் ஆற்றல் இலர்.

(சொ - ள.) எல் அருவி பாய்வரை நாட-விளங்கிய அருவிகள் பாயும் மலை நாடனே!, பரிசு அழிந்தாரோடு - பண்பு இல்லாதவர்களோடு, தேவரும ஆற்றல் இலர் - தேவர்களும் ஒருசொல் கூறுதற்குககூட வலிமை யில்லாதவர்களாய் முடிவர். ஆகையால் கல்லாதும் கேளாதும கற்றார் அவை நடுவண் சொல் ஆடுவாரையும்-நூல்களைக் கல்லாதும், கற்றாரிடம் கேளாதும் அறிஞர்களது அவையிடைச சிலசொல் சொல்லுத லுடையாரையும், அஞ்சற்

பாற்று—(இவரோடு வாதாடின் நாம் தோற்போம் என்றெண்ணி) அஞ்சும் தகுதியை உடையது.

(க - து.) கற்றூர் கல்லாரோடு வாதாடுதல் கூடாது.

(வி - ம்) பரிசு - பண்பு; அஃதாவது நற்பண்பு. தேவரும் கயவரும் தம்மை நியமிப்பாரின்றி விரும்பியவாறு செய்தொழுகுதலின் ஒப்பாராயினும், நன்மை தீமை அறியாராகிய கயவரின் அறிவாராகிய தேவா இழிந்தவராதலின், கயவரோடு ஒருசொல் கூறுதற்குக்கூட ஆற்றல் இல்லாது போயினர். குறிப்பால் இகழ்ந்தவாறு. சொல்லாடுவாரையும் என்ற உம்மையால் கல்லாரையும், கேளாரையும் காண்டற்கும் அஞ்சவேண்டும் என்பது பெறப்பட்டது. "பரிசழிந்தாரோடு தேவரும் ஆற்றல் இலர்"—இஃது இச செய்யுளிற் கண்ட பழமொழி. (௨)

21. அகலம் உடைய அறி(வு)உடையார் நாப்பண்
புகலறியா புக்கவர் தாமே—இகலினல
வீண்சோந்த புன்சொல் விளமபல அதுவன்றே
பாண்சேரிப் பல்கிளக்கும ஆறு.

(சொ - ள்.) அகலம் உடைய அறிவு உடையாா நாப்பண்—கல்வி கேள்விகளில் விரிவு உடைய இயற்கை அறிவிஞர் இடையில், புகல் அறியாா – நுழைதற்குத தகுதியற்ற கயவர்கள, புககு-புகுந்து, அவர் தாமே இகலினுல் வீண்சேர்ந்த புன்சொல் விளமபல் - (தம சொற்களை யாரும விரும்பாமல் இருககவும்) தாமே மாறுபாட்டினுல் வீணை பயனற்றவற்றைக கூறுதல், பாண்சோ் பற்கிளக்கும ஆறு அது அனறே-பாணாகளை தெருவில் ஒருவன் வாய்திறநது பாடுவதைப்போல அஃது ஆகும் அல்லவா!

(க – து.) கறறூரிடைக கல்லார் வீண் வார்த்தைகளைப் பேசாதொழிதல் வேண்டும.

(வி - ம்) பல்கிளத்தல்—வாய்திறந்து பாடுதல், அவர் இழிவு தோன்றப் பல்கிளத்தல் என்றூா. "பாண் சேரிப பறகிளககும் ஆறு"—இஃது இச செய்யுளில் வந்த பழமொழி. (௫)

22. மானமும் நாணும் அறியார் மதிமயங்கி
ஞானம் அறிவார் இடைப்புக்குத் தாமிருந்து
ஞானம் வினஅய் உரைத்தல், நகையாகும
யானைப்பல் காண்பான் புகல்.

(சொ - ள்.) மானமும் நாணும் அறியார் - கல்லார் தம் மானமும் நாணும் அழிதலை அறியாராய், மதிமயங்கி - புத்தி மயக்கத்தை யடைந்து, ஞானம் அறிவார் இடைப்புக்கு - பல நூல்களையும் அறிவார் நடுவிற் புகுந்து, தாமிருந்து - அவர்களை ஒப்பத் தாமும் இருந்து, ஞானம் வினாய் உரைத்தல் - நூல்களை வினவி உரைக்கப்புகுதல், யானை பல் காண்பான் புகல் - யானை யைப் பல்பிடித்துப் பார்க்கப் புகுதல் போல், நகையாகும் - யாவர்க்கும் நகைதருஞ் செயலாகும்.

(க - து.) கற்றோர் அறிவின் திறனைக் கல்லார் அறிய முயலு தல் நகைப்பிற் கிடனும்.

(வி - ம்.) மானம்-தந்நிலையிற்றாழாமையும் தாழ்வு வந்துழி வாழாமையுமாம். நாணம் - தமக்கு ஒவ்வாத கருமங்களில். நாணுதல் உடையராந்தன்மை. ஞானம் - வீடுபயக்கும் உணர்வு. அவ்வுணர்வை நூல்கள் தருதலின் நூல்களுக்காயிற்று. ஞானம்: ஆகுபெயர். மதிமயங்கி எனவே ஞானம அறியார் இடைப்புகு தலே அவர்க்கு இயல்பு என்பதாம். ஞானம் வினவி உரைத்த லோடு அமையாது அவரோடு ஒப்பவீற்றிருந்த செய்கை நகைப் பிற்கிடனாயிற்று. "யானைப் பல் காண்பான் பகல்" என்பதும் ஒரு பாடம். "பகல்" என்று கூறுதலிற் பொருட்சிறப்பு ஒன்று மின்மையின் "புகல்" (புகுவதனோடொக்கும்) என்பதே பாட மாகக் கொள்ளப்பட்டது. (இது தி. சுப்பராயச் செட்டியார் கொண்ட பாடம்.) "யானைப்பல் காண்பான் புகல்"—இஃது இச்செய்யுளிற் கண்ட பழமொழி. (௬)

23. அல்லவையுள் தோன்றி அலஅலைத்து வாழ்பவர்
நல்லவையுள் புக்கிருந்து நாவடங்கக்—கல்வி
அளவிறந்து மிக்கார் அறி(வு) எள்ளிக் கூறல்
மிள(கு) உளு உண்பான் புகல்.

(சொ - ள்.) அல்லவையுள் தோன்றி அல அலைத்து வாழ் பவர் - கல்வியறிவு இல்லாதார் அவையுள முற்பட்டு (நல்லன) அல்லவற்றைக் கூறி (புல்லரை) வென்று வாழ்பவர், நல்லவை யுள் புக்கிருந்து - கல்வியறிவு உடையார் அவையுள் தானே புகுந்து, நாவடங்க கல்வி அளவு இறந்து மிக்கார் அறிவு - பிறர் நாவடங்கும்படி கல்வியில் எல்லையின்றி அறிந்த அறிவுடையோர் அறிவினை, எள்ளிக்கூறல் - இகழ்ந்து கூறுதல், மிளகு உளு உண்பான் புகல் - (சிறந்த உணவுகள் இருக்க) மிளகின் உளுவை (உண்ணப் புகுவதனோடு ஒக்கும்).

(க - து.) கல்லார் கற்றாரை இகழ்ந்து கூறின் தீமையை அடைவர்.

(வி - ம்.) அல்லவையை அலைத்து வாழ்ந்த அத்துணிபு கொண்டு நல்லவையையும் அலைத்து வாழ எண்ணுவராயின் மிளகின் உளுவை உண்டவன் அடையும் பயனை அடைவர்.

மிளகு, சாதிக்காய், ஏலக்காய் முதலியவற்றில் உள்ள உளுவை உண்டவர் பிழைத்தல் அரிதென்பர்

"மிளகு உளு உண்பான் புகல்" என்பது இச் செய்யுளில் வந்த பழமொழி. (எ)

24. நல்லவை கண்டக்கால் நாச்சுருட்டி நன்றுணராப்
புல்லவையுள் தம்மைப் புகழ்ந்துரைத்தல்—புல்லார்
புடைத்தறுகண் அஞ்சுவான் இல்லுள்வில் லேற்றி
இடைக்கலத்து எய்துவிடல்.

(சொ - ள்.) நல்லவை கண்டக்கால் நா சுருட்டி - கல்லார் கல்வி அறிவுடையோர் அவையைக் கண்ணுறுவராயின் தமது நாவினை மடக்கி, நன்றுணராப் புல்லவையுள் - நன்மை தீமை இன்னதென்றறியாத புல்லர்கள் வாழும் அவையின்கண், தம்மைப் புகழ்ந்து உரைத்தல் - தம்மைத் தாமே இல்லன கூறிப் புகழ்ந்துரைத்தல், புல்லார் புடை தறுகண் அஞ்சுவான் - பகைவரிடத்துள்ள அஞ்சாமையைக் கண்டு பின்வாங்குகின்றவன், இல் உள் வில் ஏற்றி - வீட்டின் உள்ளே வில்லின்கண் அம்பை ஏற்றி, இடைக்கலத்து எய்து விடல் - கருகலங்களிடையே எய்வதனோடு ஒக்கும்.

(க - து.) கல்லார் தம்மினத்தாரிடையே தம்மைப் புகழ்ந்து கொள்வர்.

(வி - ம்.) நாசசுருட்டி எனவே அவர் நாநீளம் உடையார் என்பது பெறப்பட்டது.

புல்லார் - பகைவர், தம்மைச சேராதவர் என்பது பொருள். புல்லுதல் - தழுவுதல், தம்மைத் தழுவுதல். புல்லார் - தம்மைத் தழுவுதல் இல்லாதோர், பகைவர். "இல்லுள் வில்லேற்றி இடைக்கலதது எய்து விடல்"—இஃது இச்செய்யுளிற் கண்ட பழமொழி. (அ)

25. நடலை இல்ராகி நன்(று) உணரார் ஆய
முடலை முழுமக்கள் மொய்கொள் அவையுள்
உடலா ஒருவற்கு உறுதி யுரைத்தல்
கடலுளால் மாவடித் தற்று.

(சொ - ள்.) *நடலை இலராகி நன்று உணரார் ஆய முடலை முழுமக்கள் - மனத்தின்கண் கவலை யிலராய் நன்மை தீமை அறியாதவராகிய மனவலியுள்ள கயவர்கள், மொய் கொள் அவையுள் - நெருங்கியுள்ள அவையில், உடலா ஒருவற்கு - அலைத்து வாழ்கின்ற கயவன் ஒருவனுக்கு, உறுதி உரைத்தல் - உயிர்க்குப் பயன்தராத தக்கனவற்றைக கூறுதல், கடலுள் மாவடித்தற்று - கடலுளளே மாங்கனியை வடித்தாற் போலும.*

(க - து.) *கயவற்கு உறுதிப்பொருள்களைக் கூறுதலாகாது.*

(வி - ம்.) *கன்னெஞ்சம் உடையார் என்பார் முடலை முழு மக்கள் என்றார். அவர் இழிவு தோன்ற "மொய்கொள் அவை" என்றார். அவருக் குரைத்த உறுதிகள் யாவும் கமருள் உகுத்த அமுது எனப் பயன்படாது ஒழியும் என்பதாம். ஆல்: அசை. "கடலுளால் மாவடித்தற்று"—இஃது இசெய்யுளிற் கண்ட பழமொழி.* (க)

4. அறிவுடைமை

26. அறிவினல் மாட்சியொன்(று) இல்லா ஒருவன்
பிறிதினல் மாண்ட(து)எவனும்—பொறியின்
மணிபொன்னும் சாந்தமும் மாலையும் இன்ன
அணியெல்லாம் ஆடையின் பின்.

(சொ - ள்.) *பொறியின் - சாணையாற கழுவுதலையுடைய, மணி பொன்னும் - இரத்தினபரணமும் பொன்னபரணமும், சாந்தமும் மாலையும் இன்ன அணி எல்லாம் - கலவையும் பூமாலை யும் இவைபோன்ற பிற அணிகள் யாவும், ஆடையின் பின் - அழகுறச செய்வதில் உடையின் பின்னேவைத்து எண்ணத் தக்கனவாம். ஆதலால், அறிவினல் மாட்சி ஒன்று இல்லா ஒருவன் - அறிவினலாகிய பெருமை ஒருசிறிதும் பெருத ஒருவன், பிறிதினல் மாண்டது எவனும் - செல்வத்தைப் பெற்ற தனல் மாட்சிமையுடையதனல் அவனுக்கு என்ன பெருமையைக் கொடுக்கும் ?*

(க - து.) செல்வம் உடையோரினும் அறிவுடையாரே சிறந்தோர் ஆவர்.

(வி-ம்.) ஆடையில்லானை அணிகள் அழகுறச் செய்யாமை போல அறிவில்லானைச் செல்வம் பெருமையுறச் செய்யாது என்பதாம். பொறித்தல் பொலிவுபெறச் செய்தல்; கலன்களைப் பொலிவு பெறச் செய்தலின் பொறி என்பது சாணை என்னும் பொருளதாயிற்று. செல்வம் இரண்டனுள் கல்விச் செல்வம் பிரிக்கப்பட்டமையின் பிறிது என்பது செல்வம் என்னும் பொருளதாயிற்று.

> "மணி பொன்னும் சாந்தமுதும் மாலையும் இன்ன
> அணி யெல்லாம் ஆடையின் பின்."

இஃது இச்செய்யுளில் வந்த பழமொழி. (௬)

27. ஆயிரவ ரானும் அறிவிலார் தொக்கக்கால்
மாயிரு ஞாலத்து மாண்(பு) ஒருவன் போல்கலார்
பாய்இருள் நீக்கும் மதியம்போல் பல்மீனும்
காய்கலா ஆகும் நிலா.

(சொ - ள்.) பாய் இருள் நீக்கும் மதியம்போல் - பரவிய இருளை போககும் சந்திரனைப்போல, பல் மீனும் நிலா காய் கலா ஆகும் - பல விண்மீன்கள் ஒன்றுகூடினும் நிலவை எறிக்க மாட்டா. (அதுபோல), அறிவிலார் ஆயிரவரானும் தொக்கக் கால் - அறிவு இல்லாதவர்கள் ஆயிரம்பேர் திரண்டனராயினும், மா இரு ஞாலத்து - பெருமையை உடைய பெரிய இவ்வுலகின் கண், மாண்பு ஒருவன் போல்கலார் - அறிவினால் மாட்சிமைப்பட்ட ஒருவனைப்போல் விளங்கார்.

(க - து.) அறிவிலார் பலர் திரண்டாலும் அறிவுடையான் ஒருவனை ஒவ்வார.

(வி - ம்.) ஆனும் என்பது ஆயினும் என்பதன் சுருக்கம். பல நட்சத்திரங்கள் திரண்டாலும் ஒரு சந்திரனைப்போல் உலகிற்குப் பயன்படாமை போல, அறிவிலார் பலர் திரண்டாலும அவரால் உலகிற்குப் பயன் ஒரு சிறிதும் இல்லையாகும். ஆயிரவ ரானும் என்பது எண் இறநதமையைக் குறிப்பது. "பல்மீனும் மதியம்போல் நிலாக்காய்கலா ஆகும்"—இஃது இச் செய்யுளிற் கண்ட பழமொழி.

கல்லார் பலர்கூடிக் காதலித்து வாழ்கினும்நூல்
வல்லான் ஒருவனையே மானுவரோ?—அல்லாரும்
எண்ணிலா வான்மீன் இலகிடினும் வானகத்தோர்
வெண்ணிலா ஆமோ விளம்பு.

என்னும் நீதி வெண்பாவும் இக்கருத்தை நன்கு விளக்கும். (உ)

28. நற்(கு)அறி(வு) இல்லாரை நாட்டவும் மாட்டாதே
சொற்குறி கொண்டு துடிபண் உறுத்துவபோல்
வெற்(பு)அறைமேல் தாழும் இலங்குஅருவி நன்னுட!
கற்றறிவு போகா கடை.

(சொ - ள்.) வெற்பு அறைமேல் தாழும் இலங்கு அருவி நன்னுட - மலையினின்றும் பாறையின்மேல் விழும் விளங்குகின்ற அருவி பாயும் நல்ல நாட்டை உடையவனே!, சொல்குறி - சொல்லால் குறிக்கப்படும் பொருளை, துடிகொண்டு - உடுக்கையைக் கொண்டு (அதன் கண்),பண் உறுத்துவபோல்-பண் உண்டாக்குவதைப்போல, நன்கு அறிவு இல்லாரை - மிகவும் இயற்கையறிவு இல்லாரை, நாட்டவும் மாட்டாது - கல்வி யறிவைப் போதித்ததனுல் சிறந்தவனுக நிலைநாட்ட முடியாது. (ஆகையால்), கற்றறிவு கடைபோகா - நூல்களைக் கற்றலால் ஆகிய அறிவு முற்றிலுஞ் செல்லாது.

(க - து.) கல்வியறிவோடு இயற்கை யறிவும் உடையான் சிறந்து விளங்குவான்.

(வி- ம்.) துடி தட்டினுலன்றி ஓசை உண்டாகாதவாறு போல, இயற்கை யறிவில்லான் அறிவுறுத்தபோதன்றி மற்றைய நேரங்களில் அறியான். நன்கறிவு என்பது நற்கறிவு என வலித்தல் விகாரம் பெற்றது. ''கற்றறிவு கடைபோகா''—இஃது இச்செய்யுளிற் கண்ட பழமொழி. (ந)

29. ஆணம் உடைய அறிவினர் தம்நலம்
மானும் அறிவி னவரைத் தலைப்படுத்தல்
மான்அமர் கண்ணுய்! மறம்கெழு மாமன்னர்
யானையால் யானையாத் தற்று.

(சொ-ள்.) மான் அமர் கண்ணுய்-மான் விரும்பும் கண்ணை உடையாய், ஆணம் உடைய அறிவினர் - மனத்திட்பம் உடைய அறிஞர்கள், தம் நலம் மானும் அறிவினவரை தலைப்படுத்தல் -

தம்மைக் கல்வி யறிவால் ஒத்த அறிஞர்களைத் தம்முடன் சேர்த்துககொள்ளுதல், மறம் கெழும் மாமன்னர் – வீரம் பொருந்திய பேரரசர்கள், யானையால் யானை யாத்தற்று – யானையைக் கொண்டு யானைகளைப் பிடித்தததனோ டொக்கும்.

(க – து.) அறிவுடையார் அறிவுடையாரையே சேர்த்துக் கொள்வர்.

(வி – ம்.) அமர்-விரும்புதல். "அளிநிலை பொறாது அமரிய முகத்தள்" என்ற அகநானூற்று அடியிலும் இப்பொருளில் வந்தது. ஆணம் - மனத்திட்பம். "ஆணை மருத்துயரம் ஆணம் உடைமையின்" என்று பெருங்கதையடியிலும் இப்பொருளில் வந்தது; "யானையால் யானையாத்தற்று"-இஃது இச் செய்யுளில் வந்த பழமொழி. (௯)

30. தெரிவுடையா ரோடு தெரிந்(து) உணர்ந்து நின்றார்
பரியார் இடைப்புகார் பண்புஅறிவார் மன்ற
விரியா இமிழ்திரை வீங்குநீர்ச் சேர்ப்ப!
அரிவாரைக் காட்டார் நரி.

(சொ – ள்.) விரியா இமிழ்திரை வீங்கு நீர் சேர்ப்ப-பரவி ஒலிக்கின்ற அலைகள் மிகுதியும் உடைய கடற்கரையை உடையவனே!, அரிவாரை காட்டார் நரி - நெல்லரிவோர்களுக்கு (அவ்வேலை கெடும்படி) நரியைக் காண்பியார் (அதுபோல), தெரிவு உடையாரோடு – ஆராய்சசி உடையாருடன், தெரிந்து உணர்ந்து நின்றார் - ஆராய்ந்து உண்மை கண்டுணர்ந்தார், பரியார் இடைப் புகார் - நுண்ணறிவு இல்லாரிடம் செல்லார், பண்பு அறிவார் மன்ற - அவர் குணங்களை ஒரு தன்மையாக அறிவார் ஆதலான்.

(க – து.) அறிவுடையார் தம் போன்றாரை அறிவிலாரிடம் அழைத்துச் செல்லார்.

(வி–ம்.) அறிவிலார் குணங்களை அறிவாராதலால் அவரைக் காட்டி வீணே காலங்கடத்தித் தம் வேலையைக் கெட்டொழியார் என்பதாம். தெரிதல் - உண்மையை ஆராய்தல், தெரிவு - உண்மையை அறியும் அறிவு (ஆராய்ச்சி), தேர்தல், தேர்வு முதலியவும் முறையே இவையடியாகத் தோன்றியன. மன்ற: தேற்றப் பொருளில் வந்தது. "அரிவாரைக் காட்டார் நரி". இஃது இச செய்யுளில் வந்த பழமொழி. (௰)

31. பொற்பவும் பொல்லாதனவும் புனைந்(து) இருந்தார்
சொற்பெய்(து) உணர்த்துதல் வேண்டுமோ?—விற்கீழ்
அரிபாய் பரந்தகன்ற கண்ணாய்! அறியும்
பெரி(து) ஆள் பவனே பெரிது.

(சொ - ள்.) *வில் கீழ் அரிபாய் பரந்து அகன்ற கண்ணாய்-வில்லைப்போன்ற புருவத்தின்கீழ் செவ்வரி படர்ந்திருக்கின்ற மிகவும் அகன்ற கண்ணை உடையாய்! பொற்பவும் - நன்மையையும், பொல்லாதனவும் — தீமையையும், புனைந்து — நிரல்படப் புனைந்து, இருந்தார்-மருங்கு இருந்தார், சொல் பெய்து உணர்த்துதல் வேண்டுமோ-சொற்களால் கூறவும் வேண்டுமோ? பெரிது, ஆள்பவனே பெரிது அறியும் — எல்லாவற்றையும் தன்வயமாக நடத்தும் அவனே நன்மை தீமைகளை மிகவும் அறிவான்.*

(க — து.) *கற்றறிந்தவன் எல்லாவற்றையும் தானே பகுத்தறிந்து நடப்பான்.*

(வி - ம்.) *சொல் பெய்து எனவே சொல்லுஞ் சொல் பயனின்றாய் முடியுமென்பதாம் "பெரிது ஆள்பவனே பெரிது அறியும்"—இஃது இச்செய்யுளில் வந்த பழமொழி.* (க)

32. பரந்த திறலாரைப் பாசிமேல் இட்டுக்
கரந்து மறைக்கலும் ஆமோ?—நிரந்(து) எழுந்து
வேயின் திரண்டதோள் வேல்கண்ணாய் விண்இயங்கும்
ஞாயிற்றைக் கைம்மறைப்பார் இல்.

(சொ — ள்.) *நிரந்து எழுந்து - நிரல்பட உயர்ந்து, வேயின் திரண்டதோள் - மூங்கில் போன்ற திரண்ட தோள்களையும், வேல் கண்ணாய்-வேல்போன்ற கண்களையும் உடைய பெண்ணே!, விண் இயங்கும் ஞாயிற்றை கைமறைப்பார் இல்-வானிற் செல்லும் சூரியனைக் கையால் மறைப்பவர்கள் இல்லை (மறைக்க முடியாது.) (அதுபோல), பரந்த திறலாரை-மிகுந்த அறிவு ஆற்றல் உடையவர்களை, பாசிமேல் இட்டு - பாசியைப்போன்ற அடாத சில சொற்களையும் செயல்களையும் அவர் மேலிட்டு, கரந்து மறைக்கலும் ஆமோ - அவர் புகழை மறைத்து ஒளிக்கவும் முடியுமோ? (மறைக்க முடியாது.)*

(க - து.) *அறிவுடையார் புகழை மறைப்பின் மறைபடாது என்பதாம்.*

(வி - ம்.) பாசியை உவமை கூறலின் மிக்க படிற்றுரைகளை இடைவிடாது உரைப்பர் என்பது பெறப்பட்டது. அவர்மேல் பழித்தற்குரியன இல்லை யென்பார் இட்டுக் கூறினார் என்றார். "ஞாயிற்றைக் கைம்மறைப்பார் இல்லை"—இஃது இச்செய்யுளில் வந்த பழமொழி. (எ)

33. அருவிலை மாண்கலனும் ஆன்ற பொருளும்
திருவுடையார் ஆயின் திரிந்தும்—வருமால்
பெருவரை நாட! பிரிவின்(று) அதனால்
திருவினும் திட்பம் பெறும்.

(சொ - ள்.) பெருவரை நாட - பெரிய மலைநாட்டை உடையவனே!, திரு உடையர் ஆயின் - செல்வம் உடையவர்களுக்கு ஆயின், அருவிலை மாண்கலனும் ஆன்ற பொருளும் திரிந்தும் வரும் - (அவர்தம்) அரிய விலையுடைய மாட்சிமைப் பட்ட பூண்களும், நிறைந்த செல்வமும் நிலைபெறாது மாறி வரும் இயல்பை உடையன, பிரிவின்று - (அறிவுச் செல்வம் உடையோர்க்கு ஆயின் அவர் தம் செல்வம்) பிரிதலில்லை, அதனால் - அத்தன்மையால், திருவினும் திட்பம் பெறும் - செல்வத்தினும் அறிவே உயர்வைப் பெறும்.

(க - து.) அறிவுச்செல்வம் பொருட்செல்வம்போல் பிரிதலில்லாமையால் அதனையே தேடுதல் வேண்டும்.

(வி - ம்.) "திரிந்தும் வருமால்" எனவே அறிவுச்செல்வம் திரியாது என்பதும், அறிவுச செல்வத்தை நாம் தேடுதல் வேண்டும் என்பதும் பெறப்படும். "திருவினும் திட்பம்பெறும்" என்பது இச்செய்யுளில் வந்த பழமொழி. (அ)

5. ஒழுக்கம்

34. விழுத்தொடையர் ஆகி விளங்கித்தொல் வந்தார்
ஒழுங்(கு) உடையர் ஆகி ஒழுகல்—பழத்தெங்கு
செய்த்தலை வீழும் புனலூர! அஃதன்றோ
நெய்த்தலைப்பால் உக்கு விடல்.

(சொ - ள்.) பழத்தெங்கு செய் தலை வீழும் புனல்ஊர - தெங்கம்பழம் வயலின்கண் விழுகின்ற நீர் நிறைந்த மருதநிலத் தலைவனே!, விழுத்தொடையர் ஆகி விளங்கி தொல் வந்தார் - சிறந்த தொடர்ச்சியை உடையாரை உடையது ஆகிப் புகழால்

விளக்கம் உற்றுத் தொன்றுதொட்டு வந்த குடியின்கட் பிறந்தார், ஒழுக்குடையர் ஆகி ஒழுகல்-தத்தமக்குரிய ஒழுக்கத்தினை உடையராகி குடிக்கேற்ப ஒழுகுதல், நெய் தலை பால் உக்குவிடல் அஃது அன்றோ-ஆவின் நெய்யிடத்து ஆவின்பாலை ஊற்றிவிடல் போல் அஃது இனிமையைத்தரும் அல்லவா?

(க - து.) தங்குடிக்கேற்ப நல்லொழுக்கினனாய் ஒழுகுதல் இனிமையைப் பயப்பதாகும்.

(வி-ம்.) பழைய குடியாவது "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றி மூத்த குடி." சிறந்த தொடர்சியை உடைமையாவது நாங்கூர்வேள் புகார்ச்சோழற்குப் பெண் கொடுத்தமை போன்ற வீரக்குடிமக்கள் தொடர்ச்சியைப் பெறுதல், விழுத் தொடர்ச்சி விளங்குதல், தொன்று தொட்டு வருதல், இவை குடிக்கு ஏற்றப்பட்டன.

"நெய்த்தலைப் பால் உக்குவிடல்"—இஃது இச்செய்யுளில் வந்த பழமொழி. (௪)

35. கள்ளி யகிலும் கருங்காக்கைச் சொல்லும்போல்
எள்ளற்க யார்வாயின் நல்லுரையைத்—தெள்ளிதின்
ஆர்க்கும் அருவி மலைநாட! நாய்கொண்டால்
பார்ப்பாரும் தின்பர் உடும்பு.

(சொ - ள்.) தெள்ளிதின் ஆர்க்கும் அருவி மலை நாட - தெளிவாக ஒலிக்கும் அருவியை உடைய மலை நாடனே, பார்ப்பாரும்-பார்ப்பனரும், நாய்கொண்டால் - நாய் கதுவியதாயினும், உடும்பு தின்பர் – உடும்பின் தசையை உயர்வு கருதி உண்பர், (அதுபோல) கள்ளியகிலும் கருங்காக்கைச சொல்லும் போல் - கள்ளியினிடம் பிறக்கும் அகிலையும் கரிய காக்கையது சொல்லையும் பிறந்த இடம்நோக்கி இகழாது உயர்வாகக் கொள்ளுமாறு போல, எள்ளற்க யார் வாயின் நல்லுரையை-கீழாயினோர் வாயிற் பிறந்ததேயாயினும் நல்லுரையாயின் இகழ்ந்து ஒழிக. (போற்றுதல் செய்க.)

(க - து) சிறந்த பொருள்களை இழிந்தார் கூறினராயினும் இகழாது போற்றுதல் வேண்டும்.

(வி - ம்.) கள்ளியையும், கருங்காக்கையையும், நாயையும் இழிந்த பொருளாகக் கூறி அவற்றின்கண் உள்ளன சிறந்தன என்று கூறினார்: உடும்பின் புலால் மிகச் சிறந்த சுவையுடையது என்பது கருதியே பார்ப்பாரும் உண்பர் என்றார்.

காக்கை கரைவதை விருந்தினம் வருதற்கு அறிகுறி என்று கொள்ளுவர்.

'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள், மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்பது திருக்குறள். (உ)

36. தந்நடை நோக்கார் தமர்வந்த வா(று) அறியார்
செந்நடை சேராச் சிறியார்போல் ஆகாது,
நின்நடை யானே நடஅத்தா! நின்னடை
நின்நின்று அறிகிற்பார் இல்.

(சொ - ள்.) அத்தா - அத்தனே!, நின் நடை நின் நின்று அறிகிற்பார் இல் - நினது ஒழுக்கத்தை உன்னிடத்தினின்றும் அறிதலுடையார் இல்லை, (நீயே அறிவாய் ஆகையால்) தம் நடை நோக்கார் தமர்வந்தவாறு அறியார்-தமது ஒழுக்கத்தை ஆராய்த லிலராய் தம் சுற்றத்தார் ஒழுகி வந்த வரலாற்றையும் அறிதலில ராய், செம்நடை சேராச் சிறியார் போலாகாது - செவ்விய நடையைச் சேராத அறிவிற் சிறியார் போல் ஒழுகாது, நின் நடையானே நட - நினக்கு விதிக்கப்பட்ட நின்குடிக்கேற்ற ஒழுக்கத் தின்படியே ஒழுகக் கடவாயாக.

(க - து.) ஒவ்வொருவரும் தத்தம் குடிக்கேற்ப ஒழுகுதல் வேண்டும்.

(வி - ம்) பிறர் நினது ஒழுக்கத்தை அறிதல் அருமையின் உண்மையாகவே ஒழுகுக என்பார், "நின்னடையானே நட" என்றார். செம்மையாகிய நடை செந்நடை எனப்பட்டது. அஃ தாவது தத்தம் நிலைக்கு ஓதப்பட்ட ஒழுக்கினை உடையராதல். தமக்கு விதிக்கப்பட்ட ஒழுக்கினை நான்முறையான் ஆராய்தலும், தம் உறவினர் எங்ஙனம் ஒழுகிவந்தார் என அவர் ஒழுக்கினை ஆராய்தலும் நன்னெறியில் நிற்றற் குரிய வழிகளாம்.

"நின்னடை நின்னின்று அறிகிற்பார் இல்"—இஃது இச் செய்யுளில் வந்த பழமொழி. (ரு)

37. நீர்த்தன்று ஒருவர் நெறியன்றிக் கொண்டக்கால்
பேர்த்துத் தெருட்டல் பெரியார்க்கும் ஆகாதே
கூர்த்தநுண் கேள்வி அறிவுடையார்க்கு ஆயினும்
ஓர்த்தது இசைக்கும் பறை.

(சொ - ள்.) பறை ஓர்த்தது இசைக்கும் - உடுக்கை நாம் நினைத்த ஓசையையே ஒலியாநிற்கும், (அதுபோல) கூர்த்த நுண்

கேள்வி அறிவுடையார்க்கு ஆயினும் - கூரிய நுட்பமான நூற்பொருளைக் கேட்டுணர்ந்த இயற்கையறிவு உடையவர்களுக்கேயானாலும், நீர்த்தன்று-நீர்மையுடையது அன்று (என்று), ஒருவர் நெறியன்றி கொண்டக்கால் - அவருள் ஒருவர் முறைபிறழ்ந்து கருதிய இடத்து, பேர்த்து தெருட்டல் பெரியார்க்கும் ஆகாது - மீண்டும் அவரைத் தெளிவித்தல் தவத்தால் பெரியவர்களுக்கும் முடியாது. (அவர் கொண்ட கொள்கையின் கண்ணேயே நிற்பர்.)

(க - து.) பிறர் ஐயுறாவண்ணம் ஒழுகுதல் வேண்டும்.

(வி - ம்.) அறிவுடையாரையே தெளிவித்தல் இயலா தெனின் அஃதில்லாரைத் தெளிவித்தல் இயலாது என்பது சொல்லாமே அமையும் பறை நாம் நினைத்த ஓசையை ஒலிப்பதில் வழுவாததுபோல அறிவுடையாரும் கொண்ட கொள்கையி னின்றும் சிறிதும் தெளியார். ஆகவே பிறர் ஐயுற்ற பின்னர் அவரைத் தெளிவித்தல் அரிதாகலான் ஐயுறாவண்ணம் ஒழுகுதல் வேண்டும். பெரியோர்க்கும் ஆகாது என்பது தெளிவித்தல் இயலாது என்பதை வலியுறுத்துவது.

"போற்றின் அரியவை போற்றல் கடுத்தபின், தேற்றுதல் யார்க்கும் அரிது" என்பது இக்கருத்துப்பற்றி எழுந்த திருக்குறள்.

"ஓர்த்தது இசைக்கும் பறை" இஃது இச் செய்யுளில் வந்த பழமொழி. (௪)

38. தம்குற்றம் நீக்கலர் ஆகிப் பிறர்குற்றம்
எங்கேனும் தீர்த்தற்கு இடைப்புகுதல்—எங்கும்
வியன் உலகில் வெள்ளாடு தன்வலி தீராது
அயல்வளி தீர்த்து விடல்.

(சொ - ள்.) தம் குற்றம் நீக்கலர் ஆகி - (அறிவிலார்) தாம் செய்த குற்றத்தைப் போக்காதவர்களாகி, பிறர் குற்றம் தீர்த்தற்கு எங்கேனும் இடைப்புகுதல் - பிறருடைய குற்றங்களைத் தீர்க்கும் பொருட்டு எங்கெங்கும் சென்று புகுதல், வியன் உலகில் எங்கும் - அகன்ற உலகின்கண் எவ்விடத்தும், வெள்ளாடு தன்வளி தீராது அயல்வளி தீர்த்துவிடல் - வெள்ளாடு தனது வளியான் உண்டாய நோயைத் தீர்க்காது பிற உயிர்களுக்கு வாதத்தான் வரும் நோயைத்தீர்த்து விடுதலோ டொக்கும்.

(க - து.) ஒவ்வொருவரும் தத்தம் குற்றங்களைப் போக்கிய பின்னரே பிறர் குற்றங் களைய முற்படுதல் வேண்டும்.

(வி - ம்.) தன்வளி, அயல்வளி என்ற இடங்களில் வளி என்பது வளியான் உண்டாயநோய் என்னும் பொருளைக் குறிக்கின்றது. வாதத்தான் உண்டாகிய நோயைப் பால் முதலியவற்றால் நீக்குதலின் அயல்வளி தீர்த்தலாயிற்று. மழைக்காலங்களில் வீசும் சாரற்காற்றுக்காற்றாது ஆடுகள் நோய்வாய்ப் புகுதலின் சாரற் காற்றால் உண்டாகும் நோய் தன்வளி எனப்பட்டது. "எங்கேனும் இடைப்புகுதல்" எனவே மக்கள் பிறர்குற்றங் களையும் பெருவிருப்பினர் என்பதைக் குறித்தாராயிற்று.

"வெள்ளாடு தன்வளி தீராது அயல்வளி தீர்த்துவிடல்"— இஃது இச்செய்யுளில் வந்த பழமொழி. (௩)

39. கெடுவல் எனப்பட்ட கண்ணும் தனக்கோர்
வடுவல்ல செய்தலே வேண்டும்—நெடுவரை
முற்றுநீர் ஆழி வரையகத்து ஈண்டிய
கல்தேயும் தேயாது சொல்.

(சொ - ள்.) நெடுவரை - பெரிய சக்கரவாளமாகிய மலைகளால், முற்றும் - சூழப்பட்ட, நீர் ஆழி வரை யகத்து - நீரை உடைய கடலால் வரையறுக்கப்பட்ட பூமியின்கண், ஈண்டிய கல் தேயும் - தொக்கமலைகள் தேய்வடையும், சொல் தேயாது - பழிச்சொல் மாறுதலில்லை. (ஆகையால்), கெடுதல் எனப்பட்ட கண்ணும் - (இவர்க்கு இத்தீங்கு செய்து பழியை எய்தாதொழியின்) யான் கெடுவேன் என்று கருதப்பட்ட இடத்தும், தனக்கு ஓர் வடுஅல்ல செய்தலே வேண்டும் - தனக்கு ஒருசிறிதும் பழியைப் பயவாத செயல்களைச செய்தலையே ஒவ்வொருவனும் விரும்புதல் வேண்டும்.

(க - து.) தான் அழிய வரினும் பழியொடு பட்டவைகளைச் செய்யவேண்டா.

(வி - ம்.) மாறாது கிடத்தலால் பழியை வடு என்றார். நில்லாத உடம்பை ஒழித்து நிலையுடைய பழியை நீக்குக என்பார் "வேண்டும்" என்றார் "கெடுவல் எனப்பட்ட கண்ணும்" என்பது வடுவல்ல செய்தல் வேண்டும் என்பதை வலியுறுத்திற்று.

"கல்தேயும் சொல் தேயாது" என்பது இச்செய்யுளிற்கண்ட பழமொழி. (௯)

40. பொருந்தாப் பழியென்னும் பொல்லாப் பிணிக்கு
மருந்தாகி நிற்பதாம் மாட்சி—மருந்தின்
தணியாது விட்டக்கால் தண்கடல் சேர்ப்ப!
பிணியீ(டு) அழித்து விடும்.

(சொ-ள்.) தண்கடல் சேர்ப்ப - குளிர்ந்த கடல் நாடனே!, மருந்தின் தணியாது விட்டக்கால் - (ஒருவர் கொண்டநோயை) மருந்துகொண்டு நீக்காவிட்டால், பிணி ஈடு அழித்துவிடும் - அந் நோய் அவரது வலியைப் போக்கிவிடும். (ஆதலால்), பொருந்தா பழி என்னும் பொல்லா பிணிக்கு-பொருத்தமில்லாத பழி எனப் படும் தீய நோய்க்கு, மருந்தாகி நிற்பதாம் மாட்சி - அந் நோயைத் தீர்க்கும் பொருளாக நிற்பது ஒழுக்கமேயாம்; (அதுகொண்டு நீக்குதல் வேண்டும்.)

(க - து.) ஒருவன் தான் கொண்ட பழியை ஒழுக்கத்தா லன்றி நீக்கமுடியாது.

(வி - ம்.) பழி ஒருவனுக்கு இழிவை எய்துவித்தலின் "பொருந்தாப்பழி" என்று கூறப்பட்டது. பிணி தன்னுடையார் இறப்பத் தானும் நீங்கும தன்மையது. பழிப்பிணி தங்குடியின் கண் உள்ளாரையும் தொடர்ந்து பற்றலின் "பொல்லாப் பிணி" என்று கூறப்பட்டது.

> "நன்னன் மருகன் அன்றியும் நீயும்
> முயங்கற் கொத்தனை மன்னே வயங்குமொழிப்
> பாடுநர்க் கடைத்த கதவின் ஆடுமழை
> அணங்குசால் அடுக்கம் பொழியும் நும்
> மணங்கமழ் மால்வரை வரைந்தனர் எமரே"

எனப் பெருந்தலைச்சாத்தனர் இளவிச்சிக்கோவைப் புல்லாத தற்குக் கூறிய சான்றுகளாலும் இஃது அறியத்தக்கது. ஒழுக்கம் தன்னை யுடையானை மாட்சிமைப் படுத்தலின் ஈண்டு மாட்சி' ஒழுக்கமெனப்பட்டது.

"மருந்தின் தணியாது விட்டக்கால் பிணி ஈடு அழித்து விடும்"—இஃது இச்செய்யுளில் வந்த பழமொழி.

நோயை மருந்துகொண்டே நீக்காவிடின் அந்நோய் கொண் டானது வலிமையைக் கெடுப்பது போன்று, பழிப்பிணியை ஒழுக்கமெனும் மருந்துகொண்டு நீக்காவிடின் கொண்டானுக்கு இழிவை எய்துவிக்கும். (எ)

41. உரிஞ்சி நடப்பாரை உள்ளடி நோவா
நெருஞ்சியும் செய்வ(து) ஒன்(று) இல்லை—செருந்தி
இருங்கழித் தாழும் எறிகடல் தண்சேர்ப்ப!
பெரும்பழியும் பேணுதார்க்கு இல்.

(சொ - ள்.) செருந்தி இருங்கழி தாழும் எறிகடல் தண் சேர்ப்ப - செருந்திமரங்கள் பெரிய உப்பங்கழியின்கண் தாழ்ந்து

விளங்கும் அலைகளை வீசுகின்ற குளிர்ந்த கடல் நாடனே!, உரிஞ்சி நடப்பாரை உள்ளடி நோவ நெருஞ்சியும் செய்வதொன்று இல்லை- அஞ்சாது உராய்ந்து நடப்பவர்களை அவர் உள்ளங் கால்கள் வருந்தும்படி நெருஞ்சி முள்ளும் ஊறு செய்வதில்லை, பெரும் பழியும் பேணாதார்க்கு இல் - மிக்க பழியும் தன்னை அஞ்சிப் பாது காவாதவர்களுக்கு மனவருத்தம் செய்தல் இல்லை.

(க - து.) நல்லோர் பழிக்கு அஞ்சுவர், தீயோர் அஞ்சார்.

(வி - ம்.) பேணாதவர்க்கு மனவருத்தம் இல்லை என்று குறிப்பால் தீயோரை இகழ்ந்தவாறு.

"நன்றறி வாரிற் கயவர் திருவுடையர், நெஞ்சத்து அவலம் இலர்." இஃது இக் கருத்துப்பற்றி எழுந்த திருக்குறள்.

"பெரும்பழியும் பேணாதார்க்கு இல்"—இஃது இச்செய்யுளில் வந்த பழமொழி. (அ)

42. ஆவிற் கரும்பனி தாங்கிய மாலையும்
கோவிற்குக் கோவல னென்றுலகம் கூறுமால்
தேவர்க்கு மக்கட் கெனல்வேண்டா தீங்குரைக்கும்
நாவிற்கு நல்குர(வு) இல்.

(சொ - ள்.) ஆவிற்கு அரும்பனி தாங்கிய மாலையும்-பசுக் கூட்டங்கட்கு வந்த அரிய துன்பத்தை நீக்கிய திருமாலையும். கோவிற்கு கோவலன் என்று உலகம் கூறும் - ஆநிரைகளுக்குத் தக்க இடையன் என்று உலகம் சொல்லா நிற்கும். (ஆகையால்) தேவர்க்கு மக்கட்கு எனல் வேண்டா-தேவர்க்கு உரைப்பது இது மக்கட்கு உரைப்பது இது வெனல் வேண்டப்படுவதன்று, தீங்கு உரைக்கும் நாவிற்கு - தீமையை எடுத்துக்கூறும் நாவினுக்கு, நல்குரவு இல் - வறுமை இல்லை யாகலான்.

(க - து.) பழித்துரைக்கப் புகுவார்க்கு உயர்ந்தோர் தாழ்ந் தோர் என்பதில்லை.

(வி - ம்.) கோவலன் இகழ்ச்சிக் குறிப்பில் வந்தது. இந்தி ரன் சினந்து ஏவிய மழையைக் கண்ணன் மலைகொண்டு தடுத்து ஆக்களைக் காப்பாற்றிய செய்தி, "ஆவிற் கரும்பனி தாங்கிய மாலை" என்று குறிக்கப்படுகின்றது. ஆக்களைக் காவல்செய்தல் சிறந்த அறமென்பார், "ஆவிற் கரும்பனி தாங்கிய மாலையும்" என் றார். "ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்" என்பர் பிறரும், மாலையும் உம்மை உயர்வு சிறப்பு "தீங்குரைக்கும் நாவிற்கு நல்குரவு இல்" என்பது பழமொழி. (க)

6. இன்னா செய்யாமை

43. பூவுட்கும் கண்ணாய் பொறுப்பர் எனக்கருதி
யாவர்க்கே யாயினும் இன்னா செயல்வேண்டா
தேவர்க்கும் கைகூடாத் திண்ணன்பி னார்க்கேயும்
நோவச்செய் நோயின்மை இல்.

(சொ - ள்.) *பூ உட்கும் கண்ணாய் - தாமரையும் (ஒப்பாதற் கில்லையே யென்று) வருந்தும் கண்ணை உடையாய்!, தேவர்க்கும் கைகூடாத் திண் அன்பினார்க்கேயும் - தேவர்களுக்கும் இயலாத தாழ்ந்த அன்புடையார்க்காயினும், நோவசெய் - துன்புறுத்தினால், நோயின்மைஇல் - துன்புறா திருப்பது இல்லை (பொறுமையில ராவார்.) (ஆகையால்) பொறுப்பர் எனக்கருதி - எத்துணைத் தீங்கு செயினும் பொறுமையுடன் இருப்பார்கள் என்று தாமே நினைத்து, யாவர்கேயாயினும் - எத்துணை எளியராயினும், இன்னா செயல் வேண்டா - தீங்கினைச செய்தல் வேண்டாவாம்.*

(க - து.) *எவர்க்குந் தீங்கியற்றல் வேண்டா.*

(வி - ம்.) *"தேவர்க்கும் கைகூடாத் திண்ணன்பு" என்பது அன்பின் உயர்வைக காட்டுவது அனபுடையாரிடமும் ஏனை யோரிடமும் தீசசெயல்களைச செய்தல் வேண்டா.* (க)

44. வினைப்பயன் ஒன்றின்றி வேற்றுமை கொண்டு
நினைத்துப் பிறர்பனிப்ப செய்யாமை வேண்டும்
புனப்பொன் அவிர்சுணங்கிற் பூங்கொம்ப ரன்னாய்
தனக்கின்னா இன்னா பிறர்க்கு.

(சொ - ள்.) *புனம் பொன் அவிர் சுணங்கின் பூம்கொம்பர் அன்னாய் - புளததிற்படும் பொன்போல விளங்கும் தேமலையுடைய பூங் கொம்பை யொப்பாய்! தனக்கு இன்னா பிறர்க்கு இன்னா - தனக்குத் துன்பந்தருவன பிறருக்குந் துன்பந் தருவனவாம் (ஆதலால்), வினைபயன் ஒன்று இன்றி - செய்கின்ற செயலிற் பயனொரு சிறிதுமில்லாமல், வேற்றுமை கொண்டு - பகைமை ஒன்றே கொண்டு, நினைத்து - ஆராய்ந்து, பிறர் பனிப்ப செய் யாமை வேண்டும் - பிறர் வருந்தத் தக்கனவற்றைச் செய்தலை ஒழிதல் வேண்டும்.*

(க - து.) *பிறரையும் தம்மைப்போல நினைத்துத் தீங்கு செய்யாதிருத்தல் வேண்டும்.*

(வி - ம்.) பயனென்றுமின்றிப் பகையால் பல போலிச் சான்றுகளை ஆராய்ந்துகொண்டு துன்பம் செய்வார் என்பார், "நினைத்துச் செய்யாமை" என்றார். "தனக்கின்னா இன்னா பிறர்க்கு"—இஃது இச் செய்யுளில் வந்த பழமொழி.

"தன்னுயிர்க் கின்னாமை தானறிவான் என்கொலோ, மன்னுயிர்க் கின்னா செயல்" என்ற திருக்குறள் கருத்தும் இங்கே நினைத்தற்குரியது. (உ)

45. ஆற்று ரிவரென் றடைந்த தமரையும்
தோற்றத்தா மெள்ளி நலியற்க—போற்றான்
கடையடைத்து வைத்துப் புடைத்தக்கால் நாயும்
உடையானைக் கவ்வி விடும்.

(சொ - ள்.) போற்றான் கடையடைத்து வைத்துப் புடைத்தக்கால் - காப்பாற்றாதவனாகி வாயிலை அடைத்து வைத்து அடித்தவிடத்து, நாயும் உடையானைக் கவ்விவிடும்-நாயும் தன்னை உடையானைக் கவ்வித் துன்புறுத்தும். (ஆகையால்), அடைந்த தமரையும் - தம்மையடைந்த சுற்றத்தார்களையும், ஆற்றார் இவர் என்று - நம்மை எதிர்க்க வலியிலர் என்று நினைத்து, தோற்றதாம் எள்ளி நகையற்க - பிறருக்கு வெளிப்படுமாறு தாம் ஒருவரையும் இகழ்ந்து துன்புறுத்தா தொழிக.

(க-து.) நம்மையடைந்த சுற்றத்தார்களை இகழ்ந்து நலியா திருத்தல் வேண்டும்.

(வி - ம்.) அடைந்த உறவினர் எளியராயினும், நாய் கதுவினாற்போலத் தம்மால் இயன்ற சிறு தீங்கினையாவது இயற்ற முற்படுவர்.

"போற்றான் கடையடைத்துப் புடைத்தக்கால் நாயும்
உடையானைக் கவ்வி விடும்."

இஃது இச்செய்யுளில் வந்த பழமொழி. (ங)

46. நெடியாது காண்கிலாய் நீயெளியை: நெஞ்சே!
கொடியது கூறினாய் மன்ற—அடியுளே
முற்பகல் கண்டான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகல் கண்டு விடும்.

(சொ - ள்.) நெஞ்சே கொடியது கூறினாய்-நெஞ்சே! தீய செயல்களைப் பிறர்க்குச செய்யுமாறு கூறினாய். (ஆதலால்) நீ

யெளியை - நீ அறிவு இல்லாதாய், நெடியது காண்கிலாய்!- (பிறர்க்குத் தீங்கு செய்தலால் வரும் பயனை) நெடுங்காலத்திற்குப் பின் அறியாய், அடியளே - அந்த நிலையிலே, பிறன்கேடு மூன் பகல் கண்டான்-பிறன் ஒருவனுக்குத் தீங்கினைப் பகலின் முற்பகுதிக்கண் செய்தான், தன்கேடு பின்பகல் மன்ற கண்டு விடும் – தனக்கு வரும் தீங்கினைப் பகலின் பிற்பகுதிக்கண் தப்பாமல் அடைவான்.

(க - து.) முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்.

(வி - ம்.) நெஞ்சே, தீங்கின் பயனை அடைதற்கு நீண்ட நாட்கள் செல்லும் என்று நினைத்தலை ஒழி. உடனேயே பயனை அடைவாய். ஆதலால், யார்மாட்டும் தீங்குசெய்ய நினைத்தலை விட்டுவிடு. "பிறர்க்(கு) இன்னா முற்பகல் செய்யின் தமக்(கு) இன்னா, பிற்பகல் தாமே வரும." இஃது இக்கருத்துப் பற்றியெழுந்த திருக்குறள்.

"முன்பகல் கண்டான் பிறன்கேடு தன்கேடு பின்பகல் கண்டு விடும்"—இஃது இச்செய்யுளில் வந்த பழமொழி. (௪)

47. தோற்றத்தால் பொல்லார் துணையில்லார் நல்கூர்ந்தார்
மாற்றத்தால் செற்றார் எனவலியார் ஆட்டியக்கால்
ஆற்றா(து) அவர்அழுத கண்ணீர் அவைஅவர்க்குக்
கூற்றமாய் வீழ்ந்து விடும்.

(சொ - ள்) தோற்றத்தால் பொல்லார் – குடிப்பிறப்பால் தீய செயல்களை யுடையவர், துணையில்லார் - ஒரு துணையும இல்லாதவர், நல்கூர்ந்தார் - வறுமையுடையார், மாற்றத்தால் செற்றார – சொற்களால் பகைவரை ஒத்தார, என-என்றிங்ஙனம் நினைத்து, வலியார் ஆட்டியக்கால் - குடிப் பிறப்பு, துணை, செல்வம் முதலிய வலிமை உடையார் அவையிலாரை நலிந்த இடத்து, ஆற்றாது அவர் அழுத கண்ணீர் அவை-தாங்க இயலாது அவர்கள் தங்கண்களினின்றும் பரப்பிய கண்ணீராகிய அவையே, அவர்க்கு கூற்றமாய் வீழ்ந்துவிடும் – தம்மை நலிந்த அவர்க்குக் கூற்றாய் விழாநிற்கும்.

(க - து.) எளியார் அழுத கண்ணீர் அவர்தம்மை நலிந்தார்க்குக் கூற்றாய் முடியும்.

(வி - ம்.) தோற்றம், துணை, செல்வம் முதலியன இன்மை எளிமையைக் குறிப்பன. நலியப்பட்டார் கண்களினின்று ஒழு

கும் ஒவ்வொரு துளியும் நலிந்தார் வாழ்வை அறுக்கும் வாளின் கூரிய பல் என்று அறிக.

"ஆற்றாது அவர் அழுத கண்ணீர் அவை அவர்க்குக் கூற்றமாய் வீழ்ந்துவிடும்" இஃது இச்செய்யுளில் வந்த பழமொழி. (௭)

48. மிக்குடையர் ஆகி மிகமதிக்கப் பட்டாரை
ஒற்கப் படமுயறும் என்றல் இழுக்காகும்
நற்(கு)எளி(து) ஆகி விடினும் நளிர்வரைமேல்
கற்கிள்ளிக் கையுய்ந்தார் இல்.

(சொ - ள்.) *நளிர் வரைமேல் கல் கிள்ளி கை உய்ந்தார் இல் - விளங்குகின்ற மலைமேல் உள்ள கல்லைக் கிள்ளுதலைச் செய்து கை வருந்துதலைத் தப்பினோர் இல்லை, (ஆதலால்) மிக்கு உடையர் ஆகி மிக மதிக்கப்பட்டாரை — செல்வம் மிக உடையவர்களாகி அறிவுடைமையால் மிகவும் மதிக்கப்பட்டாரை, ஒற்கப் பட முயறும் என்றல் - அவர்கள் வருந்துமாறு தீய செயல்களைச் செய்வோம் என்று நினைத்தல், நற்கு எளிது ஆகிவிடினும்-மிகவும் எளிமையானாலும், இழுக்கு ஆகும் - செயலிற் செய்தால் மிக்க துன்பமே உண்டாகும்.*

(க - து) *அறிவு செல்வம் என்றிவை உடையாரைத் துன்புறுத்தலாகாது.*

(வி - ம்.) *அறிவு செல்வம் என்ற இரண்டுமுடையாரைத் துன்புறுத்த நினைப்பாராயின், கல்லைக் கிள்ளிக் கைவருந்தினோர் போல, நினைத்துச செய்பவர் துன்புறுவரேயன்றி அவர்க்கு ஊறு உண்டாவது இல்லை.*

முயல் + தும்-முயறும்: தன்மைப் பன்மை முற்று.

நன்கு என்பது நற்கு என வலிந்து நின்றது.

கல்வி, செல்வம் என்ற இரண்டனுள் ஒன்றே உடையாரை ஒரு வேளை நலிய நினைப்பின் கைகூடினும் கூடும். இரண்டும் உடையாரை எஞ்ஞான்றும் துன்புறுத்த இயலாது என்பார், "மிக்குடையராகி மிக மதிக்கப் பட்டாரை" என்றார்.

"கல் கிள்ளிக் கைஉய்ந்தார் இல்" இஃது—இச்செய்யுளில் வந்த பழமொழி. *(அ)*

49. நீர்த்தகவு இல்லார் நிரம்பாமைத் தந்நலியின்
கூர்த்தவரைத் தாம்நலிதல் கோளன்றல்-சான்றவர்க்குப்
பார்த்(து) ஓடிச் சென்று கதம்பட்டு நாய்கவ்வின்
பேர்த்துநாய் கவ்வினர் இல்.

(சொ - ள்.) நாய் கதம்பட்டு கவ்வின்-நாய் சினந்து கவ்விய இடத்து, பார்த்து ஓடி சென்று-ஆராய்ந்து ஓடிப் பின்சென்று, பேர்த்து நாய் கவ்வினார் இல் - மீண்டும் நாயினைக் கவ்வித் துன்புறுத்தினவர்கள் ஒருவரும் இலர், நீர் தகவு இல்லார் நிரம்பாமை தம் நலியின்-நல்ல நேர்மையான குணங்களில்லாதவர்கள் அறிவு நிரம்பாமையால் தம்மைத் துன்புறுத்துவராயின், கூர்த்து - மன ஊக்கங்கொண்டு, அவரை தாம் நலிதல் சான்றவர்க்கு கோள் அன்று - அவர்களைத் தாம் துன்புறுத்துதல் அறிவு சான்றவர்க்குக் கொள்கையன்று.

(க - து) அறிவிலார் தீங்கு செய்தாராயின் அதை பொருட்படுத்திப் பெரியோர் தீங்கு செய்யமாட்டார்கள்

(வி - ம்) சான்றவர் கோளாவது: தமக்கு இன்னா செய்தார்க்கும் அவர் நாண இனிமைதரும் செயலைச் செய்தலே யாகும்.

"இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு" என்பது திருக்குறள்.

அறியாமையால் தீங்கு செய்தலின் அறிவுடையார் பொருட்படுத்த வேண்டுவதில்லை.

"நாய் கவ்வின் பேர்த்தும் நாய்கவ்வினார் இல்"—இஃது இச்செய்யுளில் வந்த பழமொழி. (எ)

50. காழார மார்ப! கசடறக் கைகாவாக்
கீழாயோர் செய்த பிழைப்பினை மேலாயோர்
உள்ளத்துக் கொண்டுநேர்ந்(து) ஊக்கல் குறுநரிக்கு
நல்லநா ராயங் கொளல்

(சொ - ள்.) காழ் ஆர மார்ப!-உரம்பெற்ற முத்துமாலையை யணிந்த மார்பை உடையவனே!, கசடு அற கைகாவா கீழாயோர்-குற்றமற ஒழுக்கத்தைக் காவாத தாழ்ந்த குடியிற் பிறந்தவர்கள், செய்த பிழைப்பினை - இயல்பாகச் செய்த தீங்கினை, மேலாயோர் உள்ளத்துக்கொண்டு நேர்ந்து ஊக்கல் - உயர்ந்த குடியிற் பிறந்தவர்கள் மனத்துட்கொண்டு எதிர்த்துத் தீங்கு செய்ய முயலுதல், குறு நரிக்கு நல்ல நாராயம் கொளல் - சிறிய நரியைக் கொல்லும் பொருட்டுக் கூரிய நாராயணம் என்னும் அம்பினை யெய்யக் கொள்வதோடொக்கும்.

(க - து) கீழோர் தவறு செய்தால் மேலோர் அதற்கு எதிராகத் தீங்கு செய்ய முயலார்.

(வி - ம்.) குறுநரியின்பொருட்டு அம்பினைக் கொள்ளாதது போலக் கீழோர் பொருட்டுத் தீங்குசெய்ய மனங்கொள்ள வேண்டுவதில்லையாம் அஃது அவர் பிழையன்று. அவர் பிறந்த தாழ்ந்த குடியின் இயல்பு என்றெழியவேண்டும். நாராயம் - நாராயணனது அம்பு; குறி தவறாது சென்று உயிரை வாங்குவ தற்கு நாராயணனது அம்பினைக் கூறுதல் மரபு

நாராயணன் அம்பினை உவமை கூறவே, மேலாயோர் தீங்கு செய்யின் அவர்செய்த தீமை பொறுத்தற்கரியது என்பது பெறப் பட்டது.

"குறு நரிக்கு நல்ல நாராயம் கொளல்"—இஃது இச் செய்யு ளில் வநத பழமொழி. (அ)

7. வெகுளாமை

51. இறப்பச் சிறியவர் இன்னு செயினும்
பிறப்பினல் மாண்டார் வெகுளார்—திறத்துள்ளி
நல்ல விறகின் அடினும் நனிவெந்நீர்
இல்லம் சுடுகலா வாறு.

(சொ - ள்.) இறப்ப சிறியவர் - குடிப்பிறப்பினுல் மிகவும் இழிந்தவர்கள், இன்னு செயினும் - துன்பந்தருஞ் செயல்களை செய்தாராயினும், பிறப்பினுல் மாண்டார் வெகுளார் - குடிப் பிறப்பினுல் மாட்சிமைப்பட்டவர்கள் சினத்தலிலர்,(அது) திறதது உள்ளி நல்ல விறகின் அடினும் - கூறுபாடாக ஆராய்ந்து நல் விறகினைக்கொண்டு காய்ச்சினும், நனி வெந்நீர் - மிகவும் வெப்ப மாகிய நீர், இல்லம் சுடுகலா வாறு - வீட்டினை எரிக்க முடியாத வாறுபோலும்.

(க - து) கீழ்மக்கள் செய்யும் துன்பத்தால் மேன்மக்கள் சினங் கொள்ளுதல இல்லை.

(வி - ம்.) வெந்நீர் வீட்டை வேகச் செய்யாதவாறு போலப் பெரியோர்கள் கீழ்மக்களைக் கோபியார். "பிறப்பினுல் மாண் டார் வெகுளார்' எனவே, வெகுளாமை உயர் குடிப்பிறப்பின் இயல்பு எனபதாம். "சிறியவர் இன்னு செயினும" எனவே, தீஙகு செய்தல் தாழ்ந்த குடிப்பிறப்பின் இயல்பு என்பதும பெறப்பட்டது.

"நனி வெந்நீர் இல்லம் சுடுகலாவாறு" என்பது இச் செய் யுளில் வந்த பழமொழி. (க)

52. ஆறுச் சினத்தன் அறிவிலன் மற்றவனை
மாறி ஒழுகல் தலையென்ப—ஏறி
வளியால் திரையுலாம் வாங்குநீர்ச் சேர்ப்ப!
தெளியானைத் தேறல் அரிது.

(சொ - ள்.) வளியால் ஏறி திரையுலாம் வாங்குநீர் சேர்ப்ப-காற்றால் கரைமீது ஏறித் திரைகள் வீசுகின்ற வளைந்த கடல் நாடனே!, தெளியானைத் தேறல் அரிது - மனத்தின்கண் தெளிதல் இல்லாதவனை நம்புதல் முடியாது. (அதுபோல) ஆறுசினத்தன் அறிவிலன் - மாறாத வெகுளியை உடையான் (ஆனல்) அறிவு இல்லாதவன், அவனை மாறி ஒழுகல் தலை யென்ப - (அவனோடு சேர்ந்திருத்தல் முடியாது ஆதலால்) அவனை நீங்கி ஒழுகுதல் சிறந்ததென்று சொல்லுவர் நல்லோர்.

(க - து.) மிக்க சினம் உடையாரோடு சேர்ந்திருத்தல் இயலாது.

(வி - ம்.) பேசசு ஒழித்தல், காண்டலை ஒழித்தல் முதலியன பிறவும் உண்மையின் விட்டு நீங்குதலே சிறந்ததென்பார், "தலையென்ப" என்றார் சினம் சோநதாரைக கொல்லியாதலால் அஃதுடையாரைவிட்டு நீஙகாவிடின் துன்பத்திற் குள்ளாக்கப் படுவார்கள். மனத்தெளிவில்லானை நம்புதல் கூடாததுபோல சினமுடையானேடு சேர்ந்தொழுகல் கூடாது என்பதாம். மற்று: அசைநிலை: "தெளியானைத் தேறல் அரிது"—இஃது இச செய்யுளில் வந்த பழமொழி. (உ)

53. உற்றதற்(கு) எல்லாம் உரம்செய்ய வேண்டுமோ?
கற்றறிந்தார் தம்மை வெகுளாமைக் காப்பமையும்
நெற்செய்யப் புல்தேய்ந்தாற் போல நெடும்பகை
தற்செய்யத் தானே கெடும்.

(சொ - ள்.) நெல் செய்யப் புல் தேய்ந்தாற் போல - நெற் பயிரைச செய்தலினல் வயலிலுள்ள புல் தானே அழிந்தாற்போல், நெடும்பகை - தீராப்பகை, தன் செய்ய தானே கெடும் - ஒருவன் தன்னை வலிமையுறச செய்தலால் அப்பகை தானே அழிந்துவிடும், (அதுபோல்) கற்று அறிந்தார் - கறறறிந்தவாகள், உற்றதற்கு எல்லாம் உரம்செய்ய வேண்டுமோ - நேரிட்ட இடையூற்றிற் கெல்லாம் தனித்தனியே தம்மை வலிசெய்யவேண்டுமோ? (வேண்டுவது இல்லை), தம்மை வெகுளாமைக் காப்பமையும் - தம்மைச் சினத்தினின்றும் காத்தலே அமையும்.

(க - து.) கற்றறிந்தார் வெகுளாதொழியவே எல்லாத் தீமைகளும தாமே அழிந்தொழிதல் உறுதியாம்.

(வி-ம்.) ஏனையோர்க்காயின் பகைவரை வெல்லும்பொருட்டுத் தம்மை வலியுடையராககுதல் வேண்டும். கற்றறிந்தோர்க்கு அங்ஙனந் தம்மை வலியுடைய ராக்குதல் வேண்டுவதில்லை. தமக்கு அகப்பகையாகிய இனத்தை வெல்லவே ஏனைப் புறப் பகைகள் யாவும் அழியும் என்பதாம். ஆகவே, சினத்தை அடக்குதலே பகைவரை வெல்லுதலும் தம்மைக் காத்தலும் ஆம். இது பற்றியே திருவள்ளுவரும் "தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க" என்றார்.

''நெல்செய்யப் புல்தேய்ந்தாற்போல நெடும்பகை தன் செய்யத தானே கெடும்'' என்பது பழமொழி. (௩)

54. எய்தா நகைச்சொல் எடுத்துரைக்கப் பட்டவர்
வைதாராக் கொண்டு விடுவர்மன் அஃதால்
புனற்பொய்கை ஊர! விளக்(கு) எலிகொண்டு
தனக்குநோய் செய்து விடல்

(சொ - ள்.) புனல் பொய்கை ஊர-நீர் நிறைநத பொய்கை சூழ்ந்த மருதநிலத் தலைவனே!, எய்தா நகை சொல் எடுத்து உரைக்கப்பட்டவர் - பொருநதாத இகழ்தற்குரிய சொற்களைப் பிறரால் எடுத்து உரைககபபட்டவர், வைதாராக கொண்டு விடுவர் - அவர் தம்மை இகழ்ந்ததாகக் கொள்வர் அறிவிலார், அஃது - அங்ஙனம் இகழ்ந்ததாகக் கொள்ளுதல், விளககு எலி கொண்டு தனக்கு நோய் செய்துவிடல்-விளககினை எலி இழுத்துச சென்று (தம்மைப் பிறருக்கு விளக்கிக காட்டுதலால்) தனக்குத துன்பத்தினை ச செய்துகொள்ளுதலை ஒககும.

(க - து.) அறிவிலார துன்பததைத தாமே தேடிக் கொளவர்.

(வி-ம்.) எலி விளக்கினைக் கொண்டு தன்னை விளக்குதலால் துன்பததைத தானே தேடிககொள்ளுகின்றது. அறிவிலாரும தம பழியைக கூறாதிருககவும பிறர் பழியைத தம்மேலிட்டுத் தமககுள்ள பழியை வெளிப்படுத்தி அதனால் துன்பத்தினை அடைவர்.

தமமிடம் இகழ்தற்குரிய செயல்கள் உண்மையின், இகழ்வார் இகழ்வனயாவும் தம்மைக் குறித்ததே யென நினைப்பர் அறிவிலார.

''விளக்கு எலி கொண்டு தனக்கு நோய் செய்துவிடல்'' என்பது பழமொழி. (௪)

55. தெரியா தவர்தம் திறனில்சொல் கேட்டால்
பரியாதார் போல இருக்க—பரி(வு)இல்லா
வம்பலர் வாயை அவிப்பான் புகுவரே
அம்பலம் தாழ்க்கூட்டு வார்.

(சொ - ள்.) *தெரியாதவர் தம் திறனில் சொல் கேட்டால்- அறிவில்லாருடைய (அவர் தம்மை இகழ்ந்து கூறும்) திறமையில்லாச் சொற்களைக் கேட்டால், பரியாதார் போல இருக்க - துன்புறாதவர்களைப்போல் பொறுத்திருக்க, பரிவு இல்லா வம்பலர் வாயை அவிப்பான் புகுவரே - (அங்ஙனமன்றி) அன்பில்லாத அயலார் வாயை அடக்கப் புகுவார்களோ? இல்லை, (புகுவரேல்) அம்பலம் தாழ்க் கூட்டுவார் - பொது இடத்தைத் தாழ் இடுவாரோடு ஒப்பார்.*

(க - து.) *அறிவில்லாருடைய வாயை அடக்குதல் முடியாது.*

(வி - ம்.) *அறியார் தமது அறிவின்மையைப் புலப்படுத்துகின்றார் என்றறிவதல்லது அவர் கூறும் சொற்களுக்காக வருந்துதல் கூடாது. பொது இடத்தினைத் தாழிட இயலாதவாறுபோல, அவர் வாயை அவித்தல் இயலாதுபோம.*

"அம்பலம் தாழ்க கூட்டுவார்" என்பது இச செய்யுளில் வந்த பழமொழி. (ரு)

56. கையார உண்டமையால் காய்வார் பொருட்டாகப்
பொய்யாகத் தம்மைப் பொருளல்லார் கூறுபவேல்
மையார உண்டகண் மாணிழாய்! என்பரிவ
செய்யாத எய்தா வெனில்.

(சொ - ள்.) *மைஆர உண்ட கண் மாண் இழாய்-மையினை மிகுதியும் உண்ட கண்களையும் மாட்சிமைப்பட்ட கலன்களையும் உடையாய்[1], கை ஆர உண்டமையால் - (தம் பகைவர் கொடுத்த பொருளை) கைநிறைய வாரி வாரி உண்டமையால், காய்வார் பொருட்டாக - (அவர் கூறியதைச செய்யாதவழி) சினப்பர் என்பது காரணமாக, பொருளல்லார் - மனிதனுகவன்றி ஒரு பொருளாகவும் கருதப்படாத அற்பர்கள், தம்மை பொய்யாகக் கூறுபவேல் - தம்மீது உண்மை இல்லாத சில பழிச் சொற்களைக் கூறினரேல், செய்யாத எய்தா எனில் - தாம் செய்யாத பழிச சொற்கள் தம்மை வந்து அடையாவாகலான், என் பரிவ - எது கருதி வருந்துவது? (வருந்துதல் வேண்டா).*

(க-து.) தம் பகைவர் முயற்சியால் அறிவிலார் பழி கூறினரேல் அதற்காக வருந்த வேண்டுவதில்லை.

(வி-ம்.) பகைவருடைய தூண்டுதலாற் கூறுதலால் அதற்கு வருந்த வேண்டுவதில்லை. பகைவருடைய சொற்களைக் கேட்கும் பேதையர் தாம் உண்டது நினைந்து நன்றி அறிதலுடையவராய்ச் சோற்றுக்கடன் கழிக்கின்றார்கள் என்பது கருதி, அவர்கொண்ட நன்றியறிவுக்கு மனம் மகிழ்தலல்லது வருந்தலாகாது, "செய்யாத எய்தா" என்பது இச் செய்யுளில் வந்த பழமொழி. (சு)

57. ஆய்ந்த அறிவினர் அல்லாதார் புல்லுரைக்குக்
காய்ந்(து) எதிர்சொல்லுபவோ கற்றறிந்தார்?--தீந்தேன்
முசுக்குத்தி நக்கும் மலைநாட! தம்மைப்
பசுக்குத்தின் குத்துவார் இல்.

(சொ - ள்.) தீம் தேன் முசு குத்தி நக்கும் மலைநாட!- இனிய தேன் கூட்டை ஆண்குரங்கு கிழித்து (ஒழுகும் தேனை) நக்குகின்ற மலைநாடனே!, பசு குத்தின் குத்துவார் இல் - பசு தம்மை முட்டினால் (சினந்து தாமும்) முட்டுவார் இல்லை, (ஆதலால்) ஆய்ந்த அறிவினர் அல்லாதார் புல்லுரைக்கு - ஆராய்ந்த அறிவினை உடையரல்லாதவர்கள் சொல்லும் பொருளற்ற சொற்களுக்கு, கற்றறிந்தார் காய்ந்து எதிர் சொல்லுபவோ - நூல்களைக் கற்று ஆராய்ந்து அறிந்தவர்கள் சினந்து எதிராகப் பொருளற்ற சொற்களைக் கூறுவரோ? கூறார்.

(க - து-) ஆராய்ச்சியில்லாதவர்கள் கூறும் அற்பச் சொற்களைப் பொருளாகக்கொண்டு கற்றறிந்தார் சினவார்.

(வி - ம.) ஆராய்ச்சி இன்மையால் கூறுகின்றார்கள் என்றறிவதல்லது இயல்பாகக் கூறுகின்றார்க ளென்றறிதல் கூடாது. 'நாய் கவ்வின் மாறாகக் கவ்வினார் இல்லை' என்று அறிவு ஆராய்ச்சியில்லார்களுக்கு உவமை கூறினாற் போலாது, "பசுக் குத்தின்" என்றமையால் நூல்களைக் கற்றவர்; ஆனால் ஆராய்ச்சியில்லார் என்று கொள்ளல வேண்டும். பிழை செய்யினும் அவர் பிழையன்று என்று கருதுதல் வேண்டும். "பசுக்குத்தின் குத்துவார் இல்" இஃது இச் செய்யுளில் வந்த பழமொழி. (எ)

58. நோவ உரைத்தாரைத் தாம்பொறுக்க லாகாதார்
நாவின் ஒருவரை வைதால் வயவுரை
பூவின் பொலிந்தகன்ற கண்ணாய்! அதுஅன்றே
தீஇல்லை ஊட்டும் திறம்.

(சொ - ள்.) பூவின் பொலிந்து அகன்ற கண்ணாய் - பூப்போல விளங்குகின்ற விசாலமான கண்ணையுடையாய்!, நோவ உரைத்தாரை தாம் பொறுக்க லாகாதார் - மனம் வருந்துமாறு அடாத சொற்களைச் சொல்லியவர்களை அவர் கூறிய சொற்களைப் பொறுக்கும் ஆற்றல் இல்லாதவர்கள், நாவின் ஒருவரை வயவுரை வைதால் - தமது நாவினைக் கொண்டு தம்மை வைதாரைத் தாம் இகழ்ந்து கூறினால், (அங்ஙனம் இகழ்ந்து கூறுதல்) தீ இல்லை ஊட்டும் திறம் அது அன்றோ - தீயினால் வீட்டினைக்கொளுத்தும் திறம்போல் அது ஆகும் அல்லவா?

(க - து) தம்மை இகழ்ந்தாரைத் தாமும் இகழ்தல் தமக்குத் துன்பத்தை விளைவித்துக் கொள்வதாக முடியும்.

(வி-ம்.) இயல்பாகவே பிறரை இகழும் குணமுடையாரைத் தாம் சினந்துகூறி அதனால் அவர்க்குச் சினமூட்டுதல், எரியும் தன்மையை உடைய கூரை வீட்டில் தீ வைத்ததை ஒக்கும். தாம் சினந்து கூறியது பற்றுகோடாகக் கொண்டு தீங்கு விளைக்க முற்படுவர். "தீ இல்லை ஊட்டும் திறம்" என்பது இச் செய்யுளில் வந்த பழமொழி. (அ)

59. கறுத்(து) ஆற்றித் தம்மைக் கடியசெய் தாரைப்
பொறுத்(து)ஆற்றிச் சேறல்புகழால்-ஒறுத்(து) ஆற்றின்
வான்ஓங்கு மால்வரை வெற்ப ! பயன்இன்றே
தான்நோன் றிடவரும் சால்பு.

(சொ - ள்.) வான் ஓங்கும் மால் வரை வெற்ப - வானளவு உயர்ந்த பெரிய மலைகளை உடைய வெற்பனே!, தான் நோன்றிட வரும் சால்பு - ஒருவன் பொறுக்கும் பொறையினால் வருவது அவனது குணம், (ஆகையால்) கறுத்து ஆற்றி தம்மை கடிய செய்தாரை - சினத்தின்கண் மிக்குத் தமக்குத் தீய செயல்களைச் செய்தாரை, பொறுத்து ஆற்றி சேறல் புகழால் - அவர் தீச் செயல்களைப் பொறுத்து அவர்க்கு நன்மை செய்து ஒழுகுதல் புகழாகும், ஒறுத்து ஆற்றின் பயன் இன்று - கோபித்துத் தாமும் தீயசெய்கைகளைச் செய்தால் அதனால் புகழ் உண்டாதல் இல்லை.

(க - து) தீங்கு செய்தார்க்கு நன்மை செய்தல் வேண்டும்.

(வி-ம்) "பயன் இன்று" என்றது கோபித்துத் தீயசெயல்களைச் செய்தலால் வென்றோம் என நினைத்தல், அப்பொழுதைக்கு இன்பமாகத் தோன்றினும் என்றும் நிற்பதாய புகழ் இல்லை என்பதைக் கருதியேயாம்.

"ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப், பொன்றுந் துணையும் புகழ்" என்பது இக்கருத்துப் பற்றி எழுந்திருக்குறள்.

"தான் நோன்றிட வரும் சால்பு" என்பது பழமொழி. (௬)

8. பெரியாரைப் பிழையாமை

60. அறிவன்(று) அழகன்(று) அறிவதூஉம் அன்று
சிறியர் எனப்பாடும் செய்யும்:—எறிதிரை
சென்றுலாம் சேர்ப்ப! குழுவத்தார் மேயிருந்த
என்றா(டு) அறுப்பினும் மன்று.

(சொ - ள்.) எறிதிரை சென்று உலாம் சேர்ப்ப-காற்றால் எறியப்படும் அலைகள் கரைமேல் சென்று உலாவுகின்ற கடல் நாடனே!, என்று ஊடு அறுப்பினும் குழுவத்தார் மேயிருந்த மன்று-சூரியனை ஊடறுத்துச்செல்லினும் அறிஞர்கள் பொருந்தியிருந்த அவையை ஊடறுத்துப் போகலாகாது, (அங்ஙனம் போதல்) அறிவு அன்று - அறிவுடைமை யாகாது, அழகன்று - பிறந்த குடிக்கு அழகினைத் தாராது, அறிவதூஉம் அன்று - அறிவதாகிய அறநெறியும் ஆகாது, சிறியர் எனப் பாடும் செய்யும் - கீழ் மக்கள் என்று சொல்லப்படுதலையும் செய்யும்.

(க - து.) அவையை ஊடறுத்துச் செல்லலாகாது.

(வி - ம்.) ஊடறுத்துப் போதல் ஆகாது என்பது இசையெச்சம். மன்றூடறுத்துச் சேறலின் தமது அறிவு, குடிப்பிறப்பு, அறம், பெருமை முதலியன இழிக்கப்படுதலின் சேறல் ஆகாது என்றார் "என்றூடு அறுப்பினும் மன்றூடு அறுத்தல் இல்லை" என்பது பழமொழி (௭)

61. ஆமாலோ என்று பெரியாரை முன்னின்று
தாமாச் சிறியார் தறுகண்மை செய்தொழுகல்
போமா(று) அறியாப் புலன்மயங்கி ஊர்புக்குச்
சாமாகண் காணாத வாறு.

(சொ-ள்) பெரியாரை ஆமாலோ என்று-பெரியோர்களை இவர்க்கு (எம்மோடு மாறுபடல்) ஆகுமோ என்று நினைத்து, சிறியார் தாமா முன் நின்று தறுகண்மை செய்து ஒழுகல் –

அறிவிற் சிறியார் தாமாக முன்னின்று மாறுபட்டு வன்மை செய்து நிற்றல், சாம் மா - சாதற்குரிய விலங்குகள், போம் ஆறு அறியா - செல்லும் வழியினை அறியாதவாறு, புலன் மயங்கி - அறிவு மயங்கலால், ஊர் புக்கு கண் காணுதவாறு - ஊரினுள் புகுந்து கண்களை இழந்து வருந்தியதை ஒக்கும்.

(க - து.) பெரியோரோடு மாறுபடுவார் இறுதியை எய்துவர்.

(வி - ம்.) இவர்க்கு எம்மோடு மாறுபடுந் தகுதி இல்லை என்று கருதிய உரமே, தாமாகவே பெரியோர்களுக்கு முன் னிற்குமாறு செய்தது சாதற்குரிய விலங்குகள் அறிவு மயங்கி ஊரினுள் புகுதல்போல இறத்தற்குரிய மக்கள் அறிவுடையா ரோடு மாறுபடப் புகுவர் என்பதாம். தாமாக என்பது தாமா என ஈறுகெட்டு நின்றது.

"போமா றறியா புலன்மயங்கி ஊர்புக்குச் சாமாகண் காணுதவாறு" என்பது பழமொழி. (உ)

62. எல்லாத் திறத்தும் இறப்பப் பெரியாரைக்
கல்லாத் துணையார்தாம் கைப்பித்தல் சொல்லின்
நிறைந்தார் வளையினுய்! அஃதால் எருக்கு
மறைந்துயானை பாய்ச்சி விடல்.

(சொ - ள்.) நிறைந்து ஆர் வளையினுய் - அழகு நிறைந்து பொருந்தியிருக்கின்ற வளையையுடையாய்! எல்லாத் திறத்தும் இறப்பப் பெரியாரை - எல்லா வகையானும் உயர்ந்த அறிஞர்களை, கல்லா துணையார் - கல்லாமையைத் துணையாக உடைய அறிவிலார், தாம் கைப்பித்தல் சொல்லின் - தாம் அதனுள் மறைந்து நின்று வெறுக்கப் பண்ணுதலைச் சொல்லின், எருக்கு மறைந்து யானை பாய்ச்சிவிடல் - எருக்கம்புதரினகண் மறைந்து ஒருவன் யானையின்மேல் அம்பு எய்தலோ டொக்கும்.

(க - து.) அறிவுடையாரைக் கல்லார் துன்புறுத்துவாரா யின், அவர் கெட்டொழிதல் உறுதி என றறிதல் வேண்டும்.

(வி - ம்.) எல்லாத்திறம் என்றது அறிவு, திரு, ஆற்றல் முதலியன.

எருக்கம் புதரின்கண் மறைந்து நின் றெய்தாலொருவன் கெடு தல் திண்ணம் ஆமாறுபோல, கல்லாமையின்கண் மறைந்து நின்று பெரியோரை வெறுக்கப் பண்ணினவனும் இறத்தல் திண் ணமாம்.

"எருக்கு மறைந்து யானை பாய்ச்சிவிடும்" என்பது பழ மொழி. (௩)

63. முன்னும் ஒருகால் பிழைப்பானை ஆற்றவும்
பின்னும் பிழைப்பப் பொறுப்பவோ?—இன்னிசை
யாழின்வண்(டு) ஆர்க்கும் புனலூர! ஈனுமோ
வாழை இருகால் குலை.

(சொ – ள்.) *இன் இசை யாழின் வண்டார்க்கும் புனலூர - இனிய ஓசையையுடைய யாழைப்போல வண்டுகள் ஒலிக்கும் புனல் நிறைந்த மருதநிலத் தலைவனே!, வாழை இருகால் குலை ஈனுமோ—வாழை இருமுறை குலைகளை ஈனுமோ (ஈனாது.) (அது போல்) முன்னும் ஒருகால் பிழைப்பானை ஆற்றவும் - முன்பு ஒரு முறை பிழை செய்தவனைப் பொறுத்தவர்களா யிருக்கவும், பின்னும் பிழைப்ப பொறுப்பவோ – பின்னரும் குற்றம் செய்தால் பொறுப்பார்களோ? (பொறுக்கமாட்டார்கள்.)*

(க – து.) *சான்றோர் அறிவிலார் செய்த குற்றத்தை ஒரு முறை யன்றிப் பொறுக்கமாட்டார்கள்.*

(வி–ம்.) *அறிவிலார் மீண்டும் மீண்டும் தீங்கு செய்தவராய்த் திரிவாராஅனால் அவர்க்கு மிக்க துன்பம் வரும் என்பது கருதி, அவரை நன்னெறியில் நிறுத்தற்பொருட்டு இரண்டாவது முறை தீங்கு செய்யின், அதற்குத் தக்க தண்டனையை யளிக்கப் பெரியோர் முற்படுவர். ஆதலாற்றான் ''பின்னும் பிழைப்பப் பொறுப்பவோ'' என்றார்.*

''ஈனுமோ வாழை இருகால் குலை'' என்பது பழமொழி. (௩)

64. நெடுங்காலம் வந்தார் நெறியின்மை கண்டு
நடுங்கிப் பெரிதும் நலிவார் பெரியர்
அடும்(பு)ஆர் அணிகானற் சேர்ப்ப! கெடுமே
கொடும்பா(டு) உடையான் குடி.

(சொ – ள்.) *அடும்பு ஆர் அணி கானல் சேர்ப்ப-அடும்பின் மென்கொடிகள் நிறைந்து அழகு செய்கின்ற சோலைகள் சூழ்ந்த கடல் நாடனே!, நெடுங்காலம் வந்தார் நெறியின்மை கண்டு - நீண்ட காலமாகத் தீச்செயல் கைவந்தார் செய்த தீங்கினைக் கண்டு, பெரியர் நடுங்கி பெரிதும் நலிவர் - அறிஞர் (இவர் இத்துணைக் காலமாகச் செய்த தீங்கினால் உலகு என்னாயிற்றோ) என்று மனம் நடுக்கமுற்றுப் பெரிதும் வருந்துவார்கள், (அவர் அங்ஙனம் நினைத்த அளவில்) கொடும்பாடு உடையான் குடி கெடும் - கொடிய தன்மையை உடையானது குடி கெட்டுப் போகும்.*

(க - து.) அறிவுடையார் அஃதிலார் செய்த இன்னல்களை நினைந்து வருந்துவாராயின், நினைத்த அளவிலே அவர் குடி கெட்டொழியு மென்பதாம்.

(வி - ம்.) "குடி கெடும்" எனறதனால் செய்த அவனை யன்றி அவன வழியினுள்ளாரும் கெட்டொழிவார் என்பது பெறப்படும்.

"குன்றன்னார் குன்ற மதிப்பின் குடியொடு, நின்றன்னார் மாய்வர் நிலத்து" என்பது இககருத்துப்பற்றி எழுந்த திருககுறள். "கொடும்பாடு உடையான் குடி கெடும்" என்பது பழமொழி. (ரு)

9. புகழ்தலின் கூறுபாடு

65. செய்த கருமம் சிறிதானும் கைகூடா
மெய்யா உணரவுந் தாம்படார்—எய்த
நலத்தகத் தம்மைப் புகழ்தல் புலத்தகத்துப்
புள்அரைக்கால் விற்பேம் எனல்.

(சொ - ள்.) செய்த கருமம் சிறிதானும் கைகூடா - செய்த செயலின் பயன் சிறிதளவும் கைவருதல் இல்லை, மெய்யா உணரவும் தாம்படார்-செயலின் பயனை உறுதியாகப் பெறுவார் என்று பிறரால் எண்ணவும் படாதவர்கள், எய்த நலததக தம்மைப் புகழ்தல் – நிரம்ப நன்மையிலே பொருந்தத் தம்மைத் தாமே புகழ்தல், புலத்து அகத்து புள் அரைக்கால் விற்பேம் எனல் - வயலின்கண் இருக்கும் புள்ளினை அரைக்கால் பொன்னுக்கு விற்பேம் என்று கூறுதலோ டொக்கும்.

(க – து.) முடிக்கமுடியாத செயலை முடிப்பதாகக் கூறிப் புகழ்தல் கூடாது.

(வி - ம்.) கைவரப் பெறாத புள்ளை அரைக்கால் பொன்னுக்கு விற்பேம் என்று கூறுதல்போல், ஒரு சிறிதும் பயனை அடையாதும், அடையலாம் என்பதில்லாமலுமிருந்தும் பயன் முழுதும் பெறுவதாகக் கூறுதல் வெறும் புகழ்ச்சி உரை என்று கருதப்படும்.

"புலத்தகத்துப் புள் அரைக்கால் விற்பேம் எனல்" என்பது பழமொழி. (க)

66. தமரேயும் தம்மைப் புகழ்ந்துரைக்கும் போழ்தில்
அமரா ததனை அகற்றலே வேண்டும்
அமையாரும் வெற்ப! அணியாரே தம்மைத்
தமவேனும் கொள்ளாக் கலம்.

(சொ—ள்.) *அமை ஆரும் வெற்ப—மூங்கில்கள் நிறைந்த மலை நாடனே!, கொள்ளாக கலம தமவேனும் - தமக்குத் தகாத பொற் கலன்கள் தம்முடையதாயினும், தம்மை அணியார் - அவற்றைக் கொண்டு தம்மை அணிபெறச் செய்யார் மக்கள், (அதுபோல) தம்மைப் புகழ்ந்துரைக்கும் போழ்தில் - தம்மைப் புகழ்ந்து கூறு மிடத்து, தமரேயும் அமராததனை அகற்றலே வேண்டும் - சுற்றத் தாரேயானாலும் தமக்குப் பொருந்தாதனவற்றைக் கூறுவரேல் அவற்றை அவர் சொல்லாதவாறு நீக்குதலையே ஒருவன் விரும் புதல் வேண்டும்.*

(க - து.) *தமக்குப் பொருந்தாத புகழ்ச்சி உரையை ஏற்றல் கூடாது.*

(வி - ம்.) *தமக்குத தகாதன பொற்கலனே யாயினும் ஏற் றுக் கொள்ளாதவாறு போல, பொருந்தாதன கூறுவார் தமரே யாயினும் கூறாதவாறு விலக்குதல் வேண்டும். "தமரேயும்" என்ற தனால் அயலார் கூறும் பொருந்தாதனவற்றையும் விலக்கவேண் டும் என்பது ஏற்படும். "அணியாரே தம்மைத் தமவேனும் கொள்ளாக்கலம்" என்பது பழமொழி* (உ)

67. தாயானும் தந்தையா லானும் மிக(வு)இன்றி
வாயின்மீக் கூறும் அவர்களை ஏத்துதல்
நோயின்(று) எனினும் அடுப்பின் கடைமுடங்கும்
நாயைப் புலியாம் எனல்.

(சொ - ள்.) *தாயானும் தந்தையாலானும் மிகவு இன்றி வாயின் மீக்கூறும் அவர்களை - பெற்ற தாயாலேயாயினும் (அன் றித்) தந்தையாலேயாயினும் மிகுத்துக் கூறப்படுதல் இல்லாது தாமே தம் வாயால் உயர்த்திக் கூறிக்கொளபவர்களை, ஏத்துதல்- பிறர் புகழ்ந்து கூறுதல், நோய் இன்று எனினும்- துன்பம் இல்லை யாயினும், அடுப்பின் கடை முடங்கும் நாயைப் புலியாம் எனல் - அடுப்பின் பக்கலில் முடங்கியிருக்கும் நாயைப் புலி யென்று கூறுதலோ டொக்கும்.*

(க - து.) *தற்புகழ்ச்சி உடையாரைப் புகழ்தல் கூடாது.*

(வி - ம்.) தம் மக்கள் செய்த தீசெயல்களை மறைத்து உயர்வாகக் கூறும் இயல்புடையார் தம் தாய் தந்தையராகலான், "தாயானும் தந்தையாலானும்" எனக் கூறப்பட்டது. அவர்களிடமும் உயர்வு பெறார் எனவே, கொடியார் என்பது பெறப்படும். அறிவிலார் இல்லாதன கூறிப் புகழ்ந்துகொளளலின் அவரைப் புகழ்வதற்கு அவர்க்குள்ளனவற்றை வருந்தி ஆராய்ந்து கூறுதல் வேண்டா; இல்லாதன கூறினும் ஏற்றுக்கொள்வர் என்பார், "ஏத்துதல் நோயின்று" என்றார் நாய் என்பது இகழ்ச்சிக் குறிப்பு "அடுப்பின் கடைமுடங்கும் நாயைப் புலியாம எனல்" என்பது பழமொழி. (௩)

68. பல்கிளையுள் பார்த்துறுன் ஆகி ஒருவனை
நல்குரவால் வேறுக நன்குணரான்—சொல்லின்
உரையுள் வளவியசொல் சொல்லா அதுபோல்
நிரையுள்ளே இன்னு வரைவு.

(சொ - ள்.) பல்கிளையுள் பார்த்துறுன் ஆகி-நெருங்கிய பல சுற்றத்தார் நடுவே ஆராய்ந்தறிதல் இல்லாதவனுகி, ஒருவனை நல்குரவால் வேறுக நன்கு உணரான் சொல்லின்-தமது கிளையுள் ஒருவனை அவனது வறுமை காரணமாக வேறுபட நினைந்து நன்றாக ஆராய்தலில்லாதவனுக ஒன்றைக் கூறின், உரையுள் வளவிய சொல் சொல்லாததுபோல் - சொற்களுள் நல்ல சொறகளைச் சொல்லாதவனுக ஆதல்போல, நிரையுள்ளே இன்னுவரைவு-பத்தியாய்க் குழுமியிருந்த கூட்டத்தில் ஒருவனை வரைந்து சிறப்புச் செய்தலும் இன்னுது.

(க - து.) கூட்டததில் ஒருவனை இழித்துப் பேசுதலும் ஒருவனை உயர்த்திப் பேசுதலும் தீதாம்.

(வி - ம்.) கூட்டத்துள் ஒருவனை வறுமை காரணமாக இழித்துக் கூறுதலும் ஆகாது; ஒருவனை உயர்த்திக் கூறிச் சிறப்புச செய்தலும் ஆகாது. பொருள் இரண்டனுள் ஒன்று உவமையாகவும் மற்றொன்று பொருளாகவும் நின்றன.

"நிரையுள்ளே இன்னு வரைவு" என்பது பழமொழி. (௪)

10. சான்றோரியல்பு

69. நீ(று)ஆர்ந்தும் ஒட்டா நிகரில் மணியேபோல்
வேறுகத் தோன்றும் விளக்கம் உடைத்தாகித்
தாறுப் படினும் தலைமகன் தன்னொளி
நூறு யிரவர்க்கு நேர்.

(சொ - ள்.) வேறாகத் தோன்றும் விளக்கம் உடைத்தாகி — சிறப்புப்படத் தோன்றும் ஒளியை யுடைததாய், நீறு ஆர்ந்தும் ஒட்டா நிகரில் மணியேபோல் - நீறிலே படிந்தாலும் ஒட்டாத ஒப்பற்ற இரததினத்தைப்போல், தாறுப்படினும் - தாற்றப்பட்டதாயினும, தலைமகன்தன் ஒளி - தலைமகனுடைய பெருமை, நூறு ஆயிரவர்க்கு நேர - நூறு ஆயிரவர்கட்கு ஒப்பாகும்.

(க - து.) அறிவுடையார் பெருமை மறைக்க மறைபடாது.

(வி - ம்.) ஒளியாவது தா னுளனாகிய காலத்து மிக்குத் தோன்றுத லுடைமை. புடைத்து ஆற்றிக் கழித்த பிறகும் அவர் பெருமை நூறு ஆயிரவர் ஒளிக்குச சமமாகும்.

"தலைமகன் தன்னொளி நூறாயிரவர்க்கு நேர்" என்பது பழமொழி. (க)

70. ஒற்கந்தாம் உற்ற இடத்தும் உயர்ந்தவர்
நிற்பவே நின்ற நிலையின்மேல்—வற்பத்தால்
தன்மேல் நலியும் பசிபெரி(து) ஆயினும்
புன்மேயா தாகும் புலி.

(சொ - ள்.) வற்பததால் — பஞ்சத்தால், புலி - புலியானது, தன்மேல் நலியும் பசி பெரிது ஆயினும் - தன்னிடத்து வருத்தும் பசி மிக்கு வருநதியதாலும், புல் மேயாது ஆகும - புல்லினை மேயா தொழியும், (அதுபோல) உயர்நதவர் - அறிஞாகள் ஒற்கம் தாம் உற்ற இடத்தும் - வறுமையைத் தாம் அடைந்த இடத்தும், நின்ற நிலையின்மேல் நிற்ப - தாம் முனபு இருந்த நிலையிலேயே நிற்பார்கள்.

(க - து.) பெரியோர் வறியராயினும் தம நிலையினின்றும் திறம்பார்.

(வி — ம்.) "இன்மை யென ஒரு பாவி மறுமையும், இம்மையு மின்றி வரும" எனபதால் வறுமையின் ஆற்றல பெறப்படுதலின், வறுமையுற்ற இடத்தும தம நிலையில் நிற்பார்கள் எனவே, வறுமையினது ஆறறலும், அதை வெல்லும் அறிவுடையார்களது ஆறறலும் பெறப்படும் அறிவுடையோர் தம் நிலையினின்றும் தாழ்ந்தவிடத்து மிக இழிவாகக் கருதப்படுவராதலின், "நினற நிலையின்மேல் நிற்ப" என்றார். நிலையாவது தாம் கொண்டொழுகும் ஒழுக்கம்.

"பசி பெரிது ஆயினும் புல் மேயாதாகும் புலி" என்பது பழமொழி. (உ)

71. மாடம் அழிந்தக்கால் மற்றும் எடுப்பதோர்
கூடம் மரத்திற்குத் துப்பாகும்—அஃதேபோல்
பீடிலாக் கண்ணும் பெரியோர் பெருந்தகையர்
ஈடில் லதற்கில்லை பாடு.

(சொ - ள்.) *மாடம் அழிந்தக்கால் - வீடு அழிந்தவிடத்து, மரம் - அதிலுள்ள மரங்கள், மற்றும் எடுப்பதோர் கூடத்திற்குத் துப்பு ஆகும் - பின்னையும் கட்டுவதான வீட்டிற்குப் பயன்படும். அஃதேபோல் - அதுபோலவே, பெரியோர் பீடு இலாக்கண்ணும் - அறிஞர்கள் செல்வம் அழிநத இடத்தும், பெருந்தகையர் - பெருந் தகைமையின்கண் வழுவார். (ஆகையால்), ஈடில்லதற்கு பாடு இல்லை - வலியில்லாததற்குப் பெருமையில்லை.*

(க - து.) *தமது செல்வம் அழிந்த இடத்தும் பெருந் தகைமையின்கணின்றும் வழுவார் பெரியோர்.*

(வி - ம்.) *மரத்திற்கு என்பதன் நான்கன் உருபைக் கூடம் என்பதனோடு கூட்டிக்கொள்க. பீடு - பெருமை. இதனைத் தருவது செல்வமாதலின் பீடு அதற்குப் பெயராயிற்று. வறுமை சான்றோர் பெருந்தகைமையை நீட்டி யளப்பதோர் கோல். பெரியோர் பெருந்தகைமையின்கணின்றும் வழுவுதற்குக் காரணம் ஒன்றுண்டாயின், அது வறுமையாகத்தான் இருககவேண்டும். இதுபற்றியேதான் "பீடிலாககண்ணும்" என்று இறுதிநிலையாக வைத்துக் கூறப்பட்டது. மரங்கள், மாடம் அழிந்த இடத்து வேறு ஒன்றற்குப் பயன்பட்டுத் தன் பெருமை குறையாதவாறு போலப் பெரியோர் செல்வம் சிறுகிய இடததும் பெருந்தன்மையினின்றும் வழுவுதலிலர். இங்ஙனமாயின், வலியில்லாததற்குப் பெருமை இல்லை என்பதாம. நற்குணங்கட்கெல்லாம் இடனாதல் பறறி "பெருந்தகையர்" என்றார்.*

"ஈடில்லதற்குப் பாடில்லை" என்பது பழமொழி. (௩)

72. இணரோங்கி வந்தாரைஎன் உற்றக் கண்ணும்
உணர்பவர் அஃதே உணர்ப—உணர்வார்க்(கு)
அணிமலை நாட ! அளறுடிக் கண்ணும்
மணிமணி யாகி விடும்.

(சொ - ள்.) *அணிமலை நாட - பத்தியாக இருக்கின்ற மலைகளையுடைய நாடனே!, உணர்வார்க்கு - இரத்தினத்தின் தன்மை அறியும் ஆற்றலுடையார்க்கு, மணி அளறு ஆடிக்கண்ணும் -*

இரத்தினம் சேற்றிலே கிடந்து மாசுண்ட இடத்தும், மணியாகி விடும் - இரத்தினமாகவே தோன்றும். (அதுபோல) இணர் ஓங்கி வந்தாரை - கொத்துக்களைப்போன்று சூழலுடையராய் உயர்ந்த குடியின்கண் விளக்கமுற்று வந்தவர்களை, என் உற்ற கண்ணும் - எத்தகைய துன்பம் அவர்களைப் பீடித்த இடத்தும், உணர்பவர் - ஆராயும் அறிவினர், அஃதே உணர்ப-உயர்ந்த குடியிலுள்ளார்களாகவே மதிப்பா.

(க - து.) அறிவுடையோர் உயர்குடிப் பிறந்தார் வறுமை முதலிய எய்தியக்கண்ணும அவை நோக்காது உயர்வாகவே மதிப்பர்.

(வி - ம்.) ஆடிய என்பது ஆடி என ஈறுதொகுத்தலாயிற்று. இணர் ஓங்கி வந்தார் என்பது உயர்குடிப் பிறந்தார் என்பதை உணர்த்துவது.

"அளறுடிக்கண்ணும் மணிமணியாகி விடும்" என்பது பழமொழி. (௨)

73. கற்றதொன் றின்றி விடினும் குடிப்பிறந்தார்
மற்றொன் றறிவாரின் மாணமிக நல்லால்
பொற்ப உரைப்பான் புகவேண்டா கொற்சேரித்
துன்னூசி விற்பவர் இல்.

(சொ - ள்.) கற்றது ஒன்று இன்றி விடினும் - கற்றது ஒன்றில்லையாயினும், குடிப்பிறந்தார் - நற்குடிப்பிறந்தார், மற்று ஒன்று அறிவாரின் - ஒன்றைமட்டும் அறிந்தாரைவிட, மாண - நற்குணங்களில் மாட்சிமைப்பட, மிக நல்லர் - மிகச் சிறந்தோர்களே யாவார்கள். பொற்ப உரைப்பான் புகவேண்டா - கற்றோர் அவர்களிடம் நற்குணங்களை அழகுபட விரித்துரைக்கப் புகவேண்டுவதில்லை. கொல்சேரி துன் ஊசி விற்பவர் இல் - கருமாருடைய சேரியில் தையல் ஊசியை விற்கப் புகுவார் இல்லையாதலால்.

(க – து.) உயர்குடிப் பிறப்பின்றிக் கல்வி ஒன்றே உடையாரைவிட உயர்குடிப்பிறந்தார் சாலச் சிறந்தவர்களே யாவார்கள்

(வி – ம்.) உயர்குடிப் பிறந்தாரிடம் நற்குணங்கள் இயல்பாகவே உள்ளன. கற்றாரிடம் இயல்பாகவே நற்குணங்கள் மந்திருத்தல் மிகவும் அரிது, இல்லை என்றுகூடக் கூறலாம். கயாற்றான், "குடிப்பிறந்தார் மற்றொருன் றறிவாரின் மாண மிக

நல்லர்" என்று கூறப்பட்டது. "மாண்மிக" என்பதும் "மாண் மிக்க" என்பதும் பாடம்.

"கொற்சேரித் துன்னூசி விற்பவர் இல்" என்பது பழமொழி. (௬)

74. முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்
தொல்லை யளித்தாரைக் கேட்டறிதும்—சொல்லின்
நெறிமடற் பூந்தாழை நீடுநீர்ச் சேர்ப்ப!
அறிமடமும் சான்றோர்க் (கு) அணி

(சொ - ள்.) நெறி மடல் பூந்தாழை நீடு நீர் சேர்ப்ப—செறிந்த மடல்களையுடைய அழகிய தாழைகள் பொருந்திய கடல் நாடனே!, முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும் தொல்லை யளித்தாரை கேட்டறிதும் - காட்டிற் படர்ந்திருந்த முல்லைக் கொடிக்குத் தேரையும், வாடையால் வாடி நின்ற மயிலுக்குத் தனது போர்வையையும் முன்னாளில் கொடுத்தவர்களைக் கேள்வி வாயிலாக அறிந்தோம். சொல்லின்—ஆராய்ந்து சொல்லுமிடத்து, அறிமடமும் சான்றோர்க்கு அணி - அறிமடமும் சான்றோர்க்கு அழகேயாம்

(க - து.) அறிந்தும் அறியாது போன்று செயல்களைச் செய்தல் சான்றோர்க்கு அழகினைத் தருவதாம்.

(வி - ம்.) அறிமடம் – அறிந்தும் அறியாது போன்று இருத்தல். முல்லைக்குத் தேரீந்தான் பாரி. மயிலுக்குப் போர்வை யீந்தான் பேகன். இவர்கள் காட்டிற் படர்ந்த முல்லைக்கும், வாடையால் மெலிந்த மயிலுக்கும் வேறு பொருள்களைக்கொண்டு அவைகளின் இடரை நீக்க அறிவாராயினும், அறியாதவர்களை போன்று உயர்வுடைய தம் பொருள்களைக் கொடுத்துச் சேறலின் அறிமடமாயிற்று. அறியாதவர்கள் போன்று கொடுத்துச் சேறலின் அவர்கள் செயல்களால் புகழ் என்றும் நிலைபெற்று நிற்றலால், சான்றோர்க்கு அணி எனப்பட்டது. நீடுநீர் - மிக்க நீரையுடைமையின் கடலுக்காயிற்று.

"அறிமடமும் சான்றோர்க்கு அணி" என்பது பழமொழி. (௭)

75. *பல்லார் அவைநடுவண் பாற்பட்ட சான்றவர்
சொல்லார் ஒருவரையும் உள்ளூன்றப்—பல்லா
நிரைப்புறங் காத்த நெடியோனே யாயினும்
உரைத்தால் உரைபெறுதல் உண்டு.

---

*மூன்றாம் அடி "யானும்" என இருப்பின் தளை வழு நீங்கும்

(சொ - ள்.) பல் ஆநிரை புறங்காத்த நெடியோனே யாயினும் — பலவாகிய பசுக்கூட்டங்களைக் காத்த நீண்ட வடிவெடுத்த திருமாலேயாயினும், உரைத்தால் - அவையில் ஒருவனை இகழ்ந்துரைத்தால், உரை பெறுதல் உண்டு-(தாமும் அவனால்)இகழ்ச்சியுரையை அடைதல் உண்டு. (ஆகையால்),பல்லார் அவைநடுவண்- நல்லோர் பலரும் கூடியிருக்கும் அவையின் இடையே, பால்பட்ட சான்றவர் — நன்னெறிப்பட்டு ஒழுகும் சான்றோர், ஒருவரையும் உள் ஊன்ற சொல்லார்-எவரையும் மனம் உளையும்படி இகழ்ந்து கூறார்.

(க - து.) சான்றோர் அவைநடுவே, யாரையும் இகழ்ந்து கூறார்.

(வி — ம்.) "நிரைப்புறங் காத்த நெடியோனே யாயினும்" என்று உயர்த்துக் கூறுதலால், இந்நூலாசிரியர் திருமாலிடம் அன்புடையார் என்பது பெறப்படும். "ஆவிற்கு அரும்பனி தாங்கிய மாலையும்'' என்பதும் இக்கருத்தை வலியுறுத்துகிறது.

"உரைத்தால் உரைபெறுதல் உண்டு" என்பது பழமொழி.

76. எனக்குத் தகவன்றால் என்பதே நோக்கித்
தனக்குக் கரியாவான் தானாய்த்—தவற்றை
நினைத்துத்தன் கைகுறைத்தான் தென்னவனும் காணார்
எனச்செய்யார் மாணா வினை.

(சொ - ள்.) தென்னவனும் - பாண்டியனும், எனக்கு தகவு அன்று என்பதே நோக்கி - எனக்குத் தகுதியன்று என்பதனை ஆராய்ந்து அறிந்து, தனக்கு கரியாவான் தானாய் - தனக்குச் சான்றாவான் தானேயாய் நின்று, தவற்றை நினைத்து-கதவையிடித்த குற்றத்தை நினைத்து, தன் கை குறைத்தான் - தனது கையை வெட்டி வீழ்த்தினான், (ஆகையால்) காணார் என செய்யார் மாணா வினை - அறிவுடையோர் பிறர் காண்டலிலர் என்பது கருதிச் செய்தலிலா மாட்சிமைப்படாத செயலை.

(க - து.) அறிவுடையோர் பிறர் காணாமை கருதித் தீய செயல்களைச் செய்யார்.

(வி - ம்.) "எனக்குத் தகவு அன்றால்" என்றது பிறர் குற்றங்காணின் ஒறுக்கும் இயல்பையுடைய தான் தன்குற்றம் கண்டவிடத்து ஒறுக்காதிருத்தல் தகுதியன்று என்பதனை நினைத்து என்றவாறு. தவறாவது கதவையிடித்த குற்றம். அஃதாவது, கீரந்தையின் ஐயம் நீங்குதற்பொருட்டு ஒவ்வொரு வீடுகளின் கதவினையும் இடித்தமை. இதுவன்றிக் கீரந்தை மனை

விையைத் தனியிடத்தே பிடித்த குற்றத்தை நினைந்து குறைத்தான் என்று பழைய பொழிப்புரை கூறும். அதற்குச் சான்று ஒன்று மில்லை. "தீமை செய்தாய்போல் செங்கை குறைத்தாய்" என்ற ஒன்றே தீமை செய்திலன் என்பதற்குப் போதிய சான்றாம்.

"காணார் எனச செய்யார் மாணா வினை" என்பது பழமொழி. (அ)

77. தீப்பால் வினையினைத் தீரவும் அஞ்சாராய்க்
காப்பாரே போன்றுரைத்த பொய்குறளை-ஏய்ப்பார்முன்
சொல்லோ(டு) ஒருப்படார் சோர்வின்றி மாறுபவே
வில்லோடு காக்கையே போன்று.

(சொ - ள்.) தீபால் வினையினை தீரவும் அஞ்சாராய் - கொடிய செயல்களின்பாற்பட்ட வினைகளுக்கு மிகவும் அஞ்சாதவாசளாய், காப்பாரே போன்று உரைதத - தம்மைக் காப்பாற்றுகின்றவர்களைப்போல் கூறிய, பொய் குறளை ஏய்ப்பார்முன் - பொய்யாலும் குறளையாலும் தம்மை ஏமாற்றுகின்றவர்கள் முன்பு, சொல்லோடு ஒருப்படார் - அவர் கூறிய இனிய சொற்களுக்கு இணங்காதவர்களாய், வில்லோடு காக்கையே போன்று - வில்லைவிட்டு நீங்கும் காக்கையைப்போல, சோர்வு இன்றி மாறுப- தளர்ச்சியின்றி விட்டு நீங்குவார்கள்.

(க - து.) தீயார் சொற்களைக் கேட்டவுடனேயே அவர்களை விட்டு நீங்குவர் நல்லோர்.

(வி - ம்.) குறளை என்பது கோட்சொல். வில் என்றது சிறுவர்கள் மண் உருண்டைகொண்டு எய்யும் வில். ஒருமுறை அதன் கொடுமை யறிந்தவுடன் காக்கை பறந்துபோதல்போல், அறிவிலார் சொற்களைக் கேட்டதும் உடனே விட்டு நீங்குவர் அறிவுடையோர்.

"வில்லோடு காக்கையே போன்று" என்பது பழமொழி. (க)

78. மடங்கிப் பசிப்பினும் மாண்புடை யாளர்
தொடங்கிப் பிறருடைமை மேவார்—குடம்பை
மடலொடு புட்கலாம் மால்கடல் சேர்ப்ப!
கடலொடு காட்(டு) ஒட்டல் இல்.

(சொ - ள்.) குடம்பை மடலொடு புள்கலாம் மால்கடல் சேர்ப்ப - கூடு பொருந்திய மடல்களோடு பறவைகள் விரவாநின்ற பெரிய கடலையுடைய நெய்தல்நிலத் தலைவனே!, கடலோடு

காடு ஒட்டல் இல் - கடலோடு துரும்பு பொருந்துதல் இல்லை. (அதுபோல), மடங்கி பசிப்பினும் - (தமது உடம்பு) ஒடுங்கும்படி பசித்தாராயினும், மாண்புடையாளர் - மாட்சிமை உடையார், பிறர் உடைமை தொடங்கி மேவார் - பிறர் பொருளைத் தாம் கொள்ளத் தொடங்க விரும்பார்.

(க - து.) பெரியோர் பிறர் பொருளை விரும்பார்.

(வி - ம்.) தொடங்கி செய வென் எசசப்பொருண்மையது. பசிப்பினும் என்பது தாங்கமுடியாத இறுதிநிலை. கடல் துரும்பினைத் தன்னோடு கொள்ளாது ஒதுக்குதல்போல் பெரியோர் பிறர் பொருளை விரும்பாது நீக்குவார்கள்.

"கடலொடு காட்டு ஒட்ட வில்" என்பது பழமொழி. (௭0)

79. நிரைதொடி தாங்கிய நீடோள் மாற்கேயும்
உரையொழியா வாகும் உயர்ந்தோர்கட் குற்றம்
மரையாகன்(று) ஊட்டும் மலைநாட! மாயா
நரையான் புறத்திட்ட சூடு.

(சொ - ள்.) மரையா கன்று ஊட்டும் மலைநாட - பெண் மான் தனது கன்றிற்குப் பால் அளிக்கும் மலைநாடனே!, நிரை தொடி தாஙகிய நீள்தோள் மாற்கு - வரிசையாகத் தோள் வலயத்தைத் தாங்கிய நீண்ட தோளையுடைய திருமாலுக்கு, எயும் உரை ஒழியா ஆகும் - பொருந்தியிருக்கும் குற்றங்கள் ஒருநாளும் விட்டு நீஙகா. (ஆதலால்), உயாநதோர்கண் குற்றம் - எல்லாவகையினுமுயர்ந்தாரிடத்துள்ள குற்றம், நரைஆன் புறத்திட்ட சூடு - வெண்மையாகிய மாட்டின்மேல் இட்ட சூடுபோல், மாயா - ஒருநாளும் மறையா.

(க - து.) பெரியோர் செய்த குற்றம் மறையாது.

(வி - ம்.) வெண்மையான மாட்டின்மேல் இட்ட சூட்டினை அவ்வெண்மை நிறம் எடுத்துக்காட்டுதல்போல, அறிவுடையார் செய்த குற்றங்களையும் அவரறிவுடைமையே விளக்கிக் காட்டும். ஆகவே, அவை மறைதலொழிந்து பிறர்க்கு விளங்கித் தோன்றும் என்பதாம்

"நரையான் புறத்திட்ட சூடு" என்பது பழமொழி. (௭௧)

80. கன்றி முதிர்ந்த கழியப்பன் றுள்செயினும்
ஒன்றும் சிறியார்கண் என்றுனும்—தோன்றதாம்
ஒன்றுய் விடினும் உயர்ந்தார்ப் படுங்குற்றம்
குன்றின்மேல் இட்ட விளக்கு.

(சொ - ள்.) கன்றி முதிர்ந்த கழிய பன்னூன் செயினும் - வெகுண்டு அளவுகடந்த தீயசெயல்களை மிகப்பல நாட்கள் செயதாராயினும், ஒன்றும் சிறியார்கண் என்றானும் தோன்றா தாம - அவற்றுள் ஒரு குற்றமும் சிறியாரிடத்து எப்பொழுதாயி னும் தோன்றுதல் இல்லை, உயர்ந்தார் படும் குற்றம் ஒன்றாய் விடினும் - உயர்ந்தோரிடத்துளதாகிய குற்றம் ஒன்றாக இருப் பினும், குன்றின்மேல் இட்ட விளக்கு - மலையின்மீது வைத்த விளக்கினைப்போல் என்றும் விளங்கித் தோன்றும்.

(க - து.) பெரியோர்கள் செய்த குற்றம் நன்றாக விளங்கித் தோன்றும்.

(வி - ம்) உயர்ந்தார் இயல்பாகவே தீங்கு செய்தல் இலர் என்பார், "உயர்ந்தார்ப் படுங் குற்றம்" என்றார். தன்மேல் உள்ள விளக்கைப் பலருக்கும் காட்டுதல குன்றேயாதல்போல, பெரி யோர்களிடத்துள்ள தீமையை விளக்கிக் காட்டுவது அவர்களது நற்குணமே யாகும். சிறியார் நன்மை செய்யாராதலின் அவா தீமை தெரிய வரா தென்பதாம்; அவர் என்றும் நன்மை செய்தல் இலராகலின், அவர் தீமை என்றும் தோன்றுதல் இல்லை. தீயார் தீமை தோன்றுதல்கூட இல்லை. பெரியார் தீமை விளங்கித் தோன்றும். "என்றானும் தோன்றாதாம்" என்றமையால் எப் பொழுதும் விளங்கித் தோன்றும் என்பது கொள்ளப்படும்.

"குடிப்பிறந்தார்கண் விளங்கும் குற்றம் விசும்பின் மதிக் கண் மறுப்போல் உயர்ந்து" என்பது இககருத்துப்பற்றி எழுந்தது.

"குன்றின்மேல் இட்ட விளக்கு" என்பது பழமொழி. (௮௰)

11. சான்றோர் செய்கை

81\. ஈட்டிய ஒண்பொருள் இன்றெனினும் ஒப்புர(வு)
ஆற்றும் மனைப்பிறந்த சான்றவன் — ஆற்றவும்
போற்றப் படாதாகிப் புல்லின்றி மேயினும்
ஏற்றுக்கன்(று) ஏறாய் விடும்.

(சொ - ள்.) ஏற்றுக் கன்று-நல்ல எருதிற்குப் பிறந்த ஆண் கன்று, ஆற்றவும் போற்றப்படாதாகி - மிகவும் பாதுகாக்கப் படாததாய், புல்லின்றி மேயினும் - பசும் புற்கள் இன்றி யாதா னும் ஒன்றை மேய்ந்தாலும், ஏறு ஆய்விடும் - பின்னர் எருதாக ஆகிவிடும்; (அதுபோல) மனை பிறந்த சான்றவன் - நல்ல குடி

பின்கட் பிறந்த அறிவுடையோன், ஈட்டிய ஒண்பொருள் இன்று எனினும்-தான் தேடிய மிக்க செல்வம் இல்லையாயினும், ஒப்பரவு ஆற்றும் - உலக நடையினை அறிந்து செய்யவல்லனும்.

(க - து.) நற்குடிப்பிறந்தார் செல்வம் சுருங்கிய காலத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்.

(வி - ம்.) ஒப்புரவு - உலக நடையினை அறிந்து செய்தல். ஏற்றுக் கன்று புல்லின்றி இருப்பினும் ஏறுய் விடுதல்போல, பொருள் இன்று எனினும் குடிப்பிறந்தார் குடிக்குரியதாகிய ஒப்புரவு செய்யாதிரார் என்பதாம்.

"ஈட்டிய ஒண்பொருள்" என்றமையால் தான் தேடிய பொருளைகொண்டே ஒப்புரவு செய்தல் வேண்டும் என்பது பெறப்படும். பிறர் ஈட்டிய பொருளைக்கொண்டு செய்யின், நன்மை அவர் மேலும் தீமை தன்மேலும் நிற்குமாதலின், தான் தேடிய பொருளைக் கொண்டே செய்யவேண்டும்.

"தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு, வேளாண்மை செய்தற் பொருட்டு" என்பதும் இக்கருத்துப் பற்றியதே.

"புல்லின்றி மேயினும் ஏற்றுக்கன்று ஏறுய்விடும்" என்பது பழமொழி. (க)

82. அடர்ந்து வறியராய் ஆற்றுத போழ்தும்
இடங்கண் டறிவாமென் றெண்ணி யிராஅர்
மடங்கொண்ட சாயல் மயிலன்னுய்! சான்ருேர்
கடங்கொண்டும் செய்வார் கடன்.

(சொ - ள்.) மடம் கொண்ட சாயல் மயிலன்னுய் - மடமாகிய குணத்தைக்கொண்ட சாயலில் மயில்போன்ற பெண்ணே!, சான்ருேர் கடம் கொண்டும் செய்வார் கடன் அறிவு - சான்றவர்கள் வேருெருவரிடத்தில் கடன் பெறுருயினும் செய்யவேண்டிய கடமைகளைச் செய்வார்கள்; (ஆகையால்), அடர்ந்து வறியராய் ஆற்றுத போழ்தும் - தொடர்ந்து வறுமையுடையராய் வருதலின் ஒப்புரவு செய்யமுடியாத இடத்தும், இடம் கண்டு அறிவாம் என்றெண்ணி இரார் - ஒப்புரவு செய்யும் காலம் வந்தால் அப்பொழுது செய்வோம் என்று நினையார்.

(க - து.) சான்ருேர் கடன்பெற்ருயினும் ஒப்புரவு செய்வார்கள்.

(வி - ம்.) கடன் கடம் என எதுகைநோக்கி வந்தது, "இடம் கண்டு அறிவோம் என்றெண்ணியிரார்" என்றமையால். செல்வம் வரும் என்று பலமுறை எதிர்பார்த்து ஏமாற்றமடைந்த வர்கள் என்பது பெறப்படுதலின், நெடுநாட்களாக வறுமையால் பீடிக்கப்பட்டிருந்தவர்கள் என்பதறியப்படும். "அடர்ந்து வறியராய்" என்பதன் பொருள் இது. தொடர்ந்து வறியராய் இல்லா தொழியின், செல்வம் பெற்றால் செய்வோம் என்ற கருத்துத் தோன்றுதாகும்.

"கடங்கொண்டும் செய்வார் கடன்" என்பது பழமொழி. (உ)

83. மொய்கொண் டெழுந்த அமரகத்து மாற்றார்வாய்ப்
பொய்கொண் டறைபோய்த் திரிபவர்க்(கு)
மையுண் டமர்ந்தகண் மாணிழாய்! சான்றவர்
கையுண்டும் கூறுவர் மெய்

(சொ - ள்.) மை உண்டு அமர்ந்த கண் மாண் இழாய் - மை பூசப்பெற்றுப் பொருந்தி இருக்கின்ற கண்களையும் மாட்சிமைப் பட்ட கலன்களையும் உடையாய், மொய்கொண்டு எழுந்த அமரகத்து - (தம்முட் பகைகொண்டு போர் செய்யும் பொருட்டுச் சேனைகள்) வீரத்தோடு நிற்கின்ற போரிடத்தில், மாற்றார்வாய் பொய்கொண்டு - பகைவர் கூறும் பொய்யான உரைகளைக் கேட்டு, அறைபோய் திரிபவர்க்கு - கீழறுக்கப்பட்டுத் திரிபவர்களுக்கு, என்கொலோ - மெய்யுரையால் என்ன பயனுண்டு? ஒரு பயனும் இல்லை. (ஆகையால்) சான்றவர் கை உண்டும் மெய் கூறுவர் - அறிவு நிறைந்தோர் பிறர் கைப்பொருளை உண்டா ராயினும் உண்மையே கூறுவார்கள்.

(க - து.) பெரியோர்கள் பிறர்கைப் பொருளை உண்டா ராயினும் உண்மையையே கூறுவார்கள்.

(வி - ம்.) அறைபோதல், கீழறுக்கப்படுதல் என்பன லஞ்சம் பெற்றுப் பகைவரை யடைதல் என்ற பொருளைக் கொடுப் பனவாம்.

"சான்றவர் கையுண்டும் கூறுவர் மெய்" என்பது பழமொழி. (ந)

84. ஆண்டீண் டெனவொன்றோ வேண்டா அடைந்தாரை
மாண்டிலார் என்றே மறைப்பக் கிடந்ததோ?
பூண்டாங் கிளமுலைப் பொற்றொடி! பூண்ட
பறையறையார் போயினார் இல்

(சொ - ள்.) பூண் தாங்கு இளமுலை பொற்றொடி—ஆபரணத்தைத் தாங்குகின்ற இளமையான தனங்களையும், பொன்னாலாகிய தொடியையும் உடையாய்!, பூண்ட பறை அறையார் போயினார் இல் - தம்மிடத்துள்ள பறையை அடிக்காது சென்றார் ஒருவரும் இலர்; (ஆகையால்), ஆண்டு ஈண்டு என ஒன்றோ—அங்கே குற்றம் செய்தார்; இங்கே குற்றம் செய்தார் எனக் கூறுதல் ஒரு காரணமாகுமோ ?, அடைந்தாரை வேண்டா - தம்மிடத்து நட்பாக அடைந்தவர்களை அங்ஙனங் கூறுதல் வேண்டா, மாணடிலார் என்றே மறைப்பக் கிடந்ததோ — மாட்சிமை உடையாரல்லர் என்று நட்பை விடுத்தற்குக் கிடந்ததொரு நீதி உண்டோ ? (பொறுத்து நட்பாகவே கொண்டு வேண்டுவன செய்க.)

(க - து.) நட்டார செய்த குற்றங் கருதி அவரை நீக்குதல் கூடாது.

(வி - ம்.) பறை பூண்டோர் தங்கடமை யென அறிந்து அறைந்து சேறல்போல, தம்மை அடைந்தாரைக் காப்பாற்றுதல் தங்கடனென அறிந்து காப்பாற்றுதல் வேண்டும்.

"பூண்டபறை யறையார் போயினார் இல்" என்பது பழமொழி. (ச)

85. பரியப் படுபவர் பண்பிலா ரேனும்
திரியப் பெறுபவோ சான்றோர்—விரிதிரைப்
பாரெறியும் முந்நீர்த் துறைவ ! கடனன்றே
ஊர்அறிய நட்டார்க்(கு) உறு.

(சொ - ள்.) விரிதிரை பார் எறியும் முந்நீர் துறைவ — அகன்ற அலைகள் பாரில் வீசும் கடற்றுறைவனே!, பரியப்படுபவர் பண்பிலாரேனும் - தம்மால் அன்பு செய்யப்படுபவர்கள் சிறந்த குணங்கள் உடையரல்லரேனும், சான்றோர் திரியப்பெறுபவோ— அறிவுடையோர் நன்மை செய்தலினின்றும் திரிவார்களோ (இல்லை) (ஆதலால்), ஊர் அறிய நட்டார்க்கு உறு கடனன்றோ— ஊரிலுள்ளோர் அறியத் தம்மோடு நட்புப் பூண்டவர்களுக்கு உணவு கொடுத்தல் கடமையல்லவா ?

(க - து.) நட்டார் குணமிலராயினும் சான்றோர் அவர்க்கு நன்மையே செய்வர்.

(வி - ம்.) மூன்று நீர்மையுடையது கடலாகலின், அதற்கு முந்நீர் எனப் பெயராயிற்று. அவை: ஆக்கல், அளித்தல், அழித்தல். ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர் என்ற மூன்று பகுதிப்

பட்ட நீரை உடைமையின் முந்நீர் எனப் பெயராயிற்று என்றும் கூறுவர்.

"கடனன்றோ ஊராறிய நட்டார்க்கு உணு" என்பது பழமொழி. (இ)

86. தெற்றப் பகைவர் இடர்ப்பாடு கண்டக்கால்
மற்றுங்கண் ணோடுவர் மேன்மக்கள்—தெற்ற
நவைக்கப் படுந்தன்மைத் தாயினும் சான்றோர்
அவைப்படின் சாவாது பாம்பு.

(சொ – ள்.) பாம்பு - பாம்பானது, தெற்ற நவைக்கப்படுந் தன்மைத்து ஆயினும் - தெளிவாகத் துயர்செய்யப்படும் தன்மையது ஆயினும், சான்றோர் அவை படின் சாவாது - அறிவுடையோர் கூட்டத்திற் சென்றால் இறவாது; (அதுபோல), மேன்மக்கள் – உயர்குடிப் பிறந்தோர், தெற்ற பகைவர் இடர்ப்பாடு கண்டக்கால் - தெளிவாக அறியப்பட்ட பகைவர்கள் அடையும் துன்பத்தினைக் கண்டால், மற்றும் கண்ணோடுவர் - தமக்குப் பல பிழைகளைச் செய்தவராயிருப்பினும் மீண்டும் அவரிடத்தில் கண்ணோட்டம் செலுத்துவர்.

(க – து.) சான்றோர் துன்பப்படுபவர் தம் பகைவராயினும் அத்துன்பத்தை நீக்க முயலுவர்.

(வி – ம்.) இங்ஙனங் கண்ணோட்டஞ் செலுத்துவது ஊராண்மை யெனப்படும். 'அஃதாவது, இலங்கையர் வேந்தன் போரிடைத் தன்றானை முழுதும்படத் தமியனாயகப்பட்டானது நிலைமை நோக்கி அயோத்திய ரிறை மேற்செல்லாது "இன்று போய் நாளை வா", வென விட்டாற்போல்வது' என்பர் பரிமேலழகர்.

"சான்றோர் அவைப்படின் சாவாது பாம்பு" என்பது பழமொழி. (கூ)

87. இறப்ப எமக்கீ(து) இழிவரவென் றெண்ணார்
பிறப்பிற் சிறியாரைச் சென்று—பிறப்பினால்
சாலவு மிக்கவர் சார்ந்தடைந்து வாழ்பவே
தால வடைக்கலமே போன்று.

(சொ – ள்.) பிறப்பினால் சாலவும் மிக்கவர் - குடிப்பிறப்பினால் மிகவும் உயர்ந்தவர்கள், சென்று - போய், பிறப்பிற்

சிறியாரைச் சார்ந்து அடைந்து - குடிப்பிறப்பினால் இழிந்தவர்களைச சார்பாகப் பெற்று, எமக்கு ஈது இறப்ப இழிவரவு என்று எண்ணார் - எமக்கு இங்ஙனம் வாழ்தல் மிகவும் இழிவைத்தரும் என்று நினையாராய், தால அடைக்கலமே போன்று வாழ்ப - ஒருவரிடம் வைக்கப்பெற்ற நிலமாகிய அடைக்கலப் பொருளைப் போல் பெருமையின்றி வாழ்வார்கள்.

(க - து.) உயர்குடிப் பிறந்தோர் சில காரணங்களை முன்னிட்டு இழிந்த குடியில பிறந்தாரது சார்பு பெற்று ஒளியின்றி வாழ்வார்கள்.

(வி - ம்.) உடையானிடத்தில் வளம்பெற்றிருந்த நிலம் வேறொருவனிடம் வைக்கப்பட்ட இடத்து அஃதின்றி இருத்தல் போல, உயர்குடிப் பிறந்தோர் பெருமை இழந்து வாழ்வார்கள். சிறந்த நலன்களைக் கருதி அவரிடம் வாழ்தலின் இழிவாகக் கருதார்.

"தால அடைக்கலமே போன்று" என்பது பழமொழி. (எ)

88. பெரிய குடிப்பிறந் தாரும் தமக்குச்
சிறியார் இனமாய் ஒழுகுதல்—எறியிலை
வேலொடு நேரொக்கும் கண்ணாய்! அஃதன்றோ
பூவொடு நாரியைக்கு மாறு.

(சொ - ள்.) எறிஇலை வேலொடு நேர் ஒக்கும் கண்ணாய் - ஒளி வீசுகின்ற இலைவடிவாகச செய்யப்பட்ட வேலொடு நேராக ஒத்த கண்ணையுடையாய்[1], பெரிய குடிப்பிறந்தாரும் - உயர்ந்த குடியிற் பிறந்தவர்களும், தமக்குச சிறியார் இனமாய் ஒழுகுதல் - கீழ்மக்களைத் தமக்கு இனமாகக கொண்டொழுகுதல், அஃது - அச்செய்கை, பூவொடு நார் இயைக்கும் ஆறு அன்றோ - பூவோடு நாரைச சேர்க்கும் நெறியல்லவா?

(க - து.) பெரியார் சிறியாரோடு ஒழுகுதல் பூமாலையைப் போல் அழகினைத் தருவதாம்.

(வி - ம்.) பூவினால் நாரும் மணம்பெறுதல்போல, பெரியோரால் சிறியோரும் நற்குணம் பெறுவர். சிறியார் இனமாய் ஒழுகுதல் அவர்களை நன்னெறியில் நிறுத்தற்பொருட்டேயாகும்.

"பூவொடு நார் இயைக்குமாறு" என்பது பழமொழி. (அ)

89. சிறியவர் எய்திய செல்வத்தின் மாணப்
பெரியவர் நல்குரவு நன்றே—தெரியின்
மதுமயங்கு பூங்கோதை மாணிழாய்! மோரின்
முதுநெய்தீ(து) ஆகலோ இல்.

(சொ - ள்.) *மது மயங்கு பூ கோதை மாணிழாய் — தேன் மிகுந்த அழகிய மாலையையும் மாட்சிமைப்பட்ட கலன்களையு முடையாய்!, தெரியின் - ஆராய்ந்தால், மோரின் முதுநெய் தீது ஆகலோ இல் - புதிய மோரினைவிடப் பழைய நெய் தீது ஆவதில்லை. (நன்மையே பயக்கும்), சிறியவர் எய்திய செல்வத்தின் - அறிவிற் சிறியார் பெற்ற செல்வத்தைவிட, பெரியவர் நல்குரவு மாண நன்றே - அறிவுடையோர் எய்திய வறுமை மாட்சிமைப்பட நல்லதே யாகும்.*

(க - து.) *அறிவிலார் பெற்ற செல்வத்தைவிட அறிவுடையோர் பெற்ற வறுமையே மிகச் சிறந்தது.*

(வி – ம்) *மோர் புதிதாயினும் நெய் பழையதாயினும் மோரைவிட நெய்யில் மிகக பயனுண்டு. அதுபோல, சிறியவர் எய்தியது செல்வமேயாயினும், பெரியவர் எய்தியது நல்குரவே யாயினும், அவர் செல்வத்தைவிட இவர் வறுமையே மிக நல்லது. சிறியார் செல்வம் தன்னையும் பிறரையும் கெடுத்தலானும், பெரியார் வறுமை அவையின்றி சிறத்தலானும், அவர் செல்வத்தினும் இவர் நல்குரவு சிறந்ததெனப்பட்டது. மாறாக மேல் செல்வம், நல்குரவு என்றலின், முதுநெய் என்றதற்குப் புதிய மோர் கொள்ளப்பட்டது.*

"மோரின் முதுநெய் தீது ஆகலோ இல்" என்பது பழமொழி. (௯)

12. கீழ்மக்கள இயல்பு

90. மிக்குப் பெருகி மிகுபுனல் பாய்ந்தாலும்
உப்பொழிதல் செல்லா ஒலிகடல்போல்—மிக்க
இனநலம் நன்குடைய வாயினும் என்றும்
மனநலம் ஆகாவாம் கீழ்.

(சொ - ள்.) *மிக்கு பெருகு மிகு புனல் பாய்ந்தாலும்—மிகப் பெருகி நன்மை மிகுதலான நன்னீர் கடலில் வீழ்ந்தாலும், உப்பு ஒழிதல் சொல்லா ஒலி கடல்போல் - தன்னிடத்துள்ள உவர்ப்பு நீங்காத ஆரவாரிக்கும் கடலைப்போல், கீழ் - கீழ்மக்கள், மிக்க*

இனநலம் நன்கு உடைய ஆயினும் - மிகவும் நல்லோரினத்தோடு சேர்ந்து வாழும் நன்மையை நன்றாகப் பெற்றிருந்தாலும், என்றும் மனநலம் ஆகாவாம் - எப்பொழுதும் மனத்தின்கண் தூய்மை பெறுதல் இலர்.

(க - து.) கீழ்மக்கள் பெரியார் இணக்கம் பெற்றிருப்பினும் மனசெம்மை அடையார்.

(வி - ம்.) கடல் தன்னிடத்து வந்த நன்னீரை உவர்ப்பாக்குதல்போல், கீழ்மக்கள் தம்முடன் இருக்கும் பெரியோர்களைத் தம்மைப்போல் ஆக்குவர். "ஒலிகடல்" என்றமையால் நல்லோராது இணக்கம் பெற்ற நாம் அவர்வழி ஒழுகாது நம் வழியில் அவரை ஒழுகச்செய்தோம் என்ற மகிழ்ச்சியால் ஆரவாரிப்பார் என்பது பெறப்படும். "உப்புக்கடல்" என்றதற்கேற்ப "மிகு புனல்" நன்மை மிகுதலான நன்னீர் என்று கொள்ளப்பட்டது.

"இனநலம் நன்குடையவாயினும் என்றும் மனநலம் ஆகாவாம் கீழ்" என்பது பழமொழி. (௧)

91. தக்காரோ டொன்றித் தமராய் ஒழுகினும்
மிக்காரால் என்று சிறியாரைத் தாம்தேறார்
கொக்கார் வளவய லூர! தினலாமோ
அக்காரம் சேர்ந்த மணல்

(சொ - ள்.) கொக்குஆர் வளவயல் ஊர - மீன் உண்ணும் கொக்குகள் நிறைந்திருக்கின்ற நீர்வளம் பெற்ற வயல்களை உடைய மருதநிலத் தலைவனே!, அக்காரம் சேர்ந்த மணல் - சாக்கரையோடு கலந்திருக்கின்ற மணலை, தினலாமோ - சர்க்கரை யென்று கருதி உண்ணலாமோ; (அதுபோல்), தக்காரோடு ஒன்றி தமராய் ஒழுகினும் - தகுதி உடையாரோடு பொருந்தி அவர் உறவினரைப்போல் நெருங்கி ஒழுகினும், (ஆதலால்), மிக்கார் என்று - குணத்தினால் மிககவர் என்று, சிறியாரை - அறிவிற் சிறியாரை, தாம் தேறா - பெரியோர்கள் தெரிந்து நட்புக் கொள்ளார்.

(க - து.) சிறியார் பெரியாரோடு இணங்கியிருப்பினும் அவரோ டிணங்கார் அறிவுடையோர்.

(வி - ம்.) "வளவயல்" நீர்வளம் பொருந்தியதாகலின் அதற்கேற்பக் கொக்கு என்பதற்கு மீனுண்ணும் கொக்கு என்று கொள்ளப்பட்டது. சர்க்கரையோடு சேர்ந்த மணலைச் சர்க்கரை என்று கருதி உட்கொள்ளாதவாறுபோல அறிவுடையோர்

பெரியாரோடு இணக்கம் பெற்ற சிறியாரை அவரை ஒப்ப மதித்து நட்புப் பூணார்.

"தினலாமோ அக்காரம் சேர்ந்த மணல்" என்பது பழமொழி. (உ)

92. தந்தொழில் ஆற்றும் தகைமையார் செய்வன
வெந்தொழில ராய வெகுளிகட்குக் கூடுமோ ?
மைந்திறை கொண்ட மலைமார்ப! ஆகுமோ?
நந்துழுத எல்லாம் கணக்கு

(சொ - ள்.) *மைந்து இறைகொண்ட மலைமார்ப - வலிமை தங்கிய மலைபோன்ற மார்பையுடையாய்!, நந்து உழுத எல்லாம் கணக்கு ஆகுமோ - நத்தையாற் கீறப்பட்டன யாவும் எழுத்து ஆகுமோ? (ஆகா) (அதுபோல), தம்தொழில் ஆற்றும் தகைமையார் - தம்முடைய தொழில் திறமையுற நடாத்தும் தன்மையுடையார், செய்வன செய்கின்ற செயல்கள், வெம்தொழிலர் ஆய வெகுளிகட்குக் கூடுமோ - கொடுஞ்செயலை உடையாராகிய சின முடையவர்களுக்குச் செய்தல் இயலுமோ? (இயலாது).*

(க - து.) *மேன்மக்கள் செய்யும் காரியங்கள் கீழ்மக்களுக்குச் செய்ய இயலா.*

(வி - ம்.) *"தவம் செய்வார் தங்கருமம் செய்வார்" என்றபடி தந்தொழில் ஆற்றும் தகைமையார் தவத்தைச் செய்யும் துறவிகள் ஆவர். உடம்பிற்கு வருத்தம் வருமென்றொழியாது தவத்தினைச் செய்ய அநாதியாகத் துன்பம் எய்தி வருகின்ற உயிர் ஞானம் பிறந்து வீடுபெறுமாகலின் தவம் செய்தல் தம் தொழில் எனப்பட்டது.*

"ஆகுமோ நந்து உழுத எல்லாம் கணக்கு" என்பது பழமொழி. (ந)

93. பூத்தாலும் காயா மரமுள மூத்தாலும்
நன்கறியார் தாமும் நனியுளர்—பாத்தி
விதைத்தாலும் நாறாத வித்துள பேதைக்(கு)
உரைத்தாலும் தோன்றா துணர்வு.

(சொ - ள்.) *பூத்தாலும் காயா மரமுள - பூத்தவிடத்தும் காய்க்கப்பெறாத பாதிரி முதலாகிய மரங்கள் உள்ளன, மூத்தா*

64, Linghi Chetty St., MADRAS-1
TAMIL RESEARCH INSTITUTE

லும் - வயது முதிர்ந்தாலும், நன்கு அறியார் தாமும் நனி உளர் நல்ல நூல்களை அறியாதவர்கள் தாம் மிகுதியும் உளர், பாத்தி விதைத்தாலும் நாறாத வித்து உள - எருவிட்டு வரம்பு கட்டப் பட்ட பாத்தியில் விதையினை விதைத்தாலும் முளைக்காத விதை களும் உள. (அவைபோல), பேதைக்கு உரைத்தாலும் உணர்வு தோன்றாது - அறிவில்லாதவனுக்கு அறிவுரைகளை உரைப்பினும் உண்மை உணர்வு அவனுக்குத் தோன்றாது.

(க - து.) பேதைக்கு அறிவு ஊட்டுதல் இயலாது.

(வி - ம்.) பூத்தால் காய்க்கும் மரம் உள. மூத்தால் நன் கறிவார் உளர். விதைத்தால் முளைக்கும் விதை யுள. உரைத் தால் உணர்வுபெறும் பேதையர் உளர்.

"பேதைக்கு உரைத்தாலும் தோன்றா துணர்வு" என்பது பழமொழி. (௬)

94. ஓர்த்த கருத்தும் உணர்வும் உணராத
மூர்க்கர்க்கு யாதும் மொழியற்க—மூர்க்கன்றான்
கொண்டதே கொண்டு விடானாகும் ஆகாதே
உண்டது நீலம் பிறிது.

(சொ - ள்.) ஓர்த்த கருத்தும் - ஆராய்ந்துவைத்த கருத்தும், உணர்வும் - உண்மையை அறியும் அறிவும், உணராத மூர்க் கர்க்கு யாதும் மொழியற்க - அறியாத மூர்க்கர்களுக்கு ஒரு பொருளையும் சொல்லாதொழிக, நீலம் உண்டது பிறிது ஆகாது - நீல நிறத்தை உண்டபொருள் வேறொரு நிறத்தைக் காட்டுதல் முடியாது. (அதுபோல), மூர்க்கன் தான்கொண்டதே கொண்டு விடான் ஆகும் - மூர்க்கன் தான் மேற்கொண்டத னையே மனத்தின்கண் கொண்டு விடான்.

(க - து.) மூர்க்கர்கள் பிறர் கூறுவனவற்றைக் கேட்டுத் திருந்தார்.

(வி - ம்.) ஆராய்ந்த கருத்தும் ஆராயும் அறிவும் உடையார் அறிவுடையோராவர். பிறர் கூறுங்கால் அவர் கருத்தின் உண் மையையும் தங்கருத்தின் உண்மையையும் ஆராய்ந்து செம்மை உடையதனை மேற்கொள்ள வேண்டுதலின், உண்மையை ஆராயும் உணர்வு அறிவுடையோர்க்கு இன்றியமையாததாயிற்று. நீலம் உண்ட பொருள் தன்னை யடுத்த பொருளையும் நீலமாக்குதல் போல, மூர்க்கன் தான்கொண்ட தவறுடைய அப்பொருளையே பிறருக்கும் போதிக்க முற்படுவன்.

"ஆகாதே உண்டது நீலம் பிறிது" என்பது பழமொழி. (௭)

95. தெற்ற ஒருவரைத் தீதுரை கண்டக்கால்
இற்றே அவரைத் தெளியற்க—மற்றவர்
யாவரே யாயினும் நன்கொழுகார் கைக்குமே
தேவரே தின்னினும் வேம்பு

(சொ — ள்.) *தெற்ற ஒருவரை* – தெளிவாக நண்பு பூண்ட ஒருவரை, *தீதுரை கண்டக்கால்* - ஒருவர் பொல்லாங்குரைக்கும் உரையைக் கேட்டால், *இற்றே* - நம்மையும் இப்பெற்றியே உரைப்பார் என்று கருதி, *அவரை தெளியற்க* - அவரை நம்பா தொழிக, *தேவரே தின்னினும் வேம்பு கைக்கும்* - உண்பவர்கள் தேவர்களே யானாலும் வேம்பு கசக்குந் தன்மையது. (அதுபோல), *யாவரே யாயினும் நன்கு ஒழுகார்* - நட்புப் பூண்பவர்கள் மிகவும் சிறந்தவர்களாயினும் அவர்களோடு நன்றாக ஒழுகுதல் இலர்.

(க — து.) தீயவரை நட்பாகக் கொண்டு ஒழுகுதல் கூடாது.

(வி - ம்.) "யாவரே யாயினும் நன்கு ஒழுகார்" என்றமை யான் நட்புப் பூணுதற்குத் தகுதியற்றவா என்று விலக்கி வைத்தல் வேண்டும்.

"கைக்குமே தேவரே தின்னினும் வேம்பு" என்பது பழமொழி. (ரு)

96. காடுறை வாழ்க்கைக் கருவினை மாக்களை
நாடுறைய நல்கினும் நன்கொழுகார்—நாடொறும்
கையுள தாகி விடினும் குறும்பூழ்க்குச்
செய்யுள தாகு மனம்.

(சொ — ள்.) *நாள்தொறும் கை உள தாகிவிடினும்* - தினந் தோறும் கையின்கண் இருந்து வளர்ந்தாலும், *குறும்பூழ்க்கு* - காடைக்கு, *மனம் செய் உள தாகும்* – மனம் காட்டில் வசிப்பதி லேயே பொருந்தியிருக்கும். (அதுபோல), *காடு உறை வாழ்க்கை கருவினை மாக்களை* - காட்டின்கண் வசிக்கும் வாழ்க்கையால் கொடிய தொழில்களைச் செய்கின்ற விலங்கொப்பாரை, *நாடு உறைய நல்கினும் நன்கு ஒழுகார்* - நாட்டின்கண்ணே தங்கவிடி னும் நன்னெறியில் ஒழுகார்.

(க — து.) கீழ்மக்கள் என்ன செய்யினும் திருந்தப்பெறார்.

(வி — ம்.) இடங் காரணமாகத்தான் தீவினை செய்கின்றாரக ளெனின் காட்டின்கண் உள்ள காலத்தும் செய்கின்றது அதுவே

யாகலின் அஃதன்று. அவர்களுக்கு விதித்த விதி அஃதென் றுணர்ந்து திருத்துதலை ஒழிதல் வேண்டும்.

"கையுளதாகிவிடினும் குறும்பூழ்க்குச செய்யுளதாகும் மனம்" என்பது பழமொழி. (எ)

97. கருந்தொழில ராய கடையாயார் தம்மேல்
பெரும்பழி யேறுவ பேணார்—இரும்புன்னை
புன்புலால் தீர்க்கும் துறைவ! மற றஞ்சாதே
தின்ப தழுவதன் கண்.

(சொ - ள்.) இரு புன்னை புன்புலால் தீர்க்கும் துறைவ - பெரிய புன்னையது பூககள் புல்லிய புலால் நாற்றத்தைப் போக் கும் கடற்றுறையை உடையவனே!, தின்பது அழுவதன்கண் அஞ்சாது - உண்ண விரும்புவது உண்ணப்படும் பொருளின் துன்பத்தைக்கண்டு அஞ்சுவதில்லை (அதுபோல), கருந்தொழி லராய கடையாயார் - கொடிய தொழில்களைப் புரிவோராகிய கீழ் மக்கள், தம்மேல் பெரும்பழி யேறுவ பேணார் - தம்மீது மிக்க பழிசேறலைப் பொருட்படுத்தார்.

(க - து.) கீழ்மக்கள் பழிக்கு அஞ்சார்.

(வி - ம்.) புகழிற்கு வெண்மை நிறம் கூறுதல்போலத் தீமைக்கு இங்கே கருமை நிறம் கூறப்பட்டது. தீமையைத் தருந் தொழில் என்பது பொருள். அறத்திற்கும் வெண்மை நிறமே கூறுதல் மரபு.

"அஞ்சாதே தின்பது அழுவதன்கண்" என்பது பழ மொழி. (அ)

98. மிக்க பழிபெரிதும் செய்தக்கால் மீட்டதற்குத்
தக்க தறியார் தலைசிறத்தல்—எக்கர்
அடும்பலரும் சேர்ப்ப ! அகலுள்நீ ராலே
துடும்பல் எறிந்து விடல்

(சொ - ள்) எக்கர் அடும்பு அலரும் சேர்ப்ப - மணல் மேடு களில் அடும்பின பூக்கள் மலரும் கடல் நாடனே!, மிக்க பழி பெரிதும் செய்தக்கால் - மிகுதியான பழிசெயல்களை மிகவும செய்தால், அதற்குத் தக்கது அறியார் - அது தீர்த்தற்குத் தக்க தனை அறியாராய், மீட்டு தலைசிறத்தல் - மீண்டும் பழிக்குரிய அச் செயல்களிலே சிறந்து விளங்குதல், அகலுள் நீராலே - ஊரினரால்

கழிக்கப்பட்ட நீரில், துடும்பல் எறிந்து - ததும்புமாறு நீரை வாரி எறிந்து, விடல் - அதனால் மூழ்கிவிடுதலை ஒக்கும்.

(க - து.) செய்த பழியை நீக்க அறியாது பின்னும் அது செய்தல் ஊர்வாரி நீரிலே படிந்ததை ஒக்கும்.

(வி - ம்.) அகலுள் : ஒரு சொல்; ஊர் என்பது பொருள். துடும்புதல் என்பது துடும்பல் என விகாரம் பெற்றது. ததும்புதல் என்பது பொருள்.

"அகலுள் நீராலே துடும்பல் எறிந்துவிடல்" என்பது பழமொழி. (கூ)

99. மாணுப் பகைவரை மாறொறுக் கல்லாதார்
பேணா துரைக்கும் உரைகேட் டுவந்ததுபோல்
ஊணார்ந் துதவுவ(து) ஒன் றில்லெனினும் கள்ளினைக்
காணுக் களிக்கும் களி.

(சொ - ள்.) மாணுப் பகைவரை - மாட்சிமையில்லாத பகைவர்களை, மாறு ஒறுக்கல்லாதார்-எதிர்த்து நின்று தண்டிக்க முடியாதவர்கள், பேணாது உரைக்கும் உரைகேட்டு உவந்ததுபோல - தம் பகைவரைப் பொருட்படுத்தாது பிறர் இகழ்ந்து கூறும் சொற்களைக் கேட்டு மகிழ்ந்தவர்களைப் போன்று, ஊண் ஆர்ந்து உதவுவது ஒன்று இல் எனினும் - உணவாக உண்டு அதனால் அடையும் பயன் ஒரு சிறிதும் இல்லை யெனினும், கள்ளினைக் காணுக் களிக்கும் களி - கள்ளினைக்கண்ட அளவில் மகிழும் கீழ்மகன.

(க - து) கீழ்மகன் கள்ளினைக் கண்ட அளவிலேயே மகிழ்வு எய்துவான்.

(வி - ம்.) தம் பகைவரை ஒருவர் இகழ்ந்துரைக்கக் கேட்டால் தாம பெறலான நன்மை சிறிதும் இல்லையாயினும், அவரை வென்றதுபோல் நினைத்து மகிழ்தலபோல, கீழ்மகன கள்ளினைக கண்ட அளவில் அடையும் பயன் இல்லை யெனினும் அதனை உண்டதுபோல் நினைந்து மகிழ்சசி உறுவான். (கூ0)

100. உழந்ததூஉம் பேணா(து) ஒறுத்தமை கண்டும்
விழைந்தார்போல் தீயவை பின்னரும் செய்தல்
தழங்கண் முழவிரங்கும் தண்கடற் சேர்ப்ப!
முழங்குறைப்பச் சாணீளு மாறு

(சொ – ள்.) தழங்(கு) கண் முழவு இரங்கும் தண் கடல் சேர்ப்ப - ஒலிக்கின்ற கண்ணை உடைய முழவுபோல் ஆரவாரிக்கும் குளிர்ந்த கடல் நாடனே!, உழந்ததும் பேணாது ஒறுத்தமை கண்டும் - தம்மொடு வருந்திப் போந்த நட்பினையும் பாராது தண்டித்தமையை அறிந்திருந்தும், விழைந்தார்போல் தீயவை பின்னரும் செய்தல் – அவரிடத்து விருப்பமுடையார் போன்று தீய செயல்களைப் பின்பும் செய்தொழுகுதல், சாண் குறைப்ப – சாண் நீளமுள்ள தொன்றனைக் குறைக்க, முழம் நீளு மாறு - அது முழம் நீளமாக நீளுவது போலும்.

(க - து.) தீயவர்களைத் தண்டித்தாலும் பின்னரும் தீமையே செய்ய முறபடுவர்.

(வி – ம்.) "முழம் நீளுமாறு" என்றது முன்னினும் மிக்க தீமையையே புரிவார் என்பதைக் கருதி. "முழம் குறைப்பச் சாண் நீளுமாறு" என்பது "சுரை ஆழ அம்மி மிதப்ப" என்பதைப் போன்று மொழி மாற்றிப் பொருள்கொள்ள வேண்டுதலின், மொழிமாற்றுப் பொருள்கோள். தழங்குகண், தழங்கண் என வந்தது விகாரம். "உழந்ததும்" என்றது,

'அழிவி னவைநீக்கி ஆறுய்த்து அழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு'

என்றதைக் கருதி,

"முழங் குறைப்பச் சாண் நீளுமாறு" என்பது பழமொழி. (கக)

101. அல்லவை செய்ப அலப்பின் அலவாக்கால்
செல்வ(து) அறிகலர் ஆகிச் சிதைத்தெழுப
கல்லாக் கயவர் இயல்போல் நரியிற்கூண்
நல்யாண்டும் தீயாண்டும் இல்.

(சொ - ள்.) அலப்பின் அல்லவை செய்ப – (கீழ்மக்கள் வறுமையுற்ற இடத்து அது காரணமாகத் தீமையைச் செய்துண்பார்கள், அலவாக்கால் - செல்வம் உற்ற இடத்து, செல்வது அறிகலர் ஆகி சிதைத்து எழுப - செல்லும் நன்னெறியை அறியாதவர்களாகி அறத்தைக் கெடுத்து ஒழுகுவார், கல்லா கயவா இயல்போல் - கல்லாத கீழ் மக்களுக்கு நன்மை என்பதில்லாதது போல, நரியிற்கு ஊண் நல்யாண்டும் தீயாண்டும் இல் – நரியினுக்கு உணவு பெறுகின்ற நல்லகாலமும், பெறாத பஞ்ச காலமும் இல்லை.

(க - து.) *கல்வியறிவில்லாத கயவர்கள் எக்காலமும் தீமையையே புரிந்தொழுகுவார்கள்.*

(வி - ம்.) *கல்லாக் கயவர் இயல்போல் என்றாரேனும், நரியிற்கு ஊண் நல்யாண்டும் தீயாண்டும் இல்லாத இயல்போலும் கல்லாக் கயவர் இயல் என்பது பொருளாகக் கொள்க. நரிக்கு உணவுப்பஞ்சம் இல்லாததுபோல, கயவருக்குத் தீமை செய்வதில் பஞ்சமில்லையாம். கயவர் நற்குணங்கள் ஒருசிறிதும் இல்லாதவர்.*

"நரியிற்கு ஊண் நல்யாண்டும் தீயாண்டும் இல்" என்பது பழமொழி. (கஉ)

102. கூரறிவி னார்வாய்க் குணமுடைச்சொல் கொள்ளாது
காரறிவு கந்தாக் கடியன செய்வாரைப்
பேரறியார் ஆயின பேதைகள் யாருளரோ?
ஊரறியா மூரியோ இல்.

(சொ - ள்.) *ஊர் அறியா மூரியோ இல்-ஊரில் வாழ்பவர்களால் அறியப்படாத பொலிகாளை இல்லை, (அதுபோல) கூர் அறிவினார்வாய் குணம் உடை சொல் கொள்ளாது - உண்மை ஞானம் உடையார் வாயால் சொல்லும் நற்குணம் உடைய சொற்களை மனத்துட் கொள்ளாது, கார் அறிவு கந்து ஆ(க)-அஞ்ஞானத்தைப் பற்றுக்கோடாகக்கொண்டு, கடியன செய்வாரை - தீய செயல்களைச் செய்தொழுகுவோரை, பேர் அறியார் ஆயின பேதைகள் யாருளர் - அவரது பேரினை அறியாதவர்களாகிய அறிவிலிகள் யாவர் உலகத்துளர். (இல்லை.)*

(க - து.) *கயவர் எல்லோராலும் அறியப்படுவர்.*

(வி - ம்.) *மூரி என்றமையால் பேதைகளும் தம்மை அடக்குபவர்களும், விடுபவர்களுமின்றித் தம் விருப்பம்போல் நடப்பார்கள் என்பது பெறப்படும். அறிவுடையோரைப் பேதைகள் என்றது மூரிபோல்வாரின் பேதைமையைக் குறித்தல் வேண்டி. உலகத்தில் எங்கும் சென்று தமது தொழில்களை ஆற்றித் தமது புகழைப் பரவச் செய்திருத்தலான் யாருளர் என்றார். இவரும ஒருவகையால் உலகத்தாரால் அறியப்படுவார் என்பது.*

"ஊர் அறியா மூரியோ இல்" என்பது பழமொழி. (கந)

103. நிரந்து வழிவந்த நீசருள் எல்லாம்.
பரந்தொருவர் நாடுங்கால் பண்புடையார் தோன்றார்
மரம்பயில் சோலை மலைநாட! என்றும்
குரங்கினுள் நன்முகத்த இல்.

(சொ - ள்.) மரம் மயில் சோலை மலைநாட - மரங்கள் மிக்குச் செறிந்த சோலைகள் சூழ்ந்த மலைநாட்டிற்கு உரியவனே, குரங்கினுள் - குரங்கினங்களுள், நன்முகத்த - நல்ல முகத்தை உடையவை, இல் - இல்லை; (அதுபோல) நிரந்து வழிவந்த - பெருகி வழிவழியாகவந்த, நீசருள் எல்லாம் - தீயகுணமுடையா ரெல்லாருள்ளும், பரந்து - பெருக ஆராய்ந்து; ஒருவர் நாடுங் கால்-ஒருவரைத் தேறும்பொழுது, பண்புடையார் - நல்ல குண முடையார், தோன்றார் - காணப்படார்.

(க - து.) கீழ்மக்களுள் நல்லோர் காணப்படார்.

(வி - ம்.) இடையறாது கொடிய செயல்களையே புரிந்துவந்த குடியாதலின், அதனுள்தோன்றுவார்க்கும் அக்குணமே தோன்று மல்லது நற்குணந் தோன்றுவாதலின் "தோன்றார்" என்றார்.

"குரங்கினுள் நன்முகத்த இல்"என்பது பழமொழி. (கச)

104. ஊழாயி னாரைக் களைந்திட் டுதவாத
கீழாயி னாரைப் பெருக்குதல்—யாழ்போலும்
தீஞ்சொல் மழலையாய்! தேனார் பலாக்குறைத்துக்
காஞ்சிரை நட்டு விடல்.

(சொ - ள்.) யாழ்போலும் தீம்சொல் மழலையாய்-யாழிசை யைப்போன்ற இனிமையான மழலைச்சொல்லை உடையாய்! ஊழ் ஆயினாரைக களைந்திட்டு - முறைப்படியே தமக்கு நன்மை செய்வாரை நீக்கிவிட்டு, உதவாத கீழ் ஆயினாரைப் பெருககுதல் - பயன்படாத கீழ்மக்களைத் தம்மோடு மிகுதியும் சேர்த்தல், தேன் ஆர் பலா குறைத்து காஞ்சிரை நட்டுவிடல் - தேன் நிறைந்த பலாமரத்தை வெட்டி அவ்விடத்தில் எட்டி மரத்தை வைத்து நீர் முதலியன கொண்டு வளர்த்துவிடுதலோடொக்கும்.

(க - து.) கீழ்மக்களைத் தம்மோடு சேர்த்துக்கொள்ளுதல் துன்பத்திற் கேதுவாம்.

(வி - ம.) பயன்படும் பலாமரத்தைக் குறைத்து இறுதிதரும் எட்டிமரத்தை நட்டுவைப்பதுபோல் பயன்தரும் அறிவுடை யாரை நீக்கிக் கீழ்மக்களைப் பெருக்கிக் கொள்ளல் தனக்கு இறுதி பயக்கும்

"தேனார் பலாக் குறைத்துக் காஞ்சிரை நட்டுவிடல்" என் பது பழமொழி. (கரு)

105. பெரியார்க்குச் செய்யும் சிறப்பினைப் பேணிச்
சிறியார்க்குச் செய்து விடுதல்—பொறிவண்டு
பூமேல் இசைமுரலும் ஊர! அதுவன்றே
நாய்மேல் தவிசிடு மாறு.

(சொ - ள்.) *பொறிவண்டு பூமேல் இசை முரலும் ஊர - புள்ளிகளையுடைய வண்டுகள் பூக்களின் மீது இருந்து இசை பாடும் மருதநிலத் தலைவனே!, பெரியார்க்கு செய்யும் சிறப்பினை - அறிவிற் பெரியார்க்குச் செய்யும் சிறப்பினை, பேணி - விரும்பி, சிறியார்க்குச செய்துவிடுதல் - அறிவிற் சிறியார்க்குச் செய்தல், அதுவன்றே—அச்செயலன்றே, தவிசு - யானைமேல் இடவேண்டிய கல்லணையை, நாய்மேல் இடுமாறு - இழிந்த நாயின்மீது இட்டதை ஒக்கும்.*

(க - து) *பெரியோர்க்குச செய்யும் சிறப்பினைச சிறியோர்க்குச் செய்தலாகாது.*

(வி - ம்.) *யானைமேல் இடுந் தவிசினை நாய்மேல் இடின் நகைப்பிற்கிடனாதல்போல அறிவுடையோர்க்குச் செய்வனவற்றை அறிவிலார்க்குச செய்தல் நகைப்பிற்கிடனாம்.*

"நாய் மேல் தவிசிடுமாறு" என்பது பழமொழி. (கரு)

106. பேதுறவு தீரப் பெருக்கத் தலையளித்து
ஆசறு செய்யாராய் ஆற்றப் பெருகினும்
மாசற மாண்ட மனமுடையர் ஆகாத
கூதறைகள் ஆகார் குடி.

(சொ - ள்.) *பேதுறவு தீர பெருக்க தலையளித்து ஆசு அறு செய்யாராய் - துன்பம் நீங்குமாறு மிகவும் அன்பு செய்து குற்றம் அற்றவைகளைச செய்யாதவராய, ஆற்றப் பெருகினும் - செல்வத்தால் மிகப்பெருகி வாழ்ந்தாலும்; மாசு அற மாண்ட மனம் உடையர் ஆகாத கூதறைகள - குற்றம் அற மாட்சிமைப்பட்ட மனமுடையராகாத கூளங்கள், குடி ஆகார் - நற்குடியிற் பிறந்தவராகார்.*

(க - து.) *கீழ்மக்கள் செல்வம் பெறினும் மனத்தூய்மையிலராகலின உயர் குடியிற் பிறந்தாரை ஒவ்வார்.*

(வி - ம்.) *கீழ்மக்கள் மிகுந்த செல்வம் பெற்றிருப்பினும் தூய்மையான மனமின்மையால் பிறர் துன்பம் நீங்குமாறு நல்ல*

செயல்களைச் செய்ய இயலாமற் போவார். நற்குடியிற் பிறந்தார் செல்வம் இல்லாத இடத்தும மனச்செம்மையராகலின் தங்குடிக்குரிய கொடைத் தொழிலினின்றும் நீங்கார். இதுபற்றியே கீழ் மக்கள் நற்குடியிற் பிறந்தவராகக் கருதப்படார் என்றது.

"கூதறைகள் ஆகார் குடி" என்பது பழமொழி. (கஎ)

13 கீழ்மக்கள் செய்கை

107. நெறியால் உணராது நீர்மையும் இன்றி
சிறியார் எளியரால் என்று—பெரியாரைத்
தங்கணேர் வைத்துத் தகவல்ல கூறுதல்
திங்களை நாய்குரைத் தற்று.

(சொ - ள்.) சிறியார் - அறிவிலார், பெரியாரை-அறிவுடையோர்களை, நெறியால் உணராது நீர்மையும் இன்றி - நெறியால் உணராது தகுதியும் இன்றி. எளியர் என்று - தாழ்மையானவர் என்று நினைத்து, தங்கள் நேர்வைத்து - தங்களுக்கு முன்பு அவர்களை இருக்கச் செய்து, தகவு அல்ல கூறுதல் - தகுதியல்லாத வார்த்தைகளைச் சொல்லுதல், திங்களை நாய் குரைத் தற்று - மதியை நாய் குரைத்தாற் போலும்.

(க - து.) சிறியோர்கள் பெரியோர்களைப் பார்த்து அடாதன கூறுதல சந்திரனை நாய் குரைத்தாற் போலும்.

(வி - ம்.) பெரியார் பெருமை அவரையொப்போரால் அறியப்படுமன்றிச, சிறியோரால் அறியப்படமாட்டாது. அறிவிற் சிறியோராதலின் அவர் பெருமையை அறியும் தகுதியும் இலதாயிற்று. திஙகளை நோக்கிக் குரைக்கும் நாய்க்கே ஊறுபாடுண்டாதல்போல, அறிவிலார்க்கே துன்பம் உண்டாம். அவர்க்கு ஊறுபாடு இல்லையாதலோடு இதனை அவர் பொருட்படுத்தவும் மாட்டார்.

"திங்களை நாய் குரைத் தற்று" என்பது பழமொழி. (அ)

108. மறுமையொன் றுண்டோ மனப்பட்ட எல்லாம்
பெறுமாறு, செய்ம்மினென் பாரே—நறுநெய்யுள்
கட்டி யடையைக் களைவித்துக் கண்சொரீஇ
இட்டிகை தீற்று பவர்.

(சொ - ள்.) மறுமை ஒன்று உண்டோ மனப்பட்ட எல்லாம் பெறுமாறு செய்ம்மின் என்பார் - மறுமை என்பது ஒன்று உளதோ? மனம் விரும்பியவற்றை யெல்லாம் அடையும் தன்மையைச செய்யுங்கள் என்றுபதேசிப்பவர், நறு நெய்யுள் கட்டி அடையைக் களைவித்து - நல்ல நெய்யுள் தோய்க்கப்பெற்றுப் பாகு கலந்த அடையை உண்ணுமல் நீக்கி, கண் சொரீஇ இட்டிகை தீற்றுபவர் - கண்களை மூடிச் செங்கல்லை உண்ணச செய்பவரோடு ஒப்பர்.

(க - து.) அறிவிலார் நன்னெறி யிருக்கவும் தீநெறியைப் போதிப்பார்கள்.

(வி - ம்.) இம்மையில் நாம் செய்யும் செயல்களுக்குத் தக்கவாறு மறுபிறப்பு உண்டு என்பதை அறியாராய் மறுபிறப்பு இல்லையென்பதை உபதேசிப்பர். மறுபிறப்பு இல்லையென்றால் நல்வினை தீவினைக்கு அஞ்சவேண்டுவதில்லை. ஆகையால் மனம்போனவாறே செய்க என்றுபதேசிப்பர்.

"கட்டி அடையைக் களைவித்துக் கண்சொரீஇ இட்டிகை தீற்றுபவர்" என்பது பழமொழி. (உ)

109. கண்ணில் கயவர் கருத்துணர்ந்து கைமிக
நண்ணி அவர்க்கு நலனுடைய செய்பவேல்
எண்ணி இடர்வரும் என்னுர் புலிமுகத்(து)
உண்ணி பறித்து விடல்.

(சொ - ள்.) கண்ணில் கயவர் கருத்து உணர்ந்து - கண்ணோட்டம் இல்லாத கீழ்மக்களது எண்ணத்தை அறிந்து, கைமிக நணணி அவர்க்கு நலனுடைய செய்பவேல் - செயல் மிக அவரையடைந்து அவர்க்கு வேண்டிய நன்மைகளைச செய்வாராயின், (அங்ஙனம் செய்தல்) எண்ணி இடர் வரும் என்னுர் - துன்பம் வரும் என்பதை ஆராயாதவராகி, புலிமுகத்து உணணி பறித்து விடல் - இரக்கத்தால் புலியினது முகத்தினகண் உள்ள உண்ணியை எடுத்துவிடுதலோ டொக்கும்.

(க - து.) தீயவர்களுக்கு நன்மை செய்தல் தனக்குக் கேடு தேடிக்கொள்ளுதலாக முடியும்.

(வி - ம்.) புலிமுகத்து உண்ணி பறிப்பார் எங்ஙனம் பிழையாரோ, அதுபோன்றே தீயவர்களுக்கு உதவி செய்வாரும் பிழைத்தல் இலர்.

"புலிமுகத்து உண்ணி பறித்துவிடல்" என்பது பழமொழி.

110. திருந்தாய்நீ ஆர்வத்தைத் தீமை உடையார்
வருந்தினர் என்றே வயப்படுவ துண்டோ
அரிந்தரிகால் பெய்தமையக் கூட்டியக் கண்ணும்
பொருந்தாமண் ஆகா சுவர்.

(சொ - ள்.) *அரிந்து அரிகால் பெய்து அமைய கூட்டிய கண்ணும் - அரிதாளை அரிந்து செப்பம் செய்து பொருந்துமாறு தலைக் கூட்டிய விடத்தும், பொருந்தா மண் - அவர் எடுக்கும் பொழுதே பொருந்தாத மண், சுவர் ஆகா-பின்னர்ப் பொருந்திச சுவராக ஆதல் இல்லை, (ஆதலால்) தீமை உடையார்—தீய செயல் களை உடையார், வருந்தினர் என்றே வயப்படுதல் உண்டோ - நம் பொருட்டு இவர் வருத்தமுற்றார் என்பதற்காக வசமாகப் பொருந்துதல் உண்டோ (இல்லை) நீ ஆர்வத்தைத் திருந்தாய் - நெஞ்சே அவர்மேல் பூண்ட அன்பினை விட்டுத் திருந்துவாயாக.*

(க - து.) *கீழ்மக்களுக்கு நன்மை செய்யினும் அதை உட் கொண்டு செய்தார் விருப்பம்போல் நடவார்.*

(வி - ம்.) *சுவரோடு சேராத மண் பின்னர்ப் பொருந்துதல் இல்லாதவாறுபோல் கீழ்மக்கள் உதவி செய்தார் விருப்பத்தின் படி பொருந்துதல் இலர். கீழ்மக்களுக்கு என்ன உதவி செய்யி னும், அவர் விருப்பின்படியே நடப்பாராதலின் அவர்மேல் பூண்ட அன்பினை விட்டொழித்தல் வேண்டும்.*

"அரிந்தரிகால் பெய்தமையக் கூட்டியக் கண்ணும் பொருந்தா மண் ஆகா சுவர்" என்பது பழமொழி. (௰)

111. குலத்துச் சிறியார் கலாந்தணிப்பான் புக்கு
விலக்குவார் மேலும் எழுதல்—நிலத்து
நிலையழுங்க வேண்டிப் புடைத்தக்கால் வெண்மாத்
தலைகீழாக் காதி விடல்

(சொ - ள்.) *குலத்து சிறியார் - குலத்தினால் சிறியவர்கள், கலாம் தணிப்பான் புக்கு விலக்குவார் மேலும் எழுதல் - (பிற ரிடம் கொண்ட) பகைமையை நீக்கும்பொருட்டு இடைப்புகுந்து விலக்குவாரிடத்தும் சினந்து எழுதல், நிலத்து நிலை அழுங்க வேண்டி புடைத்தக்கால் - அவ்விடத்தில் நிற்கின்ற நிலை நீங்கும் பொருட்டு (சாட்டையால்) அடித்தவிடத்து, வெண்மா தலைகீழா காதிவிடல் - வெள்ளிய குதிரையானது சவாரி செய்யத் தெரியா தவனைத் தலைகீழாகத்தள்ளித் துன்புறுத்துவதோ டொக்கும்.*

(க - து.) கீழ்மக்கள் தமக்கு நன்மை செய்வோரிடத்திலும் வெகுண்டு எழுவார்கள்.

(வி - ம்.) தாழ்ந்த குலத்திற் பிறந்தவர்களாதலின், இவர் தமக்குச் செய்வன நன்மை தீமை என்பன பகுத்துணரும் அறிவு இலதாயிற்று. ஆதலின், இடைநின்று விலகுவார்மேல் சினங் கொள்வார் தாழ்ந்த குடியிற் பிறந்தவர்களாதலின், அவர்களது இயற்கை கலாம் விளைத்தலே யாகும். அவர்களது குலத்தின் இயற்கையாகிய கலாம் விளைத்தலை யாரேனும இடை நின்று விலக்குவாராயின், அவரைச சினத்தலும் அவரது. இயற்கையே யாம் என்று கூறினும் ஆம்.

"நிலத்து நிலையழுங்க வேண்டிப் புடைத்தக்கால் வெண்மாத் தலைகீழாக் காதிவிடல்" என்பது பழமொழி. (ங)

112. சொல்லெதிர்ந்து தம்மை வழிபட்(டு) ஒழுகலராய்க்
கல்லெறிந்தாற் போலக் கலாந்தலைக் கொள்வாரை
இல்லிருந் தாற்ற முனிவித்தல் உள்ளிருந்(து)
அச்சாணி தாங்கழிக்கு மாறு.

(சொ - ள்.) சொல் எதிர்ந்து தம்மை வழிபட்டு ஒழுகல ராய் - தாங்கூறும் அறிவுரைகளை யேற்றுக்கொண்டு தம்மை வழி பாடு செய்து ஒழுகாதவராய், கல் எறிந்தாற்போல கலாம் தலைக் கொள்வாரை - கற்களை வீசினாற்போன்ற தீய சொற்களைச் சொல்லிப் பகைமையை மேற்கொள்வாரை, இல்லிருந்து ஆற்ற முனிவித்தல் - அவர் வீட்டினுள்ளேயிருந்து மிகவும் அவரை முனிவித்தல், உள் இருந்து அசசாணி தாம கழிக்குமாறு-தேரின் உள்ளே இருந்து அசசின்கண் சொருகும் ஆணியைத் தாமே நீக்கி விடுவது போலாம்.

(க - து.) கீழ்மக்களது அருகில் இருந்து அவருக்குச் சின மூட்டுதல் தனக்குத் தீங்கினை விளைவித்துக்கொள்வதாக முடியும்.

(வி - ம்.) ஆற்ற முனிவித்தலாவது, அவர்கள் செய்கின்ற தீயசெயல்களை அடிக்கடி எடுத்துக்கூறியும் அறிவுரைகளைக் கூறி யும் வருதலால் அவர் மிக்க சினங்கொள்வர். அதனால் மிக்க இன்னல்களைச செய்வார்கள். தேரினுள்ளே யிருந்தவன் அச் சாணியை நீக்கி அதனால் வருந் துன்பத்தைத் தானே தேடிக் கொள்ளுதல்போல் தீயோர் வீட்டிலிருந்துகொண்டு அவர்களை வெகுள்விப்பதும் தீமை ஆகும். தீயோர் தாமே தீங்கு செய்த லன்றித் தீங்குசெய்வோர் பலரிடமிருந்தும் காப்பாற்றி வந் தமையை ஒழிவர் ஆக, அவரும் பிறரும் நலிவர் என்பதாம்.

"உள்ளிருந்து அச்சாணி தாங்கழிக்கு மாறு" என்பது பழமொழி. (க)

113. நாணார் பரியார் நயனில செய்தொழுகும்
பேணா அறிவிலா மாக்களைப் பேணி
ஒழுக்கி அவரோ டுடனுறை செய்தல்
புழுப்பெய்து புண்பொதியு மாறு.

(சொ - ள்.) *நாணார் - நாணத்தக்கனவற்றிற்கு நாணாராய் நயன் இல செய்து ஒழுகும் - நன்மையில்லாத செயல்களைச் செய்து ஒழுகுகின்ற, பேணா அறிவிலா மாக்களை - யாவராலும் விரும்பப்படாத அறிவு இல்லாத விலங்கு ஒப்பாரை, பேணி ஒழுக்கி - விரும்பிநடத்தி, அவரோடு உடன் உறை செய்தல் - அவருடன்கூடி வாழ்தலைச் செய்தல், புழு பெய்து புண் பொதியு மாறு - புழுவினை உள்ளே இட்டுப் புண்ணை மூடிவைத்ததோடு ஒக்கும்.*

(க - து.) *தீயாரோடு உடனுறையின் தீமையே விளையும்.*

(வி - ம்.) *நாணம், அன்பு, நன்மைசெய்தல் இம்மூன்று மின்மையின் விலங்குகளுள்ளும் அறிவில்லாதவைகளாகக் கருதப் பட்டார்கள். புழு உள்ளேயே யிருந்து தீமை செய்தல்போல இவர்களும் மறைவாக நின்று தீங்கியற்றுவார்கள்.*

"புழுப் பெய்து புண் பொதியுமாறு" என்பது பழமொழி (எ)

114. பொல்லாத சொல்லி மறைத்தொழுகும் பேதைதன்
சொல்லாலே தன்னைத் துயர்ப்படுக்கும்—நல்லாய்
மணலுள் முழுகி மறைந்து கிடக்கும்
நுணலும்தன் வாயால் கெடும்.

(சொ - ள்.) *நல்லாய்-நற்குணமுடையாய்!, மணலுள் முழுகி மறைந்து கிடக்கும் நுணலும்-மணலுள் பதிந்து மறைந்திருக்கும் தவளையும், தன் வாயால் கெடும்-தன்குரலைக் காட்டுதலால் தன் வாயாலேயே தன்னைத் தின்பார்க்கு அகப்பட்டு இறந்தொழியும், (அதுபோல) பொல்லாத சொல்லி மறைந்து ஒழுகும் பேதை - தீயனவற்றைக்கூறி ஒளித்து நிற்கும் அறிவிலான், தன் சொல்லாலே தன்னை துயர்படுக்கும் - தான் கூறும் சொற்களாலேயே தன்னைத் துன்பத்தின்கண் அகப்படுத்திக் கொள்வான்.*

(க - து.) *அறிவிலான் தன் வாயாலேயே தனக்குத் தீங்கு தேடிக் கொள்வான்.*

(வி - ம்.) புறங்கூறுதலால் தன்னியல்பைத் தானே வெளியிட்டானின்றமையின், அது காரணமாக வருந்தீங்கு தன்னால் செய்துகொள்ளப்பட்டமையின், "தன் சொல்லாலே தன்னைத் துயர்ப்படுக்கும்" என்றார்.

"நுணலுந் தன் வாயால் கெடும்" என்பது பழமொழி. (அ)

115. தாக்குற்ற போழ்தில் தமரேபோல் நன்குரைத்துப்
போக்குற்ற போழ்தில் புறனழீஇ மேன்மைக்கண்
நோக்கற் றவரைப் பழித்தல் என்? என்னனும்
மூக்கற்ற தற்கில் பழி.

(சொ - ள்.) என் ஆனும்-எப்படி ஆயினும், மூக்கற்றதற்கு பழி இல்-மூக்கு அறுபட்டதற்குப் பழிப்பு இல்லை (அதுபோல), தாக்கு உற்ற போழ்தில் தமரேபோல் நன்கு உரைத்து - ஒருவரைத் தலைப்பட்ட பொழுது தம் உறவினரைப் போல் அன்புடன் நன்றாகப் புகழ்ந்துரைத்து, போக்குற்ற போழ்தில்-அவர் நீங்கிய இடத்து, புறன அழீஇ - புறம்பேசுபவர்களைப் பற்றி அழித்துப் பேசுபவராய், மேன்மைகண் நோக்கு அற்றவரை - மேன்மைக் குணத்தின்கண் கருத்து இல்லாதவர்களை, பழித்தல் என் - இகழ்ந்துரைத்தல் என்?

(க - து.) புறங்கூறுவார் என்றும் திருந்தார்.

(வி - ம்.) மூக்கற்றதற்குப் பழிப்பில்லாததுபோல் மேன்மைக்கண் நோக்கமில்லாதவர்களிடம் புறங்கூறவேண்டா என்று இகழ்ந்துரைத்தலிற் பயனில்லை.

"மூக்கற்றதற் கில் பழி" என்பது பழமொழி. (க)

116. கோவாத சொல்லும் குணனிலா மாக்களை
நாவாய் அடக்கல் அரிதாகும்—நாவாய்
களிகள்போல் தூங்கும் கடற்சேர்ப்ப! வாங்கி
வளிதோட்கு இடுவாரோ இல்.

(சொ - ள்) நாவாய் களிகள்போல் தூங்கும் கடல்சேர்ப்ப - மரக்கலங்கள் கள்ளுண்டு ஆடும் களியர்போல ஆடுகின்ற கடல் நாடனே!, வளி வாங்கி - காற்றினை ஒரு சொள்கலத்துள் வாங்கி, தோட்கு இடுவாரோ - தோள்களுக்கு இடவல்லார் உளரோ?, இல் - இல்லை. (அதுபோல), கோவாத சொல்லும் - பொருத்தமில்லாதவைகளைக் கூறும், குணன் இலா மாக்களை - நற்குணங்

கள் ஒரு சிறிதும் இல்லாத விலங்கொப்பாரை, நாவாய் அடக்குதல் - நாவினிடத்து அடக்குதல், அரிதாகும் - இல்லையாம்.

(க - து.) கீழ்மக்களின் நாவினை அடக்குதல் முடியாது.

(வி - ம்.) வளியைச் சேர்த்து வாங்கித் தோளிலிட வல்லார் இல்லையாதல் போல, நற்குண மில்லாதவர்களின் நாவினை அடக்குதலும் இல்லையாயிற்று.

"வாங்கி வளிதோட்கு இடுவாரோ இல்" என்பது பழமொழி. (கo)

117\. தெரியாதார் சொல்லும் திறனின்மை தீதாப்
பரியார் பயனின்மை செய்து—பெரியார்சொல்
கொள்ளாது தாந்தம்மைக் காவா தவர்பிறரைக்
கள்ளராச் செய்குறு வார்

(சொ - ள்) தெரியாதார் சொல்லும் திறன் இன்மை-(நன்மை) தீமை அறியாதார் கூறும் திறப்பாடில்லாச செயல்களை, தீதா பரியார - தீதாக நினைத்து நீக்கார, பயன் இன்மை செய்து-அவர் கூறிய பயனற்ற செயல்களைச் செய்து, பெரியோர் சொல் கொள்ளாது-அறிவிற் பெரியோர் கூறும் அறிவுரையை மனதுட் கொள்ளாது, தாம் தம்மைக் காவாதவா - குற்றங்களினின்றும் தம்மைத்தாமே காத்துககொள்ள இயலாதவர்கள, பிறரை - தாம் செய்த குற்றததைக் கூறுகின்றவாகளை, கள்ளரா(க) செய்குறு வார் - குற்றம் உடையவர்களாகச செய்வார்கள்.

(க - து.) கீழ்மககள் தமது குற்றத்தை எடுத்துக் காட்டுப வர்களைக் குற்றவாளியாகச செய்வார்கள்.

(வி - ம்.) கள்ளராச செய்தல்-குற்றமுடையவராகச செய்தல்.

தம்மைத திருத்த வருபவர்களைக் குற்றமுடையவர்களாக ஆககுவரேயன்றி அவர் சொற்கேட்டுத் தாம் திருந்துதல் இலர்.

"காவாதவர் பிறரைக் கள்ளராச் செய்திடுவார்" என்பது பழமொழி. (கக)

118\. செய்த கொடுமை யுடையான் அதன்பயம்
எய்த உரையான் இடரினல்—எய்தி
மரிசாதியா யிருந்த மன்றஞ்சு வார்க்குப்
பரிகாரம் யாதொன்றும். இல்

(சொ - ள்.) மரீசாதியாய் எய்தி இருந்த மன்று - நீதிமான்கள் பலரும் திரண்டு இருந்த அவையினைக் கண்டு, அஞ்சுவார்க்குப் பரிகாரம் யாதொன்றும் இல் - அஞ்சி உண்மையைக் கூறுகின்றவர்களுக்குச் செய்கின்றது யாதொன்றுமில்லை யாதலால், செய்த கொடுமை உடையான் - செய்த தீமையை உடையவன், அதன் பயம் எய்த இடரினால் உரையான் - பிறர் கேட்ட விடத்தக கூறினால் வரும் அச்சம் தன்னை வந்தடைய அத்துன்பத்தால் கூறுவானல்லன்.

(க - து.) கீழ்மக்கள் உண்டாகும் துன்பத்திற் கஞ்சி நியாய சபையிலன்றி உண்மையைக கூறமாட்டார்கள்.

(வி - ம்.) தனித்துக்கூறின் தண்டஞ் செய்வாராதலான் மன்றிலன்றிக் கூறுதலிலர். மரீத்தல் - ஒன்றுசேர்தல். சாதி-கூட்டம்; ஒன்று சேர்ந்து குழுமியிருந்த நீதிமான்கள்.

' மன்றஞ்சுவார்க்குப் பரிகாரம் யாதொன்றும் இல்'' என்பது பழமொழி. (கஉ)

119. முதுமக்கள் அன்றி முனிதக்கார் ஆய
பொதுமக்கள் பொல்லா ஒழுக்கம்—அதுமன்னும்
குன்றத்து வீழும் கொடியருவி நன்னாட!
மன்றத்து மையல்சேர்ந் தற்று

(சொ - ள்.) மன்னும் குன்றத்து வீழும் கொடி அருவி நன்னாட - நிலைபெற்ற மலையினின்றும இழியும் கொடிபோன்ற அருவியை உடைய நல்ல மலைநாடனே!, முதுமக்கள் அன்றி - அறிவால் நிரம்பிய மக்களாய் இல்லையாதலோடு, முனிதக்கார் ஆய பொதுமக்கள் - வெறுக்கத்தக்கவர்களாகிய சிறப்பில்லாத மக்கள், பொல்லா ஒழுக்கம் அது - தீய ஒழுக்கத்தைப் பூண்டிருத்தல் ஆகிய அது, மன்றத்து மையல் சேர்ந்தற்று - நான்கு வீதிகள் சேரும் சதுக்கத்திலே பித்து ஏறியவன் இருந்ததை ஒக்கும்.

(க - து.) கீழ்மக்களது தீய ஒழுக்கம் மிகவும் அஞ்சத்தக்கது.

(வி - ம்.) தீய ஒழுக்கத்தை உடையவராயினும் அறிவிற் சிறந்தவராய் இருப்பின் தமது ஒழுக்கத்தை மறைத்தல் கூடும். அது இன்மை தமது தீய ஒழுக்கத்தைப் பிறருக்கு நன்றாக விளக்கிக் காட்டுமாதலால், சதுக்கத்தின்கண் இருந்த மதிமயங்கியோனுக்கு ஒப்பாயினர். பித்தேறியவனுக்குப் பலரையும் துன்

புறத்தச் சதுக்கம் நல்ல இடம் ஆயினாற்போல, பிறரை வருத்தும் பொருட்டு வேகும் தீய ஒழுக்கம் உடையவா என்பதாம்.

"மன்றத்து மையல் சேர்ந்தற்று" என்பது பழமொழி. (௧௩)

120. தருக்கி ஒழுகித் தகவல்ல செய்தும்
பெருக்க மதித்தபின் பேணுத செய்தும்
கரப்புடை யுள்ளங் கனற்று பவரே
செருப்பிடைப் பட்ட பரல்.

(சொ - ள்.) தருக்கி ஒழுகி தகவல்ல செய்தும்-(பிறர் தன்னை மதியாத இடத்து) தன்னைத்தானே மதித்து ஒழுகித் தகுதியல்லாத செயல்களைச் செய்தும், பெருக்க மதித்தபின் பேணுத செய்தும் - பிறர் தன்னை மிகுதியும் மதித்த இடத்து அவா விரும்பத் தகாதனவற்றைச செய்தும், கரப்பு உடை உள்ளம் கனற்றுபவா - மறைந்த எண்ணங்கொண்டு பிறரை வருத்துபவர், செருப்பு இடைப்பட்ட பரல் - செருப்பின்கண் பொருந்தி இருக்கும் பருக்கைககல்லை ஒப்பர்.

(க - து.) கரந்த உள்ளமுடைய கீழ்மக்கள் பெரியோர் செய்யும் செயல்களுக்கு இடையூறாக நிற்பா.

(வி - ம்.) செருப்பின்கண் உள்ள பரல் தன்னை உடையானைச் செல்லாதவாறு தடுத்தல்போல, கரவுடையார் பெரியோர் செயல்களுக்கு இடையூறாக நின்று விலக்குவர்.

"செருப்பிடைச் சிறுபரல் அன்னன்" என்ற புறநானூற்றடியும், அதன் உரையும் இக்கருத்தை நன்கு வலியுறுத்துவனவாம்.

"செருப்பிடைப் பட்ட பரல்" என்பது பழமொழி. (௧௪)

121. உறுமக்க ளாக ஒருவரை நாட்டிப்
பெறுமாற்ற மின்றிப் பெயர்த்தே யொழிதல்
சிறுமைக் கமைந்ததோர் செய்கை அதுவே
குறுமக்கள் காவு நடல்.

(சொ - ள்.) உறுமக்களாக ஒருவரை நாட்டி - வேலைக்குத் தகுதியானவராக ஒருவரை வேலையில் இருக்கச்செய்து, பெறுமாற்றம் இன்றி பெயர்த்தே ஒழிதல் - அவர் செய்த குற்றம் உண்டு என்னும் சொல் இன்றியே அவரை வேலையினின்றும்

தவிர்த் தொழிதல், சிறுமைக்கு அமைந்ததோர் செய்கை - கீழ் மக்களுக்குப் பொருந்திய செயலாம். அது - அச்செயல், குறு மக்கள் காவு நடல் - பிள்ளைகள் சோலைவைத்து வளர்ப்பதை ஒக்கும்.

(க - து.) கீழ்மக்கள் தொடங்கிய செயல் முடிவுபெறாது.

(வி - ம்.) சோலை வைக்கப் புகுந்த சிறுவர்கள் செடிகளை நட்ட இடத்தில் தரிக்கவொட்டாராதலால் சோலை உண்டாவதில்லை. அதுபோல, கீழ்மக்களும் அடிக்கடி செயலாற்றுவோரை மாற்றுந்தொழிலுடையராதலின், அவர் நினைத்த காரியம் முடிவு பெறுவதில்லை. சிறுமைக் குணம் மிகுதியும் உடையவர்கள் கீழ் மக்களாதலால் சிறுமை எனப்பட்டனர்.

"குறுமக்கள் காவு நடல்" என்பது பழமொழி. (கஉ)

122. உரைசான்ற சான்றோர் ஒடுங்கி உறைய
நிரையுளர் அல்லார் நிமிர்ந்து பெருகல்
வரைதாழ் இலங்கருவி வெற்ப! அதுவே
சுரையாழ அம்மி மிதப்பு.

(சொ - ள்.) வரைதாழ இலங்கு அருவிவெற்ப - மலையினின்றும் விழுகின்ற ஒளிவிளங்கும் அருவியை உடைய மலை நாடனே!, உரைசான்ற சான்றோர் ஒடுங்கி உறைய - புகழ் நிறைந்த குடியிற் பிறந்த அறிவு நிறைந்தவர்கள் வறுமையால் வருந்திநிற்க, நிரை உளர் அல்லார் நிமிர்ந்து பெருகல் அது-நல்ல குடிமரபின் வரிசையில் சேராதவரான கீழோர் செல்வத்தால் தலைநிமிர்ந்து பெருகுதல் ஆகிய அது, சுரைஆழ அம்மி மிதப்பு - நீரிலே சுரை ஆழ்வதையும் அம்மி மிதப்பதையும் ஒக்கும்.

(க - து.) நற்குடிப் பிறவார் செல்வத்தால் தருக்கிநிற்பர்.

(வி - ம்.) ஆழவேண்டியது மிதந்தும், மிதக்கவேண்டியது ஆழ்ந்தும் இருத்தல்போல, செல்வம் பெறவேண்டியவர் வறுமையுற்றும் வறுமையடைய வேண்டியவர் செல்வம் பெற்றும் இருப்பர். சுரை ஆழ்தலும் அம்மி மிதத்தலும் இயற்கையில் பொருந்தாதவாறுபோல, சான்றோர் வருந்திநிற்கக் கீழோர் பெருகிநிற்றல் பொருந்தாததொன்றாம்.

"சுரை ஆழ அம்மி மிதப்ப" என்பது பழமொழி. (கங)

123. தேர்ந்துகண் ணோடாது தீவினையும் அஞ்சலராய்ச்
சேர்ந்தாரை யெல்லாம் சிறிதுரைத்துத்—தீர்ந்த
விரகர்கட் கெல்லாம் வெறுப்பனவே செய்யும்
நரகர்கட் கில்லையோ நஞ்சு.

(சொ - ள்.) *தேர்ந்து கண்ணோடாது* - ஆராய்ந்து கண்ணோட்டம் செலுத்தாது, *தீவினையும் அஞ்சலராய்* - அஞ்சவேண்டிய தீய செயல்களுக்கும் அஞ்சாதவராய், *சேர்ந்தாரை யெல்லாம் சிறிது உரைத்து* - தம்மைச் சேர்ந்தார் எல்லோரையும் சிறுமைப் படப் பேசி, *தீர்ந்த விரகர்கட்கு எல்லாம் வெறுப்பனவே செய்யும்*- நெருங்கிய உறவினர்கட்கு எல்லாம் வெறுப்பானவைகளையே செய்யும், *நரகர்கட்கு* - நரகம் புக இருக்கின்றவர்களுக்கு, *நஞ்சு இல்லையோ* - (அவர் உயிரை உண்ணும்) விடம் உலகில் இல்லையோ?

(க - து.) இத்தகைய கீழ்மக்கள் இருப்பதைவிட இறப்பதே நன்று.

(வி - ம்.) கண்ணோடாது என்பது, தன்னொடு பயின்றாரைக் கண்டால் அவர் கூறியன மறுத்தல், முறையே அயலார், உயிர்ப் பிராணிகள், நட்டார், உறவினர் முதலியோர்கட்கெல்லாம் இவர் தீங்கு செய்து ஒழுகுதலின், இவரைக் கொல்லவல்ல நஞ்சு இல்லையோ என்றார். இவர் நரகம புகுதல் உறுதியாதலின் அவ்வுலகத்து மக்களாகவே கருதி நரகர் என்றார்.

"நரகர்கட்கு இல்லையோ நஞ்சு" என்பது பழமொழி. (கஎ)

14. நட்பின் இயல்பு

124. ஒட்டிய காதல் உமையாள் ஒருபாலாக்
கட்டங்கம் வெல்கொடி கொண்டானுங் கொண்டானே
விட்டாங் ககலா முழுமெய்யும் கொள்பவே
நட்டாரை ஒட்டி யுழி.

(சொ – ள்.) *ஒட்டிய காதல் உமையாள்* - பொருந்திய அன்பினை உடைய உமையை, *ஒருபாலா(க)* - ஒரு கூறாக, *கட்டங்கம் வெல்கொடி கொண்டானும்* - தண்டினையும் வெல்லுகின்ற ஏற்றுக்கொடியினையும் உடைய சிவபிரான் *கொண்டான்* - ஏற்றுக்கொண்டான், *நட்டாரை ஒட்டியுழி* - தம்மொடு நட்புச் செய்தாரைத் தாம் அடைந்தவிடத்து, ஆங்கு விட்டு அகலா முழு

மெய்யும் - அங்கே விட்டு நீங்காத தம் உடம்புமுழுதும், கொள்ப - கொள்வார்கள்.

(க - து.) நல்லோர் தம் நட்பினரிடத்துத் தாம் வேறு, அவர் வேறு என்னும் வேறுபாடின்றி ஒழுகுவர்.

(வி - ம்.) சிவன் ஒருபாகத்தில் கொண்டான்; நட்டார் தம் மெய் முழுதுங் கொண்டார் என நல்லோரது நட்பின் திறம் உயர்த்திக் கூறப்பட்டது. நல்லோர் நட்பினர் அடைந்த இன்ப துன்பங்கள் தாம் அடைந்ததாகவே நினைப்பர்.

"ஒட்டிய காதல் உமையாள் ஒருபாலாக்
கட்டங்கம் வெல்கொடி கொண்டானும் கொண்டான்"
என்பது பழமொழி. (க)

125. புரையின்றி நட்டார்க்கு நட்டார் உரைத்த
உரையும் பொருள்முடிவும் ஒன்றால்—உரைபிறிது
கொண்டெடுத்துக் கூறல் கொடுங்கழித் தண்சேர்ப்ப!
ஒன்றேற்று வெண்படைக்கோள் ஒன்று.

(சொ - ள்.) கொடுங் கழி தண் சேர்ப்ப - வளைந்த உப்பங் கழிகளை உடைய குளிர்ந்த கடல் நாடனே!, புரையின்றி நட்டார்க்கு - குற்றம் இன்றி நட்புப் பூண்டவர்களுக்கு, நட்டார் உரைத்த - அவரின் நட்பினர் கூறிய, உரையும் பொருள் முடிவும் ஒன்றால்-சொல்லும் அதன் பொருளும் வேறுபடாது ஒன்றேயாம், உரை பிறிது கொண்டு - பொருள் வேறாக மனத்தில் நினைத்துக் கொண்டு, எடுத்துக் கூறல் - வஞ்சனையால் விளக்கிக் கூறுதல், ஒன்று ஏற்றி - ஒருவனது பா ஒன்றினைச் செலுத்தி, வெண் - வெணபாவாக, படைக்கோள் ஒன்று - செய்து கொள்ளுகின்ற ஒன்றை ஒக்கும்.

(க - து.) மனம் வேறு, சொல் வேறாக, நட்பினரிடத்தில் கூறுதல் மிக்க வஞ்சனை பொருந்தியதாகக் கருதப்படும்.

(வி - ம்.) வெண் என்பது வெண்பா என்பதன் குறை. படைக்கோள் - படைத்துக்கொள்ளுதல், ஒருவருடைய செய்யுளைத் தம் செய்யுளாகச் செய்துகொளவது வஞ்சனை பொருந்திய செயலாகக் கருதப்படுகின்றது.

"ஒன்றேற்றி வெண்படைக்கோள் ஒன்று" என்பது பழமொழி. (உ)

126. விலங்கேயும் தம்மோ டுடனுறைதல் மேவும்
கலந்தாரைக் கைவிடுதல் ஒல்லா—இலங்கருவி
தாஅய் இழியும் மலைநாட! இன்னுதே
பேஎயோ டானும் பிரிவு.

(சொ - ள்.) இலங்கு அருவி தாய் இழியும் மலைநாட — விளங்குகின்ற அருவிகள் பாய்ந்து இழியாநின்ற மலைநாடனே!, விலங்கேயும் - விலங்கேயாயினும், தம்மோடு உடனுறைதல் மேவும் கலந்தாரை-தன்னோடுகூடி வசித்து மனத்தாற் கலந்தாரை, கைவிடுதல் ஒல்லா - விட்டு நீங்குதல் செய்யாது. (ஆதலால்), பேயோடு ஆயினும் - தம்மோடு நட்புச்செய்தது துன்பத்தை விளைவிக்கும் பேயேயானாலும், பிரிவு இன்னாது - விட்டுப்பிரிதல் துன்பத்தைத் தருவதாம.

(க - து.) தம்மோடு கலந்து பழகி மனம் ஒன்றுபட்ட நண்பினரைப் பிரிதல் துன்பந்தருவதாம்.

(வி - ம்.) ஐயறிவுடைய விலங்கும் பிரியாது என்றமையால், ஆறறிவுடையோா பிரியாதிருத்தல் வேண்டும் என்பது சொல்லாமலே பெறப்பட்டது. "நெஞ்சத்தகம் நக நட்பது நட்பு" என்பராகலின், மனம் கலந்து நட்புச செய்தலே நட்பு எனப்படும். இதுவே "கலந்தாரை" என்றதில் குறிக்கப்பட்டது. நட்பிற்கு உயர்ந்தோர் தாழ்ந்தோர் இனமையின் துன்பந்தரும் பேயேயாயினும் பிரிதல் இன்னுமை உடையதாயிற்று. விலங்கேயானாலும் தம்மோடு நட்புப்பூணடாா துனபுறுங்கால் அவரைக் கைவிட்டு நீங்காது. ஆகையால் பேயேயாயினும் துன்புறுங்கால் அதனைக் கைவிட்டு நீங்குதல் கூடாது என்று பொருள் கூறினும் ஆம். "அழிவி னவை நீக்கி ஆறுய்த்து அழிவின்கண் அல்லலுழப்பதாம் நட்பு" என்றபடி துன்பம வருங்கால அதனை நீக்க முயற்சிசெய்து நீங்காதொழியின அதனோடு உடன் இருந்து அத துன்பத்தை அடையவேண்டு மென்பதாம். இப்பொருள "கை விடுதல்" என்ற சொல்லாற்றலாற் கொள்ளப்பட்டது.

"இன்னுதே பேஎயோடானும் பிரிவு" என்பது பழமொழி.

127. இனியாரை உற்ற இடர்தீர் உபாயம்
முனியார் செயினும் மொழியால் முடியா
துனியால் திரையுலாம் தூங்குநீர்ச் சேர்ப்ப!
பனியால் குளம்நிறைதல் இல்.

(சொ - ள்.) திரை துனியால் உலா(வு)ம் தூங்குநீர் சேர்ப்ப-அலைகள் சினங்கொண்டு வீசுதலால் அலைகின்ற கடலை உடைய நாடனே!, பனியால் குளம் நிறைதல் இல் - பனிநீரால் குளம் நிறைதல் இல்லை. (அதுபோல), இனியாரை உற்ற இடர்தீர் உபாயம் - தம்முடைய நட்டாரைப் பற்றிய வருத்தம் தீர்தற்கான முயற்சிகளை, முனியார் செயினும் - வெறுப்பின்றியே செய்தா ராயினும், மொழியால் முடியா - அவர் கூறும் முகமனால் அவர் உற்ற துன்பம் நீங்குவதில்லை.

(க - து.) தம் நண்பினர் துன்புறுவரேயானால் அதற்கான முயற்சிகளைச் செயலிற்றுமே செய்து நீக்கவேண்டும்.

(வி - ம்) நட்டார் உற்ற துன்பத்தை நீக்குவதற்கு மனம், சொல் என்ற இரண்டினும் செயலே மிகவும் வேண்டும். நவில் தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும் பண்புடையாளர் தொடர்பு என்பராகலின், அவ்வினிமையைத் தனக்கு அளித்த நட்டாரை இனியார் என்றார்.

"பனியால் குளம் நிறைதல் இல்" என்பது பழமொழி. (ச)

128. தாம்நட் டொழுகுற்குத் தக்கார் எனல்வேண்டா
யார்நட்பே யாயினும் நட்புக் கொளல்வேண்டும்
கானட்டு நாறுங் கதுப்பினாய்! தீற்றாதோ
நாய்நட்டால் நல்ல முயல்.

(சொ - ள்.) கான் அட்டு நாறுங் கதுப்பினாய்-நீறு நாற்றத் தால் பிறவற்றை வென்று இயற்கை மணம் வீசுகின்ற கூந்தலை உடையாய்!, நாய் நட்டால் - நாயோடு நட்புச் செய்தால், நல்ல முயல் தீற்றாதோ - சிறந்த உணவாகிய முயல் தசையை உண் பிக்கச் செய்யாதோ? (உண்ணச் செய்யும் அதுபோல), தாம் - செல்வத்தால் மிகுந்த தாம், நட்டு ஒழுகுதற்கு - நண்பு பூண்டு ஒழுகுவதற்கு, தக்கார எனல் வேண்டா - (நம்மை ஒப்ப) இவரும் செல்வத்தால் தகுதியுடையவரா என்றாராய்தல் வேண்டா, யார் நட்பேயாயினும் - வறுமையால் மிககவர் நட்பேயானாலும், கொளல் வேண்டும் - அவர் நட்பைப் பெறவேண்டும்.

(க - து.) செல்வந்தர் வறுமையுடையாரோடும் நட்புச் செய்தல் வேண்டும்.

(வி - ம்.) "தாம்" என்பது செல்வத் தருக்கின்கண் பிறந்த சொல்லாதலின் தக்கார், யார் என்பனவற்றிற்கு அதற்கேற்பப் பொருள் கொள்ளப்பட்டது. நட்புக்கொள்வதற்குச் செல்வ

முடையவரா இல்லாதவரா என்று ஆராய வேண்டுவதில்லை. குணம், செயல், குடி முதலியன ஆராய்தல் வேண்டும். அங்ஙனம் ஆராயாது நட்டால் மிக்க துனபத்தினை அடைய நேரிடும். "நாடாது நட்டலிற் கேடில்லை" என்றும், "ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை, தான்சாந் துயரம் தரும்" என்றும் கூறப்பட்டிருத்தலின் குணம், செயல், குடி முதலிய ஆராய்தல் வேண்டும். நாயும் தன்னோடு நட்புப்பூண்டார்க்குச் சிறந்த உணவினை அளித்தல்போல; வறுமை உடையவராயினும் அவரோடு நட்பில் சிறந்த பயனைப் பெறலாம் என்பது.

கான் - நறு நாற்றம்; "கானுறுங் குழல்சரியக் கற்பூரவல்லி தலைகவிழ்ந்து நிற்ப" என்பது காண்க.

"தீற்றாதோ நாய் நட்டால் நல்ல முயல்" என்பது பழமொழி. (௫).

129. தீர்ந்தேம் எனக்கருதித் தேற்று தொழுகித்தாம்
ஊர்ந்த பரிவும் இலராகிச்—சேர்ந்தார்
பழமைகந் தாகப் பரியார் புதுமை
முழநட்பிற் சாணுட்கு நன்று.

(சொ - ள்.) தீர்ந்தேம் எனக் கருதி – இவரிடதது வேற்றுமையின்றிப் பூண்ட நட்பினை உடையோம என்று கருதி, தேற்றாது ஒழுகி - ஆராயாது தீயனவற்றைச செய்து, தாம் ஊர்ந்த பரிவும் இலராகி சேர்ந்தார் - தம்மிடத்து இயல்பாக இருந்த சிறிய அன்பும் இல்லாதவர்களாகி ஒழுகுபவர்களது, பழமை கந்தாகப் பரியாா புதுமை - பழமையையே பற்றுக் கோடாகக் கொண்டு புதிய நட்பினை நீக்கார் அறிவுடையோர், முழம் நட்பின் சாண்உட்கு நன்று - தீயன செய்யும் நட்பு முழம் இருத்தலைவிட அஞ்சத்தகும் நட்பு சாண் இருத்தலே நல்லது.

(க - து.) தீயன செய்யும் பழைய நட்பைவிட அஞ்சத்தகும் புதிய நட்பே நல்லது.

(வி - ம்.) "ஊர்ந்த பரிவு" என்பது மிகக் குறைந்த அன்பு என்பதை விளக்கிற்று. அதுவும் அவர் செயலன்று; அன்பின் செயல் என்பார் ஊர்தலை அனபின் செயலாகக் கூறினார். புதிய நட்பினர் தீயன செய்வாரோ வென்ற அச்சம் இருத்தலால் முன்னரே அறிந்து காக்கப்படும். பழைய நட்பினரிடத்தில் அத்தகைய ஐயமின்மையால் காக்கப்படாதாயிற்று. ஆகவே, பழைய நட்பினர் செய்யும் தீமை அறிந்து காக்கப்படாமையாலும், புதிய நட்பினர் தீமை அறிந்து காக்கப்படுதலினாலும்

புதிய நட்பே "நன்று" என்று கூறப்பட்டது. முழும், சாண் என்பன காலத்தின் தூரத்தை உணர்த்துவன, பழமை, புதுமை என்பனவற்றை உணர்த்தின. தீர்ந்தேம் - தாம் வேறு, அவர் வேறு என்ற வேற்றுமையினின்றும் நீங்கினேம்.

"முழ நட்பிற் சாணுட்கு நன்று" என்பது பழமொழி. (சு)

130. கொழித்துக் கொளப்பட்ட நண்பி னவரைப்
பழித்துப் பலர்நடுவண் சொல்லாடார்—என்கொல்?
விழித்தலரும் நெய்தற் றுறைவா! உரையார்
இழித்தக்க காணிற் கனு.

(சொ - ள்.) விழித்து அலரும் நெய்தல் துறைவா-கண்கள் விழித்தலை ஒத்து மலரும் நெய்தற் பூக்களை உடைய கடல் நாடனே!, கொழித்து கொளப்பட்ட நண்பினவரை-ஆராய்ந்து தூயதாகக் கொள்ளப்பட்ட நட்பினை உடையாரை, பலர் நடுவண் பழித்து சொல்லாடார் - பலர் இடையே இகழ்ந்து கூறமாட்டார்கள் அறிவுடையோர், என்கொல் - என்ன காரணமெனில், இழித்தக்க - (பிறரிடம் கூறினல்) தமக்கு இழிவைத் தருவனவற்றை, கனு காணின் - கனவின்கண் கண்டாராயின், உரையார்- (தமக்கு இழிவு வரும் என்று கருதி) பிறரிடம் கூறுர் (அது போல).

(க - து.) அறிவுடையோர் தம் நட்பாரிடத்துள்ள குற்றங்களைத் தூற்றமாட்டார்கள்.

(வி - ம்.) 'குணனும் குடிமையும் குற்றமும் குன்ரு
இனனும் அறிந்தியாகக நட்பு' என்பாராகலின்,

அங்ஙனம் ஆராய்ந்து தூயதாகக் கொள்ளப்பட்ட நட்பு "கொழித்துக் கொள்ளப்பட்ட நட்பு" எனப்பட்டது. இழித்தக்க காணின் உரையாதொழிதல்போல, பலர்நடுவண் பழித்தல் கூடாதென்பதாம். தமக்கு இழிவைத்தரும் கனுவைப் பலர் நடுவண் கூறின், இழிவு தம்மை அடைதல்போல, நட்டார் குற்றம் கூறின், அவர் குற்றம் ஆராயப்படாது அதனைக் கூறுவாரே குற்றத்திலகப்பட்டு இழிக்கப்படுவர் என்பதாயிற்று. குற்றமாவன:—நட்டாரது பிழை காணும் பெற்றியுடையாரெனவும், அதனைப் பொறுக்கும் ஆற்றலிலரெனவும் தூற்றுந் தொழிலுடையாரெனவும்போல்வன. தம் நட்டார் குற்றம் கூறுதல் தங்குற்றத்தைக் காட்டுதலாகுமென்றே அறிவுடையோர் கூறமாட்டார்கள்.

"உரையார் இழித்தக்க காணிற் கனு" என்பது பழமொழி. (எ)

131. நண்பொன்றித் தம்மாலே நாட்டப்பட் டார்களைக்
கண்கண்ட குற்றம் உளவெனினும்—காய்ந்தீயார்
பண்கொண்ட தீஞ்சொல் பணைத்தோளாய்? யாருளரோ
தங்கன்று சாக்கறப் பார்.

(சொ - ள்.) *பண்கொண்ட தீம் சொல் பணைத்தோளாய்- பண்ணினது இயல்பைக் கொண்ட இனிமையான சொற்களையும் மூங்கில்போன்ற தோள்களையும உடையாய்!, நண்பு ஒன்றி தம்மாலே நாட்டப்பட்டார்களை - நண்பு செய்து தம்மால் நிலை நிறுத்தப்பட்டவர்களை, கண்கண்ட குற்றம் உள எனினும் - தாம் கண்கூடாகக் கண்ட குற்றம் அவர்மாட்டு இருக்கின்றன என்றறிந்தாலும், காய்ந்தீயார் - அறிவுடையோர் கோபிக்கமாட் டார்கள், தம் கன்று சா(வ)க் கறப்பார் யாருளர் - தம்முடைய கன்றிற்குப் பால் விடாமல் அது இறக்கும்படி பசுவினைக கறப் பவர் யாருமிலர் (அதுபோல).*

(க - து.) *அறிவுடையார் தம் நட்டார் குற்றம் செய்யினும் அதுகருதிச சினத்தல் இலர்.*

(வி - ம்.) *காய்ந்தீயார் : காய்ந்தீ - முன்னிலை யேவற்றிரி சொல். ஆர் : பலர்பால் விகுதி. அறிவுடையார் தாம் கன்று சாவுமாறு பால்கறவாா. அதுபோலவே, தம் நட்டாரது குற்றங காரணமாக அவரைச சினவாா அறிவுடையோர். நட்புச்செய்த பின்னர் தாம் அவர் என்னும் வேறுபாடின்மையால், அவரைக் கோபித்தல் தம்மைக் கோபித்தலை யொகக்கும் என்பது கருதிச் சினவார் என்பதாம். சாவக் கறப்பார் என்பது சாககறப்பார் என்று வந்தது விகாரம்.*

"யாருளரோ தங்கன்று சாக் கறப்பார்" என்பது பழ மொழி. (அ)

132. தந்தீமை யில்லாதார் நட்டவர் தீமையையும்
எந்தீமை யென்றே உணர்பதாம்—அந்தண்
பொருதிரை வந்துலாம் பொங்குநீர்ச் சேர்ப்ப!
ஒருவர் பொறையிருவர் நட்பு.

(சொ - ள்.) *அந்தண் பொருதிரை வந்து உலா(வு)ம் பொங்கு நீர் சேர்ப்ப - அழகிய குளிர்ந்த கரைகளில் மோது கின்ற அலைகள் மேன்மேல் வந்து வீசுகின்ற மிகுந்த நீரை உடைய கடல்நாடனே!, ஒருவர் பொறை யிருவர் நட்பு - ஒருவ*

பொறுக்கும் பொறுமையால் இருவரது நட்பும் நிலைபெறுமாத லால், தம தீமை இல்லாதார் – நட்டார்க்குத் தம்மால் செய்யப் பட்டதொரு தீமையில்லாதார், நட்டவர் தீமையையும் – தம் நட்டார் தமக்குச செய்த தீமையையும், எம் தீமை என்றே உணர்ப – எம்மால் செய்யப்பட்ட தீமையே என்று நினைத்துப் பொறுப்பார்கள்.

(க – து.) நட்புப் பூண்டொழுகு மிருவருள் ஒருவராவது பொறுமை மேற்கொண்டொழுகுதல் அவர்கள் நட்பு நீடித்து நிற்பதற்கு ஏதுவாகும்.

(வி – ம்) இருவரும் பொறுமையில்லாதவராக இருப்பின், அவர்கள் நட்பு நீடித்து நிற்காது. இருவருள் ஒருவராவது பொறுமை பூண்டிருத்தல இன்றியமையாத தொன்றும்.

"குடிப்பிறந்து தன்கட் பழிநாணு வானைக்
கொடுத்தும் கொளல்வேண்டு நட்பு."

பழிநாணுதல் – நட்டார் செய்த தீமையைப் பழிக்கஞ்சிப் பொறுத்தல். இதனுள் பொறுமை உடையானது நட்பினை விலை கொடுத்துக் கொள்க என்பதும், பொறுமையின் இன்றியமையா மையை வலியுறுத்தும்.

"ஒருவர் பொறை யிருவர் நட்பு" என்பது பழமொழி. (௯)

133. தெற்றப் பரிந்தொருவர் தீர்ப்பரெனப் பட்டார்க்கு
உற்ற குறையை உரைப்பதாம்—தெற்ற
அறையார் அணிவளையாய்! தீர்தல் உறுவார்
மறையார் மருத்துவர்க்கு நோய்.

(சொ – ள்.) தெற்ற அறை ஆர் அணி வளையாய் – தெளி வாக அறைதலைப் பொருந்திய (ஒலிக்கின்ற) அழகிய வளையினை உடையாய்!, தீர்தல் உறுவார் – பிணி நீங்க விரும்புவோர், மருத் துவர்க்கு நோய் மறையார் – வைத்தியனுக்கு நோயை மறைத்துச் சொல்லார (விளங்கச சொல்லுவர்). (அதுபோல), தெற்றப் பரிந்து – மிகவும் மனம் இரங்கி, ஒருவர் தீர்ப்பர் எனப்பட் டார்க்கு – தனது துன்பத்தை அறியின் தீர்ப்பர் என்று தம்மால் கருதப்பட்டார்க்கு, தாம் உற்ற குறையை உரைப்ப – தாம் அடைந்த துன்பத்தைக் கூறுவார்கள் அறிவுடையோர்.

(க - து.) அறிவுடையோர் தீர்க்கத்தக்கவரிடம் தம்குறை யைக் கூறுவார்கள்.

(வி - ம்.) தம்முடைய குறையை முடிக்கவல்லார் என்றறி யின் அவரிடத்துக் குறையைக் கூறுக. அங்ஙனமிருந்தும் அவர் அக்குறையை நீக்காவிடில் அவர்க்குப் பழி உளதாகுமே யன்றி தமக்குப் பழி இல்லை என்பதாம்.

''இரக்க இரத்தக்கார்க் காணின் கரப்பின்
அவர்பழி தம் பழி யன்று''

என்பதும் இக்கருத்துப் பற்றியது.

''மறையார் மருத்துவர்க்கு நோய்'' என்பது பழமொழி. (௧0)

134. முட்டின்(று) ஒருவர் உடைய பொழுதின்கண்
அட்டிற்றுத் தின்பவர் ஆயிரவர் ஆபவே
கட்டலர்தார் மார்ப! கலியூழிக் காலத்துக்
கெட்டார்க்கு நட்டாரோ இல்.

(சொ - ள்.) கட்டு அலர் தார் மார்ப - மொட்டுக்கள் முறுக் குடைந்து மலருகின்ற மாலையை உடைய மார்பனே!, முட்டு இன்று ஒருவர் உடைய பொழுதின்கண் - குறைவின்றி ஒருவர் செல்வமுடையராய பொழுதின்கண், அட்டிற்று - சமைத்த உணவினை, தின்பவர் ஆயிரவர் ஆப - உண்ணவருவோர் ஆயிரம் பேர் உளராவர், கலிஊழிக் காலத்து - கலியுகமாகிய காலத்தில், கெட்டார்க்கு – செல்வம இல்லாதவர்க்கு, நட்டார் இல் – நட் பினர் ஒருவரும் இலர்.

(க - து.) ஒருவன் செல்வமுடையனுய காலத்து அவனைச் சூழ்ந்து நிற்பதும, அஃதிலனுய காலத்துப் பிரிந்து நிற்பதும் கீழ்மக்களது இயற்கையாகும்.

(வி – ம்.) அட்டிற்று : வினையாலணையும் பெயர். ''அட் டிற்றுத் தின்பவர்'' எனவே எல்லாப் பொருள்களு மிருக்கவும், அவற்றைச சிறிது வருந்திச சமைத்துண்ணவு மாட்டார்கள்; சமைத்த உணவை உண்ணவருவா என்பதாம்.

''கெட்டார்க்கு நட்டாரோ இல்'' என்பது பழமொழி. (௧௧)

15, நட்பில் விலக்கு

135. கண்ணுள் மணியேபோல் காதலால் நட்டாரும்
எண்ணுந் துணையிற் பிறராகி நிற்பரால்
எண்ணி உயிர்கொள்வான் வேண்டித் திரியினும்
உண்ணுந் துணைக்காக்கும் கூற்று

(சொ - ள்.) கூற்று — இயமன், எண்ணி உயிர் கொள்வான் - ஆராய்ந்து உயிரை உண்ணும்பொருட்டு, வேண்டி திரியினும் - விரும்பித் திரிவானேயாயினும், உண்ணும்துணை காக்கும் - தான் உண்ணவேண்டிய காலம் வருமளவும் உயிரைப் பாதுகாத்து நிற்பான். (அதுபோல), கண்ணுள் மணியேபோல் - கண்ணினுள்ளேயிருக்கும் கருமணியைப்போல், காதலால் நட்டாரும் - தம் கருமத்தின்மேல் உள்ள ஆசையால் தம்மோடு நட்புச்செய்தவர்களும், எண்ணுந துணையில் பிறர் ஆகி நிற்பர் - தமக்கு ஆக வேண்டிய கருமம் முடிந்தது என்று நினைத்த அளவில் முன்னர் இருந்தவராக அன்றி வேறொருவராக நிற்பர்.

(க — து.) கீழ்மக்கள் தம் காரியம் முடியுமளவும் அதை முடிக்கவல்லாருடனிருந்து முடிந்தவுடன் விட்டு நீங்குவார்கள்.

(வி - ம்.) கூற்று, தான் தின்னுமளவும் உயிரைக் காத்தல் போல, கீழ்மக்களும் தம் காரியம் முடியுமளவும் கண்ணினுள்ள கருமணியைப்போல் போற்றிப் பாதுகாப்பர். நட்டார் என்றே மொழியாது "காதலால் நட்டார்" என்றமையால், அவர் நட்பு அவரது காரியத்தின் கண்ணதாயிற்று. அது முடியவேண்டுமென்ற ஆசையால் நட்புக்கொண்டாரேயன்றி வேறில்லையென்பது. "பிறராகி" என்பதற்கு, முன் தாம் வேறு அவர் வேறு என்ற வேறுபாடு இல்லாதார் போன்று ஒழுகியவர், பின்னர் அவ்வேறுபாடு தோன்ற நிற்பர் என்ற பொருள் கூறுதலுமாம். "உண்ணுந் துணை" ஊழால் இத்துணைக்காலம் என வரையறுக்கப்பட்ட காலம்.

"எண்ணி உயிர்கொள்வான் வேண்டித் திரியினும் உண்ணுந் துணைக் காக்கும் கூற்று" என்பது பழமொழி. (க)

136. எய்ப்புழி வைப்பாம் எனப்போற்றப் பட்டவர்
உற்றுழி ஒன்றுக் குதவலார் பைத்தொடீஇ
அச்சிடை யிட்டுத் திரியின் அதுவன்றே
மச்சேற்றி ஏணி களைவு,

(சொ - ள்.) பைத்தொடீஇ - பசுமையான பொன் வளையலை உடையாய்!, எய்ப்புழி வைப்பாம் என - தளர்வு வந்த இடத்து வைத்த பெருநிதியை ஒப்ப உதவி செய்வர் எனக் கருதி, போற்றப்பட்டவர் - நம்மால் விரும்பி நட்புக்கொள்ளப்பட்டவர், உற்றுழி - நமக்கு ஓர் இடையூறு வந்துற்ற விடத்து, ஒன்றுக்கு உதவலர் - ஒரு சிறிதும் உதவிசெய்யாதவராகி, அச்சு இடையிட்டு திரியின் - அச்சம் காரணமாக மறுத்தொழுகின், அது

அச் செய்கை, மச்சு ஏற்றி ஏணி களைவு அன்றோ - ஒருவனை மச்சின்மீது ஏற்றி ஏணி நீக்குதலை யொக்கும் அல்லவா!

(க - து.) தம்மையே அடைக்கலமாக நினைத்து அடைந்தவர் ஒரு தீதுற்றால் தமக்கு இறுதி பயப்பினும் அவர்க்கு முன்னின்று உதவுதல் வேண்டும்.

(வி - ம்.) இவரே நம்முடைய துன்பத்தை நீக்குவார் என்று வேறு சாதனங்களைத் தேடாது நம்பி இருத்தலின், அவர்க்கு உதவி செய்தல் அறிவுடையோர் கடமையாகும்.

பைங்தொடி, பைத்தொடி என்றாயது வலித்தல் விகாரம். அச்சம், அச்சு என்று ஈறு குறைந்து நின்றது.

"மச்சேற்றி ஏணி களைவு" என்பது பழமொழி. (உ)

137. பாப்புக் கொடியாற்குப் பால்மேனி யான்போலத்
தாக்கி அமருள் தலைப்பெய்யார்—போக்கி
வழியராய் நட்டார்க்கு மாதவம்செய் வாரே
கழிவிழாத் தோளேற்று வார்.

(சொ - ள்.) பாப்புக் கொடியாற்கு - பாம்புக் கொடியை உடைய துரியோதனனுக்கு, பால் மேனியான் போல - போர் ஏற்பட்டவுடன் அதற்குதவாது சென்ற பால்போன்ற உடம்பினையுடைய பலராமனைப்போல, வழியராய் நட்டார்க்கு - வழி வழியாகத் தம்மோடு நட்பினைச் செய்தார் பொருட்டு, தாக்கி(ய) அமருள் தலைப்பெய்யார் - மிகத் துன்புறுத்தும் போரின்கண் கலத்தலிலராய், போக்கி - அவர் உயிரைப் பகைவரால் போகச் செய்து, (பின்னர்) மா தவம் செய்வார் - இறந்தார் பொருட்டு நீத்தார் கடனைச் சிறப்பாகச் செய்பவர்கள், கழி விழா தோள் ஏற்றுவார் - கழிந்த விழாவினை உடைய ஊரில தம் புதல்வற்கு விழாக்காட்டும்பொருட்டு அவரைத் தோள்மீது சுமப்பாரோ டொப்பர்.

(க - து.) நட்டார் துன்புற்றபோது அவர்க்காவன செய்யாது அவர் இறந்தபின் சிறப்புச் செய்தல் கீழ்மக்களது செய்கையாகும்.

(வி - ம்.) பாம்பு-பாப்பு; வலித்தல். கௌரவர்க்கும் பாண்டவர்க்கும் போர் நேரிட்டபொழுது கௌரவர்க்குச் சார்பாய் இருந்த பலராமன் துரியோதனனிடம் வெறுப்புக்கொண்டு அவற்கு உதவிசெய்ய வேண்டுமென்று நினையாது, விதுரனையும்

அழைத்துக்கொண்டு தீர்த்த யாத்திரை செய்யும்பொருட்டுச் சென்றான். இது முதலடியிற் குறிக்கப்படும் செய்தி.

தவம்—இறந்தார்களுக்காக 12ஆம் நாள் அல்லது 16ஆம் நாட்களில் அவர் நன்னிலை யுறுக என்று கூறிச் செய்யும் சிறப்பு. விழாக் கழிந்த பின்பு சென்று காண்போன் அவ்விழாச் சிறப்பின் பயனை அடைதல் இல்லை. அதுபோல, உயிரோடிருக்கும்போது ஓர் உதவியும் செய்யாது இறந்தபின் செய்யும் சிறப்பால் பயனில்லை.

"கழிவிழாத் தோளேற்றுவார்" என்பது பழமொழி. (௩)

138. இடையீ டுடையார் இவரவரோ டென்று
தலையாயார் ஆராய்ந்தும் காணார்—கடையாயார்
முன்னின்று கூறும் குறளை தெரிதலால்
பின்இன்னா பேதையார் நட்பு.

(சொ - ள்.) தலையாயார் - மேம்பட்ட குணங்களை உடையவர்கள், (தம் நட்டார்மீது சிலர் கோள் கூறின்) இவர் அவரோடு இடையீடு உடையார் என்று - கோள்கூறிய இவர்கள் நம் நட்டாரோடு மாறுபாடு உடையவர் என்று நினைத்து, ஆராய்ந்தும் காணார் - அவர் கூறியனவற்றை ஆராய்ச்சிசெய்து குற்றம் காண்பதிலர், கடையாயார் - கடைப்பட்ட குணங்களை உடைய கீழோர், முன்நின்று கூறும் குறளை தெரிதலால் — தம் நட்டார் மேல் பிறர் வந்து கூறும் கோள்களை ஆராய்ச்சி செய்து அவர் குற்றங்களைக் காண்டலின், பேதையார் நட்பு பின் இன்னா - அறிவிலாரோடு கொண்ட நட்பு பின்னா இன்னாததாக முடியும்.

(க - து.) அறிவுடையோர் நட்டார் குற்றத்தைக் காணமாட்டார்கள். அறிவிலார் அவர் குற்றத்தை ஆராய்ந்து காண்பார்கள்.

(வி - ம்.) "கேள் இழுக்கம் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு" என்பதும் இது. கூறுவோர் தம் நட்டாரிடத்துள்ள மாறுபாட்டால் கூறுகின்றார் என்றறிவதல்லது அவரிடத்து அக் குற்றங்கள் உளவாக அறியார் அறிவுடையோர். "பின் இன்னா" என்றமையால் கீழ்மககளோடு கொண்ட நட்பு முதலில் மக இனிமையாதல் பெறப்படும். கீழ்மக்களோடு தாம கொண்ட நட்பினைத் தாம் விடினும் அவர்கள் விடாது நிற்றலால் "இன்னா" என்றார். எனவே, அவரது நட்பினின்றும் நீங்குதலே இனிமை பயப்பதாம் அறிவிலார் நட்பு பின் இன்னா எனவே, அறிவுடையோர் நட்பு முன் இன்னா; பின் இனிது என்பதும் அறியப்படும்.

"பின் இன்னா பேதையார் நட்பு" என்பது பழமொழி. (௪)

139. தாமகத்தால் நட்டுத் தமரென் றொழுகியக்கால்
நாணகத்துத் தாமின்றி நன்றொழுகா ராயினென்?
மான்மானும் கண்ணாய் ! மறந்தும் பரியலரால்
கானகத் துக்க நிலா.

(சொ - ள்.) *மான் மானும் கண்ணாய் - மான்போன்ற (மருண்ட) நோக்கினை உடையாய், தாம் அகத்தால் நட்டு தமர் என்று ஒழுகியக்கால் - தாம் மனத்தால் நட்புப்பூண்டு சுற்றத்தார் என்னும்படி ஒழுகியவிடத்தும், நாணகத்து தாம் இன்றி நன்று ஒழுகாராயின் – தம்மால் நட்பாகக் கொள்ளப்பட்டார் மனதின் கண் நாணம் இல்லாது, (நட்பிற்குத்தக்க நல்ல செயல்களைச் செய்து ஒழுகாவிடில்) என் - அந்நட்பால் என்ன பயனுண்டாம்? மறந்தும் பரியலர் - மனத்தால் நட்புச்செய்த அவர்கள் மறந்தும் இரங்குதல் இலர், கானகத்து உக்க நிலா - அந்நட்பு, (அனுபவித் தற்குரிய மககளில்லாத) காட்டில் எறித்த நிலவினை ஒக்கும்.*

(க - து.) *கீழ்மக்களோடு கொண்ட நட்புப் பயனற்று ஒழியும்.*

(வி - ம்.) *"குணனும் குடிமையும் குற்றமும் குன்றா, இனனும் அறிந்தியாக்க நட்பு" என்பாராகலின், அஙஙனம் ஆராயாது கொண்ட நட்புப் பயனற்று ஒழிதலைப்பற்றி வருந்தார் என்பது, மனத்தால் நட்புச் செய்திருப்பினும் ஆராய்ந்து கொள்ளாமையின் அதற்காக வருந்துவதிலர் என்பார் "மறந்தும் பரியலர்" என்றார். காட்டின்கண் எறித்த நிலா பயனற்றொழிதல் போல, அறிவிலாரோடு கொண்ட நட்பும் பயனற்று ஒழியுமென்பதாம்.*

"கானகத் துகக நிலா", என்பது பழமொழி. (௯)

140. கண்டறிவார் போலார் கெழீஇயின்மை செய்வாரைப்
பண்டறிவார் போலாது தாமும் அவரேபோல்
விண்டொரீஇ மாற்றி விடுதல் அதுவன்றே
விண்டற்கு விண்டல் மருந்து.

(சொ - ள்.) *கண்டு அறிவார் போலார்-(முன்னரே அறிந்து வைத்தும்) கண்டு அறிவார் போலாராகி, கெழீஇ இன்மை செய்வாரை - நட்பு இன்மையை உண்டாக்குவாரை, தாமும் பண்டு அறிவார் போலாது - தாமும் முன்னரே அறிவார்போன்று இல்லாது, அவரேபோல் - அவர் நட்பின்மையை உண்டாக்கியது போல, விண்டு ஒரீஇ மாற்றி விடுதல் - அவரின் பிரிந்து நீங்கி*

நட்பினை மாற்றிவிடுக, அது - அசசெய்கை, விண்டற்கு விண்டல் மருந்து அன்றோ-தன்னிடத்துப் பூண்ட அன்பினை நீக்கியதனுக்குத் தானும் அது நீக்குதல் மருந்தாமாறுபோ லாகுமல்லவா !

(க - து.) தம்மை நன்றாக அறிந்திருந்தும் அறியாதார் போன்று நடிப்பார் நட்பு விடுதற்குரியதாகும்.

(வி - ம்.) முன்னரே அறிந்திருந்தும் அறியார்போலக் கூறின், அவர்களுற்ற இன்னலை நீக்கவேண்டிய நிலைமை ஏற்படுமாதலால், அறியார்போலக் காட்டுவர். இத்தகையோரிடத்தில் நாம் முன்னரே நன்றாக அறிந்ததாகக் கூறினும் அவரால் பயன் பெறுதல் இல்லை. ஆதலால், அவரைப்போல நாமும் நட்பினை விடுதலே நன்றென்பதாம்.

கெழீஇ இன்மை - பொருந்துதல் இன்மை (அஃதாவது) நட்பின்மை. ஒருவி—ஒரீஇ என வந்தது விகாரம்.

"விண்டற்கு விண்டல் மருந்து" என்பது பழமொழி. (௬

141. பெரியநட் டார்க்கும் பகைவர்க்கும் சென்று
திரிவின்றித் தீர்ந்தார்போல் சொல்லி அவருள்
ஒருவரோ டொன்றி ஒருப்படா தாரே
இருதலைக் கொள்ளியென் பார்.

(சொ - ள்.) பெரிய நட்டார்க்கும் - தம்மிடத்தில் மிகுதியாக நட்புப் பூண்டவர்க்கும், பகைவர்க்கும் – அவரது பகைவர்க்கும், சென்று திரிவு இன்றி தீர்ந்தார்போல் சொல்லி—அவரிடத்திற் சென்று மனவேறுபாடு இன்றி மிகவும் நட்டார்போன்று நின்று அவர்களது பகைமையை வளர்க்கும் சொற்களைச் சொல்லி, அவருள் ஒருவரோடு ஒன்றி ஒருப்படாதார் - அவர்களுள் ஒருவரோடும் மனம் பொருந்த இருந்து உறுதியாயின செய்ய மனமியையாதார் இருதலைக்கொள்ளி என்பார் - இருகடையாலும் சுடுகின்ற கட்டை என்று சொல்லப்படுவார்.

(க - து.) ஏற்பன கூறி இருவரது பகைமையை வளர்த்தல் அறிவிலாரது இயல்பு.

(வி - ம்.) இரண்டு கடையாலும் சுடுகின்ற கொள்ளியை ஒப்ப, இருதிறத்தார்கண்ணும் பகைமையைக் கொளுத்துவரேயன்றி, ஒருதிறத்தார் மாட்டாவது நின்று நன்மை செய்யார் அறிவிலார்.

"இருதலைக் கொள்ளி" என்பது பழமொழி. (எ)

16. பிறரியல்பைக் குறிப்பாலறிதல்

142. பெருலையுள் பெய்த அரிசியை வெந்தமை
ஓர்முழை யாலே உணர்ந்தாங்கு—யார்கண்ணும்
கண்டதனால் காண்டலே வேண்டுமாம் யார்கண்ணும்
கண்டது காரணமாம் ஆறு.

(சொ - ள்.) *யார் கண்ணும் கண்டது காரணம் ஆமாறு - யாவரிடத்தும் அறியப்பட்ட குணமே அறியப்படாத பிறவற்றையும் அறிதற்குரிய வழியாம் (ஆதலால்), பேர் உலையுள் பெய்த அரிசியை - கொதிக்கின்ற பெரிய உலையுள் இட்ட அரிசியை, வெந்தமை - வெந்த விதத்தை, ஓர் மூழையாலே உணர்ந்தாங்கு - ஓர் அகப்பைச் சோற்றாலே அறிந்ததைப்போல, யார் கண்ணும் கண்டதனால் காண்டலே வேண்டும் - யாரிடத்தும் அறியப்பட்ட செயல் ஒன்றுகொண்டே குணம், ஒழுக்கம் முதலியவற்றை அறிதல் வேண்டும்.*

(க - து.) *ஒருவருடைய செயல் கொண்டே அவரது குணம், ஒழுக்கம் முதலியவற்றை அறியவேண்டும்.*

(வி - ம்.) *உலையிலுள்ள சோறு ஒவ்வொன்றையும் எடுத்துப் பார்த்தல் வேண்டாதது போல, குணம், ஒழுக்கம், செயல் முதலிய ஒவ்வொன்றையும் தனித்தனியே ஆராய்தல் வேண்டுவதில்லையாம. அது முடியாத காரியம் ஆதலால், ஓர் அகப்பைச சோற்றால் பானையிலுள்ள சோறு ஒவவொன்றின் பதமும் அறியப் படுதல்போல, செயல் ஒன்றானே அவரைப்பற்றிய ஒழுக்கங்கள், குணங்கள் முதலியன தனித்தனியே அறியப்படு மென்பதாம்.*

"கண்டது காரணம் ஆம்" என்பது பழமொழி. (௧)

143. யாந்தீய செய்த மலைமறைத்த தென்றெண்ணித்
தாந்தீயார் தந்தீமை தேற்றாரால்—ஆம்பல்
மணவில் கமழும் மலிதிரைச் சேர்ப்ப!
கணையிலும் கூரியவாம் கண்.

(சொ - ள்.) *ஆம்பல் மணஇல் கமழும் மலிதிரை சேர்ப்ப - ஆம்பல்பூக்கள் மணமனையைப்போல் நறுநாற்றம கமழுகின்ற மிக்க அலைகளை உடைய கடல்நாடனே!, யாம் செய்த தீய - நாம் செய்த தீயசெயல்களை, மலை மறைத்தது என்று எண்ணி - மலை யானது வெளிக்காட்டாது மறைத்தது என்று நினைத்து, தீயார்*

தாம் தம்தீமை தேற்றார் - தீயசெயல்களையுடைய அவர்கள் தாம் செய்யும் தம் தீய செயல்களினின்றும் தெளிதல் இலர், கணை கணையினும் கூரிய - மனத்து நிகழ்ச்சியை முகத்தின் வாயிலாக மிகவும் கூர்மையாகக் கண்கள் அறிந்துகொள்ளலின் அவை அம்பினும் கூர்மையுடையன வாம்.

(க - து.) பிறரது உள்ள நிகழ்ச்சியை அறிவதற்குக் கண்களே சிறந்த கருவிகளாம்.

(வி - ம்.) தீயார் தாம் செய்த தீமை மறைக்கப்பட்டன என்று கருதினும், அவர் செய்த தீமையை அவர் முகமே கண்டு விளக்கிக் காட்டலின், அஃது எல்லோராலும் அறியப்படும் என்பதாம். கண்கள முகத்தைககொண்டு அகத்தை மிகக் கூர்மையாக அறிதலின் "கணையிலும் கூரிய கண்" என்றார்.

"கணையிலும் கூரியவாம் கண்" என்பது பழமொழி. (உ)

144. வெள்ளம் வருங்காலை ஈரம்பட் டஃதேபோல்
கள்ள முடையாரைக் கண்டே அறியலாம்
ஒள்ளமர் கண்ணாய்! ஒளிப்பினும் உள்ளம்
படர்ந்ததே கூறும் முகம்.

(சொ - ள்.) ஒள் அமர் கண்ணாய்-ஒளிபொருந்திய கண்ணை உடையாய்!, வெள்ளம் வரும் காலை ஈரம்பட்ட அஃதேபோல் - வெள்ளம் வருகின்ற காலத்தில் ஈரம் பொருந்திய மணலைப் போல, கள்ளம் உடையாரை - வஞ்சனையான எண்ணம் உடையாரை, கண்டே அறியலாம் - மனத்தை முகங் காட்டுதலின் அதனைக்கொண்டே அறிந்துகொள்ளலாம், ஒளிப்பினும - தங் கருத்தை வெளித்தோன்றாமல் ஒருவர் மறைப்பினும, முகம் உள்ளம் படர்ந்ததே கூறும் - முகமானது அவா மனததில் உள்ளதையே வெளிப்படுக்குமாகலான்.

(க - து.) மறைப்பினும் உள்ளத்தில் உள்ளவாறே முகம காட்டு மென்பதாம்.

(வி - ம்.) ஆற்றில் முன்னே உண்டாகின்ற ஈரத்தினால் பின்னே வெளளம் வருமென்று அறியபபடுதல்போல, முகத்தின் குறிப்பால் அகத்தின்கண் உள்ள எண்ணம் அறியப்படும் என்ப தாம். "படர்ந்ததே கூறும்" என்றதனால் அவா மறைத்தமை யையுங்கூட வெளிப்படுததும் என்பதாம்.

"உள்ளம் படர்ந்ததே கூறும் முகம்" என்பது பழமொழி. (௩)

145. நோக்கி அறிகல்லாத் தம்உறுப்புக் கண்ணாடி
நோக்கி அறிப அதுவேபோல்—நோக்கி
முகனறிவார் முன்னம் அறிப அதுவே
மகனறிவு தந்தை யறிவு.

(சொ - ள்.) *நோக்கி அறிகல்லா தம் உறுப்பு-தம் கண்ணால் நோக்கி அறியமுடியாத தமது உறுப்பாகிய முகத்தை, கண்ணாடி நோக்கி அறிப - கண்ணாடியில் பார்த்துத் தெரிந்துகொள்வர், அதுவேபோல் - அதேபோல், நோக்கி முகன் அறிவார்-நோக்கி ஒருவன் முகத்தை அறிகின்றவர்கள். முன்னம் அறிப - காண முடியாத அவனது உட்கருத்தை அறிவார்கள், அது-உள்ளத்தின் கருத்தை அவர் முகம் நோக்கி அறிதல், தந்தை யறிவு மகன் அறிவு - தந்தையினது அறிவை அவன் மகனது அறிவு நோக்கி அறிதல் போலும்.*

(க - து.) *முகத்தால் உள்ளக் கருத்து அறியப்படும்.*

(வி - ம்.) *மகனது அறிவு தந்தையினது அறிவை ஒத்திருத்தல்போல, அகத்தினது கருத்தே முகத்தினும் அறியப்படும்.*

"மகனறிவு தந்தை யறிவு" என்பது பழமொழி. (௫)

146. ஒரும் ஒருவர் ஒருவர்தம் உள்ளத்தைத்
தேரும் திறமரிதால் தேமொழி!—யாரும்
குலக்குல வண்ணத்த ராகுப; ஆங்கே
புலப்புல வண்ணத்த புள்.

(சொ - ள்.) *தேமொழி - தேன்போன்ற சொற்களை உடையாய்!, ஒருவர் தம் உள்ளத்தை ஒரும் ஒருவர் - ஒருவரது உள்ளத்தின் தன்மை ஆராய விரும்பும் ஒருவரால், தேரும் திறம் அரிது - ஆராயும் திறம் இல்லை, புலப்புல வண்ணத்த புள - நிலந்தோறும் தாம் வாழும் நிலததிற்குத் தக்க தன்மையாயிருக்கும் புட்கள், ஆங்கே - அதுபோல, குலக்குல வண்ணத்தராகுப - மக்கள் குலங்கள்தோறும் அவ்வக் குலத்திற்குரிய தன்மையை உடையவராயிருப்பார்கள்.*

(க - து.) *ஒருவரது குலத்தால் அவரது குணம் அறியப்படும்.*

(வி - ம்.) *ஒருவருடைய குணங்களை ஆராய்ந்து கண்டறிய முடியாது. அவரது குலங்கொண்டே குணம் அறியப்படும்*

என்பதாம். ஆகவே, குலமே தம்மையுடையாரது குணத்தை அறிவுறுத்துவதாம்.

"புலப்புல வண்ணத்த புள்" என்பது பழமொழி. (௬)

147. **காப்பான் மடமகள் காப்பான்கைப் பட்டிருந்தும்**
மேய்ப்பாட்ட தென்றுண்ணு ளாயினுன்—தீப்புகைபோல்
மஞ்சாடு வெற்ப! மறைப்பினும் ஆகாதே
தஞ்சாதி மிக்கு விடும்.

(சொ - ள்.) தீ புகைபோல் மஞ்சு ஆடு வெற்ப - தீயினது புகையைப்போல் மேகம் பரவி உலாவுகின்ற மலைநாடனே!, காப்பான் மடமகள் - மந்தையைக் காக்கும் இடையனின் மகள், காப்பான் கை பட்டிருந்தும் - உலகத்தினைக் காக்கும் அரசனுக்கு மனைவியாயிருந்தும், மேய்ப்பு ஆட்டது என்று உண்ணுள் ஆயினுள் - (ஒருநாள் பால் உண்ணும்போது) மேய்ச்சல் ஆட்டினது பால் இதுவாதலால் மதுரமாயிருந்ததில்லை யென்று அப்பாலை உண்ணுது நீக்கினுள், மறைப்பினும் ஆகாது - ஒருவர் தங் குலத்திற் குரிய ஒழுககத்தை மறைத்தாராயினும் மறைபடாது தம் சாதி மிக்குவிடும் - தமது குலத்திற் குரிய ஒழுக்கம் அவருக்கு முற்பட்டுத் தோன்றிக் குலத்தினைப் பிறரறியச் செய்யும்.

(க - து) குலத்திற்குரிய ஒழுக்கம் மறைப்பினும் மறைபடாது முற்பட்டுத் தோன்றும்.

(வி - ம்.) இடையர் மகள் ஆட்டின் பால் சுவையை நன்முக அறிவாளாதலால், இது சூல்கொண்ட ஆட்டின்பா லாதலால் இனிமையாக இல்லை யென்று கூறினுள். ஆடுகள் எல்லாம் மேய்க்கப்படும் தன்மையவாயினும், சூல்கொண்ட ஆடுகள் கட்டாயம் மேய்க்கப்படும் தன்மையை உடையன. அது கருதியே சூல் கொண்ட ஆட்டிற்கு மேய்ப்பாடு என்று கூறினுர் ஆகவே, மேய்ப்பாடு என்றது சூல்கொண்ட ஆடேயாம். சூல்கொண்ட ஆடுகள் சூல்கொண்ட பின்னரும் சிலநாட்கள் பால் தருதல் உண்டு ஆயினும், அப்பால் இனிமையுடையதாய் இருப்பதில்லை. அரசனுடைய மனைவியாயிருந்தும் தன் சாதியைத் தானே வெளிப் படுத்துதல்போல, ஒழுக்கங்களை எவ்வளவு மறைப்பினும் அவை முற்பட்டுத் தோன்றிக் குலத்தினை அறிவிக்கும் என்பதாம்.

"மறைப்பினும் ஆகாதே தஞ்சாதி மிக்குவிடும்" என்பது பழமொழி. (௯)

148. முயலவோ வேண்டா முனிவரை யானும்
இயல்பினர் என்ப தினத்தால் அறிக
கயலியலும் கண்ணாய் கரியரோ வேண்டா
அயலறியா அட்டூணோ இல்.

(சொ - ள்.) கயல் இயலும் கண்ணாய்-சேலை ஒத்து விளங்கும் கண்ணை உடையாய்!, அயலறியா அட்டு ஊணோ இல்-அயல் மனையாரால் அறியப்படாது சமைக்கப்படும் உணவோ இல்லை, (ஆதலால்) முயலவோ வேண்டா - ஒருவரது இயல்பை யறிய மற்றொன்றால் அறியவேண்டுவதில்லை, முனிவரையானும் - முனிவரேயாயினும், இயல்பினர் என்பது இனத்தால் அறிக - நல்ல இயல்பினை உடையார் தீய இயல்பினை உடையார் என்பதை அவரால் கூடப்பட்ட இனத்தாரால் அறிக, (ஆகையால்) கரியர் வேண்டா - சாட்சி சொல்வோரா வேண்டுவதில்லை.

(க - து.) ஒருவருடைய இயல்பை அவரது இனத்தால் அறியலாம்.

(வி - ம்.) ஆயினும் என்றது ஆனும் எனக் குறைந்து நின்றது.

"அயலறியா அட்டூணே இல்" என்பது பழமொழி. (எ)

17. முயற்சி

149. எமக்குத் துணையாவார் வேண்டுமென் றெண்ணித்
தமக்குந் துணையாவார்த் தாந்தெரிதல் வேண்டா
பிறர்க்குப் பிறர்செய்வ துண்டோமற் றில்லை
தமக்கு மருத்துவர் தாம்.

(சொ - ள்.) எமக்கு துணையாவார் வேண்டும் என்று எண்ணி - எமக்கு ஓர் இடர் வந்தால் அதனைக் களைந்து துணை செய்வோர் வேண்டுமென்று நினைத்து, தமக்கு துணையாவார் தாம் தெரிதல்வேண்டா-தமக்கு உதவிசெய்வோரைத் தாம் ஆராய்தல் வேண்டா, பிறர்க்கு பிறர் செய்வது உண்டோ-பிறர் ஒருவருக்குப் பிறரால் செய்யத்தக்கது ஒன்று உண்டோ?, இல்லை - துணையாவாரைக் கண்டிடினும் ஒரு சிறிதும் நன்மை விளைதல் இல்லை, தமக்கு மருத்துவர் தாம்-தம் நோயைத் தடுப்பார் தாமே யாவர்.

(க - து.) தமக்கு வேண்டிய நன்மையை தாமே தேடிக்கொள்ளல் வேண்டும்.

(வி - ம்) அளவுக்குமீறி உண்டு நோயைத் தாமே உண்டாக்கிக் கோடலின், அந்நோயைப் போக்கும் ஆற்றலும் அவர்க்கு உண்டாம். அதுபோல, தமக்குப் பிறர் வாயிலாக வருந் துன்பங்கள் யாவும் தம்மாலேயே செய்துகொள்ளப்பட்டனவாதலின், அதனைத் தாமே நீக்குதல் வேண்டு மென்பதாம். பிறரைத் தேடுதல் கூடாது.

"தமக்கு மருத்துவர் தாம்" என்பது பழமொழி. (க)

150. கற்றதொன் றின்றி விடினும் கருமத்தை
அற்ற முடிப்பான் அறிவுடையான்—உற்றியம்பும்
நீத்தநீர்ச் சேர்ப்ப ! இளையோனே யாயினும்
மூத்தானே யாடு மகன்.

(சொ - ள்.) உற்று இயம்பும் நீத்தம் நீர் சேர்ப்ப-பொருந்தி ஆரவாரிக்கும் பிரளய கால வெள்ளம்போல் பரக்கும் நீரையுடைய கடல்நாடனே!, கற்றது ஒன்று இன்றிவிடினும் - படித்தறிந்தது ஒரு சிறிதும் இல்லையாயினும், கருமத்தை அற்றமுடிப்பான் அறிவுடையான் - தொடங்கிய செயலைச சோம்பலின்றி முடிப்பவன் அறிவுடையானெனப்படுவான், ஆடுமகன் - அங்ஙனம் செயலை ஆற்றுவோன், இளையோனேயாயினும் மூத்தானே - ஆண்டில் இளையவனையாகுலும் அறிவில் முதிர்ந்தவன் எனப்படுவான்.

(க - து.) நூலறி வில்லானேயாயினும் கருமச் சூழ்ச்சி யறிதலின், எடுத்த செயலை முடிப்போன் அறிவுடையா னெனப் படுவான்.

(வி - ம்.) நூலறிவு இன்றே யெனினும், செயலை முடிக்கும் கருமச சூழ்சசி அவன்க ணிருத்தலின, அறிவுடையா னென்றே எண்ணத் தகும்.

"இளையோனே யாயினும் மூததானே யாடுமகன்" என்பது பழமொழி. (உ)

151. வேளாண்மை செய்து விருந்தோம்பி வெஞ்சமத்து
வாளாண்மை யாலும் வலியராய்த்—தாளாண்மை
தாழ்க்கு மடிகோ ளிலராய் வருந்தாதார்
வாழ்க்கை திருந்துதல் இன்று.

(சொ - ள்.) வேளாண்மை செய்து-தம்மோடு தொடர்பில்லாதவர்களுக்கு வேண்டிய உதவியைச செய்து, விருந்து ஓம்பி

தம்மோடு தொடர்புடையராய் வந்த விருந்ினரை உபசரித்து, வெஞ்சமத்து - கொடிய போரிடத்து, வாள் ஆண்மையாலும் வலியராய் - வாளால் செய்யும் ஆண்மையிலும் வலிமையுடையராய், தாளாண்மை தாழ்க்கும் மடிகோள் இலராய் – முயற்சியைக் குறைவிக்கும் சோம்பலைக் கொள்ளாதவராய், வருந்தாதார் வாழ்க்கை – வருந்திச் செய்யாதவர்களது மனைவாழ்க்கை, திருந்துதல் இன்று - செப்பம் அடைதல் இல்லை.

(க - து.) வேளாண்மை, விருந்தோம்பல், வாளாண்மை, தாளாண்மை முதலியன மனைவாழ்க்கை யுடையார்க்கு வேண்டுமென்பதாம்.

(வி - ம்.) மனைவாழ்க்கை திருந்துவதற்கு வாளாண்மையையும் ஒன்றாகக் கூறினார்; அஃது ஆடவற்குச் சிறந்தமைபற்றி.

"வருந்தாதார் வாழ்க்கை திருந்துதல் இன்று" என்பது பழமொழி. (ரு)

152. ஒன்றால் சிறிதால் உதவுவ(து)ஒன் றில்லையால்
என்றாங் கிருப்பின் இழுக்கம் பெரிதாகும்
அன்றைப் பகலேயும் வாழ்கலார் நின்றது
சென்றது பேரா தவர்.

(சொ - ள்.) ஒன்றால் - உள்ள பொருள் ஒன்றேயென்றும், சிறிதால்-அதுவும் சிறியதே என்றும், உதவுவது ஒன்றில்லையால்—எடுத்த செயலை முடிப்பதற்குப் போதிய உதவி இல்லையே, என்று ஆங்கு இருப்பின் - என்று நினைத்துச் சோம்பி இருப்பின், இழுக்கம் பெரிதாகும் - குற்றம் பெரிதாகும், நின்றது சென்றது பேராதவர் – தம்மிடத்துள்ள பொருளைப் பிறர்க்குக் கொடுத்தும் பிறரிடத்துக் கொடுத்த பொருளைத் தாம் மீளக்கொண்டும் எவ்விதத்திலும் முயற்சி செய்யாதவர்கள், அன்றைப் பகலேயும் வாழ்கலார் – ஒருநாளின் உள்ளேயே அழிந்துவிடுவர்.

(க – து.) ஒருவன் சோம்பலுடையவனா யிருப்பின், அதனால் மிகுந்த குற்றங்கள் உளவாம்.

(வி - ம்.) "நின்றது சென்றது பேராதவர்" என்பது கொடுக்கல் வாங்கல் முதலிய தொழில்களில் எதுவுஞ் செய்யாதார் என்பதாம். அங்ஙனம் ஏதாவது நிகழ்த்தின் ஒரு சிறிது ஊதியமாவது அடையலாம் அதுவுமின்றி யிருப்பார் குற்றங்களாற் பீடிக்கப்படுவர் என்பதாம்.

"நின்றது சென்றது பேராதவர்" என்பது பழமொழி. (சு)

153. **இனியாரு மில்லாதார் எம்மிற் பிறர்யார்**
தனியேம்யாம் என்றொருவர் தாமடியல் வேண்டா
முனிவில ராகி முயல்க முனிவில்லார்
முன்னிய தெய்தாமை யில்.

(சொ - ள்) *இனி - இப்பொழுது, யாரும் இல்லாதார் எம்மில் பிறர் யார் - சார்வாக ஒருவரையு மில்லாதார் எம்மை விட யாருளர் இவ்வுலகத்தில், தனியேம் யாம் - தனிமையுடையவ ராக ஆயினேம், என்று ஒருவர் தாம் மடியல் - என்று கருதி ஒருவர் சோம்பியிருக்க வேண்டுவதில்லை, முனிவு இலர் ஆகி முயல்க - எடுத்த காரியத்தின்கண் சோர்வு இல்லாதவராகி முயற்சி செய்க, முனிவு இல்லார் முன்னியது எய்தாமை இல் - காரியத்தின்கண் வெறுப்பில்லாதவர்கள் தாம் நினைத்ததை அடையாமலிருத்தலில்லை யாதலால்.*

(க - து.) *தொடங்கிய காரியத்தில் சோம்பலும் வெறுப்பும் இன்றி அதனைச் செய்தல் வேண்டும.*

(வி - ம்.) *தொடங்கிய செயலின்கண் வெறுப்பின்றிச் செய்யவே, அது விரைவில் முடியுமாதலால் நினைத்த பயனை அடைதல் கூடும். முயற்சியே செல்வத்தை உளவாக்குமாதலால், அதனைச் செய்க என்றார். தமது முயற்சியின்றித் துணையாவார் செய்வது ஒன்றுமில்லை யாதலால், அது கருதிச் சோம்பித் திரியேல் என்பார் ''மடியல் வேண்டா'' என்றார்.*

''முனிவில்லார் முன்னியது எய்தாமை யில்'' என்பது பழமொழி. (௩)

154. **தற்றூக்கித் தன்துணையுந் தூக்கிப் பயன்தூக்கி**
மற்றவை கொள்வ மதிவல்லார்—அற்றன்றி
யாதானும் ஒன்றுகொண்டு யாதானும் செய்தக்கால்
யாதானும் ஆகி விடும்.

(சொ - ள்.) *தன் தூக்கி - தன்னால் இக்காரியங்கள் முடியுமா வென்று முதலில் ஆராய்ந்து, தன் துணையுந் தூக்கி - தனக்குத் துணையாவாரையும் ஆராய்ந்து, பயன் தூக்கி - செய்தால் உளவாம் பயனையும் ஆராய்ந்து, மதிவல்லோர் அவை கொள்ப - அறிவிற் சிறந்தோர் அவற்றை மேற்கொள்வர், அற்றன்றி - அங்ஙனம் ஆராய்தல் இல்லாமல், யாதானும் ஒன்று கொண்டு - இயலாத*

செயல்களுள் யாதானும் ஒன்றை மேற்கொண்டு, யாதானும் செய்தக்கால் - செய்யும் முறை யறியாது எதாவது செய்தால், யாதானும் ஆகிவிடும் - தான் தான் நினைத்ததின்றி அதற்கு மாறாகித் துன்பமே உண்டாகும்.

(க - து.) எக்காரியத்தையும் ஆராய்ந்தே தொடங்க வேண்டும்.

(வி - ம்.) "யாதானும் ஆகிவிடும்" என்றமையால், தான் நினைத்தது கைகூடாமல் துன்பமே வந்துமுடியு மென்பதாம்.

"யாதானும் ஒன்று கொண்டு யாதானும் செய்தக்கால் யாதானும் ஆகிவிடும்" என்பது பழமொழி. (௬)

155. வீங்குதோட் செம்பியன் சீற்றம் விறல்விசும்பில்
தூங்கும் எயிலும் தொலைத்தலால்—ஆங்கு
முடியும் திறத்தால் முயல்கதாம் கூரம்
படியிழுப்பின் இல்லை யரண்.

(சொ — ள்.) வீங்கு தோள் செம்பியன் சீற்றம்-பருத்த தோளை உடைய சோழனது சினம், விறல் விசும்பில் தூங்கும் எயிலும் தொலைத்தலால் - மிக்க ஆகாயத்தின்கண்ணே அசைந்து கொண்டிருந்த அசுரர்களது ஊரினைத் தேவர்கள் பொருட்டுத் தொலைவித்தலால், முடியும் திறத்தால் முயல்க - எவ்வளவு முடியுமோ முடியும் வழியால் முயற்சி செய்க, கூர் அம்பு அடி இழுப்பின் இல்லை அரண் - கூரிய அம்பு அடியானது பொருந்த மிக விரைவாகத் தொடுப்பின் அதனைத் தடுத்தற்குரிய கவசம் இல்லையாதலால்.

(க - து.) நம்மால் முடிந்த அளவும் முயற்சி செய்தால் முடியாத காரியம் ஒன்றில்லையாம்.

(வி - ம்.) செம்பியன் ஆகாயத்தின்கண் இருந்த அசுரர்களது ஊரினைத் தேவர்கள் பொருட்டு அழித்தான். இது பற்றியே இவன் தூங்கெயி லெறிந்த தொடித்தோட் செம்பியன் எனப்பட்டான். அம்பினை வலிவாகத் தொடுப்பின் கவசமும் பிளந்துபோதல் போல, முடிந்த அளவு முயற்சி செய்தால் பயன் அடையலாம் என்பது. இதற்குப் போதிய சான்று சோழனே யாவான். ஆங்கு : அசை.

"கூர் அம்பு அடியிழுப்பின் இல்லை அரண்" என்பது பழமொழி. (௭)

156. எங்கணென் றில்லை எமரில்லை என்றொருவர்
தங்கணழிவுதாம் செய்யற்க—எங்கானும்
நன்கு திரண்டு பெரியவாம், ஆற்றவும்
முன்கை நெடியார்க்குத் தோள்.

(சொ - ள்.) எங்கண் ஒன்று இல்லை - எம்மிடத்து ஒரு பொருளும இல்லை. எம ரில்லை - எமக்கோ சுற்றத்தாருமில்லை, என்று-என்று நினைத்து, ஒருவர் தம்கண் அழிவு தாம் செய்யற்க ஒருவர் தம்மிடதது வரும பெருமையை அழிக்கக கூடியனவற்றைச் செய்யாதொழிக, எஙகானும் - எங்கே பிறந்தவர்க்காயினும், ஆற்றவும் முனகை நெடியார்சகு-மிகவும் முன்கை நீளமாக உடையவர்கட்கு, தோள் நனகு திரண்டு பெரியவாம்-தோள்கள் மிகவும் திரட்சியுற்றுப் பெரியனவா யிருக்கும்.

(க - து) பெருமையை அழித்தற் குரியனவற்றைத் தாம் செய்யாதிருககவேண்டும். அதனால் மிக்க புகழ் உண்டாகும்.

(வி - ம்.) முன்கை நெடியார்க்குத் தோள் பெரிதாயிருத்தல் போல, அமைந்த பெருமையை அழித்தற்குரியனவற்றைத் தாம் செய்யாதிருப்பதுவே மிக்க புகழ ஆகும.

“நன்கு திரண்டு பெரியவாம் ஆற்றவும் முன்கை நெடியார்க் குத் தோள்” என்பது பழமொழி. (அ)

157. நிலத்தின் மிகையாம் பெருஞ்செல்வம் வேண்டி
நலத்தகு வேந்தருள் நல்லாரைச் சார்ந்து
நிலத்து நிலைகொள்ளாக் காலரே காணின்
உலக்கைமேல் காக்கையென் பார்.

(சொ - ள்.) நிலத்தின் மிகையாம் பெருஞ்செல்வம் வேண்டி - நிலத்தின்கண் வாழ்வதற்கு மிகுதியாகிய பெரிய செல்வத்தை விரும்பி, நலத்தகு வேந்தருள் நல்லோரைச் சார்ந்து - நன்மை மிகுந்த அரசர்களுள் நல்லோர் ஒருவரை அடைந்து (அங்குத் தங்கியிராமல்) நிலதது நிலைகொள்ளா காலர் - ஓரிடத்தும் தங்குதலைக் கொள்ளாத கால்களை உடையவர்கள், காணின் - ஆராயுமிடத்து, உலக்கைமேல் காக்கை என்பர் - உலக்கை மேலுள்ள காககை என்று கூறப்படுவார்கள்.

(க - து.) அறிவிலார் ஒருவரிடத்திலும் ஒரு தொழிலிலும் நிலைபெறாது வருதலால நன்மையைப் பெறமாட்டார்கள்.

(வி - ம்.) காக்கை உரலின்கண் உள்ள அரிசியை உண்ணவும் மாட்டாது, உலக்கைமேல் உட்காரவும் மாட்டாது, அதனைச் சூழ்வருதல்போல, அறிவிலாரும் ஒருவரிடம் நிலைத்து நிற்காது பயனையும் இழந்து சுழன்று வருவர் என்பதாம்.

"உலக்கை மேல் காக்கை" என்பது பழமொழி. (க)

158. தலைக்கொண்ட தங்கருமம் தாமடி கொண்டு
கடைப்பிடியில் லாதார்பால் வைத்துக்—கடைப்பிடி
மிக்கோடி விட்டுத் திரியின் அதுபெரி(து)
உக்கோடிக் காட்டி விடும்.

(சொ - ள்.) தலைக்கொண்ட தம் கருமம் - மேற்கொண்ட தமது செயலை, தாம் மடி கொண்டு - தாம் சோம்பல் கொண்டு, கடைப்பிடி இல்லாதார்பால் வைத்து-முடிக்கும் உறுதியில்லாதாரிடத்துத் தம் செயலை அவர் செய்யுமாறு வைத்து, கடைப்பிடி விட்டு - நடத்தி முடிக்கும் உறுதியைவிட்டு, மிக்கு ஓடித்திரியின்- செருக்கில் மிகுந்து ஓடிததிரியின், அது - தாம் மேற்கொண்ட அச்செயல், பெரிது உக்கு ஓடி-மிகவும் சிதைந்து, காட்டிவிடும் - தன்னைச் செய்வதாக மேற்கொண்டவனிடத்தில் தவ்வையை அறிமுகப்படுத்தும்.

(க - து.) முயற்சி இல்லாதானை மூதேவி அடைவாள்.

(வி - ம்.) தாமே செய்ய வேண்டியிருக்கவும் செய்யாது தன்னைப்போன்ற வேறு ஒரு சோம்பலுடையாரிடத்தில் தன்னை வைத்து அவன் நீங்கலின், அது தானாகவே வலியச சென்று அவனிடத்தில் மூதேவியை ஆற்றுப்படுக்கும்.

"அது பெரிது உக்கோடிக் காட்டிவிடும்" என்பது பழமொழி. (கo)

159. தம்மால் முடிவதனைத் தாமாற்றிச் செய்கல்லார்
பின்னை ஒருவரால் செய்வித்தும் என்றிருத்தல்
சென்னீர் அருவி மலைநாட! பாய்பவோ
வெந்நீரு மாடாதார் தீ.

(சொ - ள்.) செல் நீர் அருவி மலைநாட - பரந்து செல்கின்ற அருவியை உடைய மலைநாடனே!, தம்மால் முடிவதனை - தம்மால் முடிக்கலான தொரு செயலை, தாம் ஆற்றி செய்கல்லார் — தாம்

செய்து முடிக்கமாட்டாதவராய், பின்னை ஒருவரால் செய்வித்தும் என்றிருத்தல்-பிறகு வேறொருவரால செய்வித்துக் கொள்வோம் என்று சோம்பியிருத்தல், வெந்நீரும் ஆடாதார் - வெந்நீரினும் குளியாதார், தீ பாய்பவோ-தீயின்கண் பாய்வார்களோ? (இல்லை. அதுபோல அதுவு மில்லையாம்.)

(க - து) தம்மால் முடியும் செயலைத் தாமே செய்தல் வேண்டும்.

(வி - ம்.) சுடுநீரினும் குளியாதார் தீயிற் பாய்தல் இலர். அதுபோல, தன்னாலே முடிவனவற்றைச் செய்யாதார் பிறராலே முடித்துக்கொள்ளுதல் இலர். தன்னால் இச் காரியம் முடியும் என்பதறியப்பட்டதாகலின், அதனை உடனே செய்தல்வேண்டும். இங்ஙனம் செய்யாது பிறரை நம்பின், அவரால் அக்காரியம் முடியுமா முடியாதா என்று ஆராயப்படவேண்டுதலின் செயல் முடியாதென்பதாம்

"பாய்பவோ வெந்நீரும் ஆடாதார் தீ" என்பது பழமொழி.

160. முழுதுடன் முன்னே வகுத்தவன் என்று
தொழுதிருந்தக் கண்ணே ஒழியுமோ அல்லல்
இழுகினு னுகாப்ப தில்லையே முன்னம்
எழுதினன் ஓலை பழுது.

(சொ - ள்.) முழுதுடன் முன்னே வகுத்தவன் என்று - முழுதுலகத்தையும் முன்னே உண்டாக்கியவன் நமக்காக அல்லலையும் படைத்தான் என்று நினைத்து, தொழுது இருந்தக் கண்ணே அல்லல் ஒழியுமோ - இஃது அவனாலேயே நீங்கும் போலுமென்று நினைத்து அவனையே தொழுதுகொண்டு முயற்சியின்றி யிருப்பின் துன்பம் நீங்குமோ?, முன்னம் ஓலை பழுது எழுதினன்-முதலில் ஓலையைப் பழுதுபட எழுதியவன், இழுகினனுக - தாம் குற்றம் செய்தவனாக அறிந்தபின், காப்பது இல்லை - செய்த குற்றத்தைப் பாதுகாப்பதில்லை. (உடனே நீக்குவன் என்பதாம்.)

(க - து.) துன்பம் தெய்வத்தால் வந்ததாயினும் அதனை நீக்க முயற்சி செய்க.

(வி - ம்.) ஒருயிர் செய்தவினையின் பயன் பிறிதோருயிரின் கட் செல்லாது அவவுயிர்க்கே வகுத்தலின் அவன் வகுத்தான் எனப்பட்டான். ஆகவே, இவ்வல்லலை நீக்கவேண்டு மென்று தொழுததினால் அதற்குப் பரிந்து நீக்கான் என்பதாம். ஆகவே

அவனைத் தொழுது நீக்கிக்கொள்ள முடியாது. தம்மாலாகிய முயற்சி செய்தே அதனை நீக்கல் வேண்டு மென்பதாம்.

> "ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
> தாழா துஞற்று பவர்"

என்பர் திருவள்ளுவரும்.

ஓலையைப் பழுதாக எழுதினன் அப்பழுதினையே பாதுகாவாது நீக்குதல்போல முயற்சி செய்து அல்லலை நீக்குக வென்பதாம.

> "இழுகின னாகாப்ப தில்லையே முன்னம்
> எழுதினன் ஓலை பழுது" என்பது பழமொழி. (கஉ)

161. முடிந்ததற் கில்லை முயற்சி முடியா
தொடிந்ததற் கில்லை பெருக்கம்—வடிந்தற
வல்லதற் கில்லை வருத்தம் உலகினுள்
இல்லதற் கில்லை பெயர்.

(சொ - ள்.) முடிந்ததற்கு முயற்சி இல்லை - முடிந்த செயலுக்கு முயற்சி செய்ய வேண்டுவதில்லை, முடியாது ஒடிந்ததற்கு பெருக்கம் இல்லை-முடிவுறாது இடையே முறிந்த செயலுக்கு ஆக்கமில்லை (அவைபோல), வடிந்தற வல்லதற்கு வருத்தம் இல்லை—குற்றமறச் செய்ய வல்லதற்கு செய்யும்பொழுது துன்பம் எற்படுதல் இல்லை, உலகினுள் இல்லதற்கு பெயர் இல்லை-உலகில் இல்லாத பொருள்களுககுப் பெயர்கள் இல்லையாதலால்.

(க - து) தம்மால் முடியுஞ் செயலை யாவருஞ் செய்க. அதனால் துன்பம் உண்டாகாது.

(வி - ம்.) முடியாத செயலை மேற்கொண்டாலன்றித் துன்பம் உண்டாகாது வருத்தம் வருமென்று நினையாது, முடியும் காரியத்தில் முயற்சி செய்க என்பது. "வடிந்தற வல்லதற்கில்லை வருத்தம்" என்பது கருத்தாகலான் முன்னிரண்டும், உவமைகளாகவும் பின்னது ஆதாரமாகவும் கொள்ளப்பட்டன. உலகில் இல்லாத பொருள்களுக்குப் பெயரில்லையாதலால், முடியும் காரியத்திற்கு வருத்தம் இல்லை என்பதாம்.

"இல்லதற்கு இல்லை பெயர்" என்பது பழமொழி. (கரு)

18. கருமம் முடித்தல்

162. செந்நீரார் போன்று சிதைய மதிப்பார்க்கும்
பொய்ந்நீரார் போன்று பொருளை முடிப்பார்க்கும்
அந்நீர் அவரவர்க்குத் தக்காங் கொழுகுபவே
வெந்நீரின் தண்ணீர் தெளித்து.

(சொ - ள்.) *செந்நீரார் போன்று சிதைய மதிப்பார்க்கும் - செம்மையான நீர்மையுடையாரைப் போன்று தோன்றி உள்ளத்தில் தங்காரியம் சிதையுமாறு நினைக்கின்றவர்களுக்கும், பொய்நீரார் போன்று பொருளை முடிப்பார்க்கும் - பொய்ம்மையான நீர்மையுடையாரைப் போன்று தோன்றி தாம் நினைத்த செயலை முடிக்கின்ற உள்ள முடையார்க்கும், வெந்நீரில் தண்ணீர் தெளித்து - மிக்க வெம்மையான நீரில் குளிர்ந்த நீரை அளாவிப் பயன்படுத்திக் கொள்ளல்போல, அந்நீர் அவரவர்க்கு தக்காங்கு - அந்த இயல்பினை உடைய அவரவர்களுக்குத் தகுந்த வண்ணம், ஒழுகுப - ஒழுகுவார்கள் காரியத்திற் கண்ணுடையார்.*

(க - து.) *காரியத்திற் கண்ணுடையார் நல்லவர்களுக்கு நல்லாரைப் போலவும், தீயார்களுக்குத் தீயாரைப் போலவு மிருந்து தங் கருத்தை நிறைவேற்றுவார்.*

(வி - ம்.) *உள்ளத்தில் கரவுடையாரிடத்தில் நாமும் அவரினும் மிக்க கரவுடையாராகவே இருத்தல் வேண்டும். அவரிடத்தில் செம்மையுடையராக ஒழுகின், அவாகள் தாம் உள்ளுறச செய்த இடையூறுகள் இவரறியுமாறு இல்லையே யென்று தாம் ஏமாற்றியதற்கு மகிழ்வதல்லது, நமது செம்மைகண்டு திருந்துதல் இலர். ஆகவே, அவரினுந் தாங் கரவுடையா ரென்பதை அவாக்குக் காட்டி னல்லது நாம் நினைத்த காரியம் முடிவுபெறா தென்பதாம். உள்ளத்தில் அன்புடையராய்த் தமது செயலை முடிப்பார்க்குத் தாமும் அவரேபோல் உள்ளன்பு கோடல் வேண்டும். தமது செயலை முடிப்பாரிடத்தில் தாம் அன்பில்லாதார் போன்று ஒழுகவே, அனைப் பெறும்பொருட்டு நமது காரியத்தில் கண்ணுடையவராக இருப்பர் எனின், அவவன்பின்மை அவர் முயறசியைக் குறைககுமேயன்றி ஊககநதராதென்பதாம். ஆகவே, அன்புடையாரிடத்தில் அவரேபோன் றொழுகுக வெந்நீரில் தண்ணீர் கலந்து பதமாக்கிக்கொள்ளுதல்போல, அவரவர்க்குத் தகவொழுகிக காரியஙகொள்க எனபதாம்.*

"வெந்நீரில் தண்ணீர் தெளித்து" என்பது பழமொழி. (க)

163. தாமாற்ற கில்லாதார் தாஞ்சாரப் பட்டாரைத்
தீமாற்றத் தாலே பகைப்படுத்திட்—டேமாப்ப
முன்னோட்டுக் கொண்டு முரணஞ்சிப் போவாரே
உண்ணோட் டகலுடைப் பார்.

(சொ - ள்.) தாம் ஆற்றகில்லாதார்-தாம் தம்மைச் செவ்வை செய்துகொள்ள முடியாதார், தாம் சாரப்பட்டாரை – பாதுகாவலாகத் தம்மால் அடையப்பட்டாரை, தீ மாற்றத்தால் பகைப் படுத்திட்டு – தீயசொற்களால் பகைமையை உண்டாக்கி, முரண் அஞ்சி—எதிர்த்து நிற்கவும் பயந்து, ஏமாப்ப - சேமமாக, முன் ஓட்டு கொண்டு போவார்-முன் ஓடுதலை மேற்கொண்டு செல்பவர்கள், உண் ஓட்டு அகல் உடைப்பார் - தாம் உண்கின்ற ஓடாகிய உண்கலத்தை உடைப்பாரோ டொப்பர்.

(க - து.) தம்மால் தம்மைப் பாதுகாத்துக்கொள்ள இயலாதார் தமக்குச் சார்பானவரைச் சினந்து கூறுதொழிக.

(வி - ம்.) தமக்குச சார்பாயிருந்தாரைச சினந்து கூறுபவர், தாம் உண்கின்ற பாத்திரத்தை உடைப்பாரோ டொப்பர். "ஓட்டுக்கொண்டு போவார்" என்றமையின், அவரால் பயன்பெறுதொழிதலேயன்றித் துன்புறவும் நேரிடும் என்பது பெறப்படும்.

"உண்ணோட் டகலுடைப்பார்" என்பது பழமொழி. (௨)

164. புரையக் கலந்தவர் கண்ணும் கருமம்
உரையின் வழுவா துவப்பவே கொள்க
வரையக நாட விரையிற் கருமம்
சிதையும் இடராய் விடும்.

(சொ - ள்.) வரையக நாட-மலைமேலுண்டாகிய நாடனே!, புரைய கலந்தவர் கண்ணும் – உள்ளம் ஒப்ப நட்புக்கொண்டவரிடத்தும், கருமம் - அவரால் உளவாகும் செயலை, உரையின் வழுவாது - கூறுஞ் சொற்களில் வழுவாது, உவப்பவே கொள்க - அவர்கள் மனம் மகிழும்படி செயலை முடித்துக்கொள்க, விரையில் - தமக்கு வேண்டிய பொழுதே அச செயலைக் கொள்ள விரைவாயாயின், கருமம் சிதையும் - செயலும் முடிவுறாது இடையிலே அழிந்தொழியும், இடராய்விடும் - அங்ஙனம் அழிதலால் தமக்குத் துன்பம் உண்டாகும்.

(க - து.) மேற்கொண்ட செயலை அமைதியாகச் செய்க. இல்லையாயின் மிகுந்த துன்பங்களை அடைவாய்.

(வி - ம்.) உரையின் வழுவாது என்றது இனிய சொற்களின் நீங்காது என்றபடி. "உவப்ப" என்றமையின், அவர் தன்புறக் கொள்ளல் ஆகாது என்பதாம். அங்ஙனம் கொள்ளினும் பயனின்றி யொழியும்.

"விரையிற் கருமம் சிதையும்" என்பது பழமொழி. (௩)

165. நிலைஇய பண்பிலார் நேரல்லர் என்றொன்
றுளைய உரையா துறுதியே கொள்க
வளையொலி ஐம்பாலாய்! வாங்கி யிருந்து
தொளையெண்ணார் அப்பந்தின் பார்.

(சொ - ள்.) வளை ஒலி ஐம்பாலாய் - சுருண்டு தழைத்த ஐந்து பகுதியாகிய கூந்தலையுடையாய், அப்பம் தின்பார் வாங்கி யிருந்து தொளை யெண்ணார் - அப்பத்தை உண்ண விரும்பினவர்கள் அதைக் கையில் வாங்கிய பின்னர்த் தொளைகள் இருக்கின்றன வென்று குற்றங்கூறி அவற்றை நீக்குவாரில்லை, (அதுபோல) நிலை இய பண்பிலார் - நிலைபெற்ற பண்பில்லாதவர், நேர் அல்லர் என்று - நடுவு நிலைமையை உடையவர் அல்லர் என்று, உளைய ஒன்று உரையாது - மனம் வருந்தத்தக்க ஒரு சொல்லும் சொல்லாது, உறுதியே கொள்க - அவரிடத்தில் தாம் கொள்ள நினைத்த உறுதியாகிய பயனையே கொள்க.

(க - து.) நமது காரியத்தை முடிக்கவல்லாரது குறைகளைக் கூறித் திரிய வேண்டாம. காரியம் முடியுமாற்றையே நோக்குக.

(வி - ம்.) அப்பந்தின்பார் தொளையிருத்தல் கருதி நீக்குவாரல்லர். அதுபோலக், காரியத்தில் கண்ணுடையாரும் அவருடைய குற்றங் கருதித் தமது பயனை இழவார் என்பதாம்.

"வாங்கியிருந்து தொளை யெண்ணார் அப்பந் தின்பார்" என்பது பழமொழி. (௪)

166. அன்பின் நெகிழ வழிபட்டுக் கொள்ளாது
நின்ற பொழுதின் முடிவித்துக் கொள்வது
கன்றுவிட் டாக்கறக்கும் போழ்தில் கறவானாய்
அம்புவிட் டாக்கறக்கு மாறு.

(சொ - ள்.) அன்பின் நெகிழ வழிபட்டு கொள்ளாது - தாம்பூண்ட அன்பினால் ஒருவன் நெகிழுமாறு அவனை வழிபட்டுத் தமது செயலை முடித்துக்கொள்ளாது, நின்ற பொழுதின் முடி

வித்துக் கொள்வது - நினைத்த அப்பொழுதிலேயே கடியன கூறி முடித்துக்கொள்ளுதல், கன்றுவிட்டு ஆ கறக்கும் போழ்தில் - கன்றினைச் செலுத்தி ஆவினைக கறக்க இருக்கும்போது, கறவாளுய்-அங்ஙனங் கறவாதவனாகி, அம்புவிட்டு ஆ கறக்குமாறு-அம்பினைச செலுத்தி ஆவினைக கறக்க நினைக்குமாற்றை ஒக்கும.

(க - து.) தமது செயலைச செய்வோரிடத்தில் அன்பாகவும் விரைவின்றியு மிருந்து செயலை முடித்துக்கொள்க.

(வி - ம்.) ஆவினை விரைவு காரணமாகத் துன்புறுத்துவான் பாலினைப் பெறாததுபோல விரைவாகவும் அன்பின்றியும் இருப்பான் பிறரிடமிருந்து காரியத்தைக் கொள்ள முடியாது. அங்ஙனம் கொண்டாலும் அதனாற் பயன்பெறுதல் இல்லை.

"கன்று விட் டாக்கறக்கும் போழ்தில் கறவாளுய், அம்புவிட் டாக்கறக்குமாறு" என்பது பழமொழி. (௬)

167. மடியை வியங்கொள்ளின் மற்றைக் கருமம்
முடியாத வாறே முயலும்—கொடியன்னாய்!
பாரித் தவனை நலிந்துதொழில் கோடல்
மூரி உழுது விடல்.

(சொ - ள்.) கொடி அன்னாய் - கொடிபோன்ற இடையை உடையாய்!, மடியை வியம் கொள்ளின் - சோம்பலுடையானை ஒரு செயலைச செய்ய ஏவின், மற்றை கருமம் முடியாத ஆறே முயலும் - அவனைசசெய்ய ஏவிய அசசெயல் முடியாத விதமாக முயற்சி செய்வான் சோம்பலுடையான், பாரித்தவனை நலிந்து தொழில்கோடல் - சோம்பலாற் பெருத்தவனைத் துன்புறுத்திக் காரியத்தைக் கொள்ளுதல், மூரி உழுதுவிடல் - கிழ எருதினைக் கொண்டு நிலததை உழுது பயன்கோடல் ஒக்கும்.

(க - து.) சோம்பலுடையானைக கொண்டு ஒரு காரியம் செய்வித்தலாகாது; நலிந்து செய்விப்பினும் அதனால் பயன் உண்டாகாது.

(வி - ம்.) 'முடியாதவாறே முயலும்" என்றது அச்செயலுக்கு மாறுபட்டு வேறொன்றைச செய்வானல்லன். அங்ஙனஞ் செய்யினும் ஒருவகையில் முயற்சி உடையான் என்றே கூறலாம் அங்ஙனஞ் செய்யாது தனனால் அத்தொழில் முடியாதவாறு மேலும் மேலும் சோம்பலைத் தேடிக்கொள்ளுதலில் முயற்சி செய்வான் என்பதைக் கருதி, கிழவெருதினைக் கொண்டு உழுவான் தக்க காலத்தில் உழமுடியாமையால் விளையுளை இழந்

தல்போல, சோம்பலில் மிக்காரை வருத்தியாவது காரியம் செய்விப்போமாயினும், காரியம் தாம் விரும்பிய காலத்தில் முடிவுறாமையால் பயன்பெறுதல் இல்லையாம்.

"மூரி உழுதுவிடல்" என்பது பழமொழி. (சு)

168. ஆணியாக் கொண்ட கருமம் பதிற்றாண்டும்
பாணித்தே செய்ப வியங்கொள்ளின்—காணி
பயவாமல் செய்வாரார் தஞ்சாகா டேனும்
உயவாமல் சேறலோ இல்.

(சொ - ள்.) தம் சாகாடேனும் - தம்முடைய சகடமே யாயினும், உயவாமல் சேறல் இல் - உயவு நெய் இடாவிடில் செல்லுதல் இல்லை. (அதுபோல), ஆணியா(க)கொண்ட கருமம்-ஆணியைப்போல உறுதியாகத் தாம் கொண்ட செயலை, வியங்கொள்ளின்-ஒன்றும் கொடாமல் சிலரை ஏவினால், பதிற்றாண்டும் பாணித்தே செய்ப-பத்து ஆண்டாயினும் காரியத்தின்கண் விரைவின்றியே செய்வார்கள், காணி பயவாமல் செய்வார் ஆர் - காணியளவு பொருளாயினும் பயனைப் பெறாமல் செயலைச் செய்வார் யார் உளர்? இல்லை.

(க - து.) பொருளுதவி செய்து செயலைச் செய்வித்துக் கொள்க.

(வி - ம.) "ஆணியாக்கொண்ட கருமம்" என்றது, இன்றியமையாத செயல் என்றதை. இதனையே நீண்ட நாட்களில் தாமதித்துச் செய்வாரெனின் ஏனைய செயல்களை அவர் செய்யும் காலம் அறிந்து கூறமுடியாது என்பதாம. ஆகவே, உதவி செய்தாலன்றித் தமது செயல் விரைந்து நிகழாதென்பதாம். உயவுநெய்—சகடத்தின் அசசில் இடும் பசை.

உயவு நெய்: காரணப்பெயர். நெய்யின்றி ஒழியின் அசசும் சக்கரமும் ஒன்றோடொன்று உராய்ந்து ஒலித்தலை, வருந்தி ஒலிப்பதாக மக்கள் நினைத்தனர்.

"தம்சாகா டேனும் உயவாமல் சேறலோ இல்" என்பது பழமொழி. (எ)

169. விட்டுக் கருமம் செயவைத்த பின்னரும்
முட்டா தவரை வியங்கொளல் வேண்டுமால்
தொட்டக்கால் மாழ்கும் தளிர்மேலே நிற்பினும்
தட்டாமல் செல்லா துளி.

(சொ-ள்.) தொட்டக்கால் மாழ்கும் தளிர்மேலே நிற்பினும்- தொட்ட அளவில் மெலியும் தளிரின் மேலே நின்றதாயினும், உளி தட்டாமல் செல்லாது - உளியானது தன்னை வேறொருவன் தட்டாமல் அத்தளிரை அறுத்துச செல்லாது. (அதுபோல), கருமம் விட்டுச செயவைத்த பின்னரும்-காரியத்தின் பொறுப்பை அவர்களிடத்தே விட்டு அவர்களையே செய்யுமாறு செய்த பின்னரும், மூட்டாது அவரை வியங்கொளல் வேண்டும் - இடையீடின்றி அவரை ஏவி ஆராய்தல் வேண்டும்.

(க-து.) நமது காரியத்தைப் பொறுப்பாக ஏற்றுக்கொண்டு ஒருவர் செய்வாரேயாயினும் இத்துடன் பொறை கழிந்தது என்றிராது அவரை அடிக்கடி ஊக்கப்படுத்துதல் வேண்டும்.

(வி - ம்.) வியங்கொளல்-ஏவி ஆராய்தல். செயல் சரியாக முடியாவிட்டால் அதற்குத் தகுந்த வழிகளைக் கூறுதல் வேண்டும். செயல் தாமதமாகச செல்லின் அவரை ஊக்கப்படுத்துதல் வேண்டும்.

''தொட்டககால் மாழ்கும் தளிர்மேலே நிற்பினும்
தட்டாமல் செல்லா துளி'' என்பது பழமொழி. (அ)

170. காட்டிக் கருமம் கயவர்மேல் வைத்தவர்
ஆக்குவர் ஆற்றஎமக் கென்றே அமர்ந்திருத்தல்
மாப்புரை நோக்கின் மயிலன்னாய்! பூசையைக்
காப்பிடுதல் புன்மீன் தலை.

(சொ - ள்.) மாபுரை நோககின் மயில் அன்னாய் - மாவடுவை ஒத்த கண்ணையும மயிலையொதத சாயலையுமுடையாய்!, கருமம் காட்டி - செயலினைக் காட்டிக கொடுத்து, கயவர்மேல் வைத்தவர் - கீழ்மக்கள்மேல் காரியததைச செய்துமுடிக்கும் பொறுப்பினை வைத்தவர், எமக்கு ஆறற ஆககுவர் என்றே அமர்ந்திருத்தல் — எமக்கு மிகவும் செவ்வையாகக் காரியத்தைச செய்து தருவர் என்று உறுதிசெய்து வாளா இருததல், புன்மீன் தலை - புல்லிய மீன்கள் (உலர்கின்ற) இடத்தில், பூசையைக காப்பிடுதல்-பூனையைக் காவலாக வைப்பதனோடொககும்.

(க - து.) தம்முடைய காரியத்தைக் கீழ்மக்களிடம் ஒப்பித்திருப்பவர் ஒரு நன்மையும் அடையார்.

(வி - ம்.) காவலாக இருந்த பூனை பாதுகாத்து எமக்குத் தருமென் றெண்ணியிருந்தாரை எய்த்துத் தானுண்டல்போல

கீழ்மக்களும் தமக்குக் காரியத்தை முடித்துத் தருவர் என்றிருந்தாரை ஏய்த்துத் தாமே பயன்கொள்வர்.

"பூசையைக் காப்பிடுதல் புன்மீன் தலை" என்பது பழமொழி. (க)

171. தெற்ற அறிவுடையார்க் கல்லால் திறனிலா
முற்றலை நாடிக் கருமஞ் செயவையார்
கற்றொன் றறிந்து கசடற்ற காலையும்
மற்றதன் பாற்றேம்பல் நன்று.

(சொ - ள்.) *தெற்ற அறிவுடையார்க்கு அல்லால் - தெளிவாக அறிந்த அறிவுடையாரைத் தேடிவைப்பதல்லாமல், திறன் இலா முற்றலை - திறமையில்லாத முதிர்ந்தவர்களை, நாடி கருமம் செயவையார் - ஆராய்ந்து செயலைச் செய்ய வைக்க மாட்டார்கள். (காரியம் முடியவேண்டுமென்ற கருத்துடையார்), ஒன்று கற்று அறிந்து கசடு அற்ற காலையும் - ஒரு பொருளைக் கற்றறிந்து கல்வியினகண் குற்றமில்லாது ஒருவர் விளங்கிய இடத்தும், மற்று அதன்பால் - குணமில்லையாயின அவரிடத்துக் கொண்ட நட்பு, தேம்பல் நன்று - மெலிதலே நல்லது.*

(க - து.) *காரியம் முடியவேண்டுமென்று நினைப்பவர்கள் சிறந்த அறிவு பெற்றவர்களையே அதனைச் செய்ய நிறுத்துதல் வேண்டும்.*

(வி - ம்.) *நட்டாரிடத்துக் குணமில்லையாயின் தாம் பிழைத்தன பொறுத்தல் முதலியன அவர்கண் இல்லையாம். ஆகவே, அத்தகையோர் நட்புக் குறைதலே நல்லது. நட்புக் கொள்வதற்கு ஆராயவேண்டுவனவற்றுள் தலை சிறந்தது குணமேயாம். கல்வி வேண்டுவதில்லை. குணமில்லாரிடத்துக் கொண்ட நட்புப் பயன் தராதொழிதல்போல, அறிவிலாரிடத்து ஒப்புவித்த காரியம் முடிதல் இல்லையாம்.*

"கற்றொன் றறிந்து கசடற்ற காலையும்
மற்றதன்பாற் றேம்பல் நன்று" என்பது பழமொழி. (கo)

172. உற்றான் உறுஅன் எனல்வேண்டா ஒண்பொருளைக்
கற்றானை நோக்கியே கைவிடுக்க—கற்றான்
கிழவனுரை கேட்கும் கேளா னெனினும்
இழவன் றெருதுண்ட உப்பு.

(சொ - ள்.) உற்றான் உறா அன் எனல் வேண்டா - தமக்கு உறவினன் உறவல்லாதவன் என்று ஆராய வேண்டுவதில்லை, ஒண்பொருளை கற்றானை நோக்கி கைவிடுக்க - காரியம் செய்யும் பொருட்டுக் கொடுக்கும் ஒள்ளிய பொருளைக் கல்வியறிவாற் சிறந்தானை ஆராய்ந்து அவனிடம் கொடுக்க, கற்றான் கிழவன் உரை கேட்கும் - கல்வியறிவாற் சிறந்தான் தனக்குப் பொருள் கொடுத்துதவியவன் சொற்களைக் கேட்டு நடப்பான், கேளான் எனினும் - கேளா தொழிவா னாயினும், எருது உண்ட உப்பு இழவு அன்று - காளை உண்ட உப்பு நட்டமாகாமைபோலப் பயன்கொடா தொழியான் என்பதாம்.

(க - து.) நமக்கு முடியவேண்டிய செயலையும் அதற்காக நாம் கொடுக்க இருக்கும் பொருளையும் கல்வியறிவு உடையானைத் தேடிக் கொடுக்கவேண்டும் என்பதாம்.

(வி - ம்.) கொள் முதலியவற்றை உப்பிட்டு உண்பிப்பது நோயைத் தவிர்த்து எருதுக்கு உரஞ்செய்வதால், எருது சலிப பின்றித் தலைவனுக்கு வேலைசெயயும். அதுபோல் கற்றவன் காரியம் செய்யும்போது அவனுக்கீந்த பொருள் நட்டமாகாமல் தலைவனுக்கு இலாபத்தையே உண்டாக்கும்.

"இழவன்று எருதுண்ட உப்பு" என்பது பழமொழி. (கக)

173. கட்டுடைத் தாகக் கருமஞ் செயவைப்பின்
பட்டுண்டாங் கோடும் பரியாரை வையற்க
தொட்டாரை ஒட்டாப் பொருளில்லை; இல்லையே
அட்டாரை ஒட்டாக் கலம்.

(சொ - ள்.) தொட்டாரை ஒட்டா பொருள் இல்லை - கையால் தொட்டவர்களை ஒட்டாத பொருள்கள் இல்லை, அட்டாரை ஒட்டா கலம் இல்லை - சமைத்தாரைப் பொருந்திப் பயன்படாத உணவுப்பொருளுமில்லை. (ஆதலால்), கட்டு உடைத்தாக-பாது காவலுடையதாகுமாறு, கருமம் செயவைப்பின் - செயலைச் செய்ய ஒருவனை நிறுத்த நினைப்பின், பட்டு உண்டு ஆங்கு ஓடும் பரியாரை-அச்செயலின்கண் பொருந்தி அதனிடத்துள்ள பயன் அனைத்தையும் கைகொண்டு உடனே விட்டு நீங்குகின்ற, அன் பிலாதாரை வையற்க-காரியத்தைச் செய்ய வையாதொழிக.

(க - து.) காரியத்தால் உளதாகும் பயனைக் கைக்கொள் வானை ஒரு காரியத்தையும் செய்ய நியமித்தல் ஆகாது.

(வி - ம்.) பொருள் தன்னைத் தொட்டவரை ஒட்டு மியல்புடையது. உணவுப்பொருளும் தன்னை யாக்கினுரால் சுவை அறியப்படும். ஆகவே பொருள்களே தன்னையடைவாரைப் பயனடையச் செய்வன வாதலால், தூய்மையுடையாரையே அதன்கண் நியமிக்கவேண்டும். பொருளினது இயல்பு உணர்த்து முகத்தான் தூய்மை உடையாரையே நியமிக்க வென்றது இச் செய்யுள். கலம் என்பது ஆகுபெயராய் உணவுப்பொருளை உணர்த்தி நின்றது.

''தொட்டாரை ஒட்டாப் பொருளில்லை இல்லையே
அட்டாரை ஒட்டாக் கலம்'' என்பது பழமொழி. (கஉ)

174. நாட்டிக் கொளப்பட்டார் நன்மை இலராயின்
காட்டிக் களைது மெனவேண்டா—ஓட்டி
இடம்பட்ட கண்ணுய் ! இறக்குமை யாட்டை
உடம்படுத்து வெளவுண்டா ரில்.

(சொ - ள்.) ஓட்டி இடம்பட்ட கண்ணுய் - குழையை அலைத்து (விளங்கும்) அகன்ற கண்களை உடையாய்!, இறக்கும் மையாட்டை - இறக்கும் நிலையிலுள்ள காராட்டை, உடம்படுத்து - உடன்பாடு பெறச்செய்து, வெளவுண்டார் இல் - அதன் சம்மதத்தின்பேரில் குருதிகொண்டார் உலகத்தில்லை. (ஆகையால்), நாட்டி கொளப்பட்டார் - தம்மாலே தங்காரியத்தின் பொருட்டு நாட்டிக் கொள்ளப்பட்டவர்கள், நன்மை இலராயின் - நன்மையைச் செய்தல் இலராயின், நாட்டி-அவரிடத்து அதனை எடுத்துக் காட்டி, களைவேம் என வேண்டா - அவர் உடன்பாடு பெற்றுச் செயலினின்றும் நீக்குவோம் என்று நினைக்கவேண்டா.

(க - து.) தம்மால் நிலைநாட்டப்பட்டார் தமக்கு நன்மை செய்யாராயின் அவரிடம் சொல்லாதே அவரை நீக்குதல் வேண்டும்.

(வி - ம்.) காராடு-வெள்ளாடு. ஆடு தான் இறந்துபோவதை உறுதியாக அறிந்திருப்பினும், இறப்பதற்கு முன்பு மனமொப்பித் தன்னைப் பிறர் வெளவ இயையாது. அதுபோல, நம்மால் நாட்டிக் கொள்ளப்பட்டாரும் அவர் செய்த குற்றத்தை எடுத்துக் காட்டி நீக்க நினைப்பின் நீங்கார். பலபல கூறிப் பின்னரும் அச்செயலைச் செய்யவே முற்படுவர். ஆதலால், அவரிடங் கூருதே நீக்குக வென்பதாம் ''உடம்படுத்து'' என்றதற் கேற்ப அவர்க்கு எடுத்துக்காட்டி அவர் உடன்பாடு பெற்று என்று பொருளுரைக்கப்பட்டது. (கங)

175. அகந்தூய்மை யில்லாரை ஆற்றப் பெருக்கி
இகந்துழி விட்டிருப்பின் அஃதால்—இகந்து
நினைந்து தெரியானாய் நீள்கயத்துள் யாமை
நனைந்துவா என்று விடல்.

(சொ - ள்.) *அகம் தூய்மையில்லாரை ஆற்ற பெருக்கி - மனத்தின்கண் தூய்மையில்லாதவர்களை மிகவும் பெருக்கிக் கொண்டு, இகந்த உழி விட்டிருப்பின் - சேய்த்தாய இடத்தே தங்காரியம் முடிக்கும்பொருட்டு அவரைச செல்லவிட்டு இருப்பின், அஃது - அசசெயல், நினைந்து தெரியானாய் - மனதின்கண் ஆராய்ந்து அறியானாய், யாமை - (யாமையைப் பிடித்த ஒருவன்) அந்த யாமையை, நீள்கயத்துள் இகந்து - நீண்ட குளத்திற்குப் போய், நனைந்துவா என்று விடல் - நீரால் நனையப்பெற்றுத் திரும்பிவா என்று சொல்லி விடுதலை ஒக்கும்.*

(க - து.) *மனதூயமை யில்லாதாரைச சேய இடத்துள்ள கருமத்தை முடிக்க அனுப்புதல் கூடாது.*

(வி - ம்) *யாமையைக் குளத்திற் கனுப்பின் திரும்ப வராததுபோல, மனதூய்மை யில்லாரும காரியம் முடித்துத் திரும்புதல் இலர்.*

"நீள்கயத்துள் யாமை நனைந்துவா என்று விடல்" என்பது பழமொழி. (கரு)

176. உழையிருந்து நுண்ணிய கூறிக் கருமம்
புரையிருந்த வாறறியான் புக்கான் விளிதல்
நிரையிருந்து மாண்ட அரங்கினுள் வட்டுக்
கரையிருந் தார்க்கெளிய போர்.

(சொ - ள்.) *நிரை யிருந்து மாண்ட அரங்கினுள் - வரிசையாக இருந்து மாட்சிமைப்பட்ட அரங்கின்கண், வட்டுக் கரையிருந்தாாககு - அரஙகின்கணா பொராதே பக்கத்திருந்தார்க்கு, எளியபோர் - எளியதாகத தோன்றும் வட்டுப்போர், (அதன் நுட்பம் அறியாது ஆடுவாறகு அரியதாகத் தோன்றும் அது போல), உழையிருந்து நுண்ணிய கூறி-பககத்தேயிருநது நுட்பமான காரியங்களை ஆராய்ந்து கூறினும், கருமம் புரை இருந்த வாறு அறியான் - நுட்ப உணர்வு இல்லாதும் கருமத்தின்கண் குற்றம் இருந்த நெறியை அறிவதும் செய்யானாய், புக்கான் - கருமத்தைச் செய்யப்புகுந்தவன், விளிதல் - அழிவினை அடைவான்.*

(க - து.) கருமம் செய்வார்க்கு நுண்ணுணர்வு மிகுதியும் வேண்டப்படுவ தொன்று.

(வி - ம்.) விளையாட்டின் நுட்பமறிவார்க்கு எளிதாகத் தோன்றும் வட்டுப்போர் அஃதில்லார்க்கு அரியதாகத் தோன்றும்; அதுபோல, பிறர் கூறியும் நுண்ணுணர்வு பெறுதான் காரியம் செய்யப்புகின் காரியம் அரியதாகத் தோன்றுவதோடு தனக்கும் இறுதி விளையும் என்பதாம். பெரிய போரினையும் தான் காரணமாய் நின்று உண்டாக்குதல் பற்றி வட்டுவிளையாட்டு வட்டுப்போர் எனப் பெயர் பெற்றது வட்டு - சூதாடு கருவி.

"வட்டுக் கரையிருந்தார்க் கெளிய போர்" என்பது பழமொழி. (கசு)

19 மறை பிறர் அறியாமை

177. சுற்றத்தார் நட்டார் எனச்சென் றொருவரை
அற்றத்தால் தேறுர் அறிவுடையார்— கொற்றப்புள்
ஊர்ந்துலகம் தாவின அண்ணலே யாயினும்
சீர்ந்தது செய்யாதா ரில்.

(சொ - ள்.) கொற்றம்புள் ஊர்ந்து - வெற்றியையுடைய கருடன்மீது ஏறி வீற்றிருந்து, உலகம் தாவின அண்ணலே யாயினும் - உலகத்தைத் தாவியளந்த பெருமைபொருந்திய திருமாலே யாயினும், சீர்ந்தது செய்யாதார் இல் - தனக்கு ஊதியந்தரும் சீரியதொன்றைச் செய்யாதொழிய விடுவார் இல்லை (ஆகையால்), அறிவுடையார் - அறிவிற் சிறந்தோர், சுற்றத்தார் நட்டார் என சென்று - உறவினர், நட்பினர் என்பன கொண்டு சென்று, அற்றத்தால் - மறைத்துச செய்யும் காரியத்தின்கண், ஒருவரை தேறுர் - அவருள் ஒருவரையும் தெளிதல் இலர்.

(க - து.) மறைத்துச செய்யும் காரியத்தின்கண் யாவராயினும் நம்புதல் கூடாது.

(வி - ம்.) திருமால் முதலியோர்களும் தமக்கு ஊதியம் பயப்பதாயின் பழி, பாவம் பாரார். ஆகவே, சுற்றத்தார் நட்டார் என்பன கொண்டு அவர் செய்யும் செயல்கள் தூயனவென்றறிதல் வேண்டா. அவர்கள் தம் நன்மையைக் குறித்துச செய்வனவே என்றறிதல் வேண்டும். அவர்கள் மறைத்துச் செய்தலே அதற்குப் போதிய சான்றும்.

"சீர்ந்தது செய்யாதார் இல்" என்பது பழமொழி. (க)

178. வெள்ளமாண் பெல்லாம் உடைய தமரிருப்ப
உள்ளமாண் பில்லா ஒருவரைத்—தெள்ளி
மறைக்கண் பிரித்தவரை மாற்று தொழிதல்
பறைக்கண் கடிப்பிடு மாறு.

(சொ - ள்.) *வெள்ள மாண்பெல்லாம் உடைய* - வெள்ளத்தைப் போன்று அளத்தற்கரிய மாட்சிமைப்பட்ட குணங்களை உடைய, *தமர் இருப்ப* உறவினர்களை இருப்பக்கொண்டு, *உள்ளம் மாண்பு இல்லா ஒருவரை* - உள்ளத்தினகண மாட்சிமையில்லாத ஒருவரை, *தெள்ளி* - ஆராய்ந்து, *மறைககண பிரித்து* — சூழ்சசிக் கண்ணின்றும் நீக்கி, *அவரை மாற்றுது விடுதல்* - அவரை விலக்காது விடுதல், *பறைகண் கடிப்பு இடுமாறு* — பறையின்கண் குறுந்தடியையிட்டு அடித்ததோ டொக்கும்.

(க — து.) சூழ்சசியின்கண் உள்ளம் மாட்சிமைப்பட்டாரைச சேர்த்துக் கொள்க. அஃதிலாரை விலக்குக.

(வி - ம்.) பறை ஒருவன் கையாற் றன்னை அறிவித்த தொன்றனை இடந்தோறுங்கொண்டு சென்று யாவரையும் அறிவிக்கும். கயவரும் தாம் அறிந்த மறையைச் சுமக்கலாற்றுது இடந்தோறுஞ் சென்று வலிய அறிவிப்பர். ஆதலின், இவரைச சூழ்ச்சியின்கண்ணின்றும் நீக்குதல் வேண்டும்.

"பறைக்கண் கடிப்பிடு மாறு" என்பது பழமொழி. (உ)

179. அன்பறிந்த பின்னல்லால் யார்யார்க்கும் தம்மறையே
முன்பிறர்க் கோடி மொழியற்க—தின்குறுவான்
கொல்வாங்குக் கொன்றபி னல்ல துயக்கொண்டு
புல்வாய் வழிப்படுவார் இல்.

(சொ - ள்.) *தின்குறுவான்* - தின்னும்பொருட்டு, *கொல்வாங்கு கொன்றபின் அல்லது* - கொல்லுகின்றபடியே கொன்ற பின்னர் அல்லது, *உயக்கொண்டு* - தப்பிப்போன பின்னர், *புல்வாய்* - மானினது தசையை, *வழிப்படுவார் இல்* - அடுதற்குரிய நெறியின்கண் நிற்றல் இலர் (அதுபோல), *அன்பு அறிந்தபின் அல்லால்* - தம்மாட்டு அவர் பூண்ட அன்பு அறிந்தபின்னரன்றி, *யார் யார்க்கும்* - யாவரே யாயினும், *தம் மறை*-தமது சூழ்ச்சியை, *பிறர்க்கு முன் ஓடி மொழியற்க* - பிறரிடம் முற்பட்டு ஓடிச் சொல்லற்க.

(க - து.) அன்புடையாரை அறிந்தே இரகசியத்தைக் கூறுக.

(வி - ம்.) மானைக் கொன்றபின்னர் அல்லது அதன் தசையைப் பக்குவப்படுத்தும் நெறியின்கண் நில்லார். அதுபோல, பிறர் தம்மீது பூண்ட அன்பை அறிந்தபின்னர் அல்லது, அவரிடம் முற்பட்டுத் தமது மறையை மொழியலாகாது. அடுதற்குரிய நெறியின்கண் நிற்றலாவது; காயம் முதலியன சேர்த்து அரைத்தலும் பிறவும். அவர் நிலையறியாது தமது மறையை முன்பட்டுக் கூறின் நன்மை இல்லை யாதலோடு ஒருஞான்று தீங்கு உளவாயினும் ஆம்.

"கொன்றபின் னல்லது உயக்கொண்டு புல்வாய் வழிப்படுவார் இல்" என்பது பழமொழி. (௩)

180. நயவர நட்டொழுகு வாரும்தாம் கேட்ட
துயவா தொழிவார் ஒருவரு மில்லை
புயலமை கூந்தற் பொலந்தொடி! சான்றோர்
கயவர்க் குரையார் மறை.

(சொ - ள்.) புயல் அமை கூந்தல் பொலந் தொடி - மேகம் போன்றமைந்த கூந்தலையும் பொன்னாலாகிய தொடியையும் உடையாய்! நயவர நட்டு ஒழுகுவாரும் - அன்போடு பொருந்தத் தம்மோடு நட்புப் பூண்டவர்களும், தாம் கேட்டது - தாம் கேட்டறிந்த மறையை, உயவாது ஒழிவார் ஒருவரும் இல்லை-பிறரிடம் கூறி ஆராயாது நீக்குவார் ஒருவரும் இல்லை (என்றாலும்), சான்றோர் கயவர்க்கு மறை உரையார் — அறிஞர்கள் கீழ்மக்கட்கு இரகசியத்தை உரைத்தலிலர்.

(க - து.) கீழ்மக்களிடம் இரகசியத்தை உரைத்தலாகாது.

(வி - ம்.) கீழ்மக்களிடம் தாம் சூழ்ந்திருத்தலை உரைப்பின் அவரால் அது பரவப்பட்டு அதற்கு மாறானவை மேற்பட்டு இடையூறு பயக்குமாதலின் சானறோர், அவரிடம் உரையார். மறை நட்டாரிடம் கூறப்பட்டு ஆராயப்படுமாயினும் கீழ்மக்களிடம் உரைத்தலாகாது என்பதாம். மறை - வெளிப்படிற் குற்றம் விளையுமென்று பிறரை மறைத்து ஒருவன் சொல்லிய சொல், செய்த செயல் முதலியன.

"சான்றோர் கயவர்க் குரையார் மறை" என்பது பழமொழி. (௪)

181. பெருமலை நாட ! பிறரறிய லாகா
அருமறையை ஆன்றோரே காப்பர்—அருமறையை
நெஞ்சிற் சிறியார்க் குரைத்தல் பனையின்மேல்
பஞ்சிவைத் தெஃகிவிட் டற்று.

(சொ - ள்.) பெருமலை நாட-பெரிய மலைநாட்டை உடையவனே!, பிறர் அறியலாகா அருமறையை - பிறர் அறியக்கூடாத அரிய இரகசியத்தை, ஆன்றோரே காப்பர் - நிறைந்த அறிவுடையவர்களே வெளியிடாமல் காப்பார்கள், அருமறையை - அரிய இரகசியத்தை, நெஞ்சிற் சிறியார்க்கு உரைத்தல் - நெஞ்சாற் சிறுமைப் பட்டார்க்குக் கூறுதல், பனையின்மேல் பஞ்சி வைத்து - பனையின் மீது பஞ்சினை வைத்து, எஃகி விட்டற்று-கொட்டினாற் போலாம்.

(க - து.) அருமறையை அறிவுடையோரிடத்துக் கூறுக. அல்லாரிடத்துக் கூறற்க.

(வி - ம்.) நெஞ்சிற் சிறியார் என்றது, தாங் கேட்டதைத் தன்னுள்ளேயே நிறுக்கும் நிறையாகிய மனசெறிவு இல்லார். ஆன்றோர் மனசெறிவு உடையாராதலின் அவரிடங் கூறுக என்றும், இவர் அஃதிலராதலின் கூறுதொழிக என்றும் கூறினார். பனை என்றது பஞ்சு கொட்டுதற் கிடனாய் நிற்பதொரு மணையை. மணையின்மீது வைத்துக் கொட்டப்படும் பஞ்சு பரந்து பல இடங்களினுஞ் சேறல் போல, நிறையில்லாரிடத் துரைத்தனவும் பரந்துபட்டுப் பலராலும் அறியப்பட்டு நிற்கும்.

"பனையின்மேல் பஞ்சி வைத்து எஃகிவிட்டது" என்பது பழமொழி. (௫)

182. விளிந்தாரே போலப் பிறராகி நிற்கும்
முளிந்தவரைத் தஞ்சம் மொழியலோ வேண்டா
அளிந்தார்கண் ஆயினும் ஆராயா னாகித்
தெளிந்தான் விளிந்து விடும்.

(சொ - ள்.) அளிந்தார் கண் ஆயினும் - தம்மாட்டு அன்புடையாரிடத்தாயினும், ஆராயானாகி தெளிந்தான் - ஆராய்தல் இலனாகித் தெளிந்தவன், விளிந்துவிடும் - அழிந்து விடுவான், விளிந்தாரே போல - எப்பொழுதும் வெகுண்டாரே போல இருந்து, பிறராகி நிற்கும் முளிந்தாரை-அன்பின்மையின் வேறாகி

நிற்கும் ஈரமற்றாரை, தஞ்சம் மொழியலோ வேண்டா - (தேற வேண்டாம் என்று) உறுதியாகச் சொல்லவேண்டுவதில்லை.

(க - து.) தம்மாட்டு அன்புடையாரிடத்தே ஆராயாது தம் மறையை வெளியிட்டார் கெடுவர் என்றால், பிறரை நம்பலாகாது என்பது சொல்லவேண்டா.

(வி - ம்.) "இறந்தார் இறந்தார் அனையர்" என்றமையின் சினத்தின்கண் மிக்காரை "விளிந்தார்" என்றே குறித்தார்.

"சுற்றத்தார் நட்டார் எனச்சென் றொருவரை
அற்றத்தால் தேறார் அறிவுடை யார்"

என்றார் முன்னும் அன்புடையார் மாட்டே இஃதாயின் ஏனையோரிடத்துத் தேறவேண்டா என்பது கூறவேண்டா வாயிற்று.

"அளிந்தார்கண் ஆயினும் ஆராயானாகித் தெளிந்தான் விளிந்துவிடும்" என்பது பழமொழி. (சு)

20. தெரிந்து செய்தல்

183. ஆஅம் எனக்கெளி தென்றுலகம் ஆண்டவன்
மேஎந் துணையறியான் மிக்குநீர் பெய்திழந்தான்
தோஒ முடைய தொடங்குவார்க் கில்லையே
தாஅம் தரவாரா நோய்.

(சொ - ள்.) உலகம் ஆண்டவன்—உலகத்தினை அரசுசெய்த மாவலி, மே(வு)ம் துணையறியான்—தன்னோடு பொருந்தியிருக்கும் அமைச்சன் கூறியவற்றை அறியாதவனாய், எனக்கு எளிது ஆம் என்று-மூவடி நிலம் கொடுப்பது எனக்கு எளிய செயலாகும் என்று சொல்லி, மிக்கு – செருக்கின்கண்மிக்கு, நீர் பெய்து – தானமாக நீர்வார்த்துக் கொடுத்து, இழந்தான் - உலகமெல்லாம் இழந்தான். (ஆதலால்), தோம் உடைய தொடங்குவார்க்கு - குற்றமுடைய காரியங்களைத் தொடங்குகின்றவர்களுக்கு, தாம் தரவாரா நோய் இல்லை—தாமே தமக்குத் தேடவாராத துன்பங்கள் இல.

(க - து.) குற்றமுள்ள காரியத்தைச் செய்யத் தொடங்குவார் தாமே தமக்குத் துன்பங்களை விளைவித்துக் கொள்வாராவர்.

(வி - ம்.) துணையறியான் என்றது சுக்கிரன் "கண்ணன் வஞ்சநெஞ்சன்; நினது செருக்கை அடக்க வந்து நிற்கின்றான்,

ஆதலின், அவனுக்கு மூவடியும் கொடா தொழிக," என்று கூறித் தடுக்கவும் அறியானாய் என்றபடி. மாவலி உலகத்தை யிழந்தமையால் தனக்குக் கேடு தானே தேடிக்கொண்டானாகின்றான். ஆகவே, குற்றமுடைய காரியத்தைத் தொடங்குவார் தமக்கு வேண்டிய துன்பங்கள் எல்லாவற்றையும் தாமே விளைத்துக கொள்வர் என்பதாயிற்று.

உலகிழந்தமை: கண்ணன் பேருருவங்கொண்டு ஈரடியால் உலகத்தை அளந்து மற்றோரடிக்கு இடமின்மையால் அவனது தலையின்மீதே வைத்தளந்தான் என்பது.

"ஆஅம் எனக்கெளி தென்றுலகம் ஆண்டவன்
மேஎந் துணையறியான் மிக்குநீர் பெய்திழந்தான்"

என்பது பழமொழி. (க)

184. நற்பால கற்றாரும் நாடாது சொல்லுவர்
இற்பாலர் அல்லார் இயல்பின்மை நோவதென்?
கற்பால் கலங்கருவி நாட!மற் றியாரானும்
சொற்சோரா தாரோ இலர்.

(சொ - ள்.) கல்பால் இலங்கு அருவி நாட-மலைகளிடத்து விளங்கிய அருவிகள் பாயும மலை நாடனே', நற்பால கற்றாரும் - நல்ல குடியினகட் பிறநது நல்லனவற்றைக் கற்றாரும், நாடாது சொல்லுவா - (சில நேரஙகளில்) ஆராய்தலிலராய்ப் பிழைபடச் சொல்லுவார்கள், இற்பாலர் அல்லார் - நல்ல குடியின்கட் பிறவாதார், இயல்பின்மை நோவது எவன் - (சொற்களிலுள்ள) இன்னாமையும் பிழைகளுமாகிய இயல்பின்மையை நினைந்து வருந்துவது எதுபற்றி?, யாரானும் - யாவரே யாயினும், சொல் சோராதாரோ இலர்-சொல்லின்கண் சோர்வுபடாதார் இலர்.

(க - து.) யாவா மாட்டும் சொற்சோர்வு உண்மையான் கருத்து ஒன்றனையே நோக்குக.

(வி - ம்.) எவன் என்பது என் என்றாயது. நல்லன கூறுதற்கும் அல்லன கூறுதற்கும் குடி காரணமாயிற்று

"காட்டும் குலத்திற் பிறந்தார் வாய்ச்சொல்" என்பது திருக்குறள்.

நல்ல குடிப்பிறந்தார் சொற்சோர்வு படார்; சில நேரங்களில் அவரும் உலக வாசனையால் சோர்வுபடுதலின் யாவர்மாட்டும் கருத்தொன்றனையே நோக்குக என்பதாயிற்று.

"யாரானும் சொற் சோராதாரோ இலர்" என்பது பழமொழி. (உ)

185. பூந்தண் புனற்புகார்ப் பூமிகுறி காண்டற்கு
வேந்தன் வினயினன் மாந்தரைச்—சான்றவன்
கொண்டதனை நாணி மறைத்தலால் தன்கண்ணிற்
கண்டதூஉம் எண்ணிச் சொலல்.

(சொ - ள்.) *பூ தண் புனல் புகார் - அழகிய குளிர்ந்த நீரை உடைய புகாரின்கண் உள்ள, பூமி குறி காண்டற்கு - பூமியது அளவை அறியும்பொருட்டு, வேந்தன் - சோழவரசன், மாந்தரை வினயினன் - மக்களைக் கேட்டான், சான்றவன் - அறிவு சான்ற ஒருவன், கொண்டதனை நாணி மறைத்தலால் - ஒருவன் களவினால் ஆண்டுவருகின்ற நிலத்தை எடுத்துக் கூற நாணி அதனை மறைத்து இத்துணையென்று வரையறுத்துக கூறினனாதலால், தன் கண்ணிற் கண்டதும் - தன் கண்ணாற் கண்டு தெளிய அறிந்ததனையும், எண்ணி சொலல் - ஆராய்ந்து சொல்லுக.*

(க - து.) *கண்ணாற் கண்டவற்றையும் அவற்றது நன்மை தீமை கூறுபாடு அறிந்தே கூறுக.*

(வி - ம்.) *சான்றவன் பிறன் களவினால் நிலங்கொண்டு ஆள்வதை அறிவானாயினும், அறிந்ததைக் கூறின் களவுபுரிந்து வாழும் அவற்கு இறுதி வருமென்றெண்ணி அதனை மறைத்துக் கூறி அவனைப் பிழைப்பித்தான். ஆகவே, இவன் தான் கண்டதனை ஆராய்ந்து தீமை இலதாகக் கூறினன். எண்ணிச் சொலல் என்றது பிறவுயிர்க்குத தீஙகு பயப்பதாயின் அதனைக் கூறா தொழிதல், நன்மை பயப்பதாயின் அதனைக் கூறுதல் என்ற கூறுபாடுகளை ஆராய்ந் துரைத்தலே.*

"தன் கண்ணிற் கண்டதூஉம் எண்ணிச சொலல்" என்பது பழமொழி. (ரு)

186. ஒருவன் உணராது உடன்றெழுந்த போருள்
இருவ ரிடைநட்பான் புக்கால்—பெரிய
வெறுப்பினல் போர்த்துச் செறுப்பின் தலையுள்
குறுக்கண்ணி யாகி விடும்.

(சொ - ள்.) *ஒருவன் உணராது - ஒருவன் ஆராயாது, உடன்று எழுந்த போருள் - மாறுபட்டுச சினந்து எழுந்த போரின் கண், இருவர் இடை நட்பான் புக்கால் - அவ்விருவருக்கும் இடையே நட்பாகும்பொருட்டுப் புகுந்தால், பெரிய வெறுப்பினால் போர்த்து செறுப்பின் - தன் சொற்களைக் கேளாது மிக்க-*

வெறுப்பினால் மீண்டும் போர் தொடுக்கும் உள்ளத்தராயின், தலையுள் குறுங்கண்ணியாகிவிடும் - எருதின் தலையிலுள்ள குறிய கயிற்றைப்போல் திருத்த முடியாதாம்.

(க - து) தன்சொல் கேளாதவரைத் திருத்தப் புகலாகாது.

(வி - ம்) குறுங்கண்ணி குறுக்கண்ணி என வலித்தது. எருதின் தலையில் கட்டியிருக்கும் குறிய கயிற்றை அசசத்தால் திருத்தமுடியாதவாறுபோல் தன் சொற்களைக் கேளாதார பூண்ட பகைமையும் திருத்தமுடியாதாம்.

"தலையுள் குறுக்கண்ணி யாகிவிடும்" என்பது பழமொழி.(சு)

187. எனைப்பலவே யாயினும் சேய்த்தாற் பெறலின்
தினைத்துணையே யானும் அணிக்கோடல் நன்றே
இனக்கலை தேன்கிழிக்கு மேகல்சூழ் வெற்ப!
பனைப்பதித் துண்ணார் பழம்.

(சொ - ள்.) இனம் கலை தேன் கிழிக்கும் மேகல் சூழ் வெற்ப-இனமாகிய ஆண் குரங்குகள தேன் கூடுகளைக் கிழிக்கும் ஓங்கிய கற்கள் சூழ்ந்திருக்கின்ற மலைநாட்டை உடையவனே, எனைப் பலவேயாயினும் - எத்துணைப் பலவேயாயினும், சேய்த்தாற் பெறலின் - நெடுநாட்களுககுப்பின் பெறுதலைவிட, தினைத் துணையேயானும்- தினையளவிற்றாயினும், அணிக்கோடல் நன்று- அணித்த நாட்களுக்குள் பெறுதல் நல்லது, பனைபதித்து உண்ணார் பழம்-பனம்பழத்தை நட்டுவைத்துப் பனை பழுத்தால் அப் பழத்தை உண்போம் என்றிருப்பார யாருமில்லை யாதலான்.

(க - து.) பயன் சிறியதேயாயினும் அணித்தே வருவதைக் கொள்க.

(வி - ம்.) சேய்த்து, அணி காலங்களை உணர்த்தி நின்றன. பனம்பழம் ஒன்று கிடைக்குமானால் இதனை நட்டு வைத்து அது பழுத்த பின்னர் மிகுதியும் உண்போம் என்று கையிலுள்ள பழத்தை நட்டுவைத்து இழப்பார் யாருமிலர். பெற்ற அப்பொழுதே அதனை உண்பர். ஆகவே, நெடுங்காலத்தின் பின் வரும் பெரும்பயன் நோக்கி அண்மையில் கிடைத்த சிறுபயனை இழத்தல் கூடாது என்பதாயிற்று. பயன் அளவு நோக்காது கால அளவு நோக்குக என்பதாம். பெரும்பயன் வருந்துணையும் உயிருடன் இருத்தல் அருமையாதலின், "அணிக்கோடல் நன்று" என்றார்.

"பனைப் பதித் துண்ணார் பழம்" என்பது பழமொழி. (ஓ)

188. மனங்கொண்டக் கண்ணும் மருவில செய்யார்
கனங்கொண் டுரைத்தவை காக்கவே வேண்டும்
சனங்கள் உவப்பன செய்யாவும் செய்க
இனங்கழு வேற்றினர் இல்.

(சொ - ள்.) *மனம் கொண்டக் கண்ணும்* – (ஒரு காரியத்தைச செய்ய) மனம் விரும்பிய இடத்தும், *மருவில செய்யார்* – அது வழக்கத்தில் வாராவாயின் அதனைச் செய்யார் அறிவுடையோர், *உரைத்தவை* - நூல்கள் ஆகாவென் றுரைத்தனவற்றை, *கனங்கொண்டு காக்கவே வேண்டும்*–உறுதிகொண்டு அவற்றைக் காத்தல் வேண்டும். *செய்யாவும்* - நூல்கள் ஆகாவென்று உரைத்தனவும், *சனங்கள் உவப்பன* – மக்களால் விரும்பப்படுவன வாயின், *செய்க* – அவற்றைச செய்தல் வேண்டும். *இனங் கழுவு ஏற்றினர் இல்* – நூல்களோடு மாறுபட்டுக் கூறுகின்றனர் என்று மக்களைக் கழுவின்கண் ஏற்றினர் உலகத்தில் இல்லை ஆதலான்.

(க - து.) *உலகநடையினை யறிந்து அதற்கொப்ப ஒழுகுக.*

(வி - ம்.) *தன்னுடைய கருத்திற்கும் இடங்கொடுப்பதில்லை; நூல்களுடைய கருத்திற்கும் இடங்கொடுப்பதில்லை. இங்ஙனம் உலகியல் நடந்துவருவதால் சினந்து கூறுவார் போன்று "இனங் கழுவேற்றினர் இல்" என்றார் ஆகவே, உலகநடை வேத நடைபோல அறநூல்களுட் கூறப்படுவதனறித் தாமே அறிந்து செய்யும் தன்மையை உடையது என்பதாயிறறு. "செய்யாவும் செய்க" என்றதனுல் நூலொடு மாறுபட்டனவும் உலகியலின்கண் பயின்றுவரும் என்பது பெறப்படும்.*

"இனங்கழு வேற்றினர் இல்" என்பது பழமொழி. (*சு*)

189. கடுப்பத் தலைக்கீறிக் காலும் இழந்து
நடைத்தாரா என்பதூஉம் பட்டு—முடத்தோடு
பேர்பிறி தாகப் பெறுதலால் போகாரே
நீர்குறி தாகப் புகல்

(சொ - ள்.) *நீர் குறிதாக* - நீர் சுருங்கி இறங்கிப் போகலாம் படி அளவுபட்டிருக்க, *புகல்* - அந்நெறியில் இறங்கிப் போதலை ஒழித்து, *தலை கடுப்ப கீறி* - தலை மிகவும் கிழிபட்டு, *காலும் இழந்து*-கால்களும் வலி இழந்து, *நடைத்தாரா என்பதும் பட்டு*- நடத்தலைச் செய்யா வென்றும் சொல்லப்பட்டு, *முடத்தோடு பேர்*

பிறிதாகப் பெறுதலால் - முடம் என்ற பெயரோடு வேறு பெயர்களையும் அடைதலால் (அத்தகைய நெறியின்கண்), போகார் - அறிவுடையார் செல்லுதலிலர்.

(க - து.) தம்உயிர்க்கு ஏதம்பட வருவன செய்யாதொழிக.

(வி - ம்.) புகலை ஒழித்துப் போகார் என முடித்துக் கொள்க. கடுப்ப என்றது முதல் பெறுதலால் என்பதுவரை செல்லலாகா நெறியின்கண் செல்வார் அடைதற்குரியன. ஆகவே, அறிவுடையோர் அந்நெறியிற் செல்லுதலிலர் என்பதாம். செல்லலாகா நெறியாவது நீர் மிக்கும் பாறை மிகுந்தும் விரைவு மிகுந்தும் இருக்கும் சிறுநெறி. இதன்கட் சென்றார் தலைகிழிதல், கால் முடம் படுதல் முதலியன பெறுவர். அறிவுடையோர் நல்ல வழியை விட்டு உயிர்க்கிறுதி தரும் வழியிற் செல்லாரென்று தம் உயிர்க் கிறுதிதரும் தீயசெயல்களைச் செய்தலாகாது என்பதனைக் குறித்தார். இங்ஙனம் கருத்தைக் கூறாது பிறிதொன்றனைக் கூறிப் பெறவைத்தலும் அணிவகையுள் ஒன்றாம். பிறிதாகப் பெறுதல் என்றது குருடு, செவிடு போல்வன. இச் செய்யுள் முழுவதும் பழமொழிப் பொருள். (எ)

190. சிறிதாய கூழ்பெற்றுச் செல்வரைச் சேர்ந்தார்
பெரிதாய கூழும் பெறுவர்—அரிதாம்
இடத்துள் ஒருவன் இருப்புழிப் பெற்றால்
கிடப்புழியும் பெற்று விடும்.

(சொ - ள்.) அரிதாம் இடத்துள்-பெறுதற்கரிய இடத்துள், ஒருவன் இருப்புழி பெற்றால் - ஒருவன் இருக்க இடம் பெற்றால், கிடப்புழியும் பெற்றுவிடும் – படுத்தற்குரிய இடத்தையும் பெற்று விடுவான்; (அதுபோல), செல்வரைச் சேர்ந்தார் - செல்வரை அடைந்தவர்கள், சிறிதாய கூழ் பெற்று - முன்னர்ச் சிறிய அளவிற்றாய கூழினைப் பெற்று, பெரிதாய கூழும் பெறுவர் - பின்னர் மிகுந்த அளவிற்றாய உணவினையும் பெறுவர்.

(க - து.) தக்கவர்களைச் சார்ந்தொழுகின் மிகுந்த பயனை அடையலாம்.

(வி - ம்.) இருக்க இடம் பெற்றான் படுக்க இடமும் பெற்றதுபோல, செல்வரைச் சார்ந்து ஒழுகுவார் முன்னர் மிகச் சிறிய உணவு பெறினும், பின்னர்ப் பெரியதாய உணவினைப் பெறுவர். ஆகவே, தக்க இடத்தைச் சார்ந் தொழுகவேண்டும்.

"இருப்புழிப் பெற்றால் கிடப்புழியும் பெற்றுவிடும்" என்பது பழமொழி. (அ)

191. புன்சொல்லும் நன்சொல்லும் பொய்யின் றுணர்கிற்பார்
வன்சொல் வழியராய் வாழ்தலும் உண்டாமோ?
புன்சொல் இடர்ப்படுப்ப தல்லால் ஒருவனை
இன்சொல் இடர்ப்படுப்ப தில்.

(சொ - ள்.) *ஒருவனை—ஒருவனை, புன்சொல் இடர்ப் படுப்ப தல்லால் - வன்சொல் இடருட் படுத்துவதல்லது, இன்சொல் இடர்ப்படுப்பத் இல்-இனியசொல் இடருட் படுத்துவது இல்லை. (ஆகவே), புன் சொல்லும் நன் சொல்லும் பொய்யின்று உணர் கிற்பார் - இன்னாத சொல்லாலும் இனிய சொல்லாலும் வரும் பயனைக் குற்றமின்றி அறியவல்லார், வன்சொல் வழியராய்—வன்சொற் சொல்லி அதன் வழியே ஒழுகுபவராய், வாழ்தலும் உண்டாமோ—வாழ்ந்திருத்தலும் உண்டோ.*

(க - து.) *இனிய சொற்களைச் சொல்லுக.*

(வி - ம்.) *வன்சொல் தன்னை உடையானை இடர்ப்படுத்து தல் நோக்கிப் புன்சொல் எனப்பட்டது.*

"உணர்கிற்பார்" என்றது இன் சொல்லால் நன்மை விளை தலையும் வன் சொல்லால் தீமை விளைதலையும் அறிவார் என்றபடி. இரண்டனது கூறுபா டுணர்வார் வன் சொற் கூறுதலும் உண்டு கொலோ வென்றார்.

*"இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது"*

என்றதன் விரிவே இச்செய்யுள்.

"இன் சொல் இடர்ப்படுப்பதில்" என்பது பழமொழி. (க)

192. மெய்ந்நீர ராகி விரியப் புகுவார்க்கும்
பொய்ந்நீர ராகிப் பொருளை முடிப்பார்க்கும்
எந்நீர ராயினும் ஆக அவரவர்
தந்நீர ராதல் தலை.

(சொ - ள்.) *மெய் நீரர் ஆகி விரிய புகுவார்க்கும்—உண்மை யான நீர்மையை உடையராகித் தமது குண மேம்பாடுகள்விரிந்து நிற்கக் காரியத்தின்கண் புகுகின்றவர்களுக்கும், பொய் நீரர் ஆகி பொருளை முடிப்பார்க்கும் - பொய்ம்மையான நீர்மை உடைய ராகித் தாங் கருதிய பொருளை முடிப்பார்க்கும், எந்நீரர் ஆயினும்*

ஆகுக – அவர்கள் காரியம் முடிக்கும்பொருட்டு எந்த நீர்மை உடையராய் ஒழுகினும் ஒழுகுக, அவரவர் தம் நீரர் ஆதல் தலை – ஏனைய காலங்களில் ஒவ்வொருவரும் தத்தமக்குரிய ஒழுக்கினராய் ஒழுகுதல் தலைசிறந்தது.

(க - து.) ஒவ்வொருவரும் தத்தமக்குரிய ஒழுக்கினை விடாராய் ஒழுகுதலே தலை சிறந்தது.

(வி - ம்.) காரியம் முடிக்கும்பொருட்டு அதற்கேற்ற தன்மையராய் ஒழுகினும், ஏனைய காலங்களில் தமக்குரிய ஒழுக்கத்தின் கண்ணேயே ஒழுகுதல் வேண்டும். காரியம் முடிக்கும் பொழுதும் தத்தமக்குரிய இயல்பினராய் ஒழுகுதலே தலை சிறந்தது. பொய்ந் நீரராகி ஒழுகுதல் அத்துணைச் சிறப்பின்று. இது கருதியே "தந்நீரர் ஆதல் தலை" என்றார்.

"தந்நீரர் ஆதல் தலை" என்பது பழமொழி. (கo)

193. யாவரே யானும் இழந்த பொருளுடையார்
தேவரே யாயினும் தீங்(கு)ஓர்ப்பர்—பாவை
படத்தோன்று நல்லாய்! நெடுவேல் கெடுத்தான்
குடத்துளு நாடி விடும்.

(சொ - ள்.) பாவை பட தோன்றும் நல்லாய் - சித்திரப் பாவையது தன்மை பொருந்தித் தோன்றும் நல்லாய்!, நெடு வேல் கெடுத்தான் - நீண்ட வேலைத் தொலைத்தானொருவன், குடத்துள்ளும்-குடத்துள்ளேயும், நாடி விடும் - நாடுவான்(அது போல), இழந்த பொருள் உடையார் - கெடுத்தவொரு பொருளை யுடையார், யாவரே யானும்-எத்தகைய சிறந்த அறிவினை யுடையவராயினும், தேவரே யாயினும் - முன்னிற்பார் தேவர்களே யானாலும், தீங்கு ஓர்ப்பர் - தமது பொருளைக் கைக்கொண்டாரெனத் தீமையாக நினைப்பர்.

(க - து.) பொருளினை இழந்தார் ஆராயாது ஐயுறுவராயின் அது நோக்கி அவரை வெறுக்காது பொறுத்தல் வேண்டும்.

(வி - ம்.) ஆயினும் என்பது ஆனும் எனக் குறைந்து நின்றது.

"யாவரேயானும்"........என்றமையால் எத்தகையோரும் பொருளினை இழந்தவிடத்துத் தந் திறத்திற் சிறிது குன்றுவர் என்பது பெறப்படும். "தேவரே யாயினும்" என்றது இவர் பொருள் கொண்டு ஒன்றுஞ் செய வேண்டாது இயல்பாகவே

நிறைந்த செல்வத்தினை யுடையார்; அத்தகையோரையும் தீங்கோர்ப்பர் என உயர்ந்ததற் கொன்று காட்டியவாறு. நெடுவேல் தொலைத்தான், குடத்துள் வேல் இருக்கமுடியாமையை அறியாது தேடினமை போல, ஐயுற வேண்டாத தேவர்களையும் ஐயுறுவர் பொருளினை இழந்தார்.

''நாடிவிடும்:'' விடும் என்பது துணைவினையாய் நாடுவான் என்றே பொருள்பட்டு நின்றது.

''நெடுவேல் கெடுத்தான் குடத்துளு நாடி விடும்'' என்பது பழமொழி. (கக)

194. துயிலும் பொழுதத் துடைவூண்மேற் கொண்டு
வெயில்விரி போழ்தின் வெளிப்பட்டா ராகி
அயில்போலுங் கண்ணாய்! அடைந்தார்போல் காட்டி
மயில்போலுங் கள்வ ருடைத்து

(சொ - ள்.) அயில் போலும் கண்ணாய் - வேலினை ஒக்கும் கண்களை உடையாய்!, துயிலும் பொழுதத்து-பித்தரும் உறங்குகின்ற அரையாமத்தில், உடைவு - கதவு முதலியனவற்றைத் தகர்த்தல் செய்து, ஊண் மேற்கொண்டு - அக்களவான் வரும் உணவினை உண்ணுதலே தொழிலாகக் கொண்டு, வெயில் விரி போழ்தின் - ஞாயிறு எழுந்து வெயில் விரிந்த பொழுதின்கண், வெளிப்பட்டார் ஆகி – உறககம் நீஙகி வெளியே தோன்றினவர்களாகி, அடைந்தார்போல காட்டி – எல்லார்க்கும் தாம் நட்டார் போன் றறிவித்து (நிற்கும்), மயில் போலும் கள்வர் - மயிலைப் போன்ற கள்வர்களை, உடைத்து - உடைத்தாயிரா நின்றது இவ் வுலகம்.

(க - து.) வஞ்சக் கள்வரை மிக உடையது இவ்வுலக மாதலால் அவரை யறிந்து தம்மைப் பாதுகாக்க என்பதாம்.

(வி - ம்.) ''வெயில் விரி போழ்தின் வெளிப்பட்டா ராகி'' என்பது யாரும் தம்மை ஐயுறுதவாறு ஞாயிறு தோன்றியபின் தோன்றுவர் என அவரது விரகினைக் குறித்தவாறு. ''மயில் போலும்'' என்றது பாம்பினை விழுங்கிக் கண்டார்க்கு அடக்கம் உடைத்தாம்படி தோன்றும் மயில்போல் என்றவாறு. இவரும் அதுபோல, கொடிய செயல்களைச் செய்து தூய்மையுடையார் போன்று தோன்றுவர் என்பதாயிற்று.

''மயில்போலுங் கள்வர்'' என்பது பழமொழி. (கஉ)

195. செல்லற்க சேர்ந்தார் புலம்புறச் செல்லாது
நில்லற்க நீத்தார் நெறியொரீஇப்—பல்காலும்
நாடுக தான்கண்ட நுட்பத்தைக் கேளாதே
ஓடுக ஊரோடு மாறு.

(சொ - ள்.) *சேர்ந்தார் - தம்மை அடைக்கலமாக அடைந்தார், புலம்பு உற - துன்புற்று அவலிக்குமாறு, செல்லற்க - தீய வழியில் செல்லா தொழிக, நீத்தார் நெறி செல்லாது ஒரீஇ நில்லற்க - இருவகைப் பற்றினையும் நீத்தார் அறிவுறுத்திய நெறியின்கண் செல்லாது அதனைவிட்டு நில்லாதொழிக, தான் கண்ட நுட்பத்தை - தான் ஆராய்ந்து அறிந்த நுண்ணிய பொருளை பல்காலும் - பலமுறையும், நாடுக - ஆராய்க, ஊர் ஓடுமாறு - உலகத்தார் செல்கின்ற நெறியின்கண்ணே, கேளாதே ஓடுக - யாரையும் வினவுதலின்றிச செல்க.*

(க-து.) (1) *தம்மை அடைக்கலமாக அடைந்தாரைத் துன்புறுததலாகாது.*

(2) *துறவிகள் அறிவுறுத்திய நெறியில் ஒழுகல் வேண்டும்.*

(3) *தான்கண்ட நுட்பத்தைப் பலகாலும் ஆராய்க.*

(4) *உலகத்தோ டொத்து வாழ்.*

(வி - ம்.) *நீத்தார் அறிவுறுத்திய நெறியாவது இல்லற, துறவற நெறியின்கண் நின்று இம்மை, மறுமை இன்பங்களைத் தவறாது அடைதற்கு அவரானையாகக்கூறிய நூல்களாம். தம்மை அடைக்கலமாக அடைந்தார் துன்புறும் நெறியில் ஒழுகுதல் பாவங்களுள் தலையாயது என்பார் செல்லற்க என்றும், நீத்தார் அறிவுறுத்திய நெறியின்கண் செல்லாதொழியின் இம்மை மறுமை இரண்டினும் துன்பமெய்தி எற்று எற்று என்று இரங்குவராதலின் "நெறி ஒரீஇ நில்லற்க' என்றும், ஆராயுந்தோறும் இன்பம் இடையறாது தீண்டுதலோடு, மேலும் பல நுட்பங்கள் தோன்றுதலில் "பல்காலும் நாடுக" என்றும், புத்தேளுலகத்தும் இவ்வுலகத்தும் ஒப்புரவுபோற் சிறந்ததொன்றின்மையின் அதனை வினவுதல் செய்யாது விரைந்து செய்க என்பார் "கேளாதே ஓடுக" என்றுங் கூறினார்.* (கரு)

21. பொருள்

196. தெருளா தொழுகும் திறனிலா தாரைப்
பொருளா லறுத்தல் பொருளே—பொருள் கொடுப்பின்
பாணித்து நிற்கிற்பார் யாருளரோ? வேல்குத்தின்
காணியின் குத்தே வலிது.

(சொ - ள்.) தெருளாது ஒழுகும் திறன் இலாதாரை - தன்னைத் தெளியாது செருக்கோடு ஒழுகுகின்ற திறப்பாடில்லாத பகைவரை, பொருளால் அறுத்தல் பொருளே - பொருள் கொண்டு கொல்லுதலே செய்யத்தக்க காரியம், பொருள் கொடுப்பின் - (அப்பகைவரைக் கொல்லும் பொருட்டுச் சிலர்க்குப்) பொருளினைக் கொடுப்பின், பாணித்து நிற்கிற்பார் - அவரைக் கொல்லாது தாமதித்து நிற்பார், யார் உளர் - யாவர் உளர், வேல்குத்தின் - வேலாற் குத்துதலைவிட, காணியின் குத்தே - காணிப்பொருளால் குத்துவதே, வலிது - வலிமை யுடையதாம்.

(க - து.) பகைவரைப் பொருளாற் கோறலே சிறந்ததாதலின் பொருளினை மிகுதியுஞ் செய்க.

(வி - ம்.) "பொருளால் அறுத்தல் பொருளே" என்பது பொருளினைச் செய்யவே, பெரும்படையும் நட்பு முடையராவர்: ஆகவே, பகைவர் தருக்கொழிந்து தாமே யடங்குவர் என்பதாம். "பொருள் கொடுப்பின் பாணித்து நிற்கிற்பார் யாருளர்" என்பதற்குப் பொருளினைக் கொடுப்பின் பெரும்படை, நட்பு என்றிவை போன்றின்றியமையாதனவற்றுள் தம்மோடு சேராது தாமதித்து நிற்பார் யார் என்று பொருள் கொள்ளினுமாம். காணி - இது பொருளின் சிறிய அளவினைக் குறித்து நின்றது. பொருள்போல வேல் முதலியன பகைவரது செருக்கு முதலிய அருவப்பொருளை அறுக்கமாட்டா வாதலின் "காணியின் குத்தே வலிது" என்றார்.

"வேல்குதகின் காணியின் குத்தே வலிது" என்பது பழமொழி. (க)

197. ஒல்லாத வின்றி உடையார் கருமங்கள்
நல்லவாய் நாடி நடக்குமாம்—இல்லார்க்
கிடரா வியலும் இலங்குநீர்ச் சேர்ப்ப!
கடலுள்ளும் காண்பவே நன்கு.

(சொ - ள்.) இலங்கும் நீர் சேர்ப்ப - விளங்குகின்ற கடல் நாடனே!, உடையார் கருமங்கள் - பொருள் உடையார் செய்யத்

தொடங்கிய செயல்கள், ஒல்லாத இன்றி-முடியாதன இல்லாமல், நல்லவாய் நாடி நடக்கும் - நன்மையாகவே ஆராயப்பட்டு முடியும், இல்லார்க்கு - பொருள் இல்லாதவர்களுக்கு, இடரா(க) இயலும் - அவர் தொடங்கிய காரியங்கள் துன்பமாகவே முடியும், கடலுள் ளும் - கடல்தாண்டிச் சென்ற இடத்தின்கண்ணும், நன்கு காண்ப - செய்யத் தொடங்கிய செயலின்கண் வெற்றியையே காண்பார்கள்.

(க - து.) பொருள் உடையார்க்கு முடியாத செயல்கள் யாண்டும் இலவாம்.

(வி - ம்.) பொருள் உடையார் இல்லார் என்ற இருதிறத் தார்க்கும் செயல்கள் தாமே முடிதலில் ஒக்குமாயினும், அவர்க்கு நன்றாகவும் இவர்க்குத் தீதாகவும் முடியு மென்பதாம். "இடரா வியலும்" எனப் பொதுப்படக் கூறவே, செயல்கள் தாம் வெற்றி யாக முடியாதொழிதலே யன்றித் தம்மைச் செய்தாரையும் இடர்ப்படுக்கு மென்பதாம். "கடலுள்ளும்" என்றது பிற நாட்டின் கண்ணும் என்பதை.

"கடலுள்ளும் காண்பவே நன்கு" என்பது பழமொழி. (உ)

198. அருமை யுடைய பொருளுடையார் தங்கண்
கரும முடையாரை நாடார்—எருமைமேல்
நாரை துயில்வதியும் ஊர! குளந்தொட்டுத்
தேரை வழிச்சென்றா ரில்.

(சொ - ள்.) எருமைமேல்—எருமையின்மீது, நாரை துயில் வதியும் ஊர - நாரை தூங்குகின்ற மருதநிலத் தலைவனே, குளம் தொட்டு - குளத்தினைத் தோண்டி, தேரைவழிச் சென்றார் இல் - (அதனிடத்தில் உறைவதற்குத்) தேரை இருக்குமிடத்தைத் தேடிச் செல்வாரிலர். (அதுபோல), அருமை உடைய பொருள் உடையார் - பெறுதற் கருமையை உடைய பொருளினை உடை யார், தங்கண் - தம்மிடம், கருமம் உடையாரை - காரியம் உடை யவர்களை, நாடார் - தேடுதலிலர்.

(க - து.) பொருளுடையாரிடம் கருமம் உடையார் தாமே தேடி வருவர்.

(வி - ம்.) குளத்தினைத் தோண்டியவுடன் தேரைகள் தாமே வந்து சேருதல்போல, செல்வமுண்டான அளவிலே கருமம் உடையார் தாமே வந்து சேருவர்.

"குளந்தொட்டுத் தேரைவழிச் சென்றா ரில்" என்பது பழமொழி. (க)

199. அருளுடை யாருமற் றல்லா தவரும்
பொருளுடை யாரைப் புகழாதா ரில்லை
பொருபடைக் கண்ணாய்! அதுவே திருவுடையார்
பண்டம் இருவர் கொளல்.

(சொ - ள்.) பொரு படைக் கண்ணாய் - போரிடுகின்ற வேல்போன்ற கண்ணை உடையாய்!, அருள் உடையாரும் - அருளினை உடைய பெரியோர்களும், அல்லாதவரும் - சிறியவர்களும், பொருள் உடையாரை - செல்வமுடையாரை, புகழாதார் இல்லை - புகழ்ந்து பேசாதார் இலர் (எல்லோரும் புகழ்வர்), அதுவே - அங்ஙனம் புகழ்தலே, திரு உடையார் பண்டம் - புண்ணியமுடையார் விற்கும் பொருளை, இருவர் கொளல் - இருவர் மாறுபட்டுக் கொள்ளுதலை ஒக்கும்.

(க - து.) பொருள் உடையாரை எல்லோரும் புகழ்வர்.

(வி - ம்.) புண்ணிய முடையார் பண்டத்தைப் பலரும் போட்டியிட்டுக் கொள்ளுதல்போல, பொருளுடையாரைப் பலரும் போட்டியிட்டுப் புகழ்வர்.

அருளுடையார் "இப்பொருளைப் பெற இவர் என்ன புண்ணியஞ் செய்தாரோ" வென அவர் செய்த நல்வினை நோக்கிப் புகழ்வர். அல்லாதார் அவரால் வரும் பயன் நோக்கிப் புகழ்வர். இருவர் என்றது ஒருவர் அல்லர் பலர் என்பதைக் குறிப்பித்தது.

"திருவுடையார் பண்டம் இருவர் கொளல்" என்பது பழமொழி. (௯)

200. உடையதனைக் காப்பான் உடையான் அதுவே
உடையானைக் காப்பதூஉ மாகும்—அடையின்
புதற்குப் புலியும் வலியே புலிக்குப்
புதலும் வலியாய் விடும்.

(சொ - ள்.) அடையின் - சென்றடையுமாகில், புதற்கு - காட்டிற்கு, புலியும் வலியே - புலியும் பாதுகாவலாம், புலிக்கு - புலிக்கு, புதலும் வலியாய் விடும் - காடும் பாதுகாவலாய் நிற்கும், (அதுபோல), உடையதனை - தன்னிடத்திலுள்ள பொருளை, காப்பான் - இடையூறுபடாது காப்பாற்றுகின்றவனே, உடையான் - பொருள் உடையா னெனப்படுவான், அதுவே - அப்பொருள் தானே, உடையானை - தன்னையுடையானை, காப்பதூஉம் ஆகும் - இடையூறு உறாமற் காப்பாற்றுகின்றதாகும்.

(க - து.) பொருளை ஒருவன் காப்பாற்றினால் அவனைப் பொருள் காப்பாற்றும்.

(வி-ம்.) வலி என்பது இருவழியும் வலிமைக்கு ஏதுவாகிய பாதுகாவல் என்னும் பொருளைப் பயந்து நின்றது. புதல் என்பது ஈரிடத்தும் புதல்கள் நெருங்கியுள்ள காடு எனக் காட்டின் மேல் நின்றது. புதல் – புல்பூண்டுகள்.

"புதற்குப் புலியும் வலியே புலிக்குப்
புதலும் வலியாய் விடும்" என்பது பழமொழி. (கூ)

201. வருவாய் சிறிதெனினும் வைகலு மீண்டின்
பெருவாய்த்தாய் நிற்கும் பெரிதும்—ஒருவா
றொளியீண்டி நின்றால் உலகம் விளக்கும்
துளியீண்டில் வெள்ளந் தரும்.

(சொ - ள்.) ஒளி ஈண்டி நின்றால் – விண்மீன்கள் ஒன்று கூடி நின்றால், ஒருவாறு உலகம் விளக்கும் - ஒருவகையாக இருள் நீங்க உலகத்தினை விளங்கச்செய்யும், துளி ஈண்டில் – மழைத் துளிகளும் இடைவிடாது ஒன்றுசேரில், வெள்ளம் தரும்-கடலைப் போல் மிகுந்த நீரைத் தரும். (அவைபோல), வருவாய் சிறிது எனினும் - (ஒருவனுக்கு) பொருள் வருவாய் சிறிதாயினும், வைகலும் ஈண்டின் - நாடோறும் சோர்வின்றிச் சிறிதாயினும் சேர்த்து வைப்பின், பெரிதும் பெருவாய்த்தாய் நிற்கும் – மிகவும் பெரிய அளவினை உடையதாக ஆகும்.

(க - து.) வருவாய் சுருங்கியதாயினும் நாடோறும் சிறிது சிறிதாகச் சேர்த்துவைத்தால் செல்வம் வளர்ந்து பெரிதாகும்.

(வி - ம்.) வருவாய் – வரவுகட்கான வேது; இது வருகின்ற பொருள்மேல் நின்றது. ஒருவாறு என்றது "பாயிருள் நீக்கும் மதியம்போல் பல்மீனும் காய்கலா வாகும் நிலா" என்பதைக் கருதி.

"ஒளியீண்டி நின்றால் உலகம் விளக்கும்,
துளி யீண்டில் வெள்ளம் தரும்" என்பன பழமொழிகள். ()

202. உள்ளு ரவரால் உணர்ந்தாம் முதலெனினும்
எள்ளாமை வேண்டும் இலங்கிழாய்—தள்ளா
தழுங்கல் முதுபதி அங்காடி மேயும்
பழங்கன்றே றாதலும் உண்டு.

(சொ - ள்.) இலங்கு இழாய் - விளங்குகின்ற இழையினை உடையாய்!, அழுங்கல் முதுபதி - ஒலியினையுடைய பழைய நகரில், அங்காடி - கடைத்தெருவின்கண், தள்ளாது மேயும் பழங்கன்று - நடக்கமுடியாது நடந்து மேய்கின்ற பழைய கன்று, ஏறு ஆதலும் உண்டு-வலிய எருதாதலும் உண்டு. (ஆதலால்), முதல் - ஒருவனுக்கு முதலாக இருக்கின்ற பொருளது சிறுமையை, உள்ளூரவரால் உணர்ந்தாம் எனினும்-அவனது ஊரின்கண் வாழ்பவரால் ஐயமின்றி அறிந்தேமாயினும், எள்ளாமை வேண்டும் - அவனைப் பொருளிலான் என்று இகழா தொழிதல் வேண்டும்.

(க - து.) பொருள் சிறிதுடையார் என்று யாரையும் இகழற்க.

(வி - ம்.) "உள்ளூரவரால்" என்றது அவரது பொருளின் அளவை உள்ளூரில் வாழ்வார் நன்கு அறிவாராதலால் அவர்களால் ஐயமின்றித் தெளிய அறிந்தார் என்றபடி. "பழங்கன்று" என்றது உடல் இளைப்பால் பழமையாகவும் வயதால் இளமையாகவும் இருத்தல்நோக்கி. நடந்துசெல்ல முடியாத கன்றும் வலிய ஏருதல்போல, சிறிய முதலுடையாரும் பெரிய செல்வந்தராத லுண்டு. ஆதலின் சிறுமைநோக்கி இகழற்க.

"பழங்கன்றே றாதலும் உண்டு" என்பது பழமொழி. (எ)

203. களமர் பலரானும் கள்ளம் படினும்
வளமிக்கார் செல்வம் வருந்தா—விளைநெல்
அரிநீர் அணைதிறக்கும் ஊர! அறுமோ
நரிநக்கிற் றென்று கடல்.

(சொ-ள்.) விளைநெல் அரிநீர் அணைதிறக்கும் ஊர-விளைந்த நெல்லை அறுக்கும் பொருட்டு உழவர்கள் நீர் வடிய வடிகாலைத் திறக்கும் மருதநிலத் தலைவனே!, நரி நக்கிற்று என்று கடல் அறுமோ-நரி நக்கியது காரணமாகக் கடல் நீர் வற்றுதலுண்டோ (இல்லை). (அதுபோல), களமர் பலரானும் - ஏவல்செய்வார் பலராலும், கள்ளம் படினும்-களவு செய்யப்படினும், வளம் மிக்கார் செல்வம் - பொருள் வருவாய் மிகுதியும் உடையாரது செல்வம், வருந்தா - குறைந்து வருந்துதலில்லை.

(க - து,) பொருள் வருவாய் மிக உடையார், களமர் களவு செய்ததால் செல்வம் குறைந்து வருந்தார்.

(வி - ம்.) பெருநெருப்புக்கு ஈர மில்லாதது போல, வருவாய் மிக உடைமையால் களவு செய்யப்பட்ட இச் சிறுபொருள் ஒரு குறைவாகத் தோன்றுதலில்லை.

"அறுமோ நரி நக்கிற்று என்று கடல்" என்பது பழமொழி. (அ)

204. நாடறியப் பட்ட பெருஞ்செல்வர் நல்கூர்ந்து
வாடிய காலத்தும் வட்குபவோ?—வாடி
வலித்துத் திரங்கிக் கிடந்தே விடினும்
புலித்தலையை நாய்மோத்தல் இல்.

(சொ - ள்.) வாடி - உணவு பெறாமையால் வாட்டமுற்று, வலித்து - நரம்புகள் வலித்து, திரங்கி - உடல் சுருக்கத்தை யடைந்து, கிடந்தேவிடினும்-முதுமையால் படுத்தே கிடப்பினும், புலித்தலையை-அங்ஙனம் கிடக்கும் புலியது தலையை, நாய்மோத்தல் இல் - நாய் சென்று மோந்துபார்த்தல்கூட இல்லை, (ஆகையால்) நாடு அறியப்பட்ட பெரும் செல்வர் - உலகத்தாரால் அறியப்பட்ட மிகுந்த செல்வத்தினை யுடையார், நல் கூர்ந்து-வறுமையுற்று, வாடிய காலத்தும் - தளர்ந்த இடத்தும், வட்குபவோ - பிறருக்குத் தாழ்வாகத் தோன்றுவரோ? தோன்றார்.

(க - து.) பெருஞ்செல்வ முடையார் தம் செல்வம் சுருங்கிய விடத்தும் பிறருக்குத் தாழ்வாகத் தோன்றார்.

(வி - ம்.) புலி செயலற்றுக் கிடந்ததாயினும் நாய் அதனை மோந்து பார்த்தல்கூடச் செய்யாததுபோல், பெருஞ்செல்வர் செல்வ மிழந்து வருந்தினாராயினும் தீயோர் அவர்க்குத் தீமை செய்யும்பொருட்டு நெருங்க அஞ்சுவர்.

"வாடி வலித்துத் திரங்கிக் கிடந்தே விடினும்
புலித்தலையை நாய் மோத்தல் இல்" என்பது பழமொழி.

22. பொருளைப் போற்றுதல்

205. தந்தம் பொருளும் தமர்கண் வளமையும்
முந்துற நாடிப் புறந்தரல் ஓம்புக
அந்தண் அருவி மலைநாட ! சேணோக்கி
நந்துநீர் கொண்டதே போன்று.

(சொ - ள்.) அம் தண் அருவி மலை நாட - அழகிய குளிர்ந்த அருவிகளை உடைய மலைநாடனே!, சேண் நோக்கி - கால நெடுமையை நோக்கி, நந்து - நத்தை, நீர் கொண்டது போன்று - நீரைத் தன்னிடத்தே பாதுகாத்துக்கொண்டதுபோல, தம் தம் பொருளும் - தத்தமது பொருளையும், தமர்கண் வளமையும் - தம் சுற்றத்தாரிடத்துள்ள செல்வத்தையும், முந்துற நாடி - முற்படவே ஆராய்ந்து, புறந்தரல் - பின்னாளில் உதவும் பொருட்டு, ஓம்புக - பொருளினைச் சேமித்துக் காவல்செய்க.

(க - து.) பின்னாளில் உதவும் பொருட்டுப் பொருளினைச் சேமித்துக் காவல் செய்க.

(வி - ம்.) நத்தை எதிர்காலத்தை நோக்கி நீரைச் சேமித்துக் காவல் செய்வதுபோல, பிற்காலம் நோக்கிப் பொருளினைக் காவல் செய்தல் வேண்டும். "தந்தம் பொருளும் தமர்கண் வளமையும் முந்துற நாடி" என்றது ஒவ்வொருவனும் தன்னையும், தன்னைச் சேர்ந்தவர்களையுமாவது காப்பாற்றுதல் வேண்டும் என்னும் கடப்பாடு நோக்கி,

"சேணோக்கி நந்துநீர் கொண்டதே போன்று" என்பது பழமொழி. (௫)

206. மறந்தானும் தாமுடைய தாம்போற்றி னல்லால்
சிறந்தார் தமரென்று தேற்றார்கை வையார்
கறங்குநீர்க் காலலைக்கும் கானலஞ் சேர்ப்ப!
இறந்தது பேர்த்தறிவார் இல்.

(சொ - ள்.) கறங்கு நீர்க்கால் - ஒலிக்கின்ற நீரை உடைய உப்பங்கழிகள், அலைக்கும் - அலைவீசுதற் கிடனாய, கானல் அம் சேர்ப்ப - கடற்கரைச் சோலையை உடைய அழகிய கடல் நாடனே!, இறந்தது - தமது கையினின்றும் போய பொருளை, பேர்த்து அறிவார் இல் - மீட்டுத்தர அறிவாரில்லையாதலால், தாம் உடைய - தம்மிடத்துள்ள பொருளை, தாம் போற்றின் அல்லால் - தாம் காவல்செய்யின் அல்லது, சிறந்தார் தமர் என்று - தமக்குச் சிறந்தார் எனவும், உறவினர் எனவும் கருதி, தேற்றாகை - நம்பலாகாதார் கையின்கண், மறந்தானும் வையார் - ஒருகால் மறந்தும் வைத்தல் இலர் அறிவுடையார்.

(க - து.) ஒவ்வொருவரும் தந்தம் பொருளைத் தாமே பாதுகாத்தல் வேண்டும்.

(வி-ம்.) போனபொருளை மீட்டும் பெறுதல் அரிதாகலான், உள்ளபொருள் கைவிட்டுப் போகாதவண்ணம் தாமே காவல் செய்தல் வேண்டும்.

"இறந்தது பேர்த்தறிவார் இல்" என்பது பழமொழி. (உ)

207. அமையா இடத்தோர் அரும்பொருள் வைத்தால்
இமையாது காண்பினும் ஆகா—திமையோரும்
அக்காலத் தோம்பி அமிழ்துகோட் பட்டமையால்
நற்காப்பின் தீச்சிறையே நன்று.

(சொ - ள்.) இமையோரும் - தேவர்களும், அக்காலத்து - முற்காலத்து, ஓம்பி - பாதுகாத்தும், அமிழ்து கோட்பட்டமையால் - அமிர்தம் கருடனால் கொள்ளப்பட்டமையால், நல் காப்பின் தீச்சிறையே நன்று - நன்றாகக் காவல் செய்தலினும் யாரும் நெருங்கமுடியாத தக்க இடத்தின்கண் வைத்துக் காவல் செய்தலே நல்லது. (ஆதலால்), அமையா இடத்து - பொருந்தாத விடத்து, ஓர் அரும் பொருள் வைத்தால் - ஓர் அரிய பொருளை வைத்தால், இமையாது காப்பினும் - கண்ணிமையாது காவல் செய்யினும், ஆகா - காவல் செய்ய முடியாதாம்.

(க - து.) பொருளை, யாரும் நெருங்கமுடியாத தக்க இடத்தின்கண் வைத்துக் காவல் செய்தல் வேண்டும்.

(வி - ம்.) சிறை என்றது சிறை செய்யப்படும் இடத்தினை. அதற்குத் தீமையாவது யாரும் நெருங்க முடியாமையாம். இமையாது நோக்கும் இமையவர் பாதுகாத்தும் அமிர்தம் கோட்பட்டது. என்று தீச்சிறையின் இன்றியமையாமை குறிப்பிடப்பட்டது. அமிழ்து கோட்பட்டமையாவது, கருடன் தன் தாயின் அடிமையை நீக்கும் பொருட்டுத் தேவர்கள் அமராவதியின்கண் வைத்துக் காவல் செய்த அமிர்தத்தைத் தன் வலிமையால் கொண்டு சென்றான் என்பது.

"நற்காப்பின் தீச்சிறையே நன்று" என்பது பழமொழி. (ங)

208. ஊக்கி உழந்தொருவர் ஈட்டிய ஒண்பொருளை
நோக்குமின் என்றிகழ்ந்து நோவ்வியார் கைவிடுதல்
போக்கில்நீர் தூஉம் பொருகழித் தண்சேர்ப்ப
காக்கையைக் காப்பிட்ட சோறு.

(சொ - ள்.) போக்கு இல் நீர் - வடிவாய் இல்லாத கடல், தூஉம் - நீர்த்துளிகளைத் தூவுகின்ற, பொரு கழித் தண் சேர்ப்ப- கரையினைப் பொருகின்ற உப்பங்கழிகளையுடைய குளிர்ந்த கடல் நாடனே!, ஒருவர் ஊக்கி உழந்து ஈட்டிய ஒண்பொருளை-ஒருவர் முயன்று வருந்தித் தேடிய ஒள்ளிய பொருளை, நோக்குமின் என்று - காவல் செய்தலை இகழ்ந்து, நொவ்வியார் கைவிடுதல் - கீழ்மக்களிடத்து ஒப்புவித்தல், காக்கையை காப்பு இட்ட சோறு- காக்கையைக் காவலாக வைத்த சோற்றினை ஒக்கும்.

(க - து.) காத்துத்தருமாறு கீழ்மக்களிடம் ஒப்புவித்த பொருளைப் பின்னர்ப் பெறுதல் அரிதாம்.

(வி - ம்) கடலைப் "போக்கில் நீர்" என்றார், வருவாயே யன்றி வடிவாய் இன்மையால். காக்கையைக் காவலாகவைத்த சோற்றினைப் பிறகு பெறுதல் அரிதாதல் போல, கீழ்மக்களிடம் காவலாக ஒப்புவித்த பொருளையும் திரும்பப் பெறுதல் அரிதாம்.

"காக்கையைக் காப்பிட்டசோறு" என்பது பழமொழி. (௮)

209. தொடிமுன்கை நல்லாய்!அத் தொக்க பொருளைக்
குடிமகன் அல்லான்கை வைத்தல்—கடிநெய்தல்
வேரி கமழும் விரிதிரைத் தண்சேர்ப்ப
மூரியைத் தீற்றிய புல்.

(சொ - ள்.) தொடி முன்கை நல்லாய்-வளையல் பொருந்திய முன் கையையுடைய நல்லாய்!, கடி நெய்தல் மணம் கமழும் - புதிதாக அலர்ந்த நெய்தலது நறு நாற்றம் கமழுகின்ற, விரி திரை தண் சேர்ப்ப-விரிந்த அலைகளையுடைய குளிர்ந்த கடல்நாடனே!, அ தொக்க பொருளை-முயன்று வருந்திச் சேர்த்த அத்திரண்ட பொருளை, குடிமகன் அல்லான கை வைத்தல்-நற்குடியிற் பிறந்த மகன் அல்லாதவனிடத்து வைத்தல், மூரியை தீற்றிய புல் - கிழவெருதை உண்பித்த புல்லோ டொக்கும்.

(க - து.) நற்குடிப் பிறவாரிடத்து வைத்த பொருள் பயன் படுதலில்லை.

(வி - ம்.) கிழ வெருதினை உண்பித்த புல் பயனற் றொழி தல்போல, நற்குடிப் பிறவாரிடத்து வைத்த பொருளும் தமக்குப் பயனற் றொழியும என்பதாம். இச் செய்யுளின்கண் ஆடூஉ மகடூஉ முன்னிலைகள் இரண்டும் ஒருங்கே வந்தன.

"மூரியைத் தீற்றிய புல்" என்பது பழமொழி. (௯)

210. முன்னை யுடையது காவா திகந்திருந்து
பின்னையஃ தாராய்ந்து கொள்குறுதல்—இன்னியல்
மைத்தடங்கண் மாதராய்! அஃதாதல் வெண்ணெய்மேல்
வைத்துமயில் கொள்ளு மாறு.

(சொ – ள்.) இன் இயல் மை தட கண் மாதராய் - இனிய இயல்பையுடைய மையுண்ட அகன்ற கண்களையுடைய மாதே!, முன்னை உடையது - தான் எளிதாகக் கொள்ளக்கூடிய முன்னால் உள்ள பொருளை, காவாது - பெற்றுக் காவல் செய்தலின்றி, இகந்து இருந்து - விரும்பாது வெறுத்திருந்து, பின்னை - எளிதாகக் கொள்ள முடியாத காலத்து, அஃது - அப்பொருளை, ஆராய்ந்து கொள்குறுதல் - தேடிக்கொள்ளுதல், அஃது ஆதல் - அங்ஙனந் தேடிக் கோடல், வெண்ணெய் மேல் வைத்து - வெண்ணெயை மேலே வைத்து, மயில் கொள்ளுமாறு - அது உருகிக் கண்களை மறைத்தபின் மயிலைப் பிடிப்பதோ டொக்கும்.

(க – து.) எளிதாகக் கொள்ளக்கூடிய பொருளைக் கொள்ளாது அரிதாயவிடத்துப் பின்னர் அதனை வருந்திப் பெறுதல் மடமையாகும்.

(வி - ம்.) வெண்ணெயை வைக்கும்போதே மயிலைக் கொள்ளாது அஃது உருகி உக்கபின் மயிலைக் கொள்ளுதல் அறியாமையாதல் போலத் தான் எளிதாகக் கொள்ளுமாறு முன்னே இருப்பதைக் கொள்ளாது கோடற்கு அரிதாய காலத்து அதனை வருந்திப் பெறுதலும் அறியாமையாம். அஃது எனச் சுட்ட வேண்டா திருக்கவும் சுட்டப்பட்டது மகடூஉ முன்னிலை இடை நின்றதாகலின். இங்ஙனம வருஞ் செய்யுட்கள இந்நூலுட் பல.

"வெண்ணெய்மேல் வைத்து மயில் கொள்ளுமாறு" என்பது பழமொழி. (க)

211. கைவிட்ட ஒண்பொருள் கைவர வில்லென்பார்
மெய்ப்பட்ட வாறே உணர்ந்தாரால்—மெய்யா
மடம்பட்ட மானேக்கின் மாமயி லன்னய்
கடம்பெற்றான் பெற்றான் குடம்

(சொ – ள்.) மடம்பட்ட மான் நோக்கின்-மடப்பம் பொருந்திய மான்போன்ற பார்வையையுடைய, மா மயில் அன்னாய் - சிறந்த மயில் போல்வாய்!, மெய்ப்பட்ட ஆறே உணர்ந்தார் -

மெய்யான நெறியிலே நின்று உலக இயலை அறிந்தார், மெய்யாக-உண்மையாகவே, கைவிட்ட ஒண்பொருள் - யாதொரு கரிவுமின்றிக் கடனாகத் தன் கையினின்றும் விட்ட ஒள்ளிய பொருள், கைவரவு இல்லென்பார் - மீட்டுத் தன் கையின்கண் வருதல் இல்லை என்று கூறுவார்கள், கடம் பெற்றான் - பிறர்க்குக் கடனாகக் கொடுத்த பொருளை மீட்டுப் பெற்றானெனப் படுவான், குடம் பெற்றான் - உறுதி கூறுதற்குப் பாம்புக் குடத்தைப் பெற்றவனே யாவா னாதலால்.

(க - து.) யாதொரு சான்றுமின்றிக் கடன் கொடுத்தலாகாது.

(வி - ம்.) "மெய்ப்பட்டவாறே உணர்ந்தார்" என்றது மெய்யான நெறியில் நிற்பார்க்கே மெய்ம்மை தோன்றும்; ஆகவே அவர் கூறியதே உறுதி என்பதாம். யாதொரு சான்று மின்மையால் கடம்பெற்றான குடம்பெற்றானாதலின் கைவிட்ட என்பதற்கு யாதொரு சான்றுமின்றி விடப்பட்ட என்று பொருளுரைக்கப் பட்டது. "குடம்பெற்றான்" என்றது பண்டைநாளில் வழக்கினைத் தீர்ப்போர் சான்றில்லாதாரைப் பாம்புக குடத்தின்கண் கையைவிட்டு அவர் வழக்கினைக் கூறுமாறு செய்வர். இது பண்டைய நாளில் தீர்ப்புக் கூறப்பட்ட முறை.

"கடம் பெற்றான் பெற்றான் குடம்" என்பது பழமொழி.(எ)

212. கடங்கொண்ட ஒண்பொருளைக் கைவிட் டிருப்பார்
இடங்கொண்டு தம்மினே என்றால்—தொடங்கிப்
பகைமேற்கொண் டார்போலக் கொண்டார் வெகுடல்
நகைமேலும் கைப்பாய் விடும்.

(சொ - ள்) கடம் கொண்ட ஒண் பொருளை - தாம் கடனாகக்கொண்ட ஒள்ளிய பொருளை, கைவிட்டிருப்பார் - பிறரிடம் தம் கையினின்றும் விட்டிருப்பார், இடம் கொண்டு-அவரிடத்திற் சென்று, தம்மினே என்றால் - எம்மிடம் கொண்ட பொருளைத் தரவேண்டுமென்று கேட்டால், பகை மேற்கொண்டார் போல தொடங்கி - தம்மோடு பகையினை மேற்கொண்டவரைப்போலத் தொடங்கி, கொண்டார் வெகுடல் - கடன் வாங்கியவர் சினத்தல், நகை மேலும் - விளையாட்டாகச் செய்தவிடத்தும், கைப்பு ஆய் விடும் - மனதிற்குக் கசப்பாய்விடும்.

(க - து.) கொடுப்பதாகக் குறித்த காலத்தில் தாங்கொண்ட பொருளைக் கொடாராயின் கடங்கொண்ட ஒண்பொருளை உடையார்க்கு மனக்கசப்பை உண்டாக்கும்.

(வி - ம்.) "கடங்கொண்ட ஒண்பொருளைக் கைவிட்டிருப்பார்" என்றது, ஒருவரிடத்தில் இன்ன காலத்திற்குள், கொண்ட பொருளைத் தருகின்றேன் என்று தம்பொருட்டு வாங்கி, தம்மிடத்தில் பொருள் உள்ளதை யறிந்து கேட்கும் தட்ட முடியாத ஒருவரிடத்துத் தாங் கூறியிருக்கின்ற வாக்குறுதியைக் கூறித் தம்பொருட்டு வாங்கிய பொருளை அவரிடம் கொடுப்பாரை. "இடம் கொண்டு தம்மினே என்றல்" என்பது, தமக்குக் கடன் கொடுத்தார் தாங் குறித்த காலத்தில் வந்து பன்முறையும் கேட்க அது பொறுது தாம் கொடுத்த பொருளுடையார் இருக்குமிடம் சென்று பொருளைக் கொடுத்தல் வேண்டுமென்று பணிந்து கேட்பது. "பகைமேற் கொண்டார் போல" என்றது, முன்னர் கட்பாயிருந்தார் கொடுத்ததைக் கேட்கப் பகை மேற்கொண்டார் போன்றார் என்பது. "கைப்பாய் விடும்" என்பது, தனக்கு மிக வேண்டியவராதலின் நெருக்கிக் கேட்கவும் இயலாது. தாம் பொருள் பெற்றாரிடம் மறுமொழி கூறவும் இயலாது தன்னைத் தானே நொந்துகொள்வா போன்று மனங்கசந்து நிற்றல் என நடைமுறையிற் கூறியவாறும்.

"கொடுத்தது கேட்டால் அடுத்தது பகை" "வாங்கும்போது இனிப்பு கொடுக்கும்போது கசப்பு" என்பன இசெய்யுட் பழமொழிகள். (அ)

23. நன்றியில் செல்வம்

213. அல்லது செய்வார் அரும்பொருள் ஆக்கத்தை
நல்லது செய்வார் நயப்பவோ?—ஒல்லொலிநீர்
பாய்வதே போலும் துறைவ!கேள் தீயன
ஆவதே போன்று கெடும்.

(சொ - ள்.) ஒல் ஒலி நீர் பாய்வதே போலும் துறைவ - ஒல்லென்று ஒலிக்கும் நீர் கற்பாறைமீது பாய்வதே போன்று விளங்கும் கடற்றுறையை உடையவனே !, கேள் - கேட்பாயாக, தீயன ஆவதே போன்று கெடும் - தீயசெயல்களால் உண்டாகிய செல்வம் பெருகுவதேபோன்று தோற்றுவித்துத் தன்னெல்லையைக்கடந்து கெட்டுப்போகும். (ஆதலால்), அல்லது செய்வார் அரும்பொருள் ஆக்கத்தை - தீவினை செய்வாரது அரிய பொருளாகிய ஈட்டத்தை, நல்லது செய்வார் நயப்பவோ - நல்வினையைச் செய்வார் விரும்புவரோ ? (விரும்புதலிலர்.)

(க-து.) நல்லோர், தீயது செய்வார் செல்வ நிலையாமையை அறிந்து அதனைப் பொருளாக மதித்தலிலராகலின், தீவினை செய்து பொருளீட்டலாகாது என்பதாம்.

(வி - ம்) பெறுதற்கரிய செல்வம் தீயார் கைப்படுதலின் நல்லோரால் விரும்பப்படுதலின்றி ஒழிந்தது என்றிரங்குவார் போன்று "அருமபொருள்" என்றார். தீயன செய்வார் செல்வம், போங்கால், பாவத்தையும் பழியையும் நிறுத்திச் செய்த அறத்தை உடன்கொண்டு போதலின், நல்லது செய்வார் அதனை விரும்புத லிலர். புதுவெள்ளம் வந்து பழைய வெள்ளத்தையும் கொண்டு போனதுபோல், தீயார் செல்வம் வருவது போன்று தோன்றி, வந்த அளவினும் மிகுந்து போவதாம். அழிவினைச் செய்யினும் அல்லது செய்வார் ஆக்கம் என்று கருதுதலின் "ஆக்கத்தை" என்றார்.

"தீயன ஆவதே போன்று கெடும்" என்பது பழமொழி. (க)

214. தொன்மையின் மாண்ட துணிவொன்றும் இல்லாதார்
நன்மையின் மாண்ட பொருள்பெறுதல்—இன்னொலிநீர்
கல்மேல் இலங்கு மலைநாட! மாக்காய்த்துத்
தன்மேல் குணில்கொள்ளு மாறு.

(சொ - ள்.) இன் ஒலி நீர் கல்மேல் இலங்கும் மலைநாட - இனிய ஒலியினையுடைய அருவிநீர் கற்பாறைமேல் இழியா நின்று விளங்கும் மலைநாடனே!, தொன்மையில் மாண்ட துணிவு ஒன்றும் இல்லாதார் - பழைய நூல்களில் மாட்சிமைப்பட்ட துணிவு ஒரு சிறிதும் இல்லாதவர்கள், நன்மையில் மாண்ட பொருள் பெறுதல் - நலங்களில் மாட்சிமைப்பட்ட பொருளினை முயன்று உடையராதல், மா-மாமரமானது, காய்த்து - காய்ப்புற்று, தன மேல் குணில் கொள்ளுமாறு - அதனால் தன்மேல் பிறரெறியும் கல்லை ஏற்றுக்கொள்ளுதல் போலும்.

(க - து.) அறிவிலார் பெற்ற செல்வம் அவர்க்கே துன்பத் தினை விளைக்கும்.

(வி - ம்.) ஈதலும் துய்த்தலுமாகிய நலங்களால் மாட்சிமைப் பட்ட பொருள் என்றார், அறிவிலார் கைப்பட்டு அவற்றை யிழந்து நிற்றல் நோக்கி. தொன்மையின் மாண்ட துணிவு என்றது, செல்வத்தாற் பெறும் ஈதலும் துய்த்தலுமாகியவற்றை. "ஏதம் பெருஞ்செல்வம் தான்துவ்வான் தக்கார்க்கொன், றீதல் இயல்பிலா தான்." செல்வம் ஈதலும் துய்த்தலுமாகிய இயல்

புடையது என்பது பழமறைத் துணிவு. மா காய்ப்புற்றுத் துன் பத்தினைத் தாமே தேடிக்கொள்ளுதல்போல. அறிவிலாா தாம் பெற்ற செல்வத்தை ஆறறும் நெறியறியாது தீய வழியில் செலுத் தித் தமது செல்வத்திற்கேயன்றித் தமக்கும் தீங்கினைத் தாமே தேடிக்கொள்வர். ஆகவே, அறிவிலார் செல்வம் பெறுதல் துன் பம் பெறுதலேயாம்.

"மாக் காய்த்துத் தன்மேல் குணில் கொள்ளுமாறு" என் பது பழமொழி. (௨)

215. பெற்றாலும் செல்வம் பிறர்க்கீயார் தாந்துவ்வார்
கற்றாரும் பற்றி இறுகுபவால்—கற்றா
வரம்பிடைப் பூமேயும் வண்புனல் ஊர!
மரங்குறைப்ப மண்ணா மயிர்.

(சொ - ள்.) கற்றா - கன்றினை உடைய பசு, வரம்பிடை பூமேவும் வண்புனல் ஊர - வரம்பின்கண் உள்ள பூவினை உண் கின்ற வளமையுடைய புனல் நாடனே!, மரம்குறைப்ப மயிர் மண்ணா—மரங்களை வெட்டும் வாள் முதலிய கருவிகள், மயிரினை நீக்குதல் செய்யா; (ஆனால்) கற்றாரும்—பழைய நூல்களின் துணி வைக் கற்றாரும், செல்வம் பெறறாலும் - செல்வத்தை ஒருகாற் பெற்றாலும், பிறர்க்கு ஈயார் தாம் துவவார் - வேண்டுவார்க்கு ஒன்றைக் கொடுத்தலுமிலர், தாமுந் துய்த்தலுமிலராகி, பற்றி இறுகுப - பற்றுள்ள முடையவராய் நெகிழாது இறுகப்பிடிப்பர்; இஃது என்னே என்றவாறு.

(க - து.) கற்றவர்கள் ஈதலுந் துய்த்தலுமின்றி இறுகப் பிடித்தல் அடாத செய்கையாம்.

(வி - ம்.) மரங்குறைக்கின்ற கருவிகள் மயிரினை நீக்குதல் செய்யா. அதுபோல இறுகப்பிடிக்கும கல்லார் ஈதல் துய்த்தல் முதலியன செய்யார், இது பொருந்தும். செல்வததாற் பெறும் பயன் ஈதலும் துய்த்தலுமே என்று ஐயந்திரிபின்றிக் கற்றார் ஈதல் துய்த்தல் முதலியன செய்தலின்றி இறுகப் பிடித்து வாழ்வர், இஃது அடாத தென்பது. இது மரங்குறைப்பதற் காக ஏற்பட்ட கருவி மரஙகுறையா தொழிதல்போலும். "பற்றி" என்று செல்வத்தின் இயல்பு விளக்கியவாறு. பெற்றாலும் என்றது கற்றார் பெறுதற்கரியது செல்வம் என நடைமுறையில் விளக்கப்பட்டது.

"மரங் குறைப்ப மண்ணா மயிர்" என்பது பழமொழி. (௩)

216. வழங்கலும் துய்த்தலும் தேற்றாதான் பெற்ற
முழங்கு முரசுடைச் செல்வம்,—தழங்கருவி
வேய்முற்றி முத்துதிரும் வெற்ப! அதுவன்றோ
நாய்பெற்ற தெங்கம் பழம்.

(சொ - ள்.) *தழங்கு அருவி - முழங்குகின்ற அருவிகளை யுடைய, வேய்முற்றி முத்து உதிரும் வெற்ப - மூங்கில் முதிர்ந்து முத்துக்களைக்கொட்டுகின்ற மலையை யுடையவனே !, வழங்கலும் துய்த்தலும் தேற்றாதான் – பிறர்க்கீதலும், தான் அடைதலும் முதலியன அறியாதான், பெற்ற முழஙகு முரசுடை செல்வம் - கொண்டிருக்கின்ற முழக்குகின்ற முரசினை உடைய செல்வம், நாய்பெற்ற தெங்கம்பழம் அது அன்றோ - நாய்பெற்ற தேங்காயை அது ஒக்குமல்லவா ?*

(க - து.) *ஈதல் துய்த்தல் இல்லாதான் பெற்ற மிகுந்த செல்வம் பயனின்றிக் கழியும்.*

(வி - ம்.) *"முழங்கு முரசுடைச செல்வம்" என்பது செல்வத்தின் மிகுதி. அது என்று சுட்டு வேண்டாதிருக்கவும் சுட்டப்பட்டது: ஆறுஉ முன்னிலை இடை நின்றதாகலின். நாய் ஒரு தேங்காயைப் பெறின் தான் உடைத்துத் தின்னவுமறியாது; பிறர்க்குக் கொடுக்கவும் மனமின்றி, உருட்டிக்கொண்டே அலையும். அது போல இவரும் தான் துய்த்தலும் பிறர்க்கீதலுமின்றிப் பூதம் காப்பதுபோலக் காவல்செய்து, பொருளைப் பயன்படாதவாறு செய்வர். "நாயின் கையில் தேங்காய் அகப்பட்டால் உடைக்கவும் அறியாது உருட்டிக்கொண்டே திரியும்" என்பது வழக்கு.*

"நாய்பெற்ற தெங்கம்பழம்" என்பது பழமொழி. (௬)

217. முழவொலி முந்நீர் முழுதுடன் ஆண்டார்
விழவூரில் கூத்தேபோல் வீழ்ந்தவிதல் கண்டும்
இழவென் றொருபொருள் ஈயாதான் செல்வம்
அழகொடு கண்ணி னிழவு.

(சொ – ள்) *முழவு ஒலி முந்நீர் முழுதுடன் ஆண்டார் - முழவு போன் றொலிக்கும் கடலாற்சூழப்பட்ட உலகமுழுதையும் ஆண்ட அரசர்கள், விழவு ஊரில் - திருவிழா நடந்த ஊரில், கூத்தேபோல் – ஆடிய கூத்தைப்போல பொலிவின்றி, வீழ்ந்து அவிதல் கண்டும் – செல்வம் கெட்டொழிவதைப் பார்த்திருந்தும், இழவு என்று நாமும் ஒருநாளில் இப்பொருளை இழந்துவிற்போம்*

என்று நினைத்து, ஒருபொருள் ஈயாதான் செல்வம்-இரந்தவர்க்கு ஒருபொருளையும் கொடாதவனது செல்வம், அழகொடு கண்ணின் இழவு - வடிவும் அழகும் உடையா னொருவன் கண்ணிழந்து நிற்றலை யொக்கும்.

(க - து.) செல்வம் ஈகையின்றி விளங்குதலில்லை.

(வி - ம்.) "முழவொலி முந்நீர் முழுதுடன் ஆண்டார் வீழ்ந்தவிதல் கண்டும்," என அரசனது செல்வ நிலையாமையை உணர்த்தியவாறு இது கண்டாவது ஈதல்வேண்டும் எனக் கண்கூடாக ஒன்று காட்டியவாறு. ஒருவன் வடிவும் அழகும் பெற்றிருப்பினும் கண்களைப் பெறாவிடின் அவை பொலிவுறாவாறு போலச் செல்வம் ஈகையின்றிப் பொலிவுறுதல் இல்லை.

"அழகொடு கண்ணின் இழவு" என்பது பழமொழி. (ரு)

218. நாவின் இரந்தார் குறையறிந்து தாமுடைய
மாவினை மாணப் பொதிகிற்பார்—தீவினை
அஞ்சிலென் அஞ்சா விடிலென் குருட்டுக்கண்
துஞ்சிலென் துஞ்சாக்கா லென்.

(சொ - ள்.) நாவின் இரந்தார் - நாவினால் ஒருபொருளை இரந்தாரது, குறையறிந்து - குறையினை அறிந்து, தாம் உடைய மாவினை - தம்மிடத்தில் உள்ள செல்வத்தை, மாண பொதிகிற்பார் - மாட்சிமைப்படக் கரத்தலைச் செய்வார், தீவினை அஞ்சில் என் - தீய செயல்களுக்கு அஞ்சினால் அவர்கள் அடையும் நன்மை யாது?, அஞ்சாவிடில் என - அஞ்சா தொழியின் அவர்கள் அடையும் தீமை யாது?, குருட்டுக்கண் - பார்வை இல்லாதகண், துஞ்சில் என்-மூடியிருந்தா லென்ன தீமை, துஞ்சாக்கால் என் - மூடியிராது திறந்திருந்தாலென்ன நன்மை?

(க - து.) இரப்பார்க்குக் கரக்கும் தீவினையே ஏனைய அறங்கள் எல்லாவற்றையும் அழிக்கும் ஆற்றல் மிக்கது. தீவினையாய வற்றுள்ளும் தலை சிறந்தது.

(வி - ம்.) "நாவிற்கு இரவின் இளிவந்த தில்" என்றமையின் "நாவின்" என்றும், இரப்போர் குறையுறுவதற்கு முன்னே குறிப்பறிந்து கொடுத்தலே தக்கது, குறையுற்ற பின்னர் கொடுப்பது தக்கது அன்று என்பார் "குறையறிந்து" என்றுங் கூறினார். தீவினைகளுள் தலைசிறந்த, கரத்தல் என்னும் தீவினையை அவர்கள் செய்து கொண்டமையின் தீவினைக்கு அஞ்சுவதால் வரும் நன்மையால் பயனில்லை என்பார்; "அஞ்சலென்" என்றார்.

வேண்டிய தீவினைகளை அவர்கள் காத்தல் வாயிலாகச் செய்து கொண்டமையின் தீயசெயல்களுக்கு அஞ்சாமையான் வரும் தீவினை, அவரை யொன்றும் செய்தல் இல்லை என்பார், "அஞ்சா விடிலென்" என்றார்.

"குருட்டுக்கண் துஞ்சிலென் துஞ்சாக்கா லென்" என்பது பழமொழி. (சு)

219. படரும் பிறப்பிற்கொன் றீயார் பொருளைத்
தொடருந்தம் பற்றினல் வைத்திறப் பாரே,
அடரும் பொழுதின்கண் இட்டுக் குடரொழிய
மீவேலி போக்கு பவர்.

(சொ - ள்.) படரும் பிறப்பிற்கு - அடுத்து வருகின்ற பிறப்பிற்கு உதவும்படி, ஒன்று ஈயார் - ஒரு பொருளையும் கொடாராய், தொடரும் தம் பற்றினல் - பிறவிகள் தோறும் தொடர்ந்து வருகின்ற தமது பற்றால், பொருளை - ஈதலுந் துய்த்தலுமுடைய பொருளை, வைத்து - அதனால் தாமும் பிறரும் பயன்கொள்ளாத வாறு பயனின்றி வைத்துவிட்டு, இறப்பார் - இறந்துபோவார்; அடரும் பொழுதின்கண் - பகைவர்களோடு போர் செய்யும் பொழுது, குடா ஒழிய-குடர் சரிந்ததாக, இட்டு - வேறொன்றினை உள்ளேயிட்டு, மீவேலி போக்குபவர் - மேலே கட்டுக்கட்டி வைத் திருப்பவரோடு ஒப்பர்.

(க - து) அறிவிலார் பொருளால் தாமும் பிறரும் பயன் கொள்ளாதவாறு ஈட்டிவைத் திழப்பா.

(வி - ம்.) "படரும் பிறப்பிற்கு ஒன்றீயார்" என்றது தாம் நன்மை யடையும் பொருட்டாவது பிறர்க்கு ஒரு பொருளையும் கொடாதவாகள் என்றபடி. பொருள்மேலுள்ள ஆசையால் தம் வழியிலுள்ளார்க்கும் பிறர்க்கும் பயன்படா தொழியுமாறு செய்வார் என்பார், அறியப்படாத இடத்தில் "வைத்திறப்பார்" என்றார். குடர் சரிந்தவிடத்து வேறொன்றையிட்டுக் கட்டினும் அவனுக்கும் பிறர்கும் நன்மையில்லாதல் போல, அறிவிலார் தாம் ஈட்டிய பொருளை, தமக்கும் பிறர்க்கும் பயன்படுதலின்றி வைத்திழப்பர்.

"அடரும் பொழுதின்கண் இட்டுக் குடரொழிய
மீவேலி போக்கு பவர்" என்பது பழமொழி. (எ)

220. விரும்பி அடைந்தார்க்கும் சுற்றத் தவர்க்கும்
வருந்தும் பசிகளையார் வம்பர்க் குதவல்
இரும்பனைவில் வென்ற புருவத்தாய் ஆற்றக்
கரும்பனை யன்ன துடைத்து

(சொ - ள.) இரும் பனை வில் வென்ற புருவத்தாய் - பெரிய மூங்கிலாலாகிய வில்லினைத் தனது வடிவத்தால் வென்ற புருவத்தினையுடையாய்!, விரும்பி அடைந்தார்க்கும் - உணவிற்கு ஒன்றுமின்மையால் வருந்தி அறிமுகமுண்மையால் தன்னை விரும்பிவந்து அடைந்தவர்களுக்கும், சுற்றத்தவர்க்கும் - தம் உறவினர்க்கும், வருந்தும் பசி களையார் - அவர்களை வருத்துகின்ற பசியினை நீக்காராகி, வம்பர்க்கு உதவல்-புதிய அயலார்க்கு உதவி செய்தல், ஆற்ற கரும்பனையன்னது உடைத்து - மிகவும் (தன்னைப் பாதுகாத்து ஓம்பினார்க்குப் பயன்படாது நெடுங்காலஞ் சென்று பிறர்க்குப் பயன்படும்) கரிய பனைபோலும் தன்மையை உடையது.

(க - து.) அறிவிலார் தமர் பசித்திருப்பப் பிறர்க்கீவர், இஃது அடாது என்பதாம் "வருத்தும்" என்பது "வருந்தும்" என எதுகை நோக்கி மெலிந்து நின்றது.

(வி - ம்.) "விரும்பி" என்றமையாலும் "வம்பர்" என்றமையாலும் அடைந்தார்க்கும் என்றது, முன்னர் அறிமுக முண்மையால் அடைந்தவர்களுக்கும் என்றபடி. துறந்தார், துவ்வாதவர், இறந்தார் என்பார்க்குத் துணையாக நின்று களைகணாய் நிற்றல், உணவு கொடுத்தல், நீர்க்கடன் கொடுத்தல் முதலியன செய்தல் கடனாதலின் "அடைந்தார்க்கும்" என்றும், "தமர்கண் வளமையும் முந்துற நாடிப் புறந்தரல் ஓம்புக" என முன்னர் ஓதுதலின் "சுற்றத்தவர்க்கும்" என்றும்,

"குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாணணி களையு மாணெழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி யென்னும் பாவி"

என்றலின் "வருத்தும் பசி" யென்றும்,

"ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே யுலகின் மெய்ந்நெறி வாழ்க்கை"

எனச் சிறப்பித்தோதப் பெறும் பசி நீக்குதலைச் செய்யார் என்பார் கலையார் என்றும் "ஏதிலார் ஆர" என்றலின் "வம்பலர்க்குதவல்" என்றுங் கூறினர்.

"ஆற்றக் கரும்பனை யன்ன துடைத்து" என்பது பழமொழி. (அ)

221. வழங்கார் வலியிலார் வாய்ச்சொல்லும் பொல்லார்
உழந்தொருவர்க் குற்றுல் உதவலு மில்லார்
இழந்ததில் செவ்வம் பெறுதலும் இன்னுர்
பழஞ்செய்போர் பின்று விடல்

(சொ - ள்) வழங்கார் - (உணவிற்கு ஒன்று மின்மையால் பசியால் வருந்தி இரநதார்கடு) அவர்க்கு வேண்டிய உணவினைக் கொடாராய், வலியிலார வாய்சசொல்லும் பொல்லார் - கொடுக்கும் ஆற்றல் இலராதலின் சொல்லும் சொற்களாலும் தீயவர்களாய், உழந்து-வருந்தியாகிலும், ஒருவர்க்கு உற்ருல் உதவலும் இல்லார் - ஒருவாக்கு ஓரிடர் வந்துறற ஞான்றை உதவிசெய்து அதனை நீக்குதலும் செய்யாதவராகிய, இன்னுர் - இத்தன்மையர். இறந்தது இல் செல்வம் பெறுதலும் - கெடுதலில்லாத செல்வத்தைப் பெற்றிருத்தலும், பழஞ்செய்-நெடுநாட்களாக எருமுதலிய உரம் பெற்றுவந்த வயல், இன்று - உரம் பெருத இப்பொழுது, போர்பு விடல் - போரா இடுமாறு கதிர்கள் விடுதலை யொக்கும்.

(க - து) ஈதல், இனிய கூறுதல், உதவி செய்தல் முதலியன இல்லாதவர்கள் செல்வம் பெற்றிருத்தல், முன்செய்த நல்வினையாலே யாம்.

(வி - ம்.) கொடுக்கும் ஆற்றல் இல்லாதவர்களாதலின் அதற்கேற்றவாறு சொற்களும் கடியவாயின. இரந்தார்க்கு வழங்கலும், இனிய கூறுதலும், உற்றுழி யொன் றுதவலும் ஒருவன் செல்வம் பெறுதற் குரிய காரணஙகளாம்

"துன்புறூஉம் துவ்வாமை யில்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொ லவர்க்கு."

யாவர் மாட்டும் இனிய கூறுவார்க்குப் பகையும் நொதுமலும் இலவாய் யாவரும் நண்பேயாவர், நண்பராகவே எல்லாச செல்வமும் எய்துவர். இனிய கூறுதலாலும் செல்வம் பெறுவர் என்பது இதனலறியப்படும். "இழந்ததில் செல்வம்" என்றூர், தன்னையுடையார் பலரும் இறக்கத் தான் எஞ்ஞான்றும் இறவாது நிலைத்து நிற்றலின். "போர் இடுபு" என்பது "போர்பு" எனத்

தொக்கது செய்பு என்னும் வாய்பாட்டு எச்சம். செய் இப்பொழுது உரம் பெறாவிடினும் பழைய உரத்தால் பயன் தருதல் போல இப்பொழுது செல்வம் பெறுதற்குரிய ஏதுக்களைப் பெறாராயினும், முன் செய்த வினையால் செல்வத்தைப் பெறுவர் என்பதாம். முன் செய்த வினையே காரணமென்பதாம்.

"பழஞ்செய் போர் பின்று விடல்" என்பது பழமொழி. (க)

222. ஒற்கப்பட் டாற்றார் உணர உரைத்தபின்,
நற்செய்கை செய்வார்போல் காட்டி, நசையழுங்க
வற்கென்ற செய்கை யதுவால்அவ் வாயுறைப்
புற்கழுத்தில் யாத்து விடல்.

(சொ-ள்.) ஒற்கப்பட்டு-வறுமையா லொறுக்கப்பட்டு, ஆற்றார் - அதற்கு ஆற்றாதவர்களாய் (ஒருவரையடைந்து) உணர உரைத்தபின் - அவர் மனதிற் பதியுமாறு உரைத்தவிடத்து, நல் செய்கை செய்வார்போல் காட்டி - அவர்க்கு நல்ல செய்கையைச் செய்வார் போன்று தோற்றி, நசை அழுங்க வற்கென்ற செய்கை அது - அதனான் அவர்கொண்ட விருப்பம் கெடுமாறு வலிய செய்கையைச் செய்தொழுகுமது, வாய் உறை - வாயிடத்தில் இடுவதாகக் காட்டிய, அ புல்-அந்தப் புற்களை, கழுத்தில் யாத்துவிடல்- பசுவின் கழுத்தில் கட்டிவிடுவதனோ டொக்கும்.

(க - து.) தம்பால் ஒன்று இரந்தாரைக் கொடுப்பதாகச் சொல்லி நீட்டித்து அலையவைத்தல் அடாத செய்கையாம்.

(வி-ம்) "பின்" என்னும் எழுனுருபு "கண்ணகன் ஞாலம்" என்றாற்போலப் பெயராய் நின்றது. "உணர உரைத்தல்" என்பது அடுப்பு ஆம்பி பூத்ததெனவும், அதனால் மூலை இல்லி தூர்ந்ததெனவும், அதனைச் சுவைத்து மகவு அழுகின்றதெனவும் கூறுமாறு போல, வறுமையை உணர விரித்துரைத்தல். "நசையழுங்க வற்கென்ற செய்கை" என்றது விரைவில் கொடாது நீட்டித்தலான் அவரை வருத்துதல். அது, ஒண் சுடர் நெடுநகர் வெளிறு கண் போகப் பன்னாள் இரங்கி வருந்துதல். புற்களை வாயிலிடுவார் போன்றுகாட்டி ஆவினது கழுத்தில் யாத்தால் பசு அதன் மேலுள்ள விருப்பத்தால், கழுத்திலுள்ளதைப் பெறும் பொருட்டு முயன்று துன்புறுதல்போல இரந்தார்க் கொன்றீவதாகக் கூறி நீட்டிப்பின் அதனைப்பெற வேண்டுமென்ற ஆசையால் அவர்கள் பன்னாளும் நின்று துன்புறுவர். ஆதலால் நீட்டித்தலாகாது என்பதாம்.

"தாயுறைப் புற்கழுத்தில் யாத்து விடல்" என்பது பழமொழி. (௯௦)

223. அடையப் பயின்றார்சொல் ஆற்றுவராக் கேட்டால்
உடையதொன் றில்லாமை யொட்டின்—படைபெற்
றடைய அமர்த்தகண் பைந்தொடி ! அஃதால்
இடைய னெறிந்த மரம்.

(சொ - ள்-) படை பெற்று - வேலினது தன்மையைப் பெற்று. அடைய - முகம்முழுதும். அமர்த்த கண் பைந்தொடி= நிறைந்திருக்கின்ற கணகளையும் பசிய தொடியையும் உடையாய், அடைய பயின்றார் - மிகவும் நெருங்கிப் பழகியவர்கள், சொல் கேட்டால் - தமக்கொன்று வேண்டியதாகக் கூறுஞ் சொற்களை கேட்டால், இல்லாமை - தன்னிடத்திலில்லாத அப்பொருளை, உடையது ஒன்று தன்னிடத்துள்ளது ஒன்றாகவும், ஆற்றுவரா(க)—அதனைச் செய்வாராகவும், ஒட்டின் - உறுதியாகக் கூறினால், அஃது - அங்ஙனம் கூறுதல், இடையன் எறிந்த மரம் - இடையனால் வெட்டப்பட்ட மரத்தினை யொக்கும்.

(க - து.) முடியாத செயலை முடியும் என்று கூறற்க.

(வி - ம்) "அடையப் பயின்றார்" என்றது தன்னோடு மிகவும் நெருங்கிப் பழகினமையால் கூறியன தட்டமுடியாதாரை. "ஒட்டின" என்றது அவாமீதுள்ள அன்பினால் எதுவாயினும் அவர் விரும்பியன தன்னிடத் துளதாகவும் அதனைக் கொடுப்பதாகவும் உறுதி கூறுதலை. இடையன் தழை பெறும் பொருட்டு நாடோறும் மரத்தினைச் சிறிது சிறிதாகக் குறைப்பான். இஃது இடையன எறிந்த மரம் எனப்பட்டது. இடையனால எறியப்பட்ட மரம் நாடோறும் குறைந்து வருதல்போலத் தன்னிடத்தில்லாததை உளதாகக் கூறுதலால் ஒருவன்புகழ் அதன் வாயிலாகக் குறைந்துகொண்டே போகும் என்பதாம். இடையனால் தழை வெட்டப்படுதல்போல இல்லாததை உளதாகக் கூறுதலால் புகழ் குறைக்கப்படும். 'ஒல்லாததை ஒல்லு மென்றலும் புகழ் குறைபடூஉம் வாயில் அத்தை' என்பதே இக் கருத்தாம.

"இடையன் எறிந்த மரம்" என்பது பழமொழி. (௯௧)

224. மரம்போல் வலிய மனத்தாரை முன்னின்று
இரந்தார், பெறுவதொன் றில்லை— குரங்கூசல்
வள்ளியி னாடு மலைநாட ! அஃதன்றோ
பள்ளியுள் ஐயம் புகல்.

(சொ - ள்.) குரங்கு வள்ளியில் ஊசல் ஆடும் மலைநாட - குரங்குகள் வள்ளிக்கொடியின்கணிருந்து ஊசலாடுகின்ற மலை நாட்டை உடையவனே!, மரமபோல் வலிய மனத்தாரை - மரத்தைப்போல வலிய கன்னெஞ் சுடையாரை, முன்னின்று இரந்தார் பெறுவது ஒன்று இல்லை - அவர்முன்பு நின்று இரப்பவர் பெறக் கடவதொரு பொருளுமில்லை; அஃது - அவர் முன்பு நின்று இரத்தல், பள்ளியுள் ஐயம்புகல் - சமணப் பள்ளியுள் இரக்கப் புகுதலை யொக்கும்.

(க - து.) இரக்க முடையாரிடத்து இரப்பாயாக.

(வி - ம்.) "பள்ளியுள் ஐயம் புகல்" என்றது, பள்ளியுள் வாழ்வார் பிசசை யெடுத்துண்டு தமகெகன்று ஒரு பொருளுமில ராய்ப் பற்றற்று இருப்பராதலின், அவரிடையே ஐயம்புகுவார்க்கு ஒன்றும் பெறமுடியாது என்பதை. அதுபோல, மனமிலாரிடத் தில பொருள பெற முடியாது என்பதாம. பொருளிலராயினும் மனமுடையாரிடதது இரக்க, அதனுற பயன்பெறுத லுண்டு. பொருளுடையராயினும், மனமில்லாரிடத்து இரவற்க; அதனுல் பயன்பெறுதல் இல்லை.

"இல்லை யென்றிரப்போர்க கில்லையென் றுரையா இதயம் நீ அளித்தருள்" எனக கருணன் கண்ணனை நோக்கி மனம் அருள வரம் வேண்டுகின்றமையும் அறியததக்கது.

"பள்ளியுள் ஐயம் புகல்" என்பது பழமொழி. (கஉ)

225. இசைவ கொடுப்பதூஉம் இல்லென் பதூஉம்
வசையன்று வையத் தியற்கை அஃதன்றிப்
பசைகொண் டவனிற்கப் பாத்துண்ணு னயின்
நசைகொன்ருன் செல்லுலக மில்.

(சொ - ள்.) இசைவ கொடுப்பதும் - தன்னுல் கொடுக்கக் கூடியவற்றைக கொடுத்தலும், இல் என்பதும் - கூடாதவற்றை இல்லை யென்று கூறுதலும், வசை யன்று - ஒருவனுக்குக் குற்ற மாகாது, வையத்து இயற்கை - அவை பெரியோர்களது செயல் களாம், அஃது அன்றி - அவ்வியற்கையின்றி, பசை கொண்ட வன் நிற்க - கொடுப்பான் என்று மனதின்கண விரும்பி நின்ருன் நிற்க, பாத்து உண்ணுன் ஆயின் - தம்மிடத்துள்ளதைப் பகுத்துக் கொடுத்து உண்ணுதவனுனல், நசை கொன்ருன் - நிற்பானது விருப்பத்தைக் கெடுத்தானுதலால், செல் உலகம் இல் - செல்லு கின்ற மறுமை உலகத்தின்கண் இன்பம் அடைதல் இல்லை.

(க-து.) தன்னிடத்துள்ளதைக் கொடாதவனுக்கு மறுமை யுலகத்தின்கண் இன்பம் இல்லை.

உலகம்: ஆகுபெயர்.

(வி - ம்.) அஃது என்று ஒருமையாற் சுட்டினார், "வையத் தியற்கை" என்றதனை நோக்கி. "பசை கொண்டவன் நிற்கப் பாத்துண்ணுதலின்" என்றது. ஒல்லுவது இல்லெனமறுத்தலும் என்றதைக் கருதி. "புலவர் பாடும் புகழுடையோர் வலவனேவா வானவூர்தி எய்துப" ஆதலின், உள்ளதை ஈந்தறியாமையின் புகழினைப் பெறார்; மறுமை யின்பத்தை அடையார் என்பார், "செல்லுலகமில்" என்றார். "நசை கொன்றான் செல்லுலகம் இல்" என்பது பழமொழி. (கரு)

226. தமராலும் தம்மாலும் உற்றுலோன் றாற்றி
நிகராகிச் சென்றாரு மல்லர் இவர்திரை
நீத்தநீர்த் தண்சேர்ப்ப ! செய்த துவவாதார்க்
கீத்ததை யெல்லாம் இழவு.

(சொ - ள்.) இவர் திரை நீத்தநீர்தண் சேர்ப்ப - பரந்த அலைகள் வெள்ளம்போல் பரக்கும் நீரையுடைய குளிர்ந்த கடல் நாடனே!, தமராலும் தம்மாலும் உற்றுல்- தம்முடைய சுற்றத்தாராலும் தம்மாலும் ஒருவருக்கு ஓரிடர் வந்து பொருந்தியவிடத்து, ஒன்று ஆற்றி நிகராகி சென்றாரு மல்லர்-ஒரு பொருளுதவி அவர் மனமொப்ப ஒழுகினருமல்லர். (அதுவன்றி), செய்தது உவவாதார்க்கு - செய்ததைக்கொண்டு மனம் மகிழாதவர்களுக்கு, ஈத்ததை எல்லாம் இழவு - கொடுத்த பொருள்கள் எல்லாம் இழந்த பொருள்களேயாம்.

(க - து.) பெற்றதைக்கொண்டு மனம் உவவாதார்க்குப் பொருள் கொடுத்தல் ஆகாது.

(வி - ம்.) "சென்றாரும்" என்ற இறந்தது தழீய உம்மை, வறியார்க்கு ஒன்றும் ஈயாராதலே யன்றி என்பதைத் தழுவி நின்றது. தம்மால ஒருவருக்கு வந்துற்ற இடரினையும் தீர்க்காதவர்களாகிச செய்தது உவவாதார்க ளிவர். அதனால் இம்மைக்குரிய புகழுமில்லை யாதலின், இழந்த பொருளேயாம்.

"செய்த துவவாதார்க் கீத்ததையெல்லாம் இழவு" என்பது பழமொழி. (கச)

227. எவ்வந் துணையாய்ப் பொருள்முடிக்குந் தாளாண்மை
தெய்வம் முடிப்புழி என்செய்யும்?—மொய்கொண்டு
பூப்புக்கு வண்டார்க்கும் ஊர ! குறும்பியங்கும்
கோப்புக் குழிச்செய்வ தில்.

(சொ - ள்.) **பூ புக்கு வண்டு ஆர்க்கும் ஊர** - பூவின்கண் புகுந்து வண்டுகள் ஒலிக்கின்ற வயல்நாடனே!, **இயங்கும் கோப்புக்குழி**-(எந்நாட்டின்கண்ணும் தடையின்றிச் செல்ல வல்ல ஆணையையுடைய) பேரரசன் (போர் செய்யப்) புகுந்த இடத்து, **குறும்பு** - குறுநிலத்தை ஆளுமரசன், **செய்வது இல்** - எதிர்த்துச் செய்வது ஒன்றுமில்லை (அவன் ஆளுகையின் கீழ் அடங்கியிருப்பான்); (அதுபோல), **எவ்வம் துணையாய்**-துன்பமே துணையாக, **பொருள் முடிக்கும் தாளாண்மை**-தான் கருதிய பொருளை முடித்தற்குரிய முயற்சி, **தெய்வம் முடிப்புழி** - இழவூழ் (எதிர்த்து நின்று முடியாதவாறு) முடிக்கின்றவிடத்து, **மொய்கொண்டு என் செய்யும் முயற்சி** - அதனை எதிர்த்து வலிந்து என்ன செய்ய முடியும்? (கீழ்ப்பட்டேயிருத்தல் வேண்டும்.)

(க - து.) இழவூழ் எதிர்த்து நிற்குமிடத்துச் செய்யும் முயற்சியாற் பயனில்லையாம.

(வி - ம்.) ''எவவம் துணையாய்ப் பொருள் முடிக்கும்'' என்று தான் வினைத்தைதை முடிக்கும் அருமை கூறியவாறு. அது முடிகக முயலுமாற்றான் வருந் துன்பமும், அவற்றிற்கு வரும் இடையூற்றை நீக்கலான வருந் துன்பமும் எனப் பலவாம். பேரரசன் எதிர்த்த ஞான்று குறும்பன் எதிர்த்த ஒன்றும் செய்ய இயலாது அடிப்படுதலபோல, ஊழே முடியாதவாறு முயலுமிடத்தில் செய்யும முயற்சியாற் பயனில்லை யென்பதாம். குறும்பு என்பது குறுநிலம; அஃது ஈண்டு ஆகுபெயராய் நினறது. ''தெய்வம் முடிப்புழி என் செய்யும்'' என்றது ''ஊழிற் பெருவலி யாவுள'' எனபதைக கருதி.

''குறும்பியங்கும் கோப்புக்குழிச செய்வ தில்'' என்பது பழமொழி. (க)

228. சுட்டிச் சொலப்படும் பேரறிவி னார்கண்ணும்
பட்ட விருத்தம் பலவானால்,—பட்ட
பொறியின் வகைய கருமம் அதனால்
அறிவினை ஊழே அடும்.

(சொ - ள்.) சுட்டிச் சொலப்படும் பேர் அறிவினார் கண்ணும் - குறித்துச் சொல்லப்படும் மிகுந்த அறிவு உடையாரிடத்தும், பட்ட விருத்தம் பலவாகுல் - உளவாய குற்றங்கள் பலவானால், (அதற்குக காரணம்) பட்ட பொறியின் வகைய கருமம்- பொருந்தியிருக்கின்ற பழவினையின் வழிப்பட்டனவாய் இருக்கும் செயல்கள் என்பதறியப்படும், அதனால் - ஆகையால், அறிவினை- நல்லறிவினை, ஊழே-முன் செய்த ஊழே, அடும் - பேதைமையாக்கும்.

(க - து.) மிகுந்த அறிவுடையாரிடத்தும் குற்றங் காணப் படுதல் ஊழானாயது என்பதாம்.

(வி - ம்.) "சுட்டிச சொல்லப்படும்" என்றது, கற்றலும் அதற்கேற்றவாறு நிற்றலும் என்றிவற்றில் மிகச சிறந்தார என்று குறித்துக் கூறப்படுதலே. இத்தகையோரிடத்துக் குற்றம் காணப் படின், அஃது அவர் இப்பொழுது செய்ததால் வந்தது அன்று, பழவினையால் பிறந்த செயல்களாலாயது என்பதாம் செயல் மாறுபடின், அதற்குக் காரணமாய் உண்ணின்றுற்றும் அறிவும் மாறுபடும். ஆகவே நல்ல அறிவினைப் பேதைப்படுத்து நிற்பது ஊழேயாம். "பேதைப் படுக்கும் இழவூழ்" என்பதே இது.

"அறிவினை ஊழே அடும்" என்பது பழமொழி. (உ)

229. அங்கண் விசும்பின் அகனிலாப் பாரிக்கும்
திங்களுந் தீங்குறுதல் காண்டுமால்—பொங்கி
அறைப்பாய் அருவி அணிமலை நாட!
உறற்பால யார்க்கு முறும்.

(சொ-ள்.) பொங்கி அறை பாய் அருவி அணி மலைநாட - மிகுந்து கற்பாறையின்கண் பாயாநின்ற அருவிகளையுடைய மலை நாடனே!, அம் கண் விசும்பின்-அழகிய இடமகன்ற ஆகாயத்தினின்று, அகல் நிலா பாரிக்கும் - மிகுந்த வெண்மையான கிரணங்களை வீசுகின்ற, திங்களும் - மதியும், தீங்கு உறுதல் காணடும் - கோளாற் றீமை யடைதலைக் காண்கின்றோம். (ஆதலால்) உறற்பால யார்க்கும் உறும் - தமக்கு வரக்கடவ துன்பங்கள் தம்மை மாற்றும் இயல்புடையாரே யெனினும் விடாது அவரைச சென்று பற்றி நிற்கும்.

(க - து.) வருவது வந்தே தீரும். அதை மாற்றுதலும் ஆகாது. அதன்பொருட்டு வருந்துதலும் ஆகாது.

(வி - ம்.) "திங்களும்" என்றது தூய்மையை உடைய சந்திரனும் தீங்குற்றது எனச் சிறப்பும்மையாக நின்றது. எனவே இப்பொழுது மிகத் தூயாராக இருந்தும் துன்பத்தை யடைதல் முற்பிறப்பில் செய்த தீவினையாலேயாம். "உறற்பால" என்றது மேல்வரும் பிறப்புகளுக்கு உறுதுணையாமாறு தாமே செய்து கொண்ட தீமைகளை. "யார்க்கும்" என்றது முயற்சி செய்து ஆற்றலால் மாற்றும் இயல்புடையாரே யெனினும் என்பது. "உறும்" என்றது குழக்கன்றைப் பல்லாவுள் உய்த்துவிடினும் அது தன் தாயை நாடிக் கோடல்போல முன் செய்த வினை, செய்தானைத் தானே தேடி அடையும் ஆற்றலும் பெற்றது என்பதாம். இதுவன்றி ஊழும் உறுவித்தலான் வரக்கடவ வந்தே தீரும் என்பதாம்.

"உறற்பால யார்க்கும் உறும்" என்பது பழமொழி. (௯)

230. கழுமலத்தில் யாத்த களிறும் கருவூர்
விழுமியோன் மேற்சென் றதனால்—விழுமிய
வேண்டினும் வேண்டா விடினும் உறற்பால
தீண்டா விடுதல் அரிது.

(சொ - ள்.) கழுமலத்தில் யாத்த களிறும்-சீகாழியின்கண் கட்டப்பட்டிருந்த யானையும், கருவூர் விழுமியோன் மேல் சென்றதனால் - கருவூரின்கண் இருந்த சிறப்புடையவனாகிய கரிகாற் சோழனிடத்துச் சென்று அவனைக் கொண்டுவந்து அரசுரிமையை எய்துவித்ததால், விழுமிய - சிறந்த பொருள்களை, வேண்டினும் வேண்டாவிடினும் - விரும்பினும் விரும்பாதொழியினும், உறற்பால - அடைதற்குரியவாய் நின்ற நன்மைகள், தீண்டாவிடுதல் அரிது - அவனை அடையாது நிற்றல் இல்லை.

(க - து.) தமக்கு வரவேண்டிய நன்மைகள் வந்தே தீரும்.

(வி-ம்.) கழுமலம்: இது சோழநாட்டுள்ளதோரூர். கருவூர்: இது சேரநாட்டுள்ளதோரூர் இவ்விரண்டும் இடைபடச் சேய வாயினும் ஊழ் கருவூரிலுள்ளவனை அரசனாக்கியது. "விழுமியோன்" என்றது, பின்னர் "இளமை நாணி முதுமை எய்தி, உரைமுடிவு காட்டிய உரவோன்' ஆக விளங்குதலின். கரிகாலன் நெடுந்தொலைவின் கணிருந்து விரும்பாதிருப்பினும் ஊழ்விழுமிய பயனை அடைவித்தது. "களிறுமேற் சென்றதென்றது," சீகாழியை ஆட்சிசெய்தான் இறந்துபடவே அவன் வழியில் யாரும் அவ்வரசாட்சியை ஏற்க இன்மையால் அமைச்சர்கள் பட்டத்து யானையைவிட்டு அவ்யானை யாரைக் கொண்டுவருகின்றதோ

அவனுக்கே முடிசூட்டுவது என்று உறுதிசெய்து யானையை விட்டனர். அவ் யானை கருவூரிலிருந்த கரிகாலனைக் கொண்டு வந்து முடிசூடுமாறு செய்தது என்பதாம். "உய்த்துச சொரி யினும் போகா தம" என்பதே இது.

"உறற்பால நீண்டா விடுதல் அரிது" என்பது பழமொழி. ()

231. ஆஅய் வளர்ந்த அணிநெடும் பெண்ணையை
ஏஎய் இரவெல்லாம் காத்தாலும்—வாஅய்ப்
படற்பாலார் கண்ணே படுமே பொறியும்
தொடற்பாலார் கண்ணே தொடும்.

(சொ - ள்.) ஆய் வளர்ந்த அணிநெடும் பெண்ணையை-தனக்கு ஆகி வளர்ந்த அழகிய நீண்ட பனையை, ஏய் இரவு எல்லாம் காத்தாலும் - பொருந்தி இரவு முழுதும் காவல் செய்திருப்பினும், வாய் படற் பாலார் கண்ணே - வாயின்கண் பொருந்துதற் குரியாரிடத்தே, படும் - கீழே விழுந்து அவர்க்குப் பயன்படும். (அதுபோல,) பொறியும் – செல்வமும், தொடற் பாலார்கண்ணே தொடும - நீண்டுதற்குரியாரிடத்தே சென்று தொடாநிற்கும்.

(க - து.) தனக்கு ஆகாத செல்வத்தைப் பாதுகாப்பினும் இல்லாது.

(வி - ம்.) "ஆய்" என்றமையால் தன்னுடைய பெண்ணை என்பது பெறப்படும். "இரவெல்லாம் காத்தாலும்" என்றமை யால் பகலிற் காத்தலும் பெறப்படும். எனவே இரவு பகலாய்க் காப்பினும் என்பதாயிற்று. "வாய்ப் படற்பாலார்" என்றது அதன்பயனை அடைதற்குரியாரை. தனது பெண்ணையை இரவு பகலாய்க் காவல் செய்யினும் அது தனக்குப் பயன் கொடாது, பெறுதற்குரியார்க்கே பயன்பட்டாற்போலப் பிறர்க்கு ஆகும செல்வதததை எத்துணைக் காவல் செய்யினும் தடைபடாது பிறர்க்கே சென்று ஆகும் என்பதாம். "பரியினும் ஆகாவாம் பாலல்ல" என்பதே இது.

"பொறியும் தொடற்பாலார்கண்ணே தொடும்" என்பது பழமொழி. (௬)

232. முற்பெரிய நல்வினை முட்டின்றிச் செய்யாதார்
பிற்பெரிய செல்வம் பெறலாமோ?—வைப்போ
டிகலிப் பொருள்செய்ய எண்ணியக்கால் என்னும்?
முதலிலார்க் கூதிய மில்.

(சொ - ள்.) முன் - முற்பிறப்பின்கண், பெரிய நல்வினை - மிகுந்த நன்மை பயக்கும் அறங்களை, முட்டு இன்றி - தடையில்லாது, செய்யார்தார் - செய்யாதவர்கள், பின் - பிற்பிறப்பின்கண், பெரிய செல்வம் பெறலாமோ - மிகுந்த செல்வத்தைப் பெறக்கூடுமோ ?, வைப்போடு - பிறர் வைத்திருக்கின்ற செல்வத்தோடு, இகலி பொருள்செய்ய எண்ணியக்கால் - மாறுபட்டுப் பொருளினைச் செய்வோம் என்று நினைத்தால், என் ஆம் - எங்ஙனம் முடியும், முதல் இலார்க்கு - வைத்ததொரு முதற்பொருள் இல்லாதவர்களுக்கு, ஊதியம் இல் - (அதனால் வரும்) பயனில்லையாதலால்.

(க - து.) முன் செய்த நல்வினையில்லார் முயன்றாலும் பொன்னைப் பெற முடியாதாம்.

(வி - ம்.) "நல்வினை" என்றது செல்வமுடையராதற் கேதுவாய வினை யென்பதாம். ஒருமை வினை எழுமையுந் தொடர்ந்து நிற்றலின் வீழ்நாள் படாது செய்க என்பார் "முட்டின்றி" என்றார். பொருள்மேலுள்ள விருப்பத்தால் அவரைப்போன்று யாமுஞ் செய்வோமென்று முயலினும் கைகூடுதலில்லை. முதல் இல்லாதவர்களுக்கு அதனால்வரும் ஊதியம் இல்லையானாற்போல முற்பிறப்பின்கண் செய்த நல்வினையிலார்க்குச் செல்வம் இல்லையாகும்.

"முதலிலார்க்கு ஊதியம் இல்" என்பது பழமொழி. (௬)

233. பன்னாளும் நின்ற விடத்தும் கணிவேங்கை
நன்னாளே நாடி மலர்தலால்.—மன்னர்
உவப்ப வழிபட் டொழுகினும், செல்வம்
தொகற்பால போழ்தே தொகும்.

(சொ - ள்.) பல்நாளும் நின்ற இடத்தும் - பலநாளும் தானே நின்ற விடத்தும், கணிவேங்கை - கணியாகிய வேங்கை, நல்நாளே நாடி மலர்தலால் - தான் பூத்தற்குரிய நல்ல நாளையே அறிந்து பூத்தலால், மன்னர் உவப்ப வழிபட்டு ஒழுகினும்-அரசர் மனமகிழுமாறு வேண்டியன செய்து வழிபட்டு ஒழுகினாலும், செல்வம் தொகற்பால போழ்தே - செல்வம் ஒருவர்க்குக் கூடும் பொழுதுதான், தொகும் - பல்லாற்றானும் வந்து சேரும்.

(க - து.) ஒருவனிடம் செல்வம், வருங்காலமறிந்தே வரும்.

(வி - ம்.) வேங்கை தானே முன்னர்ப் பலநாள் இருப்பினும் பூத்தல் இல்லை. பூத்தற்குரிய காலம் வந்ததும் பூக்கும் இயல்பை

யுடையது. கணியும், வேங்கையும் பொதுப்பெயர்களாயினும் சிறப்பு பெயரும் பொதுப்பெயருமாய் நின்று வேங்கை மரம் என்பதை உணர்த்தின. இஃது இருபெயரொட்டு. நன்னுள் என்றது மணநாளை. மணநாளில் வேங்கை மலர்தல் இயல்பு. கணி என்பது, காலத்தைக் கணித்தலின் காலங்கணிக்க வல்லார்க்கும், வேங்கையும் மணநாட்களைக் கணித்தலின் வேங்கைக்கும் ஆயின. "மன்னர் உவப்ப வழிபட்டு ஒழுகினும்" என்பது வேண்டிய செல்வத்தை அரசர்கள் கொடுக்கும் நிலையிலிருப்பினும் என்பதாம். வேங்கை பூக்குங்காலமாகிய மணநாளறிந்து பூத்தல்போல செல்வமும் வருங்காலமறிந்தே வரும்.

''செல்வம் தொகற்பால போழ்தே தொகும்'' என்பது பழமொழி. (எ)

234. **குரைத்துக் கொளப்பட்டார் கோளிழுக்குப் பட்டுப்**
புரைத்தெழுந்து போகினும் போவர்—அரக்கில்லுள்
பொய்யற்ற ஐவரும் போயினர் இல்லையே
உய்வதற் குய்யா விடம்.

(சொ - ள்) குரைத்து கொளப்பட்டார்—ஆரவாரித் துரைத்தலின் அவரால் பிணித்துக் கொள்ளப்பட்டார், கோள் இழுக்குப் பட்டு - அவர் எண்ணம் பழுதுபட, புரைத்து எழுந்து போகினும் போவர் - அவர் பிணிப்பினின்றும் தப்பி எழுந்து உய்ந்து செல்லினும் செல்வர், அரக்கு இல் உள் - அரக்காற் செய்யப்பட்ட மாளிகையினுள்ளே யிருந்த, பொய் அற்ற ஐவரும் — குற்றமற்ற பாண்டவர் ஐவரும், போயினர் - தீயினின்றும் தப்பி நிலவறையின் வழியே சென்றனர். (ஆதலால்), உய்வதற்கு - பிழைத்தற்குரிய உயிருக்கு, உய்யா இடம் இல் - பிழைக்க முடியாத இடம் என்று ஒன்றும் இல்லை.

(க - து.) ஊழ்வலியுடையார் எத்தகைய இடையூறுறினும் உய்வர்.

(வி - ம்.) குரைத்து என்பது செயவெனெச்சப் பொருளில் காரணப் பொருட்டாய் நின்ற வினையெச்சம். அது கொளப் பட்டார் என்னும் வினையாலணையும் பெயரின் முதனிலையோடு முடிந்தது. குரைத்தல்: மரபுச்சொல். அவர் இழிபு விளக்கிய வந்தது. இது, தீய எண்ணமில்லார் போன்று அவர் நம்புமாறு ஆரவாரித்துப் பேசுதல். மிக்க ஆரவாரம் ஐயத்திற்கிடம் என்று அறியவேண்டும். கொளப்பட்டார் என்றது அவர் ஆரவாரத்தை நம்பி, பிணிக்கப்பட்டாரை. கோள் என்றது அவரைப் பிணித்துத்

துன்புறுத்த நினைத்த நினைவை. "இழுக்குப்பட்டு" என்பது செயவெனெச்சப் பொருள்மேல் நின்றது. "போகினும்" என அவர் போகாதவாறு பிணித்தலின் திண்மை குறிப்பிடப்பட்டது. இனி, போகினும் என்றதற்கு ஊழ்வலியுடையாராதலின் அவர் பிணித்த பிணிப்பையே தமக்கு நன்மை தருவதாக ஆக்கிச் செல்லினும் செல்வர் எனலுமாம பொய், குற்றங்களுள் ஒன்று ஆதலின், குற்றம் எனப் பொருள் கூறப்பட்டது. "உய்யா விடம் இல்லை" என்பது பிழைக்கின்ற உயிருக்குப் பிழைக்க முடியாத இடம் என்று ஒன்றுமில்லை. எல்லாம் உய்தற்குரிய இடமேயாம். ஐவரும் உய்ந்தாரெனச் சான்று காட்டியவாறு.

"இல்லையே உய்வதற்கு உய்யாவிடம்" என்பது பழமொழி. (அ)

235. இதுமன்னுந் தீதென் றிசைந்ததூஉம் ஆவார்க்கு
அதுமன்னும் நல்லதே யாகும்—மதுமன்னும்
வீநாறு கானல் விரிதிரைத் தண்சேர்ப்ப !
தீநாள் திருவுடை யார்க் கில்.

(சொ – ள்.) மதுமன்னும் வீ நாறு கானல் – தேன் ஒழுகு கின்ற குவளைப்பூக்கள் மணம வீசுகின்ற கடற்சோலையையுடைய, விரிதிரை தண் சேர்ப்ப-விரிந்த அலைகளையுடைய குளிர்ந்த கடல் நாடனே!, இது தீது மன்னும் என்று இசைநததும - இவ்வினை இவர்க்குத தீஙகினை நிலை நிறுத்துவதாம என்று கருதப்பட்டுப் பொருநதியதும், ஆவாாக்கு – செல்வம உடையராவார்கு (பொருளை ஈட்டுவாாகு), அது மன்னும நல்லதேயாகும் – அவ் வினை (ஊழால்) நல்லதாகவே முடியும (ஆதலால்), தீ நாள்–தீய நாட்கள், திருஉடையார்க்கு-முன்செய்த நல்வினை உடையார்கு, இல் - உண்டாதலில்லை.

(க - து.) ஆகூழ் உடையார்க்குத் தீயனவும் நல்லனவாக முடியும.

(வி – ம்.) "மன்னும்" இடைச சொல்லடியாகப் பிறந்த வினைசசொல். ஏனைய இரண்டும் மிகுதி; கழிவுப் பொருண்மைக கண் நின்றது. செல்வம் ஈட்டுவார்க்குத் தீதாக வருவதும் ஊழ் வயத்தான் நல்லதாகவே முடியும். இதுவன்றி "ஆகும்" என்பது "ஆகும்" என இடைக குறைந்ததாகக் கொண்டு, வந்த தீமை தான் நல்லதாயதேயனறி மேலும் மேலும் நனமைகளை உளவாக் கும் எனக கூறலும் ஒன்று. வரும் தீமை ஊழால் நல்லதாக மாற்றப்படுதலின் நலவினை உடையார்க்குத தீமை தரும் நாட்களே இல்லை என்று முடிவு கூறப்பட்டது.

"தீ நாள் திருவுடையார்க் கில்" என்பது பழமொழி. (க)

236. ஆற்றுந் தகைய அரசடைந்தார்க் காயினும்
வீற்று வழியல்லால் வேண்டினும் கைகூடா
தேற்றார் சிறிய ரெனல்வேண்டா நோற்றார்க்குச்
சோற்றுள்ளும் வீழும் கறி.

(சொ - ள்.) ஆற்றும் தகைய அரசு அடைந்தார்க்கு ஆயினும் - எல்லாச செல்வங்களையும் தரவல்ல தகுதியை உடைய அரசுகளை அடைந்தவர்களுக்கே யானாலும, வீற்று வழியல்லால் - நல்வினையுள்ள வழி அல்லது, வேண்டினும் கைகூடா - விரும்பி முயன்றாலும் கருதிய செல்வம் கைகூடுதல் இல்லை. (ஆதலால்), தேற்றார் சிறியார் எனல்வேண்டா - அறிவில்லாதவர்கள் அதனைப் படைத்தல் முதலிய ஆற்றல் இலராகலின் செல்வத்தாற் சிறியர் என்று கருதவேண்டா; நோற்றார்க்கு - தவம் செய்தார்க்கு, சோறறுள்ளும் கறிவீழும் - சோறறினுளளேயும கறி தானே வந்து விழும் அவர் தவவலிமையால்.

(க - து.) அறிவிலாராயினும் நல்வினையுள்ளார்கருச செல்வம் உளதாம். அரசர்களேயாயினும் அஃதிலார்க்குக கருதிய கைகூடுதல் இலவாம்.

(வி - ம்.) "அரசு அடைநதார" என்றது எல்லாவற்றையும் தரும் ஆற்றல் உடைய அரசாகளை அடைந்தாராயினும் நல்வினை புளள வழியல்லது அவா கருதியன கைகூடா. இஃது ஆறறலால் உயர்ந்தாரகளைக் காட்டி அவரினும் ஊழ் வலியுடைத்து என்ற வாறு. வீறு - பெருமை காரணமாகிய நல்வினைக்கு ஆகி வருதலின் காரியவாகு பெயராம். "தேற்றார் சிறியர்" என்றது அறிவில்லாதவர்கள செல்வத்தைப் படைத்தல், காத்தல் முதலிய செய்தல் அறியாமையின் செல்வத்திற் சிறியர் எனக் கருதுதல். "எனல் வேண்டா" என்றது, செல்வத்தை ஆக்கும் ஊழ் வேறு; அறிவை ஆக்கும் ஊழ் வேறு; அறிவ்லார் செல்வ முடையராகக காண்டலின் செல்வமுடையராதற்கு அறிவாகிய துணைக்காரணமும் வேண்டா; ஊழ ஒனறே வேண்டப்படுவது. ஆகவே அறிவிலாா செல்வம் பெறாா என்று கருதவேண்டாம என்பதாம. "நோற்றார்க்கு—வீழுங் கறி" என்றது தவம் செய்வார் சோறுண்பார், கறி உணபாா என்பன கருத்தன்றி ஊழினுடைய வலிமையை உணர்த்தும் பொருட்டுத் தவம் செயவாா ஆற்றலைக் கூறியவாறும். நோன்றல் - பொறுத்தல். தம்முயிர்க்கு வரும் பசி முதலியனவற்றைப் பொறுத்தலின் தவம செய்வார் நோற்றார் எனப்பட்டார். நோறறார்க்குத தவவலிமை யால் கறி உளவாதல்போல அறிவிலார்கரும் ஊழ் வலியான் செல்வமுண்டாம். ஆகவே ஊழ், முடிக்கும் ஆற்றலுடைய

அரசர்களுக்கும் முடியாதவாறு இடைநின்று தடுக்கும். முடிக்கும் ஆற்றலில்லாத அறிவிலார்க்கும் இடைநின்று அவர் செல்வத்தைப் பெருக்கும். ஆற்றலில் மிக்கார்க்கும் இல்லார்க்கும் ஒவ்வொன்று காட்டியவாறு.

"தோற்றார்க்குச் சோற்றுள்ளும் வீழும் கறி" என்பது பழமொழி. (௬0)

237. **ஆகும் சமயத்தார்க்கு ஆள்வினையும் வேண்டாவாம்**
போகும் பொறியார் புரிவும் பயனின்றே
ஏகல் மலைநாட ! என்செய்தாங் கென்பெறினும்
ஆகாதார்க்கு ஆகுவது இல்.

(சொ - ள்.) ஏகல் - உயர்ச்சியையுடைய, மலை நாட - மலை நாடனே!, ஆகும் சமயத்தார்க்கு - செல்வம் ஆக்கும் ஆகூழ்வந்தெய்துங் காலம் நெருங்கியவர்களுக்கு, ஆள்வினையும் வேண்டா - செய்வதொரு முயற்சியும் வேண்டுவதில்லை; போகும் பொறியார் - செல்வம் போக்கும் போகூழ வந்தெய்துங்காலம் நெருங்கியவர்களுக்கு, புரிவும் பயன் இன்று - அவர்கள் நிலைநிறுத்தச் செய்யும் முயற்சியும் பயனில்லை; என் செய்து என் பெறினும் - எத்தகைய முயற்சியைச் செய்து, எத்தகைய துணையைப் பெற்றாராயினும், ஆகாதார்க்கு - செல்வம் ஆக்கும் ஆகூழ் நெருங்காதவர்க்கு, ஆகுவது இல் - ஆவதொன்றில்லை

(க - து.) ஆகூழ் நெருங்கியார்க்கும் முயற்சி வேண்டா; போகூழ் நெருங்கியார்க்கும் முயற்சி வேண்டா; போகூழ் நெருங்காதார்க்கும் முயற்சி வேண்டா; ஆகூழ் நெருங்காதார்க்கும் முயற்சி வேண்டா.

(வி - ம்.) "போகும் பொறியார் புரிவும்" என்ற இறந்தது தழீஇய எச்சவும்மையான் போகூழ் நெருங்கப்பெறாதார் முயற்சியும் என்பது கொள்ளப்பட்டது. தானே முடிதலின் ஆள்வினை வேண்டா என்றார். போகூழ காலம் நெருங்கப் பெற்றாருட, பெறாதாரும் எத்துணை முயற்சி செய்யினும் நிலை நிறுத்துதலும் நீக்குதலும் ஆகாமையின் புரிவும் பயனின்றே என்றார். "உய்த்துச் சொரியினும் போகா தம" என்பது மறைமொழி. ஆகுங் காலம் நெருங்கப்பெறாதார் துணைகொண்டு செய்யும் முயற்சிகளாலும் பயனின்றென்பார், "ஆகுவது இல்" என்றார். ஊட்டுநன்மை தீமைகளை ஊட்டுவது ஒவ்வொருவனது செயல்வாயிலாகவே யெனினும் காலம் மிக நெருங்கிய வழி அவனது செயலை அல்லது முயற்சியை எதிர்பாராது பிறந்து செயல் வாயிலாக

ஊட்டும் என்பதாம். ஆகவே ஆகூழ் மிக நெருங்கப்பெற்றானுக்கு முயற்சியால் வருந் துன்பமும் இன்றி வருமென்பார், ஆள்வினையும் வேண்டா என்றார். ஊழ் பயனை எய்துவிப்பது ஆள்வினையின் வாயிலாகவாதலின் உம்மை சிறப்பும்மை. பொறி என்பது அறிவு. அறிவான் ஆயது வினை. உடம்பு செய்த வினைக்குக் காரியமாயும் மேல்வரும் பிறப்புகளுக்குரிய வினைகளை இருந்து ஆற்றுதலின் கருத்தாவுமாயும் இருத்தல்போல ஊழ், வினையது காரியமாயும், அதனை உடையானிடத்துச் செலுத்தும் தொழிலில் கருத்தாவுமாயும் இருப்பது. வினையும் ஊழும் கருத்தா காரிய சம்பந்தமுடையன. பொறி வினைக்காகிப் பின்னா ஊழுக்காகி நிற்பது இருமடியாம். (கக)

238. பண்டுருத்துச் செய்த பழவினை வந்தெம்மை
இன்றுறுக் கின்றதென வறியார் — துன்புறுக்கும்
மேவலரை நோவதென் ? மின்னேர் மருங்குலாய் !
ஏவலாள் ஊருஞ் சுடும்.

(சொ - ள்.) மின் நேர் மருங்குலாய் - மின்னலை யொத்த இடையை யுடையாய்!, ஏவலாள் - பிறர் ஊரைக் கொளுத்தும் பொருட்டு ஒருவனால் அனுப்பப்பட்ட ஏவலாளன், ஊரும் சுடும் - ஏவியவனது ஊரையும் கொளுத்திவிடுவான். (ஆதலால்), பண்டு உருத்து செய்த பழவினை - முன்பிறவிகளில் மிகுதியாகத் தாம் செய்த பழைய தீவினை, இன்று வந்து எம்மை ஒறுக்கின்றது என அறியார் - இப்பிறப்பில் வந்து எம்மைத் தண்டிக்கின்றது என்று அறியாராய், துன்புறுக்கும் மேவலரை — ஏவலாளாக நின்று துன்புறச்செய்யும் பகைவரை, நோவது என் - வெறுப்பது எது கருதி?

(க - து.) பிறர் தம்மைத் துன்புறுத்துவது தாம் செய்தபழ வினைப்பயனே என்றறிந்து அவரை நோவாதொழிதல் வேண்டும்.

(வி - ம்.) "வந்து" என்றார், கன்று பல்லாவுள் தாய்நாடிக் கோடல்போல் செய்தானைத் தானே அடையும் ஆற்றலுண்மை பற்றி. ஒறுத்தல் என்றது, தண்டித்தலை. உடம்பை வருத்துதலுக்கு வருத்தல் என்று கூறுவது மரபாம். "மெய்வருத்தக்கூலி தரும்" என்பதுங் காண்க. அதுபோல ஒறுத்தல் என்பது செய்த தீமைக்குத் தக்கவாறு துன்புறுத்தலுக்கு அல்லது தண்டித்தலுக்கு வழங்கும் மரபுச் சொல்லாம். "இன்னா செய்தாரை ஒறுத்தல்" என்றதுங் காண்க. "துன்புறுக்கும் மேவலர்" என்பது பழவினை ஒருவனுக்கு இன்பத்தையோ அன்றித் துன்பத்தையோ ஊட்டின் பிறர்வாயிலாக நின்று ஊட்டும் என்பது அறிவித்தற்

காம். யான் செய்த வினையால் வரற்பாலதாகிய இஃது இவர் வாயிலாக வந்தது என்று தான் செய்த வினை காரணமாயிருக்கத் தண்டிக்கும் அவரை நோவதற்கிடனின் றென்பார் "நோவது என்" என்றார். ஏவலாள் ஊருஞ்சுடும் என்றது, தன்னால் ஏவப் பட்டானே தனது ஊரைக் கொளுத்துவான் என்பது கருதி. அதுபோலத் தன்னாற்செய்யப்பட்ட வினையே தன்னை ஒறுக்கும் என்பதாம். (கஉ)

"ஏவலாள் ஊருஞ் சுடும்" என்பது பழமொழி.

239. சுடப்பட் டுயிருய்ந்த சோழன் மகனும்
பிடர்த்தலைப் பேரானைப் பெற்றுக்—கடைக்கால்
செயிரறு செங்கோல் செலீஇயினுன் இல்லை
உயிருடையார் எய்தா வினை.

(சொ - ள்.) சுடப்பட்டு உயிர் உய்ந்த சோழன் மகனும் — பகைவர் மூட்டிய தீயால் கொளுத்தப்பட்டு அதினின்றும் உயிர் பிழைத்துச் சென்ற பராந்தக சோழனது மகனாகிய கரிகாற் சோழனும், பிடர்த்தலைப் பேரானை பெற்று - இரும்பிடர்த் தலையார் என்னும் பெயரையுடைய தன் மாமனைத் துணையாகப் பெற்று, கடைக்காலத்தில - பிற்காலத்தில், செயிர் அறு செங் கோல் செலீஇயினுன்-குற்றமற்ற செங்கோலைச் செலுத்தினான்; (ஆதலால்), உயிருடையார் எய்தா வினை இல்லை - உயிருடையார் அடைய முடியாததொரு நல்வினைப் பயன் இல்லை.

(க - து.) தீமையே அடைவார், என்றாயினும் நன்மையையும் அடைவர்.

(வி - ம்.) பகைவர் மூட்டிய தீயினின்றும் தப்பி ஓடும் பொழுது கால் கரிந்தமையால் இவன் கரிகாலன் எனப்பட்டான். அரசினை இழந்து உயிர் பிழைக்க முடியாத நிலையிலிருந்த கரிகாலனும் பின்னொருகால் அரசாட்சி பெற்று நன்மையை அடைந்தான். எப்பொழுதும அதுபோன்ற துன்பத்தினையே அடைவேமோ என்று கருதற்க. ஒரு காலத்தில் இன்புறலாம் என்பதாம். "செயிரறு" என்றமையால் பின்னர்ச் சிறந்த இன்பங்களை அடையலாம் என்பது போதரும். ஒவ்வொரு உயிருக்கும் ஒரு பிறவியில் இன்பமும் மற்றொரு பிறவியில் துன்பமும் என்று தனித்தனி வகுக்காது ஒரே பிறவியில் இன்பமும் துன்பமும் அடையுமாறு ஊழ் வகுத்தலின் துன்பமடைவார் இன்பத்தை அடைதலும் உறுதி என்பதாம். இதை 'எய்தா வினை இல்லை" என்றார். இது கருதியே ஊழும் முறை யெனப்பட்டது.

"துன்புளதெனினன்றோ சுகமுளது" என்பதூஉஞ் சான்றாம். சோழன் சிறுமையினால் துன்புற்றமை, பின்னர்ச் செங்கோலைக் குற்றமில்லாது நடத்துதற்கு ஏதுவானமைபோல முன்னர் அடைகின்ற துன்பம் பின்னர் வருகின்ற இன்பத்துக்கு ஆக்கந்தருவதாம் என்றறிதல் வேண்டும். எமக்குத் துன்பத்தையே படைத்தான் போலும், என்று எக்கறுவாரை நோக்கி இன்பமும் துன்பமும் ஒவ்வொரு பிறப்பிலும் படைக்கப்பட்டிருக்கின்றன. துன்பமடைவார் சோர்வின்றித் துணைபெற்று முயற்சிசெய்யின் சிறந்த நன்மைகளை அடையலாம் என்று கூறி அதற்குச் சான்றாகக் கரிகாலனைக் கூறினார். இரும்பிடர்த்தலையார் என்பவர் கருங்கையொள்வாள் பெரும்பெயர் வழுதியைப் பாடிய பாட்டில் யானையின் கழுத்தை "இரும்பிடர்த்தலை" என்று சிறப்பித்தலின் இப்பெயர் பெற்றார்.

"உயிருடையார் எய்தா வினை இல்லை" என்பது பழமொழி. (க௯)

240. நனியஞ்சத் தக்க அவைவந்தால் தங்கண்
துனியஞ்சார் செய்வ துணர்வார்—பனியஞ்சி
வேழம் பிடிதழூஉம் வேய்சூழ் மலைநாட!
ஊழம்பு வீழா நிலத்து.

(சொ – ள்) பனி அஞ்சி வேழம் பிடி தழூவும்-பனியால் வரும் குளிருக்கஞ்சி ஆண்யானை பெண்யானையைத் தழுவுகின்ற, வேய்சூழ் மலைநாட-மூங்கில்கள் நெருங்கியிருக்கின்ற மலைநாடனே! ஊழ் அம்பு நிலத்து வீழா - ஊழாற் செலுத்தப்படும் அம்புகள் குறிக்கிலக்கானவனைச் சென்று சேர்தலன்றி நிலத்தின் மேல் வீழ்தல் இல, நனி அஞ்சத்தக்க அவை வந்தால் - மிகவும் அஞ்சத்தக்க அவ்வம்புகள் தம்மீது வந்தால், செய்வது உணர்வார்-செய்கின்றதன் நன்மை தீமையை அறிவார், தங்கண் துனி அஞ்சார் - அவற்றால் தமக்கு உண்டாகும் துன்பத்திற்கு அஞ்சுதல் இலர்.

(க - து.) நன்மை தீமையறிவார் ஊழான் வருந் துன்பத்திற்கு அஞ்சுதல் இலர்.

(வி - ம்.) ஊழ் குறியறிந்து எய்தலின் தவறுதல் இல்லையென்பார், 'நிலத்துவீழா'' என்றார். அம்பாதல் ஒப்புமை நோக்கி நிலத்துவீழா என்றாரெனினும், சென்று சேராதொழிதல் இல்லையென்பது அதன் பொருள். "அஞ்சார்" என்றார், நன்மை தீமையறிவார் தாம் அஞ்சினும் அவை விடா என்பதனை அறிந்தும்,

அவையும் தம்மால் முன்பு செய்துகொள்ளப்பட்டனவே என்று அறிந்தும் அஞ்சுதலிலராகலின். தழுவும் என்பது தழூஉம் என்றாயது விகாரம்.

"ஊழம்பு வீழா நிலத்து" என்பது பழமொழி. (சு௪)

25. அரசியல்பு

241. எங்கண் இனையர் எனக்கருதின் ஏதமாம்
தங்கண்ண ராயினும் தகவில கண்டக்கால்
வன்கண்ண னாகி ஒறுக்க ஒறுக்கல்லா
மென்கண்ணன் ஆளான் அரசு.

(சொ - ள்.) எம்கண் இனையர் என கருதின்-அரசன் நீதி கூறுமிடத்து எமக்கு இவர் (நட்டார், பகைவர்) இத்தன்மையை உடையார் என்று கருதுவானாயின், ஏதம்-அது செங்கோன்மைக்குக் குற்றமாம், தம் கண்ணராயினும் - தமது கண்போல்வாராயினும், தகவுஇல கண்டக்கால் – தகுதியற்ற செயல்களை அவர்களிடத்துக் கண்டபொழுது, வன்கண்ணனாகி—வன்கண்மையை உடையவனாகி, ஒறுக்க – அவர்களைத் தண்டிக்க, ஒறுக்கல்லா மென்கண்ணன் – தண்டஞ் செய்யாத கண்ணோட்டமுடையான், அரசு ஆளான் - அரசினை ஆளும் தகுதியில்லாதவனே ஆவான்.

(க - து.) அரசன் நடுநிலையிலிருந்து நீதி கூறவேண்டும்.

(வி - ம்.) அரசன் நினைத்த அளவில் அவர்க்கு அதனாலாம் நன்மை தீமை பலவாதலின் நினைத்தலும் தீதென்றார். பெரியோர்களது நினைவு ஒன்றே பெருஞ்செயல்களைப் பயக்கும் ஆற்றலுள்ளது. "குன்றன்னார் குன்ற மதிப்பிற் குடியொடு நின்றன்னார் மாய்வர் நிலத்து" என்பதும் காண்க. "அவனை முறை காக்கும் முட்டாச் செயின்" என்றலின், அவன் நடுவுநிலையினின்றும் பிறழவே அவனைச் செங்கோல் காத்தல் இல்லையாம். இஃது "ஏதம்" எனப்பட்டது. "கண்டக்கால்" என்றது, "அரசன் அன்று ஒறுப்பான்" என்றதைக் கருதி. "ஆகி" ஒறுக்க என்றது, நீதி கூறுமிடத்து நடுநிலையில் இருத்தல்வேண்டும் என்பதைக் குறித்து நின்றது. கண்ணோட்டம கண செனறவழி நிகழ்வதாகலின், "மென்கண்ணன்" எனக் காரியத்தைக் காரணமாகக் கூறினார். மென்மையும் கண்ணுக்காகாது அதன் காரியத்திற்காயிற்று. யார்மாட்டும கண்ணோட்டங்கொண்டொழுகின் பகைவரால் நலியப்பட்டு அரசு ஒழியும் என்பார், "ஆளான் அரசு"

என்றார். எம், தம் என்றதற்கேற்பப் பன்மைகூறாது வன்கண்ணனாகி, ஆளான் என ஒருமையாற் கூறப்பட்டன. முன்னது உயர்வினும், பின்னது செறலினும் பன்மை ஒருமை மயக்கமாயின.

"மென்கண்ணன் ஆளான் அரசு" என்பது பழமொழி. (௯)

242. சால மறைத்தோம்பிச் சான்றவர் கைகரப்பக்
காலை கழிந்ததன் பின்றையும்—மேலைக்
கறவைக்கன் றூர்ந்தானைத் தந்தையும் ஊர்ந்தான்
முறைமைக்கு மூப்பிளமை இல்.

(சொ – ள்.) சான்றவர் - அறிவு நிரம்பிய அமைச்சர்கள், சால மறைத்து ஓம்பி கை கரப்பவும்-மிகுதியானவைகளைக் கூறி இது பெருங்குற்றமல்லவென்று மறைத்து, அதற்கு மறைமொழிந்தபடி செய்தலே அறமென்று பாதுகாவலும் செய்து அரசன் நினைத்திருந்த செயலைக் கரப்பவும், காலை கழிந்ததன் பின்றை – அன்றிரவு கழிந்த பின்னர், மேலை-முன்னாள், கறவை கன்றூர்ந்தானை - பசுவின் கன்றின்மேல் தனது தேரைச் செலுத்தினவனை, தந்தையும் ஊர்ந்தான் - அவன் தந்தையும் அவன் மேல் தனது தேரைச செலுத்தினான்; (ஆகையால்), முறைமைக்கு மூப்பு இளமை இல்-செங்கோன்மைக்கு முதுமையுடையோனுக்கு ஒரு நீதி இளமையுடையானுக்கு ஒரு நீதி என்பதில்லை.

(க – து) முதுமை இளமை கருதி நீதி கூற லாகாதென்பதாம்.

(வி - ம்) "சாலமறைத்து" என்றது இதுபோன்ற பழைய நிகழ்சசிகளை எடுத்துக்கூறி அடிப்பட்டு வந்தமையால் இது பெருங் குற்றமல்லவென்று கூறுதலை. "ஓம்புதல்" என்றது அந்தணர்கள் கூறுகின்ற முறைப்படி பொன்னால் ஆன்கன்று செய்து அவர்க்கே அளித்தல் இதற்குத் தீர்வாகும் என்று கூறி அத்தீவினையினின்றும் அவரைப் பாதுகாத்தலை. "கை கரப்பவும்" என்றது மகனைக் கோற நினைத்த நினைவை மறைக்கவும் என்பதாம். பின்றையும் என்பதிலுள்ள உம்மையைப் பிரிதது கரப்ப என்பதனோடு கூட்டுக. "சால மறைததோம்பி" என்றது கரத்தலுக்கு ஏதுவாயிற்று. கழிந்தது என்றது அரசன் இரவுற்ற துன்பததையும், விடுதலை நோக்கிய வேட்கையையும் உணர்த்தும. தந்தைக்கு ஏற்ப மகனென்னாது கன்றூர்ந்தானை என்றார், மகன் செய்த தீமை தந்தை உளத்தில் நின்று கொதித்தலின் மகனெனக் கூற மனம் இயையாமையின். "தந்தையும்" என்னும் முற்றும்மை ஊர்தலின் அருமை தோற்றுவித்து நின்றது. இனி

அமைச்சர்கள் கன்றூர்ந்த செயலை வெளிப்படாது மறைத்தாரெனவும், பலகாலம் சென்றபின்னர் மகன் தீர்வு செய்யச் செய்த முயற்சியால் அரசன் அறிந்தான் எனவும் பொருள் கூறுவாருமுளர். கன்றூர்ந்த செயலை மறைத்தார் என்றற்குச் சான்று யாதொன்றுமில்லை. இடையில் பலகாலம் சென்றது என்பது பொருத்தமற்றதொன்றாம்.

"வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி யுகுநீர் நெஞ்சுசுட... ...
அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்"
(சிலப்பதிகாரம்)

பசு கடைமணி நீருக வாயில் மணியை நெடுநாள் சென்றபின்னர் அசைத்தது என்று கூறுவது பொருந்துமாறு என்னை? இதனால், பசுவினால் அரசன் அறிந்ததாகக் கூறலாமேயன்றி மகன் முயற்சியால் அறிந்ததாகக் கூறுவதற்குச் சான்று யாண்டுளது? ஆகவே இவையனைத்தும் உரையன்மை யறிக.

"முறைமைக்கு மூப்பிளமை இல்" என்பது பழமொழி. (உ)

243. முறைதெரிந்து செல்வர்க்கும் நல்கூர்ந் தவர்க்கும்
இறைதிரியான் நேரொக்க வேண்டும்—முறைதிரிந்து
நேரொழுகா னாயின் அதுவாம் ஒருபக்கம்
நீரொழுகிப் பாலொழுகு மாறு.

(சொ - ள்.) முறைதெரிந்து - கூறும் முறைமையை யறிந்து, செல்வர்க்கும் நல்கூர்ந்தவர்க்கும் - செல்வத்தை உடையவர்க்கும் வறுமையை உடையவர்க்கும், இறை - அரசன், திரியான் - செல்வம் வறுமை நோக்கி நடுநிலையினின்றும் திரியாதவனாய், நேர் ஒக்க வேண்டும் - இருவர் மனமும் ஒப்புமாறு நீதி கூற வேண்டும், முறை திரிந்து - கூறும் முறையினின்றும் வழுவி, நேர் ஒழுகானாயின் - நடுவுநிலையாக ஒழுகா தொழிவானாயின், அது - அங்ஙனம் ஒழுகாத தன்மை, ஒரு பக்கம் நீரொழுகி - தாயின் தனங்களை உண்ணுங் குழந்தைகளுக்கு ஒரு பக்கம் நீரொழுகி, பால் ஒழுகும் ஆறு - மற்றொரு பக்கம் பாலும் ஒழுகுமாற்றை ஒக்கும்.

(க - து.) அரசன் செல்வம், நல்குரவு நோக்காது முறையறிந்து நீதி கூறுதல் வேண்டும்.

(வி - ம்.) தாய் தன் குழந்தைகளுக்குள் நல்ல குழந்தை இது, தீய குழந்தை இது என்று அறிந்து பாலும் நீரும் அளித்தல்

இல்லாமைபோல் அரசனும் செல்வம், வறுமை நோக்கி ஒருவற்கு நன்மையும் மற்றவற்குத் தீமையும் வர நீதி கூறலாகாதென்பதாம். தாய ஒன்றாய் மதித்தல போல வேறுபாடின்றி நீதி கூறல் வேண்டும். வழக்குற்றா இருவருள் வென்றவர் மகிழ்தல் இயல்பே. தோற்றா வருந்துதல் இயல்பே. இருவாக்கும் ஒப்ப ஒழுகுமாறு எனனையெனின தோற்றார்க்குத், தான "நடுவு நிலைமையை உடையான் என்பதும்" தோற்றதால் வருந் துன்பத்தினை "யாவர்க்கும் தோல்வி வெற்றி உண்டு அதற்காக வருந்தாது ஒத்தல் வேண்டுமென்றும்" இழந்த பொருள்மேல் அவர் கொண்ட விருப்பத்தைப் "பொருளின இயல்பு மாறி வருதலே ஆதலின் அதனிடம் பற்றுவையா தொழிதல் வேண்டும் என்றும்" அரசன் விரித்துக் கூறவே அவரும் அவனையொப்ப மகிழ்வெய்துவா. இஃது இருவருக்கும் ஒப்பநடந்தவாறாம். 'நேரொக்க வேண்டும்" என்பதும் இது. "அச்சமும அவலமும் ஆர்வமும் நீக்கி" என்பதே இது.

"ஒரு பக்கம் நீரொழுகிப் பாலொழுகு மாறு" என்பது பழமொழி. (கூ)

244.. பொருத்தம் அழியாத பூந்தண்டார் மன்னர்
அருத்தம் அடிநிழ லாரை—வருத்தாது
கொண்டாரும் போலாதே கோடல் அதுவன்றே
வண்டூதா துண்டு விடல்.

(சொ - ள்.) பொருத்தம் அழியாத பூம் தண் தார் மன்னர் - அரசனுக்குரிய இலக்கணங்கள் நீங்காத அழகிய குளிர்ந்த மாலையை உடைய அரசர்கள், அருத்தம் - இறைப் பொருளுக்காக, அடிநிழலாரை - தன்னடியின் கீழ் வாழும் குடிகளை, வருத்தாது - (மழையின்மை முதலிய காரணங்களால் பொருளில்லாத காலத்து) வருத்துதலைச்செய்யாமலும், கொண்டாரும்போலாதே கோடல் - பொருளுள்ள காலத்து வருத்திக் கொண்டவரைப் போலவும் கொள்ளாது எளிதாகக் கொள்ளுதலுமாகிய, அது - காலமறிந்து கொள்ளுதல், வண்டு - வண்டுகள், ஊதாது - (மொட்டாகிய தேனில்லாத பூக்களை மலராத காலத்து) ஊதிச் சிதையாது, உண்டுவிடல் - தேன் நிறைந்து மலர்ந்த காலத்துத் தேனை எளிதாக உண்ணுமாற்றை (ஒக்கும்).

(க - து.) அரசர்கள் குடிகளிடத்திலிருந்து வாங்கும் இறைப் பொருள்களைக் காலமறிந்து வருத்தாது வாங்குக.

(வி - ம்.) பொருத்தம் என்பன இறைமாட்சியுள் கூறப்பட்டனவேயாம். பொருளில்வழி வருத்துதலிற் பயனில்லை யாதலின்

வருத்தாது என்றும் பொருளுள்வழி வருத்திப் பெறவேண்டிய தில்லையாதலின் எளிதாகக் கொள்க என்பார், "கொண்டாரும் போலாதே கோடல்" என்றுங் கூறினார். பொருளில்லாத காலத்து இறைப் பொருளைக் குறைத்தோ, நீக்குதலோ செய்க என்பதாம். "போலாகாதே" என்பது போலாதே என வந்தது தொகுத்தல் விகாரம். போல என்றது போல் வினை அடியாகப் பிறந்த வினையெச்சம். நால்வகையுவமையும் விரித்தற் கேலாமை யின் இடைசசொல்லடியாகப் பிறந்த வினையெச்சமன்மை அறிக. அது ஆகாதே என்னும் எதிர்மறை வினையெச்சத்தோடு புணர்ந்து நிலைமொழி அகரமும் வருமொழியின் இடையிலுள்ள உயிர்மெய்யும் கெட்டுப் போலாதே என நின்றது.

"வண்டுதா னுண்டு விடல்" என்பது பழமொழி. (௪)

245. பாற்பட்டு வாழ்ப வெனினும் குடிகள்மேல்
மேற்பட்ட கூட்டு மிகநிற்றல் வேண்டாவாம்
கோல்தலையே யாயினும் கொண்டீக காணுங்கால்
பால்தலைப் பாலூறல் இல்.

(சொ - ள்.) பாற்பட்டு வாழ்ப எனினும் - (அரசன்) தன் ஆணைக்குக் கட்டுப்பட்டு வாழ்கின்றவர்களேயாயினும், குடிகள் மேல் - குடிகளிடத்து, மேற்பட்ட கூட்டு-தமக்குச் சேரவேண்டிய மிகுந்த இறைப்பொருள்கள், மிக நிற்றல் வேண்டா - அவர்க ளிடத்தில் நீண்ட நாட்கள் நிற்றலைச் செய்யவேண்டா; கோல் தலையே ஆயினும் கொண்டீக - அரிந்த தாளின் தலையிலுள்ள நெல்லேயாயினும் கொள்ளுங் காலமறிந்து உடனே கொள்க; காணுங்கால் - ஆராயுமிடத்து, பால் தலை பால் ஊறல் இல் - (சேரக்கறக்கலாமென்று சிலநாள் விட்டுவைத்தால்) பாலுள்ள இடத்தில் (மடியில்) பின்னர் பால் சுரத்த லில்லையாதலால்.

(க - து.) அரசன் இறைப்பொருளைச் சிறிது சிறிதாகக் காலமறிந்து கொள்க என்பதாம்.

(வி - ம்.) "பாற்பட்டு வாழ்ப எனினும்" என்றது சோர்வு கொள்ளாதொழிதல் வேண்டாம என்பதாம் சிறிது சிறிதாகக் கொள்க என்பார் கோல்தலையைக் கூறினார். முன்னர் "மிக நிற்றல்" என்றமையின் கொள்ளுங் காலமறிந்து என்று கூறப் பட்டது. நெல்லேயாயினும் காலங்கடப்பின் வந்து சேருதல் இல்லையாம். கொண்டு ஈக என்னும் இரு சொற்களும் ஒரு சொல்லாய் நின்று "கொள்க" என்னும் பொருளைப் பயந்து நின்றன. மேற்பட்ட கூட்டிற்கு, கோல்தலையையும் மிக நிற்ற

னுக்குக் காலமறிந்து கொண்டுக என்பதையும் கொள்க. ஆவின் பாலைக் கறவாது சிலநாட்கள் நிறுத்தி வைப்பின் பால் வற்றிப் போகும். அரசனும் மிகுந்த இறைப்பொருள்களைக் குடிமக்களிடத்தில் நிறுத்திவைத்து நீண்டநாட்கள் சென்ற பின்னர் அவைகளைப் பெற நினைப்பின் அது முடியாதாம். குடிமக்கள் அவற்றைச் செலவு செய்துவிடுவர் என்பதாம். பாலைக் காலமறிந்து கறவாதது ஆவின் குற்றமன்றிக் கறவாதவன் குற்றமாதல் போல இதுவும் அரசனது குற்றமேயாம்.

"பால்தலைப் பாலூறல் இல்" என்பது பழமொழி. (௫)

246. அடைய அடைந்தாரை அல்லவை செய்து
கொடைவேந்தன் கோல்கொடிய னாகிக் குடிகள்மேல்
கூட்டிறப்பக் கொண்டு தலையளிப்பின் அஃதன்றே
சூட்டறுத்து வாயி லிடல்.

(சொ - ள்.) அடைய அடைந்தாரை - தன்னை நெருங்க அடைந்த குடிகளை, அல்லவை செய்து - துன்புறுத்தி, கொடை வேந்தன் - கொடையினையுடைய அரசன், கோல் கொடியனாகி - கொடுங்கோலை உடையவனாகி, குடிகள்மேல் கூட்டு இறப்பக் கொண்டு - குடிகளிடத்தில் தாங்கொள்ளும் இறைப்பொருளை மிகுதியாகக்கொண்டு, தலையளிப்பின் - பின்னர் அவருக்கு வேண்டிய நன்மைகளைச் செய்தலான் அன்பு செய்யின், அஃது - அச்செயல், சூட்டு அறுத்து வாயில் இடல் - மயிலினது உச்சிக் கொண்டையை அறுத்து அதற்குணவாக அதன் வாயில் இடுதலை ஒக்கும்.

(க - து.) அரசன் இறைப்பொருளைத் துன்புறுத்தி மிகுதியாகக்கொண்டு பின்னர் எத்துணை செய்யினும் குடிகள் மகிழ்ச்சியடையார்.

(வி - ம்.) "மன்னுயிரெல்லாம் மண்ணாள் வேந்தன் தன்னுயிர்" என உயிராகக் கூறப்படுதல்பற்றி அடைந்தாரையென்றே ஒழியாது "அடைய அடைந்தாரை" என்றார். "அல்லவை செய்து" என்றது தான் மிகுதியான இறைப்பொருளைக் கொள்ளவேண்டி - குடிகளைப் பலதலையான் துன்புறுத்தல். "வாயில் இடல்" என்றமையால் பின்னர்ப் பலதலையான் வேண்டிய நன்மைகளை இடையீடின்றிச் செய்வார் என்பது பெறப்படும். முன்னர்த் துன்புறுத்திப் பின்னர் எத்துணை நன்மையைச்செய்யினும் குடிகள் மகிழார். அஃதன்றி அதனை யேற்கவும் மாட்டார். இறைப்பொருளை முறையாகக்கொண்டு முறையாக நன்மை செய்க என்பதாம். மிகுந்த நன்மை செய்யவேண்டுமென்பது

நினைத்துக் குடிகளிடத்தில் பொருள் பெற்றுச் செய்வதால் அவர்கள் துன்பமடைவரேயன்றி இன்பமடையார். கொண்டையை அறுத்தவுடன் மயில் இறந்துபடுதலின் வாயிலிட்டாலும் அதனால் அதற்கு ஒரு பயனுமேற்படுவதில்லை.

"சூட்டறுத்து வாயி லிடல்" என்பது பழமொழி. (சு)

247. **வெண்குடைக்கீழ் வாழும் குடிகட்கு வேந்தனும்**
செங்கோலன் அல்லாக்கால் செய்வதென்—பொங்கு
படுதிரைச் சேர்ப்ப!மற் றில்லையே யானை
தொடுவுண்ணின் மூடுங் கலம்.

(சொ - ள்.) படுதிரை பொங்கு சேர்ப்ப - மிகுந்த அலைகள் பொங்கி எழுகின்ற கடல நாடனே!, வெண்குடைகீழ் வாழும் குடிகட்கு - தனது வெண்மையான கொற்றகுடை நிழலின்கீழ் உயிர்வாழ்கின்ற குடிமககட்கு, வேந்தனும் செஙகோலன் அல்லாக்கால் - அரசன் செம்மையான கோலேயுடையவன் அல்லாத விடத்து, செய்வது என் - அவர்கள் செயவது யாது?, யானை தொடு உண்ணின் மூடுங்கலம் மறறு இல்லை - யானை தனது கரத்தால் தொட்டு அக்கலத்தை உருட்டி உண்ணின் அதனை மூடுங்கலம் வேறொன்றும் இல்லையாதல்போல.

(க - து.) கொடுஙகோலரசனின் கீழுள்ள குடிகள் இறந்துபடுதலே செய்யத்தக்க செயலாம்.

(வி - ம்.) வேந்தனும்: உம்மை - சிறப்பும்மை.

"கோனிலை திரிந்திடிற் கோள்நிலை திரியும்
கோள்நிலை திரிந்திடின் மாரிவறங கூரும்
மாரிவறங் கூரின் மன்னுயிர் இல்லை"

என்பாராதலின், உயிர்கள் இறந்தொழிவதேயன்றிச் செய்யத்தக்க செயல் ஒன்றுமில்லை. மிகக வலிவுடைய யானையே உருட்டி உண்ணநினைபபின் அதனை மறைக்க முடியாதவாறுபோல குடிகள் செய்யத்தக்கது ஒன்றுமில்லையாம்.

"இல்லையே யானை தொடு உண்ணின் மூடுங கலம்" என்பது பழமொழி. (எ)

248. **ஒளியாரை மீதூர்ந்து ஒழுகுவது அல்லால்**
களியானை மன்னர்க்கோ கைகடத்தல் ஏதம்
துளியுண் பறவைபோல் செவ்வன்நோற் பாரும்
எளியாரை எள்ளாதார் இல்.

(சொ - ள்.) துளியுண் பறவைபோல் - நீர்த்துளியையே உண்ணுகின்ற வானம்பாடியைப்போல, செவ்வன் நோற்பாரும் - செம்மையாக ஒன்றனையே நோக்கித் தவம் செய்கின்றவர்களுள்ளும், எளியாரை எள்ளாதார் இல் - எளியவர்களைச் சினந்திகழாதார் யாரும் இல்லை. (அதுபோல), களியானை மன்னர்க்கு - செருக்குப் பொருந்திய யானைப்படையை உடைய அரசர்களுக்கு, எளியாரை - தம்மோடு மாறுபட்டு ஒழுகும் எளிய அரசர்களை, மீது ஊர்ந்து ஒழுகுவது அல்லால் - மேற்பட்டுச் சென்று போரிட்டு வென்று ஒழுகுவதேயல்லாமல், கை கடத்தல் - அது செய்யாது இகழ்ச்சியான் நீக்குதல், ஏதம் - துன்பந்தருவதாம்.

(க - து) தன்னோடு மாறுபட்டொழுகும் எளிய அரசர்களை அரசன் உடனே சென்று வெலக.

(வி-ம்.) "பறவைபோல் நோற்பார" என்றது வானம்பாடி உண்ணுதற்கு மழைத்துளி ஒன்றனையே எதிர்நோக்கி நிற்பது போல, நோற்பாரும் தம் மனப்பட்ட அதனையே நோக்கித் தவஞ் செய்வர் என்பதாம். எளியாரை என்றது, அவர் தவத்திற்கு மாறுபட்டு நிற்போரை. மேல் எளியரை வேறல் வேண்டும் எனக் கூறவேண்டுதலின் தவத்திற்கு மாறுபட்டு நிற்போரை "எளியார்" என்றார். ஒளியார் என்றது, அரசன் என்னும் பொருட்டாய் நின்றது. எளியாரை என்று பின்னர்க் கூறப்படுதலின் எளிய அரசர்களை என்பது பெறப்பட்டது. அன்றியும் "களியானை மன்னர்க்கோ" என்றமையானும் அவர் எளியார் என்பது பெறப்படும். "மெலியார்மேல் மேக பகை" என்றலின் அது "கை" எனப்பட்டது. "ஏதம்" என்றார், தன்னால் வேறலாயிருக்கும்பொழுதே எளிய அரசர்களைக் கோறுதொழிவாரா, அவர் வலியராய உயிர்த்த துணையானே இறந்தொழிவார் என்பதைக் கருதி.

"செவ்வன் நோற்பாரும் எளியாரை எள்ளாதார் இல்" என்பது பழமொழி. (அ)

249. மறுமனத்தன் அல்லாத மாநலத்த வேந்தன்
உறுமனத்த னாகி ஒழுகின்—செறுமனத்தார்
பாயிரம் கூறிப் படைதொக்கால் என்செய்ப
ஆயிரம் காக்கைக்கோர் கல்.

(சொ - ள்.) மறுமனத்தன் அல்லாத - குற்றமுடைய மனத்தனல்லாத மனத்தையும், மா நலத்த - சிறந்த வேறறுமைத் துணை நலங்களையும் உடைய, வேந்தன் - அரசன், உறுமனத்தன் ஆகி

ஒழுகின் - யாவரிடத்தும் பொருந்திய அன்புடைய மனத்தனாகி ஒழுகின், செறும் மனத்தார் - வெல்லும் மனதுடைய அரசர்கள், பாயிரம் கூறி படை தொகக்கால் - வேண்டிய அளவு முகவுரை கூறிப் படையைத் திரட்டினால், என் செய்ப - அப்படைகள் என்ன செய்யும்?, ஆயிரம் காக்கைக்கு ஓர் கல் - ஆயிரம் காக்கைகளை ஓட்டுவதற்கு இட்ட ஒரு கல்லைப்போல அவர் தோன்றிய துணையானே பறந்து செல்வர்.

(க - து.) அரசர்கள் அன்பு ஒன்றே கொண்டு மறத்தை வெல்லலாம்.

(வி - ம்.) அல்லாத வேந்தன், நலத்த வேந்தன் எனத்தனித் தனிக் கூட்டுக. துணை இருவகைப்படும். அல்லாத என்றமையால் அறிவுடைமை, நீதி நூல்வழி ஒழுகல் முதலிய வுடைய மனத்தான் என்பது பெறப்படும். இஃது ஒற்றுமைத் துணை. மா நலம் என்றமையான் படை, பொருள் முதலிய வேற்றுமைத்துணை உடையான் என்பது பெறப்படும். ''செறும் மனத்தார்'' என்றது, அன்புடையனாதலின் யாவரும் பகைமையின்றி ஒழுகுதலை அறிந்து அழுக்காறுற்று வெல்ல நினைக்கும் அரசர் என்றவாறு. பாயிரம் என்றது, துணைசெய்வோர்க்குத் தாம் பின்னர்ச செய்வதாக உறுதி கூறும் உரையை. ''தொகக்கால்'' என்றமையின் அவர் அன்புடைமை அறிந்து துணை செய்வோர் தொகார் என்பதாம். என் செய்ப என்றது முற்சேறலையா? பிற் சேறலையா என்று வினவியவாறும். அப்படைகள் சேர்தல் இல்லை. ஒருகால் சேர்ந்தாலும் அவரைக்கண்டு நாணி பிற்சேரும் என்பதாம். செய்ப என்பது அகரவீற்று அஃறிணைப் பன்மை வினைமுற்று.

''அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை'' என்பதே இது.

'ஆயிரம் காக்கைகக்கு ஓர் கல்'' என்பது பழமொழி. (கூ)

250. அங்கோல் அவிர்தொடி! ஆழியான் ஆயினும்
செங்கோலன் அல்லாக்கால் சேர்ந்தாரும் எள்ளுவரால்
வெங்கோன்மை வேந்தர்கள் வேண்டும் சிறிதெனினும்
தண்கோல் எடுக்குமாம் மெய்.

(சொ - ள்.) அம் கோல் அவிர் தொடி - அழகிய கோல் போன்று திரண்டு விளங்குகின்ற தொடியை உடையாய்!, வேந்தா கண் - அரசன் பகையரசர் மாட்டு, வெம் கோன்மை சிறிது வேண்டும் எனினும் - கொடுங்கோன்மையைச் சிறிது விரும்பினா னாயினும், செங்கோலன் அல்லாக்கால் - தன்னிழற்கீழ் வாழ்வா

ரிடத்துச் செங்கோன்மை உடையவன் அல்லர்தவிடத்து, ஆழி யான் ஆயினும் - ஆழிப்படையை உடைய திருமாலேயாயினும், சேர்ந்தாரும் - தன்னைச் சேர்ந்தவர்களும், எள்ளுவர் - இகழ் வார்கள்; தண்கோல் - தன்கீழ் வாழ்வாரிடத்துச் செலுத்தும் செங்கோலே, மெய் - உண்மையாக, எடுக்கும் - வெற்றியைத் தோற்றுவிக்குமாதலான்.

(க - து.) அரசனது வெற்றிக்கு அவனது செங்கோலே காரணமாம்.

(வி - ம்.) சேர்ந்தாரும் என்றமையானே பகைவரும் என் பது பெறப்படும். பகையரசர்களிடத்தே சிறிது கொடுங்கோன்மை கொள்ளினும், அதனைவிடத் தங்குடிகளிடத்தே செலுத்தும் செங்கோன்மையே வெற்றியைத் தர வல்லதாம். செங்கோலனு யொழுகவே குடிகள் தம் உடல், பொருள், ஆவி மூன்றினையும் அவன் பொருட்டு அளிப்பராதலின் அவன் வெல்லுதல் உறுதி யென்பார், 'மெய்' என்றார்.

"தண்கோல் எடுக்குமாம் மெய்" என்பது பழமொழி. (௧௦)

251. மன்னவன் ஆணைக்கீழ் மற்றையார் மீக்கூற்றம்
என்ன வகையால் செயப்பெறுப—புன்னைப்
பரப்புநீர் தாவும் படுகடல் தண்சேர்ப்ப!
மரத்தின்கீழ் ஆகா மரம்.

(சொ - ள்.) புன்னை பரப்பு நீர் தாவும் படுகடல் தண் சேர்ப்ப - புன்னைப் பரப்பின்கண்ணே நீர் பாய்கின்ற மிக்க நீர் பொருந்திய கடலை உடைய குளிர்ந்தகரையுடனே!, மரத்தின் கீழ் மரம் ஆகா - ஒரு மரத்தின் கீழே வைக்கப்பட்டுள்ள மரம் ஓங்கி வளர்தல் இல்லை (அதுபோல), மன்னவன் ஆணைக்கீழ்—அரசனது ஆணை செல்கின்ற விடத்து, மற்றையார்—ஏனையோர், மீக்கூற்றம்— தம்மை மிகுத்துக்கூறும் தமது ஆணையை, என்ன வகையால் செயப்பெறுப - எப்பெற்றியால் செலுத்துவார்கள், (செலுத்தக் கூடாதாம்.)

(க - து.) அரசன் ஆணையின்கீழ், பிறர், தமது, ஆணை யைச் செலுத்துதல் இயலாதாம்.

(வி - ம்.) மரத்தின்கீழ் மரம் வளராததுபோல அரசனாணை யின் கீழ் பிறராணை நடைபெறாது. மீக்கூற்றம் - மேம்படுத்திக் கூறுதல்; அஃது ஆணைக்கு ஆயிற்று.

"மரத்தின் கீழ் ஆகா மரம்" என்பது பழமொழி. (௧௧)

252. **வழிப்பட் டவரை வலியராச் செய்தார்**
அழிப்பினும் ஆக்கினும் ஆகும்—விழுத்தக்க
பையமர் மாலைப் பணைத்தோளாய் ! பாத்தறிவென்
மெல்லக் கவுட்கொண்ட நீர்.

(சொ - ள்) *விழு தக்க பைஅமர் மாலை பணை தோளாய்- சிறப்பினை உடைய மேன்மை பொருந்திய மாலையை அணிந்த பெருத்த தோளினை உடையாய்!, கவுள் கொண்ட நீர்-கன்னத்தி லடக்கிய நீரைக் குடிக்கவும் செய்யலாம், உமிழவுஞ் செய்யலாம்; (அதுபோல), வழிபட்டவரை - தம்மை வழிபாடு செய்தொழுகிய குடிமக்களை, வலியரா செய்தார் - வலியராகச் செய்யவல்ல அரசர்கள், அழிப்பினும் ஆக்கினும் ஆகும் - அக்குடிமக்களை அழிக்கினும் அன்றி ஆக்கினும் அவை அவராலியலும்; மெல்ல பாத்து அறிவுஎன்-இதற்கு மெல்லப் பகுத்து அறிதல் என்னை?*

(க - து.) *குடிமக்களை ஆக்கலும், அழித்தலும் அரசர்களால் செய்ய இயலும்.*

(வி - ம்.) *வழிப்பட்டவர் என்றது, தன்னாணையின் கீழ்ப் பட்டுத் தமக்கு அடங்கி நடக்கும் குடிமக்கள் என்றவாறும். 'வலியராச செய்தார்''—குடிமக்கள் செல்வத்தில் வலியுடைய ராகச் செய்யத்தக்க அரசர்கள்; செய்தார் எனினும் செயத் தக்கார் என்பது பொருளாகக் கொள்க; பின்னரும் ஆக்கின் என வருதலின் அரசர்கள் என்பார், ''வழிப்பட்டவரை வலிய ராச் செய்தார்'' என்றார் அரசனும் இறையெனப்படுதலின் அளித்தல், அழித்தல் அவனுக்குரியவாயின என்றார். அழித்தல், ஆக்குதல் என்பன செல்வத்தை அழிததல் ஆக்குதல் என்பன வாம். கவுளில் கொண்ட நீர் குடித்தற்கும் உமிழ்தற்கும் அமைதல் போலத் தன் கீழ்ப்பட்ட குடிகளைச செல்வத்தால் உயர்தது தலும், தாழ்த்துதலுஞ் செய்ய அரசன் வல்லனும் என்பதாம. அறிவு என்பது வகர உகர விகுதி பெற்ற தொழிற்பெயர்.*

''கவுள் கொண்ட நீர்'' என்பது பழமொழி. (௫௨)

253. **தலைமை கருதும் தகையாரை வேந்தன்**
நிலைமையால் நேர்செய் திருத்தல்—மலைமிசைக்
காம்பனுக்கும் மென்தோளாய் ! அஃதன்றோ ஓரறையுள்
பாம்போ டுடனுறையும் ஆறு.

(சொ - ள்.) *மலைமிசை காம்பு அனுக்கும் மென்தோளாய்- மலைமீதுள்ள மூங்கிலை வருத்தும் மென்மையான தோள்களை*

உடையாய்!, தலைமை கருதும் தகையாரை - தலைமை நிலையைப் பெறவேண்டும் என்று கருதும் தன்மை உடையவர்களை, வேந்தன்-அரசன், நிலைமையால் நேர்செய்து இருத்தல்-அவர் அஃதிலராகப் புறத்தே நடிக்கும் வஞ்சக நிலையால் அவரைத் தம்மையொப்பத் தலைமை செய்து தான் சோர்ந்திருத்தல், அது—அங்ஙனமிருத்தல், ஓர் அறையுள் - ஓர் அறையினுள்ளேயே, பாம்போடு உடன் உறையும் ஆறு—ஒருவன் பாம்போடுகூடத் தங்கியிருத்தலை ஒக்கும்.

(க – து.) வஞ்சனை உடையாரைத் தலைமைசெய்து அரசன் சோம்பி இருத்தல் ஆகாது.

(வி - ம்.) "கருதும்" என்றமையால் தலைமைபெறவேண்டுமென்ற விருப்பம மனத்தகத்ததாம். "நிலைமையால்" என்றமையால் அஃதிலார் போன்று புறத்தே ஒழுகுதலை. அது,

'.........கூடுகளிற் றெருத்தினிட்ட

வண்ணப்பூந் தவிசுதன்னை ஞமலிமேல் இட்டதொக்கும்

கண்ணகன் ஞாலங் காத்தல்'

எனக் கட்டியங்காரன் கூறுவது போல்வது.

"நேர் செய்திருத்தல்" என்பது சச்சந்தன் கட்டியங்காரன் உள்ளமோராது புறநிலையால் அரசளித்து இன்பத்துள் ஆழ்ந்திருந்தமை போல்வது. பாம்போ டுடனுறைவார் உயிரை இழத்தல் உறுதியாமாறுபோல வஞ்சக நெஞ்சமுடையாரைத் தலைமை செய்தாரும் அரசினை இழத்தல் உறுதியாம். மனத்தால் நினைத்து வாழ்ந்தார் அது பற்றுக்கோடாக அரசியலைப் பறறுதல் உறுதியாம். இதுவன்றி உயிருக்கும் தீங்கிழைப்பர் என்பதாம்.

"ஓரறையுள் பாம்போ டுடனுறைந் தற்று" என்பது பழமொழி. (கஉ)

254. **கூற்றம் உயிர்கொள்ளும் போழ்து குறிப்பறிந்து**
மாற்றம் உடையாரை ஆராயாது—ஆற்றவும்
முல்லை புரையும் முறுவலாய்! செய்வதென்
வல்லை அரசாட் கொளின்.

(சொ - ள்.) முல்லைபுரையும் முறுவலாய் - முல்லைமலரை ஒத்த புன்முறுவலை உடையாய்!, கூற்றம் உயிர் கொள்ளும் போழ்து - இயமன் உயிரினைக் கொள்ளுங்காலத்தில், குறிப்பு - அவர்தம் குறிப்பினையும், உடையாரை-தன்னால் உயிர்கொளப்

படுதலுடையார் கூறும், மாற்றம் - மாற்றத்தினையும், அறிந்து ஆராயாது – ஆராய்ந்து அறிவதில்லை; (அதுபோல), அரசு – அரசன், ஆற்றவும் வல்லை ஆட்கொளின் - குடிகளை மிகவும் விரைந்து துன்புறுத்தி அடிமை கொள்ளின், செய்வது என் – செய்வது என்ன இருக்கின்றது?

(க - து.) குடிகளை முறையின்றித் துன்புறுத்தி அடிமை கொள்ளும் அரசனை கூற்றுவனை ஒப்பான்.

(வி - ம்.) முல்லை: ஆகுபெயர்; குறிப்பினையும். மாற்றத்தினையும் ஆராய்தலில்லை எனக. மாற்றம் – மறுமொழி. மறு என்ற முதனிலையடியாக எதிருரைத்தலுக்கு வழங்கிய மரபுச சொல். இறக்கும் நிலையிலுள்ளார் தமமுன் ஒருவர் நின்று விளவு வார் போன்று நினைத்துத் தாம் விடையிறுததலின் மாறறம் என்றார். அன்றி நினைவு தடுமாறி மாறி உரைக்கும் உரையெனினு மமையும். அரசன முறையின்றித் துன்புறுததுவனுயின் குடிகள என்ன கூறினும் அதனைக் கேளான், கூற்றுவன் கேளாதது போல ''குறிப்பு அறிவதிலலை'' என்றது கூற்றுவன் காலக்கடவு ளாதலின் அவர்காலம் முடிவுறுஞான்று அவருயிரைக் கொள்ளுவ தல்லது அவருள்ளக் குறிப்பினை அறிவதிலன். கொடுங்கோல் மன்னன் குடிகள் என்ன கூறினுலும் கேளாது யமனைப்போன்று துன்புறுததுவன் என்பதாம்.

''செய்வது என் வல்லை அரசு ஆட்கொளின்'' என்பது பழமொழி. (கச)

255. உடைப்பெருஞ் செல்வத் துயர்ந்த பெருமை
அடக்கமில் உள்ளத்தனுகி—நடக்கையின்
ஒள்ளியன் அல்லான்மேல் வைத்தல், குரங்கின்கைக்
கொள்ளி கொடுத்து விடல்.

(சொ - ள்) உடை பெருஞ் செல்வத்து – உடைமையாகிய மிக்க செல்வத்தினை உடைய, உயர்நத பெருமை - உயர்ந்த பெருமை தராதக்க முதன்மையை, அடக்கம் இல் உள்ளத்தன் ஆகி – அடக்கமில்லாத உள்ளமுடையனுகி, நடககையின் ஒள்ளியன் அல்லான்மேல் - ஒழுககததினும் தூய்மையுடையவன் அல்லாதவனிடத்து, வைததல் - அரசன் கொடுத்தல், குரஙகின் கை கொள்ளி கொடுததுவிடல் – குரஙகினது கையில் கொள்ளியைக் கொடுத்துவிடுதலை ஒக்கும்.

(க - து.) அரசன் அற்பர்களுக்கு முதன்மையை அளிப்பது தீமையை அளிக்கும்.

(வி - ம்.) உடைமை கடைக்குறையாயிற்று. "ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்" என்றலின், "நடக்கையினும்" என்னும் சிறப்பும்மை. விகாரத்தாற் றொக்கது. "உடைப்பெருஞ் செல்வத்து உயர்ந்த பெருமை" என்றலின், இது இவ்வதிகாரத்ததாயிற்று. முதன்மை சிறந்ததாயினும் அதனையுடையானது இயல்பு பற்றிக் கொள்ளிக்கு ஒப்பாயிற்று, அடக்கம், தூய்மை முதலியன இன்மையின் அதனை உடையான் குரங்கிற் கொப்பாயினன். இதனால் தனக்கும் பிறர்க்கும் மிக்க தீங்கு விளையும் என்பதாம்.

"குரங்கின் கைக் கொள்ளி கொடுத்துவிடல்" என்பது பழமொழி. (கூ)

256. எல்லையொன்று இன்றியே இன்னாசெய் தாரையும்
ஒல்லை வெகுளார் உலகாள் தும் என்பவர்
சொல்லின் வளாஅய்த்தம் தாள்நிழல் கொள்பவே
கொல்லையுள் கூழ்மரமே போன்று.

(சொ - ள்.) உலகு ஆள்தும் என்பவர் - உலகினை ஆளக்கடவேம் எனக் கருதும் அரசர்கள், எல்லை ஒன்று இன்றி - வரையறையென்ப தொன்று இல்லாமல், இன்னா செய்தாரையும் - தீமை செய்தவர்களையும், ஒல்லை வெகுளார் - விரைந்து சினத்திலர்; கொல்லையுள் கூழமரமே போன்று - மனைப்படப்பையின்கண் ஒருவன் தனக்கு உணவாகப் பயன்படுமாறு வைத்து வளர்க்கப்பெறும் மரமே போல, சொல்லின் வளாய் - சொற்களால் வளைத்து, தம்தாள் நிழல்கீழ் கொள்ப - தமது அடிநிழலின்கீழ் இருக்கச்செய்து பாதுகாத்துக்கொள்வர்.

(க - து.) பகைவரையும் நட்பாகக் கொண்டு ஒழுகுதலே அரசனது ஆக்கத்திற்கு ஏதுவாம்.

(வி-ம்) "உலகாள்தும்" என்பவர் என்றார், "பகை நட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன், தகைமைக்கண் தங்கிற் றுலகு" என்றலின். தனக்குணவாகப் பயன்படுமாறு ஒருவன் தனது கொல்லையுள் வைத்த மரத்தைக் காத்தல் போல, அரசனும் பகையினைத் தன் தாள் நிழற்கீழ் கொண்டு பாதுகாவல் செய்வான் என்பதாம். பகையேற்பட்டுழி இவர்களும் அவரோடு சேர்ந்து போரிழைப்பாராதலின், அங்ஙனஞ் சேராதவாறு தன்னோடு கூட்டவே பகையினை வென்று உலகினை ஆளலாம் என்பதாம.

"கொல்லையுள் கூழ்மரமே போன்று" என்பது பழமொழி. (கக)

257. பொலந்தார் இராமன் துணையாகத் தான்போந்து
இலங்கைக் கிழவற்(கு) இளையான்—இலங்கைக்கே
போந்(து) இறை யாயதூஉம் பெற்றான் பெரியாரைச்
சார்ந்து கெழீஇயிலார் இல்.

(சொ - ள்.) இலங்கைக் கிழவற்கு இளையான் - இலங்கை யரசனுக்கு இளவலாகிய வீடணன், பொலம் தார் இராமன் துணையாக - பொன்மயமான மாலையினையுடைய இராமனுக்குத் துணையாக, தான் போந்து - தான் சென்று (அவனது சார்பைப் பெற்று), இலங்கைக்கே போந்து இறையாயதும் பெற்றான் - இலங்கைக்கே தலைவனாய அரசபதவியை அடைந்தான், (ஆதலால்) பெரியாரைச் சார்ந்து - பெரியோர்களைச் சார்பாகப் பெற்று, கெழீஇ இலார் இல் - (அங்ஙனம் சார்பாகப் பெற்ற தன்மையால்) பயன் அடையாதார் இல்லை.

(க - து.) பெரியோரைச் சார்ந்தொழுகுவார் பயன்பெறுவர் என்பதாம்.

(வி - ம்.) அரசன் பெரியோர்களுடைய சார்புகொண்டு ஒழுகின் எல்லா நலங்களையும் எய்தலாமென்பார், வீடணன் இராமன் சார்பைப் பெற்று அரசியலடைந்தமையைக் கூறினார்.

"பெரியாரைச் சார்ந்து கெழீஇயிலார் இல்" என்பது பழமொழி. (௧௭)

26. அமைச்சர்

258. கல்வி யகலமும் கட்டுரை வாய்பாடும்
கொல்சின வேந்தன் அவைகாட்டும்—மல்கி
தலைப்பாய் இழிதரு தண்புனல் நீத்தம்
மலைப்பெயல் காட்டுந் துணை

(சொ - ள்.) தலை மல்கி பாய் இழிதரு தண்புனல் நீத்தம் - மலையிடம் நிறைந்து பாய்ந்து இழிகின்ற குளிர்ந்த புனலின் பெருக்கம், மலைபெயல் காட்டும் துணை - மலையிடத்துப் பெய்த மழையது அளவை அறிவிக்குமாறுபோல, கொல் சின வேந்தன் - பகைவரைக் கொல்லுகின்ற சினத்தையுடைய அரசனது, கல்வி அகலமும் கட்டுரை வாய்பாடும் - கல்வியது பெருக்கத்தையும் நீதி கூறும் முறையையும், அவை காட்டும் - அவனது அவையே அறிவித்து நிற்கும்.

(க - து.) அரசனது கல்விப்பெருக்கத்தையும், நீதிகூறும் முறையையும் அவனது அவை காட்டிநிற்கும்.

(வி - ம்.) கட்டுரை என்பது, அரசன் வேண்டிய ஏதுக்களை எடுத்துக்கூறி அவற்றின் முடிவாகிய நீதி கூறலின், நீதி என்னும் பொருளதாயிற்று. தான் முடிந்த முடிபாக நினைத்த பொருளை, அதற்குப் போதிய ஏதுக்களை மிகுதியாக எடுத்துக்கூறி முடிவு செய்தலையும் கட்டுரை என்ப. இது வியாசம் என்பதை ஒத்தது. இஃது ஒரு பொருளை வியாஜ்ஜியமாகக்கொண்டு கட்டுரைப்பதென்பதாம். "அவை காட்டும்" என்றது அவையிலுள்ள அமைச்சர்கள் அறிவிப்பா என்பதாம். அமைச்சர்களுடைய தன்மை கண்டே அரசன் தன்மையை அறியலாம்; அரசனது தன்மையை அறிவதற்கு அவனது அவை ஏதுவாயிற்று. துணை என்றது அளவை. "இனைத்துணைத் தென்பதொன் றில்லை" என்றதுங் காண்க.

"இழிதரு தண்புனல் நீத்தம் மலைப்பெயல் காட்டுந் துணை" என்பது பழமொழி. (க)

259. செயிர்அறு செங்கோல் சினவேந்தன் தீமை
பயிர்அறு பக்கத்தார் கொள்வர்—துகிர்புரையும்
செவ்வாய் முறுவல்நற் சின்மொழியாய்! செய்நாளை
ஒவ்வாத பாவையோ இல்.

(சொ - ள்.) துகிர் புரையும் செவ்வாய் முறுவல் நல் சில் மொழியாய் - பவளத்தை ஒக்கும் சிவந்த வாயினையும் புன்முறுவலையும் இனிய சிலவாகிய மொழியினையும் உடையாய்!, செயிர் அறு செங்கோல் சின வேந்தன் தீமை - குற்றமற்ற செங்கோலையும் சினத்தையும் உடைய அரசனது தீமையை, பயிர் அறு பக்கத்தார் கொள்வர் - குற்றமற்ற பக்கத்திலுள்ள அமைச்சர்களே முன்னின்று ஏற்றுக்கொள்ளக் கடவர், செய்தானை - செய்தவனை, ஒவ்வாத பாவையோ இல் - ஒத்திராத சித்திரமோ உளவாதல் இன்மையான்.

(க - து.) அரசன் செய்யும் தீமை அமைச்சர்களைச் சாரும் என்பதாயிற்று.

(வி - ம்.) "பக்கத்தார்" என்றார், ஆசிரியரும் "உழையிருந்தான்" என்றலின் ஒவ்வாத என்றது கருத்திற்கு ஒவ்வாமையாம். சித்திரிப்பானது கருத்திற்கொவ்வாத சித்திரம் உளவாதல் இல்லை. அமைச்சர்களது கருத்திற்கொவ்வாத செயல்களும்

அரசன் மாட்டு உளவாதல் இல்லை. அரசனது தீயசெயலை அவர் முன்னின்று இடைவிலக்காதொழியின் அஃது அவரது கருத்திற்கு இசைந்ததாகக் கொள்ளப்படும். உறுதிகூறலாகிய தங் கடமையினின்றும் நீங்கியதால் இது நிகழ்ந்தமையின் இது அமைச்சர்கள் கொள்ளக்கடவதே யென்பதாம். உறுதி கூறாக்கால் அவனது இறுதி யெய்தற் குற்றத்தை உலகந் தன் மேலேற்று மென்பார், "கூறல் கட" னென்றார் என்று பிறர் விரித்துரைத்ததுங் காண்க. பாவையது நன்மை தீமைக்குச் செய்வோன் காரணமாதல்போல, அரசனது நன்மை தீமைக்கும், அமைச்சர்கள் காரணமென்பதாம்.

"செய்தானை ஒவ்வாத பாவையோ இல்" என்பது பழமொழி. (உ)

260. கற்றார் பலரைத்தன் கண்ணாக இல்லாதான்
உற்றுஇடர்ப் பட்ட பொழுதின்கண் தேற்றம்
மரையா துணைபயிரும் மாமலை நாட!
சுரையாழ் நரம்பறுத் தற்று.

(சொ - ள்.) மரையா துணைபயிரும் மாமலை நாட - பெண் மான்கள் தந் துணைகளை அழைக்கும் சிறந்த மலைநாடனே!, கற்றார் பலரை தன் கண்ணாக இல்லாதான் - நீதிநூல்களைக் கற்ற அமைச்சர்களைத் தனக்குக் கண்ணாகப் பெற்றிராத அரசன், உற்று - யாதாயினும் ஒரு துன்பம் வந்துற்று, இடர்பட்ட பொழுதின் கண் - அத்துன்பத்தில் தான அகப்பட்டு நின்றபொழுது, தேற்றம் - தானே ஒருவகையாகத் துணிதல், சுரையாழ் நரம்பு அறுத்தற்று - ஒரு நரம்பினையுடைய சுரைபொருந்திய யாழின் அந்த ஒரு நரமபையும் அறுத்தாற் போலும்.

(க - து.) அமைச்சர்களின்றித் தானே ஒரு காரியத்தை அரசன் துணிந்தால், அத்துணிவால் பயனுண்டாதல் இல்லை.

(வி - ம்.) ஒரு நரம்புடைய யாழின் அவ்வொரு நரம்பையும் அறுத்துவிட்டால் அவ்யாழ் பயன்படாதொழிதல்போல, அமைச்சர்களின்றி அரசன் துணியும் துணிவும் பயனற்றொழியு மென்பதாம். யாழ்வகையுள் ஒன்று, ஒற்றை நரம்புடையது. பழைய பொழிப்புரை செங்கோட்டியாழ் என்று கூறுகின்றது. அடியார்க்கு நல்லார் உரை ஏழு நரம்புகளையுடையது செங்கோட்டியாழ் என்று கூறுகின்றது. ஆதலின் பழைய பொழிப்புரை கூறியது ஆராயத்தக்கது. சுரை என்றது செருகும் சுரையணியாம். "தேற்றம்" என்றார் ஆராய்ந்து முடிவு கூறுந்தன்மை

அரசரிடத்தும் உளவாகலான். "தானே சூழ வல்லனாயினும் அளவிறந்த தொழில்களால் ஆகுலம் எய்தும் அரசன் பாரம் அதுவே தொழிலாய அமைச்சரானல்லது நடவாமைபற்றி அவரைக் கண்ணாகக் கூறினார்" என்று பிறரும் கூறியது காண்க.

"சுரையாழ் நரம்பறுத் தற்று" என்பது பழமொழி. (௯)

261. நல்லவும் தீயவும் நாடிப் பிறருரைக்கும்
நல்ல பிறவும் உணர்வாரைக் கட்டுரையின்
வல்லிதின் நாடி வலிப்பதே புல்லத்தைப்
புல்லம் புறம்புல்லு மாறு.

(சொ - ள்.) நல்லவும் தீயவும் நாடி - நல்லனவற்றையும் தீயனவற்றையும் நூல்களால் ஆராய்ந்து அறிந்து, பிறருரைக்கும் கட்டுரையின் - மாறு கொண்ட இருவர் கூறும் கட்டுரையொன்றானே, நல்ல பிறவும் உணர்வாரை - நீதி அநீதி என்பனவற்றை அறியும் அமைச்சர்களை, வல்லிதின் நாடி வலிப்பதே - ஆழ்ந்து ஆராய்ந்து தம்மோடு கொண்டு அரசன் வாழ்தலே, புல்லம் புல்லத்தை புறம் புல்லுமாறு - ஆனேறு ஆனேற்றோடு இணைந்து அன்பு பூண்டு ஒழுகுமாறு போலும்.

(க - து.) 'அரசன், அறிவான்மிக்க அமைச்சர்களோடுகூடி யொழுகின் அரச காரியங்கள் இனிது நடைபெறும் என்பதாம்.

(வி - ம்.) வலிமைபெற ஆராய்தலாவது - ஆழ்ந்து ஆராய்தல். ஒரு காளை மற்றொரு காளையோடு மாறுபாடின்றி இணைந்து ஒழுகின் பொலிவு பெற்றிருத்தலோடு அவைகளால் முடியும் காரியங்கள் இனிது விரைந்து முடிதல்போல, அரசன் அறிவால் தன்னையொத்த அமைச்சர்களோடு இணைந்து ஒழுகின் அரச காரியங்கள் இனிது விரைந்து முடியுமென்பதாம். புல்லுதல் - மனத்தாற் புல்லுதல். காளைகள் மாறுபட்டு ஒழுகின் காரியம் நடத்தலில்லை என்பது அறிந்தது ஒன்று. காளைகள் போல - உலக இயலாகிய வண்டியைச் செலுத்துவதற்கு, அரசன் - அமைச்சர்கள் என்போர்கள் இன்றியமையாதவர்கள் என்பதாம்.

"புல்லத்தைப் புல்லம் புறம்புல்லு மாறு" என்பது பழமொழி. (௰)

262. மனத்தினும் வாயினும் மெய்யினும் செய்கை
அனைத்தினும் ஆன்றவிந்தா ராகி—நினைத்திருந்து
ஒன்றும் பரியலராய் ஓம்புவார் இல்லெனில்
சென்று படுமாம் உயிர்.

(சொ - ள்.) செய்கை அனைத்தினும்-செய்கின்ற செய்கையின்கண் எல்லாம், மனத்தினும் வாயினும் மெய்யினும் - மனத்தாலும் வாயாலும் மெய்யாலும், ஆன்று அவிந்தாராகி-மிகவும் அடங்கியவர்களாகி, நினைத்து இருந்து - ஆராய்ந்து, ஒன்றும் பரியலராய் - ஒன்றையும் விரும்பாதவராய், ஓம்புவார் - உலகத்தைக் காவல் செய்கின்ற அமைச்சர்கள், இல்லெனில்-இலராயின், உயிர் சென்று படும் - உயிர்கள் இறந்தொழிதல் திண்ணம்.

(க - து) நல்ல அமைச்சர்களே உயிர்கள் வாழ்ந்திருத்தற்குக் காரணமாவர்.

(வி - ம்.) அமைச்சர்மாட்டு நிகழ்தல் சிறிதாயினும் அதனால் உலகிற்கு விளைதல் பெரிது ஆதலின், மனம், மொழி, மெய்களால் விரைந்து செய்தலின்றி அடக்கி ஆராய்ந்து செய்வர் என்பது. அன்றி மூன்றினையும் முற்ற அவித்த முனிவர்களைப் போன்று அடக்கி என்றலுமாம். செய்கை அனைத்தினும் என்றதற்கு செய்கையான் வேறு வேறு ஆகத் தோன்றும பொருள்களின் உண்மையை அறிந்து மூன்றினையும் அடக்கினார் என்பதாகக் கொள்க. "மாவிசும்பு வழங்கும் பெரியோர் போல" என்றார் பிறரும். செயல்களிற பற்றின்றி இருத்தல் அமைசசர்க்குக் கொள்க.

"ஒன்றும் பரியலராய் ஓம்புவார் இல்லெனில்
சென்று படுமாம் உயிர்" என்பது பழமொழி. (௩)

263. செயல்வேண்டா நல்லன செய்விக்கும்; தீய
செயல்வேண்டி நிற்பின் விலக்கும்; இகல்வேந்தன்
தன்னை நலிந்து தனக்குறுதி கூறலால்
முன்னின்னா மூத்தார்வாய்ச் சொல்.

(சொ - ள்.) மூத்தார் வாய்சசொல் - அறிவான் மூத்த அமைசசர்கள் கூறும் சொற்கள், செயல் வேண்டா நல்லன செய்விக்கும் - செய்யமுடியாத நல்லனவற்றைச செய்விக்கும்; தீய செயல் வேண்டி நிற்பின் - அரசன் தீயசெயல்களைச் செய்ய முனைந்து நிற்பின், விலக்கும் - இடைநின்று தடுத்தலைச செய்யும், இகல் வேந்தன் தன்னை - மாறுபாடுடைய அரசனை, நலிந்து - வலியுறுத்தி, தனக்கு உறுதி கூறலால் - அவன்றனக்கு உறுதியாயினவற்றைக் கூறுதலால். முன் இன்னா - முன்னே துன்பந் தருவதாக இருக்கும் (பின்னே மிக்க இன்பத்தை அளிக்கும்)

(க - து.) அமைச்சர் கூறும் சொற்கள் நல்லன செய்விக்கும் தீயன விலக்கும் என்பதாம்.

(வி - ம்.) அரசனை நலிதலாவது - அவன் தனித்திருந்த விடத்து அது செய்தல் தகாது என்று பன்முறையும் எடுத்துக் கூறுதல். அமைச்சர்கள் கூறும்பொழுது சிறிதுகாலம் இன்னா தாய் இருப்பினும் பின்னர் நெடுங்காலம் அடையக்கூடிய இன்பத்தை அது அளித்தலின் அரசர்கள் அமைச்சர் சொற்கேட்க என்பதாம்.

''முன் இன்னா மூத்தார்வாய்ச் சொல்'' என்பது பழமொழி. (௬)

264. செறிவுடைத் தார்வேந்தன் செவ்வியல பெற்றால்
அறிவுடையார் அவ்வியமும் செய்வர்—வறிதுரைத்துப்
பிள்ளை களைமருட்டும் தாயர்போல் அம்புலிமேல்
ஒள்ளியகாட் டாளர்க்(கு) அரிது.

(சொ - ள்.) செறிவு உடை தார் வேந்தன் - நெருங்கிய மாலையை உடைய அரசன், செவ்வி யல பெற்றால் - தான் உறுதி கூறவும் கேளாது நல்லதல்லாதவற்றைச் செய்யப்பெறுவனாயின், அறிவு உடையார் – அறிவுடைய அமைச்சர்கள், அம்புலிமேல்- சந்திரனிடத்து, வறிது உரைத்து-சிலவற்றையிட்டுக்கூறி, பிள்ளைகளை மருட்டும் தாயர் போல் - குழந்தைகளை மிரட்டி உண்பிக்கின்ற தாய்மார்போல, அவ்வியமும் செய்வா - சூழ்ச்சிமுதலியன செய்தலோடு பொய் உரைத்து வஞ்சித்தாயினும் அவனை அச் செயலினின்றும் மீட்பர், ஒள்ளிய காட்டு - உண்மையாய ஒள்ளிய எடுத்துக்காட்டுகளை வற்புறுத்திக் கூறித் திருத்துதல், ஆளர்க்கு அரிது – அவனால் ஆளப்படுவாரக்கு அரிதாகலான்.

(க – து.) அமைச்சர்கள் பொய் உரைத்தாயினும் அரசனை நல்வழிப்படுத்துவர்.

(வி – ம்.) அவ்வியம் செய்தலாவது, இச்செயலிற் புகுந்தால் இன்னது விளையுமென்று பொய்கூறி அரசனைத் திருத்துதல். அவ்வியம் முதலியன கடியத்தக்கன வாயினும் அரசனை நெறி நிறுத்துதற்பொருட்டுப் பயன் படுத்தப்படுகின்றன வாதலின் அமையும் என்பாரா அவ்வியமும் செய்வர் என்றார். அரிது என்பது அம்புலியின் இன்மைக் குணங்களை இல்லாதன கூறி உண்பித்தல் போல, பொய் முதலிய கூறி அரசனை நல்வழிப்படுத்துவர் என்பதாம். ''ஒள்ளிய காட்டு ஆளர்க்கு அரிது'' என்றது அரசன் ஆணைக்குக் கீழ்ப்பட்டு நடப்போர் இது செய்தல் தகாதெனை வற்புறுத்திக் கூறமுடியாது என்பது. உறுதிகூறித்திருத்தல் அமைச்சர் கடமையாதலின், இங்ஙனம் கூற இயலாதாயினும் பொய் முதலியன கூறியாவது திருத்துவர் என்பதாம்.

''ஒள்ளிய காட்டு ஆளர்க்கு அரிது'' என்பது பழமொழி. (எ)

265. தீயன வல்ல செயினும் திறல்வேந்தன்
காய்வன சிந்தியார் கற்றறிந்தார்—பாயும்
புலிமுன்னம் புல்வாய்க்குப் போக்கில் அதுவே
வளிமுன்னர் வைப்பாரம் இல்.

(சொ - ள்.) *பாயும் புலி முன்னர் - பாய்ந்து வருகின்ற புலியின் முன்னுள்ள, புல்வாய்க்கு போக்கு இல்-மானுக்குத தப்பிச சென்றுபுகும் புகலிடம் வேறு இல்லை, அதுவே - அதுபோலவே, வளி முன்னர் - சூறவளிக் காற்றின் முன்னர், வைப்பாரம் இல் வைககோற் பாரம் நிலைத்து நிற்குமாறில்லை (ஆகையால்), திறல் வேந்தன் தீயன அல்ல செயினும் - வெற்றியையுடைய அரசன் தீமை தருவனவாகிய நல்லது அல்லாத செயல்களைச் செய்வானாயினும், கற்று அறிந்தார்-நீதி நூல்களைக் கற்று உலக இயலையும் அறிந்த அமைச்சர்கள், காய்வன சிந்தியார்-அரசன் சினத்தற்குரியனவற்றை மனததினும் நினைத்தலிலர்.*

(க - து.) *அரசன் தீய செயல்களைச செயினும் அமைச்சர்கள் சினததலிலர்.*

(வி - ம்.) *"சிந்தியார்" என்றார் "யாண்டுச் சென்று யாண்டுமுளராகார்" என வருந் தீமையை நோக்கி மனத்திலும் நினைத்தலிலர் என்பது கருதி அல்ல என்பதற்கு நல்லது அல்லாதது எனப் பொருள் கொள்க. கற்றறிந்தாராதலின் அரசன் சினங் கொள்ளுமாறு வற்புறுத்தி எதையும் கூறுவதிலர். சூழ்ச்சியோ அன்றி மற்றெம்முறையோ கொண்டு அரசனைத் திருத்துவதன்றி இது செய்யார் என்பதற்குப் பழமொழிகள் இரண்டும் ஏதுவாய் நின்றன.*

"புலி முன்னர் புல்வாய்க்குப் போக்கு இல்"
"வளி முன்னர் வைப்பாரம் இல்" என்பன பழமொழிகள்.(அ)

27. மன்னரைச் சேர்ந்தொழுகல்

266. கொடித்திண்டேர் மன்னரால் கூட்டுண்டு வாழ்வார்
எடுத்துமேற் கொண்டவர் ஏய வினையை
மடித் தொழிதல் என்னுண்டாம் மாணிழாய்! கள்ளைக்
குடித்துக் குழைவாரோ இல்.

(சொ - ள்.) *மாண் இழாய் - மாட்சிமைப்பட்ட அணிகலன்களை உடையாய்!, கள்ளைக்குடித்து - மயக்கந்தரும் கள்ளினைக்*

குடித்து, குழைவார் இல் - சோம்பி அடங்கியிருப்பார் ஒருவரு மிலர் (ஆதலால்). கொடித் திண் தேர் மன்னர் - கொடி அசை கின்ற வலிய தேரினை உடைய அரசர்களது, கூட்டு உண்டு வாழ் வார்-பொருளை உண்டு உயிர வாழ்பவர்கள், எடுத்து மேற் கொண்டு - ஒரு செயலை மனத்தின்கண் நினைத்தலை மேற் கொண்டு, அவர் ஏயவினையை - அவ்வரசர் ஏவிய ஆணையை, மடித்து ஒழிதல் - சோம்பல்கொண்டு விரைந்து செய்யாதொழித லால், என உண்டாம் - என்ன பயன் உண்டாம்?

(க - து.) அரசன் ஆணையை உடனேயே அவன்கீழ் வாழ் வார் செய்தல் வேண்டும.

(வி - ம்.) ஆலும், ஓவும் அசைநிலைகள். கூட்டு என்றது அரசனால் சுங்கம் முதலிய பல வழியானும் கடைக்கூட்டப்பட்ட பொருள் என்பதாம். ஏவிய என்பது ஏய என்றாயது இடைக் குறையாம். கள்ளைக் குடித்தார் அடக்கமாக ஒரு இடத்தில் சோம்பி இருத்தல் இலர். அதுபோல, அரசனது பொருளைக கொண்டு உண்டு வாழ்பவர்கள அவன் ஏவிய தொன்றனைச செய்யாது சோம்பியிருத்தலும் இல்லையாதல் வேண்டும். "மடித் தொழிதல் என்னுண்டாம்" என்றது,விரைந்து கருமத்தை முடிப் பின் அதனால் வரும் பெரும் பயன் நோக்கி. கள்ளைக் குடித்தவ னுக்கு ஐம்பொறியும் சோம்பலின்றி விரைந்து நின்று செய்தல் இயற்கையாதல் போல, அரசனது பொருளை உண்பவனும் அவ னது கருமத்தை விரைந்து நின்று முடித்தல் வேண்டும். அரச னால் ஏவப்பட்ட செயல் முடிவுறாது எஞ்ஞான்றும் செல்லாதாக லின், "மடித்து ஒழிதல்" என்றதற்குச சோம்பல் கொண்டு விரைந்து செய்யா தொழிதல் என்று பொருள் கூறப்பட்டது.

"கள்ளைக் குடித்துக் குழைவாரோ இல்" என்பது பழ மொழி. (க)

267. வெற்றிவேல் வேந்தன் வியங்கொண்டால் யாமொன்றும்
பெறறிலே மென்பது பேதைமையே—மற்றதனை
எவ்வ மிலராகிச் செய்க அதுவன்றே
செய்கென்றான் உண்கென்னு மாறு.

(சொ - ள்.) வெற்றிவேல் வேந்தன் - வெற்றி பொருந்திய வேலேந்திய அரசன், வியம் கொண்டால் - ஏவல் கொண்டால், யாம் ஒன்றும் பெற்றிலேம் - யாம் செயத்தகும் ஆற்றல் ஒரு சிறிதும் அடைந்தோமில்லையே, என்பது பேதைமையே-என்று கூறுவது அறியாமையேயாம், அதனை எவ்வம் இலராகி செய்க -

அவர் ஏவிய செயலைத் துன்புறுதலின்றிச் செய்யத் தொடங்குக, அது செய்க என்றான் உண்க என்னும் அது அன்றோ - அச் செயல் செய்க என்று கூறியவன் உண்க என்று கூறியதை ஒக்கு மன்றோ?

(க - து.) அரசன் ஏவியதைத் தட்டாது செய்யத் தொடங்குக.

(வி - ம்.) முடியாததை முடியாது என்று கூறுவதால் வரும் குற்றம் இல்லையாயினும், அரசன் ஏவல் கொள்ளலின் அருமை நோக்கியாயினும் மேற்கொள்ளாதொழிதலின் பேதைமையே என்று ஏகாரங் கொடுத்துத தேற்றினார். "எவ்வமிலராகிச் செய்க" என்று எவ்வத்தைத் தன்னொடு படுத்துக் கூறியது அரசன் ஆணையால் செயல் எவ்வமின்றி முடியும், நீ துன்புறு தொழிக என்பதாம். வேலையைச் செய்யுமாறு தூண்டியவன் உண்க என்று சொல்லுதல்போல, ஏவிய அரசன் செயல் முடிதற் கேற்ப உதவி செய்து முடிப்பான் என்பதாம். ஆதலின், நீ வருந் தாது ஆளாக இருந்து செய்யத் தொடங்குக என்பதாம்.

"செய்கென்றான் உண்கென்னு மாறு" என்பது பழ மொழி. (உ)

268. எமரிது செய்க எமக்கென்று வேந்தன்
தமரைத் தலைவைத்த காலைத்—தமரவற்கு
வேலின்வா யாயினும் வீழார் மறுத்துரைப்பின்
ஆலென்னிற் பூலென்னு மாறு.

(சொ - ள்.) எமர் எமக்கு இது செய்க என்று-எம்மவராதலான் எமக்கு இச்செயலை முடித்துத தருக என்று, வேந்தன் - அரசன், தமரை தலைவைதத காலை - தன்கீழ் வாழ்வாரை ஒரு செயல் செய்யும்பொருட்டு நம்பி நியமித்த இடத்து, தமர்-அவன் கீழ் வாழ்வார், அவற்கு வேலின் வாயாயினும் வீழார் - அவர் பொருட்டாக வேலிடத்தாயினும் வீழாதவர்களாகி, மறுத்துரைப் பின் - இயலாது என்று மறுத்துக் கூறலின் (அஃது), ஆல் என்னில் - அதோ தோன்றுவது (பெரிய) ஆலமரமென்று ஒருவன் கூறலுறின், பூல் என்னும் ஆறு - (அதற்கு மாறாக) மற்றொருவன் அது சிறிய பூலாச செடியே என்று கூறுதலை ஒக்கும்.

(க - து.) அரசன் ஏவலை மேற்கொண்டார் உயிர் கொடுத் தாயினும் அதனை முடித்தல் வேண்டும்.

(வி - ம்.) எமர், தமர் என்பன உறவினர் எனப் பொருள் படுதலின்றி, எம்மவர், தம்மவர் எனப் பொருள்பட்டு நின்றன. [இவை கிளை நுதற் பெயராதற்கு முன் நின்ற முதற்படிகளாம்.] "வேலின் வா யாயினும்" என்றது வீழ்தலின் அருமை நோக்கி உயர்வு சிறப்பாய் நின்றது. இது செய்தல் செஞ்சோற்றுக்கடன் கழித்தவாறும்.

"தலைவைத்த என்றது உறுதியாக நம்பித் தலைமை கொடுத்த லாதலான், அதற்கேற்பப் பெரிய ஆல் என்றும் சிறிய பூல்என்றும் கொள்ளப்பட்டன. தோன்றுகின்ற வடிவத்தைப் பெரியதுஎன்று கருதி ஒருவன் ஆலமரம் என்றுரைக, மற்றொருவன் அதனையே சிறிது என்று கருதிப் பூலாச செடி யென்று கூறினான். இது போல ஆகும், உறுதியாக நம்பித் தலைமை நல்கிய ஒருவனுக்கு அதற்கு மாறாக இல்லை யென்று கூறுதல்.

"ஆலென்னிற் பூலென்னு மாறு" என்பது பழமொழி. (௩)

269. விடலமை செய்து வெருண்டகன்று நில்லாது
உடலரு மன்னர் உவப்ப வொழுகின்
மடலணி பெண்ணை மலிதிரைச் சேர்ப்ப.
கடல்படா வெல்லாம் படும்.

(சொ - ள்.) மடல் அணி பெண்ணை மலி திரை சேர்ப்ப — மடல்களையுடைய பனைமரங்கள் மலிந்த கடல் நாடனே!, உடலரு மன்னர் - பிறரால் வெல்லுதற்கரிய வலிமையுடைய அரசர்கள், விடல் அமை செய்தும் - தம்மைவிட்டு நீங்குமாறு நெருங்கி நின்று ஆகாதன செய்தும், வெருண்டு அகன்று நில்லாதும்—அஞ்சி அகன்று நில்லாதும், உவப்ப ஒழுகின் - அவர் மனமகிழ ஒழுகுவ ராயின், கடல்படா எல்லாம் படும் — கடலில் உண்டாகாத வள மெல்லாம் அவர்க்கு உளவாம்.

(க - து) மன்னரைச சேர்ந்தொழுகுவார் அகலாது அணு காது வாழக்கடவர்.

(வி - ம்.) ஈரிடத்தினும் உம்மை விகாரத்தாற் றொக்கன. விடலமை செய்து என்றது, அவர் தம்மை நீக்குமாறு குறிப்பறி யாது அணுகிச் சில கூறுதலை. இதனால் கூறுவார்க்குத் துன்பமே உண்டாம். அகன்று நில்லாது என்றது அரசருக்குப் பயந்துநீங்கி நிற்றலை. இதனால் அரசரால் வரும் பெரும் பயன் இல்லையாம். உவப்ப ஒழுகின் என்றது, அகலாது அணுகாது தீக்காய்வார் போன்று ஒழுகுக வென்பதாம். உடலரு மன்னர் என்றார், பிற

ரும் "இகல் வேந்தன்" என்றலின். அரசரால் மிக மதிக்கப்பட்டு விழுப் பயனை எய்துவார் என்பார், "கடல்படா எல்லாம் படும்" என்றார்.

"கடல்படா எல்லாம் படும்" என்பதுபழமொழி. (௪)

270. உவப்ப உடன்படுத்தற் கேய கருமம்
அவற்றவற் றாந்துணைய வாகிப் பயத்தால்
வினைமுதிரின் செய்தான்மே லேறும் பனைமுதிரின்
தாய்தாள்மேல் வீழ்ந்து விடும்.

(சொ - ள்.) பனை முதிரின் - பனையினது பழம் முற்றின், தாய் தாள்மேல் வீழ்ந்துவிடும் - தாய்ப்பனையினது தாளின் மேலேயே வீழும்; (அதுபோல), உவப்ப-அரசன் தான் உவக்கும் படி, உடன்படுதற்கு - செய்து முடித்தற்கு, ஏய கருமம்-ஏவிய செயல்கள், அவற்று அவற்று ஆம் துணைய பயத்தால் ஆகி - அவ்வச் செயல்களின் அளவாகிய பயனோடு, வினை முதிரின்- அச்செயல் முடியின், செய்தான்மேல் ஏறும - அஃது ஏவியவனை யன்றிச செய்தவனையே சேரும்.

(க - து.) அரசன் ஏவிய கருமங்கள் பயன்பட முடிந்தால் அப்புகழ் செய்தவனையே சேரும்.

(வி - ம்.) முற்றிய பனம்பழம், தாய்ப்பனையின் தாளில் வீழ்தல்போல, வினையை முடித்தலான் வரும் புகழ் செய்த வனையே அடையுமென்பதாம். சோழன் ஏவிய வினையை மேற் கொண்டு தொண்டைமான் கலிங்கம் எறிந்தானாயினும், அப்புகழ் சோழன் மேற்செல்லாது தொண்டைமான்மேல சென்றது போன்றதென்றறிக.

"பனைமுதிரின் தாய்தாள்மேல் வீழ்ந்துவிடும்" என்பது பழமொழி. (௫)

271. செருக்கெழு மன்னர் திறலுடையார் சேர்ந்தார்
ஒருத்தரை யஞ்சி உலைதலும் உண்டோ?
உருத்த சுணங்கின் ஒளியிழாய்! கூரிது
எருத்து வலியநன் கொம்பு.

(சொ - ள்.) உருத்த சுணங்கின் ஒளி யிழாய்-தோன்றா நின்ற தேமலையும் ஒளிபொருந்திய அணிகலன்களையுமுடையாய்!,

வலிய எருத்துதன் கொம்பு கூரிது - வலிமிக்க எருதினுடைய கொம்பு கூரானது; (ஆதலான்), செரு கெழு மன்னர் திறல் உடையார் - போரையுடைய அரசர்களாகிய எல்லாத்திறனு முடையாரை, சேர்ந்தார் - அடைந்தவர்கள், ஒருத்தரை அஞ்சி - பிறர் ஒருவருக்குப் பயந்து, உலைதலும் உண்டோ - மனந்தளர் தலும் உண்டோ? (இல்லை.)

(க - து.) அரசரேயன்றி அவரைச சார்ந்தோரும் பிறருக் கஞ்சார்.

(வி - ம்.) கொம்பு மொண்ணையாயினும் எருத்தின் வலிமையால் கூர்மையாதல்போல, சேர்ந்தார வலியிலராயினும் அரசரது சார்பான் யார்க்கும் அஞ்சா உரம் உடையவராவர் என்பதாம்.

"கூரிது எருத்து வலியதன் கொம்பு" என்பது பழமொழி. (க)

272. வேந்தன் மதித்துவப்பப் பட்டாரைக் கொண்டேனை
மாந்தரும் ஆங்கே மதித்துணர்வர்—ஆய்ந்த
நலமென் கதுப்பினுய் நாடின்நெய் பெய்த
கலனேநெய் பெய்து விடும்.

(சொ - ள.) ஆய்ந்த ந(ல்)லமென் கதுப்பிஞய்-ஆராய்ந்த நல்ல மெல்லிய கூந்தலை யுடையாய்!, வேந்தன் மதித்துவப்பப் பட்டாரை - அரசனல் நன்கு மதிக்கப்பட்டு அவனது மகிழ்ச்சிக்கு இடமானவரை, கொண்டு - அவன் மதிக்கின்ற தன்மை ஒன்று கொண்டே, ஏனை மாநதரும - ஏனை மககளும், ஆங்கேமதித்து உணர்வா - அவனைப்போனறே மிக மதித்து உணாவர், நெய் பெய்த கலனே நெய் பெய்துவிடும - நெய் இருந்த ஏனமே நெய் பெய்தற்கு அமையுமாறுபோல.

(க - து.) அரசனல் மதிக்கப்பட்டார் ஏனையோராலும் மதிக்கப்படுவர்.

(வி - ம்.) "கொண்டு" என்றது அவரது அருமை பெருமை அறியாராயினும், அரசன் மதிக்கின்ற தன்மை ஒன்றுகொண்டே எல்லோரும் புகழ்வர் என்பதாம். நெய்யிருந்த கலம நெய் பெய் தற்கு அமையுமாறுபோல, அரசரால் மதிக்கப்பட்டார் ஏனையோ ராலும் மதிக்கப்படுவர்.

"நெய் பெய்த கலனே நெய் பெய்துவிடும்" என்பது பழமொழி (எ)

273. ஆண்டகை மன்னரைச் சார்ந்தார்தாம் அல்லுறினும்
ஆண்டொன்று வேண்டுதும் என்பது உரையற்க
பூண்டாங்கு மார்ப ! பொருடக்கார் வேண்டாமை
வேண்டிய தெல்லாம் தரும்.

(சொ - ள்.) பூண் தாங்கும் மார்ப-அணிகலன்களை அணிந்திருக்கின்ற மார்பை உடையவனே!, ஆண்தகை மன்னரைச் சார்ந்தார் – ஆண்டகைமையை உடைய அரசர்களைச் சேர்ந்து ஒழுகுபவர்கள், தாம் அல் உறினும் - தாம் வறுமையால் மிக்க துன்பத்தை அடைந்தாலும், ஆண்டு - அவரிடத்தில், ஒன்று வேண்டுதும் என்பது - ஒன்றனை விரும்புகின்றோம் என்பதனை, உரையற்க – கூறாதொழிக, பொருள் தக்கார் - பிறரால் மிக மதிக்கப்பட்டார், வேண்டாமை - ஒரு பொருளையும் விரும்பிக் கேளாமையே, வேண்டியது எல்லாம் தரும் - அவர் விரும்பிய யாவற்றையும் தரும் ஆதலால்.

(க - து.) அரசனைச் சார்ந்தொழுகுவார் தமக்கு ஒரு பொருள் வேண்டுமென்று அரசனைக் கேளாதொழிக என்பதாம்.

(வி - ம்.) "உரையற்க" என்றது, அரசனே குறிப்பறிந்து வேண்டியன ஈவான் என்பது கருதி. அரசர் அவர் குறிப்பினை யறிந்து ஈயவேண்டுதலின், உரையற்க என்றதற்கு மனத்தால் நினையாதொழிக என்றல் பொருந்துமாறில்லையென்க. அல்லதூஉம் மனத்தால் நினைத்தலின் வரும் இழுக்கு ஒன்றில்லையாமாறறிக. அல்லுறினும் என்றது தொகுத்தல் விகாரம். வேண்டாமை என்றது ஈண்டு மொழியால் வேண்டாமையின்மேல் நின்றது.

"பொருள்தக்கார் வேண்டாமை வேண்டியதெல்லாந் தரும்" என்பது பழமொழி. (அ)

274. காவலனை ஆக வழிபட்டார் மற்றவன்
ஏவல் வினைசெய் திருந்தார்க் குதவடுத்தல்
ஆவணைய நின்றதன் கன்று முலையிருப்பத்
தாயணல் தான்சுவைத் தற்று.

(சொ - ள்.) காவலனை ஆக – அரசனைத் தனக்குத் துணையாகக் கொண்டு, வழிபட்டார் - அவனைச் சார்ந்தொழுகினோர், அவன் ஏவல் வினை செய்திருந்தார்க்கு - அவனால் ஏவப்பட்ட வேலையைச் செய்பவர்க்கு, உதவு அடுத்தல் - உதவிசெய்து அவரால் காரியம் பெறலாமென்று நினைத்தல், ஆ - பசுவினை, அணைய

நின்ற – அணைந்து நின்ற, தன்கன்று - பசுவின் கன்று, முலை யிருப்ப-தாயினது மடி யிருக்கவும், தாய் அணல் சுவைத் தற்று – தாயினது அணலைச சுவைத்தாற்போலும்.

(க - து.) அரசனைச சார்ந்தொழுகுவார் கீழாயினரிடம் கூறித தங்குறையை முடித்துக் கோடற்க என்பதாம.

(வி - ம்.) அரசனைச சார்ந்தொழுகுவார் அல்லுறினும் அவ னிடம் உரையற்க என முன்னர் ஓதலின், அவன் ஏவல்செய்வா ரிடத்தாவது கூறி முடித்துக் கோடலாமெனில், அதனால் பயன் பெறுதல் இன்று என்று மறுத்துக் கூறியது இது. வழிபட்டார் என்பது வழிப்பட்டார் என்றிருத்தல் வேண்டும்; அரசன்வழி நின்றொழுகுவார் எனப்பட்டு மன்னரைச சேர்ந்தொழுகல் அதி காரத்திற் கேற்புடைமையான். கன்று மடியினை உண்ணாது அணலை உண்டு பயன்பெறாது ஒழிதல்போல, அவரும் காரியங் கோடல் இல்லை யென்பதாம். ஆவினைய என்பது இரண்டன் தொகை.

"தாயணல் தான்சுவைத் தற்று" என்பது பழமொழி. (௪)

275. சிறப்புடை மன்னவரைச் செவ்வியின் நோக்கித்
திறத்தின் உரைப்பார்க்கொன் றாகாத தில்லை
விறற்புகழ் மன்னர்க் குயிரன்ன ரேனும்
புறத்தமைச்சின் நன்றகத்துக் கூன்.

(சொ – ள்.) விறல் புகழ் மன்னர்க்கு - மிகுந்த புகழினை யுடைய அரசர்க்கு, உயிர் அன்னர் எனும் - உயிரை ஒப்பாரே யாயினும், புறத்து அமைசசின் - புறத்தே உள்ள அமைசசர்களை விட, அகத்து கூன் நன்று – அரண்மனையிலுள்ள கூனர்க்கு செவவி வாய்த்தல் எளிது (ஆதலால்), சிறப்புடை மன்னவரை – எல்லாச சிறப்புமுடைய அரசர்களை, செவ்வியின் நோக்கி–காண் டற குரிய காலததை அறிந்துகண்டு, திறத்தின் உரைப்பார்க்கு- திறம்படக் கூறுவார்க்கு, ஆகாதது ஒன்று இல்லை – முடியாதது ஒன்றுமில்லை.

(க - து) அரசனைச் சார்ந்தொழுகுவார் அரசனுடைய குறிப்பறிந்து கூறிக் காரியங் கொள்க என்பதாம்.

(வி–ம்.) மேல் கீழோரிடத்துரைத்துக் காரியங்கொள்ளற்க என்றலின், அரசனுடைய குறிப்பறிந்து கூறி முடித்துக்கோடல் நல்லது என்றது இது. கூன் - கோயிலினுள ஏவல்செய்வார். இவர்க்குச் செவ்வி மிக வாய்க்கும்; அமைச்சர்க்குச் செவ்வி

பெறுதல் அரிதாம். அஃதறிந்து உரைப்பாரைப்பெறின் முடியாத தொன்றில்லை என்பதாம். வலிமையெனப்படும் விறல் என்பது அதனது மிகுதி உணர்த்தி நின்றது.

"புறத்தமைச்சின் நன்றகத்துக் கூன்" என்பது பழமொழி. (௯0)

276. இடுகுடைத்தேர் மன்னர் எமக்கமையு மென்று
கடிதவர்தாம் காதலிப்பத் தாம்காதல் கொண்டு
முடிய வனைத்தும் உணரா முயறல்
கடிய கனைத்து விடல்.

(சொ - ள்.) இடு குடை தேர் மன்னர்-நிழலிடுகின்ற குடையினை உடைய தேர்மன்னர், எமக்கு அமையும் என்று - எமக்கு இது பொருந்தும் என்று, கடிது அவர் தாம் காதலிப்ப - மிகவும் அவர்கள் விரும்புவனவற்றை, தாம் காதல்கொண்டு - அவர்களைச் சார்ந்தொழுகுவார் விரும்பி, முடிய - முடியும்படி, எனைத்தும் உணரா முயறல் - ஒன்றனையும் ஆராயாது முயற்சி செய்தல், கடிய கனைத்து விடல் - கொடிய புலி முதலாயினவற்றைத் தன் மாட்டு அழைத்ததனோ டொக்கும்.

(க - து.) அரசனைச் சார்ந்தொழுகுவார் அரசன் விரும்புவனவற்றை விரும்பாதொழிதல் வேண்டும்.

(வி - ம்.) "காதலிப்ப" என்றது நுகரப்படுவன, ஒப்பனை, மேன்மை யென் றின்னோரன்னவற்றை. அவர் விரும்புவனவற்றைத் தாமும் விரும்பவே, உயிர்க்கிறுதிவரும் என்பார், "கடிய கனைத்து விடல்" என்றார். அவர் விரும்புவனவற்றை விரும்பா தொழியவே எல்லாச் செல்வமு முளவாம் என்பதாம். உணரா: ஈறுகெட்ட எதிர்மறை எச்சம். தாம் நினைத்தது முடியாது ஒழிதலேயன்றித் தமக்கே இறுதி வரும் என்பது, கடியன கனறவிடல்' என்பதும் பாடம். கனை என்பது ஓசைக்குறிப்பு. "கனைசிலை சும்மை" என்றதூஉங் காண்க. இது இடைநிகர்த்த ஓசையாதலின், அஃறிணைக்கண் ஒருசாரனவற்றிற்கு மரபாக வழங்கப்படுகின்றது.

"கடிய கனைத்து விடல்" என்பது பழமொழி. (௧௧)

277. சீர்த்தகு மன்னர் சிறந்தனைத்துங் கெட்டாலும்
நேர்த்துரைத் தெள்ளார் நிலைநோக்கிச்—சீர்த்த
கிளையின்றிப் போஒய்த் தனித்தாயக் கண்ணும்
இளைதென்று பாம்பிகழ்வா ரில்.

(சொ - ள்.) பாம்பு - பாம்பானது, சீர்த்த இளை யின்றிப் போய் தனித்தாயக் கண்ணும் - மிக்க சுற்றத்தினின்றும் நீங்கிப் போய்த் தனிப்பட்ட இடத்தும், இளைது என்று இகழ்வார் இல் - இளையது என்று கருதிச சோம்பியிருப்பார் இலர்: (அதுபோல), சீர்த்தகு மன்னர் - சீர்மை தக்க அரசர்களுடைய, சிறந்த அளைத் துங் கெட்டாலும் - சிறப்பெல்லாம் கெட்டவிடத்தும், நிலை நோக்கி - அவர் நிலைமையை நோககி, நேர்த்து உரைத்து - மாறு பட்டுக் கூறி, எள்ளார் - இகழாராகுக.

(க - து.) அரசன் சீர்கெட்டவிடத்தும் அவனை இகழ்வார் தீமையையே அடைவா.

(வி - ம்.) நேர்த்து என்பது நேர்ந்து என்பதன் வலித்த லன்று. நேர் என்பது உடன்பாடு எதிர்மறை என்ற இருபொருட் கண்ணும் வருதலின், ஒருசொல் லெனப்படாது இருசொல் எனவே படும் நேர்ந்து என்பது உடன்பாட்டுப் பொருளுடைய நேர் என்பதினின்றும் தோன்றியது. நேர்த்து என்பது எதிர் மறைப் பொருண்மை யுடைய நேர் என்பதினின்றும் தோன்றி யது. இகழ்வார் என்பது அப்பொருண்மைத்தாதல், "செல்வா ரல்லர் என்று யானிகழ்ந்தனனே" என்பதனு னறிக. பாம்பு இளைதென்று இகழ்வார் இறுதி எய்தல்போல, நிலைமைநோக்கி இகழ்வாரும் இறுதி யெய்துவர்.

"இளைதென்று பாம்பிகழ்வார் இல்" என்பது பழமொழி.
(கஉ)

278. செருக்குடைய மன்ன ரிடைப்புக் கவருள்
ஒருத்தற் குதவாத சொல்லின் தனக்குத்
திருத்தலு மாகாது தீதாம் அதுவே
எருத்திடை வைக்கோல் தினல்.

(சொ - ள்.) செருக்கு உடைய மன்னர் - தருக்குடைய அரசர்களது, இடை புகரு - இடையே புகுந்து, அவருள் ஒருத் தற்கு உதவாத சொல்லின் - அவர்களுள் ஒருவருக்கும் பயன் படாதவற்றை ஒருவன் சொல்லின், தனக்கு திருத்தலும் ஆகாது- தன் சொல்லால் வேறுபட்ட அவர்களைத திருததவும் முடியாது, தீதாம்-தீதாக விளையும், அது-அஙஙனங கூறல், எருத்து இடை- இரண்டு எருதுகளின் இடையேயுளள, வைககோல்-வைககோலை, தினல் - ஓர் எருது இடைப்புக்குத் தின்னலுறுதலை யொக்கும்.

(க - து.) அரசர்களிடை ஒன்றனைக் கூற விரும்புவார் ஒரு வரைச சார்ந்து நின்று கூறுக.

(வி - ம்.) உம்மை விகாரத்தால் தொக்கது. இரண்டு எருதுகளிடைப் புக்கு உண்ண நினைத்த எருது, உண்ணவும் பெறாது அவற்றால் துன்புறுதல்போல, பயனடையா தொழிதலே யன்றித் தீமையும் உளவாம் என்பதாம்.

"எருத்திடை வைக்கோல் தினல்" என்பது பழமொழி. (கஙு)

279. பன்னாள் தொழில்செய் துடைய கவர்ந்துண்டார்
இன்னாமை செய்யாமை வேண்டி இறைவர்க்குப்
பொன்யாத்துக் கொண்டு புகுதல் குவளையைத்
தன்னாரால் யாத்து விடல்.

(சொ - ள்.) *பல் நாள் தொழில்செய்து உடைய கவர்ந்து உண்டார்*—பல நாட்கள் ஊழியஞ்செய்து அரசனுடைய பொருள்களைப் பற்றி உண்டு மகிழ்ந்தவர்கள், *இன்னாமை செய்யாமை வேண்டி* - பின்னர் ஒருகாலத்தும் துன்பம் செய்யாதிருத்தலை விரும்பி, *இறைவர்க்கு பொன்யாத்து கொண்டு புகுதல்* - அரசனுக்குத் தமமிடத்துள்ள பொன்னைக் கொடுத்து அன்பால் ஒழுகுதல், *குவளையை தன் நாரால் யாத்துவிடல்* - குவளைமலரை அவற்றின் தண்டினாலேயே கட்டுதலோ டொக்கும்.

(க - து.) அறிவுடையோர் அரசனிடத்துக் கொண்ட பொருளையே அவனிடத்துக் கொடுத்துத் தம்வயப்படுத்துவர்.

(வி - ம்.) நார் என்றது அதனையுடைய தண்டினை; பிற நாரால் கட்டுதற் கேலாது குவளையை அதன் நாராலேயே கட்டுதலைப்போல, அரசனிடத்துக்கொண்ட பொருளாலேயே அவனை வயப்படுத்துக.

"குவளையைத் தன்னரால் யாத்து விடல்" என்பது பழமொழி. (கச)

280. மெய்ம்மையே நின்று மிகநோக்கப் பட்டவர்
கைம்மேலே நின்று கறுப்பன செய்தொழுகிப்
பொய்ம்மேலே கொண்டவ் விறைவற்கொன்றார்குறைப்பர்
தம்மேலே வீழப் பனை.

(சொ - ள்.) *மெய்ம்மையே நின்று* - மெய்யான நெறியின் கண்ணே நின்று, *மிக நோக்கப்பட்டவர்* - அரசனால் நன்கு மதிக்கப்பட்டவர்கள், *கை மேலேநின்று* - தமக்கு ஒரு காரியம் முடியும்பொருட்டு அவராணை கடந்துநின்று, *கறுப்பன* செய்

தொழுகி - அவர் வெகுடற் கேற்பனவற்றை இயற்றி, பொய் மேலே கொண்டு அ இறைவன் கொன்றார் - வஞ்சனையை ஏறிட்டுக்கொண்டு அந்த அரசனைக் கொன்றவர்கள், பனை தம்மேலே வீழ குறைப்பர் - பனை தம்மேலே வீழும்படி வெட்டுகின்ற வர்களோடொப்பர்.

(க - து.) அரசனைக் கொன்றவர்கள் இறுதி எய்துவர்.

(வி - ம்.) "கைம் மேலே நின்று" என்றார், முன்னர் மெய்ம்மையின்கண் நின்றார் இதுபொழுது தம் வசமும் நில்லாது காரியத்தின்மேல் நிற்கின்றார் என்ப துணர்த்தற்கு. அரசனுக்குத் தீமை யியற்றுவது, தமக்குத் தீமையைத் தாமே தேடிக்கொள்வதை யொக்கும்.

"குறைப்பர் தன்மேலே வீழப் பனை" என்பது பழமொழி.

(கசு)

281. வெஞ்சின மன்னவன் வேண்டாத வேசெயினும்
நெஞ்சத்துட் கொள்வ சிறிதும் செயல்வேண்டா
என்செய் தகப்பட்டக் கண்ணும் எழுப்புபவோ
துஞ்சு புலியைத் துயில்.

(சொ - ள.) என் செய்து - எல்லாத் துன்பங்களையும் தமக்குச செய்து, அகப்பட்டக்கண்ணும் - தம்மிடத்து அகப்பட்ட விடத்தும், துஞ்சு புலியை துயில் எழுப்புபவோ - உறங்குகின்ற புலியை அவவுறக்கததினின்றும் எழுப்புவார்களோ? (இல்லை). (அதுபோல), வெஞ்சின மன்னவன் - கொடிய சினத்தையுடைய அரசன், வேணடாததே செயினும் - தங்கீழ் வாழ்வார்க்குத் தீமையே செய்யினும், நெஞ்சத்துள் கொள்வ - அவன் மனத்தில் கறுவுகொள்ளத்தககனவற்றை, சிறிதும் செயல் வேண்டா - அவன்கீழ் வாழவார் ஒரு சிறிதும் இயற்றுதல் வேண்டா.

(க - து.) அரசன் தமககுத் தீமை செய்யினும் அவர்க்குத் தீமை செயயாதொழிக.

(வி - ம்.) புலி அகப்பட்டுவிட்டதே என்பது கருதி துயில் எழுப்புவார் இலராதல்போல, அரசன் தீமை செய்தானே யென்பது கருதிச சிறிதும் தீமை செய்தல் இலராதல் வேண்டும். புலி உறக்கததினின்றும நீங்கி நிற்றல் அசசத்திற்குக் காரணமாதல்போல், அரசன் மனத்துச சிறிது கறுவு கொள்வதும் அது செய்தார் அழிவுககுக் காரணமாம. "அகப்படாக்கண்ணும்" என்பதும் பாடம்.

"எழுப்புபவோ துஞ்சு புலியைத் துயில்" என்பது பழமொழி.

(கஎ)

282. தாமேயும் தம்மைப் புறந்தர வாற்றாதார்
வாமான்றேர் மன்னரைக் காய்வ தெவன்கொலோ
ஆமா உகளும் அணிவரை வெற்ப!கேள்
ஏமாரார் கோங்கேறி னார்.

(சொ - ள்.) *ஆமா உகளும் அணி வரை வெற்ப - காட்டுப் பசுக்கள் துள்ளி மகிழ்ந்துலாவுகின்ற அழகிய மலைநாடனே!, கேள் - உற்றுக் கேட்பாயாக, கோங்கு ஏறினார் - கோங்கமரத்தின் மீது ஏறினவர்கள், ஏமம் ஆரார - பாதுகாவலை யடையார, (அதுபோல), தாமேயும் தம்மைப் புறந்தர ஆற்றாதார் - தம்மைத் தாமே பாதுகாத்துக்கொள்ள முடியாதார், வா(வு)ம் மான் தேர் மன்னரை காய்வது என்கொல் - தாவிச்செல்லுகின்ற குதிரை பூட்டப்பெற்ற தேரினையுடைய அரசரைச் சினத்தல் என் கருதி?*

(க - து.) *அரசனைச் சார்ந்தொழுகுவார் தாமுந் தூயராயிருந்து அரசனைத் திருத்துதல் நல்லது.*

(வி - ம்.) *"புறந்தர வாற்றாதார்" என்றது தன்னைத் தீய செயல்களினின்றும் நீக்கிக்கொள்ள முடியாதாரை. அத் தீய செயலுடையார் நன்னெறி நிறுத்துமபொருட்டு அரசனைக் கோபிப்பாராயினும், அது தீயதெனப் பட்டு அரசரால் தீமை விளையும் என்பதாம. ஆகவே, அவர் முதலில் தூயராய் இருத்தல் வேண்டும் எனக் கூறப்பட்டது. அஙஙனமின்றித் திருத்த அவர் முற்படின் தீமை விளைதல் உறுதி. கோங்கு தன்மீது ஏறினாரைத் தாங்கலாற்றா வலியற்ற மரமாதலின், அதன்கண் ஏறினாரும் தீமையடைதல் உறுதி. ஏமம் + ஆரார - ஏமாரார் என்றாயிற்று.*

"ஏமாரார் கோங்கேறினார்" என்பது பழமொழி. (கஎ)

283. உறாஅ வகையது செய்தாரை வேந்தன்
பொறாஅன் போலப் பொறுத்தால்—பொறாஅமை
மேன்மேலும் செய்து விடுதல் அதுவன்றோ
கூன்மேல் எழுந்த குரு.

(சொ - ள்.) *உறாஅ வகையது செய்தாரை - செய்யத்தகாதனவற்றைச் செய்தவர்களை, வேந்தன் - அரசன், பொறான் போல பொறுத்தால் - புறத்தே பொறுக்காதவன் போன்றிருந்து உழையார் என்பது கருதி அகத்தே பொறுமை உடையனாயின், பொறாஅமை - அவன் (மீண்டும்) மனம் பொறாதமைவனவற்றை, மேன்மேலும் செய்துவிடுதல் - இடையீடின்றிச் செய்தல், கூன்*

மேல் எழுந்த குரு அது அன்றோ - கூனின்மேல் பெருத்து எழுந்த கட்டியை அது ஒக்குமன்றோ.

(க - து.) அரசன் பொறுமை உடையன் என்பது கருதித் தீமை செயயற்க.

(வி - ம்.) முன்னது இரண்டும் அளபெடைகள்: பின்னது மனம் பொறாது அமைவன எனப் பெயராம் இதுவே. அகரந் தொக்கு, "பொறாமை" எனத் தீயகுணமொன்றற்குப் பெயராய் வரும். பொறுன்போன்றது அவனை நல்வழி நிறுத்துதற்பொருட்டாம். அதுவுமறியாது மீண்டும் செய்வானாயின, அது மிக்க துன்பந் தருவதோடு, தம்மால் நீககமுடியாததாய்விடும். முதுகின் கண் எழுந்த கட்டி துன்பந் தருவதோடு, தன்னால் நீக்க முடியாத தாய் விடுதல் போல அது ஆகும என்பதாம.

"கூன்மேல் எழுந்த குரு" என்பது பழமொழி. (கஅ)

284. பொருளல்லார் கூறிய பொய்க்குறளை வேந்தன்
தெருளுந் திறந்தெரிதல் அல்லால்—வெருளவெழுந்து
ஆடு பவரோடே யாடார் உணர்வுடையார்
ஆடுபணைப் பொய்க்காலே போன்று.

(சொ ள்.) உணர்வு உடையார் - இயற்கை நுண்ணறிவு உடையார், பொருளல்லார் கூறிய பொய்க்குறளை - ஒரு பொருளாகவும் மதிக்கப்படாதார் கூறிய பொய்யாகிய குறளையை, வேந்தன் தெருளும் திறம் தெரிதல் அல்லால் - அரசன் தெளியும் வகையினை ஆராய்ந்து கூறுவதல்லாமல், வெருள எழுந்து - குறளை கூறினா வெருளுமாறு எழுந்து, ஆடு பணை பொய்க்கால் போன்று - அசைகின்ற மூங்கிலால் செய்யப்பட்ட பொய்யாகிய கால்கள் போன்று, ஆடுபவரோடு ஆடார் - குறளை கூறுவாரோடு ஆடுதலிலர்.

(க - து.) அரசனைச சார்ந்தொழுகுவார், அவன் உண்மையினைத் தெளிய அறியுமாறு கூறுதல் வேண்டும்.

(வி-ம்.) வெருள எழுந்து போன்று ஆடார் என்க. "வெருள எழுதலாவது" பொய்கூறியவர்களும் நாஙகூறியதுண்மைதானோ வென்றையுறுமாறு அவரின் மேம்பட்டுக் கூறுதல். இயற்கை நுண்ணறிவு உடையராயின் அவர் உண்மையறிந் துரைப்பர். மூங்கிலால் செய்யப்பட்ட பொய்க்காலாதலின் அசைதல் அதனியல்பாயிற்று.

"ஆடுபணைப் பொய்க்காலே போன்று" என்பது பழமொழி.
"ஆடுமணைப் பொய்க்கால்" என்பதும் பாடம். (கக)

28. பகைத்திறம்

285. வன்சார் புடைய ரெனினும் வலிபெய்து
தஞ்சார் பிலாதாரைத் தேசூன்ற லாகுமோ
மஞ்சுசூழ் சோலை மலைநாட ! யார்க்கானும்
அஞ்சுவார்க் கில்லை யரண்

(சொ - ள்.) *மஞ்சுசூழ் சோலை மலை நாட - மேகங்கள் சூழ்ந்து நிற்கும் சோலைகளை உடைய மலை நாடனே!, வன்சார்பு உடையார் எனினும் - வலிமை உடையராயினாரை சார்பாகப் பெற்றிருப்பினும், தம்சார்பு இலாதாரை - தம்முடைய வலிமை யாகிய சார்பைப் பெறறிராதவரை, வலிபெய்து - வலிமை உண்டாக்குவித்து, தேசு ஊன்றல் ஆகுமோ-புகழிற்குக் காரணமாகிய செயல்களில் அவரை நிலைநாட்ட இயலுமோ, யார்க்கு ஆனும்-யாவராககாயினும், அஞ்சுவார்கரு - மனம் அஞ்சுவார்கரு, அரண் இல்லை - அரண்களாற் பயனில்லை யாதலால்.*

(க - து.) *அரசன் எத்துணைசசார்பு பெற்றிருப்பினும் அவன் சார்பு அவனுக்கு இன்றியமையாத தொன்றாம்.*

(வி - ம்.) *தேசு, காரணத்திற் காயிற்று. மனமஞ்சுவார்க்கு அரணாற் பயனில்லையாதல் போல, தம் வலியில்லாதாரகுத் துணைவலியால் வெற்றியெய்துதல் இல்லையாம்; துணை வலியாற் பயனில்லையாக முடியும்.*

"யார்ககானும் அஞ்சுவார்க் கில்லை யரண்" என்பது பழமொழி. (க)

286. எதிர்த்த பகையை இளைதாய போழ்தே
கதித்துக் களையின் முதிராதே தீர்த்து
நனிநயப்பச் செய்தவர் நண்பெல்லாந் தீரத்
தனிமரம் காடாத லில்.

(சொ - ள்) *எதிர்த்த பகையை - தம்பொருட்டு நின்ற பகைவர்களை, இளைதாய போழ்தே - பகைமை தோன்றிய காலத்தேயே. அவர் நண்பெல்லாம் – அவர்களுடைய நண்பர்கள் எல்லோரையும், தீர தீர்த்து நனி நயப்ப செய்து - (அவர்களிடம் கொண்ட நட்பினை) முற்ற அறுத்துத் தன்னை மிகவும் விரும்புமாறு செய்துகொண்டு, கதித்து களையின் - விரைந்து வலியறச*

செய்யின், முதிராது - அப்பகைமை முதிர்வதில்லை; தனிமரம் காடு ஆதல் இல் - தனியே ஒருமரம் நின்று காடாதல் இல்லை யாதலின்.

(க-து.) அரசன் பகைமை தோன்றியபொழுதே விரைந்து அதனைக் கொல்லக்கடவன் என்றது இது.

(வி - ம்.) "இளைதாக முண்மரங் கொல்க" என்ற குறளின் விரிவு இது. நீரதநீரத்து என்றது, பகைவரினின்றும் அவரைப் பிரித்து அவர் தம்மை வலியிலராக்குதல். "பிரித்தலும்" என் றதே இது. நனி நயப்பசெய்து என்பது அவரினின்றும் பிரித் துத் தம்மொடு படுத்தல். "பகை நட்பாக கொண்டொழுகும் பண்புடைமை" என்பது இது. தனிமரம் காடாதல் இல்லாமை போல அவரும் அஞ்சததக்க பகைவராதல் இல்லையாம்.

"தனிமரம் காடாத வில்" என்பது பழமொழி. (உ)

287. முன்னலிந் தாற்ற முரண்கொண் டெழுந்தோரைப்
பின்னலிது மென்றிருத்தல் பேதைமையே—பின்சென்று
காம்பன்ன தோளி கடிதிற் கடித்தோடும்
பாம்பின்பல் கொள்வாரோ இல்.

(சொ - ள்.) காம்பு அன்ன தோளி - மூங்கிலையொத்த தோள்களையுடையாய், ஆன்ற முரண் கொண்டு - மிகவும் மாறு பாடு கொண்டு, முன் நலிந்து எழுந்தோரை - முற்பட்டுத் தம்மை நலிய எழுந்தவர்களை, பின் நலிதும் என்று இருத்தல் பேதை மையே - பின்னர் ஒருகாலத்து அவரை வருத்த மாட்டுவேம் என்று சோம்பி இருத்தல் அறியாமையேயாம், கடிதில் கடித்து ஓடும் பாம்பின் பல் - விரைந்து கடித்து ஓடுகின்ற பாம்பினது நச்சுப்பல்லை, பின் சென்று கொள்வாரோ இல் - அதன் பின் சென்று கொள்வார் ஒருவருமிலராதலின்.

(க - து.) பகைவரை அவர் மாறுபட்டு எழுவதற்கு முன் னரே அறிந்து களைக என்றது இது.

(வி - ம்.) "பேதைமையே என்று தேற்றினார், முன்னிருந்து களைதலன்றி அவர் மாறுபட்டு எழுகின்ற போழ்தும் களையாது பின்னர் ஒரு காலத்துக் களைவேம் என்றிருத்தலின். பின்னர்க் களைதல் ஒருதலையன்மையான் முன்னரே களைக என்பது. கடி யாததற்கு முன்னர்ப் பல்லைக் களையாது கடித்த பின்னர்க் களைப வர் இலராதல் போலப் பின் நலிதுமென்று இல்லாதிருத்தல் வேண்டும்."

"கடிதிற் கடிதரோடும் பாம்பின்பல் கொள்வாரோ இல்" என்பது பழமொழி. (கூ)

288. நிரம்ப நிரையத்தைக் கண்டந் நிரையம்
வரம்பில் பெரியானும் புக்கான்—இரங்கார்
கொடியார மார்ப ! குடிகெட வந்தால்
அடிகெட மன்றி விடல்.

(சொ - ள்.) கொடி யார மார்ப - தனிவடமாகிய முத்து மாலையை உடையவனே!, நிரையத்தை நிரம்ப கண்டு - பொய் கூறினால் உளவாகுந் துன்பத்தை நூல்களால் மிகுதியாக அறிந்தும், அந்நிரையம்-அந்நரக உலகத்தின்கண். வரம்பில் பெரியானும் புக்கான்-எல்லையற்ற குணங்களாற் பெரிய தருமனும் அரசாட்சி பெற்றுத் தன குடியை நிலைநாட்டும் பொருட்டுப் பொய் கூறிப் புகுந்தான் (ஆதலால்), குடி கெடவந்தால் - தங்குடி கெடுமாறு தோன்றுவதொன் றுண்டானால், இரங்கார் - அவர் தீமையுறுக லுக்கு அஞ்சாராகி, அடி கெட மன்றிவிடல் - தங்குடிநோக்கி வேரறத் தண்டஞ் செய்துவிடுக.

(க - து.) தங்குடி கெடுமாறு பகைவர் சூழ்ந்து நிற்பாரா யின் அரசர் அவர்தங் குடியை வேரறுக்க என்றது இது.

(வி - ம்.) தருமன் தன்குடியை நிலைநாட்ட அசுவத்தாமன் இறந்தான் என்று பொய் கூறினன் ஆதலால் குடி குன்ற வருஞ் செயலை எதிர்த்து எது செய்தாலும் ஒழிக்க என்பதாம்.

"நிரம்ப நிரையத்தைக் கண்டந் நிரையம்
வரம்பில் பெரியானும் புக்கான்" என்பது பழமொழி (சு)

289. தமரல் லவரைத் தலையளித்தக் கண்ணும்
அமராக் குறிப்பவர்க் காகாதே தோன்றும்
சுவர்நிலம் செய்தமையக் கூட்டியக் கண்ணும்
உவர்நிலம் உட்கொதிக்கு மாறு.

(சொ - ள்.) சுவர் நிலம் செய்து அமைய கூட்டியக் கண்ணும் - சுவராகுமாறு மண்ணினைப் பிசைந்து பொருந்துமாறு சேர்த்த விடத்தும், உவா நிலம் உள் கொதிகும் - உவர்மண் உள்ளே கொதிப்புண்டு உதிர்ந்து விடும் (அதுபோல), தமர் அல்லவரை - தமக்கு உறவல்லாத பகைவரை, தலையளித்தக் கண்

ணும் - தலையளி செய்தவிடத்தும், அவர்க்கு ஆகாது - அவர்க்கு அது நன்மையாகத் தோன்றாது, அமரா குறிப்பு தோன்றும் - விரும்பாத குறிப்பாகவே தோன்றும்.

(க-து.) பகைவரை நட்பாகக் கோடலரிது என்றது இது.

(வி - ம்.) நன்மையும் பகைமை கருதித் தீதாகக் கருதப்படு மென்பார் "அமராக குறிப்பு" என்றார். பகைவரைச் சார்ந்தொழுகுவாரை அது செய்யலாமே யன்றி அவரை அங்ஙனம் செய்து கோடல் அரியதொன்றா மென்க.

"சுவர் நிலம் செய்தமையக் கூட்டியக் கண்ணும்
உவர் நிலம் உட்கொதிக்கு மாறு" என்பது பழமொழி. (௫)

290. முகம்புறத்துக் கண்டால் பொறுக்கலா தாரை
அகம்புகுது மென்றிரக்கும் ஆசை இருங்கடத்துத்
தக்க நெறியிடைப் பின்னும் செலப்பெறூர்
ஒக்கலை வேண்டி அழல்.

(சொ - ள்.) முகம் புறத்து கணடால் - தம் முகததைப் புறத்தே கண்டாலும, பொறுககலாதாரை - மனம் பொறாதவர் களை, அகம்புகுதும் என்று இரக்கும் ஆசை - அவர் மனத்தின கண் புகுவோம் என்று தாழ்மையாக நினைக்கும் விருப்பம், தக்க நெறியிடை - நல்ல வழியின்கண்ணேயே, பின்னும் செலப்பெறார் - தொடர்ந்து செல்லப்பெறாத குழந்தைகள், இருங்கடத்து ஒக்கலை வேண்டி அழல் - பெரிய சுரத்தின்கண் பெற்றோர் தம் புறம் பற்றிச்செல்ல விரும்பி அழுதலை ஒக்கும்.

(க - து) பகைவரது மனததை வேறுபாடின்றி யொழியுமாறு திருததல் இயலாத தொனறாம்

(வி - ம்.) புறங கண்டளவிலேயே பொறாதார் அகத்தால் ஒருகாலும் ஒத்தல் இலா. நல்ல வழியின்கண்ணேயே செல்லப் பெறாத குழநதைகள பாலை நிலத்தில புறம்பற்றி வர நினைத்து அழுமாற்றை அஃது ஒக்கும். இயலாததொன் றென்பதாம்.

"அகம்புகுதும்" என்றது மன மொன்றுபடுவோம் என்று நினைப்பதை.

"தக்க நெறியிடைப் பின்னும் செலப்பெறார்
ஒக்கலை வேண்டி அழல்" என்பது பழமொழி. (௬)

291. ஆற்றப் பெரியார் பகைவேண்டிக் கொள்ளற்க
போற்றாது கொண்டரக்கன் போரில் அகப்பட்டான்
நோற்ற பெருமை யுடையாரும் கூற்றம்
புறங்கொம்மை கொட்டினா ரில்.

(சொ - ள்.) நோற்ற பெருமை உடையாரும் - தவம் ஆற்றியதா லுண்டாகும் பெருமையினை உடையவர்களும், கூற்றம் புறம் கொம்மை கொட்டினார் இல் – கூற்றதனை அதன் பின்னே நின்று கைகளைக் குவித்துக் கொட்டிய வலிய அழைத்தாரிலர், அரக்கன் போற்றாது கொண்டு போரில் அகப்பட்டான் – இராவணன் ஆராய்தலின்றி இராமனோடு பகை கொண்டு போரிடைப் பட்டு இறந்தொழிந்தான் (ஆதலால்), ஆற்றப் பெரியார் பகை வேண்டிக் கொள்ளற்க – மிகவும் பெரியவர்களுடைய பகையினை விரும்பி மேற்கொள்ளா தொழிக.

(க - து.) அரசன் தன்னின் வலியாரிடத்துப் போர் செய்தல் ஒழிக என்பதாம்.

(வி - ம்.) உம்மை சிறப்பும்மை. கூற்றங் குதிக்கும் ஆற்றலுடையாரும் அது செய்வதிலர். இராவணன் வலிமையறியாது இறந்தான் என்று சான்று காட்டியவாறு. ஆதலின் கொள்ளற்க. "கொம்மை கொட்டுதல்" - கை குவித்துக் கொட்டி விரைந்து அழைக்குங் குறிப்பு. கையைக் குவிததுக். கொட்டுதலாகிய இதுவே சிறுமியர் விளையாட்டாகிய கும்மி என்றாயது. நோற்ற என்பது காரணப் பெயரெச்சம்.

"கூற்றம் புறங்கொம்மை கொட்டினா ரில்" என்பது பழமொழி. (எ)

292. பெரியாரைச் சார்ந்தார்மேல் பேதைமை கந்தாச்
சிறியார் முரண்கொண் டொழுகல்—வெறியொலி
கோநா யினம்வெரூஉம் வெற்ப! புலம்புகின்
தீநாய் எழுப்புமாம் எண்கு.

(சொ - ள்.) வெறி யொலி கோநாய் இனம் வெரூஉம் வெற்ப-வெறியாட்டெடுக்கும் ஒலியைக்கேட்டு ஓநாய்க் கூட்டங்கள் அஞ்சாநின்ற மலைநாட்டை யுடையவனே!, சிறியார் – வலியிற் சிறியவர்கள், பெரியாரைச் சார்ந்தார் மேல்-வலியாற் பெரியோர்களைச சார்ந்து நிற்பவர்களிடத்து, பேதைமை கந்தா (க) – அறியாமையையே பற்றுக்கோடாகக் கொண்டு, முரண் கொண்டு

ஒழுகல் - மாறுபாடு கொண்டு ஒழுகற்க; (அது), தீ நாய் - தீய நாய், புலம்புகின் எண்கு எழுப்பும் - நாட்டின்கண் புகுந்தால் உறங்காநின்ற கரடியை எழுப்புகின்றதை ஒக்கும்.

(க - ரு.) வலியாற் பெரியார்மீது மாறுபட்டு நிற்றலை ஒழிதலே யன்றி அவரைச சார்ந்தார்மீதும் அங்ஙனமே யாகுக என்றது இது.

(வி - ம்.) வலியாற் பெரியார்க்குள்ளன அவரைச் சார்ந் தொழுகுவார்க்கு முண்மையின் அவரிடத்தும் மாறுபட்டு நிற்றலை யொழிக என்பது. ஒழுகல் என்பது மகனெனல் என்றாற் போன்று எதிர்மறைப் பொருளில் நின்றது. தனக்கே தீங்கு விளைத்துக் கோடலின் தீ நாய் எனப்பட்டது. சிறியார் பெரியா ரைச சார்ந்தார் மீது மாறுபட்டு நிற்றல் தமக்குத் தாமே தீங்கினை விளைவித்துக்கொள்வதாக முடியும்.

''புலம்புகின் தீநாய் எழுப்புமாம் எண்கு'' என்பது பழமொழி. (அ)

293. இகலின் வலியாரை எள்ளி எளியார்
இகலின் எதிர்நிற்றல் ஏதம்—அகலப்போய்
என்செய்தே யாயினும் உய்ந்தீக சாவாதான்
முன்கை வளையுந் தொடும்.

(சொ - ள்.) இகலின் வலியாரை - போர் செய்தலில் வல்லமை உடையவர்களை, எள்ளி - இகழ்ந்து, எளியார் இகலின் எதிர் நிற்றல் ஏதம் - வலிமைகுன்றி நின்றோர் போரில் எதிர்த்து நிற்றல் அவருயிர்க்கு இன்னல் தருவதாம் (ஆதலின்), அகலப் போய் என்செய்தேயாயினும் உய்க - நெடுந்தொலைவிற் சென்று எத்தகைய சூழ்ச்சியைச செய்தேயாயினும் உயிர் பிழைக்க; சாவா தான் முன்கை வளையுந் தொடும்-தப்பி உயிர்பிழைத் திருப்பவன் ஒருகால் அவர்களை வென்று தனது முன்கையில் கடகத்தையும் அணிந்துகொள்ளுவானாதலால்.

(க - து) வலியாரோடு போர்செய்யத் துணிந்து நிற்றல் உயிருக்கு இறுதிபயப்ப தொன்றாம்.

(வி - ம்.) ''யாண்டுச்சென் றியாண்டு மூளராகார்'' என்ற மையின் அகலப் போகிய விடத்தும் ஆராய்ந்து அறிந்து இறுதி விளைப்பர். ஆதலின் இன்னதென் றுரையாது என்செய்தே யாயினும் உய்ந்தீக என்றார். உயிர்பிழைத்திருப்பவன் அவர் மெலியராய காலத்து வென்று வாகுவலயம் பூண்லாமாதலின்

எவ்வகை யாயினும் தப்பிப் பிழைத்தல் நன்று என்பது. இக என்னும் முன்னிலையசை ஈக என்று நீண்டு நின்றது.

"சாவாதான் முன்கை வளையுந் தொடும்" என்பது பழமொழி. (௯)

294. வென்றடு கிற்பாரை வெப்பித் தவர்காய்வ(து)
ஒன்றொடு நின்று சிறியார் பலசெய்தல்
குன்றொடு தேன்கலாம் வெற்ப ! அதுபெரிதும்
நன்றொடு வந்ததொன் றன்று.

(சொ - ள்.) குன்றொடு தேன் கலாம் வெற்ப - குவடுகளோடு தேனீக்கள் மாறுபட்டுக் கலாம் விளைக்கும் மலை நாட்டை உடையவனே !, வென்று அடுகிற்பாரை - தம்மைக் கொல்ல வல்லவர்களை, வெப்பித்து - கொதிப்பிக்கச் செய்து, அவர் காய்வது ஒன்றோடு நின்று - அவர் காய்வதாகிய ஒரு செயலின் கண்ணே நின்று, சிறியார் - வலிமையாலும் அறிவாலும் சிறியவர்கள், பல செய்தல் - அவர்க்கு மாறுபட்ட பலவற்றைச் செய்தல், அது - அச் செயல் பெரிதும் நன்றொடு வந்தது ஒன்றன்று - மிகவும் நல்லகாலத்திற்குத் தனக்கு வந்ததொரு செயலன்று.

(க - து.) வலியார்க்கு மாறுபட்டு நின்று அறிவிலார் செய்வன அவர்க்கே தீங்கினை விளைவிக்கும்.

(வி - ம்) இது செய்யின் இவர்க்கு இது விளையும், இதனால் நமக்கு விளைவன இவை எனற்கு ஆயும் அறிவு இலராய்ச் செய்தலின், அறிவாலும் சிறியார் எனப்பட்டார். மலையொடு மாறுபடும் தேனுறு என மலைவளஞ் சிறப்பிக்கப்பட்டது. "நல்ல காலத்திற்காகவா அது வந்தது" என்பது இற்றை ஞான்றும் வழங்குவதொரு பழமொழி.

"அது பெரிதும் நன்றொடு வந்ததொன் றன்று" என்பது பழமொழி. (௧0)

295. உரைத்தவர் நாவோ பருந்தெறியா தென்று
சிலைத்தெழுந்து செம்மாப் பவரே—மலைத்தால்
இழைத்த திகவா தவரைக் கனற்றிப்
பலிப்புறத் துண்பார் உறு.

(சொ-ள்.) உரைத்தவர் நாவோ பருந்து எறியாது என்று- உரைக்கத் தகாதனவற்றை உரைத்தவர் நாவினைப் பருந்து எறிந்துண்ணு தென்று கருதி, சிலைத்து எழுந்து செம்மாப்பவர்- மிகுதி கொண்டு இறுமாந்திருப்பவர்கள், மலைத்தால் - ஒருவர் தம்மோடு மாறுபட்டு நின்றால், இழைத்தது இகவாதவரை - அவர் தம்மைத்தாம் செய்ய நினைத்ததைத் தவறாது முடிக்க வல்லாரை, கனற்றி - வெகுளச்செய்து, பலி புறத்து உண்ணு உண்பர்-பலி பீடத்தின் மேலிட்ட உணவினை உண்பவராவர்.

(க - து.) அரசர்கு யாவரையும் இகழ்ந்து பேசிச் செருக் குறுதல் ஆகாததொன்றாம்.

(வி - ம்.) "பருந்தெறியாது என்று" என்றது தமக்குஅழி வில்லை யென்று அவர் கருதியபடி. இகழ்ந்து பேசுதலால் துணை யினையும் இழந்து பகைவரால் அழிவர் என்பது, "பலிப்புறத் துண்பார் உணு" என்றது, வீரராய இறந்து நடு கல்லாகி நிற்பர் என்னும் கருத்தின்றி அழிந்தொழிவர் என்பதைக் குறிப்பித்தது.

"பலிப்புறத் துண்பர் உணு" என்பது பழமொழி. (கக)

296. தழங்குகுரல் வானத்துத் தண்பெயல் பெற்றால்
கிழங்குடைய வெல்லாம் முளைக்குமோ ராற்றால்
விழைந்தவரை வேர்சுற்றக் கொண்டொழுகல் வேண்டா
பழம்பகை நட்பாதல் இல்.

(சொ-ள்.) தழங்கு குரல் வானத்து தண் பெயல் பெற்றால்- முழங்கும் முழக்கத்தையுடைய மேகத்தின்கண் உள்ள குளிர்ந்த நீரைப் பெற்றால், கிழங்கு உடைய எல்லாம் - கிழங்குடைய புல் முதலியவெல்லாம், முளைக்கும் - முளையாநிற்கும்; ஓராற்றால் விழைந்து - சமயம் வாய்த்தபொழுது முரண்கொண்டு நிமிர்ந்து நிற்கும்வரை பகைவருக்குத் துணையாய் நிற்றலை ஒழியும் பொருட்டு விரும்பி, அவரை வேர் சுற்ற கொண்டு ஒழுகல் வேண்டா - அவர்களை அடியோடு நெருங்கிய நட்புடையவர்க ளாகக் கொண்டொழுகல் வேண்டா; பழம்பகை நட்பு ஆதல் இல் - பழைமையாகப் பகையாயினார் நட்பாக ஒன்றுதல் இல்லை யாதலால்.

(க - து.) பழம் பகைவரை நட்பாகக் கோடல் வேண்டா வென்றது இது.

(வி - ம்.) பழம் பகைவரும் சார்பு பெற்ற துணையானே பகையாய்த் தோன்றுவர் என்பது பெறப்படுதலின் பிறிது

மொழிதலாயிற்று. "அடியோடு நட்பாகக் கொள்ளற்க" என்றது, அவர் மனம் தீமை செய்யப் பொருந்தும் என்பதறிவித்தற்கு. 'ஓராற்றால் விழைந்து' என்பது, அவர் பகைவர்க்குத் துணை செய்யாதொழியும் பொருட்டு விரும்பி என்பதாம். "ஓர் ஆற்றால் விழைந்து" என்றமையானும், "வேர் சுற்ற" என்றமையானும் அவரை இடையிட்டு வைக்க வென்பது.

"பழம்பகை நட்பாதல் இல்" என்பது பழமொழி. (கஉ)

297. **வெள்ளம் பகையெனினும் வேறிடத்தார் செய்வதென்**
கள்ளம் உடைத்தாகிச் சார்ந்த கழிநட்புப்
புள்ளொலிப் பொய்கைப் புனலூர அஃதன்றே
அள்ளில்லத் துண்ட தனிசு.

(சொ – ள்.) புள் ஒலி பொய்கை புனல் ஊர-பறவைகளின் ஒலி நிறைந்த பொய்கைகள் சூழ்ந்த புனல் நாடனே!, வெள்ளம் பகை யெனினும் - வெள்ளம போன்று அளவற்ற பகைவர்கள் உளரெனினும், வேறு இடத்தார் செய்வது என் – இடையிட்ட நாட்டின்கண் உள்ள அவர்கள் நலிந்து செய்யும் துன்பம் யாது?, கள்ளம் உடைத்தாகி சார்ந்த கழி நட்பு – கரவு உடைத்தாகித் தம்மைச் சார்ந்தொழுகுகின்ற மிகுந்த நட்பொன்றே, அள் இல் லத்து உண்ட தனிசு அஃது அன்றே - சிறிய இல்லத்தில் தம் மோடு வாழ்வார்யாட்டுக கொண்ட கடனை ஒக்குமன்றே?

(க – து) அரசன் மனக்கரவுடையாரை அஞ்சித் தற்காக்க என்றது இது.

(வி - ம்.) வெள்ளம் என்றமையால் "ஒன்றே" என்பது கொள்ளப்பட்டது. "கழி நட்பு" என்றது, கள்ளம் உடையார் அதனை மறைத்தற் பொருட்டு மிகுதியும் நட்புப்பூண் டொழுகுவர் என்று அவர் மனக்குறிப் பறிவித்தபடி "அள் இல்லம்" என்றமையால், கடன் கொடுத்தார் அடிக்கடி காணப்படுவர் என்பது பெறப்படும். அவர் தோன்றும் போதெல்லாம் வருத்தமும் ஒன்றித் தோன்றுதல் போல, கரவுள்ள கழி நட்புடையாரால் துன்பம் மிகுதியும் உண்டாம். "வேறிடம்" "சார்ந்த" என்ற குறிப்புகளால் வேறிடத்தார் மாறுகோடல் முன்னறிந்து காக்கப் படுமாகலானும், சார்ந்தார் மாறுகோடல் முன்னறிந்து காக்கப் படாதாகலானும், கேள்போன்ற பகைவர் தொடர்பினை அஞ்சுக என்பது பெறப்படும்.

'அள்ளில்லத் துண்ட தனிசு" என்பது பழமொழி. (கங)

298. இம்மைப் பழியும் மறுமைக்குப் பாவமும்
தம்மைப் பரியார் தமரா—யடைந்தாரின்
செம்மைப் பகைகொண்டு சேராதார் தீயரோ ?
மைம்மைப்பின் நன்று குருடு.

(சொ ല் ள்.) இம்மை பழியும் மறுமைக்கு பாவமும்-இம்மைக்கு வரும் பழியையும் மறுமைக்கு வரும் பாவத்தையும், தம்மை பரியார் தமராய் அடைந்தாரின் - தம்மினின்றும் நீக்காராய் மனக்கறுவுகொண்டு தமமவராய் ஒட்டிவாழும் நட்பினரை விட, செம்மைப் பகை கொண்டு சேராதார் தீயரோ-நேர்முகமாகப் பகைகொண்டு தன்னை ஒட்டி ஒழுகாதவர்கள் தீயவாகள் ஆவரோ?, மைம்மைப் பின் குருடு நன்று - பார்வையாகிய ஒளி மழுங்கிய கண்ணினும் பார்வையின்றி நிற்கும் கண்ணே நல்லது ஆகலான்.

(க - து.) உட்பகையுடைய நட்பினரைவிட புறப்பகையுடைய பகைவரே சிறந்தவர்களாவர்.

(வி - ம்.) இம்மைப் பழியும் மறுமைப் பாவமும் பயக்குஞ் செயல்களை நீக்குதல் நட்பினர் கடமையாம். தங் கடமையினின்றும் அவர் நீங்குதலால் பழியும், பாவமும விளைத்தவராவா. புறப்பகையுடையாா அவை செய்தற் கியலாமையின் நட்பினரை விடப் பகைவரே சிறந்தவர்களாவார்கள். மைப்பு என்பது ஒளியிழத்தலாம். மை நிறத்திற்காகிய பார்வைக்காயிற்று.

"மைம்மைப்பின் நன்று குருடு" என்பது பழமொழி. (கச)

299. பொருந்தா தவரைப் பொருதட்டக் கண்ணும்
இருந்தமையா ராகி இறப்ப வெகுடல்
விரிந்தருவி வீழ்தரும் வெற்ப! அதுவே
அரிந்தரிகால் நீர்ப்படுக்கு மாறு.

(சொ - ள்.) விரிந்து அருவி வீழ்தரும் வெற்ப - பரந்து பட்டு அருவிகள் இழிதரும் மலை நாடனே!, பொருந்ாதவரை பொருது அட்ட கண்ணும் - தம்மொடு பொருந்ாதவர்களைப் போரிட்டு வென்றவிடத்தும், இருந்து அமையாராகி இறப்ப வெகுடல் - சோம்பி இருத்தலைச் செய்யாராகி அவர் உயிர் இழக்கும்படி வெகுண்டு நிற்றல், அது - அச்செயல், அரிந்து அரிகால் நீர்படுக்குமாறு - தலையரிந்துவைத்த நெல்லரிதாளை உடனே உழுது அழுகுமாறு நீர் பாய்ச்சுதலோடு ஒக்கும்.

(க - து.) அரசர் தம் பகைவரை வென்றதோடமையாது வேரறக் களைதல் நல்லது.

(வி - ம்.) அரிந்தவுடனே நீர்புகப் பெய்து அழுகவைத்தல் நிலத்திற்கு உரஞ் செய்தலா யமைதல் போல, பகைவரை வென்றதோ டமையாது அவர் இறுதிபெறச் செய்தல் தனக்கு உரஞ் செய்தலாகும்.

"அரிந்தரிகால் நீர்ப்படுக்கு மாறு" என்பது பழமொழி.(கஞ)

300. வன்பாட் டவர்பகை கொள்ளினும் மேலாயோர்
புன்பாட் டவர்பகை கோடல் பயமின்றே
கண்பாட்ட பூங்காவிக் கானலந் தண்சேர்ப்ப !
வெண்பாட்டம் வெள்ளந் தரும்.

(சொ - ள்.) கண்பாட்ட பூம் காவி கானல் அம் தண் சேர்ப்ப! - கண்களின தன்மையாயுள்ள அழகிய நீலப்பூக்கள் நிறைந்த சோலைகளையுடைய அழகிய குளிர்ந்த கடல் நாடனே!; வெண்பாட்டம் வெள்ளம தரும - பருவ மழையன்றி வேனிற காலத்து வெண்மழையும் மிகுந்த நீரைத் தருமாதலால், மேலா யோா - மேலானவர்கள், வன்பாட்டவர் பகை கொள்ளினும் - வலிய தன்மை உடையாரோடு மாறுபாடு கொள்ளினும், புன் பாட்டவர் பகைகோடல் பயமின்று - எளிய தன்மை உடையா ரோடு பகைகொள்ளுதலால் ஒரு பயனும் இன்று.

(க - து.) அரசன் வலியுடையாரோடு பகை கொள்வானு யினும அஃதில்லாரோடு கொள்ளற்க என்றது இது.

(வி - ம்.) பருவகாலத்து மழையே யன்றி வேனிற்காலத்து மழையும் வெள்ளத்தை உண்டாக்கும. அதுபோல, வலிமை யுடையாரிடத்து வெற்றிபெறுதலே யன்றி, தோற்றலும் சிறப் புடைத்தாம். எளியாரை வெல்லுதலால் வரும் உயர்வு ஒன்றின் மையும் அவரிடம் தோற்றலால் வரும் இழிவின் இழிந்தொன் றின்மையும் எல்லோரானும் அறியப்பட்டன வாகலின், வலியா ரோடு கொள்ளினும் இவா மாட்டுக கொள்ளற்க என்பது. உம்மை எதிர்மறை.

"வெண்பாட்டம் வெள்ளந் தரும்" என்பது பழமொழி.(கசு)

301. வாட்டிற லானை வளைத்தார்கள் அஞ்ஞான்று
வீட்டிய சென்றார் விளங்கொளி—காட்டப்
பொருவறு தன்மைகண் டஃதொழிந்தார் அஃதால்
உருவு திருவூட்டு மாறு.

(சொ - ள்.) அ ஞான்று - முன்னொரு காலத்தில், வான் திறலானை - நாந்தகம் என்னும் வாளினை உடைய மிக்க திறல் பொருந்திய திருமாலை, வீட்டிய சென்றார்-கொல்லும்பொருட்டுச் சென்ற மது கைடவர் என்போர், வளைத்தார்கள் - வளைந்து சூழ்ந்தார்களாகி, விளங்கு ஒளிகாட்ட - நிலைபெற்று விளங்குகின்ற தனது திருமேனியின் ஒளியைக்காட்ட, பொருவு அது தன்மை கண்டு அஃது ஒழிந்தார் - ஒப்பில்லாத வடிவின் தன்மையைக் கண்டு தாங்கொண்ட மாறுபாட்டினின்றும் நீங்கினார்கள்; உருவு திரு ஊட்டுமாறு - அழகிய வடிவே செல்வத்தை ஊட்டும் நெறி; அஃதால் - அது வன்றோ?

(க - து.) உருவப் பொலிவால் பகைவர் வயமாவர் என்றது இது.

(வி - ம்) உருவப் பொலிவால் பகைவர் வயமாவர் என்பது பயப்ப வேறொரு பொருள் தந்து கூறலின், பிறிது மொழிதலாம். உருவு திரு ஊட்டுதலாவது, கண்ட அளவிலேயே வெருண்டு மாறுகோடலை ஒழிதலான், தமது செல்வத்தை இடையூறின்றித் துய்த்தலாம். வளைத்தார்கள்: முற்றெச்சம். வளைத்தார்களாகிக் காட்டக்கண்டு ஒழிந்தார் எனக் கூட்டுக.

"உருவு திருவூட்டு மாறு" என்பது பழமொழி (கஎ)

302. வலியாரைக் கண்டக்கால் வாய்வாளா ராகி
மெலியாரை மீதூரும் மேன்மை யுடைமை
புலிகலாங் கொள்யானைப் பூங்குன்ற நாட!
வலியலாந் தாக்கு வலிது.

(சொ - ள்.) புலி கலாம் கொள்யானை பூங்குன்ற நாட - புலியொடு மாறுபாடு கொள்ளும் யானையையுடைய அழகிய மலை நாடனே!, வலியாரை கண்டக்கால்-தம்மின் வலியாரைக் கண்டவிடத்து, வாய் வாளாராகி - வாயாலும் அடக்கமுடையாராகி, மெலியாரை மீதூரும் மேன்மை உடைமை - தம்மின் மெலியாரிடத்து அடர்ந்து மிக்கு ஒழுகும் மேம்பாடுடைமை, வலியலாந் தாக்கு வலிது - வலியில்லாத காலத்து வலிமை உண்டாயின வாறு போலும்.

(க - து.) அரசன் தனக்கு மிக்க வலியில்லாத காலத்து வலியார்க்கு அஞ்சி மெலியார்மேல் மீதூர்ந்தொழுகுக என்றது இது.

(வி - ம்.) வலியார், மெலியார் என்புழி படை, பொருள், நீதி நூல்வழி யொழுகல் என்றிவை உடையாரும், அவையில்லாரும்

என்பது கொள்ளப்படும். மிக்க வலியில்லாக் காலத்து வலி யார்க்கு அஞ்சித் தன்னைக் காத்துக்கோடலும், மெலியாரை மீதூர்ந்து வலியுள தாக்கிக் கோடலும் தனக்கு வலிமையா மாதலின், "வலியலாந் தாக்கு வலிது" என்றார். உம்மை தொக்கது விகாரம்.

"வலியலாந் தாக்கு வலிது" என்பது பழமொழி. (கஅ)

303. ஒன்னூர் அடநின்ற போழ்தின் ஒருமகன்
தன்னை எனைத்தும் வியவற்க—துன்னினூர்
நன்மை யிலராய் விடினும் நனிமலராம்
பன்மையிற் பாடுடைய தில்.

(சொ - ள்.) ஒன்னூர் அடநின்ற போழ்தின் - பொருந்தா தோர் போரிடத்தும் தம்மைக் கொல்லநின்ற பொழுதில், ஒரு மகன் தன்னை எனைத்தும் வியவற்க - வீரத்தின்கண் மிக்கானு யினும் தனித்துநின்ற ஒருமகன் தன்னை எத்துணையும் வியந்து கூறுதொழிக, துன்னினூர் நன்மையிலராய்விடினும் - கொல்லும் பொருட்டுச் சூழ்ந்து நின்றூர் வீரத்தால் நன்மையிலராய் நின்றூ ராயினும், நனிபலவாம் பன்மையில் பாடுடையது இல் - மிகப் பலராயிருத்தலைவிட வலிமையுடைய தொன்றில்லை யாதலின்.

(க-து.) வீரமுடைமையினும் படைவலி வேண்டுமென்பது.

(வி - ம்.) பாடு - ஈண்டு வலிமையாயிற்று. "வியவற்க" என்றது தனித்துநின்று வியந்து கூறுதலாற பயனில்லை என்பது அறிவித்தற்கு.

"நனிபலராம் பன்மையிற் பாடுடையதில்" என்பது பழமொழி. (க௯)

304. தன்னலி கிற்பான் தலைவரின் தானவற்குப்
பின்னலி வானைப் பெறல்வேண்டும்—என்னதூஉம்
வாய்முன்ன தாக வலிப்பினும் போகாதே
நாய்பின்ன தாகத் தகர்.

(சொ - ள்.) என்னதும் வாய் முன்னதாக வலிப்பினும் - எத்துணை வருந்தி வாய் முன்னதாகும்படி கட்டியிழுத்தாலும், தகர் நாய் பின்னதாக போகாது - ஆடு நாய் தன் பின்னே வர, முன்னே போதல் இல்லை; (ஆதலால்), தன் நலிகிற்பான் தலை வரின் - தன்னை நலியவல்லவன் மீதூர்ந்து மேல்வரின், பின்

கலிவானைப் பெறல் வேண்டும் - அவருக்குத் துணையாய் அவன் பின்னின்று தன்னை வருத்தவருபவனைத் தான் துணையாகப் பெறுதல் வேண்டும்.

(க - து.) பகையிரண்டனுள் ஒன்றனைத் துணையாக்கிக் கொள்க என்றது இது.

(வி - ம்.) நாய் பின்னர் வர ஆடு முற்சேறல் இல்லையாத லால் துணையாயினானை நட்பாகக் கொள்ளவே பகைவர்கள் தன் மேல் வருதல் இலர். "நலிகிற்பான்" வினையெச்சமின்றிப் பெயராய் நின்றது.

"தன்றுணை யின்றால் பகையிரண்டால் தானொருவன்
இன்றுணையாக் கொள்கவற்றின் ஒன்று"

என்பது திருக்குறள்.

"வாய் முன்னதாக வலிப்பினும் போகாதே
நாய்பின்ன தாகத் தகர்" என்பது பழமொழி. (உ0)

**305. யானுமற் றிவ்விருந்த எம்முனும் ஆயக்கால்
வீரஞ் செயக்கிடந்த தில்லென்று—கூடப்
படைமாறு கொள்ளப் பகைதூண்ட லஃதே
இடைநாயிற் கென்பிடு மாறு.**

(சொ - ள்.) யானும் இ இருந்த எம்முனும் - யானும் இவ் விடத்திலிருந்த என் தமையனும், ஆயக்கால் - ஒன்றுசேர்ந்து ஒரு செயல் செய்யப்புகுந்த இடத்து, வீரம் செயக்கிடந்தது இல் என்று-பகைவருடைய வீரம் செய்யத்தக்கது யாதொன்றுமில்லை யென்று கூறி, கூட - அவரும் தம்மொடு சேர்ந்து, படைமாறு கொள்ள—தமக்குத் துணைப் படையாக நின்று மாறுகொள்ளுமாறு, பகை தூண்டல - பகைவரிடமிருந்து பிரிய அவரைத் தூண்டுத லாகிய, அஃதே - அதுவே, இடை நாயிற்கு என்பு இடுமாறு-ஆடு காத்து நிற்கும் இடையர் நாய்க்குத் திருடர் எலும்பினை யிடுதலோ டொக்கும்.

(க - து) பகை யிரண்டாயவழி இன்சொற்கூறி அவற்றுள் ஒன்றனை வயப்படுத்துக என்றது இது.

(வி - ம்) "யானும்" என்பது வலிமைசெருக்கு விளங்க நின்றது. "எம்முனும்" என்றது, பகைவனுக்குத் துணையாயினானை அகப்படக் கூறியது. வயப்படுத்தும் பொருட்டு உறவுமுறை தோன்றக் கூறப்பட்டது. "யானும எம்முனும்" என்றமையால்

வயப்படுத்தும் பொருட்டுத் தன்னினும் வலியால் மிக்கான் என்று கூறினன் என்றலுமாம். "யானும் - இல்" வயப்படுத்தும் பொருட்டுக் கூறிய இன்சொற்கள். "இடை நாய்" என்றதற்குப் பழைய பொழிப்புரையினும் இடையர் நாய் என்றே கூறப்படுகின்றது. அது "கிடைநாய்" என்றிருத்தல் வேண்டும்.

"இடை நாயிற் கென்பிடு மாறு" என்பது பழமொழி. (உக)

306. இயற்பகை வெல்குறுவான் ஏமாப்ப முன்னே
அயற்பகை தூண்டி விடுத்தோர்—நயத்தால்
கறுவழுங்கிக் கைக்கெளிதாய்ச் செய்க அதுவே
சிறுகுரங்கின் கையாற் றுழா.

(சொ - ள்.) இயற்பகை வெல்குறுவான்-இயல்பாக வுள்ள (தனது) பகையை வெல்ல நினைப்பவன், ஏமாப்ப - தனக்கு அரணாகுமாறு, முன்னே அயல்பகை தூண்டி விடுத்து-முன்னரே (தன் பகைக்கு) மற்றொருவனைப் பகைவனாகுமாறு தூண்டுதல் செய்து, ஓர் நயத்தால் - ஒரு நெறியால், கறுவழுங்கி கைக்கு எளிதாய் செய்க - கோபத்தினைக் கண் மிக்கொழுகித தன் கைக்கு எளிதாமாறு பகையை நெருக்குக; அது - அச் செயல், சிறு குரங்கின் கையால் துழா-பெரிய குரங்கு சிறிய குரங்கின்கையால் துழாவிய செயலை ஒக்கும்.

(க - து.) பகைவரை அவர்க்கு மாறாக மற்றொருவரை உண்டாக்கி வெல்க என்றது இது.

(வி - ம்.) இயற்பகை என்றது, தொன்றுதொட்டுப் பகைமை மேற்கொண்டொழுகிய பகையாம். வெல்குறுவான் என்பது, எச்சமன்றிப் பெயராய் நின்றது. ஒரு நெறி யென்பது, ஆங்காலமறிந்து என்றவாறு: பெரிய குரங்கு சிறிய குரங்கின் உதவியால் அறிதல்போலத் தம பகைவரை வேறொருவரின் உதவியால் அழிக்க என உபாயம் கூறியவாறு.

"சிறு குரங்கின் கையாற் றுழா" என்பது பழமொழி. (உஉ)

307. மாற்றத்தை மாற்றும் உடைத்தலால் மற்றவர்க்கு
ஆற்றும் பகையால் அவர்க்களைய—வேண்டுமே
வேற்றுமை யார்க்குமுண் டாகலான் ஆற்றுவான்
நூற்றுவரைக் கொன்று விடும்.

(சொ - ள்.) வேற்றுமை யார்க்கும் உண்டு ஆகலான்—மனவேறுபாடு எத்திறத்தார்க்கும் உண்டு ஆகலானும், மாற்

றத்தை மாற்றம் உடைத்தலான் - அவ் வேறுபாட்டால் ஒருவர் கூறியவற்றை அவர்க்குத் துணைபுரிவார் தஞ் சொற்களால் மாறு கொண்டு உடைக்கவல்ல ராதலானும், அவர்க்கு - தம் பகைவர்க்கு, ஆற்றும் பகையால் அவர் களையவேண்டும் – தம்மோடு மாறுபாடு கொண்டொழுகும் துணையாய் வந்த பகைவராலேயே அவரைக் களைந் தெறிதல் வேண்டும்; ஆற்றுவான் நூற்றுவரை கொன்றுவிடும் – அங்ஙனம் கொல்லவல்லா னொருவனே நூறு பகைவர்களைக் கொல்ல வல்லனும்.

(க - து.) தம் பகைவர்களுக்குள் மன வேறுபாடு உண்டாகுமாறு செய்து ஒருவரை ஒருவரால் களைக என்பது.

(வி - ம்.) வேற்றுமை யார்க்கு முண்டு என்றது, மாற்றத்தை மாற்றம் உடைத்தலுககு ஏதுவாயிற்று. ஆகலான், அவர் பிரிவர் என்பதாயிற்று. ஆகவே, அவர்கள் மன வேறுபாட்டில் மிக் கொழுகுமாறு செய்து அவராலேயே அவரைக் களைக என்பது. இது பகைவனுக்கும் துணையாயினானுக்கும் வேறுபாட்டை உண்டாக்குவித்து ஒருவனால் ஒருவன அழியுமாறு செய்க என்றது.

"ஆற்றுவான் நூற்றுவரைக் கொன்றுவிடும்" என்பது பழமொழி. (உ௲)

308. தெள்ளி யுணரும் திறனுடையார் தம்பகைக்கு
உள்வாழ் பகையைப் பெறுதல்—உறுதியே
கள்ளினல் கள்ளறுத்தல் காண்டும் அதுவன்றே
முள்ளினல் முட்களையு மாறு.

(சொ - ள்.) தெள்ளி உணரும் திறனுடையார்-ஆராய்ந்து அறியும் ஆற்றலுடையார, தம் பகைககு உள்வாழ் பகையை பெறுதல் உறுதியே - தம் பகைவரிடத்து வாழும் உட்பகையாயினரைத் துணையாகப் பெறுதல் வலிமையைப் பெறுதலேயாம்; கள்ளினல் கள் அறுததல் காண்டும் – மற்றொரு வேறுபட்ட கள்ளினல் முன் குடித்த கள்ளின் வெறியை நீககுதலைக் கண்கூடாகக் காண்கின்றேம்; அது - உட்பகையாயினரைத் துணையாகப் பெறுதல், முள்ளினல் முள் களையுமாறு அன்றே - முள்ளினல் முள்ளைக் களைதலை யொககுமன்றே?

(க - து.) பகைவரிடத்து உட்பகையாய் வாழ்வாரைத் துணையாகப் பெறின் வெற்றி எளிதில் எய்தலா மென்றது இது

(வி - ம்.) "தம் பகைக்கு உள்வாழ் பகையை" என்றது ஆற்றலின்மையான் மேற்படாது உட்பகைகொண்டு அவர்க்குத் தீங்கு வருங்காலத்தை எதிர்நோக்கி அடங்கி வாழ்வாரை. இத

ஞன் இவர் உதவியைப் பெறுதலும் உறுதியாம். தம் பகைவ ருடைய நிலையை இவர் நன்கு அறிந்தவராதலான், இவர் உதவி பெற்று ஒருதலையாக எளிதின் வெற்றிபெறலா மென்பார், அவர் நட்பைப் பெறுதலே "உறுதி"யா மென்றார். முள்ளினைமுள்ளாற் களைதல்போல, பகைவரை அவரைச சார்ந்தோர் சார்பு பெற்றுக் களைக என்பது. இது இராமன் வீடணன் சார்பால் இலங்கை யர்கோன் நிலையறிந்து வென்றது போலும்.

"முள்ளினால் முட்களையு மாறு" என்பது பழமொழி. (உ௪)

309. நலிந்தொருவர் நாளும் அடுபாக்குப் புக்கால்
மெலிந்தொருவர் வீழாமை கண்டு—மலிந்தடைதல்
பூப்பிழைத்து வண்டு புடையாடும் கண்ணினாய் !
ஏப்பிழைத்துக் காக்கொள்ளு மாறு.

(சொ - ள்.) பூ பிழைத்து வண்டு புடையாடும் கண்ணி ணாய்! - பூக்கள் என்று பிழையாகக் கருதி வண்டுகள் மருங்கு வந்து அணைந்து ஆடும் கணகளையுடையாய்!, ஒருவர் நாளும் நலிந்து அடுபாக்கு புக்கால் - ஒருவர் நாள்தோறும் நலிதலைச் செய்து பகைவரை அடும்பொருட்டுப் புகுந்தால், மெலிந்து ஒரு வர் வீழாமை கண்டு-உயிர்மெலிந்து ஒருவரும் இறந்து வீழாமை யைக கண்டு, மலிந்து அடைதல் - அச்சம் மிகுந்து அவரை அடைக்கலமாக அடைதல், ஏ பிழைத்து கா கொள்ளுமாறு - அம்பினின்றும் பிழைத்துப் புறமுதுகிட்டுத் தன்னைக் காத்துக் கொள்ளுமாற்றை ஒக்கும்.

(க - து.) போரின்கண் புகுந்த பின்னர்ச் சரணாக அடைதல் இழிவைத் தருவதொன்றாகும்.

(வி - ம்.) மெலிந்து ஒருவரும் என்ற உம்மை விகாரத்தாற் றொககது. போரின்கண ஆராய்நதே புகுதல் வேண்டும். புகுந்த பின்னர் அவர் வலிமையைக கண்டஞ்சிச சரண்புகுதல் புறமுது கிட்டு ஓடுதலை யொக்கும். அடுபாக்கு: பாக்கு: ஈற்று வினை யெச்சம்.

"ஏப்பிழைத்துக காககொள்ளு மாறு" என்பது பழமொழி. (உ௯)

310. மறையா தினிதுரைத்தல் மாண்பொரு ளீதல்
அறையா னகப்படுத்துக் கோடல்—முறையால்
நடுவணுச் சென்றவரை நன்கெறித லல்லால்
ஒடியெறியத் தீரா பகை.

(சொ - ள்.) மறையாது இனிது உரைத்தல் - கருதியதை மறைத்து வைக்காது இனிமையாக எடுத்துக்கூறுதல், மாண் பொருள ஈதல் - மாட்சிமைமிக்க பொருளைக் கொடுத்தல், அறை யான் அகப்படுத்துக் கோடல் - வஞ்சனை முதலியவற்றால் கீழறுத்து அவரைச சார்ந்தாரைத் தம்மோடு சேர்த்துக்கொள் ளல், முறையால் நடுவணு(க)சென்று அவரை நன்கு எறிதல் அல் லால்-முறையாக நடுநிலைமையிற் சென்று அப்பகைவர்களை அறச செய்தல் ஆகிய இவையல்லாமல, ஒடியெறிய பகை தீரா-தண்டம் ஒன்றுகொண்டே பகையை அறச்செய்ய அப்பகை தீர்தல்இல்லை.

(க - து.) பகைவரை நான்கு நெறியான் வயப்படுத்துக என்றது இது.

(வி - ம்.) "மறையா உரைத்தல்" என்றது மாறுகோடலால் தனக்கு உண்டாம் பயனையும் அவர்க்கு உண்டாம் தீமையையும் எடுத்துக்கூறி, மாறுகொள்ளாதிருத்தலே நன்று என்றல். மூன்று நெறியானும் செய்து நான்காம் நெறியைக் கைக்கொள்ளலின் முறையால் என்றார். செற்றம்பற்றிப் புறமுது கிடுவார் முதலி யோரைக் கொல்லுதலின்றி வெல்க என்பார், "நடுவணுக" என் றார். ஒடியெறியத் தீராபகை" என்றது நான்காம் நெறி ஒன் றையே கைக்கொண்டு எறிந்தொழிப்பின் அவன் செய்த முறை யன்றிய செயலால், அந்நாட்டவர்க்கும பிறர்க்கும் உளத்துப் பகைமை நீங்காதுளவாம் என்பது.

"ஒடியெறியத் தீரா பகை" என்பது பழமொழி. (உ௯)

29. படை வீரர்

311. நூக்கி அவர்வெலினும் தாம்வெலினும் வெஞ்சமத்துள்
தாக்கி எதிர்ப்படுவர் தக்கவர்; அஃதன்றிக்
காப்பி னகத்திருந்து காய்வார் மிகவுரைத்தல்
யாப்பினுள் அட்டிய நீர்.

(சொ - ள்.) தக்கவர் - வீரத்திற்குத் தகுதியுடையவர்கள் எனப்படுவார், வெம் சமத்துள்-கொடிய போர்க்களத்துள், அவர் வெலினும் தாம் வெலினும்-அவர் வென்றாலும் தாம் வென்றாலும், தாக்கி நூக்கி எதிர்ப்படுவர் - அடர்த்துத்தள்ளி வெற்றியைக் காண்பவரேயாவர்; அஃது அன்றி - அது செய்தலின்றி, காப்பின் அகத்திருந்து காய்வார் மிக உரைத்தல்-அரணகத்தேயிருந்து

வெகுள்வாராய் மிகவும் வீரங் கூறுதல், யாப்பினுள் அட்டிய நீர் - செய்யினுள் விட்ட நீரை ஒக்கும்.

(க - து.) வீரர் எனப்படுவார் மனத்திண்மையையும் பிற வற்றையும் பெற்று வெற்றியை எதிர்நோக்குபவரே யாவர்.

(வி - ம்) வயலுள் விட்ட நீர் பயிர்கள் வளர ஏதுவாயினாற் போல, காப்பகத்து இருந்து மிக வுரைத்தல் பகைப் பயிர் வளர் தற்கு ஏதுவாயிற்று. "யாப்பினு ளுயதனை யாப் பென்றார்" என்பது பரிமேலழகர் விளக்கம். இதனுள் வீரருக்குரிய இலக் கணமும், அவரல்லாரை யறியுமாறும், அவர் தேடிக்கொள்வதும் கூறப்பட்டன. காய்வார்: முற்றெச்சம்.

"யாப்பினுள் அட்டிய நீர" என்பது பழமொழி. (க)

312. உற்ற விறைவற் குடம்பு கொடுக்கிற்பான்
மற்றவற் கொன்னரோ டொன்றுமோ?—தெற்ற
முரண்கொண்டு மாறுய உண்ணுமோ? உண்ணு
இரண்டே ருருதுறையுள் நீர்.

(சொ - ள்) தெற்ற முரண்கொண்டு மாறு ஆய-தெளிவாக நிறைந்த வலிமையைப் பெற்று மாறுபாடுகொண்டுளவாகிய, இரண்டு ஏறு-இரண்டு காளைகள், ஒரு துறையுள் நீர் உண் ணுமோ?-ஒரு நீர்த் துறையில் தண்ணீர் உணணுமோ?, உண்ணு - தம்முள் பொருந்தி நீர் பருகுதல் இல. (அதுபோல), உற்றால்-ஓர் இடையூறு தம்மரசனுக்கு வந்துற்றால், உடம்பு கொடுக்கிறபான்- உடம்பினை அவன்பொருட்டு அளிக்கவல்லவன், அவற்கு ஒன்ன ரோடு-அவனுக்குப் பகையாயினாரோடு, ஒன்றுமோ - கீழறுக்கப் பட்டுச் சேர்தலுண்டோ? (இல்லை.)

(க - து) பகைவராற் கீழறுக்கப் படாததா யிருப்பதே படையி னியல்பாம்.

(வி - ம்.) உயிரும் உடம்பும் தம்முளியைந்து நிற்கும் ஒற் றுமை கருதி உடம்பு என்றாராயினும்,உயிர் என்பதே கருத்தாகக் கொள்க. பகைவராற் கீழறுக்கப்படாததாகவே, அரசன்மாட் டன்புடைமை பெறப்படும். "முரண்" என்பது மாறுகோடற் கேதுவாகிய வலிமையின்மேல் நின்றது. மாறுகொண்ட இரண்டு எருதுகள் ஒரு துறையில் நீருண்ணுவாறுபோல, வீரர் எனப் படுவார் கீழறுக்கப்பட்டுப் பகைவரோடு ஒன்றுதல் இலர். "அழை போகாதாகி" என்பது திருக்குறள்.

"உண்ணு இரண்டேறு ஒருதுறையுள் நீர்" என்பது பழ மொழி. (உ)

313. ஆற்ற வினைசெய்தார் நிற்பப் பலவுரைத்து
ஆற்றுதார் வேந்தனை நோவது—சேற்றுள்
வழாமைக் காத்தோம்பி வாங்கும் எருதாங்
கெழாமைச் சாக்கா டெழல்

(சொ - ள்.) ஆற்ற வினைசெய்தார் நிற்ப - மிகவும் போர்த் தொழிலைச் செய்து வெற்றியை உண்டாக்கினோர் வாளாயிருப்ப, ஆற்றுதார் வேந்தனை பல வுரைத்து நோவது - போரிற் சென்று ஒருவினையும் செய்யாதார் தமக்குச் சிறப்புச் செய்திலனென்று பலவாறுரைத்து அரசனை நொந்துகொள்வது, சேற்றுள் வழாமை காத்து ஓம்பி வாங்கும் எருது - சேற்றுள் வழுவி அகப்பட்டு வருந்தாது காத்து இழுக்கவல்ல எருது, ஆங்கு எழாமை - அங்கே எழுந்து செல்லாதிருக்கவும், சா(க்)காடு எழல் - அவ்வாற்ற லில்லாத சகடம் எழுந்து செல்லுதலை யொக்கும்.

(க - து.) வினைமாட்சி யில்லார் சிறப்புப் பெறுதல் இலர்.

(வி - ம்) எருது நிற்க, சகடம் எழுந்துசேறல் பொருந் தாமைபோல, அவர் பரிசிற்கெழுதல் பொருந்தாத தொன்றும். "பலவுரைத்து" என்றது, அரசன் வீரர் திறம் அறியான் எனவும் அவர்க்குத் செய்யதகும் சிறப்புசெய்ய அறியானெனவும், என்றிவைபோற் கூறுவனவாம் "சாக்காடு" "சாகாடு" என் றிருத்தல் நல்லது என்று கூறும் மதுரைத் தமிழ்ச சங்கப் பதிப்பு. அங்ஙனமே பொருள் கொள்ளப்பட்டது.

"சேற்றுள் - வழாமைக காத்தோம்பி வாங்கும் எருதாங்கு எழாமைச சாக்கா டெழல்" என்பது பழமொழி. (௫)

314. தாரேற்ற நீண்மார்பின் தம்மிறைவன் நோக்கியக்கால்
போரேற்று மென்பார் போதுவாக்கல் வேண்டுமோ
யார்மேற்றுக் கொள்ளினுங் கொண்டீக; காணுங்கால்
ஊர்மேற்ற தாமமணர்க் கோடு.

(சொ - ள்.) காணுங்கால் - ஆராயுமிடத்து, அமணர்க்கு ஓடு - சமணர்களுக்கு (அவர்கள் இரந்துண்ணும்) ஓட்டில் இடும் அறசெயல், ஊர்மேற்றதாம் - ஊரின் கண்ணதாம் (அதுபோல), போர் ஏற்றும் என்பார் - போரினை விரும்பி ஏற்றுக்கொள்வே மென்னும் வீரர்கள், தார் ஏற்ற நீள் மார்பின் தம் இறைவன் - மாலை பொருந்திய நீண்ட மார்பினையுடைய தம்முடைய அரசன், நோக்கியக்கால் - போருக்குச செல்க என்ற குறிப்புடன் நோககிய

விடத்து, பொதுவு ஆக்கல் வேண்டுமோ - அந்நோக்கினைப் பொதுவாக நோக்கினை என்று கொள்ளல் வேண்டுமோ, யார் மேற்று(க) கொள்ளினும் - அரசன் யாராமாட்டு அந் நோக்கினைக் கொண்டானாயினும், கொண்டு ஈக - தன்னை நோக்கினாகக் கொள்க.

(க - து.) அரசன் குறிப்பினை அறிந்து ஆராய்தலின்றி போரிற் புகுதல் வீரர்களுடைய கடமையாம்.

(வி - ம்) ஓட்டிவிடும் பயன் ஊரிலுள்ளார் மேற்றாயின வாறுபோல, முற்பட்டுச செல்லின் வெற்றியால் வருஞ் சிறப்புச சென்றார் மேற்றாகும். "போர் ஏற்றும் என்பார" என்றது.

"விழுப்புண் படாதநா ளெல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் நாளை எடுத்து" என்றலின்.

இதனால் வீரர் போரில் விருப்பமுடையராயிருத்தல் வேண்டும் என்பது அறியப்படும்.

"ஊர்மேற்றதா மமணாக் கோடு" என்பது பழமொழி. (ச)

315. செம்மாந்து செல்லும் செறுநரை அட்டவர்
தம்மேற் புகழ்பிறர் பாராட்டத்—தம்மேற்றும்
வீரஞ்சொல் லாமையேவிழ்க களிப்பினும்
சோரப் பொதியாத வாறு.

(சொ - ள) செம்மாந்து செல்லும் செறுநரை அட்டவர் - தருக்குற்று ஒழுகும் பகைவரை வென்றவர்கள், தம்மேல்-தம்மீது, புகழ் பிறர் பாராட்ட - புகழ்ந்து பிறர் சிறப்பிகரும்பொருட்டு, களிப்பினும் - களிப்புற்ற இடத்தும், தம் மேற்றும் வீரஞ் சொல்லாமையே வீழ்க - தமமிடத்து உளவாம வீரஞ் சொல்லா திருத்தலையே விரும்புக (அது), சோரம் பொதியாதவாறு - தன் னிடத்துள்ள குற்றங்களைத் தானே ஒன்றுசேர்த்து மிகுத்துக் கூறாதவாறு ஆகும்.

(க - து.) வீரர்கள் பிறர் பாராட்டும் பொருட்டுத் தம்மைத் தாம் புகழ்தல், தம்முடைய குற்றங்களைத் தாமே கூறுதல் போலாம்.

(வி - ம்.) "புகழ்:" இது முதனிலையே வினையெச்சமாய் நின்றது. "பிறர்" என்றார், போரிடத்துத் தன்னைத்தான் சிறப் பித்துக் கூறுதல் அமையும் என்றற்கு. "சோரப் பொதியாத வாறு" என்பது, சோரம் என்றிருத்தல் வேண்டும். சோரம்

குறைவு, குற்றங்களெனப்பட்டது. வீரஞ்சொல்லுதல் தன்னுடைய குற்றங்களைத் தானே கூறுதலை யொக்கும். இஃதே கூறுங் கருத்துடையார் மாற்றிக் கூறினர். வீழ்தல்-விரும்புதல். "தாம் வீழ்வார் மென்றோள்" என்றவிடத்தும் இப்பொருளில் வந்தது.

"சோரம் பொதியாத வாறு" என்பது பழமொழி. (கு)

316. உரைத்தாரை மீதூரா மீக்கூற்றம் பல்லி
நெரித்த சினைபோலும் நீளிரும் புன்னைப்
பொரிப்பூ இதழுறைக்கும் பொங்குநீர்ச் சேர்ப்ப!
நரிக்கூஉக் கடற்கெய்தா வாறு.

(சொ - ள்.) பல்லி நெரித்த சினை போலும் நீள் இரும் புன்னை - பல்லியது நெரிக்கப்பட்ட முட்டையைப்போல மலர்ந் திருக்கின்ற நீண்ட பெரிய புன்னை, பொரி பூ இதழ் உறைக்கும் பொங்குநீர் சேர்ப்ப - பொரியைப் போன்ற பூக்களினது இதழ் களைப் பரப்பும் நீர் மிகுந்த கடல் நாடனே!, உரைத்தாரை - தம்மை நலிய உரைத்தவர்களை, மீதூரா மீக்கூற்றம் - செயலால் மிக் கொழுகாது சொற்களால் தாமும் மிககொழுகல், நரி கூ கடற்கு எய்தா ஆறு - நரியின் கூவிளியால் கடல் ஒலியைத் தாழ் விக்கமாட்டாதவாறு போலும்.

(க - து.) வீரர்கள் தம்மை நலிய உரைத்தார்களைச் செய லால் அடுதல் வேண்டும்.

(வி - ம்.) மீதூராத என்னும் பெயரெச்சத் திறுதி தொக் கது. நெரித்த: செயப்பாட்டுவினைப் பெயரெச்சம். நரியின் கூவிளி கடலோசையை அடக்காதவாறுபோல, மேம்பட்டு, உரைத்தலால் பகைவர் அடங்குதலிலர். பகைவர் தோன்றிய துணையானே முற்ற அறுக்கவேண்டுதலின், செயலாலடர்த்தலே வேண்டப்படுவதாயிற்று.

"நரிக் கூஉக் கடற்கெய்தா வாறு" என்பது பழமொழி. (கூ)

317. அமர்நின்ற போழ்தின்கண் ஆற்றுவா ரேனும்
நிகரன்றி மேல்விடுதல் ஏதம்—நிகரின்றி
வில்லொடுநே ரொத்த புருவத்தாய் அஃதன்றே
கல்லொடு கையெறியு மாறு.

(சொ - ள்.) வில்லொடு நேர் ஒத்த புருவத்தாய் - வில்லினொடு நேராக ஒத்த புருவங்களை யுடையாய்!, அமர் நின்ற போழ்தின்கண் - போர் நடவாநின்ற போழ்தத்து, நிகர் இன்றி ஆற்றுவாரேனும் - ஒப்புமையின்றிப் போராற்ற வல்லரேனும், நிகர் இன்றி மேல் விடுதல் ஏதம் - ஒப்புமை கருதலின்றி (வலியார்) மேற்படை விடுதல் துன்பந் தருவதாம்; கல்லொடு கை யெறியு மாறு அஃது அன்றே - கல்லோடு மாறுகொண்டு கையால் எதிர்த்துத் தாக்குதலை அஃது ஒக்குமன்றே?

(க - து.) வீரர்கள் தம்மின் வலியார்மேற் சேறல் துன்பம் பயப்ப தொன்றாம்.

(வி-ம்,) போராற்ற வல்லரேனும், பகைவருடைய நிலைமை அறியாது, வலியார்மேற் படை தொடுத்தல், கல்லொடு மாறு கொண்டெறிந்த கையை யொப்பத் துன்பம் பயப்பதாம்.

"கல்லொடு கையெறியு மாறு" என்பது பழமொழி. (எ)

318. வரைபுரை வேழத்த வன்பகையென் றஞ்சா
உரையுடை மன்னருள் புக்காங் கவையுள்
நிரையுரைத்துப் போகாதொன் றாற்றத் துணிக
திரையவித் தாடார் கடல்.

(சொ-ள்.) திரை அவித்து கடல் ஆடார்-அலைகளை நீக்கிப் பின்னர்க் கடலில் ஆடுதலிலா (அதுபோல), உரையுடைய மன்னருள் புக்கு-புகழுடைய அரசர்கள் அவை நடுவே புகுந்து, ஆங்கு அவையுள் நிரை உரைத்து - அவ்விடத்திருந்த அவை நடுவே கூறும் முறையால் தனது வீரதைை மிகுததுரைத்து, வரை புரை வேழத்த வன்பகை என அஞ்சா-மலைபோலும் யானைப் படையை உடையதாயிருந்தது வலிய பகை என்று அஞ்சி, போகாது-இது சமயம் வெல்லமுடியாததென் றொழியாது, ஒன்று ஆற்ற துணிக-கூறிய தொனறனை செய்யத் துணிந்து நிற்க.

(க - து.) வீரர் பகைவருடைய வலி குறைந்த ஞான்று அவரை வெல்வோமென்று நினையாதொழிவாராக.

(வி - ம்.) முன்னரே தாம் அரசரிடம் தம் வீரத்தை மிகுததுக் கூறியிருத்தலின் அதை மெய்ப்பிக்க வேண்டுதலானும், அங்ஙனம் போரிற்சென்று புரந்தார்கண் நீர்மல்கச் சாதல், வேண்டப்படுவ தொன்றாகலானும், பகைவர் வலிய வந்து நிற்றல் உறுதியன்மையானும், துணிந்து செய்க என்பார், "ஆற்றத் துணிக" என்றார்.

"திரையவித் தாடார் கடல்" என்பது பழமொழி. (அ)

319. **காத்தாற்று கிற்பாரைக் கண்டால் எதிருரையார்**
பார்த்தாற்ரு தாரைப் பரியாது மீதூர்தல்
யாத்ததே சில்லார் படையாண்மை நாவிதன்வாள்
சேப்பிலைக்குக் கூர்த்து விடல்.

(சொ - ள்.) *காத்து ஆற்றுகிற்பாரை கண்டால் - தம்மைக் காத்துப் பகைவரோடு எதிராக நின்று உடற்றவல்லாரைக் கண்ட அளவில், எதிர் உரையார் - மாறு கூறுதலும் இலராகி, பார்த்து ஆற்ருதாரை - பார்த்த அளவில் ஆற்ருராகிப் புறங்கொடுத் தோடுவாரை, பரியாது மீது ஊர்தல் - இரங்குதலின்றி மேற்செல்லலான், யாத்த தேசு இல்லார் படையாண்மை-தனக்குளதாம் புகழினைப் பெருதவர்கள் செய்யும் படையாண்மை, நாவிதன் வாள் சேப்பிலைக்குக் கூர்த்துவிடல் - அம்பட்டன் கத்தி சேப்பிலையை அறுக்கக் கூர்மை உடையதாயினவாறு போலும்.*

(க - து.) *புறங்கொடுத்து ஓடுவார்மீது படை விடலாகாது என்றது இது.*

(வி - ம்.) *இறந்தது தழீஇய எச்ச உம்மை விகாரத்தாற் ருெக்கது. ஆற்ருதார்மீது மேறச்சேறல் தேசு இல்லாமைக் கேதுவாயிற்று. "யாத்த தேசு" என்றது வீரர்கள் போர்செய்து வென்றியெய்தும் தொழிலராதலின் தமக்குளதாம் புகழினைப் புறங்கொடுத்தார்மீது மேற்சேறலான் அழித்துக்கோடலின் இல்லார் என்ருர். அவர் எதிருரையாது மீதூர்தல் நாவிதன் வாள் மயிர்வினைக்குப் பயன்படாது சேப்பிலை யறுக்கப் பயன்பட்டாற் போலும்.*

"நாவிதன் வாள் சேப்பிலைக்குக் கூர்த்துவிடல்" என்பது பழமொழி. (க)

320. இஞ்சி அடைத்துவைத் தேமாந் திருப்பினும்
அஞ்சி அகப்படுவார் ஆற்ருதார்—அஞ்சி
இருள்புக் கிருப்பினும் வெய்யே வெரூஉம்புள்
இருளி னிருந்தும் வெளி.

(சொ - ள்.) *இஞ்சி அடைத்துவைத்து ஏமாந்திருப்பினும் - மதில்வாயிலை அடைத்துவைத்துப் பாதுகாவல்பெற்றுள்ளே யிருப்பினும், ஆற்ருதார் அஞ்சி அகப்படுவர் - போருக்காற்ருது அஞ்சி உட்புகுந்தார் அச்சத்தான் பகைவர் கையுட்படுவர், அஞ்சி இருள் புக்கு இருப்பினும் - பயந்து இருளின்கண் புகுந்திருந்ததாயினும், புள் - பறவையானது, மெய்யே-உண்மை*

யாகவே, இருளின் இருந்தும் வெளி வெரூஉம்-இருளினை உடைய இரவாக இருந்தும் வெளிச்சமுடைய பகலாக நினைத்து அஞ்சும்.

(க - து) அஞ்சுவார்க்கு அரணாற் பயனுண்டாதல் இல்லை.

(வி - ம்.) எமம் + ஆர்ந்திருப்பினும் என்பது எமார்ந்திருப்பினும் எனத் தொக்கது. அஞ்சி என்றமையானும், "வெய்யே" என்றதற்கோர் பொருட்சிறப் பின்மையான், "மெய்யே" என்ற பாடம் கொள்ளப்பட்டது. மன உரம் இல்லாதார் அரண் முதலியன பெற்றும், பெற்றிலார் போலாம்.

"அஞ்சி இருள்புக் கிருப்பினும் வெய்யே வெரூஉம் புள் இருளின் இருந்தும் வெளி" என்பது பழமொழி. (௧௦)

321. உருத்தெழு ஞாட்பினுள் ஒன்னார் தொலையச்
செருக்கினால் செய்கல்லார் செய்வாரே போலத்
தருக்கினால் தம்மிறைவன் கூழுண் பவரே
கருக்கினால் கூறைகொள் வார்.

(சொ - ள்.) உருத்து எழு ஞாட்பினுள் - சினந்து எழுந்த போரிடத்து, ஒன்னார் தொலைய செருக்கினால் செய்கல்லார் - பகைவர் அழியுமாறு வீரத்தாற் போர செய்ய ஆற்றாராகி, செய்வாரே போல - செயயும் ஆற்றலுடையாரைப் போல, தருக்கினால் தம் இறைவன் கூழ் உண்பவர் - தருக்கித தம்மை மிகுத்துக் கூறுதலினால் தம் மரசனிடத்து உணவுபெற்று வாழ்கின்றவர்கள், கருக்கினால் கூறை கொள்வார் - மேனியழகால் ஆடையைப் பெறுகின்ற (ஆடல் வன்மை பெறாத) நாடகக் கணிகையரை ஒப்பர்.

(க - து.) ஆற்றலொரு சிறிதுமின்றி மிகுத்துக் கூறுதலானே உணவுபெறும் வீரர்கள் மேனியழகா லாடையைப் பெறும் கணிகையரை ஒப்பர்.

(வி - ம்.) கருக்கு என்பது நிறைவு: "உணவு கருக்காயிருக்கின்றது" என்பது உலக வழக்கு. அஃது ஈண்டு மேனி நிறைவாகி அழகுக் காயிற்று.

"கருக்கினால் கூறைகொள் வார்" என்பது பழமொழி. (௧௧)

322. அமர்விலங்கி ஆற்ற அறியவும் பட்டார்
எமர்மேலை இன்னரால் யார்க்குரைத்தும் என்று
தமர்மறையால் கூழுண்டு சேறல் அதுவே
மகன்மறையாத் தாய்வாழு மாறு.

(சொ - ள்.) அமர் விலங்கி ஆற்ற அறியவும் பட்டார் - போரிடை நின்று பகைவரைப் போர் செய்து நீக்கி மிகவும் எல்லோராலும் அறிந்துகொள்ளவும் பட்டார்கள், மேலே எமர் இன்னர் - முற்காலத்தில் எம் முன்னோர் இத்தன்மையராயிருந் தனர், யாரக்கு உரைத்தும் - இவற்றை யாரிடத் துரைப்பேம், என்று - என்று கூறுமற்கூறி, தமர் மறையால் கூழ் உண்டு சேறல் அது - தம் முன்னோருடைய புகழ் மறைவினால் மறைந்து நின்று உணவு உண்டு செல்லுதலாகிய அது, மகன் மறையா தாய் வாழுமாறு - தான் பெற்ற மகனால் தனது அமையா ஒழுக்கத்தை மறைத்துக் கற்பமையாதாள் கணவனோடு வாழுமாறறை ஒக்கும்.

(க - து.) ஆற்றலில்லாத வீரர்கள் பழைமை பேசி உணவு பெறுதல் இகழத்தக்கதாம்.

(வி - ம்.) போர் வீரர்களுக்கு எல்லோராலும் அறியப்படுதல் சிறந்த தொன்றாகும். "அறியவும் பட்டார்" என்புழி உம்மை மறைந்து வாழ்வார் அறியப்படுதலையே உயர்வாகக் கருதலின், உயர்வு சிறப்பாய் நின்று அவர் இழிவு விளக்கிற்று. "தமர் மறையால்" யகர உடம்படு மெய் வந்தது. "மகன்" என்றமையால் தங்கணவனோடிருந்து பெற்ற குழந்தை என்பது பெறப்படும். மனையாள் என்னாது தாய்என்றார், மகனுக்குத் தாயாதலேயன்றிக் கணவனுக்கு இல்லாளாதற்குரிய இயல்பு இல்லாதவளாதலின்.

"மகன் மறையாத் தாய் வாழுமாறு" என்பது பழமொழி.
(௩௨)

323. உறுகண் பலவும் உணராமை கந்தாத்
தறுகண்மை யாகாதாம் பேதை—தறுகண்
பொறிப்பட்ட வாறல்லால் பூணாதென் றெண்ணி
அறிவச்சம் ஆற்றப் பெரிது.

(சொ-ள்.) பேதை - அறிவு இல்லாதவன், தறுகண் பொறிப் பட்டவாறு அல்லாமல் பூணாது - வெற்றி புண்ணியம உண்டாய வழியல்லாது உண்டாகாது, என்று எண்ணி - என்று நினைத்து, அறிவு அச்சம் பெரிது - அறிவான் வரும் அச்சம் மிகுதியும் உடையவனாதலால், உறுகண் பலவும் - தனக்கு வந்துறும் துன்பங்களை, உணராமை - உணரத்தக்க அறிவின்மையை, கந்து (ஆக) - பற்றுகோடாகக் கொண்டுவரும், தறுகண்மை - அஞ்சாமை செய் தொழுகலின், ஆகாதாம் - தறுகண்மை உடையவனாக ஆக மாட்டான்.

(க - து.) வீரர்க்கு அறிவாற்றலும் இன்றியமையாத தொன்றென்பது இது.

(வி - ம்.) வெற்றியைத் தறுகண் என்றார், அது காரணமாக வருதலின். பேதையார் தாம் செய்யும் ஒவ்வொரு காரியத்திற்கும் புண்ணியம் வேண்டும் என்று நினைத்துக், கடைப்பிடியோடு செயலில் ஊக்கமு மிலராய், அஞ்சி ஆண்மை செய்தொழுகுவர். உள்ளச்சம் உடையவராதலின் அவர் வீரராகக் கருதப்படார். ஆகவே, அறிவாற்றல் மெய்யாற்றல் என்ற இரண்டும் வீரர்க்கு இன்றியமையாதவை. அறிவசசம்: ஏழன் றன் தொகை.

"அறிவு அச்சம் ஆற்றப் பெரிது" என்பது பழமொழி. (கரு)

324. தன்னின் வலியானைத் தானுடைய னல்லாதான்
என்ன குறையன் இளையரால்?—மன்னும்
புலியிற் பெருந்திறல வாயினும் பூசை
எலியில் வழிப்பெறு பால்.

(சொ - ள்.) பூசை - பூனை, மன்னும் புலியின் பெரும்திறல வாயினும்-கொலைத்தொழில் நிலைபெற்றிருக்கும் புலிபோல மிக்க வலிய வாயினும், எலி இல் வழி - எலி இல்லாத இடத்தில், பால் பெறு - கொன்றுண்ணும் உணவு பெறுதல் இல்லை. (ஆதலின்), தன்னின் வலியானை தான் உடையன் அல்லாதான் - தன்னைவிட மிக்க வலிமை உடையவனைத் தான் பகைவனாகப் பெறுதவன், இளையரால் என்ன குறையன் - போர்வீரர்களால் என்ன குறை முடித்தலை உடையவனுவான்?

(க – து.) படைவீரர்கள் பகைவர்களை உடைய அரசனை அடைதல் வேண்டும்.

(வி - ம்.) புலி உவமையாகக் கூறப்பட்டது பூசையின் கொல்லுதற் றொழிலை உணர்த்துதற்காதலின். "பால்பெறு" என்றதற்குக் கொன்றுண்ணும் உணவு பெறுதல் இல்லையென்னுரை கூறப்பட்டது. பால் ஈண்டு உணவின்மேல் நின்றது. பூசை எலி யில்வழி உணவு பெறுதல் இல்லையாதல்போல, பகைவர்களை உடையனல்லாத அரசனிடத்து வீரர் பெறுவதொன்றுமில்லை. உடையானை அடைக என்பது கருத்து. இது மாறறிக் கூறப்பட்டது. இளையர், போர்வீரர். இளையர் என்ற சொல் போர்வீரருக்கு வழங்கப்பட்டமை படையினியல்பு விளக்குவதாம்.

"மன்னும் புலியிற் பெருந்திறல வாயினும் பூசை எலியில் வழிப் பெறு பால்" என்பது பழமொழி. (கச)

325. கொடையும் ஒழுக்கமும் கோளுள் ளுணர்வும்
உடைய ரெனப்பட் டொழுகிப் பகைவர்
உடையமேற் செல்கிற்கும் ஊற்றம் இலாதார்
படையின் படைத்தகைமை நன்று.

(சொ - ள்.) கொடையும் ஒழுக்கமும் கோள் உள்ளுணர்வும் - கொடைத் தொழிலும், செங்கோன்மையும், படைகுடி முதலியவற்றின் கருத்தை அறியும் நுண்ணறிவும், உடையர் என பட்டு ஒழுகி - உடையவ ரிவரென்று படை, குடி முதலியவற்றால் சொல்லப்பட்டு அந்நெறியின்கண்ணேயே ஒழுகி, பகைவர் உடைய - மாற்றலர் புறமுதுகிட்டு ஓட, மேல் செல்கிற்கும் ஊற்றம் இலாதார்-மேற்சென்று அவரை அழிக்கத்தக்க வலிமை இல்லாதவர்கள், படையின் - படைகளை உண்டாக்குவார்களாயின், படைத் தகைமை நன்று - அப்படைகளின் பண்புகள் சிறப்புற இருக்கும்.

(க - து.) படை உடையானுக்குக் கொடை, செங்கோன்மை, கோளுணர்வு முதலியன வேண்டும்.

(வி - ம்.) ஈத்தளிக்கும் இயல்பு சிறப்பாக வேண்டுமென்பார் கொடையை முற்கூறினார். ஒழுக்கம் பொதுவாயினும் ஈண்டு அரசர் மேற்றாய் ஒழுககங்களும் என நின்றது. கோள் உள்ளுணர்வு என்றது படையின் கருத்தினை ஆராய்ந்தறிதலை. இம்மூன்று முடையார் படையின் படை நன்று. இலராயின் படை மாட்சி உண்டாவதில்லை. இம்மூன்று முடையானே படைமாட்சி உடையானெனப்படுவான். இம்மூன்றும் படைகோடற் கேது வாயின.

"படையின் படைத்தகைமை நன்று" என்பது பழமொழி.
(கஞ)

326. இருகயல் உண்கண் இளையவளை வேந்தன்
தருகென்றாற் றன்னையரு நேரார்—செருவறைந்து
பாழித்தோள் வட்டித்தார் காண்பாம் இனிதல்லால்
வாழைக்காய் உப்புறைத்தல் இல்.

(சொ - ள்.) இரு கயல் உண்கண் இளையவளை - இரண்டு கயல்கள் போன்ற மையுண்ட கண்களையுடைய இளமைப் பருவமுடையாளை, வேந்தன் தருக என்றால் - அரசன் கொடுப்பாயாக என்று தூது விட்டால், தன் ஐயரும் நேரார் - இவள் தமையன்மாரும் கொடுத்தற்கு உடம்படாராகி, செரு அறைந்து பாழித்

தோள் வட்டித்தார் - போர்ப்பறை அறைவித்து வலிமையுடைய தோள்களைப் பிசைந்து நின்றார்கள், காண்பாம் – உறுதியாக வெற்றியைக் காணுதலுறுவோம், இனிது அல்லால் வாழைக்காய் உப்பு உறைத்தல் இல் - இனிமையாக இருப்பதல்லாமல் எக்காலத்தும் வாழைக்காய் இயல்பாய் உவர்ப்போடு கூடி நிற்றல் இல்லையாதலான்.

(க - து.) அரசன் மகள் வேண்டினனாக, அவள் தமையன்மார் சினந்து போருக்கு எழுந்தனர்.

(வி – ம்.) இது மகண் மறுத்து மொழிதல் என்ற துறை. இது அகப்புறத்தின் பாற்படும். வாழைக்காய் உப்புறைத்தல் இல்லையாதல் போல, மறக்குடியிற் பிறந்த நாம் மறந்தவிர்ந்தொழிதல் இல்லை; ஆதலால், உறுதியாக வெற்றியையே காண்போம் என்று போருக்கெழுந்த சில மறவர்கள் கூறியதாகக் கொள்க.

"வாழைக்காய் உப்புறைத்தல் இல்" என்பது பழமொழி.

(கசு)

30 இல்வாழ்க்கை

327. நாணின்றி ஆகாது பெண்மை நயமிகு
ஊணின்றி ஆகா துயிர்வாழ்க்கை—பேணுங்கால்
கைத்தின்றி ஆகா கருமங்கள் காரிகையாய்
வித்தின்றிச் சம்பிரதம் இல்.

(சொ - ள்.) காரிகையாய் – அழகுடையாய்!, பெண்மை நாண் இன்றி ஆகாது – பெண்மைக்குணம் நாணின்றி உண்டாகாது; பேணுங்கால்-காப்பாற்றுமிடத்து, நய மிகு ஊண் இன்றி உயிர்வாழ்க்கை ஆகாது - நலம் மிகுந்த உணவு இல்லாது உயிர் வாழ்ந்திருத்தல் முடியாது; கருமங்கள் கைத்து இன்றி ஆகா – செயல்கள் கைப்பொருள் இல்லாது முடிதல் இல்லை; வித்து இன்றி சம்பிரதம் இல் - விதையின்றி விளைவும் இல்லை.

(க – து.) பெண்களுக்கு நாண் வேண்டும் என்றது இது.

(வி - ம்.) நாண், மகளிர் கற்பு முதலிய உயர்ந்த நிலையடைவதற்கு முதற்படியாயுள்ளது. இஃது இன்றேல் பெண்மைக்குணம் இன்றாம்.

"நாணமும் மடனும் நல்லோர் ஏத்தும்
பேணிய கற்பும் பெருந்துணை யாக"

என்று பிறரும் துணைகூறினர். நாண் மனமொழி மெய்களது ஒடுக்கந்தான் வருவனவோவெனின், அவை அவரளவல்ல; அழகிய நுதலினை உடைய குலமகளிர்கள் நாண்கள் என்பது பரிமேலழகர் உரை. இழிந்த கருமங் காரணமாக, நாணுதலும் இதனுள் அடங்கி நிற்கும். பின்னர் நின்ற மூன்றும் பழமொழிகள். (க)

328. உரிமைதனில் தம்மோ டுழந்தமை கண்டு
பிரிவின்றிப் போற்றப் படுவார்—திரிவின்றித்
தாம்பெற் றதனுல் உவவார் பெரிதகழின்
பாம்புகாண் பாரும் உடைத்து.

(சொ - ள்.) *பிரிவு இன்றி போற்றப்படுவார் - வேறுபாடின்றிக் காப்பாற்றப்படுபவர்கள், உரிமைதனில் தம்மோடு உழந்தமை கண்டு - நட்புரிமையால் தம்மோடு வருந்தினமையைப் பார்த்து, திரிவு இன்றி - மன வேறுபாடின்றி, தாம் பெற்றதனுல் உவவார் - தாம் பெற்ற பொருளால் மனமகிழ்தலிலராய்ப் பின்னும் விரும்பாநிற்பா, பெரிது அகழின - புற்றினை மிகவும் கீழே தோண்டிச சென்றால், பாம்பு காணபாரும் உடைத்து-(அதனுல்), பாம்பைக் காண்கின்றவர்களையும் மிகுதியாக உடைத்தாயிரா நின்றது இவ்வுலகம்.*

(க - து.) *செய்தது கொண்டு உவத்தலே நட்பிற் கழகாம்.*

(வி - ம்.) *அழிவின்கண் அல்லல் உழப்பதே நட்பாதலின், "உழந்தமை கண்டு" என்றார். "திரிவு இன்றி" என்றது, பின்னும அவரான் முடியாத ஒரு காரியத்தைச செய்து தருமாறு வேண்ட, அது செயயாமைபற்றி மன வேறுபாடு கோடலின்றி எனபது. பாம்பு காண்டல் உறுதியனமைபோல, அவராற் றுன்புறுதல் இல்லையாம். ஒரு வேளை உண்டாயினும் உண்டாமென்பாா, "பாம்பு காண்பாரும் உடைத்து" என்றார்.*

"பெரிது அகழின் பாம்பு காண்பாரும் உடைத்து" என்பது பழமொழி. (உ)

329. அகத்தா லழிவு பெரிதாயக் கண்ணும்
புறத்தாற் பொலிவுறல் வேண்டும் எனைத்தும்
படுக்கை இலராயக் கண்ணும் உடுத்தாரை
உண்டி வினவுவா ரில்

(சொ - ள்.) படுக்கை இலர் ஆய கண்ணும் - படுத்தற்கு ஒரு சிறிய இடம் இலராயவிடத்தும், உடுத்தாரை உண்டி வினவுவார் இல் - சிறப்புற ஆடை உடுத்தாரை வறியராகக் கருதி உண்டிவேண்டுமோ என்று கேட்பார் ஒருவருமிலர். (ஆதலால்), அகத்தால் அழிவு பெரிது ஆய கண்ணும் - மனையின்கண் வறுமை மிக்க இடத்தும், எனைத்தும் புறத்தால் பொலிவு உறல் வேண்டும் - எப்படியாயினும் புறத்தோற்றத்தால் பொலிவுற்று விளங்குதல் வேண்டும்.

(க - து.) புறத்தோற்றப் பொலிவும் வேண்டப்படுவ தொன்றாகும்.

(வி - ம்.) "பெரிதாயக் கண்ணும்" என்றமையால், செல்வம் உள்ள காலத்தே அணிபெற இருத்தல் சொல்லாமே பெறப்பட்டது. வறுமையை "அழிவு" என்றார், ஆக்கவேலையின்றி அழிவினையே மேற்கொண்டு அது செய்தலின். "குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்" என்று அதன் தொழிலைப் பிறரும் கூறினார். படுக்கை அதற்குரிய இடத்தின்மேல் நின்றது. சிறப்புற ஆடை அணிவாரை யாரும் இரப்போராகக் கருதார் என்பார், "உடுத்தாரை உண்டி வினவுவார் இல்" என்றார்.

"உடுத்தாரை உண்டி வினவுவா ரில்" என்பது பழமொழி. (ந)

330. சொல்லாமை நோக்கிக் குறிப்பறியும்:பண்பிற்றம்
இல்லாளே வந்த விருந்தோம்பிச்—செல்வத்
திடரின்றி ஏமாந் திருந்தாரே நாளும்
கடலுள் துலாம்பண் ணினார்.

(சொ-ள்.) சொல்லாமை நோக்கி குறிப்பு அறியும் பண்பின் - தான் கூறுவதற்கு முன்னரே முகம் நோக்கி மனக் குறிப்பினை அறியும் பண்பினை உடைய, தம் இல்லாளே வந்த விருந்து ஓம்பி - தன் மனைவியே வந்த விருந்தினர்களுக்கு வேண்டுவன செய்து ஓம்ப, செல்வத்து இடர் இன்றி ஏமாந்திருந்தாரே - அதனால் செல்வத்தின்கண் துன்பமின்றி இன்பமுற்று வாழ்ந்தவர்களே, நாளும் கடலுள் துலாம் பண்ணினார் - நாடோறும் கடலினுள்ள நீரைத் துலா இட்டு இறைப்பவரோ டொப்பர்.

(க - து,) குறிப்பறிதலும், விருந்தோம்பலுமுடைய இல்லாளோடு செல்வத்துடன் வாழ்பவர்களே நீங்காத இன்பமுடையார்.

(வி - ம்). ஓம்பி செயவென் னெச்சப் பொருண்மையது. "வித்து மிடல் வேண்டுங் கொல்லோ" என்றலின், விருந்தோம்பு

தல் செல்வம் பெறுதற்கு ஏதுவாயிற்று. "எமம்+ஆர்ந்திருந் தாரே" ஏமாந்திருந்தாரே எனத் தொக்கது. "கடலுள் துலாம் பண்ணினார்" என்றது, கடல் நீரை இறைக்கப் புகுவார் நீர் குறைதல் இன்றி எஞ்ஞான்றும் பெறுதல்போல, எஞ்ஞான்றும் நீங்கா இன்பம் எய்துவா என்பதாயிற்று.

"நாளும் கடலுள் துலாம் பண்ணினார்" என்பது பழமொழி. (அ)

331. எந்நெறி யானும் இறைவன்றன் மக்களைச்
செந்நெறிமேல் நிற்பச் செயல்வேண்டும்—அந்நெறி
மான்சேர்ந்த நோக்கினாய் ஆங்க வணங்காகும்
தான்செய்த பாவை தனக்கு.

(சொ - ள்.) மான் சேர்ந்த நோக்கினாய் - மானை யொத்த பார்வையை உடையாய்!, இறைவன் தன் மக்களை - தந்தை தன் குழந்தைகளை, எந் நெறியானும்-எல்லாவற்றானும், செம்மை நெறிமேல் நிற்க செயல் வேண்டும-செம்மையாகிய நல்ல வழியில் நிற்குமாறு அறிவு கொளுத்துதல் வேண்டும்; தான் செய்தபாவை தனக்கு அணங்காகும் - தன்னால் நிலைநிறுத்தப்பட்ட படிவம் தனக்கே தெய்வமாகும், அந்நெறி—செந்நெறியில் நிற்பசெய்தல், ஆங்க - தெய்வமாந் தகுதியைப் போலாம் ஆதலான்.

(க - து.) மக்களுக்கு அறிவு ஊட்டுதல் தந்தை கடனாம்.

(வி - ம்.) செயல் வேண்டுமென்றார் அவர் கடமையாதலின். 'ஆங்க' உவமச சொல். கற்ற செந்நெறியில் நிற்பான் தந்தையால் போற்றப்படுவான்; தன்னால் நிலைநிறுத்தப்பட்ட பாவை தனக்குத் தெய்வமாய் அமைதல்போல.

"அணங்காகும் தான் செய்த பாவை தனக்கு" என்பது பழமொழி. (க)

332. ஒக்கும் வகையான் உடன்பொரும் சூதின்கண்
பக்கத் தொருவன் ஒருவன்பாற் பட்டிருக்கும்
மிக்க சிறப்பின ராயினும் தாயர்க்கு
மக்களுள் பக்கமோ வேறு.

(சொ - ள்) ஒக்கும் வகையான் உடன் பொரும் சூதின் கண் - ஒக்கும்படி சிலருடன் கூடி விளையாடும் சூதாட்டிடத்து, பக்கத்து ஒருவன் ஒருவன்பால் பட்டிருக்கும் - பக்கத்திலே

இருந்து ஒருவன் ஒருவனைச் சார்ந்து வேண்டியன கூறிக் கொடுப்பான்; (அதுபோல), மிக்க சிறப்பினராயினும்-மக்கள் எல்லோரும் மிகுந்த சிறப்புடையவராகக் கருதப்படுவாரேயாயி னும், தாயர்க்கு மக்களுள் பக்கமோ வேறு - தாய்மார்களுக்கு மக்களுள்ளும் கல்வி யறிவான் மிக்காரிடத்து அன்பு தனிச சிறப்புடையதாக இருக்கும்.

(க - து.) கல்வி யறிவான் மிக்க மக்களைத் தாயர் பெரிதும் விரும்புவர்.

(வி - ம்.) மிக்க அன்பு பாராட்டுவாள் என்பார், "மக்களுள் பக்கமோ வேறு" என்றார்.

"பிறப்போ ரன்ன உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயும்மனந் திரியும்" என்பது புறம்.

குழந்தைகளில் வேறுபட்ட அன்பு கோடல் கூடாதாயினும், கல்வியறிவான் மிக்காரிடத்து மிக்க அன்பு செல்லுதல் இயற்கை என்பார், "தாயர்க்கு" என்றார்.

"தாயர்க்கு மக்களுள் பக்கமோ வேறு" என்பது பழமொழி. (சு)

333. தொடித்தோள் மடவார் மருமந்தன் ஆகம்
மடுத்தவர் மார்பில் மகிழ்நன் மடுப்ப
நெறியல்ல சொல்லல்நீ பாண! அறிதுயில்
ஆர்க்கும் எழுப்பல் அரிது

(சொ - ள்.) தொடி தோள் மடவார் மருமம்-தொடியணிந்த தோள்களையுடைய பரத்தையர் மார்பினை, தன் ஆகம் மடுத்து - தன் மார்பில் சேர்த்து, அவர் மார்பில் மகிழ்நன் மடுப்ப - அப் பரத்தையர் மார்பில் தலைவன் சேர, (நிகழ்த்திய தொன்றை) பாண நீ நெறியல்ல சொல்லல் - பாணனே நீ இங்ஙனம் ஒழுகுதல் நெறியன்றென்று தலைவனிடத்துச சொல்லுதலை ஒழிவாயாக; அறிதுயில் எடுப்பல் ஆர்க்கும் அரிது - பொய்த்துயிலினின்றும் ஒருவரை நீக்குதல் யாரானும் முடியாதாம்.

(க - து.) பாணனுக்குத் தலைமகள் வாயில் மறுத்துக் கூறியது.

(வி - ம்.) தன் தோளிலுள்ள தொடி நெகிழ்ந்தமைதோன் றத் தொடித்தோள் என்றார். தொடி, மகளிர் தோளிற் கணியும் அணி - இது மகளிர் தோட்களைத் தொட்டுக்கொண்டு இறுக

இருத்தலின், தொடி என்றுயது பிறரும் "தொடிநெகிழ்ந் தனவே" என்று நெகிழற் கருமை தோன்ற நின்றமையைக் குறித் தார். "நெறியல்ல சொல்லல் நீ" என்றது, பரிசு கருதி உழல் பவன் நீயாதலால், நீயும் உடன்பட்டிருந்தாய் என்பதாம். அறி துயில்: ஈண்டு இது எல்லாவற்றுனும அறிந்துகொண்டு வாயில டைத்துத் தூங்கும் பொய்த் தூக்கம். அதுவாயின் மனனுணர்வு ஒன்றே யறிய, ஏனைய புலன்களும் பொறிகளும் தூங்குவதாம். அறிதுயிலினின்றும் எழுப்புதல் அரிதாமாறுபோல, எம்மிடத் தும் வாயில் பெறுதலும் இயலாதாம்; செல்க என்பதாம்.

"அறிதுயில் ஆர்க்கும் எழுப்பல் அரிது" என்பது பழ மொழி. (எ)

334. விழுமிழை நல்லார் வெருள்பிணைபோல் நோக்கம்
கெழுமிய நாணை மறைக்கும்—தொழுநையுள்
மாலையும் மாலை மயக்குறுத்தாள் அஃதால்
சால்பினைச் சால்பறுக்கு மாறு.

(சொ - ள்.) விழும் இழை நல்லார் வெருள் பிணைபோல் நோக்கம் - எல்லோரானும் விரும்பப்படும் பொற்கல னணிந்த பெண்களுடைய வெருண்ட மான்போன்ற நோக்கங்கள், கெழு மிய நாணை மறைக்கும் - (ஆடவருடைய) செறிந்த நாணினைத் தோன்றுமல் மறைகக வல்லதாம்!, தொழுநையுள் - யமுனையின் கண்ணே, மாலையும் மாலை மயக்குறுத்தாள் - திருமாலையும பின்னை யென்பாள் தன்னழகிஞல் மயஙகச செய்தாள்; அஃது - அது, சால்பினை சால்பு அறுககுமாறு - மிகுதியினை மிக்க தொன்றஞல் அறுக்கு மாற்றை ஒககும்.

(க - து.) அறிவான் மிக்கார் மகளிரைச சார்ந்தொழுகல் கூடாது.

(வி - ம்.) வீழு மிழை, விழு மிழையென்று முதற்குறைந்து நின்றது. நாணுவது இழிஙத கருமம் செய்யப்புகுஙகால் தோன் றும் மனக்குலைவு. "மாலையும்" என்றது, பிறரை மால் செய் தலையே தொழிலாகக்கொண்டு அதனுலேயே பெயர்பெறல். திரு மாலையும் எனச சிறப்பும்மையாய் நின்றது. திருமாலேயே பின்னை மயக்குறுத்தாள்; ஆதலின், நிறையுடையோம என்று கருதிச் சார்ந்து ஒழுகின், நிறையினின்றும் தவறி எல்லாக் குணங்களையும் இழக்க நேரிடும் என்பது.

"சால்பினைச சால்பறுக்கு மாறு" என்பது பழமொழி.

"ஈன்றாள் மகள்தன் உடன்பிறந்தா ளாயினும்
சான்றோர் தமித்தா உறையற்க ஐம்புலனும்
தாங்கற் கரிதாக லான்" என்பது ஆசாரக்கோவை. (அ)

335. தூய்மை மனத்தவர் தோழர் மனையகத்தும்
தாமே தமியர் புகல்வேண்டா—தீமையான்
ஊர்மிகின் இல்லை கரியோ ஒலித்துடன்
நீர்மிகின் இல்லை சிறை.

(சொ - ள்.) தூய்மை மனத்தவர் - தூய்மையான மனத்தை உடையவர்கள், தோழர் மனையகத்தும் - நண்புடையார் இல்லின் கண்ணும், தாமே தமியர் புகல் வேண்டா-தாமாகத் தனித்துச் செல்லுதல் வேண்டா, தீமையான் ஊர் மிகின்-இவன் தீயசெயல் செய்தான் என்று ஊரிலுள்ளார மிகுத்துக் கூறுவாராயின், கரி இல்லை – செய்யவில்லை என்று சான்று கூறுவார் ஒருவரும் இலர், ஒலித்துடன் நீர் மிகின் சிறை இல்லை-ஓசையுடனே நீர் மிகுமாயின் அதனைத் தடுத்து நிற்கும் அணை இல்லையாதல்போல.

(க - து.) நல்லோர் தோழர் மனையிடத்தும் தனியாகப் புகுதல் கூடாது என்றது இது.

(வி - ம்.) "தோழர் மனையகத்தும்" என்றமையால், ஏனையார் மனையகத்துப் புகுதல் வேண்டாமை பெறப்படும். "தாமே" என்றமையால், அவர் விரும்பிய ஞான்று தனித்துப் புகுதலில் இழுக்கு ஒன்று மின்மை யறிக. கரி இல்லை என்றது ஊரார் கூறியது மெய்யேயாக, அன்றிப் பொய்யேயாக, எதுவாயினும் சான்றுகொண்டு தீர்த்தல் இயலாது என்பதாயிற்று. ஊர் மக்கள் என்றாயது ஆகுபெயா.

"நீர் மிகின் இல்லை சிறை" என்பது பழமொழி. (க)

336. நிறையான் மிகுகல்லா நேரிழை யாரைச்
சிறையான் அகப்படுத்தல் ஆகா—அறையோ!
வருந்த வலிதினின் யாப்பினும் நாய்வால்
திருந்துதல் என்றுமோ இல்.

(சொ - ள்.) வருந்த வலிதினின் யாப்பினும்-வருந்துமாறு வலிபெறக் கட்டினாலும், நாய்வால் திருந்துதல் என்றுமோ இல் - நாயின் வால் வளைவினின்றும் நீங்கித்திருந்துதல் என்றும் இல்லை; (அதுபோல) நிறையான் மிகுகல்லா நேரிழையாரை - மனத்தை

அடக்கும் வலிமை மிக்கிராத அழகினை உடைய கலனணிந் திருக்கும் மகளிரை, சிறையான் அகப்படுத்தல் ஆகா - காவலால் தீய செயலினின்றும் நீக்கி அகப்படுத்தல் முடியாது, அறையோ - முடியுமென்பாருளராயின் அவரை அறைகூவி அழைக் கின்றேன்.

(க - து.) மகளிர்க்குச் சிறைகாப்பினும் நிறைகாப்பே சிறந்ததாம்.

(வி - ம்.) நிறை என்றது மன அடக்கத்தை; அதாவது, காப்பன காத்துக கடிவன கடிதல். மன அடக்கம் கூறவே, ஏனைய சொல்லவேண்டா வாயிற்று. சிறை யுளதாயவழி நிறை யில்லையாயின், அச் சிறையாற் பயனில்லையாதலின், நிறைகாப்பே சிறந்ததாம். எனறும் என்றது ஒகார அசைபெற்று நின்றது.

"சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை" என்பது திருக்குறள்.

"நாய்வால் திருந்துதல் என்றுமோ இல்" என்பது பழமொழி. (௧0)

337. நல்கூர்ந் தவர்க்கு நனிபெரிய ராயினுர்
செல்விருந் தாகிச் செலவேண்டா—ஒல்வ
திறந்தவர் செய்யும் வருத்தம் குருவி
குறங்கறுப்பச் சோருங் குடர்.

(சொ - ள்.) நனி பெரியர் ஆயினும் - செல்வத்தால் மிகவும் பெரியவர் ஆயினும, நல்கூர்நதவர்க்கு - வறுமையுடையார்க்கு, செல்விருந்தாகி செலவேண்டா - அவரிடத்துச் செல்கின்ற விருந்தாகச் செல்லவேண்டா; ஒல்வது இறந்து அவர் செய்யும் வருத்தம் - தம்மா லியலுமாற்றைக் கடந்து விருந்து செய்தலான் வரும் வருத்தம், குருவி குறங்கு அறுப்ப குடர் சோரும் - குருவி தொடையை அறுத்த அளவில் குடரசோர்நது விழுந் துன்பத்தை யொக்கும்.

(க - து.) செல்வமுடையார் வறியோரிடத்து விருந்தாகச் செல்லவேண்டா என்றது இது.

(வி - ம்.) "ஒல்வது இறந்து" என்றது செல்வ முடையார் தகுதியறிந்து அதற்கேற்பத் தந் தகுதிக்கு மீறி ஒழுகுவர் என்ப தாம். அங்ஙனம் அவர் விருந்து செய்தலான் வரும் வருத்தம் குடர் சோருந் துன்பத்தை யொக்கும் என்பதாம்.

"குருவி குறங்கறுப்பச் சோருங் குடர்" என்பது பழமொழி. (௧௧)

338. உடுக்கை மருந்துறையுள் உண்டியோ டின்ன
கொடுத்துக் குறைதீர்த்த லாற்றி—விடுத்தின்சொல்
ஈயாமை யென்ப எருமை எறிந்தொருவர்
காயக்கு லோபிக்கு மாறு.

(சொ - ள்.) *உடுக்கை மருந்து உறையுள் உண்டியோடு* - உடையும் மருந்தும் உறையுளும் உணவோடு, *இன்ன கொடுத்து குறைதீர்த்தல் ஆற்றி விடுத்து* - இவற்றை யளித்து அவர் குறையை நீக்குதலைச் செய்து, *இன்சொல் ஈயாமை* - இனிய சொற்களைக் கூறாமை, *ஒருவர் எருமை எறிந்து* - ஒருவர் உணவின் பொருட்டு எருமையைக் கொன்று, *காயக்கு லோபிக்கு மாறு* - அதனைச் சமைத்தற்குரிய காயம் வாங்குதற்கு லோபிக்கு மாற்றை யொக்கும், *என்ப* - என்று சொல்லுவார்கள்.

(க - து.) கொடைக்கு இன்சொல் இன்றியமையாது வேண்டப்படுவ தொன்றாம்.

(வி - ம்.) "மருந்து" என்றமையான் இது கொடுத்தலும் சிறந்த அறமாம். எண்ணும்மை விகாரத்தாற் றொக்கது. உம்மை விரித்து "ஒன்பதுங் குழவியோடு" என்பதுபோலக் கொள்க. *ஆற்றிவிடுத்து:* ஒருசொல் நீர்மைத்து. உணவின் பொருட்டு எருமையை வாங்கி அதனைக் கொன்று, காயம் வாங்குதற் பொருட்டு லோபித் தொழிவார், அதன் சுவையை முற்றும் அடையாததுபோல, வறியார்க்கு வேண்டுவன, இன்சொல் இன்றி ஈவார், அதனால் வரும் இன்பத்தை முற்றும் அடையாது ஒழிவர்.

"எருமை எறிந்தொருவர் காயக்கு லோபிக்கு மாறு" என்பது பழமொழி. (௪உ)

339. தந்தமக்குக் கொண்ட குறியே தவமல்ல
செத்துக சாந்து படுக்கமனன்—ஒத்துச்
சகத்தனுய் நின்றொழுகும் சால்பு தவமே
நுகத்துப் பகலாணி போன்று.

(சொ - ள்.) *தந்தமக்குக் கொண்ட குறி தவம் அல்ல* - தத்தமக்குத் தோன்றியவாறே கொண்ட வேடங்கள் தவமாகா; *செத்துக* - வாளாற் செத்துக, *சாந்து படுக்க* - அன்றி குளிர்ந்த சந்தனத்தைப் பூசுக, *மனன் ஒத்து* - மனம் பொருந்தி, *நுகத்துப் பகல் ஆணி போன்று* - நுகத்தினகண் நடுவு நிற்கும் பகலாணியை

ஒப்ப, சகத்தனாய் நின்று ஒழுகும் சால்பே தவம் – ஒன்று பட்டவனாகி நடுவு நிலையினின்று ஒழுகும் அமைதியே தவமாம்.

(க - து.) காய்த லுவத்த லின்றி ஒழுகும் அமைதியே தவமாம்.

(வி - ம்.) "தத்தமக்குக் கொண்ட குறி" என்றது மழித்தல், நீட்டல், மயிற்பீலி கோடல் முதலியனவாம். ஏகாரம் அசைநிலை. "மனன் ஒத" தலாவது செஞ்சாந் தெறியினும் செத்தினும் போழினும் நெஞ்சோர்ந் தாடா நிலைமை. தவமே என்றதன்கண் உள்ள ஏகாரத்தைப் பிரித்துச சால்பு என்றதனோடு கூட்டுக. "நுகத்துப் பகலாணி" நடுநிலைமைக்கு எடுத்துக் காட்டப்படுவது ஒன்று. "நுகத்திற் பகலனையாய்" என்பது தஞ்சைவாணன் கோவை. நுகமாவது நுகததடி எனப்படுவது.

"நுகத்துப் பகலாணி போன்று" என்பது பழமொழி. (கூ)

340. உள்ளது ஒருவர் ஒருவர்கை வைத்தக்கால்
கொள்ளும் பொழுதே கொடுக்கதாம்—கொள்ளார்
நிலைப்பொரு ளென்றதனை நீட்டித்தல் வேண்டா
புலைப்பொருள் தங்கா வெளி.

(சொ - ள்.) உள்ளது ஒருவர் ஒருவர் கை வைத்தக்கால் – தன்னிடத்துள்ளதொரு பொருளை ஒருவர் ஒருவரிடத்துக் காவல் செய்து தருமாறு கொடுத்தால், கொள்ளும் பொழுது – அவர் வேண்டியபொழுது, தாம் கொள்ளார் கொடுக்க - தாம் அகப்படுத்திக் கொள்ளாமல் கொடுக்கக் கடவர், நிலைப்பொருள் என்று நீட்பித்தல் வேண்டா - நிலைமையான பொருள் என்று கருதி கொடாது காலம் நீட்டித்தல் வேண்டா; புலைப்பொருள் தங்கா வெளி - புலால் நாறும் பொருள் எங்ஙனம் மறைப்பினும் மறைபடாது வெளிப்பட்டுவிடும் ஆதலான்.

(க - து.) அடைக்கலப்பொருளைக் கொள்ளாது வேண்டிய பொழுது கொடுத்துவிடுக.

(வி - ம்.) தங்கா என்பது ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம். வெளி: முதனிலை முற்று. புலைப்பொருள் வெளியாதல் போல, அடைக்கலப்பொருளைக் காப்பின், மறைபடாது வெளிப்படுதல் உறுதி.

"புலைப்பொருள் தங்கா வெளி" என்பது பழமொழி. (சய)

341. நன்றே ஒருவர்த் துணையுடைமை பாப்பிடுக்கண்
நண்டேயும் பார்ப்பான்கண் தீர்த்தலான்—விண்டோயும்
குன்றகல் நன்னாட ! கூறுங்கால் இல்லையே
ஒன்றுக் குதவாத ஒன்று

(சொ - ள்.) விண் தோயும் குன்று அகல் நன்னாட - ஆகாயத்திற் பொருந்தும் குன்றுகள் அகன்ற நல்ல நாடனே!, ஒருவர் துணையுடைமை நன்றே - ஒருவர் ஒருவரைத் துணையாகக் கொள்ளுதல் நல்ல தொன்றே; பாப்பு இடுக்கண் - பாம்பான் வரக்கடவதொரு துன்பத்தை, பார்ப்பான்கண் நண்டேயும் தீர்த்தலான் - பார்ப்பானிடத்துத் துணையாக வந்திருந்தது சிறிய நண்டேயாயினும் (அதனை) நீக்குதலால், கூறுங்கால் - சொல்லுமிடத்து, ஒன்றுக்கு உதவாத ஒன்று இல்லை—ஒன்றிற்கும் உதவாத ஒரு சிறு பொருளும் இல்லை.

(க - து.) துணைபெற்று வழிசசெல்லுதல் நல்லது.

(வி - ம்.) பாப்பு வலித்தல் விகாரம். பாப்பு இடுக்கண்: மூன்றன் தொகை. ஒன்றுககும் ஒன்றும் என்னும் முற்றும்மைகள் தொக்கு நின்றன. நண்டேயும பார்ப்பான்கண தீர்த்தலான் என்றது ஆசிரியருடைய கருமம் முடிக்கும்பொருட்டு வேற்றூருக்குச செல்லுமொருவன் தன் தாய் கட்டளைப்படி துணையாக ஒரு நண்டினையும் கொண்டுசென்றான், அயர்ந்து ஒரு மரத்தடியில் அவன் தூங்கும்பொழுது அவனைக் கொல்லும்பொருட்டு வந்த நாகத்தை நண்டு கொடுககால் இறுகப் பிடித்துக் கொன்றதென்பதாம்.

"ஒன்றுக் குதவாத ஒன்று இல்லை" என்பது பழமொழி. (கரு)

342. விடலரிய துப்புடைய வேட்கையை நீக்கிப்
படர்வரிய நன்னெறிக்கண் நின்றார்—இடருடைத்தாப்
பெற்ற விடக்கு நுகர்தல் கடனீந்திக்
கற்றடியு ளாழ்ந்து விடல்.

(சொ - ள்.) விடல் அரிய துப்பு உடைய வேட்கையை - விடுதற்கரிய வலிமை உடைய பற்றினை, நீக்கி - முற்ற அறுத்து, படர்வு அரிய நன்னெறிக்கண் நின்றார் - ஒழுகுதற்கரிய நல்ல துறவற நெறியின்கண் நின்றவர்கள், இடர் உடைத்தா(க) - பசி நோய் வந்துற்றதாக. பெற்ற விடக்கு நுகர்தல் - அதன் பொருட்டுத் தானே வந்துற்ற புலாலை உண்ணுதல், கடல் நீந்தி

கன்று அடியுள் ஆழ்ந்து விடல் – கடலினை நீந்திக் கன்றினது குளம்படி நீரினுள் அமிழ்ந்துவிடுவதை யொக்கும்.

(க - து) துறவற நெறியில் நின்றார் எக்காலத்தும் புலால் உண்ணல் ஆகாதாம்.

(வி - ம்.) விடலரிய துப்புடைய வேட்கை எனப் பற்று விடுதலின் அருமையும், "படர் வரிய நன்னெறி" எனத் துறவற நெறியடைதலின் அருமையும் குறிப்பித்தார். தானே வந்தெய்தினும் நுகர்தல் ஆகாது என்பார், "பெற்ற விடக்கு" என்றார். விடுதற்கரிய ஆசைக் கடல்களெல்லாம் நீந்திச் சென்றார்,பசிநோய் பொறாது புலாலுண்ணுதல், கடல் நீந்தினார் கன்றின் குளம்படி நீரில் நீந்த முடியாது அமிழ்தலை யொக்கும். அவரது நிலையை இழித்துவிடும் என்பதாயிற்று. பட்ட பாடெல்லாம் பயனிலதாய் முடியும். கன்று எதுகை நோக்கி வலித்தது.

"கடனீந்திக் கற்றடியு ளாழ்ந்துவிடல்" என்பது பழமொழி.

(கஉ)

343. சேறலிற் கொலைபுரிந்து சேறுவப்பா ராகி
அறிவின் அருள்புரிந்து செல்லார்—பிறிதின்
உயிர்செகுத் தூன்றுய்த் தொழுகுதல் ஓம்பார்
தயிர்சிதைத்து மற்றொன் றடல்.

(சொ - ள்.) அறிவின் அருள் புரிந்து செல்லார் - பிற உயிர்களுக்கு அறிவினால் அருள்செய்து மறுமை இன்பத்தை யடையாராகி, செறலின் கொலை புரிந்து-அறிவின் மயக்கத்தால் உயிர்களைக் கொலைசெய்து மறுமை இன்பத்தை அடையப்போவதாக மன முவப்புடையாராகி, பிறிது இன்னுயிர் செகுத்து-(ஊன் கொண்டு வேட்டால் மறுமை யடைதல் உறுதியென்று) அதன் பொருட்டுப் பிறிதொன்றனது இனிய உயிரை நீக்கி, ஊன துய்த்து ஒழுகல் - புலாலை மனம் பொருந்தி உண்டு ஒழுகுதல், ஓம்பார் தயிர் சிதைத்து மற்றொன்று அடல்-உடலைப் பாது காவாதார் சுவை கருதித் தயிரினை அழித்து மற்றோருணவாக மாற்றிச் சமைத்தலோ டொக்கும்.

(க - து.) வேள்விக்கண்ணும் கொலைபுரிதல் தீதாம்.

(வி - ம்.) "அறிவின் அருள் புரிந்து" என்றமையானும், செறல் அறிவின் மாறுபாடாகலானும், செறலின் என்பதற்கு அறிவின் மயக்கத்தால் என்று பொருள் கூறப்பட்டது. அச் செயலால் அவர் மறுமை இன்பம் அடைதல் இல்லை யென்பார், "சேண்" என்றார். அச்செயலால் வேள்வி செய்வார் அவர் தம்

மனைவியையும் மக்களையும் கொன்று வேள்வி செய்வதைக் கண்டிலமென்பார், "பிறிது" என்று அஃறிணையைக் கூறினர். உடல் ஓம்பாராகிச் சுவை யொன்றனையே ஓம்புவார், தயிரை மற்றொன்றாகச் சமைத்தல்போல, ஊன் துய்த்தலையே கருதுவார் மறுமை என்றும், வேள்வி என்றும் மாற்றி மறைந்தொழுகுவர். உடல் ஓம்பார் என்றது தயிரை மற்றொன்றாகச செய்யின், அதனது வலிவு குறைதல்பற்றி.

"தயிர் சிதைத்து மற்றொன்று அடல்" என்பது பழமொழி.
(கஎ)

344. நன்கொன் றறிபவர் நாழி கொடுப்பவர்க்
கென்றும் உறுதியே சூழ்க எறிதிரை
சென்றுலாம் சேர்ப்ப! அதுபோல நீர்போயும்
ஒன்றிரண்டாம் வாணிக மில்.

(சொ - ள்.) எறி திரை சென்று உலா(வு)ம் சேர்ப்ப - வீசுகின்ற அலைகள் மிக்குசசென்று கரைமேல் உலாவுகின்ற கடல் நாடனே!, நன்கு ஒன்று அறிபவர் - நன்றாக ஒரு பொருளின் கூறுபாட்டை அறிகின்றவர்கள், நாழி கொடுப்பவர்க்கு - நாழி அரிசியேயாயினும் அதனைக் கொடுக்கின்றவர்களுக்கு, என்றும் உறுதியே சூழ்க - எக்காலத்தும் அவர்க் குறுதி தரத்தக்கனவற்றையே நினைக்கக்கடவாராக, நீர் போயும் ஒன்று இரண்டாம் வாணிகம் அதுபோல இல் - கடல் கடந்து சென்று ஒன்று கொண்டு இரண்டாகப் பெருக்கும் வாணிகமும் அதைப்போல ஆவதில்லை.

(க - து) நீ, நன்மை செய்தார்க்கு எக்காலத்தும் நன்மை செய்யும் விருப்புடையவனாக இரு. அதனால் மிகுந்த நன்மை உண்டாம்,

(வி - ம்.) மற்றொருகால் தாம் வேண்டிய வழி, அவர் கொடுக்க மறுத்த இடத்தும் என்பார், "என்றும்" என்றார். போயும் என்றதன்கணுள்ள உம்மையைப் பிரித்து வாணிகம் என்பதனோடு கூட்டுக. கடல் கடந்து சென்று செய்யும் வாணிகமும் ஒன்று இரண்டாதலே யன்றி, நன்றியறிவுடையார் வேண்டியபொழுதே வேண்டியன பெறுதல்போலப் பெறக்கூடாமையின், "அதுபோல இல்" என்றார். நன்மை செய்தார்க்கு நன்மையை நினைத்தொழுகின், அளவற்ற நன்மையை அடையஇயலும்.

"நீர் போயும் ஒன்றிரண்டாம் வாணிக மில்" என்பது பழமொழி.
(கஅ)

345. தமனென் றிருநாழி ஈத்தவ னல்லால்
நமனென்று காயினும் தான்காயான் மன்னே
அவனிவ னென்றுரைத் தெள்ளிமற் றியாரே
நமநெய்யை நக்கு பவர்.

(சொ - ள்.) *தமன் என்று இரு நாழி ஈத்தவன் காயினும் அல்லால் - தம்முடைய சுற்றத்தானென்று கருதி இருநாழி அரிசியைக் கொடுத்தவன் வெகுளினும் வெகுள்வதன்றி, நமன் என்று அவன் இவன் என்று உரைத்து எள்ளி - சுற்றத்தான் என்பது கருதி அவன் என்றும் இவன் என்றும் இகழ்ந்து கூறி நகையாடி, தான் காயான் - நன்றியறிதலுடையான் மனவெறுப்புக்கொள்ளான், நம நெய்யை நக்குபவர் யார் - மந்திரங் கூறிக் குண்டத்தில் விட வைத்த ஆனெய்யை நக்கிச் சுவை பார்ப்பார் யாவர்? (ஒருவரு[மிலர்.)*

(க - து.) *ஒருவன் தனக்கு உதவி செய்தவன் காய்வானாயினும் தான் காய்தலை யொழிக என்றது இது.*

(வி - ம்.) *"காயினும்" என்றாராயினும், "தமனென்று இரு நாழி ஈத்தவன்" என்றலின், காய்தல் ஒருதலை யன்றாம். அவன், இவன் என்பன இகழ்ச்சிக் குறிப்பாயின. நம என்பது மந்திரத்தின் ஈற்றில் நிற்பது. வேள்விக்கிடுவான் வைத்த நெய்யையாரும் சுவை பார்த்தல் இல்லாதவாறுபோல, உதவி பெற்றார் தமக்குதவி செய்தாரைக் காயக்கடவரல்லராம்.*

"யாரே நமநெய்யை நக்குபவர்" என்பது பழமொழி. (கரு)

346. நாடி நமரென்று நன்கு புரந்தாரைக்
கேடு பிறரோடு சூழ்தல் கிளர்மணி
நீடுகல் வெற்ப ! நினைப்பின்றித் தாமிருந்த
கோடு குறைத்து விடல்.

(சொ - ள்.) *கிளர் மணி நீடு கல் வெற்ப - விளங்குகின்ற மணிகள் பொருந்திய நீண்ட கற்பாறைகளையுடைய மலைநாடனே!, நாடி நமர் என்று நன்கு புரந்தாரை - ஆராய்ந்து நம்மவர் என்று கருதி வேண்டியன உதவி நன்றாகக் காப்பாற்றியவர்களை, கேடு பிறரோடு சூழ்தல் - காப்பாற்றப்பட்டவர்கள் அவர்க்குச் செய்யத்தக்க தீமையை அவர் பகைவரோடு சேர்ந்து எண்ணுதல், நினைப்பு இன்றி தாம் இருந்த கோடு குறைத்துவிடல்-ஒருவன் உணர்வின்றித் தான் தங்கியிருந்த கோட்டின் அடியை வெட்டி வீழ்த்தி உயிர்விடுதலை யொக்கும்.*

(க - து.) செய்த உதவியை மறந்து தீமை செய்பவன் பற்றுக்கோடின்றி அழிவது விதி.

(வி - ம்.) கேடு, கேடு தருஞ் செயல்கள். தான் சூழ்தலேயன்றி அவர் பகைவரோடு சேர்ந்தும் சூழ்தலின், உயிர்விடுதலையொக்கும் என்றார். "உயிர் விடுதலாவது" தாம் அவர்க்குக் கேடு சூழ்தலால் காப்பாற்றியோரால் துரக்கப்பட்டுக் களைகணின்றி, தன்னைத்தான் புறந்தரு மாற்றலுமின்றி அலக்கணுற்று அழிவது. "நினைப்பு இன்றி" என்றமையான், கிளையின் மீதுற்றார் தாம் இருக்கும நிலையறியாது உணர்வின்றி வெட்டி வீழ்தல் போல, செய்த நன்றியறிதலின்றி உணர்வழிந்து கேடு சூழ்ந்து ஒழிவர் என்பதாம்.

"நினைப்பின்றித் தாமிருந்த கோடு குறைத்துவிடல்" என்பது பழமொழி. (உ0)

347. பண்டினை ரென்று தமரையுந் தம்மையும்
கொண்ட வகையால் குறைதீர நோக்கியக்கால்
விண்டவரோ டொன்றிப் புறனுரைப்பின் அஃதாலவ்
வுண்டவில் தீயிடு மாறு.

(சொ - ள்.) பண்டு இனர் என்று - முன்பு இத்தன்மையுடையார் என்று, தமரையும தம்மையும் கொண்ட வகையால் - தஞ் சுற்றத்தாரையும் தன்னையும் ஏற்றுக்கொண்ட சிறப்பு வகையாலேயே, குறை தீர நோககியக்கால் - குறை தீருமாறு நோக்கியவிடத்து, விண்டவரோடு ஒன்றி புறன் உரைபபின் - நோக்கப்பட்டார் அவர் பகைவரோடு சேர்ந்து புறங்கூறுதலுறின், உண்ட அ இல் தீ இடுமாறு அஃதால் - இனிய உணவு ஏற்ற அவ்வீட்டிலேயே நெருப்பு இடுமாற்றை ஒப்பது அதுவேயாம்.

(க - து.) செய்ந்நன்றி கோறல் பழிக்குக் காரணமாம்.

(வி - ம்.) செல்வராயிருந்த காலத்து எங்ஙனம் மதிப்புற்று ஒழுகினார்களோ அங்ஙனமே ஒழுகினார்கள் என்பார், "கொண்ட வகையால்" என்றார். விண்டவர், பிரிந்து நின்றவர் எனப் பொருள்படும்; விள்ளுதல் அடியாகப் பிறந்தது. அஃதால் என்று தேற்றியது, உண்ட இல் தீயிடுமாற்றை யொப்பது பிறிதியாதுமில்லை; அதுவே யென்று ஆராய்ந்து கூறியவாறும்.

"உண்ட இல் தீயிடு மாறு" என்பது பழமொழி. (உக)

31. உறவினர்

348. நமக்குற்ற தேயாகத் தம்மடைந்தார்க் குற்ற
தெமக்குற்ற தென்றுணரா விட்டக்கால் என்னும்
இமைத்தருவி பொன்வரன்றும் ஈர்ங்குன்ற நாட
உமிக்குற்றுக் கைவருந்து மாறு.

(சொ - ள்.) அருவி இமைத்து பொன் வரன்றும்-அருவிகள் விட்டு விளங்கிப் பொன்னைக் கொழித்து இழியும், ஈர்ங் குன்ற நாட - குளிர்ச்சி பொருந்திய மலைநாடனே!, தம் அடைந்தார்க்கு உற்றது தமக்கு உற்றதேயாக-தம்மை ஒரு பொருளாகக்கொண்டு அடைந்தவர்களுக்குற்ற தீமை தம்மை அடைந்ததாகவே நினைத்து, எமக்கு உற்றது என்று உணராவிட்டக்கால்-அதனால் வரும் துன்பமும் எம்மை யடைந்ததேயாம் என்று அறிதலின்றி அதனைக் களையாது விட்டவிடத்து, என் ஆம் – அவர் என்ன ஆவர்? உமி குற்றுகை வருந்துமாறு - உமியைக் குற்றுதலான் கை வருந்துமாற்றை யொக்கும்.

(க – து.) தம்மை யடைந்தாரைத் தாம் காத்தல் வேண்டும்.

(வி - ம்.) தமக்குற்றது, எமக்குற்றது என்பன தீய செயலும், அதனான் வருந் துன்பமுமாம். உணரா என்பது ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம். என்னும் என்ற வினா யாதும் செய்ய ஆற்றான் எனப் பொருள் பயந்து நின்றது. குற்று என்பது எதுப் பொருட்டின்கண் வந்த முதனிலை வினையெச்சம். உமிக் குற்றுதலான் பயன்பெறா தொழிதலேயன்றிக் கையும் வருந்துதல் போல, அவராற பயன்பெறா தொழிதலேயன்றி, அவரையே களைகணாக நம்பி வேறு முயற்சியின்றி இருத்தலின், அவர் கை விட்டவிடத்து அதனை நீக்கமுடியா தழுங்கும் அல்லலும் உளவாம்.

"உமிக்குற்றுக் கைவருந்துமாறு" என்பது பழமொழி. (க)

349. சேர்ந்தா ரொருவரைச் சேர்ந்தொழுகப் பட்டவர்
தீர்ந்தாராக் கொண்டு தெளியினும்—தேர்ந்தவர்க்குச்
செல்லாமை காணுக்கால் செல்லும்வாய் என்னுண்டாம்
எல்லாம்பொய் அட்டூணே வாய்.

(சொ - ள.) சேர்ந்தார் ஒருவரை-தம்மை அடைந்தாராகிய ஒருவரை, சேர்ந்து ஒழுகப்பட்டவர் - அவரா லடைந்து ஒழுகப் பட்டவர், தீர்ந்தாரா(க) கொண்டு தெளியினும் - தொடர்பு

இல்லாதவராகக் கொண்டு தெளிய அறியினும், தேர்ந்து — ஆராய்ந்து, அவர்க்கு செல்லாமை காணுக்கால் - விட்டு நீங்குத லில்லா வறுமையை நீக்க அறியானாயின், செல்லும் வாய் என் உண்டாம் - அவனுக்குச செல்லும நெறி வேறு யாதுளது? எல்லாம் பொய் - (உணவு அளித்தலை நோக்க, ஏனைய எல்லா அறங்களும் பொய்) அட்டு ஊணே வாய் - சமைத்துச செய்த உணவை இடுமறமே மெய்யாமாதலின்.

(க - து.) எல்லா அறங்களுள்ளும் உணவளித்தலே சிறந்த அறமாகக் கருதப்படும்.

(வி - ம்.) தீர்தல் - பற்றுவிடுதல்: தீர்ந்தார், தொடர்பு இல்லாதவர்கள். தீர்ந்தாராகக் கொண்டு தெளியினும் என்றமை யானே, தீராதவர் செல்லல் காணவேண்டும் என்பது பெறப் படும். வறுமையைச் ''செல்லாமை'' என்றார், தரித்திராத நிலைமையதாயினும், நிற்கும் ஒரு கணத்துள்ளேயே அது செய்யும் கொடுமை நோக்கி. ''என்னுண்டாம்'' என்றது, வறியார்க்கு உணவளித்தலே சிறந்தது என வினவகையால் யாப்புறுத்த வாறும். பொய்யென்றும ''வாய்'' என்றும் கூறியது, ஒன்றனை ஒன்று நோககியேயாம். வாய் ஈண்டு உறுப்பை உணர்த்தாது அதனது காரியத்திற் காயிற்று. வாய்மையைப் பேசுவதற்கே வாய் என்பது பெயராம். பொய்ம்மையைப் பேசும் உறுப்பைத் ''தோல்'' என்பார் ஆசிரியர்கள்.

''எல்லாம் பொய் அட்டூணே வாய்'' என்பது பழமொழி. (உ)

350. அல்லல் ஒருவர்க் கடைந்தக்கால் மற்றவர்க்கு
நல்ல கிளைகள் எனப்படுவார்—நல்ல
வினைமரபின் மற்றதனை நீக்கும் அதுவே
மனைமர மாய மருந்து.

(சொ - ள்.) ஒருவர்க்கு அல்லல் அடைந்தக்கால் - ஒருவாக் குத் துன்பம் வந்தமையுமானல் அவாககு நல்ல கிளைகள் எனப் படுவார — அவருக்கு நெருங்கிய உறவினா என்று சொல்லப்படு பவர்கள், நல்ல வினை மரபின் அதனை நீக்கும - நல்ல செயல் முறையான் அத் துன்பத்தை நீக்க முறபடுக, அது — அசசெயல், மனைமரம் ஆய மருந்து-இல்லின்கண் உள்ள மரமாகிய மருந்தினை யொககும் அல்லலுற்றாககு.

(க - து.) அல்லலுற்ற காலத்து அவ்வல்லலை நீக்குபவரே சுற்றத்தார் எனப்படுவார்.

(வி - ம்.) ஒருவன் அல்லலுற்ற காலத்து அவன் வருந்தாது அவ்வல்லலை நீக்கும் கிளைஞர்கள் மனையின்கண் உள்ள மருந்து மரத்திற்கு ஒப்பாவார்.

"மனை மர மாய மருந்து" என்பது பழமொழி. (௩)

351. மெய்யா உணரிற் பிறர்பிறர்க்குச் செய்வதென் ?
மையார் இருங்கூந்தல் பைந்தொடி ! எக்காலும்
செய்யா ரெனினும் தமர்செய்வர் பெய்யுமாம்
பெய்யா தெனினும் மழை.

(சொ - ள்.) மை ஆர் இரும் கூந்தல் பைந்தொடி - கருமை நிறைந்த நீண்ட கூந்தலையும் பசிய தொடியினையும் உடையாய்! மெய்யா(க) உணரின் - உண்மையாக ஆராயின், பிறர் பிறர்க்குச் செய்வது என் - உறவினரல்லாதோரா பிறருக்குச் செய்யப் போவது என்ன இருக்கின்றது ? எக்காலும் செய்யார் எனினும்- ஒரு காலத்தும் செய்யமாட்டார் என்று கருதும்படி இருந்தாரே யாயினும், தமர் செய்வர் - உறவினரே ஒரு நன்மையைச் செய்வார்கள், பெய்யாதெனினும் பெய்யும் மழை - குறித்த ஒரு பருவகாலத்தில் பெய்யாதொழியினும் பின்னையும் பெய்வது மழையேயாதலான்.

(க - து.) உறவினரே தமக்குற்ற துன்பத்தை நீக்கும் உரிமையுடையவராதலால், அவரோடு சேர்ந்தொழுக என்றது இது.

(வி - ம்.) பிறர் என்றது, உறவினரல்லாதார் மேனின்றது. "செய்வது என்" என்றது, செய்வதுமுண்டாயினும் ஒருதலை யன்மையை உணர்த்தின்றது. ஒரு காலத்துப் பெய்யாதொழி யினும் பின்னையும் பெய்தல மழை யாமாறுபோல, ஒருகாலத்துச் செய்யாராயினும் பின்னையும் செய்தற்குரியார் உறவினரேயாம். ஆதலின், அவரை நெகிழவிடாதொழிக.

"பெய்யுமாம் பெய்யா தெனினும மழை" என்பது பழமொழி. (௪)

352. முன்னின்று ராயினும் மூடும் இடர்வந்தால்
பின்னின்று ராகிப் பிரியார் ஒருகுடியார்
பொன்னுச் செயினும் புகாஅர் புனலூர !
துன்னினு ரல்லார் பிறர்.

(சொ – ள்.) புனல் ஊர - நீர்நாடனே!, ஒரு குடியார்-ஒரு குடியிற் பிறந்தவர்கள், முன் இன்னாராயினும்-முன்னர் இனிமையுடையவ ரல்லராயிருப்பினும், மூடும் இடர் வந்தால் - மிகத் துன்பம் வந்துற்றவிடத்து, பின் இன்னாராகிப் பிரியார் - பின்னரும் இனிமையுடையரல்லராகிப் பிரிந்திரார், துன்னினர் அல்லார் பிறர் - ஒரு குடிப்பிறந்தவ ரல்லவராகிய பிறரை, பொன்னே(க) செயினும் புகார் - பொன்போலப் போற்றிச் செயினும் தமக்கு இடர் வந்த ஞான்று அதனை நீக்கப் புகுதலிலர்.

(க - து.) ஒரு குடியிற் பிறந்தவர்கள் தம்முள் ஒருவர்க்குத் துன்பம் வந்துற்றபொழுது மாறுபாடு நீங்கி உதவி செய்வர் என்பதாயிற்று.

(வி – ம்.) "மூடும் இடர்" என இடரின் மிகுதி கூறியவாறு. "பின்" என்றதன்கண் உம்மை தொக்கது. "பொனனேச் செயினும்" என்பதற்கு, உதவிசெய்து செல்வமுடையவனாக ஆக்கினும் என்றலும் ஒன்று. பொன்னைப் போலத் தன்னைப் போற்றப்படினும் என்றமையால், தான் இன்னா செய்தலால் முன் இன்னாரா யிருப்பினும் என்று, தன்னுலாயதாகக் கொள்க. துன்னினா அல்லார், உறவினரல்லாரை உணர்த்தி நின்றது.

"பொன்னேச செயினும் புகாஅர் புனலூர
துன்னினுர் அல்லார் பிறர்" என்பது பழமொழி. (௫)

353. உளைய உரைத்து விடினும் உறுதி
கிளைகள்வாய்க் கேட்பதே நன்றே—விளைவயலுள்
பூமிதித்துப் புட்கலாம் பொய்கைப் புனலூர
தாய்மிதித்த ஆகா முடம்.

(சொ – ள்.) விளை வயலுள் - நெல் விளைகின்ற கழனியுள், பூ மிதித்து - பூக்களை மிதித்து, புள் கலா(வு)ம் பொய்கை புனல் ஊர - பறவைகள் தம்மிற் கூடி மகிழும் குளங்களையுடைய நீர் நாடனே, தாய் மிதித்த முடம்ஆகா - தாயால் மிதிக்கப்பட்ட கால்முடம்படுதல் இல்லை (ஆதலால), உளைய உரைத்துவிடினும்– மனம் நோவுமாறு உரைபபாராயினும், உறுதி – உறுதியாயின வற்றை. கிளைகள்வாய் கேட்பதே நன்று - சுற்றத்தாரிடத்துக் கேட்டறிதலே நல்லது.

(க - து) சொற்கொடுமை நோக்காது உறுதியாயின வற்றை உறவினரிடத்துக் கேட்டறிக.

(வி - ம்.) "உளைய உரைத்துவிடினும்" எனவே, சுற்றத்தார் எது செய்தாயினும் நல்வழியில் நிறுத்தும் கருத்துடையார்

என்பது அறியப்படும். மனம் உளையுமாறு உரைத்தால் தனக்கு நல்லது சொல்வதாக அறிந்துகொள்வான் என்பது கருதித் தீமையையும் மனம் உளையுமா றுரைப்பாரும் உளராகலின், "இளைகள் வாய்க கேட்பதே நன்று" என்றார். மிதித்த என்பது செயப்பாட்டு வினைப்பெயர். தாயால் மிதிக்கப்பட்டன முடமாதலைக் காண்டலில்லை. சுற்றத்தார் நோவ உரைப்பினும், அதனான் வரும் குற்றமொன்றுமில்லை. அவரைக் கேட்டே அறிக.

"தாய் மிதித்த ஆகா முடம்" என்பது பழமொழி. (சு)

354. தன்னை மதித்துத் தமரென்று கொண்டக்கால்
என்ன படினும் அவர்செய்வ செய்வதே
இன்னொலி வெற்ப இடரென்னை துன்னூசி
போம்வழி போகு மிழை.

(சொ - ள்) இன் ஒலி வெற்ப - இனிய ஓசையை உடைய மலைநாடனே!, தன்னை மதித்து தமர் என்று கொண்டக்கால் - ஒருவன் தன்னை மதித்துச் சுற்றத்தாராகக் கருதி ஒழுகியவிடத்து, என்ன படினும் - எல்லாத துன்பமும் வந்து பொருந்தியதாயினும், அவர் செய்வ செய்வதே - சுற்றத்தார் செய்யும் உறுதியாயினவற்றைத் தாமும் செய்வதே, துன் ஊசி போம்வழி போகும் இழை - தைக்கின்ற ஊசி போகின்றவழியே செல்லும் நூலிழையை ஒக்கும்; இடர் என்னை-வரும குற்றம் யாதுளது?

(க - து.) உறவாக மதித்தார்க்கு உறவாய் நின்று உறுதி செய்க.

(வி - ம்.) ஊசிவழிச் செல்லும் நூல்போல, உறவாக மதிக்கப்பட்டார், அவர் வழியே செல்க என்பதாயிற்று. அவர் தமா என்று ஒழுகியதால், தாமுந் தமராய் ஒழுகுதல் கடமையாம், "என்ன படினும்" என்றமையால், துனபமும் உளவாதல் பெறப்படுதலின், "இடர் என்னை" என்றதறகு வரும் குற்றம் யாதுளது என்று கூறப்பட்டது. அதனபடியே நின்றொழுகுக என்பார், "இடா என்னை" என்றார்.

"ஊசி போம்வழி போகும் இழை" என்பது பழமொழி.(எ)

355. கருவினுட் கொண்டு கலந்தாரும் தம்முள்
ஒருவழி நீடும் உறைதலோ துன்பம்
பொருகடல் தண்சேர்ப்ப! பூந்தா மரைமேல்
திருவொடும் இன்னாது துச்சு.

(சொ - ள்.) பொரு கடல் தண் சேர்ப்ப-கரையொடு மாறு கொள்ளும் கடலையுடைய குளிர்ந்த நெய்தல் நாட!, பூ தாமரை மேல் - அழகிய தாமரையிடத்து வாழும், திருவொடும் துச்சு இன்னாது - இலக்குமியேயாயினும் நெடுநாள் உடனுறைதல் துன்பந் தருவதாம்; (அதுபோல), கருவின் உட்கொண்டு கலந்தாரும் கருவினுள் தங்கியபொழுதே தொடங்கிக் கலந்தவர்களும், தம்முள் ஒருவழி நீடும் உறைதல் துன்பம் - தமக்குள்ளே ஓர் இடத்தில் நீண்டநாளும் ஒருங்கே தங்கியிருந்து வாழுதல் துன்பம் தருவதாம்.

(க - து.) உடன்பிறந்தாராயினும் ஒரே இடத்தில் நீண்ட நாள் தங்கியிருத்தல் ஆகாது.

(வி - ம்.) கருவினுட் கொண்டார் என்றது உடன்பிறந்தாரை. இலக்குமியோடு சேர்ந்து வாழினும், இடம் பற்றியும், கால நெடுமைபற்றியும், தம்முள் மனத்தாங்கல் ஏற்பட்டு அன்பிற்கு அழிவு உண்டாம். ஆதலால், உடன்பிறந்தார் தம்முள் ஒருங்கே இருந்து உடன்வாழ்தல் அன்பு அழிதற் கேதுவாம். இடத்தாலும், காலத்தாலும் சேட்பட நிற்றல் அன்பு முதலியவற்றிற்கு ஆக்கந்தருவதாம். அங்ஙனமின்றி நிற்றல் அவை அழிவுக்கு ஏதுவாம். இன்னாது துன்பம் என்பன அவர்கொண்ட அன்பின் அழிவை உணர்த்தி நின்றன.

"திருவொடும் இன்னாது துச்சு" என்பது பழமொழி. (அ)

356. பாரதத் துள்ளும் பணையம்தம் தாயமா
ஈரைம் பதின்மரும் போரெதிர்ந் தைவரோ(டு)
ஏதில ராகி இடைவிண்டார் ஆதலால்
காதலோ டாடார் கவறு.

(சொ - ள்.) பாரதத்துள்ளும் - பாரதநூலுள்ளும், பணையம் தம் தாயமா(க) - பந்தயப் பொருள் தம்முடைய தாயப் பொருளாகக் கொண்டு, இரு ஐம்பதின்மரும் - நூற்றுவரும், ஐவரோடு போர் எதிர்ந்து - ஐவரோடும் சூதுப்போர் செய்து, ஏதிலராகி இடை விண்டார் ஆதலால் - (அது காரணமாகப்) பகைவராகி இடைக்காலத்திலேயே தம்முயிரை நீக்கிக்கொண்டார்களென்றும் கேட்கப்படுதலால், காதலோடு கவறு ஆடார் - அன்புடையவரோடு விளையாட்டாகவாயினும் சூதாடுதலிலர் அறிவுடையார்.

(க - து.) சூதாடல் உயிர்க்கிறுதியைத் தருவதாம்.

(வி - ம்.) "இடை விண்டார்" என்றது, ஊழான் வரையறுக்கப்பட்ட நாளளவும் நிலைதது நில்லாது, இடைக்காலத்திலேயே சூதாட்டால் அழிந்தொழிந்தார எனச சூதாட்டினுல் வரும் கொடுமை கூறப்பட்டது. "காதலரோடும்" என்ற உம்மை தொககது. காதல் ஈண்டு அன்பு எனப்பட்டு நின்று அதனையுடையார்கரு ஆயிற்று. "பணையம்" வைத்து ஆடினர் என்று கூறப்பட்டமையால், விளையாட்டாகவாயினும் ஆடுதல் கூடாது என்று கூறப்பட்டது. "பாரதத்துள்ளும்" என நூற் சான்று காட்டி வலியுறுத்தப்பட்டது.

"காதலோ டாடார் கவறு" என்பது பழமொழி. (க)

32. அறஞ் செய்தல்

357. சிறந்த நுகர்ந்தொழுகும் செல்வ முடையார்
அறஞ்செய் தருளுடைய ராதல்—பிறங்கல்
அமையொடு வேய்கலாம் வெற்ப! அதுவே
சுமையொடு மேல்வைப்பா மாறு.

(சொ - ள்.) பிறங்கல் அமையொடு வேய் கலாம் வெற்ப - மலையில் மூங்கிலுடனே வேய்கள நெருங்கி இணங்கி நிற்கும் வெற்பனே!, சிறந்த நுகர்ந்து ஒழுகும் செல்வம் உடையார் - சிறந்தனவாகிய இன்பங்களை அடைந்து இன்புற்றொழுகும பொருளுடையவர்கள், அறம் செய்து அருளுடையராதல் - அறங்களைச் செய்து யாவாமாட்டும் அருள் உடையவராகி ஒழுகுதலாகிய, அதுவே—அச்செயலே, சுமையொடு மேல்வைப்பு ஆமாறு- ஒருவன் பொற்சுமையோடு அதன் மேலே மணிச சுமையையும் வைத்துச சுமநது செல்லுதலை யொககும்.

(க - து) செல்வமுடையார் அறமும் அருளும் உடையவராகுக.

(வி - ம்.) அமை - கெட்டி மூங்கில். வேய் - உள் துளை உடையது. செல்வத்தின் பயனுகிய இம்மை யின்பங்களை அவர் அடைந்தொழுகலான் அறஞ் செய்து அருளுடையராகி மறுமையின்பமும் பெறுகவென்று கூறியவாறு. "அமையொடு வேய்கலாம் வெற்ப" என்பது, இன்பமாய நாட்டை உடையவன் என்பதைக் குறித்து நின்றது. நுகரும் இன்பத்தோடு, அறத்தானும், அருளானும் வரும் இன்பத்தையும் பெறுவார், பொன்னோடு மணியையும் சுமந்து செல்வாரோ டொப்பர்.

"சுமையொடு மேல்வைப்பா மாறு" என்பது பழமொழி. (க)

358. வைத்ததனை வைப்பென் றுணரற்க தாமதனைத்
துய்த்து வழங்கி இருபாலும்—அத்தகத்
தக்குழி நோக்கி அறஞ்செய்யின் அஃதன்றே
எய்ப்பினில் வைப்பென் பது.

(சொ - ள்.) *வைத்ததனை வைப்பு என்று உணரற்க* - தான் தேடி வைத்த பொருளைப் பின்னர் வந்து பயன்படுவதாகக் கருதற்க, *தாம் அதனை* - தாம் அப்பொருளை, *துய்த்து வழங்கி* - நுகர்ந்தும் பிறருக்குக் கொடுத்தும், *இரு பாலும் அத்தக* - இருமைக்கும் அழகுண்டாகுமாறு, *தக்குழி நோக்கி அறம் செய்யின்* - செய்யத் தகுந்த இடம் நோக்கி அறங்களைச் செய்யின், *எய்ப்பினில் வைப்பு என்பது அஃது அன்றே* - தளர்ந்த காலத்து உதவும் பொருள் என்பது அதுவன்றோ?

(க - து.) அறமே எய்ப்பினில் வைப்பாம்.

(வி - ம.) பின்னர்ப் பெறுதல் ஒருதலை யன்மையான் வைப்பென் றுணரற்க என்றார். தான் உண்ணுதலும் அற மாதலின், துய்த்து என்றார். வைப்பு என்பது பின்னர் உதவுமாறு வைக்கப்படும் பொருள்.

"எய்ப்பினில் வைப் பென்பது" என்பது பழமொழி. (உ)

359. மல்லற் பெருஞ்செல்வம் மாண்டவர் பெற்றக்கால்
செல்வுழியும் ஏமாப்பச் செய்வதாம்—மெல்லியல்
சென்றொசிந் தொல்கு நுசுப்பினாய் பைங்கரும்பு
மென்றிருந்து பாகு செயல்.

(சொ—ள.) *மெல் இயல்*-மென்மையான சாயலையும், *சென்று ஒசிந்து ஒல்கும் நுசுப்பினாய்* - தளர்ந்து துவண்டு வளையும் இடையினையும் உடையாய, *மல்லல் பெரும் செல்வம்* - வளமையைத் தரும் மிக்க செல்வத்தை, *மாண்டவர் பெற்றக்கால்* - மாட்சிமை யுடையார் பெற்றால், *செல்வழியும் ஏமாப்ப செய்வது* - இனிச் செல்லுகின்ற மறுமையிலும் இன்புறுமாறு அதற்கான அறத்தைச் செய்துகொள்வது, *பைங்கரும்பு மென்றிருந்து பாகு செயல் ஆம்* - பசிய கரும்பினைச் சுவைத்தறிந்து மேலும் சுவைக்கப் பாகு செய்துகொள்ளுதலை யொக்கும்.

(க - து.) பொருள் பெற்றால் இம்மைக்கும் மறுமைக்கும் ஆவனவாகிய அறத்தை அதனைக்கொண்டு செய்துகொள்க.

(வி - ம்.) "செல்வுழியும்" என்ற இறந்தது தழீஇய உம்மையான் இம்மைக்குரிய புகழ் செய்துகொள்ளலும் கொள்ளப்படும். அங்ஙனம் இரண்டும் செய்துகோடல் கரும்பினைச் சுவைத்துப் பின்னும் சுவைத்தற்குப் பாகு செய்து வைத்துக்கொள்ளுதலை யொக்கும். மறுமைக்கு வேண்டுவனவற்றைப் பொருள் பெற்ற பொழுதே அதன் அருமையறிந்து செய்துகொள்ளுதலின், அவர் "மாண்டவர்" எனப்பட்டார். மாட்சிமையில்லார் செல்வம் பெற்றால், மறுமையிலும் துன்புறத்தக்க செயலைச் செய்து கொள்வர் என்ற பொருள் ஆற்றலாற் கொள்ளப்படும்.

"கரும்பு மென்றிருந்து பாகு செயல்" என்பது பழமொழி. (௯)

360. ஈனுலகத் தாயின் இசைபெறூஉம் அஃதிறந்
தேனுலகத் தாயின் இனிததூஉம்—தானொருவன்
நாள்வாயும் நல்லறஞ் செய்வாற் கிரண்டுலகும்
வேள்வாய் கவட்டை நெறி.

(சொ - ள்.) ஒருவன் தான் - அறஞ் செய்கின்ற ஒருவன், ஈனுலகத்தாயின் இசை பெறும்-இவ்வுலகின் கிறந்து ஆராய்வோமாயின் புகழினைப் பெறுவான, அஃது இறந்து - இவ்வுலகினின்றும் நீங்கி, ஏனுலகத்தாயின் - மறுமை யுலகத்தின்கண் சென்றாயின், அதுவும் இனிது - அவ்வுலகமும் இனிதாக ஆகும். (ஆதலின்), நாள்வாயும் நல்லறம் செயவாற்கு - நாள்தோறும் நன்மையைப் பயக்கும அறங்களைச் செய்கின்றவனுக்கு, இரண்டு உலகும் கவட்டை நெறி வாய் வேள் - இரண்டுலகினின்பமும் கவட்டை நெறியின்கண் உளவாகிய கலியாணங்களைப் போலும்.

(க - து) இம்மை மறுமை இன்பங்களை அறம் எய்துவித்தலால், அதனை நாள்தோறும் செய்க.

(வி - ம்.) இ + உலகம், முதல் நீண்டு நின்றது. இன் இசை நிறைக்கும் பொருட்டு வந்தது. ஏனை + உலகம், நிலைமொழி உயிர் கெட்டு நின்றது. "இனிது அதுவும்" என்றது மறுமை யின்பத்தையும் அடைவான் என்பதை. ஒரு காரியங் கருதி ஒருவன் ஓர் ஊருக்குச் செல்லுகின்றான். அவ்வூருக்கு இரண்டு வழிகள் உள. அவ்விரண்டு வழிகளிலும் அவன் சேறற்குரிய திருமணங்கள் நடைபெறுகின்றன. அவன், ஒருவழியே சென்று ஒன்றினையும், திரும்பி மற்றொரு வழியே வந்து மற்றொன்றினையும் கண்டு இன்புறுகின்றான். அதுபோல, அறஞ் செய்வானும் இரண்டு இன்பங்களையும் அடைவான். இது "இரண்டுலகும் வேள்வாய் கவட்டை நெறி" யெனப்பட்டது.

"வேள்வாய் கவட்டைநெறி" என்பது பழமொழி. (௰)

361. மாய்வதன் முன்னே வகைப்பட்ட நல்வினையை
ஆய்வின்றிச் செய்யாதார் பின்னை வழிநினைந்து
நோய்காண் பொழுதின் அறஞ்செய்வார்க் காணுமை
நாய்காணின் கற்காணு வாறு.

(சொ - ள்.) *மாய்வதன் முன்னே* — உணர்வு அழிவதன் முன்னே, *வகைப்பட்ட நல்வினையை* - பல திறத்த செயல்களான் வரும் அறங்களை, *ஆய்வு இன்றி செய்யாதார்* - ஆராய்தலின்றிச் செய்யாதவர்கள், *பின்னை வழி நினைந்து* - பிற்காலத்தில் செய்வோம் என்று நினைததிருந்து, *நோய்காண் பொழுதின்*—நோய்கள் சூழ்ந்து நின்று தமகு இறுதியை ஆராயும்பொழுது, *அறம் செய்வார் காணுமை* — தாம் கூறியபடி அறம் செய்வாரைக் காணு திருத்தல், *நாய் காணின் கல் காணுவாறு* - நாயைக் கண்ட பொழுது கல் மறைதலை யொக்கும்.

(க - து) அறத்தைப் பொருள் பெற்றபொழுதே ஆராய்த லின்றி உடனே செய்க.

(வி - ம்.) உணர்வு அழிந்த பின்றைச சொல்லலு மாகாமை யின், "மாய்வதன் முன்னே" என்ருா. "ஆய்வு இன்றி" என்றது ஆராய்ந்து காலங் கழியாது உடனே செய்யவேணடும் என்பதைக் குறித்தது. தோன்றுகின்ற உருவம் நாய் எனறு கண்ட அளவில், கல் உணர்வு தோன்ருதவாறு போல, அறம செய்ய நினைத்த பொழுதின்கண் அதற்கேற்பச செய்வார் இலராய் ஒழிவர்.

"அன்(று)அறிவா மென்ன தறம்செய்க" என்பது திருக் குறள்.

"நாய்காணின் கற்காணு வாறு" என்பது பழமொழி. (௬)

362. தக்கமில் செய்கைப் பொருள்பெற்ருல் அப்பொருள்
தொக்க வகையும் முதலும் அதுவாஞல்
மிக்க வகையால் அறஞ்செய் கெனவெகுடல
அக்காரம் பால்செருக்கு மாறு.

(சொ - ள்.) *தக்கம் இல் செய்கை பொருள் பெற்ருல்* - மாறுபாடில்லாத செயல்களை உடைய செல்வத்தை ஒருவன் பெற்ருல், *அப்பொருள் தொக்க வகையும் முதலும் அது ஆஞல்* - அச் செல்வம் திரண்டு வந்த திறனும் அதற்குக் காரணமாயிருப்

பதும அறமேயென் றறியப்படுமாகுல், மிக்க வகையால் அறம் செய்க என - பலதிறப்பட்ட நெறியால் அறம் செய் யென்று ஒருவன் சொல்ல, வெகுடல் - அவனைச் சினத்தல், அக்காரம் பால்செருக்கு மாறு - சாக்கரை கலந்த பாலை உட்கொள்ளாது குமட்டித் துப்புதலை யொக்கும்.

(க - து.) அறத்தாற் பொருள் பெறலா மென் றறிபவன் பல திறப்பட்ட நெறியால் அறமியற்றக் கடவன்.

(வி - ம்.) தருக்கம்-தக்கம் என்றாயது. மாறுபாடு என்பது பொருள் மாறுபட்ட செயல்கள். உடையாரால் செய்யப்படுகின் றனவேயன்றி, அதன் இயற்கை அன்று என்பார், "தக்க மில் செய்கைப் பொருள்" என்றார். தொக்க வகையும் முதலும் என்றது பொருள் தொக்கு வருதற்குக் காரணமும் காரியமும் அறமேயா மென்பது. அங்ஙன மறிந்திருந்தும் அறஞ் செய்க வென்பாரை வெகுடல், அக்காரம் கலந்த பாலைக் கொள்ளாது துப்புதலை யொக்கும்.

"அக்காரம் பால்செருக்கு மாறு" என்பது பழமொழி. (சு)

363. உலப்பி லுலகத் துறுதியை நோக்கிக்
குலைத்தடக்கி நல்லறம் கொள்ளார்க் கொளுத்தல்
மலைத்தழு துண்ணுக் குழவியைத் தாயர்
அலைத்துப்பால் பெய்து விடல்.

(சொ - ள்.) உலப்பு இல் உலகத்து உறுதியை நோக்கி-அழி வில்லாத உலகத்து அடையும் உறுதியாகிய நன்மையை நோக்கி, நல்லறம் கொள்ளார் குலைத்து அடக்கி கொளுத்தல் - நல்ல அற நெறியைக் கைக்கொள்ளாதாரை அந் நெறியினின்றும் நீக்கி அடக்கி அறநெறியைக் கொள்ளுமாறு அறிவு கொளுத்துதல், மலைத்து அழுது உண்ணு குழவியை-மாறுபட்டு அழுதுகொண்டு பாலுண்ணுத குழந்தைகளை, தாயர் அலைத்து பால் பெய்துவிடல்- தாய்மார்கள் வருத்திப் பால் உண்பித்தலை யொக்கும்.

(க - து.) அறிவுடையோர் அஃதிலராகித் தீ நெறியிற் செல்லும் மடவோரை அடக்கி அறிவு கொளுத்துக.

(வி - ம்.) "குலைத் தடக்கி" என்றது, அவர்கள் நன்மை யெய்தும் பொருட்டு வருத்துதலின் குற்றமின் றெனப்பட்டது.

"மலைத்தழு துண்ணுக் குழவியைத் தாயர்
அலைத்துப்பால் பெய்து விடல்" என்பது பழமொழி. (எ)

364. அறஞ்செய் பவர்க்கும் அறவுழி நோக்கித்
திறந்தெரிந்து செய்தக்கால் செல்வுழி நன்றாம்
புறஞ்செய்யச் செல்வம் பெருகும் அறஞ்செய்ய
அல்லவை நீங்கி விடும்.

(சொ - ள்.) *புறம் செய்ய செல்வம் பெருகும் - செல்வத்திற்கு வேண்டும் புறச் செயல்களைச் செய்ய அதனால் செல்வம் வளரும், அறம் செய்ய அல்லவை நீங்கிவிடும் - அறங்களைச் செய்ய அதனால் பாவங்கள் பற்றுதலைவிட்டு ஒழியும், (ஆதலால்), அறம் செய்பவர்க்கும் - அறங்களைச் செய்கின்றவர்களுக்கும், அறவுழி நோக்கி - அறஞ்செய்யு மிடத்தை ஆராய்ந்து, திறம் தெரிந்து - செய்யும் கூறுபாட்டை அறிந்து, செய்தக்கால் - செய்தால், செல்வுழி நன்றாம் - செல்லுகின்ற மறுமையுலகின்கண் இன்பமுண்டாகும்.*

(க - து.) *அறஞ் செய்வார் இடனும் செய்யும் கூறுபாடும் அறிந்து செய்க.*

(வி - ம்.) *அறவுழி நோக்கித் திறந் தெரிதலாவது. வறியோரை அறிந்து, அவர்க்கு வேண்டுவன வேண்டியாங்களித்தல். "செய்தக்கால் நன்றாம," எனவே, இடனும் திறனும் அறிந்து செய்யாதவழி நிரயத் துன்பம் உண்டாம். அது மீன் பிடிப்பானுக்குத் தூண்டில் வாங்கக் காசு கொடுத்ததை யொக்கும்.*

புறம்செய்தலாவது குறியெதிர்ப்பை நாடிக் கொடுத்தல் இடையூறு நீக்கிக் காவல்செய்தல் போல்வன. "நீங்கி விடுத" லாவது தனக்குப் பகையாகிய அறம் வளர்தலானே தான் மெலிந்து நசித்துப் போதல்.

"அல்லவை தேய அறம் பெருகும்" என்பதே இது.

"அறஞ்செய்ய அல்லவை நீங்கிவிடும்" என்பது பழமொழி.

(அ)

365. தோற்றம் அரிதாய மக்கட் பிறப்பினால்
ஆற்றும் துணையும் அறஞ்செய்க—மாற்றின்றி
அஞ்சும் பிணிமூப் பருங்கூற் றுடனியைந்து
துஞ்சு வருமே துயக்கு.

(சொ - ள்.) *துயக்கு - அறிவின் மயக்கம், அஞ்சும் பிணி மூப்பு அரும் கூற்று உடன் இயைந்து - அஞ்சத் தகும் நோய், மூப்பு, அருங்கூற்று என்ற இவைகளுடன் சேர்ந்து, மாற்று*

இன்றி துஞ்ச வரும் - தடையில்லாது இறந்துபடுமாறு வந்து சேரும். (ஆதலால்), தோற்றம் அரிது ஆய மக்கள் பிறப்பினால், தோன்றுதற் கருமையாகிய இம் மக்கள் பிறப்பைப் பெற்றதனால் ஆற்றும் துணையும் அறம் செய்க - ஒல்லும் வகையான் அறவினையைச் செய்க.

(க - து.) ஒவ்வொருவரும் தத்தமக் கியலுமாற்றான் அறம் செய்க.

(வி - ம்.) "தோற்றம் அரிதாய மக்கள்" என்றது மானிடராதலின் அருமையை உணர்த்திற்று. "கடவுள் படைப்பிற்குப் பெருமை தரவல்ல படைப்பு, நேர்மையுள்ள மனிதன்தான்," என்பது மேனாட்டாசிரியா போப் அவர்களின் கூற்று.

"துஞ்ச வருமே துயக்கு" என்பது பழமொழி. (க)

366. பட்ட வகையால் பலரும் வருந்தாமல்
கட்டுடைத் தாகக் கருதிய நல்லறம்
முட்டுடைத் தாகி இடைதவிர்ந்து வீழ்தலின்
நட்டரு ளாதலே நன்று.

(சொ - ள்.) பட்ட வகையால் பலரும் வருந்தாமல் - அறம் செய்வதற்குப் பொருந்திய நெறியால் பலரும் வருந்ாதவாறு, கட்டு உடைத்தாக கருதிய நல்லறம் - தனக்கு உறுதி உடைத்தாகுமாறு கருதிச் செய்தொழுகிய நல்லறத்தை, முட்டு உடைத்தாகி இடை தவிர்ந்து வீழ்தலின்-இடையூறுடைத்தாகி அதனை இடையிலே நிறுத்தி ஒழிதலைவிட, நட்டு அருள் ஆகலே நன்று - பயிரை நட்டுவைத்து அதனை அறுத்துப் பயன்பெறா தொழிந்தானெனப்படுதலே நல்லது.

(க - து.) அறஞ் செய்வார் இடர்ப்பாடு நோக்கி இடை நிறுத்தலாகாது.

(வி - ம்.) "பட்ட வகையால்" என்றது பல சமயத்தவரும் கூறும் நெறி வேறுபாட்டில் மயங்குதலின்றி, உண்மையை அறிந்து, அவ் வுண்மை நெறியால் என்றவாறு. "வருந்தாமல்" என்றது அவர் தம்மிடம் வந்து பெறும் அவ் வருத்தமும் கொடாராய்ச் சென்று கொடுக்க என்பதாயிற்று. நட்டுப் பயன்பெறா தொழிவதைவிட அறஞ் செய்து இடை நிறுத்துவான் இகழப்படுவான்.

"நட்டரு ளாதலே நன்று" என்பது பழமொழி. (௧0)

367. பலநாளும் ஆற்ரு ரெனினும் அறத்தைச்
சிலநாள் சிறந்தவற்ருற் செய்க—கலைதாங்கி
நைவது போலும் நுசுப்பினுய் நல்லறம்
செய்வது செய்யாது கேள்.

(சொ - ள்.) கலை தாங்கி நைவது போலும் நுசுப்பினுய் - மேகலையைத் தாங்கி இறுவது போலும் நுசுப்பினை உடையாய், நல்லறம் செய்வது கேள் செய்யாது - நல்லறம் செய்யும் நன்மையைச சுற்றத்தார் செய்யார் (ஆதலால்), பல நாளும் ஆற்ருர் எனினும்—பல நாட்களும் அறத்தைச செய்யாராயினும, அறத்தை சிலநாள் சிறந்தவற்ருல் செயக - அறததைச சில நாளாயினும் சிறந்த நெறிகளாற் செய்துய்வாயாக.

(க - து.) அறத்தைச சில நாளாயினும் செய்துய்க.

(வி - ம்) சில நாளும் என்ற உம்மை விகாரத்தாற் ருெக்கது. கலை முதற் குறை. கேளிரால் இம்மைக்குப் புகழும், மறுமைக்கு இன்பமும் எய்துவிததலாகாமையின், அறம் செய்வது செய்யாது என்ருறுதிப்படுத்திக் கூறிஞர்.

"நல்லறம் செய்வது செய்யாது கேள்" என்பது பழமொழி. (கக)

368. நோக்கி யிருந்நார் இமைக்கும் அளவின்கண்
நோக்கப் படினும் உணங்கலைப் புட்கவரும்
போற்றிப் புறந்தந் தகப்பட்ட ஒண்பொருட்கும்
காப்பாரிற்பார்ப்பார் மிகும்.

(சொ - ள்.) உணஙகலை நோககி இருந்தார் இமைக்கும் அளவின்கண் - வெயிலில் காயும் பொருளகளைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் இமை கொட்டும் அளவிலே, நோக்கப்படினும் புள் கவரும் - எங்ஙனம் காவல் செய்து கொள்ளப்படினும் அவ்வுணங்கலைப் புட்கள் திருடிசசெல்லும்,(அதுபோல),போற்றி புறந்தந்து அகப்பட்ட ஒண் பொருட்கும் - அரண் செய்து பாதுகாத்துத் தமக்காக வைககப்பட்டிருக்கும் ஒள்ளிய பொருளுக்கும், காப்பாரின் பாாப்பார் மிகும் — காவல் செய்வாரைவிட அதனைக் கொள்ளப் பார்க்கின்றவர்கள் மிகப் பலராவர்.

(க - து.) பொருளைக் கொள்ளப் பார்க்கின்றவர்கள் பலராதலின், உடனே அறஞ் செய்துவிடுதல் நல்லது.

(வி - ம்.) இமைக்கும் அளவாவது ஒரு மாத்திரை நேரம்.

"கண்ணிமை நொடியன அல்லே மாத்திரை" என்று ராக லின் பொருளை எங்ஙனம் பாதுகாவல் செய்யினும் பிறரால் வவ்வப்படுத லுறுதி. ஆதலின், உடனே அறஞ் செய்க என்றவாறு.

"காப்பாரிற் பார்ப்பார் மிகும்" என்பது பழமொழி. (கஉ)

369. **இன்றி யமையா இருமுது மக்களைப்**
பொன்றினமை கண்டும் பொருள்பொருளாக் கொள்பவோ
ஒன்றும் வகையான் அறஞ்செய்க ஊர்ந்துருளின்
குன்று வழியடுப்ப தில்.

(சொ - ள்) இன்றி அமையா இருமுது மக்களை - தம்மையின்றி உயிர் வாழாத இருவராகிய முதிய தாயும் தந்தையும், பொன்றினமை கண்டும் - தாந் தேடிய பொருளையும் தம்மையும் விட்டுவிட்டு இறந்தமையை அறிந்தும், பொருள் பொருளா(க) கொள்பவோ - செல்வத்தை ஒரு பொருளாக மனத்தில் கொள்வார்களோ?, ஒன்றும் வகையான் அறம் செய்க - பொருந்தும் நெறியான் அறத்தைச் செய்துய்க, குன்று ஊர்ந்து உருளின்வழி அடுப்பது இல் - மலை ஊர்ந்து உருண்டு செல்லுமாயின் அதனை வழி நின்று தடுப்பது ஒன்றுமில்லை யாதலின்.

(க - து.) செல்வத்திற்கே யன்றி உணக்கும் நிலையாமை உண்மையால் உடனே அறம் செய்க.

(வி - ம்.) "இன்றியமையா இருமுது மக்கள்" என்றமையானே, பற்றுடைய அவர்களையே விட்டுப் பிரிந்தன ரெனின், பொருளை விட்டு நாம் பிரிதல் உறுதி யென்பதறிந்து அதற்கேற்ப ஒழுகுக என்பது. "பொன்றினமை கண்டும்" என்றமையானே, நாம் பொன்றுதலும் உறுதியாம் என்பது அறியப்படுதல் வேண்டும். ஆகவே, நிலையுறுதலின்மை யறிந்து அறஞ் செய்க. மலையைத் தடுத்தல் இல்லையாதல் போலச் சாக்காட்டைத் தடுத்தலும் பொருளுக்கில்லையாம்.

"ஊர்ந்துருளின் குன்று வழியடுப்ப தில்" என்பது பழமொழி. (கங)

370. **அற்றுக நோக்கி அறத்திற் கருளுடைமை**
முற்ற அறிந்தார் முதலறிந்தார்—தெற்ற
முதல்விட் டஃதொழிந்தார் ஓம்பா ஒழுக்கம்
முயல்விட்டுக் காக்கை தினல்.

(சொ - ள்.) அறத்திற்கு அருள் உடைமை - அறத்ினுக்கு அருள் உடையரா யிருத்தல், அற்றுக நோக்கி - பண்பாதலை ஆராய்ந்து, முற்ற அறிந்தார் முதல் அறிந்தார் - அதன் திறனை முழுதும் அறிந்தார்கள் காரணம் அறிந்து அறம் செய்வாரெனப் படுவார், தெற்ற - தெளிவாக, முதல் விட்டு - காரணமாகிய அருளைவிட்டு, அஃது ஒழிந்தார் - திறந் தெரியாமையான் அவ் வறத்தையும் கைவிட்டாருடைய, ஓம்பா ஒழுக்கம் - பாதுகாவாத கொடை, முயல் விட்டு காகனை தினல் - நிலத்தின் கண்ணேயுடும் முயலைவிட்டு, ஆகாயத்தின்கண் செல்லும் காக்கையைப் பின் தொடர்ந்து சென்று தின்ன முயலுதலை யொக்கும்.

(க - து.) அருளோடு கூடிய அறம் சிறந்தது என்றது இது.

(வி - ம்.) ஓம்பா ஒழுக்கமாவது தீயவர்களுக்குச் செய்யும் உதவி. முயலை விட்டுக் காக்கைப் பின் செல்வார அதனைப் பெற முடியாதவாறு போல, இத் தீயவாகளுக்குக் கொடுக்கும் கொடை யால் நன்மை யடைதலும் முடியாது. "அஃதும்" என்றதன் கண்ணுள்ள உம்மை தொக்கது. 'முயல் தசை' 'காக்கையின் தசை' என்றல் பொருத்தமன்றென்க.

"இனைய தன்மையன் என்றறி வரியவன்
தனைமுன் விட்டுத் தாமற்று நினைப்போர்
மாமுயல் விட்டுக
காகனை பின்போங் கலவர் போலவும்"

என்ற இடத்தும் தசை குறிப்பிடப்படாமை அறியத்தக்கது. எளிதில் அடையக்கூடியதை விட்டு அரிது முயன்றும் அடையக் கூடாததற்கு ஆளப்படும் பழமொழி இது.

"முயல் விட்டுக் காக்கை தினல்" என்பது பழமொழி. (கூ)

371. இம்மைத் தவமும் அறமும் எனவிரண்டும்
தம்மை யுடையார் அவற்றைச் சலமொழுகல்
இம்மைப் பழியேயு மன்றி மறுமையும்
தம்மைத்தாம் ஆர்க்குங் கயிறு.

(சொ - ள்.) தம்மை உடையார் - தம்மை வீட்டின்கண் செலுத்தும் விருப்பம் உடையார். இம்மை தவமும் அறமும் என இரண்டும் - தாம் இப் பிறப்பின்கண்ணே செய்யும் தவமும் அறமும் ஆகிய இவ்விரண்டு நெறியின்கண்ணும், அவற்றை சலம் ஒழுகல் - அவற்றை வஞ்ச மனத்தராய்ச செய்தல், இம்மை பழியே யன்றி - இம்மையின்கண் பழியை உண்டாக்குதலே

யல்லாமல், மறுமையும் - மறுபிறப்பின்கண்ணும், தம்மை தாம் ஆர்க்குங் கயிறு - நிரயத்தினின்றும் தாம் வெளியேறுதவாறு தம்மை இறுகக் கட்டி வீழ்த்தும் கயிறாகவும் ஆகும்.

(க - து.) வஞ்ச மனத்தராய்த் தவமும் அறமும் புரிந் தொழுகுவார் பழியையும், நிரயத்தையும் அடைந்து துன்புறுவர்.

(வி - ம்.) தவத்தின்கண் வஞ்சமாய் ஒழுகுதலாவது, புலி பசுவின்தோலைப் போர்த்து மேய்ந்தாற்போல, அதற்குரிய வேடம் புனைந்து அதற்காகாதன செய்தொழுகுதல்.

அறத்தின்கண் வஞ்சமாய் ஒழுகுதலாவது, பிறர் அறியும் பொருட்டு ஆரவார நீர்மையராய் மனவிருப்பமின்றி அறஞ்செய் தொழுகுதல். இவ்விரண்டினும் பழியும், நிரயமும் வந்து எய்தும்.

"தம்மைத் தாம் ஆர்க்குங் கயிறு" என்பது பழமொழி. (கஞ)

33. ஈகை

372. சிறிய பொருள்கொடுத்துச் செய்த வினையால்
பெரிய பொருள்கருது வாரே—விரிபூ
விராஅம் புனலூர வேண்டயிரை விட்டு
வராஅஅல் வாங்கு பவர்.

(சொ - ள்.) விரி பூ விரா(வு)ம் புனல் ஊர - விரிந்த பல பூக்களும் கலந்திருக்கின்ற நீர் நாடனே!, சிறிய பொருள் கொடுத்து - இம்மையில் தம்மாலியன்ற சிறிய பொருளை உள்ளன் போடு வறியோர்க் கீந்து, செய்த வினையால்—வந்த நல்வினையால், பெரிய பொருள் கருதுவார் - மறுமையின்கண் மிக்க செல்வத் தைப்பெற நினைப்பவர்கள், வேண்டு அயிரை விட்டு - விரும்பப் படும் அயிரை யென்னும் சிறு மீனைத் தூண்டிலிற் கோத்துவிட்டு, வரால் வாங்குபவா - பெரிய வரால்மீனை இழுப்பவரோ டொப்பர்.

(க - து.) அறிவுடையோர் இம்மையில் இயன்ற அறத்தைச் செய்து மறுமையில் மிக்க பேற்றைப் பெறுவர்.

(வி - ம்.) வினை யென்றமையால், இம்மை, மறுமை என்பன வருவிக்கப்பட்டன. சிறியமீனை விட்டுப் பெரிய மீனை இழுத்தல் போல' இம்மையில் சிறிதுதவி மறுமையிற் பெரும்பேறடைதல் அறிவுடையோர் செயலாம். பெரிய பொருளாவது துறக்க வின்பம் முதலாயின.

"அயிரை விட்டு வராஅஅல் வாங்குபவர்" என்பது பழமொழி. (௧)

373. கரப்புடையார் வைத்த கடையும் உதவா
துரப்புடைய மன்னர்க்கே துப்புரவ தல்லால்
இரப்பிடும்பை மிக்கார்க் குதவவொன் றீதல்
சுரத்திடைப் பெய்த பெயல்.

(சொ-ள்.) *கரப்பு உடையார் - வறியோர்க் கீயாது மறைத்து வைப்பவர்கள், வைத்து - அரிதின் முயன்று தேடிப் புதைத்து வைத்த பொருள், துரப்பு உடைய மன்னர்க்கே துப்புரவு அது அல்லால் - பகைவரைக் கடிதலுடைய அரசர்க்கே பயன்படுவதல்லாமல், கடையும் உதவா-அவன்வழி வந்தவர்க்கும் உதவுவதில்லை. (அங்ஙனமின்றி), இரப்பு இடும்பை மிக்கார்க்கு - வறுமையால் துன்பம் மிகுந்தவர்களுக்கு, உதவ ஒன்று ஈதல் - பயன்படுமாறு ஒரு பொருளை ஈதல், சுரத்திடை பெய்த பெயல் - பாலைநிலத்தின்கண் சொரியப்பட்ட மழைநீரை ஒக்கும்.*

(க-து.) *புதைத்துவைத்தலின்றிப் பொருளை வறியோர்க்கு ஈவாயாக.*

(வி-ம்.) *கடைவழி, வந்தவர்க்கு ஆகி நின்றது. "கடையும் உதவா" என்றது கரப்புடையனுனமையால். இறக்கும் பொழுது சொல்லலும் ஆகாது; கரப்புடையனுய் இறந்தொழியவே, அவன் வழிவந்தோரால் அறியப்படாது ஒழிவதாயிற்று. "மன்னர்க்கே துப்புரவு" என்றது உடையோரின்மையால். பூமியில் கிடந்து கண்டெடுக்கப்பட்ட பொருள் அரசர்க்கே உரிமை யுடைமையான் அவர்க்குப் பயன்படுவதாயிற்று. இதனை "உறுபொருள்" என்பர் ஆசிரியர் திருவள்ளுவர்.*

"உறுபொருள், வைத்தா ரிறந்துபோக நெடுங்காலம் நிலத்தின்கட் கிடந்து பின் கண்டெடுத்ததூஉம், தாயத்தார் பெறுததூஉமாம்" என்பது பரிமேலழகர் விளக்கம். "துப்புரவாவ தல்லால்" என்பது தொக்குநின்றது. "கடையும்" இறந்தது தழீஇய எச்ச உம்மை.

"சுரத்திடைப் பெய்த பெயல்" என்பது பழமொழி. (௨)

374. பல்லாண்டு மீண்டிப் பழுதாய்க் கிடந்தது
வல்லான் தெரிந்து வழங்குங்கால்—வல்லே
வளநெடிது கொண்ட தறாஅ தறுமோ
குளநெடிது கொண்டது நீர்.

(சொ - ள்.) நெடிது கொண்டது குளம் - மிகுந்த நீரைக் கொண்டதாகிய குளம், நீர் அறுமோ — இறைத்தால் நீர் வற்றுதல் உண்டோ? (இல்லை.) (அதுபோல), பல ஆண்டும் ஈண்டி பழுதாய் கிடந்தது — பல ஆண்டுகளாக ஒன்றுசேர்ந்து குற்றமுடையதாய்க் கிடந்த பொருளை, வல்லான் தெரிந்து வல்லே வழங்குங்கால் - கொடைவல்லானொருவன் செய்யும் நெறியறிந்து அதனை வறியோர்க்கு விரைந்து வழங்குமிடத்து. வளம் நெடிது கொண்டது - செல்வத்தை மிகுதியாகக் கொண்ட அது, அறாது - கெடுதல் இல்லை.

(க - து.) ஈதலாற் செல்வம் குறைபடுதல் இல்லை

(வி - ம்.) "பழுதாய்க் கிடந்தது" என்றது, செல்வம் தான் ஈயவும், துய்க்கவும் படுவதாயினும், அவை யில்லானிடத்துப் படுதலின், அவை யொழிந்து பழுதுபட்டு நிற்பதை குளநீர்போல அவன் செல்வம் குறைதலில்லை; மேன்மேலும் மிகுதியாம்.

"திறஞ் சேர்ந்தான் ஆக்கம்போல் திருத்தகும்" என்பதனு மறிக.

"அறுமோ குளநெடிது கொண்டது நீர்" என்பது பழமொழி. (௩)

375. நினைத்த திதுவென்றந் நீர்மையை நோக்கி
மனத்த தறிந்தீவார் மாண்டார்—புனத்த
குடிஞை யிரட்டும் குளிர்வரை நாட!
கடிஞையில் கல்லிடுவா ரில்.

(சொ – ள்.) புனத்த குடிஞை இரட்டும் - புனத்தின்கண் கோட்டான்கள கூப்பாடு செய்கின்ற, குளிர்வரைநாட - குளிர்ந்த மலையை உடைய நாடனே!, கடிஞையில் கல் இடுவார் இல்-இரக்கும் பாத்திரத்தில் அன்னமிடுவதன்றிக் கற்களை இடுவார் இல்லையாதலால், நீர்மையை நோக்கி-வருகின்ற தன்மையைப் பார்த்து, நினைத்தது இது என்று - இவன் கருதி வந்த பொருள் இது வென்று முகத்தான் அறிந்து, மனத்தது அறிந்து ஈவார் மாண்டார் - மனத்தின் அளவை அறிந்து கொடுக்கின்றவர்களே அறத்தான் மாட்சிமை உடையவராவர்.

(க – து.) வறியோர் வேண்டும் பொருளைக் குறிப்பறிந்து கொடுப்பாயாக.

(வி - ம்.) அவன் விரும்பிய பொருளை அவன்றன் நீர்மையாலும் முகத்தாலும் அறிக என்றது. "மனத்தது" என்றது,

அவன் விரும்பிய பொருளின் மிகுதியை. "அறிந்தீவார்" என்றது பிறனொருவனிடம் இரவாவண்ணம் மிகுதியாகக் கொடுப்பர் என்பதை. கடிஞையில் கல்லிடுவார் இல்லையாதல் போல, வறியோர் வேண்டிய பொருளை முன்னத்தான் அறிந்தீக.

"கடிஞையில் கல்லிடுவா ரில்" என்பது பழமொழி. (ச)

376. **கூஉய்க் கொடுப்பதொன் றில்லெனினும் சார்ந்தார்க்குத்**
தூஉய்ப் பயின்றாரே துன்பந் துடைக்கிற்பார்
வாய்ப்பத்தான் வாடியக் கண்ணும் பெருங்குதிரை
யாப்புள்வே றாகி விடும்.

(சொ - ள்.) பெருங்குதிரை வாய்ப்ப தான் வாடிய இடத்தும் - சிறந்த குதிரை பொருந்தத் தான் வாடிய காலத்தும், யாப்புள் வேறாகிவிடும் - போருக்குரியவற்றை வைத்துக கட்டவே வேறு குதிரை போன்று ஆண்மை கொண்டு நிற்கும். (அது போல), கூய் கொடுப்பது ஒன்று இல் எனினும் - வறியோரை அழைத்துக் கொடுப்பதற்கு ஒரு பொருளும் இல்லையாயினும், சார்ந்தார்கு - தம்மை யடைந்து ஒரு பொருளை வேண்டினார்க்கு, தூய் பயின்றாரே - ஒரு பொருளைக் கொடுத்து அச செயலில் அடிப்பட்டு வந்தவாகளே, துன்பம் துடைக்கிற்பார் - பிறருடைய துன்பத்தை நீக்க வல்லார்.

(க - து.) வறுமை யுற்றவிடத்தும் ஈகையின் நீங்காதே.

(வி - ம்.) துன்பஙகளா எல்லாவற்றினும் பசித் துன்பமே மிகக் கொடிது என்று நூல்களுள் கூறப்படுதலின், இத் துன்பத்தை நீக்குபவரே துன்பத்தை நீக்குபவராவர். குதிரை வாடிய விடத்தும் போர்க்கல னணிந்தவுடனே முனைந்துநிற்றல் போல, வறுமை யுற்றவிடத்தும் வேண்டினார்க்கு ஒரு பொருளை ஈதலில் முனைந்துநிற்க.

"வாடிய" என்றது உணவின்றி இரு மருங்கும் ஒன்றிய நிலையை.

"வாடியக் கண்ணும் பெருங்குதிரை
யாப்புள்வே றாகி விடும்" என்பது பழமொழி. (கூ)

377. **அடுத்தொன் றிரந்தார்க்கொன் றீந்தாரைக் கொண்டார்**
படுத்தேழை யாமென்று போகினும் போக
அடுத்தேறல் ஐம்பாலாய் யாவர்க்கே யானும்
கொடுத்தேழை யாயினார் இல்.

(சொ - ள்.) அடுத்து ஏறு அல் ஐம்பாலாய் - நெருங்கி வளர்ந்திருக்கின்ற இருள் போன்ற ஐந்து பகுதியாகிய கூந்தலை உடையாய், அடுத்து ஒன்று இரந்தார்க்கு - தம்மை யடைந்து ஒரு பொருளை வேண்டினவர்களுக்கு, ஒன்று ஈந்தாரை - ஒரு பொருளைக் கொடுத்தவர்களை, கொண்டார் படுத்து ஏழையாம் என்று போகினும் போக - இரவலர் தாழ்வுபடுத்தி ஏழை யென்று சொல்லப் போகினும் போக, யாவர்க்கே யாயினும் - எத்தகுதியை உடையவரே யாயினும், கொடுத்து ஏழையாயினார் இல் - பிறர்க்குக் கொடுத்து வறுமையுற்றார் ஒருவருமிலர்.

(க - து.) ஏழைகளுக்குக் கொடுப்பதனால் பொருள் குறைந்து வறுமையுடையராதல் இல்லை.

(வி - ம்.) இரப்போர் ஏழை யென்று கூறினும் கூறுக; அஃதன்றிக் கொடுத்தலான் ஏழையாதல் இல்லை. "போகினும்" என்றது ஐய உம்மை. "யாவர்க்கே யாயினும்" என்றது மிகத் தாழ்ந்த நிலையினராயினும் என்றவாறு. கொடுத்தலால் செல்வர்களாக ஆவரே யன்றி, ஏழையாதல் இல்லை யென்பார், "இல்" என்று வரையறைப்படுத்திக் கூறினார்.

"கொடுத் தேழையாயினார் இல்" என்பது பழமொழி. (௬)

378. இரப்பவர்க் கீயக் குறைபடுமென் றெண்ணிக்
கரப்பவர் கண்டறியார் கொல்லோ—பரப்பிற்
றுறைத்தோணி நின்றுலாம் தூங்குநீர்ச் சேர்ப்ப
இறைத்தோறும் ஊறுங் கிணறு.

(சொ - ள்.) பரப்பில் - கடலிடத்தில், துறை தோணி நின்று உலா(வு)ம் தூங்கு நீர் சேர்ப்ப - துறையின்கண் தோணிகள் நின்று அசைந்துகொண்டிருக்கும் அசைகின்ற நீரையுடைய கடல் நாடனே!, இரப்பவர்க்கு - தன்னை யடைந்து ஒரு பொருளை வேண்டுவார்க்கு, ஈய குறைபடுமென்று எண்ணி கரப்பவர் - கொடுப்பதால் தமது செல்வம் குறையும் என்று நினைத்து இல்லையென்று சொல்லித் தமது பொருளை மறைப்பவர்கள், இறை தோறும் ஊறும் கிணறு - இறைக்குந்தோறும் நீர் ஊறுங் கிணற்றை, கண்டு அறியார் கொல்லோ - பார்த்தறியாராயினார் போலும்.

(க - து.) கொடுக்கக் கொடுக்கப் பொருள் வளரும்.

(வி - ம்.) கண்டறியார் என்பதனைக் கண்டும் அறியார் என உம்மை தொக்கதாகக் கொண்டு, பார்த்திருந்தும் பொருள்

மேலுள்ள பற்றால், அதன் நுட்பத்தை அறியார்கொல்லோ என்றலுமாம்.

"இறைத்தோறும் ஊறுங் கிணறு" என்பது பழமொழி. (எ)

379. இரவலர் தம்வரிசை யென்பார் மடவார்
கரவலராய்க் கைவண்மை பூண்ட—புரவலர்
சீர்வரைய வாகுமாம் செய்கை சிறந்தனைத்தும்
நீர்வரைய வாநீர் மலர்.

(சொ - ள்). இரவலர் தம் வரிசை என்பார் - இரப்போர் நிலைக்குத் தக்க அளவினதாகக் கொடுப்பதே கொடை என்று சொல்லுகின்றவர்கள், மடவார்-மூடர்களே யாவார்கள், நீர் மலர் நீர் வரைய ஆம் - நீர்ப்பூ நீரின் அளவினதாயிருக்கும், கரவலராய் கைவண்ணம் பூண்ட புரவலர் - கையிலுள்ளதை மறையாதவர்களாகிக் கைவண்மையையுடைய அரசர்கள், செய்கை இறந்த அனைத்தும்-செய்யும் கொடைச செயலும் மற்றும் சிறந்த எல்லாச் சிறப்புக்களும், சீர் வரைய ஆகும் - தம் சீரினளவினதாயிருக்கும் ஆதலான்.

(க - து.) கொடுப்போன் தன்னிலை நோக்கி ஈக என்றது இது.

(வி - ம்) நீரளவே யாகும் நீராம்பல். அதுவன்றி அரசர்களுடைய கொடை முதலியன அவர் நிலைமையை நோக்கியதாயிருக்கின்றன. ஆதலால், கொடை கொடுப்போர் அளவினதேயாம. இரண்டும் உவமைகளாய் வலியுறுத்தி நின்றன.

"நீர்வரைய வாம்நீர் மலர்" என்பது பழமொழி. (அ)

380. தொடுத்த பெரும்புலவன் சொற்குறை தீர
அடுத்தர என்றாற்கு வாழியரோ என்றான்
தொடுத்தின்ன ரென்னலோ வேண்டா கொடுப்பவர்
தாமறிவார் தஞ்சீ ரளவு.

(சொ - ள்.) தொடுத்த பெரும் புலவன் - செங்குட்டுவனுடைய புகழைச் செய்யுளாகப் பாடிய பெரிய புலவனாகிய கௌதமன், அடுத்தர என்றாற்கு - துறக்கத்தை யானும் என் சுற்றமும் அடையுமாறு செய்வாயாக என்று சொல்ல அங்ஙனம் சொல்லிய அப் புலவற்கு, சொல் குறை தீர - அவர் சொல்லிய

குறை தீரும்பொருட்டு வேள்வி செய்து, வாழியரோ என்றான்- துறக்கத்தின்கண் நீடு வாழ்வாயாக வென்று கூறினான். (ஆகையால்), தொடுத்து இன்னர் என்னலோ வேண்டா - ஒரு பொருளை வேண்டுவார் முறையாக இத் தன்மையை உடையார் என்று புகழ்ந்து கூறுதல் வேண்டாவாம், கொடுப்பவர் தாம் தஞ்சீர் அளவு அறிவார் - கொடுக்கின்றவர்கள் தம் நிலையின் அளவையறிந்து செய்வார்கள்.

(க - து.) கொடையாளிகள் தொடுத்துக் கூறுதலை எதிர் நோக்காது தம் நிலைமைக்கேற்பக் கொடுப்பர்.

(வி - ம்) சொற்குறையாவது, யானும் என் சுற்றமும் துறக்கம் ஒம்புமாறு வேள்வி செய்தல் வேண்டும் என்பது. "வாழியரோ என்றான்" என்பது பத்துப் பெரு வேள்விகள் வேட்பித்துப் பத்தாவது வேள்வியில் துறக்கம் சுற்றத்தோடு புகுமவனை நீடு வாழ்வாயாக என்று கூறியதை. அடுத்தர - அடுக்க! இது போதர என்றாற் போன்றது. துறக்கம் வருவித் துரைக்கப்பட்டது. "தொடுத்தின்ன ரென்ன வேண்டா" என்றது தொடுத்த புலவற்கு ஒருவன் துறக்கம் ஈந்தான்; அங்ஙனம் புகழ்ந்து கூறுதலும் வேண்டா என்றதை.

"கொடுப்பவர் தாமறிவார் தஞ்சீரளவு" என்பது பழமொழி.
(கூ)

381. மாரியொன் றின்றி வறந்திருந்த காலத்தும்
பாரி மடமகள் பாண்மகற்கு—நீருலையுள்
பொன்தந்து கொண்டு புகாவாக நல்கினாள்
ஒன்றுரு முன்றிலோ இல்.

(சொ - ள்.) மாரி ஒன்று இன்றி வறந்து இருந்த காலத்தும்- மழையென்பதே ஒன்று இல்லாமல் வற்றியிருந்த காலத்திலும், பாரி மடமகள் - பாரியினுடைய இளமை பொருந்திய மகள், பாண் மகற்கு - வந்து இரந்த பாணனுக்கு, நீர் உலையுள் பொன் தந்து - நீரையுடைய உலையுள் பொன்னைப் பெய்து, கொண்டு புகாவாக நல்கினாள் - அதனைக் கொண்டுவந்து உணவாகக் கொடுத்தாள். (ஆதலால்), ஒன்று உறா முன்றிலோ இல் - ஒரு பொருளும் இல்லாத வீடோ இல்லை.

(க-து) ஒவ்வொருவரும் தம்மா லியன்றதொரு பொருளைக் கொடுக்க.

(வி - ம்.) புகா என்பது உணவு. "புலிபுகா வுறுத்த புலவு நாறு கல்லளை" என்றதுங் காண்க. சோறு இன்மையால்

பொன்னையே சமைத்து உணவாக நல்கினள். ஆகையால், இயன்றதொரு பொருளை ஈக என்றது. மூன்றில் வீட்டிற் காயிற்று. ஒன்றும் என்ற இழிவு சிறப்பும்மை தொக்கது.

"ஒன்றரு மூன்றிலோ இல்" என்பது பழமொழி. (௩0)

382. ஏற்றார்கட் கெல்லாம் இசைநிற்பத் தாமுடைய
மாற்றார் கொடுத்திருப்ப வள்ளன்மை—மாற்றாரை
மண்ணகற்றிக் கொள்கிற்கும் ஆற்றலார்க் கென்னரிதாம்
பெண்பெற்றான் அஞ்சான் இழவு.

(சொ - ள்.) ஏற்றார்கட்கு எல்லாம்-இரந்தவர்கள் எல்லோருக்கும், இசை நிற்ப - புகழ் இவ்வுலகில் நிலைத்து நிற்குமாறு, தாம் உடைய மாற்றார் கொடுத்திருப்ப வள்ளன்மை - தமமிடத்துள்ள பொருளை இல்லையென்று கூறாராகித் தம அளவிற்கு ஏற்பக் கொடுப்பது கொடையாம், மாற்றாரை மண் அகற்றி கொள்கிற்கும் ஆற்றலார்க்கு என் அரிது - பகைவரை வென்று நாட்டை அவரினின்றும் நீக்கித தன்னதாகக் கொள்ளும் வலிமை உடைய அரசர்களுககுச செய்தற்கரியது யாது?, பெண் பெற்றான் இழவு அஞ்சான் - ஒரு பெண்ணைப் பெறத்தகும் காலத்தைப் பெற்றவன் இழக்கப்படும் பொருளுககு அஞ்சுவானல்லன் ஆதலால்.

(க - து.) கொடைக்குரியவர்கள் அரசர்களே யாவர்.

(வி - ம்.) மாற்றாரை வெல்லும் அரசர்களுக்கே கொடையினை ஆற்றும் வண்மை உண்டாம். அவர்கள் கொடையினைக் கைக்கொள்வாராயின், பெண் பெற்றானிழவுக் கஞ்சாதவாறு போல அஞ்சுதலிலர். முதலிரண்டடிகளும் கொடையினியலை விளக்கி நின்றன.

"பெண் பெற்றான் அஞ்சான் இழவு" என்பது பழமொழி. ()

383. பயனேக்கா தாற்றவும் பாத்தறிவொன் றின்றி
இசைநோக்கி ஈகின்ற ரீகை—வயமாப்போல்
ஆலித்துப் பாயும் அலைகடல் தண் சேர்ப்ப!
கூலிக்குச் செய்துண்ணு மாறு.

(சொ - ள்.) வயமாபோல் ஆலித்து பாயும் அலைகடல் தண் சேர்ப்ப-வெற்றியையுடைய குதிரையைப்போல் ஒலித்துத் தாவிச் செல்லும் அலைகடலையுடைய குளிர்ந்த நீர் நாடனே!, பயன்

நோக்காது - மறுமையில் வரும் பயனை நோக்குதலின்றி, ஆற்றவும் பாத்தறிவு ஒன்று இன்றி - மிகவும் பகுத்தறியும் அறிவு என்பது ஒன்று இல்லாதவராகி, இசை நோக்கி-புகழொன்றனையே நோக்கி, ஈகின்றார் ஈகை - கொடுக்கின்றவர்களது ஈகை, கூலிக்கு செய்து உண்ணுமாறு - கூலிக்குத் தொழில் செய்து உண்ணு நெறியோடொக்கும்.

(க - து.) புகழொன்றனையே நோக்கிக் கொள்வோர் நிலையறியாது கொடுக்கும் கொடை சிறந்ததன்றாம்.

(வி - ம்.) "பாத்தறிவு ஒன்று இன்றி" என்றது வறியோர் அவரல்லாதோர் என்று பகுத்துணர்தலின்றிப் புகழ் ஒன்றனையே கருதி ஈதலை. அங்ஙனம் ஈதல் புகழ் பயக்குமாயினும், மறுமையின்பத்தைக் கொடா தொழிதலேயன்றி ஈகையெனவும் படாது என்பதாயிற்று. "ஈகின்றார் ஈகை" என விதந்ததும் இதன் பொருட்டே. வயமா புலியெனப்படினும், குதிரைகளுக்கு அது உவமையாக நூலாட்சியுள் இன்மையான், குதிரை யென்றே கொள்க. புகழ் ஒன்றனையே கருதிப் பகுத்துணர்வு இன்றி ஈதல், கூலிக்கு வேலை செய்வார், செயல் எத்தகையதாயினும் அதைக் கருதாது செய்தலை ஒக்கும்.

"கூலிக்குச செய்துண்ணு மாறு" என்பது பழமொழி. (கஉ)

384. மறாஅ தவனும் பலரொன் றிரந்தால்
பெறாஅஅன் பேதுறுதல் எண்ணிப்—பொறாஅன்
கரந்துள்ள தூஉம் மறைக்கும் அதனால்
இரந்தூட்குப் பன்மையோ தீது.

(சொ - ள்) மறாதவனும் - மறுக்கும் இயல்பில்லாதவனும், பலர் ஒன்று இரந்தால் - இரவலா பலரும ஒரு பொருளை விரும்பினால், பெறான் பேதுறுதல் எண்ணி - எல்லோர்க்கும் கொடுக்க முடியாமையால்) அதனைப் பெறாதவன் மயக்கமுறுதலை நினைத்து, பொறான் உள்ளதும் கரந்து மறைக்கும் - மனம் பொறாதவனாகித் தன்னிடத்துள்ள பொருளையும் கரந்து மறைப்பான், அதனால்-ஆகையால், இரந்து ஊட்கு - யாசித்து உண்ணும் உணவிற்கு, பன்மையோ தீது - ஒருவனிடத்திலே பலரும் சென்றிரத்தல் தீமையைத் தருவதாம்.

(க - து.) ஒருவனிடத்தில் யாசிப்பதற்குப் பலரும் ஒன்று சேர்ந்து செல்லுதல் ஆகாது.

(வி - ம்.) நல்ல இயல்பு உடையவனாதலின், சிலர் பெரு தொழிதல் கண்டு பொறாது மறைப்பன். "கரந்து மறைக்கும்" என்றது, தான் கொடாதவனைப் போல் மறைந்து நின்று தன் பொருளையும் மறைத்தொழுகும் என்பது. பன்மை ஈண்டுப் பலர்மேல் நின்றது.

"இரந்தூட்குப் பன்மையோ தீது" என்பது பழமொழி. (கூ)

385. தோற்றம் பெரிய நசையினர் அந்நசை
ஆற்றா தவரை அடைந்தொழுகல்—ஆற்றுள்
கயல்புரை உண்கண் கனங்குழாய் அஃதால்
உயவுநெய் யுட்குளிக்கும் ஆறு.

(சொ - ள்.) ஆற்றுள் கயல் புரை உண்கண் கனங்குழாய்- ஆற்றின்கண் உள்ள மீனையொத்த மை யுண்ட கண்களையும் பொற் குழையினையுமுடையாய், தோற்றம் பெரிய நசையினர் - தோன்றுதல் மிகுந்த ஆசையினை உடையவர்கள், அந் நசை ஆற்றாதவரை - அவ் வாசையைத் தீர்க்கமாட்டாதவர்களை, அடைந்து ஒழுகல் - தீர்ப்பாரெனக் கருதி அடைந்து அவர்வழி நிற்றலாகிய, அஃது-அதுவே, உயவு நெய்யுள் குளிக்கும் ஆறு - வண்டிக் கிடும் மசையினுள் குளிக்கு மாற்றை யொக்கும்.

(க - து.) குறைதீர விரும்புவார் அதனைத் தீர்க்கவல்லா ரைச் சார்ந்தொழுகுக.

(வி - ம்.) "தோற்றம் பெரிய நசை" என்றது கணந் தோறும் அளவற்றுத் தோன்றும் ஆசையின் மிகுதியை. உயவு நெய்யாவது, கற்றாழஞ் சாற்றில் வைக்கோல் கரியைசசேர்த்துச செய்யப்பட்டு வண்டியின் அசசில் இடுவதோர் மசை. உடல் தூய்மை செய்ய விரும்பினர், உயவு நெய்யுட் குளித்து மேலும் அழுக்கினைச் சேர்த்துககொள்ளுதல் போல, நசை பெரிதுடை யாா ஆற்றாரை யடையின், தங் குறையை முடித்தலின்றி அவர் குறையை முடிக்க முந்தி நிற்கவேண்டும்.

"உயவு நெய்புட் குளிக்குமாறு" என்பது பழமொழி. (கூ)

386. காப்பிகந் தோடிக் கழிபெருஞ் செல்வத்தைக்
கோப்பெரியான் கொள்ளக் கொடுத்திரா தென்செய்வர்
தீத்த பெரியார்க்கே யாயினும் மிக்கவை
மேனிற் பரிகாரம் இல்.

(சொ - ள்.) நீத்த பெரியார்க்கே யாயினும் - இருவகைப் பற்றினையும் முற்ற அறுத்த துறவிகளே யாயினும், மிக்கவை மேவின் பரிகாரம் இல் - தம்மால் தானமாகக் கொடுக்கப்பட்ட மிக்க பொருளைத் தாமே சென்று மேவுவராயின் அதனை இடை நின்று தடுத்தற்குரிய வழி இல்லை. (அதுபோல) காப்பு இகந்து ஓடி - காவல் நெறியைக் கடந்து சென்று, கழி பெரும் செல்வத்தை - குடிகளது மிக்க பெருஞ்செல்வத்தை, கோ பெரியான் கொள்ள கொடுத்திராது என் செய்வர் - அரசனாகிய பெரியவன் வலிந்து சென்று கொள்வானாயின், குடிகள் கொடுக்காது என் செய்து நீக்கவல்லர்?

(க - து.) அரசனே குடிமக்களது செல்வத்தைப் பறிக்க முற்படுவானாயின், அதனை நீக்க வல்லவர் யாரும் இலர்.

(வி - ம்.) பிறர்க்குத் தானமாகக் கொடுத்த துறவிகளே அதனை மீண்டும் அடைய முற்படின், இடை நின்று விலக்க இயலாதவாறு போல, அரசனே மக்களது செல்வத்தைப் பறிக்க முற்படின், இடைநின்று நீக்குதல் இயலாத தொன்றாம்.

"மிக்கவை மேவிற் பரிகாரம்இல்" என்பது பழமொழி.(௩௬)

34. வீட்டு நெறி

387. எண்ணக் குறைபடாச் செல்வமும் இற்பிறப்பும்
மன்ன ருடைய உடைமையும்—மன்னரால்
இன்ன ரெனல்வேண்டா இம்மைக்கும் உம்மைக்கும்
தம்மை யுடைமை தலை.

(சொ - ள்.) எண்ணக் குறைபடா செல்வமும் - எண்ணுதற்குக் குறைவு இல்லாத செல்வமும், இல் பிறப்பும் - உயர் குடிப் பிறப்பும், மன்னர் உடைய உடைமையும் - மன்னரைத் தம் வயத்தராய் உடைய உரிமையும், மன்னரால் இன்னல் எனல் - அரசர்களால் இத் தன்மையுடையாரெனப் புகழப்படுதலும், வேண்டா - விரும்பத்தக்கனவல்ல, இம்மைக்கும் உம்மைக்கும் - இப்பிறப்பிற்கும் மறு பிறப்பிற்கும் உறுதியாகிய, தம் ஐ - தம்முடைய தலைவனாகிய கடவுளை, உடைமை தலை - உடைமையாகக் கொள்ளுதலே சிறந்தது.

(க - து.) ஒவ்வொருவரும் கடவுளை உடைமையாகக் கொள்ளுதலே சிறந்தது.

(வி - ம்.) நான்கும் இம்மைக்கல்லது பயன்படாமையின், இருமைக்கும் பயன்படுவதாய கடவுளை உடைமையாகக் கொள்ளுதலே சிறந்த தெனப்பட்டது. "இன்னரெனல்" : உம்மை விகாரத்தாற் றொக்கது. இம்மை, உம்மை என்பன சுட்டுச் சொல்லடியாகப் பிறந்த பெயர்கள். உம்மை பின்னர் வருவதாகிய மறுமையை உணர்த்தி நின்றது.

"தம்மை யுடைமை தலை" என்பது பழமொழி. (க)

388. அடங்கி அகப்பட ஐந்தினைக் காத்துத்
தொடங்கிய மூன்றினல் மாண்டீண்—டுடம்பொழியச்
செல்லும்வாய்க் கேமம் சிறுகாலைச் செய்யாரே
கொல்லிமேல் கொட்டுவைத் தார்.

(சொ - ள்.) அடங்கி - துறவறத்திற்கு விதிக்கப்பட்ட நெறியின்கண் தாம் அடங்கி ஒழுகி, ஐந்தினை அகப்பட காத்து - ஐம்புலன்களையும் பொறிகள் மேற் செல்லாதவாறு செறியப் பாது காவல் செய்து, தொடங்கிய-தாம் செய்யத் தொடங்கிய துறவற நெறியில், மூன்றினல் மாண்டு - மனம், மொழி, மெய் என்ற மூன்றானுந் தூயராய் மாட்சிமைப்பட்டு, ஈண்டு உடம்பு ஒழிய - இவ்வுலகத்தின்கண் இவ்வுடம்பு ஒழிந்து நிற்க, செல்லும் வாய்க்கு ஏமம் சிறு காலை செய்யாரே - இனிச் செல்ல விருக்கும் மறுமைக்கு உறுதியைக் காலம்பெறச் செய்யாதவர்களே, கொல்லி மேல் கொட்டு வைத்தார - தீயின் மீது நெல்லினைப் பெய்து பொரித்து உண்ணுபவரோ டொப்பார்.

(க - து.) காலம் பெறத் துறந்து வீடு எய்துக என்றது இது.

(வி - ம்) "அகப்படக் காத்து" என்றது பயிற்சி வயத்தான் எதிர்ப்பட்டவழி ஐம்புலனும் விரைந்து செல்லுமாகலின், அங்ஙனம் சேராதவாறு காத்து என்றவாறு. மனத்தூய்மையும், சொல் தூய்மையும், மெய்த் தூய்மையும் என்றிம் மூன்றினல் மாட்சிமை யுறுதல். சிறு காலை-இளமை. "வேண்டி னுண்டாகத் துறக்க" என்பது திருக்குறள்.

ஐம்புல வின்பத்தினையே கருதித் துறத்தலைச் செய்யாதவர்கள், சுவை யொன்றனையே கருதி, விரைக் கோட்டையை நெருப்பிலிட்டுப் பொரித்துண்பவரோ டொப்பர். கொல்லி தொழிலாகு பெயராய்த் தீயை உணர்த்திற்று.

"கொல்லிமேல் கொட்டு வைத்தார்" என்பது பழமொழி. (உ)

389. நட்டாரை யாக்கிப் பகைதணித்து வையெயிற்றுப்
பட்டார் துடியிடை யார்ப்படர்ந்—தொட்டித்
தொடங்கினா ரில்லத்த தன்பின் துறவா
உடம்பினான் என்ன பயன்.

(சொ - ள்.) *நட்டாரை ஆக்கி பகை தணித்து—தன்னுடன் நட்புச் செய்துகொண்டவர்களைச் செல்வமுடையவராகச்செய்து பகைவரை அழித்து, வை எயிற்று பட்டு ஆர் துடி இடையார்—கூரிய பற்களையும் பட்டுடை பொலியும் உடுக்கை போன்ற இடையினையு முடைய பெண்கள்மீது, படர்ந்து ஒட்டி - காதல் கொண்டு பொருந்தி, இல்லத்து தொடங்கினார் - இல்லறத்தைத் தொடங்கிச் செய்தவர்கள், அதன் பின் - அது முடிந்த பிறகு, துறவா உடம்பினான் பயன் என்ன - துறவறத்தில் துறந்து செல்லாத உடம்பினான் என்ன பயனுண்டாம்?*

(க - து.) *இல்லற நெறியில் நின்று அதன் பின்னர்த் துறவறம் சேர்க.*

(வி - ம்.) *"நட்டாரை ஆக்கி" என்றது, செல்வத்தால் அவர் குடியைப் பொலியச் செய்வதை. "நட்டவர் குடி உயர்க்குவை" என்பதே இது. "துறவா உடம்பினான் என்ன பயன்" என்பதற்கு, அதன் பின்னும் துறந்து செல்லாத உடம்பு, அடைவதற்குரிய இன்பம் அவ் வில்லறத்தின்கண் என் உண்டாம் என்றலும் ஆம். துறவறமாயின் தவஞ்செய்யவே மறுமைப்பே றடைத லுறுதி. இல்லற நின்று இன்பம் பெற்றுப் பேரின்பம் பெறுதற்குத் துறவற நெறியிற் சேர்தலே உடம்பினா லெய்தும் பயனாம்.*

"துறவா உடம்பினான் என்ன பயன்" என்பது பழமொழி.

390. இல்வாழ்க்கை யானும் இலதானும் மேற்கொள்ளார்
நல்வாழ்க்கை போக நடுவுநின்—றெல்லாம்
ஒருதலையாச் சென்று துணியா தவரே
இருதலையும் காக்கழித் தார்.

(சொ - ள்.) *இல் வாழ்க்கையானும் இலதானும் - இல்லறத்தை யாயினும் அஃதின்றி நின்ற துறவறத்தை யாயினும், மேற்கொள்ளார் - தாம் மேற்கொண் டொழுகாதவராகி, நல் வாழ்க்கை போக நடுவு நின்று-சிறந்த வாணாள் வறிதே கழிய இடை நின்று, எல்லாம் ஒரு தலையா சென்று துணியாதவரே - எல்லாவற்றையும் ஆழ்ந்து உறுதியாகத் துணிந்து ஒரு நெறிக்*

கண் ஒழுகாதவர்களே, இருதலையும் கா கழித்தார் - காவின் இரு பக்கத்திலுமுள்ள பொருளை நீக்கித் தண்டினைச் சுமந்து நின்றாரோ டொப்பர்.

(க-து.) இரு வாழ்க்கையினுள் ஒன்றன்கண்ணும் துணிவோ டொழுகாதவர்கள் இம்மை மறுமை இன்பங்களைப் பெறார்.

(வி - ம்.) "துணியாதவரே" என்றது நூல்களின் கருத்தறியாது, இல் வாழ்க்கை பெரிதோ, துறவற வாழ்க்கை பெரிதோ என் றையங்கொண்டாராய் ஒரு நெறியிலும் துணிவில்லாது நிற்பவர்களைச் சுமந்து நின்ற ஒருவன் காவின் இருகடையுமுள்ள பொருளை ஒழித்து வெறுந் தண்டினைச் சுமந்துநிற்றல் போல, இல்வாழ்க்கையில் நில்லாமையால் இம்மைப் பயனையும், துறவற வாழ்க்கையில் நில்லாமையால் மறுமைப்பயனையும் இழந்து நிற்பாராயிற்று.

"இருதலையும் காக்கழித்தார்" என்பது பழமொழி" (௯)

391. வளமையும் தேசும் வலியும் வனப்பும்
இளமையும் இற்பிறப்பும் எல்லாம்—உளவாய்
மதித்தஞ்சி மாறுமஃ தின்மையால் கூற்றம்
குதித்துய்ந் தறிவாரோ இல்.

(சொ - ள்.) வளமையும் தேசும் வலியும் வனப்பும்—செல்வமும், புகழும், வலிமையும் அழகும்; இளமையும் இற்பிறப்பும் - இளமையும், குடிப்பிறப்பும்; எல்லாம் உளவாய் - என்றிவை யெல்லாம் உளவாக; மதித்து அஞ்சி மாறும அஃதின்மையால் - அவற்றை மதித்துப் பயந்து நீங்குந்தன்மை கூற்றத்திற்கின்மை யால், கூற்றம் குதித்து உய்ந்து அறிவாரோ இல் - இயமனி னின்றும் பிழைத்துச் சென்றாராக அறியப்படுவார் ஒருவரும் இலர்.

(க - து.) வளமை, தேசு, முதலியவற்றின் நிலையாமை நோக்கித் துறந்து துறவறநெறியிற் சேர்க.

(வி - ம்.) தேசாவது ஒளி. உடையானைப் புகழ் விளக்கி நிற்றலின் புகழ் ஈண்டு ஒளியெனப்பட்டது. இவற்றின் மிகுதி கண்டு கூற்றம் அஞ்சுதலில்லை. ஆதலான், இவற்றது நிலையாமை நோக்கித் துறவறஞ் சேர்க

"கூற்றம் குதித்துய்ந் தறிவாரோ இல்" என்பது பழமொழி

392. கொண்டொழுகு மூன்றற் குதவாப் பசித்தோற்றம்
பண்டொழுகி வந்த வளமைத்தங்—குண்டது
கும்பியிலுந் திச்சென் றெறிதலால் தன்னுசை
அம்பாயுள் புக்கு விடும்.

(சொ - ள்.) *கொண்டு ஒழுகும் மூன்றிற்கு-தான் கொண்டு ஒழுகுகின்ற மூன்றற்கும், உதவா பசி தோற்றம்-உதவி செய்தலில்லாத வேட்கைத் தோற்றம், பண்டு ஒழுகிவந்த வளமைத்து - முன்னர் நல்வினை செய்தமையான் வந்த செல்வத்தை, அங்கு உண்டு - அங்குத்தானே பயன்படுத்திககொண்டு, அது - அவ்வாசை, கும்பியில் உந்தி சென்று எறிதலால் - நரகசசேற்றில் உதைத்துச சென்று வீழ்த்தலால், தன் ஆசை அம்பு ஆயுள் புக்கு விடும் - ஒருவனுடைய ஆசையாகிய அம்பு ஆயுளைப் புகுந்து கெடுத்துவிடும்.*

(க - து.) *பிறர்க்குதவி செய்தலில்லாத ஆசையே ஒருவனை நரகத்துள் அழுத்தவல்லது.*

(வி - ம்.) *கொண்டு ஒழுகும் மூன்ருவது, விருந்தினரைப் புறந்தருதல், தெய்வத்திற்குச சிறபபுசசெய்தல், இரவலாக்கு ஈதல் முதலிய கடமையாகக்கொண்டு ஒழுகவேண்டியவற்றை. பசித்தல் விரும்புதலாதலின் வேட்கையாயிறறு. ஆசை கடமையையும தவிர்தது, செல்வத்தின் பயனுக விளையும் பிறர்க்கு ஈதலையும் நீக்கி, நரகததுள் அழுததும். ஆதலின். ஒருவனது ஆயுளை அம்பாக நின்று அழித்தொழிததுவிடும். இரண்டும் துன்பஞ்செய்தலில் ஒக்குமாயினும், ஆசை மறுமையினும் துன்பம் விளையுமாறு செய்தலின், "ஆசை அம்பு" என உருவக வாய்பாட்டாற் கூறப்பட்டது.*

"தன்னுசை அம்பாயுள் புக்குவிடும்" என்பது பழமொழி.

393 செல்வத் துணையுந்தம் வாழ்நாட் டுணையுந்தாம்
தெள்ளி உணரார் சிறிதினுல் செம்மாந்து
பள்ளிப்பால் வாழார் பதிமகிழ்ந்து வாழ்வாரே
முள்ளித்தேன் உண்ணு மவர்.

(சொ - ள்.) *செல்வத் துணையும் - செல்வததின் அளவினையும், தம வாழ்நாள் துணையும் - தம் வாழநாளின் அளவினையும், தாம் தெள்ளி உணரார - தாம் தெளிய ஆராய்ந்து அறியாராகி, சிறிதினுல் செம்மாந்து - சிறிய இல்லற இன்பத்தினுலே தருக*

கூற்று, பள்ளிபால் வாழார் பதிமகிழ்ந்து வாழ்வாரே - அருந்தவர்கள் உறையும் பள்ளியினிடத்து வாழாராகி இல்லின்கணிருந்து இன்புற்று வாழுகின்றவர்களே, முள்ளி தேன் உண்ணுமவர் - சிறந்த தேனை உண்ணாது முள்ளிச்செடியின் தேனை உண்ணுகின்றவர்களோடொப்பார்.

(க-து.) துறவறம் சேர்தலின்றி இல்லறத்திலேயே இருந்து மகிழ்ந்து இருப்பது முள்ளித்தேனுண்பதை யொக்கும்.

(வி - ம்.) தெளிய அறிதலாவது அவற்றின் நிலையாமையை. ஆசிரியர் சைனராதலின், "பள்ளி" என்றார். "முள்ளித்தேன்" என்றமையால், துறவறத்தில் மிகுந்த இன்பம் உண்மை யறியப்படும்.

"வேண்டின் உண்டாகத் துறக்க துறந்தபின், ஈண்டியற் பால பால" என்பது திருக்குறள்.

"முள்ளித்தேன் உண்ணுமவர்" என்பது பழமொழி. (எ)

394. வன்னெஞ்சி னார்பின் வழிநினைந்து செல்குவை
என்னெஞ்சே இன்றிழிவை யாயினுய்—சென்னெஞ்சே
இல்சுட்டி நீயும் இனிதுரைத்துச் சாவாதே
பல்கட்டப் பெண்டீர் மகார்.

(சொ - ள்.) என் நெஞ்சே - எனக்குறுதி சூழும் என் நெஞ்சமே!, வல் நெஞ்சினார் பின் வழிநினைந்து செல்குவை - வலிய நெஞ்சினராய இயமனுடைய வேலையாட்களின் பின்னே செய்த குற்றங்களை நினைத்து அழிந்து செல்வாய் (ஆனால்), இன்று இழிவை ஆயினுய்-இப்பொழுது இழிந்த செயலிற் புகுந்து நின்று செய்கின்றாய், இல்சுட்டி நீயும் இனிது உரைத்து சாவாது-மனைவாழ்க்கையின்பொருட்டு நீயும் இனியவற்றைக் கூறி நின்று இறவாது, செல் நெஞ்சே - துறவறத்திற்குச் செல்வாயாக நெஞ்சமே, அப்பெண்டீர் மகார் பல் கட்டு-அம்மனைவியும் மக்களும் பல தளைகளாவராதலின்.

(க - து.) பெண்டிரும் மக்களும் தளைகளாதலின், அவற்றை யொழித்துத் துறவறம் சேர்க.

(வி - ம்.) இறக்குஞான்று வருந்திச் செல்வாய். ஆனல் இன்றுணர்ந்து நடக்கின்றாயில்லை. செல்லும் நெறிக்குறுதியாகத் துறவறம் சேர்ந்துயக.

"பல்கட்டப் பெண்டீர் மகார்" என்பது பழமொழி. (அ)

395. சிறந்ததம் மக்களும் செய்பொருளும் நீக்கித்
துறந்தார் தொடர்ப்பா டெவன்கொல்—கறங்கருவி
ஏனல்வாய் வீழும் மலைநாட அஃதன்றே
யானைபோய் வால்போகா வாறு.

(சொ - ள்.) *கறங்கு அருவி ஏனல்வாய் வீழும் மலைநாட* - ஒலித்துவரும் அருவிகள் தினைப்புனத்தின்கண் வீழும் மலை நாடனே!, *சிறந்த தம் மக்களும் செய்பொருளும்* - சிறப்புடைத் தாய தம்முடைய மக்களையும் தாம் ஈட்டிய பொருளையும், *நீக்கி துறந்தார்* - பற்றுவிட்டுத் துறந்தவர்கள், *தொடர்ப்பாடு எவன் கொல்* - தமது உடம்பின்மீது பற்றுக்கொண்டு ஒழுகுதல் எது கருதி, *யானை போய் வால் போகா ஆறு அஃது அன்றே* - ஒரு வாயிலின்கண் யானை போய் அதன் வால் போகாவாற்றை அஃது ஒக்குமன்றே.

(க - து.) *துறவறநெறி நின்றார் அகப்பற்றினை முற்ற நீக்குக என்றது இது.*

(வி - ம்.) *உடம்பின்மீது சிறிது பற்றுக்கொள்ளின், அது காரணமாக ஒழிந்த பற்றுக்களெல்லாம் வந்துசேருமாதலின், அதனை முற்ற அறுத்தல் வேண்டும். அது யானை போயும் வால் போகாதவாற்றை யொக்கும.*

"யானை போய் வால் போகா வாறு" என்பது பழமொழி.

396. எனைப்பல் பிறப்பினும் ஈண்டித்தாம் கொண்ட
வினைப்பயன் மெய்யுறுதல் அஞ்சி—எனைத்தும்
கழிப்புழி ஆற்றாமை காண்டும் அதுவே
குழிப்பூழி ஆற்றா குழிக்கு.

(சொ - ள்.) *எனைப் பல் பிறப்பினும்* - எல்லா வகைப் பிறப்புக்களிலும், *ஈண்டி தாம் கொண்ட* - ஈட்டித் தாம் மேற் கொண்ட, *வினைப்பயன் மெய் உறுதல் அஞ்சி* - தீவினையின் விளைவு தம்மேற் சாாதலுக்கு அஞ்சி, *எனைத்தும் கழிப்புழி ஆற்றாமை காண்டும்* - எவ்வளவு சிறிய தீவினையையும அநுபவிக்கின்ற விடத்துத் துன்பத்தை அடைகின்றோம், *அது குழி பூழி குழிக்கு ஆற்றா* - அச்செயல் குழியினின்றும் தோண்டப்பட்ட பூழி அக்குழியை நிரப்ப முடியாதவாறு போலும்.

(க - து.) *வினை தம்மா லீட்டப்பட்டதே யாதலின், அதன் விளைவை இயைந்து அநுபவிக்கவேண்டும்.*

(வி - ம்.) தோண்டப்பட்ட புழுதியையே கொட்டி மூடி னும் அககுழி மூடுதல் இல்லை. அதுபோல, தன்னால் ஈட்டப் பட்ட வினையின் விளைவை இயைந்து அடைதல் இல்லை. அஃது அறிவிலார் செய்கையாம். வினை என்றது சஞ்சித வினையை. பயன் என்றது சஞ்சித வினையின் பயனும்ப பிராரத்துவ வினை யைக கழிப்பதற்கு வந்த துன்பங்களாம.

"குழிப்பூழி ஆற்று குழிக்கு" என்பது பழமொழி. (௧௦)

397. திரியும் இடிஞ்சிலும் நெய்யுஞ்சார் வாக
எரியும் சுடரே ரனைத்தாய்த்—தெரியுங்கால்
சார்வற ஓடிப் பிறப்பறுக்கும் அஃதேபோல்
நீரற நீர்ச்சார் வறும்.

(சொ - ள்.) சுடர் திரியும் இடிஞ்சிலும நெய்யும் சார்வு ஆக ஏர் எரியும் - விளககு திரியையும் அகலையும் நெய்யையும் பறறுக கோடாககொண்டு அழகாக எரியும்; சாாவுகளின்றேல் எரி யாது, அனைத்தாய் தெரியுங்கால்-அது போன்று ஆராயுமிடத்து, சாாவு அற - சாாவாக நின்ற மூவகை வினையும் அற்றுப்போக (அவவினையறுதலே), பிறப்பு அறுககும் - பிறவித துன்பததை நீக்கும், அஃதே போல் நீா அற நீர்சாவு அறும்-அதைப்போலவே நீர் அற்றுப்போகவே அந்நீரிற் சார்ந்து வாழும் உயிர்களும் - இறந்துபோகும்.

(க - து.) வினை யறவே பிறப்பறும்.

(வி - ம்.) மூவகை வினையாவன சஞ்சிதவினை, பிராரத்துவ வினை, ஆகாமிய வினை என்பன. ஆகாவமிய வினை பற்றற்றான் பறறினைப் பற்றியவழி யல்லது நீங்காமையின், அது நீஙகுதற் பொருட்டு அவனடியைப் பறறவேண்டும்; பறறவே, மூவகை வினையற, அதனாற் பிறவி நீஙகும்.

"நீரற நீர்சசார் வறும்" என்பது பழமொழி. (௧௧)

398. ஓதநீர் வேலி உலகத்தார் அந்நெறி
காதலர் என்ப தறிந்தலால்—யாதொன்றும்
கானக நாட பயிலார் பயின்றது
வானக மாகி விடும்.

(சொ - ள்.) கானக நாட - காடுகளையுடைய முல்லை நாடனே', பயினறது வானகமாகிவிடும - தீயதாயினும் பழகிய நெறி வானுலகத்தை யொப்ப இன்பம் பயந்து பின்னர் நீங்கு-

தற்கு அரிதாகி விடுமாதலால், ஓத நீர் வேலி உலகத்தார் – ஒளி பொருந்திய கடலை வேலியாகவுடைய இவ்வுலகத்திலுள்ளவர்கள், அந்நெறி காதலர் என்பது அறிந்தலால் – தாம் மேற்கொண்டு ஒழுகுகின்ற அந்நெறியை விரும்புகின்றார்கள் என்பதை அறிந்தன்றி, யாதொன்றும் பயிலார் - யாதொரு நெறியின்கண்ணும் பழகுதலிலர் அறிவுடையார்.

(க - து) அறிவுடையார் உலகோப்பிய நெறியை மேற்கொண்டொழுகுவார்கள்.

(வி - ம்.) பழகப் பழகத் தீய நெறியும் நன்னெறியாகிவிடும் ஆதலால், உலகத்தார் ஒப்பிய நெறியை அறிந்தே அறிவுடையோர் மேற்கொள்வர்.

"பயின்றது வானக மாகிவிடும்" என்பது பழமொழி. (கஉ)

399. பரந்தவர் கொள்கைமேல் பல்லாறும் ஓடார்
நிரம்பிய காட்சி நினைந்தறிந்து கொள்க
வரம்பில் பெருமை தருமே பரம்பூரி
என்றும் பதக்கே வரும்.

(சொ - ள்.) பரந்தவர் கொள்கைமேல் பல்லாறும் ஓடார் – பல வேறு வகைப்பட விரிந்த சமயத்தார் கொள்கைகள்மீது பல நெறிக்கண்ணும் செல்லாதவர்களாகி, நிரம்பிய காட்சி நினைந்து அறிந்துகொள்க – நன்மை நிரம்பிய கொள்கையை ஆராய்ந்தறிந்து மேற்கொள்க – பரம்பூரி என்றும் பதக்கே வரும்-பரம் படித்த கூலி எக்காலத்தும் பதக்கு நெல்லே உறுதியாக வரும்; (அதுபோல), வரம்பு இல்பெருமை தரும் - கடைப்பிடித் தொழுகிய அக்கொள்கையே எல்லையில்லாத பெருமையை உறுதியாகத் தரும்.

(க - து.) ஒரு நெறியை உறுதியாகக் கொண்டொழுகுக.

(வி - ம்.) காட்சி, அறிவு. அஃது ஈண்டு அறனை ஆராயப்பட்டு முடிந்த கொள்கைக்கு ஆயிற்று.

பரம்பூரி என்றும் பதக்கே வரும்" என்பது மதுரைத் தமிழ்ச் சங்கப் பதிப்பின் திருத்தத்தின்படி கொள்ளப்பட்டது. பதக்கு என்பது இரண்டு மரக்கால்.

"பரம்பூரி என்றும் பதக்கே வரும்" என்பது பழமொழி. (கஙு)

பழமொழி நானூறு
மூலமும் உரையும் முற்றும்

புறத்திரட்டில் காணப்படும் பழமொழி வெண்பா

அறியாமை யோடிளமை யாவதா மாங்கே
செறியப் படுவதாஞ் செல்வம்—சிறிய
பிறைபெற்ற வாணுதலாய் தானேயா டும்பேய்
பறைபெற்றா லாடாதோ பாய்ந்து.

குறிப்பு: *பழமொழி நூற்கள் எவற்றிலும் காணப்பெறாத இந்த வெண்பா, புறத்திரட்டில் நன்றியில் செல்வம் என்ற அதிகாரத்தில் பழமொழி வெண்பாவாகச சேர்க்கப் பட்டிருக்கிறது.*

செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை

	பக்கம்
அகத்தா லழிவு	231
அகந்தூய்மை யில்லாரை	118
அகலம் உடைய	16
அங்கண் விசும்பின்	157
அங்கோல் அவிர்தொடி	176
அடங்கி அகப்பட	272
அடர்ந்து வறியராய்	56
அடுத்தொன் றிரந்தார்க்	264
அடையப் பயின்றார்சொல்	153
அடைய அடைந்தாரை	173
அமர்நின்ற போழ்தின்கண்	223
அமர்விலங்கி ஆற்ற	226
அமையா இடததோர்	140
அரிதவித்து ஆசின்று	2
அருமை யுடைய	134
அருவிலை மாண்கலனும்	24
அருளுடை யாருமற்	135
அல்லது செய்வார்	144
அல்லல் ஒருவர்க்	246
அல்லவை செய்ய	68
அல்லவையுள் தோன்றி	17
அ ஞ்செய் பவர்க்கும்	256
அறயாமை யோடிளமை	280
அறிவன்று அழகன்று	42
அறிவினால் மாட்சியொன்று	19
அ·ஒறுக நோக்கி	259
அன்பறிந்த பின்னல்லால்	120
அன்பின் நெகிழ	111
ஆஅம் எனக்கெளி	123
ஆஅய் வளர்ந்த	159
ஆகும் சமயத்தார்க்கு	164
ஆணம் உடைய	21
ஆணியாக் கொண்ட	113
ஆண்டகை மன்னரைச்	194
ஆண்டுண் டெனவொன்றோ	57
ஆமாலோ என்று	40
ஆயிரவ ரானும்	20
ஆய்ந்த அறிவினர்	40
ஆவிற கருமபணி	32
ஆறாச சினத்தன்	37
ஆற்றப் பெரியார்	206
ஆற்ற வினைசெய்தார்	221
ஆற்றவும் கற்றார்	5
ஆற்றா ரிவரென்	32
ஆற்றுந் தகைய	163
ஆற்றும் இளமைக்கண்	3
இகலின் வலியாரை	207
இசைவ கொடுப்பதூஉம்	154
இஞ்சி அடைததுவைத்	225
இடுகுடைததோ மன்னர்	196
இடையீ டுடையார்	93
இணரோங்கி வந்தாரை	49
இதுமன்னுந் தீதென்	162
இமமைத் தவமும்	260
இம்மைப் பழியும்	211
இயற்பகை வெல்குறுவான்	216
இரப்பவர்க் கீயக்	265
இரவலர் தம்வரிசை	266
இருகயல் உண்கண்	229
இல்வாழ்க்கை யானும்	273

இறப்பச் சிறியவர் 36
இறப்ப எமகீது 59
இனியாரு மில்லாதார 103
இனியாரை உற்ற 84
இன்றி யமையா 259
ஈட்டிய ஒணபொருள் 55
ஈனுலகத தாயின 253
உடுக்கை மருநதுறையுள் 238
உடைப்பெருஞ்செல்வதது 180
உடையதனைக் காப்பான் 135
உணற்கு இனிய 5
உரிஞ்சி நடப்பாரை 29
உரிமைதனில் தமமோ 231
உருததெரு ஞாட்பினுள் 226
உரைசான்ற சான்றோர் 81
உரைத்தவா நாவோ 208
உரைததாரை மீதூரா 223
உரைமுடிவு காணான் 6
உலப்பி லுலகத் 255
உலப்ப உடன்படுத்தற் 192
உழந்ததூஉம பேணுது 67
உழையிருந்து நுண்ணிய 118
உளைய உரைத்து 248
உளளது ஒருவா 239
உள்ளூ ரவரால் 136
உறாஅ வகையது 200
உறுகண் பலவும் 227
உறுமக்க ளாக 80
உற்றதற்கு எல்லாம் 37
உற்றா லிறைவர் 220
உற்றான் உறாஅன் எனல் 115
ஊக்கி உழந்தொருவர் 140
ஊழாயி னாரைக் 70
எங்கணொன் றில்லை 105
எஙகண் இனையா 168
எண்ணக குறைபடாச 271
எதிர்த்த பகையை 202
எந்நெறி யானும் 233
எமக்குத் துணையாவார் 100
எமரிது செயக 190
எய்தா நகைசசொல் 38
எய்ப்புழி வைப்பாம் 91
எல்லாத திறத்தும் 43
எல்லையொன் றின்றியே 181
எவவந் துணையாய்ப் 156
எனக்குத் தகவன்றால் 52
எனைப்பலவே யாயினும் 126
எனைப்பல் பிறப்பினும 277
ஏறறாகட் கெல்லாம் 268
ஒக்கும் வகையான் 233
ஒட்டிய காதல் 82
ஒருவர் உரைப்பா 14
ஒருவன் உணராது 125
ஒல்லாத வின்றி 133
ஒளியாரை மீதூர்ந்து 174
ஒற்கப்பட் டாற்றார் 152
ஒற்கநதாம் உறற 48
ஒன்றால் சிறிதால் 102
ஒன்னார் அடநின்ற 214
ஓதநீர் வேலி 278
ஓரும் ஒருவா 98
ஓர்தத கருத்தும் 64
கடங்கொண்ட ஒண்பொ 143
கடுப்பத் தலைக்கீறி 127
கட்டுடைத் தாகக் 116
கண்டறிவார போலார 94
கண்ணில் சயவர் 73
கண்ணுள் மணியேபோல் 90
காப்புடையார் வைத்த 262
கருந்தொழில ராய 66
கருவினுட் கொண்டு 249
கல்லாதவரிடைக 12
கல்லாதான் - கற்றார்முன் 10
கல்லாதான் - காட்டரிதால் 11
கல்லாதும் கேளாதும் 15
கல்வி யகலமும 182
கல்வியான் ஆய 11
கழுமலத்தில் யாத்த 158
களமர் பலரானும் 137
கள்ளி யகிலும் 25
கறுத்து ஆற்றி 41

கற்றதொன் - கருமத்தை	101
கற்றதொன்-குடிப்பிறந்தார்	50
கற்று அறிந்தார் கண்ட	3
கற்றார் பலரைத் தன்	184
கற்றுஆற் றுவாரைக்	13
கற்றானும் கற்றார்வாய்க்	9
கன்றி முதிர்ந்த	54
காடுறை வாழ்க்கைக	65
காட்டிக கருமம்	114
காத்தாற்று கிற்பாரைக்	225
காப்பான் மடமகள்	99
காப்பிகந் தோடிக்	270
காவலனே ஆக	194
காழார மாராப	35
குரைத்துக கொள்ளப்பட்	161
குலத்துச சிறியார்	74
கூஉய்க் கொடுப்பதொன்	264
கூரறிவி னார்வாய்ந்	69
கூற்றும் உயிர்கொள்ளும்	179
கெடுவல் எனப்பட்டக	28
கேட்பாரை நாடிக	13
கையார உண்டமையால்	39
கைவிட்ட ஒண்பொருள்	142
கொடித்திண்டேர்	188
கொடையும் ஒழுக்கமும்	229
கொண்டொழுகு மூன்றற்	275
கொழித்துக் கொளப்பட்ட	87
கோவாத சொல்லும்	77
சால மறைத்தோம்பிச	169
சிறப்புடை மன்னவரைச	195
சிறந்ததம் மக்களும்	277
சிறந்த நுகர்நதொழுகும்	251
சிறிதாய கூழ்பெற்றுச	128
சிறிய பொருளகொடுத்துச்	261
சிறியவா எய்திய	61
சீர்த்தகு மன்னர்	196
சூடப்பட் டுயிருய்ந்த	166
சுட்டிச சொலப்படும்	156
சுற்றத்தார் நட்டார்	119
செந்நீரார போன்று	109
செம்மாந்து செல்லும்	222
செயல்வேண்டா நல்லன	186
செயிர்அறு செங்கோல்	183
செய்த கருமம்	45
செய்த கொடுமை	78
செருக்குடைய மன்ன	197
செருக்கெழு மன்னா	192
செல்லற்க சேர்ந்தார்	132
செல்வத் துணையுந்தம்	275
செறலிற் கொலைபுரிந்து	241
செறிவுடைத் தார்வேந்தன்	187
சேர்ந்தா ரொருவரைச	245
சொல்லாமை நோக்கிக்	232
சொல்லெதிர்ந்து தம்மை	75
சொரறுறும் சோர்வு	3
தக்கயில் செய்கைப்	254
தக்காரோ டொன்றத்	62
தம்குற்றம் நீக்கலர்	27
தத்தமக்குக் கொண்ட	238
தநதம் பொருளும்	138
தந்தீமை யில்லாதார்	88
தந்தொழில் ஆற்றும்	63
தந்நடை நோக்கார்	26
தமக்குற்ற தேயாகத்	245
தமரல் லவரைத்	204
தமரானும் தம்மானும்	155
தமரேயும் தம்மைப்	46
தமனென் றிருநாழி	243
தம்மால் முடிவதனைத்	106
தருகண் ஒழுகித்	80
தலைக்கொண்ட தநகருமம்	106
தலைமை கருதும்	178
தழங்குகுரல வானத்துத்	209
தன்தூக்கித் தன்துணையுந்	103
தன்னலி கிற்பான்	214
தன்னின் வலியானைத்	228
தன்னை மதித்து	249
தாக்குற்ற போழ்தில்	77
தாமத்தால் நட்டுத்	94
தாமாற்ற கில்லாதார்	110
தாமேயும் தமமைப்	200

தாம்நட் டொழுகுதற்குத் 85
தாயானும் தந்தையா 46
தாரேற்ற நீண்மார்பின் 221
திரியும் இடிஞ்சிலும் 278
திருந்தாய்நீ ஆர்வத்தைத் 74
தீப்பால் வினையினைத் 53
தீந்தேம் எனக்கருதித் 86
தீயன வல்ல 188
துயிலும் பொழுதத் 131
துன்னி இருவர் 15
தூய்மை மனத்தவர் 236
தெரியா தவாதம் 39
தெரியாதார் சொல்லும் 78
தெரிவுடையா ரோடி 22
தெருளா தொழுகும் 132
தெள்ளி யுணரும 217
தெற்றப் பகைவா 59
தெற்றப் பரிந்தொருவர் 89
தெற்ற அறிவுடையார் 115
தெற்ற ஒருவரைத 65
தேர்ந்துகண் ணோடாது 82
தொடித்தோள் மடவார் 234
தொடிமுன்கை நல்லாய் 141
தொடுத்த பெரும்புலவன் 266
தொன்மையின மாண்ட 145
தோற்றத்தால் பொல்லார் 33
தோற்றம் அரிதாய 256
தோற்றம் பெரிய 270
நடலை இலராகி 19
நட்டாரை யாக்கிப் 273
நண்பொன்றித் தம்மாலே 88
நயவர நட்டொழுகு 121
நலிந்தொருவர் நாளும் 218
நல்கூர்ந் தவர்க்கு 237
நல்லவும் தீயவும் 185
நல்லவை கண்டக்கால் 18
நல்லார் நலத்தை 7
நற்கு அறிவு இல்லாரை 21
நற்பால கற்றாரும் 124
நளியஞ்சத் தக்க 167
நன்கொன் றறிபவர் 242
நன்றே ஒருவர்த் 240
நாடறியப் பட்ட 138
நாடி நமரென்று 243
நாட்டிக் கொளப்பட்டார் 117
நாணா பரியார் 76
நாணின்றி ஆகாது 230
நாவின் இரந்தார் 148
நிரந்து வழிவந்த 69
நிரம்ப நிரையத்தைக் 204
நிரைதொடி தாங்கிய 54
நிலத்தின் மிகையாம் 105
நிலையிய பண்பிலார் 111
நிறையான் மிகுகல்லா 236
நினைத்த திதுவென்றந் 263
நீர்த்தகவு இல்லார் 34
நீர்த்தன்று ஒருவா 26
நீறு ஆர்ந்தும் ஒட்டா 47
நூக்கி அவா வெலினும் 219
நெடியது காண்கிலாய் 32
நெடுங்காலம் வந்தார் 44
நெறியால் உணராது 72
நோக்கி அறிகல்லாத் 98
நோக்கி யிருந்தார் 258
நோவ உரைத்தாரைத் 40
படரும் பிறப்பிற்கொன் 149
பட்ட வகையால் 257
பண்டின ரென்று 244
பண்டுருத்துச் செய்த 165
பயனோக்கா தாற்றவும் 268
பரந்த திறலாரைப் 23
பரந்தவர் கொள்கைமேல் 279
பரியப் படுபவர் 58
பலநாளும் ஆற்றா 258
பல்கிளையுள் பார்த்துறான் 47
பல்லாண்டு மீண்டிப் 262
பல்லார் அவைநடுவண் 51
பன்னாளும் நின்ற 160
பன்னால் தொழில்செய் 198
பாப்புக் கொடியாற்குப் 92
பாரதத் துள்ளும் 250

பாற்பட்டு வாழ்ப 172
பிண்டியின் நீழல் 1
புரையக் கலந்தவர் 110
புரையின்றி நட்டார்க்கு 83
புலமிக் கவரைப் 7
புன்சொல்லும் நன்சொல் 129
பூத்தாலும் காயா 63
பூந்தண் புனற்புகாரப் 175
பூவுட்கும் கண்ணாய் 31
பெரிய குடிப்பிறந்த 60
பெரியநட் டார்க்கும் 95
பெரியாரைச் சார்ந்தார் 206
பெரியார்க்குச் செய்யும் 71
பெருமலை நாட 122
பெற்றாலும் செல்வம் 146
பேதறவு தீரப் 71
பேருலையுள் பெய்த 96
பொருத்தம் அழியாத 171
பொருந்தா தவரைப் 211
பொருந்தாப் பழியென்னும் 28
பொருளல்லா கூறிய 201
பொலந்தார இராமன் 182
பொல்லாத சொல்லி 76
பொற்பவும் பொல்லா 23
மடங்கிப் பசிப்பினும் 53
மடியை வியங்கொள்ளின் 112
மரம்போல் வலிய 153
மல்லற் பெருஞ்செல்வம் 252
மறந்தானும் தாமுடைய 139
மறாஅ தவனும் 269
மறுமனத்தன் அல்லாத 175
மறுமையொன் றுண்டோ 72
மறைபா தினிதுரைத்தல் 218
மனங்கொண்டக் கண்ணும் 127
மனத்தினும் வாயினும் 185
மன்னவன் ஆணைக்கீழ் 177
மாடம் அழிந்தக்கால் 49
மாணாப் பகைவரை 67
மாயவதன் முன்னே 254
மாறியொன் றின்றி 267
மாற்றத்தை மாற்றம் 216
மானமும் நாணும 16
மிக்க பழிபெரிதாம் 66
மிககுடையர் ஆகி 34
மிககுப் பெருகி 61
முகம்புறத்தக கண்டால் 205
முடிந்ததற் கில்லை 108
முட்டின்று ஒருவர் 90
முதுமக்கள் அன்றி 79
முயலவோ வேண்டா 100
முல்லைக்குத் தேரும் 51
முழவொலி முந்நீர் 147
முழுதுடன் முன்னே 107
முறைதெரிந்த 170
முறபெரிய நல்வினை 159
முன்னலிந தாற்ற 203
முன்னின்று ராயினும் 247
முன்னும ஒருகால் 44
முன்னை யுடையது 142
மெய்ந்நீர ராகி 129
மெய்ம்மையே நின்று 198
மெய்யா உணரிற் 247
மொய்கொண் டெழுந்த 57
யார்தீய செய்த 96
யாவரே யானும் 130
யானுமற் றிவவிருந்த 215
வருவாய் சிறிதெனினும் 136
வரைபுரை வேழத்த 224
வலியாரைக் கண்டக்கால் 213
வழங்கலும துய்த்தலும் 147
வழங்கார் வலியிலார 151
வழிப்பட் டவரை 178
வளமையும் தேசும் 274
வன்சொல புடைய 202
வன்பாட் டவர்பகை 212
வன்னெஞ்சி னோரின் 276
வாட்டிற லானை 212
விடலரிய துப்புடைய 240
விடலமை செய்து 191
விட்டுக் கருமம் 113
விதிப்பட்ட நூலுணர்ந்து 9
விரும்பி அடைந்தார்க்கும் 150

விலங்கேயும் தம்மோர 84
விழுத்தொடையர் ஆகி 24
விழுமிழை நல்லார் 235
விளக்கு விலைகொடுத்துக் 4
விளிந்தாரே போலப் 122
வினைப்பயன் 31
வீங்குதோட் செம்பியன் 104
வெஞ்சின மன்னவன் 199
வெண்குடைக்கீழ் 174
வெள்ளமாண் பெல்லாம் 120
வெள்ளம் பகையெனினும் 210
வெள்ளம் வருங்காலை 97
வெற்றிவேல் வேந்தன் 189
வென்றடு கிற்பாரை 208
வேந்தன் மதித்துவப்பப் 193
வேளாண்மை செய்து 101
வைத்ததனை வைப்பென் 252